# பாரத வம்சாவளி

ரிண்டிங்/டிசைனிங் : பாலாஜி பிரிண்டர்ஸ், உள்ளகரம், சென்னை-91.
போன் : 22242127 செல் : 9382734410




தொகுப்பாசிரியர் :

நா. கோபாலகிருஷ்ணன், பி.எ.,

# பாரத வம்சாவளி

ரிண்டிங்/டிசைனிங் : பாலாஜி பிரிண்டர்ஸ், உள்ளகரம், சென்னை-91.
போன் : 22242127 செல் : 9382734410




தொகுப்பாசிரியர் :

நா. கோபாலகிருஷ்ணன், பி.எ.,

# பாரத வம்சாவளி

தொகுப்பாசிரியர் :
நா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ.,

49, கிருஷ்ணா நகர், உள்ளகரம்,
சென்னை-600 091. போன் : 2242 2311

வருடம் : 2006

# முன்னுரை

"பாரத நாடு பழம் பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர் "
- பாரதி

இச்சிறு நூல் தமிழ் தலைச்சங்க காலம் தொட்டு தமிழ் மூவேந்தர்'களான சேர, சோழ, பாண்டிய அரசர்கள் தலைமுறை பற்றியும், தென்புலத்தினின்று வடபுலம் பெயர்ந்து அரசாண்ட சூரி'ய குலத்து இக்ஷுவாகுவின் தலைமுறை பற்றியும் அவ்வாறே தென்புலத்தின்று வடபுலம் சென்று ஆண்ட சந்திர வமிசத்து அரசர்களின் பெயர்கள் (புராண ரீதியாக) பற்றிய குறிப்புகள் அடங்கியவனாக அமைகிறது. தமிழ் கடைச்சங்கம் காலத்திற்கு பிறகு தமிழ் நாட்டு வரலாறு, பாரத சுதந்திரத்திற்கு பிறகு நாடு போற்றிய தலைவர்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளனவாக அமைகிறது. ஏற்கனவே வெளியாகியுள்ள தகவல்கள் பற்றிய குறிப்புகள் இதில் இடம் பெறவில்லை.

புராணங்கள் ஒரு வரலாற்றுத் தொடர் நிகழ்சிகளையே கூறுகிறது. அவை கற்பனைகள் அல்ல. தற்போது இராமன் என்று ஒரு அரசன் வாழ்ந்தது இல்லை. கிருஷ்ணன் ஆரியர்கள் பாரதத்தில் நுழைந்த பிறகு ஆட்சி செய்த ஒரு மன்னன் என்று மேலைநாட்டு சரித்திர புத்தகம் எழுதியவர்கள் வெளியிட்ட சரித்திர புத்தகங்கள் இன்று வரை பள்ளிகளில் போதிக்கப்படுகின்றன. இவை முற்றிலும் தவறானவை. ஆங்கிலேயர் கிழக்கிந்திய கம்பெனியை பாரதத்தில் துவக்கியபோது அவர்கள் ஏஜென்டான மாக்ஸ்முல்லர் (ரிக்வேதம் குண்ட- சக்தி பற்றிய புத்தகங்களை வெளியிட்டவர் ஸ்வாமி விவேகானந்தரின் நண்பர்) என்னும் அறிஞர் ரஷ்யாவில் ஒடும் வோல்கா நதிப் பிரதேசத்தி-ருந்து கி.மு. 1500-இல் ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக பாரதத்தில் நுழைந்து அங்கு வாழ்ந்த அரசர்களை வென்று ஆட்சி செய்தனர் என்றும் வேதங்கள், ராமாயணம், மஹாபாரதம் முத-ய இதிஹாஸங்கள் ஆரியர்களால் எழுதப் பட்டதேயாகும் என்று எழுதினார். பிறகு தோன்றிய மேலை நாட்டு சரித்திர ஆசிரியர்கள் மொகன்சதாரோ, ஹரப்பா முத-ய இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி செய்து ஆரியர்களுக்கு முன்பு வாழ்ந்த திராவிட நாகரீகம் சிறந்தனவாக இருந்தது என்று வரலாற்று புத்தகங்கள் எழுதினர். இவையும் முற்றிலும் தவறானவையாகும்.



பாண்டிய மன்னர்களால் துவக்கப்பட்ட தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் பற்றிய தகவல்களை இவர் படித்து ஆராய்ச்சி செய்யதாக தெரியவில்லை. தமிழர் வரலாறு தமிழர் நாகரீகம் பற்றி தெளிவான சிந்தனையின்றி எழுதப்பட்ட சரித்திர நூல்கள் முழுமையானதல்ல.

உலகின் மிகப்பழமையாக காவியம் இராமாயணம் வேட்டுவர்குலத்தில் பிறந்த வால்மீகி முனிவர் இயற்றிய காவியம் இது. இதைத் தொடர்ந்து இடையர்குலத்தில் பிறந்த மஹாகவி காளிதாஸன் ''ரகுவம்சம்'' என்னும் நூலை இயற்றியுள்ளார். இக்காலத்திலும் ஸ்ரீராமனது வம்சம் பற்றி கூறப்பட்டுள்ளது. வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு பல மொழிகளில் இராமாயணம் இயற்றப்பட்டுள்ளது. உண்மை இவ்வாறிருக்க ஸ்ரீராமன் கதை ஒரு கற்பனைத் கதை என்று சிலர் கூறுவதை எவ்வாறு ஏற்க இயலும். மேலும் இராமாயண கதாபாத்திரங்களான வா-, சுக்ரீவன் பூசித்த சிவத்தலங்கன், கரன், தூஷணன், ராவணன் பூசித்த சிவத்தலங்கன் இன்றும் உள்ளன. சுக்ரீவன் பாடைத்தளபதிகள் ஏற்படுத்திய கிணறுகள் இன்றும் இராமேஸ்வரத்தில் காணப்படுகின்றன. NASA என்னும் அமெரிக்க வான்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அனுப்பிய விண்கலம் தென் இந்தியாவி-ருந்து இலங்கைக்கு கட்டப்பட்ட சேது சமுத்திரப் பாலத்தை படம் பிடித்து, கடல் மட்டத்திற்கு 10அடி கீழே இப்பாலம் கி.மு.7000த்திற்கு முன்பு மனிதர்களால் கட்டப்பட்டதாக கூறுகிறது. விஞ்ஞானிகளால் நிருபிக்கப்பட்ட இந்த உண்மையை உலகம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய துவாரகை பட்டிணம் கட-ல் மூழ்கியது என்று புராணங்கள் கூறுகின்றன. கட்ச் வளைகுடாவில் கட-ல் மூழ்கி ஆராய்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அரண்மனை மதிற் சுவர்கள், சில பொருட்கள் கிடைத்தன. விஞ்ஞானிகள் இவற்றை ஆராய்ச்சி செய்தபோது இவை கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் (கி.மு. 3000) ஆண்டுகளுக்கு முந்தியது என்று கூறுகின்றனர்.

புராணங்களில் கூறப்படும் ஸரஸ்வதி நதியைப் பற்றி விண்கலம் மூலம் ஆராய்ச்சி செய்து விஞ்ஞானிகள் கண்ட உண்மை நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. INSAT என்னும் அமெரிக்க விண்கலம் இந்திய சமவெளியை படம்பிடித்து ஆராய்ச்சி செய்த போது "ஸரஸ்வதி" என்னும் பூமிக்கடியில் ஒடும் நதி கண்டுபிடிக்கப்பட்டது.

விஞ்ஞானிகள் "Ecological Dynamic Find Methology" என்னும் முறையில் சட்லஜ், யமுனை முத-ய நதிகளுக்கு இடையில் ( onalewan, Kavnal, Kalibangan, Lothal வழியாக) சரஸ்வதி நதி உற்பத்தியாகி, ராஜஸ்தான் வழியாக, பாகிஸ்தானில் சிந்துவில் கலக்கிறதாக கூறுகிறார்கள். (சுமார் கி.மு.10,000 வருடங்களுக்கு முன்பு பூலோகத்தின் வெப்பம் அதிகரிக்க, ஆர்டிக் பகுதியில் பனிமலைகள் உருகி, கடல் மட்டம் உயர்ந்து பேரழிவு ஏற்பட்டு இலங்கைக்கு கீழே உள்ள பகுதிகள் கட-ல் மூழ்கின. அதே நேரத்தில் இமயமலை (ரூபின், சூபின் பகுதிகள்) Margani Glazier, Manja Glazier, Sation Glazier, Jam Dar Glazier, Rupin Glazier) முத-ய பனிப்பாறைகள் உருகி சரஸ்வதி நதி உற்பத்தியானது. சரஸ்வதி நதியை (காந்தார தேசம், ஆப்கனிஸ்தானம் தெற்கு) தற்போது Helmond நதி என்று குறிப்பிடப்படுகிறார்கள். Zend Anestha என்னும் பெர்ஷிய வேதத்தில் சரஸ்வதி நதியை Harkanathi என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

இமயமலை, மேலுள்ள பனிப்பாறைகள் உருகி சரஸ்வதி நதி உற்பத்தி ஆகியிருக்க கூடும்) கி.மு. 10,000 க்கு முன் பூமியின் பல பகுதிகளில் கடல் மட்டம் உயர்ந்தும், சில இடங்களில் பூமியின் மேலுள்ள தட்டுகள் நகர்ந்து பூகம்பம், எரிமலை தோன்றி சில பகுதிகள் கடலுக்கு மேல் மட்டத்திற்கு உயர்ந்தன. டைனோசரஸ் போன்ற பெரிய மிருகங்கள் அழிந்தன. இதை ஒரு பிரளயம் என்று கூறலாகும். (இதற்குப் பிறகு 7 வது மநு தோன்றினார்)

சரஸ்வதி நதிக்கரை ஓரம் வசிஷ்டர், விஸ்வாமித்திரர் போன்ற ரிஷிகளின் ஆஸ்ரமங்கள் தோன்றின. புதிய நாகரீகம் தோன்றியது. வேத சாஸ்திரங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. ஜோதிட நூல்கள் எழுதப்பட்டன. வசிஷ்டரின் ஜோதிட நூல்கள் 22 நக்ஷத்திரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டன. விஸ்வாமித்திரர் விந்திய மலைக்கே தெற்கே பயணம் செய்து மேலும் 5 நக்ஷத்திரக் கூட்டங்களை (திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, ரேவதி கண்டுபிடித்தார் விஸ்வாமித்திர சகாப்தம் கி.மு.7100 ஏற்படுத்தப் பட்டது.) எனவே ஸ்ரீராமன் பிறப்பு கி.மு.7100-இல் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஸ்ரீகிருஷ்ணாவதரத்திற்கு முந்தையது ஸ்ரீராமாவதாரம். ஸ்ரீராமனுக்கு பிறகு அயோத்தியில் இஷ்வாகு வமிசத்தில் (1) ஸ்ரீராமன் (2) குசன் (3) அத்தி (4) நிஷிதன் (5) நளன் (6) நபசு (7) புண்டரீகன் (8) க்ஷேமாதநுவா (9) தேவானீகன் (10) அஹீன குஹன் (11) குரு



(12) பாரியாத்ரன் (13) பலன் (14) ஜலன் (15) நளன் (16) வலன் (17) உன்னாபன் (18) வஜ்ஜிரநாபன் (19) சங்கன் (20) விணக்ஷிதாஸ்வன் (21) விஸ்வசஹன் (22) ஹிரண்யநாபன் (23) கௌசல்யன் (24) திரபிஷ்டன் (25) புத்ரன் (26) தனயன் (27) புஷ்யன் (28) த்ருவசந்தி (29) சுதர்சனன் (30) அக்னிவர்ணன் (31) சுக்ரஹன் (32) மரு (33) பிரசுருதன் (34) சுசந்தி (35) அமர்ஷன் (36) ஸஹஸ்வான் (37) விஸ்வஸஹன் (38) தீர்க்க பிரபஞன் (39) பிரஹத்பலன் என்னும் அரசர்கள் ஆண்டனர். தீர்க பிரபஞனும், ப்ருஹத்பலனும் மஹாபாரத யுத்தத்தில் பாண்டவர்களால் கொல்லப்பட்டனர்.

ஒவ்வொரு அரசனும் 100 வருடங்கள் ஆட்சி செய்தனர் என்று கொண்டால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு 3900 வருடங்களுக்கு முன்பு (39X100) ஸ்ரீராமாவதாரம் நிகழ்ந்தது என்று கொள்ளலாம். ஸ்ரீகிருஷ்ணர் ஏறத்தாழ கி.மு. 3100-ல் வாழ்ந்தார் என்று கொண்டால் 3100+3900= 7000-இல் ராமாவதாரம் நிகழ்ந்தது என்று கொள்ளலாகும். விஸ்வாமித்ரர் காலம் என்பதும் இதுவே.

வால்மீகி ராமாயணத்தின்படி (ஹேவிளம்பி வருஷம் சித்திரை மாதம், உத்தராயணம் 11 ஆம் தேதி, சுக்ல நவமி புனர்வசு நக்ஷத்திரம், புதன் கிழமை பகல் 11 நாழிகை 59 வினாடி, உத்திரப்பிரதேசம், கோசலை நாடு, அயோத்தியில் பிறந்தார். (21-4-7013 கி.மு) என்று கணக்கிடப்படுகிறது. கி.மு. 7000-இல் விஸ்வாமித்திரருடன் சென்று தாடகை சுபாகுவை அழித்தது கி.மு. 7000ல் சீதையை மணந்தார். தனது 25 வயதில் கி.மு. 6988-இல் தனது பிறந்த நாளில் 21-4-6988ல் காட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். 38 வயதில் 14-9-6976 கி.மு. கரதூஷணவதம் (7-10-6976 கி.மு.ல்-அமாவாசை தினத்தன்று செவ்வாய் பூமிக்கருகில் இருந்த போது சூரிய கிரஹணம்) 4.12.6976 நவமியில் ராவண வதம் செய்து பின்பு ராமபட்டாபிஷேகம் நடந்தது.

இனி கிருஷ்ணாவதாரம் பற்றிய குறிப்புகளை பார்ப்போமாக. கி.பி. 2005-ல் க-யப்தம் 5105. அதாவது (5105-2005=3100) கி.மு. 18-2-3102 ல் க-யுகம் பிறந்தது. ஸ்ரீகிருஷ்ணர் பரமபதம் ஏகியதும் க- பிறந்தது. பிறகு துவாரகை கட-ல் மூழ்கியது. க-யுகம் பிறந்த போது புதன், சுக்ரன், செவ், குரு, சனி முத-ய ஐந்து கிரஹங்களும் அவிட்ட நக்ஷத்திரத்தில் கும்ப ராசியில் இருந்தது. சப்தரிஷி மண்டல் **(Harsha-Major)** மக நக்ஷத்திரத்தில் வந்து 76 வருடங்கள் கழித்து

க-யுகம் பிறந்தது என்று புராணங்கள் கூறுகின்றன. கி.மு. 3176) (2700 + 2700 = 5400+3176 = 8576 கி.மு.) கி.மு. 21-11-8576 வெள்ளிக்கிழமையன்று (நள மஹாராஜன் அல்லது ருதுபர்ணன் காலத்தில்) சப்தரிஷியுகம் தொடங்கியது. தென்னாட்டில் பெரும் நிலப்பகுதி கட-ல் மூழ்கியது. (2700 + 2700 = 5400+8576 = 13.976 கி.மு.) இதற்கு 5400 வருடங்களுக்கு முன் தென்னாட்டில் பெரும்பகுதி கட-ல் மூழ்கியது. மஹாப்பிரளயம் ஏற்பட்டு தென்மதுரை நகருக்கு அருகில் ஓடும் கிரதுமால் அரசனான வைவஸ்ஸ¬த மநு (7வது மநு) கடற்கோளில் தப்பி வட இந்தியாவில் அயோத்தியில் அரசு அமைத்தான். இவனது மகனே இக்ஷ¬வாகு. சூரிய வமிச அரசன் இக்ஷ¬வாகுவின் தலைமுறையில் ஸ்ரீராமன் பிறந்தான். பாண்டியர்கள் வடநாடு சென்று சந்திர வமிசத்தை தோன்று வித்தனர்.

ஏறத்தாழ கி.மு.13.900-இல் பாண்டியர்களின் ஒளிநாடு, குமரி நாடு, பெருவள நாடு (49 நாடுகள்) முத-யன கட-ல் மூழ்கியதாக சிலப்பதிகாரம் மற்றும் சங்க நூல்கள் கூறுகின்றன. தமிழ் நாட்டின் வரலாற்றை ஆராயாமல் ஸ்ரீராமன், ஸ்ரீகிருஷ்ணன் முத-ய அவதார புருஷர்களின் காலத்தை நிர்ணயிக்க முடியாது. வால்மீகி ராமாயணத்தில் பொதிகை மலையில் உள்ள அகத்தியர் தமிழ்சங்கம் பற்றியும், பாண்டியர்களின் தலைநகரம் கவாடபுரம் பற்றியும் கூறுகிறது. ஸ்ரீராமன் அனந்த குண பாண்டியன் காலத்தில் மதுரையை அடுத்த பசுமலையில் தங்கியதாக கூறப்படுகிறது. ஸ்ரீராமனுடைய தம்பி சத்ருக்கனின் மகன் சோழ அரசன் கம்புகண்டன் மகளான மதன சுந்தரியை சுயம்வரத்தில் கவர்ந்து சென்று மணந்தான் என்று கூறப்படுகிறது. இலங்கை அரசனான இராவணன் சேர அரசனிடம் தோற்றதாகவும், தென்னாட்டு அரசர்களான கார்த்தவீர்யன், வா- முத-யர்களிடமும் இராவணன் தோல்விகண்டான். பஞ்சவடியி-ருந்து இலங்கைவரை ஸ்ரீராமன் 12 வருடங்கள் நடந்த இடங்கள் அநேகம்.

ஸ்ரீகிருஷ்ணன் (துவராபதி கோமான் இடைச்சங்கத்தில் ஒரு உறுப்பினர். சிதம்பரத்தில் உபமன்யு முநிவரிடம் சிவதீட்க்ஷை பெற்றவர். மஹாபாரதப்போரில் பாண்டவர்கள் பக்கம் பாண்டியர்கள் கலந்து கொண்டு போரிட்டனர். பெருஞ்சோற்று உதியன், கௌரவர், பாண்டவர் படைகளுக்கு குரு க்ஷேத்திரத்தில் உணவளித்தான். மஹாபாரதப் போரை நேரில் கண்டு பரணி பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்னும் தமிழ் புலவர். இவ்வாறு தமிழர்கள் வரலாறு கூறுகிறது. இனி தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்க நூல்களைப் பற்றி விவரங்கள் வருமாறு.



தமிழ் சங்கங்களின் நூல்களை ஆராய்ந்த அறிஞர்கள் தலைச்சங்கம் 4400 ஆண்டுகள் நடைபெற்றன என்றும் அதில் சங்கம் ஏறிய பாண்டிய மன்னர்களில், காய்சின வழுதி முதல் கடுங்கோன் உள்ளிட்டவர்களில் 89 பாண்டியர்கள் ஆவர். இடைச்சங்கம் 3700 ஆண்டுகள் நடைபெற்றன என்றும் அதில் சங்க ஏறிய பாண்டியன் மன்னர்களில், வெண்டேர்செழியன் முதல் முடத்திருமாறன் உள்ளிட்டவர்களில் 79 பாண்டியர்கள் ஆவர். கடைச்சங்கம் 1950 ஆண்டுகள் நடைபெற்றன என்றும் அதில் சங்கம் ஏறிய பாண்டிய மன்னர்களில் மூன்றாம், முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி உள்ளிட்டவர்களில் 49 பாண்டியர்கள் ஆவர். ஒவ்வொரு சங்கமும், பாண்டிய நாடு கடற்கோளால் அழிந்த பிறகு மீண்டும் மீண்டும் துவக்கப்பட்டன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | தலைச்சங்கம் (காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை) | - | 4,400 ஆண்டுகள் | (கி.மு.14,400 முதல் 9564 வரை) |
| 2) | சங்கம் நடைபெறாத ஆண்டுகள் | - | 2,760 | |
| 3) | இடைச்சங்கம் (வெண்டேர் செழியன் முதல் முதலாம் முடத்திருமாறன் வரை) | - | 3700 ஆண்டுகள் | (கி.மு.6805 முதல் 3105 வரை) |
| 4) | சங்கம் நடைபெறாத ஆண்டுகள் | - | 1390 | |
| 5) | கடைச்சங்கம் (மூன்றாம் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி வரை) | - | 1950 ஆண்டுகள் | (கி.மு.1715 முதல் கி.பி, 235 வரை) |
| | மொத்தம் | = | 14,200 ஆண்டுகள் | |

(14,200-235= 13965 அதாவது கி.மு. 13,965-இல் நடைபெற்ற மஹா பிரளயத்தில், 7வது மநுவான வைவஸ்ஸ¬த மநு, மதுரைக்கருகில் ஓடும் கிருதுமால் நதிக்கரை அரசன், கடற்கோளி-ருந்து தப்பி வடபுலம் சேர்ந்து அயோத்தியில் அரசு அமைத்தான் என்று கொள்வது ஏற்புடையது. எனவே கி.மு. 13,900 முதல் தொடர்ந்து பாண்டியர்கள் ஆட்சி நடைபெற்றது எனக் கொள்ளலாகும்)

மிகத் தொன்மையான காலத்தில் தமிழர்களின் ஆட்சி இந்தியா முழுவதும் (தமிழ் இந்தியா- ஆசிரியர் ந.சி. கந்தையா பிள்ளை கொழும்பு, இலங்கை) இருந்தது. மத்திய கிழக்கு நாடுகளிலும் தமிழ் மொழி பேசப்பட்டது. ஆங்கே தமிழர் என்பதை தமிளர், திரமிளர், திரமிடர், திரவிடர், திராவிடர் என்று அவர்கள் அழைக்கப்பட்டனர். அப்பகுதிகளில் ஏற்பட்ட பூகம்பம், பேரழிவினில் தப்பி அவர்கள் மீண்டும் இந்தியாவில் நுழைந்தனர். காஷ்மீர் முதல் கேரளம் வரை ஆட்சி செய்த சாளுக்கியர்கள் பெரும்பாலும் வானவர் (வடக்கி-ருந்து வந்தவர்கள்) என்று அழைக்கப்பட்டனர். இவர்களால் தமிழ்மொழி சிதைந்தது. களப்பிரர் ஆட்சிக்காலத்தில் தமிழ் நூல்கள் எரிக்கப்பட்டன. இந்துமதம் சீர்குலைந்தது. சமண மதம், பௌத்த மதம், பரவிற்று. களப்பிரர்கள், பல்லவர்கள், மராட்டியர்கள், தெலுங்கு நாயக்க மன்னர்கள் ஆட்சி தமிழ் நடைபெற்றபோது தமிழ் மொழி, மேலும் சீர்குலைந்தது. பின்னர் மங்கோ-ய மரபினரான முகலாயர், ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழ் மொழி மேலும் சீர்குலைந்தது. தமிழ் மொழி சீர்குலைவுக்கு ஆரியர்கள், வடமொழியான சம்ஸ்க்ருதம், பிராமணர்கள் தான் காரணம் என்று கூறுவது பித்தலாட்டம்.

மீண்டும் தொன்மையான தமிழ் வரலாறு எழுதப்படவேண்டும். தமிழ் கலாச்சாரம், தமிழ் மொழி சிறப்படைய வேண்டும் என்று கருதுபவர்களுக்கு இச் சிறு நூல் பயன்தரும்.

நா. கோபாலகிருஷ்ணன்
(ஆசிரியர்)



## அட்டவணை


| வ.எ | பாடல் பெயர் | பக்கம் | வ.எ | பாடல் பெயர் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | நிலம்தரு | | 20 | பரசுராமன் | 80 |
| | திருவிற்பாண்டியன் | 1 | 21 | தீர்த்தங்கரர்கள் | 82 |
| 2 | பாண்டியன் | | 22 | துஷ்யந்தன் | 85 |
| | மேருவரம்பன் | 2 | 23 | இடைச்சங்கம் | 88 |
| 3 | ஒளிச்செங்கோ | 4 | 24 | ஸ்ரீகிருஷ்ணன் | 92 |
| 4 | மேருபாண்டியன் | 7 | 25 | ரகுவம்சம் | 96 |
| 5 | முசுகுந்த சோழன் | 10 | 26 | மஹாபாரதகாலத்தில் | 98 |
| 6 | அகஸ்த்தியன் | 12 | | வாழ்ந்த அரசர்கள் | |
| 7 | முருகவேள் | 16 | 27 | வேதவியாஸர் | 111 |
| 8 | பரதன் | 22 | 28 | தலைச்சங்கம்மற்றும் | |
| 9 | ஆறுமன்வந்திரங்கள் | 28 | | இடைச்சங்ககாலத்தில் | 128 |
| 10 | அஜிதன் | 33 | | ஆண்டபாண்டியர்கள் | |
| 11 | இரணியன் | 35 | 29 | தலைச்சங்கம்மற்றும் | |
| 12 | மஹாப- | 39 | | இடைச்சங்ககாலத்தில் | 132 |
| 13 | வைஸ்ஸூதன் | 41 | | ஆண்டசோழஅரசர்கள் | |
| 14 | காய்சின வழுதி | 46 | 30 | வரலாற்றுத்துளிகள் | 136 |
| 15 | இக்ஷூவாகு வம்சம் | 50 | 31 | ஜனமேஜயன் | 142 |
| 16 | ருதுபர்ணன் | 56 | 32 | ஆண்டாள் | 143 |
| 17 | மலையத்துவஜ | | 33 | பாண்டிய அரசர்கள் | 143 |
| | பாண்டியன் | 59 | 34 | சோழ அரசர்கள் | 149 |
| 18 | அனந்த | 63 | 35 | சேர அரசர்கள் | 153 |
| | குணபாண்டியன் | | 36 | கடைச்சங்கம் | 155 |
| 19 | ஸ்ரீராமன் | 69 | 37 | மகாவீரர் | 177 |

IIst Proof



## அட்டவணை


| வ.எ | பாடல் பெயர் | பக்கம் | வ.எ | பாடல் பெயர் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 38 | கௌதமபுத்தன் | 178 | 60 | இராமானுஜர் | 231 |
| 39 | ஆதிசங்கர | | 61 | கம்பர் | 234 |
| | பகவத்பாதர் | 182 | 62 | சேக்கிழார் | 238 |
| 40 | கண்ணகி | 185 | 63 | அங்கோர்-வாட் | 240 |
| 41 | இந்திர விழா | 189 | 64 | மணிகண்டன் | 242 |
| 42 | பாண்டியன்புலத்தியன் | 193 | 65 | அருணகிரிநாதர் | 245 |
| 43 | திருவள்ளுவர் | 195 | 66 | வித்யாரண்யர் | 249 |
| 44 | ஔவையார் | 199 | 67 | வீர சிவாஜி | 250 |
| 45 | திருத்தக்கதேவர் | 201 | 68 | குருநானக் | 253 |
| 46 | வளையாபதி | 202 | 69 | ராஜாராம் | |
| 47 | குண்டலகேசி | 202 | | மோஹன்ராய் | 255 |
| 48 | தூற்றுவர் கர்ணர் | 203 | 70 | பாரத மணிகள் | 257 |
| 49 | மாணிக்கவாசகர் | 206 | 71 | 4-வது மதுரை | 270 |
| 50 | ஹரதத்தர் | 210 | 72 | வானவர்கள் | 277 |
| 51 | ஆர்யபட்டர் | 212 | 73 | திராவிடர்கள் | 282 |
| 52 | விக்கமாதித்தன் | 215 | 74 | புதிய பாரதம் | 284 |
| 53 | பரஞ்சோதியார் | 217 | 75 | மனிதனும் மதமும் | 290 |
| 54 | திருஞானசம்பந்தர் | 219 | 76 | தமிழ் | |
| 55 | திருநாவுக்கரசர் | 221 | | அந்தணர்கள் | 297 |
| 56 | சுந்திரமூர்த்திநாயனார் | 222 | 77 | பக்தி மார்கம் | 307 |
| 57 | சித்தன்போகதத்தன் | 224 | 78 | அறிவு ஜீவிகள் | 312 |
| 58 | விஜயாலயன் | 227 | 79 | உயிர் பயணம் | 316 |
| 59 | ராஜராஜசோழன் | 229 | 80 | தமிழ் எழுத்து | 322 |


பாரத வம்சாவளி

அட்டவணை


| வ.எ | பாடல் பெயர் | பக்கம் | வ.எ | பாடல் பெயர் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 81 | இணைப்பு - 1 தமிழ் இசை | 329 | | | |
| 82 | இணைப்பு - 2 தமிழ் ஜோதிடம் | 336 | | | |
| 83 | இணைப்பு - 3 தமிழ் மருத்துவம் | 341 | | | |
| 84 | இணைப்பு - 4 கோத்ர ரிஷிகள் | 366 | | | |
| 85 | இணைப்பு - 5 குருமார்கள்பரம்பரை | 370 | | | |
| 86 | இணைப்பு 6 பாரத அரசபரம்பரை | 380 | | | |
| 87 | இணைப்பு - 7 சக்தி பீடங்கள் | 404 | | | |
| 88 | இணைப்பு - 8 சிவவிஷ்ணு க்ஷேத்திரங்கள் | 411 | | | |
| 89 | இணைப்பு - 9 நிரந்தர கிழமை காட்டி | 486 | | | |
| 90 | இணைப்பு - 10 மகாபுருஷர்களின் பிறந்த நாள்,கிழமை | 488 | | | |

## 1. நிலம்தரு திருவிற்பாண்டியன்

பாண்டியன் நெடியோன் (நெடுஞ்செழியன்) என்றும், ஆழி அடி அலம்ப நின்ற பாண்டியன் என்றும், முந்நீர் விழவின் நெடியோன் என்றும், நிலம்தரு திருவிற்பாண்டியன் என்றும் போற்றப்படும் இவ்வரசன் பெருங்கடற்கோளுக்குப் பின் (கி.மு.30,100) உலகின் உயர்ந்த மலை என்று கூறப்பட்ட மேருமலை (இமயமலை அல்ல) அடைந்து அங்கே தனது மக்களை குடியமர்த்தி ஆட்சி செய்யத் தொடங்கினான்.

மேருமலை என்பது இலங்கைக்கு தென்மேற்கே முன்பு இருந்ததாகக் கூறப்படும் குமரிக்கண்டத்தின் நடுவில் இருந்ததாகவும் அம்மலையி-ருந்து கன்னியாறு, குமரியாறு, பேராறு முத-ய நதிகள் உற்பத்தியாகிக்க கிழக்கே ஓடி கட-ல் கலந்தது என்று கூறப்படுகிறது.

தாரன் என்னும் கொடுங்கோலன் அவுணர்கள் தலைவன் குமரிக் கண்டத்தின் பல பகுதிகளில் குடியேறி பாண்டியன் நெடியோன் நாட்டின் மீதும் போர் தொடுத்தான். தாரனின் மகன் தாருகன் (ப-) என்பவன். தாரன் என்னும் அவுணனை பாண்டியன் நெடியோன் போரில் சம்ஹாரம் செய்து அவுணர்களை (ஹுணர்கள், மங்கோ-ய நாட்டி-ருந்து வந்தவர்கள்) அடிமைப்படுத்தி பெருவள நாட்டில் பஃறுளியாறு என்னும் நதியைக் தோண்டுவித்து, மேருமலையில் சுரங்கம் தோண்டி தங்கம் முத-ய உலோகங்கள் கண்டுபிடித்து) ஏழை எளியவர்க்கு வாரி வழங்கி பெருவள நாட்டில் தன் மகனான "மது" என்பவன் பேரில் ஒரு நகரத்தை உருவாக்கினான். மது என்னும் அரசன் ஆட்சி செய்யும் தலைநகராக இருந்தமையால் இது மது உரைவதால் மதுரை எனப் பெயர் பெற்றது.

(ஆதாரம் : "நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல் " - மதுரைக் காஞ்சி)

*செந்நீர் பசும்பொன் வயிரியாக் கீந்த*
*முந்நீர் விழவின் நெடியோன்*
*நன்னீர் ப ஃறுளி மண-னும் பலவே (புறம்-9)*



## 2. பாண்டியன் மேருவரம்பன்

நிலம்தரு திருவிற்பாண்டியன் மரபில் பரமேஸ்வர பாண்டியன் அல்லது மேருவரம்பன் என்னும் பாண்டியன் காலத்தில் (கி.மு.16,700) ஒரு பெரும் கடற்கோள் ஏற்பட்டது. குமரிக்கண்டத்தில் பல பகுதிகள் கட-ல் மூழ்கின. அப்பகுதிகளில் வாழ்ந்த அவுணர்கள் தென்நாட்டில் ஓடிவந்து மக்களை ஒடுக்கி ஆட்சியைக் கைப்பற்றியாண்டனர். தாரகன்-II பிள்ளைகளான தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மா- என்ற மூன்று அசுர சகோதரர்கள் கொடுங்கோலாட்சி செய்தனர். இவர்கள் பொன்னாலான கோட்டை, வெள்ளியாலான கோட்டை, இரும்புக் கோட்டை ஆகிய மூன்று கோட்டைகளில் வசித்தனர் என்றும் ஆகாயமூலம் பறந்து செல்லும் விமானங்களை வைத்திருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இமயமலைப் பகுதியில் ஆட்சி செய்து கொண்டிருந்த பரமேஸ்வர பாண்டியனிடத்தில் பல அரசர்கள் வந்து முறையிட அவர்களுடன் தென்பாரதத்தின் மீது படையெடுத்து தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மா- ஆகிய அவுணர்களைக் கொன்று மூன்று கோட்டைகளையும் எறியூட்டினார் பரமேஸ்வரன். திருவதிகை (கடலூர் மாவட்டம்) என்னுமிடத்தில் நடந்த போரில் பரமேஸ்வர பாண்டியன், தாராகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மா- ஆகிய அவுணர்களைக் கொன்று மூன்று கோட்டைகளையும் எறியூட்டினான். பின்னர் குமரிக்கண்டம் சென்று, குமரி நாட்டிலுள்ள (ஏழுகுன்ற நாடு) மகேந்திரமலையில் தங்கி தென்னாட்டு முழுவதையும் வடநாட்டையும் ஆட்சி செய்தான். பரமேஸ்வர பாண்டியனுடன் வடக்கிருந்த அகத்திய முனிவனையும் அவருடன் வந்த தமிழ் அந்தணர்கள் எண்ணாயிரம் பேரையும் தமிழ்நாட்டில் குடியமர்த்தி, தமிழ் பயிற்றுவிக்க ஒரு சங்கம் நிறுவினான். அனாதி வேதத்தை (தமிழில் இருந்தன) எடுத்துக்கூறி ஆகமங்கள் ஒன்பது, அங்க நூல்கள் ஆறு, ஒழுங்க நூல்கள் பதினெட்டு, மகேச சூத்திரம் என்னும் தமிழிலக்கணம், களவியல் என்னும் ஐந்திணை அகநூல் முத-யவை கூறி மக்களுக்கு தமிழ் பயிற்றுவிக்க வீரமகேந்திரபுரத்தில் ஒரு சங்கம் நிறுவினான்.

(இந்த நாட்களில், தமிழ் எழுத்து, உருவம், சித்திரம் மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும், பயிற்றுவிக்கப்பட்டது)

## குமரிக் கண்டம்




1) மேற்கு தொடர்ச்சி மலை
2) மேருமலை (மணிமலை)
3) மகேந்திர மலை
4) ஹேம கூடம
5) உதயகிரி
6) சியாமம்
7) அம்போகிரி
8) மேருமலை (மணிமலை

ஆறுகள்
1) பஃறுனியாறு (கபஸ்த்தி)
2) குமரி
3) கன்னியாறு
4) இஷுதேனுகை
5) கனினி
6) வேணுகை
7) சுகுமாரி

C) ஒளி நாடு
5) ஏழ் பின்பாலை நாடு
6) ஏழ் முன்பாலை நாடு
7) ஏழ் குன்ற நாடு
A) பெருவளநாடு
1) ஏழ் தெங்கநாடு
2) ஏழ் குணகரை நாடு
B) குமரி நாடு
3) ஏழ் தெங்கநாடு
4) ஏழ் குறும்பனை நாடு





1) ஜம்பு 2) சாகம் 3) பிலக்ஷம் 4) சான்ம-
5) குச 6) கிரெஞ்ச 7) புஷ்கரம் பாரதம்
8) பூமியில் உள்ள பெரிய வெடிப்பு

(ஹிந்து புராணங்களின் படி உலகம் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு)

குமரி நாடானது 1) ஏழ் மதுரை நாடு 2) ஏழ் தெங்க நாடு 3) ஏழ் குறும்பமைநாடு 4) ஏழ் முன்பாலை நாடு 5) ஏழ் பின்பாலை நாடு 6) ஏழ் குன்ற நாடு 7) ஏழ் குணகரை நாடு என 49 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாட்டிலும் அரசுகள் அமைக்கப்பட்டன.

தமிழின மக்கள் சேரர் (சேய்-ரா அல்லது ரா என்னும் தெய்வத்தின் குழந்தைகள்-அக்கினி வமிசம்) சோழர் (சோ-லா-சோ என்னும் சூரியன் வமிசம்) பாண்டியர் (பாண்டு அல்லது ஒளியர் அல்லது சிவப்பான நிறத்தவர், பாண்டுவின், மக்கள், சந்திர வம்சம்) என மூவகையாக பிரிந்து ஆட்சி செய்தனர்.

பாண்டியர்கள் 1) குமரி சேர்ப்பன் பாண்டியன் 2) தென்னவன் வேம்புமாலை அணிந்த வழுதியர் 3) வைகையந்துறைவன் மாறன் 4) பொதிய வெற்பன் சடையன் 5) பஞ்சவர்கோன் மீனவன், கௌரியன், கைதவன், செழியன், மதுரையைச் சேர்ந்த சேனன் என்று ஐந்து பிரிவுகளாக வாழ்ந்தனர்.

சோழர்கள் 1) நேரிவெற்பன் (விந்தியமலையர்) 2) ஆரின்மாலையன் (ஆத்திமாலை சூடியவர்) (3) சென்னியன் (4) கிள்ளியர் (5) வளவன் என்னும் ஐந்து பிரிவுகளாக இருந்தன.

சேரர்கள் 1) உதியன் 2) பொறையன் 3) போந்தின் தாரோன் (போந்து-பனை) 4) வில்லவன் 5) காரி என்றும் குடவன், கோதை , வானவரம்பன், வஞ்சிவேந்தன், அதியமான் (அதவம்- அத்தி, மா-அதவன்=மாதவன்), மலையமான், பொருனையாற்றோன் என்றும் பல பிரிவுகளாக வாழ்ந்தனர்.

பொதிநி அல்லது பொதிகை மலையில் அகத்திய முனிவரின் தமிழ் பள்ளியும் ஏற்பட்டது.

## 3. ஒளிச்செங்கோ

ஒளிச்செங்கோன் (சிவந்த அரசன்-ஒளிபொருந்திய செங்கோடன்) என்னும் அரசன் சூரிய வமிசத்தை சேர்ந்தவன். பாண்டிய இளவரசிக்குப் பிறந்தவன், சோழர் குலத்தோன்றல், குமரிக் கண்டத்தில் பெருவள நாட்டில் மணிமலை என்னும் மலையடிவாரத்தில் இந்த அசரனது தலைநகர் இருந்தது. இவ்வரசன் காலத்தில் கடற்கோளால் பேரழிவு ஏற்பட்டது. (கி.மு.14,500) பாரத நாட்டில் பல பகுதிகளில் மக்கள் தஞ்சமடைந்தனர். ஆங்காங்கே



பல இனமக்கன் சண்டையிட்டு அராஜகம் ஏற்பட்டது. எனவே இந்த அரசன் பெரும் படையுடன் புறப்பட்டு திபெத், சீனம், காழகம், கடாரம் முத-ய தேசங்களுக்குச் சென்று மக்களை நல்வழிப்படுத்தி அரசுகளை அமைத்தான்.

இந்த அரசனுடைய படையெடுப்புகளை “செங்கோன் தரைச் செலவு” என்னும் நூ-ல்

*“பேராறும் வழிக்கழியும் பிற்படுக்கும் அதன் முன்னே*
*வாராரும் கழலடிக் கீழ் வைத்திடா மணித்தலைகள்*
*மாண்ட மாண்ட.....”*

எனக் கூறப்பட்டுள்ளது.

“தமிழ் விடு தூது” என்னும் நூ-ல் தனியூர் சேந்தனாரால் இயற்றப்பட்டது.

*“பேராற் றருகில் பிறங்குமணிமலையில்*
*சீராற்றும் செங்கோ திறற் செங்கோ-நேராற்றும்*
*பேர் அவையிலே நூற்பெருமக்கள் சூழ்ந்தேத்தம்*
*பாரரசு செய்த தமிழ் பைந்தேவி ”*

எனக் செங்கோவின் தமிழ் பேரவையைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

மேலும்,

*“செங்கோவே ஒளிச்செம்மல்*
*திருக்கோவே மணிக்கோடு*
*தங்கு பெருவள நாட்டில்*
*தமிழிருந்து புறங்காக்கும்*
*தமிழ் நாடியங்கே ”*

ஒளிச்செங்கோ மணிமலையில் அமைத்த தமிழ்சங்கத்தில் சக்கரன் என்னும் புலவன் தலைமை வகித்தான். பேராற்று நெடுந்துறையன், இடைகழி செங்கோடன், தனியூர் சேந்தன், முத்தூர் அகத்தியன் முத-ய பல புலவர்கள் இருந்து தமிழ்நூல் ஆராய்ந்தனர் என்று கூறப்படுகிறது.

ஒளிச்செங்கோ (ஜயமாஞ்ஜயன்) என்னும் சோழவேந்தன் நாகமங்கையாகிய அங்கமோகினியை மணந்து அவளது பிள்ளைகளை நாகநாட்டிற்கு அரசனாக்கினான். ஆதிசேஷன் என்னும் நாக அரசன் மகளான சுமதி என்பவளை மணந்து கொண்டு அரித்துவஜன் என்னும் பெயர்கொண்டு நாகநாட்டையும் வளப்படுத்தினான்.

ஒளிச்செங்கோ சீனதேசம் சென்று சோ-லா (சூரிய-வழி) என்னும் சூரிய வமிசத்தை ஏற்படுத்தி பெரும் படை திரட்டி பல நாடுகளை வென்று முசுகுந்தன் என்பவனிடம் அந்த நாட்டை ஒப்புவித்து நாடு திரும்பினான். போகவதி என்னும் நாட்டில் (நாகர்கள் நாடு) பக்திசோழன் என்னும் தன் மகனை அரசனாக்கினான்.

இக்காலத்தில் வடநாட்டில் காளிந்தி நதி (யமுனை நதி) நதிக்கரையில் விஸ்கர்ம என்னும் அரசன் பர்கிஷ்மதி என்னும் பட்டணம் நிறுவி விராஜன் என்பவனுக்கு தன் மகளான பர்கிஷ்மதியை மணமுடித்து அரசனாக்கினான். விராஜனுக்கும் அவகனது தங்கை சதரூபைக்கும் பிரிய விரதன், உத்தான பாதன் என்னும் பிள்ளைகள் பிறந்தன. மேலும் பிராஹுதி, ஆஹுதி, தேவஹுதி என்னும் பெண்களும் பிறந்தனர்.

பிரஹுதி என்பவன் தக்ஷன்I என்னும் நாக அரசனை மணந்தாள். ஆஹுதி என்பவள் உருசி என்ற அரசனையும், தேவஹூளுதி என்பவள் பாஞ்சால அரசன் கருத்தமன் (சோழன்) அரசனையும் மணந்தார்கள்.

தக்ஷன் I பலம் பொருந்தியவனாகி வடபாரதம் முழுவதும் ஆட்சி செலுத்தினான். தக்ஷன் I என்னும் அரசனுக்கு பிரஹுதி என்பவனுக்கும் பல பெண்கள் பிறந்தனர். 1) கியாதி, பிருகு முனிவரையும் 2) கலை, மரீசியையும், 3) சம்பூதி (அனசூயா), அத்திரியையும், 4) சிரத்தை, ஆங்கிரஸையும் 5) கதி (க்ஷரை), புலஹரையும், 6) கிரியாதி, ருத்திரன் (இறையனார்) என்பவரையயும் 7) அருந்ததி (வர்ச்சை) வசிட்டனையும், 8) அவிர்பூ, புலஸ்தியரையும், 9) சன்னதி, கிரதுமால் என்பவனையும், 10) பிரபை, புசுண்டரையும், 11) மூர்த்தி, திருதி, துஷ்டி, புஷ்டி, சித்தி, மேதை, கிரிகை, லஜ்ஜை, ரித்தி, கீர்த்தி, மைத்து (லக்குமி), சாந்தி, நித்குருதி முத-ய 13 பேரையும் மல்லாலன் (கணபதி) என்பவரையும், (25) சுவாகா என்பவளை அங்கிதீரனுக்கும் (26) சுதா என்பவளை யமனுக்கும், (27) மேனகை என்பவளை இமவானுக்கும் மணமுடித்து வட பாரதம் முழுவதும் ஆண்டான். (இவர்கள் வரலாறு புராணங்களில் உள்ளன)

ஒளிச்செங்கோ காலத்திற்குப் பிறகு மேற்கூறப்பட்ட தக்ஷன்I பலம்பொருந்தியவனாக இருந்தான். ஒளிச்செங்கோ மறைந்த பிறகு பாண்டிய நாட்டில் வீரண்ணன், பஞ்சசேனன், தாருகன் முதலான அரசர்கள் குமரி நாட்டை ஆண்டனர். தக்ஷன் I, அசிக்கினை (பஞ்சசேனன் மகள்), பஞ்சசேனை (வீரண்ணன் மகள்) தாருகாதேவி (தாருகன் மகள்) என்னும் இளவரசிகளையும் மணந்து கொண்டு குமரி முதல் இமயம் வரை ஆட்சி செய்தான்.



தாருகன் மகளான தாருகதேவிக்கும், தக்ஷன் I என்பவனுக்கும் பிறந்த தாக்ஷாயணி இமயநாட்டு ருத்திரனை (சிவன், இறையனார்) மணந்தாள்.

தக்ஷன் I தனது பலத்தைக் காட்ட ஒரு வேள்ளி (யாகம்- வேள் விழா)) நடத்தி அதற்கு எல்லோரையும் அழைத்தான். ஆனால் தாக்ஷாயணியையும் அவளது கணவன் ருத்திரனையும் அவ்வேள்விக்கு அழைக்காது அவமானம் செய்தான்.

இந்த வேள்வியைப் பிருகுவின் வழியில் வந்த சுபன் என்னும் முனிவர் தலைமை தாங்கி நடத்தினார். ததீசி என்னும் முனிவர் சிவபெருமானை அழைக்காது வேள்வி நடத்துவது சரியில்லை என்று தடுத்தார். இமயநாட்டி-ருந்து தாக்ஷாயணி புறப்பட்டு வந்து தக்ஷனுடன் சண்டையிட்டு வேள்வி குண்டத்தில் விழுந்து இறந்தாள். சிவபிரானது படையி-ருந்து வீரபத்திரன் என்பவர் புறப்பட்டு வந்து வேள்விகளை அழித்து அங்கு வந்த அரசர்களைத துரத்தி அடித்து தக்ஷன் I தலையையும் வெட்டி, அவனையழித்தார்.

(இந்த விவரங்கள் சிவபுராணம் நூ-ல் விரிவாக உள்ளது)

## 4. மேருபாண்டியன்

குமரி நாட்டில், ஏழ்குன்ற நாட்டிலுள்ள மகேந்திரமலையில் மேரு பாண்டியன் ஆட்சி செய்த போது, தக்ஷனுடைய வேள்வி நடந்தது. அப்போது சிவபெருமான் படைத்தளபதி வீரபத்திரன் தக்ஷன்I வேள்வியை அழித்து அங்கு வந்த அரசர்களையும், முனிவர்களையும் வெருட்டியடித்து, மகேந்திரமலை சென்று மேருபாண்டியனுக்கு உதவியாக தனது படைகளை நிறுத்தி இமயநாடு திரும்பினார்.

மேருபாண்டியன் மனைவி சுமதி (வஜ்ஜிரராஜன் மகள்), இவர்களுக்கு பாண்டியன் மாகீர்த்தி, மலையத்துவஜன், பஞ்சசேனன் முத-ய மக்கள் பிறந்து குமரி நாட்டை ஆண்டனர். மேருபாண்டியனுக்கு ஆயதி, நியதி என்னும் பெண்கள் பிறந்தனர். இந்த மேரு புத்திரிகளை பிருகு முனிவன் வழி வந்த தாதா, விதாதா என்னும் இரண்டு குமாரர்கள் மணந்து கொண்டு மேரு பாண்டியனுக்கு ராஜகுருமார்களாக இருந்தனர்.

தாதாவுக்கும் ஆயதிக்கும் பிறந்த மக்கள் ராஜகுருமார்களாக இருந்தவர்களில் பிராணன், த்யுதிமான், அசாவன் முத-யோர் பிரசித்தமானவர்கள். விதாதாவுக்கும் நியதிக்கும் பிறந்த மக்கள் வழியில் மிருகண்டு, மார்க்கண்டன், வேதசிரன், உசநசு, (உசீநரன்)

பார்கவன், சுக்கிரன், துவஷ்டா முத-யோர் பிரசித்தமானவர்கள். இவர்கள் அசுர அரசர்களின் (சாகத்தீவம்) ராஜகுருமார்களாகவும், அரக்க அரசர்களுக்கு குருமார்கனாகவும் இருந்து பிரசித்தி பெற்றவர்கள். பிருகு கோத்திரத்தில் உதித்தவர்கள் பிருகத்சரணர்கள் என்னும் அந்தணர்கள், (தாதாவும், விதாதாவும் தக்ஷணின் குமாரி கியாதி என்பவளுக்கும் பிருகு முனிவருக்கும் பிறந்தவர்கள்) எனப்படுவர்.

மகேந்திர மலையில் மலையத்துவஜ பாண்டியனுக்கும் பிறகு மனோஜவ பாண்டியன் அரசனாகி பல வேள்விகள் செய்து இந்திர பட்டம் பெற்றான். மனோஜவ பாண்டியன் காலத்தில் சாகத்வீபத்தில் (ஜாவா, சுமத்ரா, கம்போடியா அடங்கிய பிரதேசங்கள்) பிரபாகரன் என்னும் அரசன் இருந்தான். இவன் கச்சபனுக்கும் திதி என்பவளுக்கும் பிறந்த அசுரர்கள் வழி வந்த அரசன். பிரபாகரனுக்கும பிள்ளைகளும், அஜமுகி என்னும் பெண்ணும் பிறந்தனர்.

மனோஜவ பாண்டியனை, பிரபாகரன் சிறையிலடைத்து வீரமகேந்திரபுரத்தையும், (மகேந்திரமலை) பிடித்து குமரிக்கண்டம், வடபாரதம், குருகுதீவம் (கிரௌஞ்சம் அல்லது கிரேக்க தேசம்) முத-ய பல நாடுகளையும் வென்று அசுரேந்திரனாக பட்டம் சூடிக் கொண்டவன்.

சூரபதுமன் மனைவி பதுமகோமளை அல்லது தருமசீ- என்பவளுக்கு (மயன் என்னும் அசுர அரசன் மகள்) பானுகோபன், அக்னிமுகன், வீரமகேந்திரபுரியி-ருந்து அரசாண்டனர்.

சிங்கமுகன் மனைவி விபுதை (ஜாமிக்கும் தருமனுக்கும் பிறந்தவள்) என்பவளுக்கும் அதிசூரன் முதலான பிள்ளைகள் பிறந்தனர். சிங்கமுகன் தே-ராகு என்னும் பட்டணத்தி-ருந்து (ஈரான் நாட்டிற்கு வடக்கே உள்ளது) அரசாண்டான்.

தாரகன் (யானை முகன்) சௌரி என்பவளை (நிருதி அல்லது நீக்ரோ இனத்தவர்-எத்தியோப்பியா) மணந்து பல அசுர மக்களைப் பெற்று கிரௌஞ்ச மலை நாட்டிலுள்ள குருகு பட்டணத்தி-ருந்து அரசாண்டான்.

வடபாரதத்தில் இமய நாட்டில் பரமேஸ்வரன் (இறையோன்) என்பவரும் இதர நாடுகளில் பிரியவிரதன், உத்தானபாதன் என்னும் அரசர்களும் ஆண்டனர்.

உத்தானபாதன் சுநீதி என்பவளை மணந்து துருவனைப் பெற்றாள். உத்தானபாதனுக்கும் சுருதி என்பவளுக்கும் உத்தமன் பிறந்தான்.



துருவன் + பிரமி (சிம்சுமாற பிரஜாபதி மகள்) மற்றும் சம்பு என்பவளையும் மணந்தான்.

துருவன் வழியில் உத்கலன், வஜ்ரன் சுமதி மனைவி பாண்டிய இளவசியின் மகள்) புட்சியாரன் (பிரமரதேவி, தோஷாதேவி மனைவியர்) மற்றும் வியஷ்டி, சர்வதேஜஸ், (10 குமாரர்கள்) முத-யோர் ஆண்டனர். பிரசேதஸ் என்பவர்கள் மாரீஷை என்பவளை மணந்து தக்ஷன்II என்பவனைப் பெற்றாள். இந்த தக்ஷனுடைய 27 பெண்களை மனோஜவ பாண்டியனுக்குப் பிறகு ஆண்ட சந்திரபாண்டியன் மணந்து கொண்டான். தக்ஷனுடைய வேறு இரண்டு பெண்களை பூதபாண்டியன் மணந்து கொண்டான். சோழநாட்டு அரசன் தருமன் 10 பெண்களையும், காஸ்யபன் 13 பெண்களையும், அரிஷ்டநேமி 4 பெண்களையும், ஆங்கீரஸ் 2 பெண்களையும், கிருசாஸ்வன் (அசுரகுலம்) 2 பெண்களையும் மணந்து கொண்டனர்.

வானமண்டத்திலுள்ள 27 நக்ஷத்திரங்களும் சந்திரனையும் உவமையாக கூறி, தன்னுடைய பெண்களின் பெயர்களையே நக்ஷத்திரங்களுக்கும் சூட்டினார் தக்ஷன்II . நக்ஷத்திரங்களில் ரோகிணி என்னும் தக்ஷத்திரம் சந்திரனுக்கு மிக அருகில் தோன்றும். தக்ஷனுடைய பெண்களில் ரோகிணி என்பவளையே சந்திரன் மிக அதிகமாக விரும்பினான். இதன் காரணமாக மற்ற 26 பெண்களும் தக்ஷனிடம் முறையிட தக்ஷன் கோபமுற்று சந்திரனுடைய நாடுகளை கைப்பற்றி அங்கே தனது 26 பெண்களையும் அரசிகளாக்கினான். சந்திரன் தேய்ந்து கொண்டே போவது போல சந்திரபாண்டியனும் நாடுகளை இழந்து இமயநாட்டிற்குச் சென்று இறையோனிடம் (பாண்டியன்) தஞ்சம் புகுந்தான்.

தக்ஷனின் வளர்ப்பு மகளான ரதிதேவியை, திருமா-ன் மகனான மன்மதன் மணந்து கொண்டு பாண்டிய நாட்டு பகுதிகளில் அரசனாக முடிசூட்டிக் கொண்டு ஆட்சி செய்தான், மீனக் கொடியோனாகிய மன்மதன் கறுப்பு நிறத்தவனாக இருந்தாலும் திருமாலைப்போல் மிக்க அழகுடையவனாக இருந்தான். சோழநாட்டு இளவரசிகளையும் மன்மதன் மணந்து கொண்டு சூரியவம்சத்து அரசர்களுடன் நட்புடையவனாக இருந்தான்.

சூரபதுமன் படையெடுத்து பாண்டிய நாடுகளைப் பிடித்துக்கொண்டதால் மன்மதன் இமயநாட்டிற்குச் சென்று இறையோனிடம் முறையிட்டான். பாண்டிய நாட்டு அரசனைப் போல மீனக்கொடியை ஏந்தி வந்ததால், மன்மதன், இறையோனால் எரிக்கப்பட்டான். பாண்டிய நாடுகளை மீட்க இறையோன், இமய நாட்டு மலையரசனுக்கும் மேனகைக்கும் பிறந்த பார்வதி தேவியை மணந்து கொண்டார்.

இறையோனாகிய சிவபெருமான், பார்வதிதேவியை திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாக, அகஸ்திய முனிவன் தலைமையில் ஏராளமான சிவகணங்களை தெற்கு நோக்கிச் செல்லும்படி பணித்தார். அகஸ்தியர், விந்தியமலை அரசர்களை வென்று வில்லவன், வாதாபி முத-ய அசுர அரசர்களைக் வென்று, பொதியமலையில் வந்து தங்கி இறையோனின் உத்திரவுக்காக காத்து இருந்தார்.

(இறையோனுக்கும் பார்வதி தேவிக்கும் பிறந்த குமரவேள் வரலாறு அடுத்த அத்தியாத்தில் காண்க)

## 5. முசுகுந்த சோழன்

சூரபதுமனுக்கு உதவியாக வலன் என்னும் அசுர அரசன் வானவர் நாட்டின்மீது படையெடுத்து இந்திரனை விரட்டி வானவர் நாட்டில் ஆட்சி செய்தான். வானவர் நாடு என்பது வடக்குப் பகுதியில் உள்ள பகுதியாகும். இமய நாட்டிற்கு கிழக்கே தேவகங்கை (மீ-காங் நதி) ஓடும் பிரதேசத்தில் உள்ளதாகும். (தெற்கு சீனம், கம்போடியா எனப் பெயரில் இப்போது வழங்கப்படுகிறது). வானவர் தலைவனான இந்திரன் தப்பி ஓடி தென்பாரதத்தில் சீர்காழி (தஞ்சை) என்னுமிடத்தில் ஒளிந்து கொண்டான்.

பொதிய மலையி-ருந்து வந்த அகத்தியர் இந்திரனைக் கண்டு ஆறுதல் கூறி, இந்திரனுக்கு இந்த கதி துர்வாசர் என்னும் முனிவர் கொடுத்த பூஜைப் பிரஸாத மலரை தனது யானையான ஐராவததத்தின் தலையில் வைத்ததும், ஐராவதம் என்னும் அவனது யானை அதை துதிக்கையால் எடுத்து காலால் மிதித்த செய்கையால் ஏற்பட்டது என்றும், இச்சாபம் தீர இமயமலையில் சென்று சிவபெருமானை நோக்கி தவம் செய்யும்படியும் கூறினர். இந்திரன் தனது மனைவியான புலோமிசை (இந்திராணி) சீர்காழியில் பத்திரமான இருக்கும்படி கூறி தவம் செய்ய இமயம் சென்றான். இந்திரன் சிவபெருமானுக்கும் மோகினிக்கும் பிறந்த தர்மசாஸ்தாவை இந்திராணியை காப்பாற்றும்படி பிரார்த்தனை செய்து கொண்டான்.

முன்பொருகால் பதுமன் என்னும் அசுரன் சிவபெருமானை நோக்கி தவம் செய்து ஒருவன் தலைமீது தனது கை வைக்க அவன் எறிந்து சாம்பலாக வேண்டும் என வரம் பெற்று அதை சோதிக்க சிவபெருமான் தலைமீதே கைவைக்க அவரை அணுகினான். அவனது நோக்கம் தெரிந்து சிவபெருமான் மறைந்து விட்டார். இதைக் கண்ணுற்ற திருமால் மோகினி உருவம் எடுத்து பதுமாசுரனை



மயக்கி சூரிய வணக்கத்திற்குப் பிறகு அவனை நெருங்குவதாக கூற, பசுமாசுரன் சூரிய வணக்கத்திற்காக தன் தலையில் கைவைத்துக்கொள்ள, தானே எறிந்து சாம்பலானான். இதன் பின்னர் சிவபெருமானின் சக்தியும், திருமா-ன சக்தியும் சேர்ந்து தர்மசாஸ்தா, மகா காளனை இந்திராணிக்கு துணையாக சீர்காழியில் இருக்கும்படி பணித்தார்.

அகத்தியர் தன்னுடன் வந்த முசுகுந்த சோழ மன்னனை வானவர் நாட்டின் மீது படையெடுத்து வலனை கொன்று வானவர்களை காப்பாற்றும்படி உத்திரவிட்டார். முசுகுந்த சோழன் தனது தளபதிகளான விருஷாகபி, சோ முத-யவர்களுடன் வானவர் நாட்டின் மீது படையெடுத்து வலன் என்னும் அசுரனைக் கொன்று மீண்டும் வானவர்களுக்கு அவர்கள் நாட்டைத் திருப்பி அளித்தான். இந்திரன் மீண்டும் வானவர் தலைவனாக அரியணை ஏறினான். முசுகுந்தன் செய்த உதவிக்கு பரிசாக என்ன வேண்டும் எனக் கேட்ட போது இந்திரன் பூஜித்த சிவ-ங்கத்தைத் தருமாறு வேண்ட அதைப் பெற்று அகஸ்தியரிடம் பொதியமலை வந்து சமர்ப்பித்தார். அகத்தியர் முசுகுந்தன் பெற்றுவந்த -ங்கம் உண்மையில் இந்திரன் பூஜை செய்தது அல்ல எனக் கூறினர். முசுகுந்தன் திரும்பவும் இந்திரனிடம் சென்று வேண்ட அவன் வேறு ஒரு -ங்கம் கொடுத்தான். இம்மாதிரி இந்திரன் ஆறுமுறை முசுகுந்தனை ஏமாற்ற, ஏழாவது முறையாக உண்மையாக தான் பூஜித்த -ங்கத்தை முசுகுந்தனுக்கு அளித்தான்.

முசுகுந்தன், அகத்தியர் கட்டளையின் பேரில் அந்த ஏழு -ங்கங்களை (1) திருக்காராயில் (ஆதிவிடங்கர்), (2) திருநள்ளாறு (நகரவிடங்கர்), (3) திருநாகைக்காரோணம் (சுந்தரவிடங்கர்), (4) திருக்கோளி- (அவநிடங்கர்), (5) திருத்தென்வாய்மூர் (நீலவிடங்கர்), (6) திருமறைக்காடு (விடங்கர்), (7) திருவாரூர் (வீதிவிடங்கர்) என்னும் இடங்களில் பிரதிஷ்டை செய்து அந்தந்த இடங்களில் தனது மக்களை (தமிழர்களை) குடியமர்த்தினான். இந்திரன் பூஜித்த உண்மையான -ங்கம் திருவாரூரில் பிரதிஷ்டை செய்யப்படடது. இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு கரூர் என்னுமிடத்தில் தலைநகர் அமைத்து சோழசக்கரவர்த்தி எளப்பட்டம் சூட்டிக் கொண்டான். மேற்கூறப்பட்ட இடங்களில் (தஞ்சை மாவட்டம்) சூரனை எதிர்க்க பாசறைகள் அமைத்து பாரதம் முழுவம் இருந்த தமிழர் படைகளைத் திரட்டி யுத்தப் பயிற்சி செய்ய உத்தரவிட்டு, சிவபெருமான் உத்திரவுக்காக காத்து இருந்தான்.

(சூரபதுமனுடைய தங்கையான அஜமுகி, சீர்காழிக்கு வந்து இந்திராணியை சிறைபிடிக்க வந்தபோது, மகாகாளன் அஜமுகியின் கையை வெட்டித் துரத்திவிட்டார்).

# 6. அகஸ்த்தியர்

அகஸ்த்தியர் என்னும் பெயரில் பல காலகட்டங்களில் வேறு வேறு முனிவர்கள் வாழ்ந்தனர். குமரிநாட்டில் வாழ்ந்த முத்தூர் அகத்தியர், வில்லவன், வாதாபியை வென்ற அகத்தியர், பொதிய மலையில் தமிழ் சங்கம் அமைத்த அகத்தியர், தென் மதுரையில், குமரி நாட்டில், முருகவேளுக்குப் பிறகு தமிழ் தலைச்சங்கம் தலைவராயிருந்து தமிழிலக்கணம் செய்த அகத்தியர், தன்னுடைய கமண்டலத்தில் காவிரியை கொணர்ந்த அகத்தியர், இந்திரதுய்மன் என்னும் பாண்டிய மன்னனை யானையாக சபித்த, அகத்தியர், ஸ்ரீராமனுக்கு ஆதித்யஹ்ருதயம் கற்பித்த அகத்தியர், கடலை அள்ளிக் குடித்த அகத்தியர் எனப்பல அகத்திய முனிவர்கள் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்துள்ளன. அகத்தியர் என்னும் ஒரு முனிவர் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தனர் என்பதை ஏற்க இயலாது.

தாத்தவின் பெயரை, பேரனுக்கும் சூட்டுவதும் ஓர் மரபு. சங்கர மடம் போன்ற பல ஆன்மிக பீடங்களில் பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த வெவ்வேறான பலருக்கும் ''சங்கராசாரியார்'' என ஒரு பொதுவான பெயர் இன்றும் உள்ளது. அம்மாதிரியே அகஸ்த்திய பீடம், பரசுராம பீடம், வியாஸ பீடம், என்ப பல ஆன்மிக பீடங்கள் இருந்திருக்கக் கூடும். பாண்டிய அரசர்களின் பரம்பரையில் மலையத்துவஜன், குலசேகரன், குலோத்துங்கன், ராஜசேகரன், சடையவர்மன், மாறவர்மன், வீரபாண்டியன், விக்ரம பாண்டியன், பராக்கிமபாண்டியன் என்னும் பெயர்களில் பல கால கட்டங்களில் வெவ்வேறு அரசர்கள் வாழ்ந்துள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த அகத்தியர் அனைவரும் ஒருவரே எனக் கொள்ளலாகாது. (இனி அகத்தியர் என்னும் பெயரில் வாழ்ந்த முனிவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது-ஆர்)

1) மித்திரன், வருணன் என்னும் மேற்கு திக்கு அதிபதிகளுக்கு ஊர்வசியிடம் பிறந்தவர்கள் வசிட்டர், அகத்தியர் என்னும் இருவர்கள்.

2) புலஸ்த்திய பிரம்மாவிற்கு ஆவிர்.பூ என்பவளிடத்தில் பிறந்தவர் அகத்தியர்

3) சிவபெருமான் அம்சமாக கயிலையில் பிறந்து சூரியனிடம் (தாமூலன்) தமிழைக் கற்றவர் அகஸ்த்தியர் (தாமூலமன் என்னும் சூரியன் கற்றுக் கொடுத்ததால் தாமூலம், தமிழ் ஆயிற்று)



4) விதற்ப இளவரசியை மலையத்துவஜ பாண்டியன் மணந்து கொண்டான். விதற்ப இளவரசிக்கும், மலைத்துவஜ பாண்டியனுக்கும் ஏழு பிள்ளைகளும், பாண்டியதேவி என்னும் பெண்ணும் பிறந்தனர். பாண்டி மாதேவியை அகஸ்த்தியர் மணந்தார். மலையத்துவஜன் பிள்ளைகள் குமரிக் கண்டத்தை ஆண்டனர். அகஸ்த்தியர் அவர்களின் குல குருவானார். (ஸ்ரீமத்பாகவதத்தில் பிராசீனபர்ஹிசு என்னும் அரசனுக்கு சொன்னபுரஞ்சனன் கதையில் இந்த விவரங்கள் உள்ளன) அகஸ்த்தியருக்கும் பாண்டிய இளவரசிக்கும் இத்துமாவகனன் (திரவிடசுதன்) என்னும் பிள்ளை பிறந்து விதற்ப தேசத்தை ஆண்டான்.

5) ஆதிசேஷன் எல்லாக் கலைகளிலும் தான் வல்லவன் என்னும் ஆணவத்தினால் திருமாலை எதிர்த்து வாதாட வர, அக்த்தியர் அவனை நோக்கி உனது குரு யார் என்று கேட்க, ''எனக்கு குரு'' யாரும் இல்லை என்று கூற, குரு இல்லாத வித்தை பாழ் என்று அகத்தியர் கூறி, ஆதிசேடன் தலை ஆயிரம் சுக்கலாக உடைந்து போக சபித்தார். ஆதிசேடன் அகத்தியரை வணங்கி சாபவிமோசனம் கேட்க, திருமாலே உனது குருவாக இருப்பார். ஆயிரம் தலைகளோடு அவருடன் இணைபிரியாது இருந்து சேஷ வானகமான இருப்பாய் என் சாபவிமோசனம் அளித்தார். (இக்கதை வேதத்தில் உள்ளது. பேரளத்தின் மேற்கே 3 மைல் உள்ள திருப்பாம்புரம் என்னும் ஸ்தலபுராணத்திலும் இக்கதை உள்ளது)

6) திருமால் குதிரை முகத்துடன் (ஹயக்கிரீவர்) இருந்து ல-தாபரமேஸ்வரியின் மந்திரங்களை அகத்தியருக்கு உபதேசம் செய்தார். லோபாமுத்திரை (விதற்ப இளவரசி)யின் கணவராக அகஸ்தியர் இருந்ததால் அம்பாள் அனுக்கிரஹம் இவருக்கு கிடைத்தது.

7) ஒளிச்செங்கோ (சூரிய வமிச அரசன்) வின் அவையில் முத்தூர் அகத்தியர் இருந்து ஒளிச்செங்கோ (பேராற்று அருகில் தலைநகரம் -குமரிநாடு) என்னும் அரசனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

8) தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மா- என்னும் அரக்கனை அழிக்க சிவபெருமான் தென்பாரதம் வந்த போது அகத்தியர் (துவராபதியி-ருந்து எண்ணாயிரம் தமிழ் அந்தணர்களையும்-அஷ்டஸஹஸ்ரகோத்திரம் 8000 அருவாளர்களையும் நாற்பத்தெட்டாயிரம் வேளிர்களையும் அழைத்து வந்து தென்னாட்டில் குடியமர்த்தினார்.

9) சூரபதுமனின் குருவான இடும்பாசுரனுக்கு அகத்தியர் குருவாக இருந்தார். இடும்பன் அகத்தியர் உத்திரவின் பேரில்அகத்தியரின் பூஜைக்காக இரு மலைகளை காவடியாய் தூக்கி வந்து பழநி மலையில் இளைப்பாற அக்குன்றின்மேல் முருகவேள் அமர்ந்து கொள்ள, இடும்பன் முருகவேளுடன் சண்டையிட நேரும் போது, அகத்தியர் முருகவேளை வேண்டி இடும்பாசுரனை காப்பாற்றினார் (இடும்பன் காவடி புராணம் காண்க)

10) தனது மூதாதையர்கள், மரத்தி்ல் வௌவால்களைப் போல் தொங்க, அகத்தியர் அவர்கள் உத்திரவுப்படி உலூபி (ஜரத்காரு) என்னும் பெண்ணை மணந்து, மூதாதையர்களுக்கு சிராத்தம் செய்து அவர்களை கரையேற்றினார்.

11) பொதிய மலையில் தமிழ்சங்கம் அமைத்து, முசுகுந்த சோழ சக்கரவர்த்திக்கு கரூரில் முடிசூட்டினார்.

12) பரசுராமருக்கு உபதேசம் செய்து கேரளத்தில் பதினெட்டு இடங்களில் தர்மசாஸ்தாவுக்கு கோயில் கட்டச் செய்தார் அகத்தியர்.

13) கவேரன் என்னும் சோழ மன்னன் காலத்தில், தென்னாட்டில் காவிரியை ஓடச் செய்து கவேரன் (குபரேன்) என்னும் சோழ மன்னனின் மகளான காவிரியை மணந்த கொண்டார்.

14) காந்தன் என்னும் சோழ மன்னரை பரசுராமன் தாக்க வரும் போது அகத்தியர் தனது ஆஸ்ரமத்தில் காந்தனை மறைத்து காப்பாற்றினார்.

15) இராவணன் என்னும் இலங்கையரசுனுடன் காந்தர்வ வேதத்தில் வாதிட்டு (யாழிசைப் போர்) இராவணனை தமிழ்நாட்டில் போரிடாதபடி தடுத்தார்.

16) இராமனுக்கு, விஷ்ணுவின் வில்லைக் கொடுத்து, ஆதித்ய ஹ்ருதயம் உபதேசித்து அகத்தியர் ஸ்ரீராமனுக்கு இராவணனைக் கொல்ல ஆசியளித்தார்.

17) சந்திர வமிசத்தில் நகுஷன் என்னும் அரசன் 100 வேள்விகள் செய்து இந்திர சிம்மாசனத்தில் ஏறுவதற்கு முன்பாக அகஸ்தியர் முதலான சப்தரிஷிகளை பல்லாக்கு சுமக்கும்படி கூற, அகஸ்தியரை வேகமாகச் செல்லும்படி விரட்ட, அகஸ்தியர், நகுஷனை பாம்பாக போகும்படி சபித்தார்.



18) துவஷ்டா என்னும் அசுர குருவின் மகனை இந்திரன் கொல்ல துவஷ்டா, விருத்திராசுரன் என்னும் அசுரனை இந்திரன் மேல் ஏவி விட, இந்திரனுக்கும், விருத்திராசுரனுக்கும் போர் நடந்தது. விருத்திராசுரன் கட-ல், (மேற்கு திக்கில் உள்ள கடல்) மறைந்து கொள்ள, அகத்தியர் அக்கடலை வற்றச் செய்து ,விருத்திராசுரனை வெளிப்படுத்த இந்திரன் அவனைக் கொன்றான். குதிரை முகம் கொண்ட ததீசி என்னும் முனிவரின் முதுகெலும்பை ஆயுதமாகப் பயன்படுத்தி இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றான். சிவபெருமான் பார்வதியை திருமணம் செய்வதற்கு முன்பாக தென்னாடு வரும் வழியில் விந்திய அரசனை அடக்கி வில்வலன், வாதாபி என்னும் இரு அரசர்களில் வாதாபியை அழித்து, வில்வலனை மன்னித்து அவனிடம் பொருள் பெற்று பல யாகங்களைச் செய்தார் அகத்தியர்.

20) மனோஜவபாண்டியன் (இந்திரத்துய்மன்) சிவபூஜை செய்யும் போது அங்கே வந்த அகஸ்தியரை வரவேற்காது இருக்க அவனை யானையாக உருமாறும்படி சபித்தார். கஜேந்திரனாக உருமாறிய இந்திரத்துய்மன் திருமாலை வழிபட்ட மோக்ஷம் அடைந்தார். (கஜேந்திர மோக்ஷம் புராணம் காண்க)

21) பூம்புகார் என்னும் கடற்கரை பட்டிணத்தை அமைக்கச் செய்து அங்கே இந்திர விழா கொண்டாடும்படி (போகி பண்டிகை) தூங்கு எயில் எறிந்த தொடி தோட் செம்பியன் என்னும் சோழ அரசனுக்கு கட்டளையிட்டார் அகத்தியர்.(ஆதாரம்- மணிமேகலை)

22) பொதியமலையில் தமிழ்ச சங்கம் அமைத்து, திருணதூமக்கினி (ஜமத்கினியின் மகன்-தொல்காப்பியர்- காப்பிய கோத்திர அந்தணர்) அதங்கோட்டாசான், துரா-ங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரனார், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியார், நற்றத்தன், வர்மனன் முத-ய புலவர்களுக்கு தமிழ் போதித்தார். தொல்காப்பியர் தமிழ் இலக்கணம் செய்ததை அங்கீகாரம் செய்தார்.

23) அகத்தியர், வைத்ய நூல்கள், பெரும் திரட்டு, ஆயுர்வேத பாஷ்யம் விதி நூல் மூவகைக் காண்டம், வைத்திய சிந்தாமணி (சித்த வைத்யம்), செந்தூரம், மணி, சிவஜாலம், சக்தி ஜாலம், ஷண்முக ஜாலம், வைத்திய கண்ணாடி, வைத்ய ரத்னாகரம் (அறுவை சிகிச்சை நூல்), கர்ம வியாபகம், கரிசில் பஸ்பம், தண்டகம், பக்ஷணி நாடி நூல், அகஸ்தியர் சம்ஹிதை, வானநூல், விமான நூல் முத-ய நூல்கள் யாத்தவர். போகர், அக்நிவேச்யர் முத-ய சித்தர்களுக்கு குரு. யோக சாஸ்திரம் முத-ய வித்தைகளை

கற்பித்தவர். திருவள்ளுவருக்கு, திருவாலங்காடு என்னுமிடத்தில் தரிசம் தந்து குறள் முதலான நூல்களை எழுதும்படி அனுக்கிரஹித்தவர். (இவ்வாறு பல நூல்களை இயற்றிய அகத்தியர், தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் முத-யவை பற்றிய பாடல்களையும் தமிழில் தந்துள்ளார்.)

23) முருகவேளுடன் திருச்செந்தூர் தமிழ்சங்கத்தில் பல நூல்களை முருகவேளிடம் கற்று தமிழில் மொழிபெயர்த்தவர். தலைச்சங்கத்தில் முருகவேளுக்குப் பிறகு தலைமை தாங்கி நடத்தி, தலைச்சங்கத்தை காய்சின் வழுதி என்னும் பாண்டியனிடம் ஒப்புவித்து தவம் செய்யச் சென்றார் அகத்தியர்.

(ஏறத்தாழ 49 அகத்தியர்கள் வெவ்வேறு காலக் கட்டங்களில் வாழ்ந்துள்ளனர் என்று தமிழ் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ்மொழி வாழ்ந்து கொண்டிருப்பதற்கு அகத்திய முனிவரின் தவமுயற்சியே காரணமாகும்.)

## 7. முருகவேள்

பிரதேசஸ்ஸுக்களுக்கும் மாரிஷை என்ற அப்ரஸுக்கம் தக்ஷன் -II பிறந்தான். தக்ஷன்-II க்கும் அவனது பெண்களுக்கும் பிறந்தவர்களின் விவரங்கள் புராணங்களின்படி கீழே தரப்படுகின்றன.

சூரசேனன் என்னும் தருமன் (சோழ அரசன்) தக்ஷனின் II பத்து பெண்களை மணந்து கொண்டான். அவர்களுக்கு பிறந்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு.

| **தக்ஷனின் II - இன் பெண்கள்** | **தருமனுக்கு பிறந்தவர்கள்** |
|---|---|
| 1) விஸ்வை (தருமவதி) | விஸ்வேதேவர்கள், விரதை (மரீசியன் மனைவி) |
| 2) சத்யை | சத்யன் (சாத்தன் முதலன சேர அரசர்கள் அர்த்த சித்தி (பெண்) |
| 3) மருத்து | மருத்துக்கள், ஜயந்தன், உபேந்திரன் |
| 4) வசு | சிவாம்சம் பொருந்தி அஷ்டவசுக்கள் (அக்னி வம்சம்) |
| 5) பானு | சூரிய வமிச அரசர்கள், வேதரிஷபன் இந்திரசேனன் |
| 6) முகூர்த்தை | முகூர்த்தர்கள் |
| 7) இலக்குமி | கோஷர்கள், வித்யோதன், ஸ்தானயி |
| 8) அருந்ததி | அருந்ததியர்கள் |
| 9) விபு | விபுதை (சிங்கமுகன் மனைவி) சொக்கன், தந்தி (பெண்) |
| 10) சங்கற்பை | சங்கற்பன், சங்கடன், கிடகன் மு-ய துர்கை அபிமானிகள. |



வரிசை எண் 4-இல் கூறப்பட்ட அஷ்ட வசுக்களும் அவர்கள் வம்சமும்

| **வசுக்களின் பெயர் (1)** | **மனைவி பெயர் (2)** | **பிள்ளைகள் பெயர் (3)** |
|---|---|---|
| 1) ஆபன் | அபிமதி | வேதாண்டன், சிரமன், சாந்தன், முனி |
| 2) துருவன் | தரணி | காலன், வேதப் பிரபாவன், புராணன் |
| 3) சோமன் | வர்ஜஸ் | கேது, காலதீ, கூர்மாண்டன், ஆடகேசன், வீரபத்திரன், மேலையோன், குண்டோதரன், கங்கணாளன், களாகண்டன், தண்டி, நீலன், விஸ்வமா-, ஆசா (பெண்) |
| 4) தரன் | மனோஹரை | திராவிடன், ஹுதவயன், வரணன், (யசோதா) சிசிரன் (சங்கரன்) ரம்யன் (நீலலோகிதன்), ஈசானன் (மகாதேவன்) விஜயன் (விருஷாகபி), பீமதேவன் (ஹரன்), பவோர்பவன் (சம்பு), கபா-, சௌம்யன் (சோ அல்லது ரேவதன்) |
| 5) அநிலன் | சிவை | புரோஜவன், சகன், ஆயுசு |
| 6) அனலன் | கார்த்திகை | 1) அக்னிபுத்ரன் 2) குமாரன் (முருகன்), 3) சரஸ்தம்பன், 4) சாகன், 5) விசாகன், 6) நைகமேயன் |

IIst Proof



| | | |
|---|---|---|
| 7) பிரத்யூஷன் | உஷை | தேவலன் (ஆதித்யன்), வியஷ்டி திவஸ், ரோஜஸ் (பெண்) |
| 8) பிரபாஸன் | புவனி (ஆங்கிரஸ்புதல்வி) | விஸ்வகர்மா (துவஷ்டா) முத-வர்கள் |

8வது வசுவான் பிரபாஸனின் மனைவி புவனி என்பவள் மரீசி என்பன் வமிசத்தில் தோன்றியவள். மரீசிக்கு ஒரு பெண்ணும் ஆங்கிரஸ¬ம் பிறந்தனர். ஆங்கிரஸ¬க்கு பிருஹஸ்பதி என்ற மகனும் புவனி என்ற பெண்ணும் பிறந்தனர். புவனி, பிரபாஸன் என்னும் வசுவை மணந்து விஸ்வகர்மாவை பெற்றாள். விஸ்வகர்மாவின் மகள் ஸ்ரேணு, சாயா (இரட்டை பெண்கள்) ஸ்ரேணுவை, விவஸ்வான் என்னும் சூரிய வம்ச அரசன் மணந்து கொண்டு வைவஸ்ஸ¬தன் (7வது மநு), யமன், யமுனை (பெண்) முத-யோர்களைப் பெற்றாள். சாயாவுக்கு விவஸ்வானுக்கும் சனைச்சரன் (முடத்திருமாறன்), சாவர்ணி, தபதி (பெண்) பிறந்தனர்.

(விவஸ்வான் என்னும் சூரியவம்ச அரசன் கச்யபருக்கும அதிதிக்கும் பிறந்தவன் இவன் மகன். வைவஸ்ஸ¬தன் மதுரைக்கு அருகில் ஓடும் கிரதுமால் நதிக்கரை ஓரம் தலைநகர் அமைத்து அரசாண்டான். கிரதுமால் நதி மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி மதுரை, இராமனாதபுரம் முக்குளம் வழியாகச் செல்லும் நதி)

அனலன் என்னும் வசுவுக்கு பிறந்த குமாரர்கள் அக்னிபுத்திரன், குமாரன், சரஸ்தம்பன், சாகன், விசாகன் நைகமேயன் முத-ய அறுவரும் சரவணப் பொய்யில் சிவபெருமான் அம்சமாக தாமரை மலர்களில் தோன்ற கார்த்திகைப் பெண்கள் அவர்கள் வளர்க்க, அந்த அறுவரையும் ஒன்றாக வாரியெடுத்து பார்வதி தேவி (பாவகன் என்னும் இறையனார் மனைவி) கையிலையில் வளர்த்தனர். அப்படிப்பட்ட அவதாரமே குமாரன் (முருகவேள்) ஆகும்.

முருகவேள், பார்வதி தேவியிடமிருந்து சக்திவேலைப் பெற்று தென்நாடு வந்த திருச்செந்தில் நகர் வந்து பாசறை அமைத்தார். முருகவேளுடன், வீரவாகு, வீரமகேந்திரன், வீரபுரந்தரன், வீரராக்ஷஸன், வீர மார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன், வீராதிவீரன் முதலான ஒன்பது தளபதிகளும், முசுகுந்த சோழ சக்ரவர்த்தி படைகளும், பாண்டியன் காய்சின வழுதி படைகளும், அகஸ்தியரும் திருச்செந்தில் நகரை அடைந்தனர்.

திருச்செந்தில் (திருச்செந்தூர், திருச்சீரலைவாய், ஜயந்திபுரம்) என்னும் நகரம் தற்போது கடற்கரை ஓரத்தில் உள்ளது. ஒரு காலத்தில்



கந்தமாதனம் மலையின் உச்சியில் இது இருந்தது. இங்கிருந்து தெற்கே பார்த்தால் கடல் நடுவில் சூரனது வீரமகேந்திரபுரம் தெரியும் அளவிற்கு உயரத்தில் இருந்தது. இந்த நகரில் முருகவேள் ஒரு தமிழ் சங்கத்தை நிறுவினார். (கி.மு. 14,000)அச்சங்கத்தில் தலைவராக குன்றம் எறிந்த குமரவேள், வாதாவி அகத்தியர், புலத்தியர், சனகர், சனற்குமாரன், இந்திரன் மகன் ஜயந்தன், தேவ குருவான பிருஹஸ்பதி முத-யோர் புலவராக இருந்தனர்.

குமரம், முருகன் அகப்பொருள் விருத்தி, மகேசம், ஐந்திணை (களவியல்) நெடுந்துறையன் பெரு நூல், செங்கோடன் இயநூல், அகத்தியம் (இலக்கணம்) முத-ய நூல்கள் வெளியிடப்பட்டன. குமரம் என்பது பேரிலக்கண நூலாகும்.

(சனகர்க்கும், அகத்திய, புலத்திய, சனற்குமாரர்க்கம், விபத்தியில் ஞான படலத்துறு இலக்கண இலக்கிய தமிழ் திரயமத்தில், அகப்பொருள் விருந்தியினை பழுதற்றுணர்வித்த சற்குருநாதா-பழனி திருப்புகழ்)

வேதங்கள் திரிந்து போனமையால் அவற்றை செம்மைப்படுத்தி தமிழில் முனிவர்களுக்கு போதித்தான் முருகன்.

( “திருத்த வேதம் தண்டமிழ் தெரிதரு புலவோனே” -திருப்புகழ்) “அறம் நாலைப் புகல்வோனே”- அவிநாசி திருப்புகழ் ; “ அருமறை தமிழ் நூலடைவே தெரிந்துரைக்கும் புலவோனே”-சுவாமிமலைத் திருப்புகழ்)

( “ஓம்” என்னும் ஒரு பொருள் தமிழ் மந்திரமாக இருந்தது. அதுவே பிரணவம் என்றும் கூறுவர். “ வழுதியர் தமிழின் ஒரு பொருள் அதனை வழிபட மொழியும் குமரேசா ” - குன்றுதோறுடல் திருப்புகழ்)

முருகவேள் கிரௌஞ்சமலையைத் தன் வேலால் துளைத்து தாரகாசுரனை வென்று, சிங்கமுனையும் வென்று, மேருமலையை அடுத்த வீரமகேந்திரபுரத்தில் சூரனையும் வென்றான். தாரகனை ஒரு யானையாக மாற்றி சாஸ்த்தாவுக்கு வாகனமாகத் தந்தார். சிங்கமுகனை ஒரு சிங்கமாக மாற்றி துர்கைக்கு வாகனமாகத் தந்தார். சூரன் மாமரமாக மாறி நிற்க அதை இரண்டாகப் பிளந்து ஒரு பகுதியை மயிலாகவும், மறுபகுதியை சேவற் கொடியாகவும் தானே வைத்துக்கொண்டார். முருகனை பிரம்ம சாஸ்தா என்றும் தமிழர்கள் கொண்டாடினர். முருகவேள் தனது விஸ்வரூபத்தை திருச்செந்தில் நகரில் தேவகுருவான பிரஹஸ்பதிக்கு காட்டி ஞானம் புகட்டினார்.

மேருமலை என்பது குமரி நாட்டில் 49 கொடுமுடிகளுடன் இருந்த மலைத்தொடர். (பின்னர் இமயமலைத் தொடரையே மேரு என்றும் சுமேரு என்றும் அழைக்கப்பட்டது). இந்த மேரு மலையை முருகவேள் தனது சக்தியாயுதத்தால் தூளாக்கினார் என்பதற்கு கீழ்க்கண்ட பாடல்கள் ஆதாரமாக அளிக்கப்படுகின்றன.

“ வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்து
குமரிக்கோடுங் கொடுங் கடல் கொள்ள ”

(சிலப்பதிகாரம் - காடு 20-22)

1. “ சேடன் மேருவும் சூரனும் தாருகனும் வீழ ”-திருப்புகழ்
2. “ நேமிச் சூரோடு மேருத்தூள் எழ ” திருப்புகழ்
3. “ மேரு கிரிதளை பண்டு தூள் எழ வேலை உருவிய வயலூரா ” -திருப்புகர்
4. “ மாமேரோடேழேழு ஓதுகிரி சூரருடல் பாழாக ”-திருப்புகழ்
5. “ மேருகிரி தவிடுபட ”- திருவிடைமருதூர் திருப்புகழ்
6. “ மலைமாவு சிந்த அலைவேலையஞ்சவடிவேறெறிந்த அதி தீரா - திருச்செந்தில் திருப்புகழ்

தேவர்களின் சேனாதிபதியாக இருந்து சூரனை வென்றதால் தேவேந்திரன் தனது மகளான தேவயானையை முருகவேளுக்கு மணமுடிததான். (திருப்பரங்குன்றம் புராணணம் காண்க) பின்பு முருகவேள் தனது அண்ணன் விநாயகர் ஆசியுடன் வேட அரசன் நம்பியினுடைய மகள் வள்ளியையும் காதல் திருமணம் செய்து கொண்டான். இந்த விவரங்கள் வேதவியாஸர் இயற்றிய ஸ்காந்தபுராணத்திலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இக்காலம் தொட்டு பிள்ளையார் (விநாயர்), முருகன், சிவபெருமான், அன்னை பார்வதிதேவி முத-யோர் தெய்வங்களாக வழிபட்டனர்.

பாண்டிய நாட்டில் கவாடபுரம் என்னும் இடத்தில் காய்ச்சின வழுதி (உக்ரபாண்டியன்) என்னும் பாண்டிய அரசன் தலைநகர், நிறுவி, தமிழ் தலைச்சங்த்தை ஏற்படுத்தி, தனக்குப் பின் தலைவராக அகத்தியர் அவனை நியமித்தார். அகத்தியர் காய்சினவழுதியுயிடம் தலைச்சங்கத்தை ஒப்புவித்து, தவம் செய்ய பொதியமலை சென்றார். இந்நிகழ்ச்சிகள் ஆறாவது மன்வந்திரத்தில் இறுதியில் நடந்தன.

pictur-21



# 8. பரதன்

(7வது மநுவான வைவஸ்ஸுதனுக்கு முன்பாக வாழ்ந்த 6 மநுக்கள் அவர்களது வம்சாவளிகள் இந்த அத்தியாத்தில் கூறப்படுகின்றன. முதல் மநு விரஜன் அல்லது ஸ்வயம்பு, இரண்டாவது மநு சுவரோஷி, மூன்றாவது மநு உத்தமன், நான்காவது மநு தாமஸன், ஐந்தாவது மநு ரைவதன், ஆறாவது மநு சாக்ஷுஸன் என்பர்களாகும்.

பிரியவிரதன் என்பவன் முதல் மநுவின் புதல்வன். இவன் கர்த்தம பிரஜாபதியின் மகளான குமாரியை மணந்து 10 பிள்ளைகளையும் 2 பெண்களையும் பெற்றான். பிரியவிரதனின் பிள்ளைகள் 1. ஆக்னீதரன், 2. அக்னிபாகு, 3. வபுஷ்மான், 4. த்யுதிமான், 5. மேதா, 6. மேதாதிதி, 7. பவியன், 8. வைனன், 9. புத்ரன், 10. ஜ்யோதிஷ்மான். பெண்கள் சம்ராட்டு, குஷி என்னும் இருவர். பிரியவிரதனின் பிள்ளைகளான அக்னிபாகு, மேதா, புத்திரன், ஆகிய மூவர் தவிர ஏனைய ஏழுபேர் உலகில் உள்ள ஏழு கண்டங்ளுக்குச் சென்று அங்கு வம்சாவளிகளைத் தோற்றுவித்தனர்.

அக்காலத்தில் பூமி, ஏழு கண்டங்களாக பிரிந்து ஆங்காங்கு மக்கள் கூட்டம் கூட்டமாக நிர்வாணமாக மிருகங்கள் போல் வாழ்ந்தனர். அந்த ஏழு கண்டங்களும், அங்கு குடியேறிய பிரியவிரதன் பிள்ளைகளும் பின்வருமாறு.

| | **கண்டத்தின் பெயர்** (1) | **பிரிய விரதனின் பிள்ளைகள் பெயர்** (2) |
|---|---|---|
| 1. | ஜம்புத்தீவம் (நாவலந் தீவு) | ஆக்னீதரன் |
| 2. | பிலக்ஷும் (கோமேதக தீவு) | மேதாதிதி |
| 3. | குசம் (தருப்பைப்புல் தீவு) | ஜ்யோதிஷ்மான் |
| 4. | கிரௌஞ்சம் (பறவைத் தீவு) | த்யுதிமான் |
| 5. | சாகம் (கீரைத் தீவு) | பவியன் |
| 6. | சான்ம- (இலந்தை தீவு, பூரணி தீவு) | வபுஷ்மான் |
| 7. | புஷ்கரம் (பொன் தீவு) | வைனன் |

ஆதியூழி (மகாப்பிரளயம்) நடந்த போது பல நாடுகளி-ருந்து உயரமான இமயமலை நோக்கி ஓடிவந்து மக்கள், கடல் கொந்தளிப்பு அடங்கியதும் மீண்டும் பல இடங்களில் பிரியவிரதன் பிள்ளைகள்

தலைமையில் சென்று குடியேறினர். (அக்காலத்தில் தென் அமெரிக்கா, வடஅமெரிக்கா, கனடா முத-ய நாடுகள் பற்றி தகவல்கள் புராணங்களில் கூறப்படவில்லை) மேற்கூறப்பட்ட ஏழு கண்டங்களும் தற்போதுள்ள எந்த நாடுகளை குறிக்கின்றன என்பது பற்றிய விவரங்கள் பின்வருமாறு)

### 1. ஜம்புத் தீவு (நாவல் மரம் இருக்கும் தீவு)

இமயம், மா-யவான், நிடதம், ஏமகூடம், கந்தமாதனம், நீலகிரி, ஸ்வேதகிரி, ஸ்ருங்ககிரி முத-ய மலைகள் உள்ளன. இமயமலையி-ருந்து சிந்து, தேவ கங்கை, யமுனை, ஸரஸ்வதி, அலக்நந்தா, சரயு, ஐராவதி, கௌசிகி, காண்டகி, பிரம்மபுத்திரா முத-ய நதிகள் உற்பத்தியாகின்றன.

மேற்குத்தொடர்ச்சி மலைகளி-ருந்து, கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரா, வேகவதி (பாலாறு), பீமா, தாமிரபரணி, கிருதுமால் நதிகள் உற்பத்தியாகி கிழக்கே ஓடி லவணசமுத்திரம் (மகோததி, வங்காள விரிகுடா) என்றும் கட-ல் கலக்கின்றன.

ரிக்ஷவான் (விந்திய, சாத்பூரா) மலைகளி-ருந்து நர்மதை, தபதி முத-ய நதிகள் உற்பத்தியாகி மேற்கு கட-ல் (பாற்கட-ல்) கலக்கின்றன. மகாநதி, சித்ரகூடை, சித்திரமாலை முத-ய நதிகள் இம்மலைகளி-ருந்து உற்பத்தியாகின்றன.

பாரியாத்திரம் என்னும் மலைகளில் சத்தாவதி, ரூபை முத-ய நதிகள் உற்பத்தியாகின்றன.

இந்த தீவு 1. குருவருடம், 2. இரண்ய வருடம், 3. நிரமிய வருடம், 4. இளாவிருத வருடம், 5. பத்திர வருடம், 6. கேதுமால் வருடம், 7. அரி வருடம், 8. கிம்புருட வருடம், 9. பாரத வருடம் என 9 பிரிவுகளாக இருந்தன. மேற்கூறப்பட்ட ஆக்னிதரனின் 9 பிள்ளைகள் இந்த நாடுகளில் ஆட்சி செய்தனர்.

| ஆக்னிதரன் பிள்ளைகளின் பெயர் | ஆட்சிபுரிந்த நாடுகள் |
|---|---|
| 1. நாபி | பாரத வருடம் |
| 2. அரி | நைஷதம் |
| 3. இளன் | இளாவிருதம் |
| 4. ரம்மியன் | ரம்யகம் |
| 5. இரண்வான் | ஸ்வேத வருடம் |
| 6. குரு | குருவருடம் |



| | |
|---|---|
| 7. பத்திராஸ்வன் | பத்திராஸ்வ வருடம் |
| 8. கேதுமாலன் | கந்தமாதன வருடம் (தென் பாரதம் கிழக்குத் தொடர்ச்சி மலை) |
| 9. கிம்புருடன் | கிம்புருட வருடம் |

ஆக்னிதரனின் பிள்ளையான நாபி, மேருதேவி (மேரு பாண்டியன் புதல்வி) என்பவளை மணந்து ரிஷப தேவன் என்பவனைப் பெற்றான். ரிஷப தேவனுக்கு இரண்டு மனைவிகளில் யசச்ருதி என்பவளுக்கு பரதன், ரிஷபசேனன் என்னும் 2 பிள்ளைகளும், பிராமி என்னும் பெண்ணும் பிறந்தனர்.

சுநந்தை என்னும் மற்றோர் மனைவிக்கு பாகுப- என்னும் பிள்ளையும் சுந்தரி என்னும் பெண்ணும் பிறந்தனர். ரிஷப தேவருடைய குரு புலஹர் என்னும் முநிவர். ரிஷபதேவர் தன் மகனான பரதனிடம் நாட்டை ஒப்புவித்து கானகம் சென்று புதிய மதத்தை தோற்றுவித்தார். (ஜைனம்-முதல் தீர்த்தங்கரர்). பரதன் தனது தம்பியான பாகுப-யின் உதவி கொண்டு இமயம் முதல் குமரிவரை ஆட்சி செய்தான். ஆகவே இது பாரத வர்ஷம் எனப் பெயர் பெற்றது. பின்னர் பரதனுக்கும் பாகுப-க்கும் பகை மூண்டது. பாகப- துறவறம் மேற்கொண்டு ஜைன மதத்தை பரப்பினான். (மைசூரில் சிரவண பெளகுள என்னும் மலை மீது பகுப-யன் 64 அடி உயர உருவச் சிற்பம் இன்றும் உள்ளது. பரதன் தன் மகனான சுமதி என்பவளிம் ஆட்சிமை ஒப்புவித்து கானகம் சென்று தவம் இயற்றினான். மரணத் தருவாயில் பரதன் வளர்த்த மான் குட்டி மீது பாசம் கொண்டதால் அடுத்த பிறவியில் மானாகி பிறந்து முனிவர்கள் ஆஸ்மரத்தில் வளர்ந்தான். அதற்கடுத்த பிறவியில் ஒரு வேதியனுக்கு பிள்ளையாக பிறந்து (ஜடபரதன்) பிரம்மஞானியாகி, ரகுகணன் என்னும் சோழ அரசனுக்கு பிரம்மத்தை உபதேசித்தான். (ஜடபரதோபாக்கியானம் காண்க) பரதனின் பிள்ளை சுமதியின் வழியில் இந்திரத்யும்னன், பரமேஷ்டி, பிரதிஹாரன், பிரதிகர்த்தா பவன், உத்கீதி, பிருஷதாஸ்வான், பிரது, நக்தன், விரோசனன், வீர்யன், தீமான், மகாந்தன், பாவனன், துவஷ்டா, விராஜன், ரஜன், சத்யஜோதி, விஸ்வக்ஜோதி முத-ய அரசர்கள் முதல் மன்வந்திரத்தல் ஆட்சி செய்தனர்.

## 2. ப்லக்ஷம் (கோமேதகத் தீவு, லக்ஷத்தீவுகள்)

(இக்கண்டம் லக்ஷத்தீவுகள் தொடங்கி மொரீஷஸ் தீவுகள் வரை இந்துமாக் கடல் பிராந்தியத்தில் இருந்து கட-ல் மூழ்கின. இத்தீவு மக்கள் பிறைச்சந்திரனை வணங்கினர்)

இக்கண்டத்தில் நீணாகம், சந்திரம், நாரதம், துந்துபி, கோமேதகம், சோமகம், சுமனசு, வைப்பிராஜம் முத-ய மலைகளும் அனுதத்தை, சிகி, வியாயை, த்ருதியை, சுக்கிலமை, அம்ருதை, சுக்ருதை முத-ய ஆறுகளும் இருந்தன. இதன் தெற்கே கருப்பஞ்சாறு என்னும் கடல் இருந்தது.

பிரியவிரதன் பிள்ளையான மேதாதி வழியில் சாந்தஹன், சிசிரன், சுகோதன், ஆனந்தன், சிவன், துருவன் முத-ய அரசர்கள் ஆண்டனர்.

## 3. குசத்தீவு (குசம் தருப்பை புல்)

(இக்கண்டம் மத்திய ஆப்பிரிக்கா மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா பிரதேசமாக யூகிக்கப்படுகிறது)

குசத்தீவத்தில் பாரிச கிரி, வித்ருமம், ஹேமசைலம், த்யுதிமான், புஷ்பவான், குசேசயம், ஹரி, மந்திரம் முத-ய மலைகளும் தூத்தபாயை, சிவை, பவித்ரை, சுமதி, வித்யை, அம்பை, இந்திரை (அமேசான், காங்கோ, நைல் முத-ய ஆறுகள் நெய் கட-ல் கலக்கின்றன. இத்தீவத்தில் பிரம்மா, அக்னி, பிறைச்சந்திரன், சாஸ்தா முத-ய தெய்வங்கள் வழிபடப்பட்டன.) ஆக்னிதரனின் பிள்ளைகளான ஜ்யோதிஷ்மான் முத-யவர்கள் ஆண்டனர். இம்மன்னர்கள் பிற்காலத்தில் பாரோன் என்றும் வருணன் என்றும் அழைக்கப்பட்டனர். இங்குள்ள குருமார்கள் திராவிடர்கள் என்பவர்கள். கற்பக விருக்ஷம் (ஜாம்பியா) உள்ள தீவு.

## 4. கிரௌஞ்சம் (குருகுத் தீவு, பறவைத் தீவு)

(இத்தீவில் கிரௌஞ்ச பக்ஷி, கொக்கு, நாரை, கருடன் முதலான பறவைகள் அதிய அளவில் இருந்தமையால் குருகு எனப்பட்டது. குருகு என்பது மருவி கிரீக் என அழைக்கப்பட்டது.)

கிரௌஞ்சரி, வாமனம், அர்த்தகாரகம், ரத்னசைலம் என்னும் எரிமலை (எட்னா), திவாவிருது, புண்டரீகவான், துந்துபி மலைகளும குமுதவதி, கௌரி, சந்தியா, ராத்திரி, மனோஜவை, கியாதி, புண்டரீகை முத-ய ஆறுகளும் இருக்கின்றன. சிவன் (Zeus)



வருணன், மித்ரன் முத-ய தெய்வங்களை மக்கள் வழிபட்டனர். நீண்ட மூக்கும் குதிரை போன்ற முகமுடையவர் எனப்படும் இம்மக்கள் பேராற்றலுடன் இருந்தனர். ஹயக்கிரீவர், ததீசி போன்றவர்கள் குருமார்களாக இருந்தனர். இங்குள்ள மேற்குப் பகுதியில் உள்ள கடல் தயிர்கடல் (Dead (Sea) எனப்பட்டது.

ஆக்னீதரன் புதல்வனான த்யுதிமான் வழியில் குசலன், மனுகன், உஷ்ணன் (உக்ரன்), சிவன், அந்தகாரன், முனி, துந்துபி முத-ய அரசர்கள் ஆண்டனர். பின்னர் சாகத்தீவத்தி-ருந்து வந்த தாருகன், காலநேமி போன்ற அரசர்கள், புலஸ்தியர் வழியில் வந்த பெ-ஸ்தியர்கள் முதலானோர் ஆண்டனர்.

## 5. சாகத் தீவு (பனைத் தீவு)

(இத்தீவில் நீண்ட பனைமரங்கள், குட்டையாக பனைமரங்கள், தென்னை, கமுகு, பேரீச்சை முத-ய மரங்கள் அதிகம் இருந்ததாக கூறப்படுகிறது. குமரிக்கண்டத்தின் பகுதியாக இது இருந்திருக்கலாம் என யூகிக்கப்படுகிறது.)

மந்திரமலை (மகேந்திர மலை, மணி மலை), உதயகிரி, ஜலதாரம், ஹேமகூடம், ரைவதம், சியாமம், அம்போகிரி, ஆம்பிகேயம், கேசரி முத-ய மலைகள் இருந்தன.

சுகுமாரி (கன்னியாறு), குமரி, நளினி, (பேராறு), வேணுகி, இக்ஷுதேனுகை, கபஸ்தி (பஃறுளியாறு) முத-ய ஆறுகள் மேற்கி-ருந்து கிழக்காக ஓடி கட-ல் கலந்தன. (ஜாவா, சுமத்ரா, சிங்கப்பூர் முத-ய தீவுகளும் இக்கண்டத்தில் இருந்தன.) சிவபெருமான், வாயு (மருத்து) சந்திரன், திருமால், கொற்றவை முத-ய தெய்வங்களை மக்கள் வணங்கினர். இத்தீவத்தின் வடக்கே பாற்கடல் இருந்தது. (பாண்டியர்கள்,சோழர்கள், சேரர் முத-யோர் இத்தீவைக் கைப்பற்றி ஆண்டனர்)

பிரியவிரதனின் பிள்ளையான பவியன் வழியில் ஜலதரன், குமரன், சுகுமாரன், மரீசி, குசுமோதன், சுமோதன், மகாத்ருமன் முத-ய அரசர்கள் ஆண்டனர், (பின்பு சிங்கமுகன், சூரபதுமன் முத-ய அசுரர்கள் ஆட்சியைப் பிடித்தனர்.)

## 6. சான்ம- (இலந்தை தீவு, பூரணி தீவு, போர்னியோ தீவு)

(இக்கண்டத்தில் மூங்கில் காடுகள், இலந்தை மரம் விசேஷம்.

மலேசியா, பர்மா, சீனா, கம்போடியா, தாய்லாந்து முத-ய நாடுகள் இதில் அடங்கியிருக்கலாம் என யூகிக்கப்படுகிறது.)

மந்தரம், குமுதம், குமாரம், மேகம், சந்தகம், மஹிடம், தேனு, துரோணம் முத-ய மலைகளும், யோனி, விதிருஷ்ணை, சந்திரை, சுக்கிலை, விமோசனி, நிவிருத்தி முத-ய ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஆறுகள் தேன் கட-ல் கலக்கின்றன. மக்கள் பிறைச்சந்திரன், வாயு, கருடன் முத-ய தெய்வங்களை வணங்கினர். (துரோணமலையில் உயிர்காக்கும் சஞ்ஜீவி மூ-கைகள் வளர்ந்தன.) பிரிய விரதனின் பிள்ளையான வபுஷ்மான் வழியில் சுவேதன், அரிதன், ஜீமூதன், ரோகிதன், வைத்துதன், மானசன், சுப்பிரபன் முத-ய அரசர்கள் ஆண்டனர். (பின்பு பிரபாகரன், வலன் முத-ய அசுர அரசர்கள் ஆண்டனர்.)

## 7. புஷ்கரம்

(இத்தீவம் ரஷ்யா, மங்கோ-யா, மேற்கு சீனா, ஐரோப்பாவின் வடக்கு பகுதிகள் அடங்கிய நாடுகளாக இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது.)

குமுதவரை என்னும் மலைத் தொடர்கள் உள்ளன. எப்போதும் பனியில் மூழ்கியிருக்கும் நாடு. மானசரோவர் என்னும் நன்னீர் கடல் (பெய்கால் ஏரி) உள்ளது. இங்குள்ள மக்கள் யக்ஷர் (யூக்சாய்) ராக்ஷஸ முத-யவர்கள். பிரம்மா இவர்களது தெய்வம்.

பிரியவிரதனின் பிள்ளையான வைனன் வழியில் பிரம்மாவின் புதல்வர்கள் ச்யவனபுத்திரன் முதலான அரசர்கள் ஆண்டனர்.

(அக்காலத்தில் பாலாறு, தேனாறு, நெய்யாறு என்று ஆறுகளுக்கு பெயர் வைத்தனர். உண்மையில் அங்கு பாலோ, தேனோ, நெய்யோ ஓடுவது கிடையாது. அதுபோலவே கடல்கள், உப்புக் கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாறு கடல் தயிர்க் கடல், பாற்கடல், தேன் கடல், நன்னீர் கடல் என்று பெயரிட்டனர். உண்மையில் அங்கு பாலோ, தேனோ, தயிரோ, நெய்யோ, கருப்பஞ்சாரோ கிடையாது என்று புரிந்து கொள்ள வேண்டும்.)

பாரத தேசத்தவர்கள் (பரதனுடைய ஆட்சிக்காலத்தில்) உலக முழுவதும் சென்று பரவி ஒவ்வொரு நாடுகளில் உள்ள மலைகள், ஆறுகள், கடல்கள், முத-யவற்றைப் பற்றிய விவரங்களை சேகரித்து புராணங்களில் எழுதி வைத்தார்கள் என்பது மிகவும் ஆச்சரியப்படும் படியான



செய்தியாகும். எந்த நாட்டு வரலாறுகளிலும் இவ்வளவு விவரங்கள் கிடையாது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் அக்காலத்தில் 7 என்னும் எண் விசேஷமாக கருதப்பட்டது. எனவே ஏழு கண்டம், ஏழுமலை, ஏழு ஆறுகள், ஏழு கடல்கள், ஏழு நகரங்கள், மேலே ஏழு உலகங்கள், கீழே ஏழு உலகங்கள், ஏழு ரிஷிகள், ஏழு மாதர்கள் இப்படி கூறப்பட்டன. குமரி நாட்டிலும் (சாகத் தீவம்) ஏழு குணகரை நாடு, ஏழு முன்பாலை நாடு, ஏழு பின்பாலை நாடு, ஏழு தெங்க நாடு, ஏழு பனை நாடு, ஏழு குன்ற நாடு, ஏழு குறும்பனை, நாடு என்றவாறு ஏழாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

“பாற்கடல்” என்று கூறப்படும் கடலும் சாகத்திவத்தில் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் “மந்திரமலையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி, வங்க கடல கடைந்த மாதவன் ” என்னும் கூற்றால் பாற்கடலும், திருமா-ன் இருப்பிடமும் சாகத்தீவத்தில் இருந்திருக்க வேண்டும்.) இது பற்றிய விவரங்கள் வேறு அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன.)

## 9. ஆறு மன்வந்திரங்கள்

ஹிந்து புராணங்களின்படி பெரும் கடற்கோளுக்குப் பிறகு புதிய மனித சமூகத்தை உருவாக்கிய மனிதன் மநு என்று போற்றப்படுகிறான். குமரிக் கண்டத்தில் பெருங்கடற்கோளுக்குப் பிறகு மீண்டும் பாண்டிய தேசத்தை உருவாக்கியவன் ஆழி அடி அலம்ப நின்ற முதலாம் திருவிற்பாண்டியன் என்னும் மன்னன் எனத் தலைசங்க நூல்கள் கூறுகின்றன. அந்நாட்களில் நடந்த கடற்கோளுக்குத் தப்பி வடபுலத்தில் சென்று குடியேறிய மக்கள் சமுதாயத்தை வழிநடத்தியவன் முதல் 'மநு' எனப்பட்டான். இன்ன வழியில் பிறந்தவன் என அறுதியிட்டு கூற இயலாமையால் ”சுவயம்பு” என அழைக்கப்பட்டான். விராஜன் என்னும் சுவயம்பு மநு வடபுலத்தில் காளிந்தி (யமுனை நதி) ஆற்றங்கரையில் தனது தலைநகரை உருவாக்கினான். சுவயம்பு மநுவுக்கும், சத்ரூபை என்பவளுக்கும் (காஷ்மீர்- குலு பள்ளத்தாக்கில்) பிரியவிரதன், உத்தானபாதன் என்னும் பிள்ளைகளும், ஆஹூதி, தேவஹூதி, பிரஹூதி என்னும் பெண்களும் பிறந்தனர்.

அந்நாட்களில் மனுவின் வம்சாவளியில் பரத சக்ரவர்த்தி, பிரது சக்ரவர்த்தி முத-ய பேரரசர்கள் பாரதம் முழுவதும் ஆண்டனர். நூறு வேள்விகள் புரிந்த 'யக்ஞன்' என்னும் அரசன் தேவேந்திர பட்டம்

பெற்றான். தென் பாரதத்தில் கந்தமாதனம் (கிழக்குத் தொடர்ச்சி மலைகள்) என்னும் மலை நாட்டில் நரன், நாராயணன் என்னும் அரசர்கள் பிரசித்தி பெற்றவர்களான இருந்தனர். (மஹாபாரத காலத்தில் கிருஷ்ணன் (நாராயணன்), நரன் (அர்ஜுனன்) என்னும் அரசர்களாகப் பிறந்தனர்.) குமரி நாட்டில் மேருமலையடுத்த பகுதிகளை ஆண்ட மேருபாண்டியன் என்னும் அரசின் இரண்டு இளவரசிகளை பிருகு முனிவரின் புதல்வர்கள் மணந்தனர். அவர்கள் வழிவந்த மிருகண்டு முனிவனின மகனான மார்கண்டேயருக்கு மரணமில்லா பெருவாழ்வு அளித்து சிரஞ்சீவி வரம் தந்தார் சிவபெருமான் (திருக்கடவூர் ஸ்தல புராணம் காண்க) யமனை உதைத்து மார்க்கண்டேயரை காப்பாற்றிய சிவபெருமானை காலசாஸ்தா என்றும் கூறுகிறது புராண நூல்கள். இக்காலத்தில் தக்ஷன் I என்னும் அரசன் பெருவேள்வி செய்து சிவபெருமானை அவமதிக்க, சிவபெருமானின் அம்சமான வீரபத்திரன், தக்ஷன்I என்னும் அரசனைக் கொன்று அவ்வேள்வியை அழித்தார். (வீரபத்திரனை தென்புலத்தினர் 'தக்ஷசாஸ்தா' என்னும் கடவுளாக வழிபட்டனர்.) விநாயகரும் தக்ஷன் யாகத்தை அழித்தார்.

(திருநெல்வே-க்கு கிழக்கே 14 மைல் தூரத்திலுள்ள ஸ்ரீ கைலாசபுரத்தில் பிரதுசக்ரவர்த்தி ஆலயம் எழுப்பினான். அருகே உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் திருமாலுக்கு ஆலயம் கட்டி பிருது சக்ரவர்த்தி வழிபாடு செய்தான்)

## இரண்டாவது மன்வந்திரம்

முதல் மநுவின் வழியில் வந்த பிரியவிரதன் வம்சத்தில் உதித்தவன் சுவரோசிஷன் (அக்னிபுத்ரன்) என்னும் இரண்டாவது மநு. இந்த மன்வந்திரத்தில் நூறு வேள்விகள் செய்த வடபுலத்து அரசன் அபிச்சித் (ரோசனன்) என்பவன் இந்திர பட்டம் பெற்றான். பாராவரர், தூஷிதர் முத-யவர் தேவதைகளான வழிபட்டனர். ஊர்ஜஸ்தம்பன், பிராணன், தத்தன், அக்னி, ரிஷபன், நிஸ்வரன், சார்வரீவன் முத-ய சப்தரிஷிகளின் கணங்கள் அரசகுருமார்களாக இருந்தனர். வேதசிரன் என்ற ரிஷியின் புதல்வன் ரிபு (திருமால் அம்சமாக) என்பவன் பிறந்து மக்களை காத்தான்.

## மூன்றாவது மன்வந்திரம்

முதல் மநுவின் வழியில் வந்த பிரியவிரதன் வம்சத்தில் உதித்தவன் உத்தமன் என்னும் மூன்றாவது மநு. இந்த மன்வந்திரத்தில் நூறு வேள்விகள் செய்த பாண்டியன் சுசாந்தி (சத்யசித்தன்) என்பவன் இந்திர பட்டம் பெற்றான். வருணபுத்திரரான அகஸ்தியரும், வசிட்டரும் குலகுருவாக இவனுக்கு இருந்தனர். உத்தமன் வழியில் அஜன், பரசுதிவ்யன் முத-யோர் பிரசித்தி பெற்ற அரசர்களாக இருந்தனர். சத்யன் (சாஸ்தா, சேரன்), சிவன், சுதாமா, பிரதர்தனன், வத்ஸவிருத்தி முத-யோர் தேவதைகளாக வழிபடப்பட்டனர். பிரம்மதத்தன் முத-ய வசிஷ்டபுத்திரர்கள் சப்தரிஷிகளாக இருந்தனர். சூரிய வம்சத்து அரசன் தருமராஜன் என்பவனுக்கும் சுநிருதை என்பவளுக்கம் பிறந்த சத்திய விரதன் பேரரசனாக விளங்கினான். சுநிதையின் புதல்வனாகப் பிறந்த சத்தியசேனன் (திருமா-ன் அம்சம்) பாரதம் முழுதும் ஆண்டான்.



## நான்காவது மன்வந்திரம்

மூன்றாவது மநுவான உத்தமனுடைய சகோதரன் வழியில் வந்த தாபசன் என்பவன் நான்காவது மநு. விருஷன், கியாதி, நரன், கேது, சேதுரூபன், சானு, சங்கன் முத-ய பதின்மர் இந்த மநுவன் புத்திரர்கள். திரிசிகன் என்னும் தென்புலத்து அரசன் நூறு வேள்விகள் செய்து இந்திர பட்டம் பெற்றான். சோழ தேசத்து அரசன் சிபி (உசீநரசு-தலைநகர்- பாஞ்சாலம்) நூறு வேள்விகள் செய்து சிபிச் சக்ரவர்த்தியாகி இந்திரனை வென்று இந்திர பட்டம் பெற்றான். ஜோதிர்தாமன், பிருகு, காரியன், வசத்திரன், அக்னி, தனகன், பீவான் முத-ய சப்தரிஷிகள் குலகுருவாய் வழிபடப்பட்டனர். ஹரிமேதஸ் என்னும் ரிஷிக்கும் ஹரிணி என்பவளுக்கும் பிறந்த ஸ்ரீஹரி (திருமால் அம்சம்) பாரதம் முழுதும் ஆண்டு சிபிச்சக்ரவர்த்திக்கு உதவிகள் செய்தனர். (ஸ்ரீரங்கத்திற்கு 4-ஆவது மை-ல் உள்ள திருவெள்ளறை என்னுமிடத்தில் மார்கண்டேய முனிவரின் உத்திரவுப்படி சிபிச்சக்ரவர்த்தி திருமாலுக்கு கோயில் கட்டினான்).

குமரி நாட்டை பஞ்சசேன பாண்டியன் என்பவன் ஆண்டு வந்தான். சிபிச்சக்ரவர்த்திக்கு நட்பு அரசனாக இந்நாட்களில் இருந்தான். இவனுக்குப் பிறகு சுமதி என்னும் பாண்டியன் ஆட்சிப் பொறுப்பேற்று துருவசேனை என்னும் இளவரசியை மணந்து இந்திரதுய்மன் என்னும் பிள்ளையைப் பெற்றான். குமரி நாட்டில் இந்திரதுய்மன் என்னும் பாண்டியன் பேரரசனாக இருந்தான். இவனுடைய குலகுரு அகஸ்தியர். ஒரு நாள் இந்திரதுய்மன் சிவபூஜை செய்யும் காலத்தில் அப்போது அங்கு வந்த குலகுருவான அகஸ்தியரை

வரவேற்காது அவமதித்ததால் மதம் கொண்ட யானையாக மாறும்படி அகஸ்தியர் சாபமிட்டார். யானையாக மாறிய இந்திரதுய்மனை ஒரு குளத்தில் முதலை பிடிக்க அச்சமயத்தில் ஸ்ரீஹரி (திருமால் அம்சம்) முதலையைக் கொன்று இந்திரதுய்மனுக்க சாப விமோசம் அளித்தார். (கஜேந்திர மோக்ஷம் கதையை புராணத்தில் காண்க) இந்திரதுய்மன் என்னும் பாண்டியனுக்குப் பிறகு வீரத்துய்மன், பூரித்துய்மன், சுத்துய்மன் முத-ய அரசர்கள் குமரி நாட்டை ஆண்டனர். பிறகு வீரபார்கவ பாண்டியன் குமரி நாட்டை ஆண்டான்.

வடபுலத்தல் உசீநரசு (ஆரவல்- மலைகளுக்கு வடகிழக்கில் உள்ள உதய்பூர் அருகில் உள்ள ஷா-புறா என்னுமிடம்) என்னுமிடத்தில் ஆண்ட சிபிச்சக்ரவர்த்தி தன்னுடைய துடைத்தசைகளை கழுகுக்கு ஆகாரமாக அளித்து அடைக்கலமான ஒரு புறாவைக் காப்பாற்றினான். சிபி வழியில் வந்த சோழர்கள் இதன் பொருட்டு செம்பியன் பட்டம் சூட்டிக்கொண்டு பெருமையடைந்தனர். சிபியின் புதல்வர்களான விருஷதர்பன், சுவீரன், மத்திரன், கேயன் என்பவர்கள் பல நகரங்களை உருவாக்கி வடபுலத்தில் ஆண்டனர்.

## ஐந்தாவது மன்வந்திரம்

நான்காவது மநுவின் (தாபசன்) சகோதரன் வழியில் வந்த ரைவதன் என்பவன் ஐந்தாவது மநு. இந்த மநுவின் வழியில் வந்த அர்ஜுனன், ப-, விந்தியன், சுசாம்பியன், பலபந்து, சத்யகன் (சாஸ்தாவன் அவதாரம்) முத-யோர் பிரசித்தி பெற்ற அரசர்கள், சத்யகன் சேர அரசனானான். குமரி நாட்டில் இத்மவாகன பாண்டியன் (பாண்டியன் புலத்தியின் மகன்) அவன் மகன் உக்கிரபாண்டியன் பிரசித்தி பெற்ற அரசர்கள். வடபுலத்தில் விபு என்னும் அரசன் நூறு வேள்விகள் செய்து இந்திர பட்டம் பெற்றான். அமிர்தாபர், பூதவியர், வைகுண்டர், சுசமேதர் முத-யவர்கள் தேவதைகள். இரணிய ரோமர், வேதசிரசு, ஊர்த்துவபாகு, அபரன், வேதபாகு, சுதாமா, பர்ஜன்யன் முத-யோர் சப்தரிஷிகள். சுப்பிரபர் என்னும் ரிஷிக்கும் விகுண்டை என்பவளுக்கும் பிறந்த வைகுண்டர் (திருமால் அம்சம்) பிரசித்தி பெற்ற பெற்ற அசரனாகி ப்லக்ஷதீவத்தில் "வைகுண்டம்" என்னும் நகரை நிர்மாணித்து பாற்கடல் கடல் பகுதிகளில் பல நாடுகளைப் பிடித்து மக்களை நல்வழிப்படுத்தி ஆட்சி செய்தார். சோழ அரசன் சுவயக்ஞன், உசீநர தேசத்தி-ருந்து (சிபி சக்ரவர்த்தி வம்சம்) காந்தாரன் முத-ய பல தேசங்களை ஆண்டு பேரரசனாக இருந்தான்.



## ஆறாவது மன்வந்திரம்

வடபுலத்து அரசன் சாக்ஷுஸன் (ஆனந்தன்) என்பவன் ஆறாவது மநு குமரிநாட்டை ஆண்ட உக்கிரபாண்டியன் மகளான நட்வளை என்பவளை மணந்து புரூரவன், குட்டன், திரவிடன் (த்ருடன்) சுத்யும்னன், சந்தியாவந்தன், குரு நீதன், விருதன், அக்னிஷ்டஹோமன், சுதிரதன், பிரத்யும்மன், சிபி, ஊரு முத-யோர் 6-வது மநு வம்சத்தில் பிறந்து பாரதத்தை ஆண்டனர். மனோஜவ பாண்டியன் குமரி நாட்டில் ஆட்சி செய்து, நூறு வேள்விகள் செய்து இந்திர பட்டம் பெற்றான். மனோஜவ பாண்டியன் விதற்பதேச இளவரசி சுபத்திரை என்பவளை மணந்து சந்திரகாந்த பாண்டியனைப் பெற்றான். (திருத்தண்கால் ஸ்தல புராணம்) ஆப்பியர், பிரசூதர், பவியன், பிரதுமன், லேகர் முத-யவர் தேவர்களாக இருந்தனர். சுமேதஸ், விரஜன், அவிஷ்மான், உத்தமன், மது, அதிநாமா, சஹிஷ்ணு என்பவர்கள் சப்தரிஷிகளாக இருந்து பாண்டியர் ஆட்சியில் குலகுருமார்களாக இருந்தனர்.

கந்தமாதனம் (கிழக்குத் தொடர்ச்சி மலை) என்னும் மலை நாட்டின் அரசன் வைரராஜன் என்பவனுக்கும் சம்பூதி என்பவளுக்கும பிறந்த அஜிதன் (திருமால் அம்சம்) என்னும் அசரன் மனோஜவ பாண்டியனுக்கு நட்பு அசரனாக இருந்து கச்சப தீவு (கச்ச தீவு-ஆமை நாடு) பகுதிகளி-ருந்து சான்ம-, சாவக தீவத்திலன் பல பகுதிகளை ஆண்டார்.

அஜிதன் என்னும் அரசன், அசுரர்கள், நாகர்கள், பாரத தேசத்தவர்கள் பாற்கடல் கடந்து சென்று குசத்தீவம், கிரௌஞ்ச தீவத்திற்கும் சென்று குடியேறி ஆட்சி செய்த விவரங்கள் அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கப்படுகின்றன.

(மேற்கூறப்பட்ட ஆறு மன்வந்திரங்கள் பற்றிய விவரங்கள் ஹிந்து புராணங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளன. இங்கு சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. புராணங்களில் கூட சேர, சோழ, பாண்டியர்கள் ஆட்சி செய்தனர் என்பது தெரிய வருகிறது. தூய தமிழ் என்பது பிற்காலத்தில்தான் வளர்ந்தது. பாண்டியர், சோழர்களின் பெயர்கள் தூய தமிழில் இல்லாமையால் வரலாற்றை நாம் மறக்க கூடாது. புராணங்களில் பாரதம் முழுதும் தமிழர்கள் பரவியிருந்தனர் என்பது மேற்கூறிய விவரங்களி-ருந்து அறிந்து கொள்ளலாம்.)

## 10. அஜிதன்

ஆறாவது மன்வந்திரத்தில், தென் பாரதத்தில், கந்தமாதன மலைகள் (கிழக்குத் தொடர்ச்சி மலைகள்) இருக்கும் பகுதிகளில் கச்சப நாட்டுப் பகுதியில் (கச்சத் தீவு-ஆமைத்தீவு) சூரிய வம்சத்து அரசன் வைரராஜனுக்கும், சம்பூதி என்னும் அரசிக்கும் பிறந்தவன் அஜிதன் (திருமால் அம்சம்). மந்திரத்துருமன் (மனோஜவ பாண்டியன்) என்னும் அரசன் குமரி நாட்டை ஆண்டு வந்தான். இவன் நூறு வேள்விகள் செய்து இந்திர பட்டம் பெற்றான். இந்நாட்களில் சான்ம-தீவுப் பகுதிகளில் கடற்கோள் ஏற்பட்டு அங்கிருந்து மக்கள் சாவகத் தீவிலும், ஜம்புத் தீவிலும் குடியேறினர். இதைத் தவிர்க்க பாண்டியர்களும், நாகர்களும் அசுர அரசன் ப-ந்திரனுடன் சமாதனம் செய்து கொண்டு பாற்கடல் கடந்து குசத் தீவம், கிரெஞ்ச தீவப் பகுதிகளில் குடியேறி நாடுகளைக் கைப்பற்றி மக்களை குடியேற்ற ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதனால் பாரதத்தில் அசுரர்கள் குடியேற்றத்தை தடுக்கவும் போரினைத் தவிர்க்கவும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

கந்தமாதன மலைத் தொடருக்கும் பாற்கடலுக்கும இடையே உள்ள மந்திரமலைப் (மந்திர-துருமன் நாட்டிலுள்ள பிரதேசம்) பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு அசுர அரசர்களும், தேவர்களும் (பாரத தேசத்தவர்) வாசுகி என்னும் நாக நாட்டு அரசன் உதவியுடன் (நாவாய்கள் ஒட்டுவதில் நாகர்கள் வல்லவர்கள்) பாற்கடலைக் கடந்து மேற்கு பகுதிகளில் உள்ள தீவுகளில் குடியேறினர். பாற்கடலை கடக்கும் போது விஷ வாயு வெளிக் கிளம்பி (ஆல காலம் என்னும் விஷ வாயு) பலரை அழித்தது. சிவபெருமானின் யோக சக்தியால் அசுரர்களும், தேவர்களும் காப்பாற்றப்பட்டு மீண்டும் முயற்சி தொடர்ந்தது.

குசத் தீவத்தில் மருத்துவம் (மூ-கைகள் கொண்டு) பிரசித்தி பெற்றிருந்தது. உயிர் காக்கும் மூ-கைகளையும், மருத்துவத்தையும் தேவர்க்கு அமிர்தம் என்னும் மூ-கைகள் நீரை கொண்டு வரவும், குசத்தீவம் மற்றும் கிரௌஞ்ச தீவத்திலுள்ள அதிசய பொருள்களையும் கவர்ந்து வரவும் அசுரர்களும், தேவர்களும் திட்டமிட்டனர். குசத் தீவத்தின் அரசி வாருணி தேவி, அழகிய கடற்கன்னிகள் (அப்ஸரஸ்த்ரீகள்), கிரௌஞ்ச தீவத்தில் சஞ்சரிக்கும்



வெள்ளை யானை (ஐராவதம்) வெள்ளை குதிரை (உச்சைசிரவஸ்) கௌஸ்த்துபம் என்னும் அபூர்வ வைரக்கல், கிரௌஞ்ச தீவத்தில் உள்ள வெள்ளை நிற அரசன்-சந்திரன்) அவனது சகோதரி இந்திரா (வெள்ளை நிற இளவரசி), பாரிஜாதம் என்னும் வாசன மலர்கள் பூக்கும் மரம், கற்பகத் தரு என்னும் அதிசய மரம், உயிர் காக்கும் மூ-கைகள், தன்வந்திரி என்னும் உயிர் காக்கும் தெய்வம், அம்ருத கலசம் முத-ய பல அதிசயப் பொருள்களை பாரதத்திற்கு கவர்ந்து வந்தனர். அசுர அரசன் ப-ந்திரன் அம்ருத கலசம் பற்றியே கவனமாக இருந்தமையாலும் தனது மக்களை குசத் தீவத்திலும், கிரௌஞ்ச தீவத்தில் குடியேற்றுவதிலும் கவனமாக இருந்தமையால், பாரத அரசன் அஜிதன் (திருமால் அம்சம்) கூர்மாவதார புராணம் காண்க) அசுர அரசர்களை ஏமாற்றி அம்ருத கலசத்தை (மருத்துவ நீர் அல்லது மந்திர சக்தி வாய்ந்த திரவப் பொருள்) அபகரித்து தேவர்களுக்கு அளித்தார்.

(கற்பகத்தரு என்பது ஜாம்பியா நாட்டிலுள்ள பாவோ-பாப் என்னும் மரம் என்று யூகிக்கப்படுகிறது. ஆலமரம் போல் பல விழுதுகள் இம்மரத்தைச் சுற்றி வளரும். ஐநூறு, ஆறுநூறு வருடங்கள் இம்மரங்கள் பலன் கொடுக்கும். இலைகளை சமைத்து உண்ணலாம். முந்திரிப் பழம் போல பழங்களைத் தரும் இம்மரம். பூ, காய், பழங்கள், பருப்பு இவற்றையும் உண்ணலாம். மரக்கிளைகளை ஒடித்தால் பருகக்கூடிய நீர் கிடைக்கும். ஒரு பக்க கிளைகள் காயும் போது, மறுபக்க கிளைகள் பூத்துக் குலுங்கும். இம்மரத்தின் பட்டைகளை உரித்து ஆடைகளாக அணியலாம். மரத்தின் தண்டுப் பகுதிகளை (சதைப்பற்று நிறைந்த பகுதி) துண்டாக்கி சமைத்து உண்ணலாம். மரத்தின் அடிப்பக்கத்தை குடைந்து ஒரு வீடு போல் நாலைந்து பேர் வாழலாம். இம்மரத்தில் மயில்களும், அநேகப் பறவைகளும் வந்து தங்கி வாழ்கின்றன. மனிதர்கள் வாழ்க்கைக்கு இம்மரம் ஒன்றே போதும் என்பதால் கற்பகத்தரு எனப்பட்டது என்று கருதலாகும். அரேபியா நாட்டு வெள்ளைக் குதிரை, ஹெர்குலீஸ் என்னும் கிரேக்க நாட்டு அரசன், அபராஜிதை (அபோர்-டைட்) என்னும் இளவரசி முத-யவர்களை சந்திரனாகவும், இலக்குமியாகவும் கருதலாம். ஆப்பிரிக்கா நாட்டு வைரங்கள் (கால்கூர்டி-கூல்கார்டி) முத-யனவற்றையும் பாரதம் கொணர்ந்தனர் என்று கருதலாகும்.

திருமா-ன் இரண்டாவது அவதாரம் கூர்மாவதாரம் என்று புராணங்கள் கூறுகின்றன. இது ஆறாவது மன்வந்தில் நடைபெற்றது. முதல் அவதாரமான மச்சாவதாரம் (மீன்) முதல் ஊழியின் போது

நடைபெற்றிருக்கக் கூடும். வராகம், நரசிம்மம், வாமன, பரசுராம, ராம கிருஷ்ண அவதாரங்கள் 6வது மன்வந்திரத்திற்கு பிறகுதான் நடைபெற்றிருக்கக் கூடும். அடுத்த அத்தியாயங்களில் திருமா-ன் ஏனைய அவதார நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் கூறப்படுகின்றன. வராக, நரசிம்ம, அவதாரங்கள் தென்பாரதத்திலும் (7வது மநுவுக்கு முன்பாகவும்) இதர அவதாரங்கள் வடபாரதத்திலும் (முழு மனித உருவமாகவும்) சித்தரிக்கப்படும் காரணம் இக்கருத்தை நியாயப்படுத்துவதாக அமைகிறது.

## 11. இரணியன்

காஸ்யபர் என்னும் முனிவருக்கும், திதி என்பவளுக்கும் பிறந்த அசுரர்கள் வழியில் வந்தவர்கள் இரணிய கசிபு, இரணியாக்ஷன் மற்றும் சிம்ஹிகை என்னும் பெண்ணும் ஆகும் என புராணங்கள் கூறுகின்றன. அசுர அரசன் தாரன் (வஜ்ராங்கதன்), அவன் மகன் தாருகன் (மனைவி தாருகை), தாருகனின் மகன் ப- (கிருச்மதன்) அவனது மக்கள் தாராகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மா- (பரமேஸ்வர பாண்டியனால் திருவதிகை என்னுமிடத்தில் அழிக்கப்பட்டவர்கள்) அவர்கள் வழியில் கஞ்சாரன் (திருவல்வத்தில் நந்திதேவரால் கொல்லப்பட்டான்) அவன் மகன் அருணன் (பிரமராம்பிகையில் அருளால் வண்டுகளால கொல்லப்பட்டான்), அருணன் மகன் சண்டன், பிரசண்டன், தாருகன், இவர்கள் வழியில் பீமன் (தாருகன் மகன்), பீமனின் மகன் அஞ்சனன் (அரிசி), அவனது மகன் கஸ்யபன்.

மேலே கூறப்பட்ட கிருச்மதன் (ப-), கவி என்னும் முனிவரின் மனைவி முகுந்தை என்பவளுக்குப் பிறந்தவன். இவன் முன்பு தாருகனால் வளர்க்கப்பட்டான். கவி என்னும் முனிவரிடம் ருக்மாங்கதன் என்னும் சேர இளவரசன் கல்வி கற்க வரும்போது, முகுந்தை அவன் மீது காதல் கொண்டாள். தேவேந்திரன் ருக்மாங்கதன் வேடத்தில் வந்து முகுந்தையை புணர்ந்தான். முகுந்தைக்குப் பிறந்த க்ருச்மதன் தனது பிறப்பை அத்திரிமுனிவர் மூலம் அறிந்து, இந்திரனையும் தேவர்களையும் பழிதீர்க்க அசுர அரசனாக தாருகனிடம் சென்று அங்கு அவன் மகனாக வளர்ந்தான்.

கருநாடகத்தில் ஆண்ட சேர மன்னன் வல்லவன் என்பவனுக்கும் கமலை என்பவளுக்கும் பிறந்தவன் தக்ஷன். அவனது மகன்



பிரகற்பாநு. இவன் வழியில் கட்கதரன், சுபாலன், எதாகாரன், வபுத்திரன், வீரமணி (வீமன்) ஆண்டனர். வீரமணிக்கும் சாருகாசனி என்னும் இளவரசிக்கும் பிறந்தவன் ருக்மாங்கதன் (கேரளம்-திருக்கடித்தானம் ஸ்தல புராணம் காண்க)

இரண்ய கசிபு, ஜம்பன் என்னும் அசுர மன்னன் மகளான பியாதுவையும் சேர இளவரசி லீலாவதியையும் மணந்தான். ஹிலாதன், அணுகிலாதன், சம்ஹிலாதன், பிரஹலாதன் முத-யோர் (ஆதன் என்னும் தொடர் சேர மரபை குறிக்கும். உதாரணம் சேரலாதன்) . ஹிலாதன், தமனி என்பவளை மணந்து ஸ்ரீவதன், வாதாபி, இவ்வலன் என்பவர்களைப் பெற்றான். அணுகிலாதன், ஆசமி (சேமி) என்பவளை மணந்து, பாஷ்கலன், மகிஷன் என்பவர்களைப் பெற்றான். சம்ஹிலாதன், மதி என்பவளை மணந்து பஞ்சசேனனைப் பெற்றான். பிரஹலாதன் சோழ இளவரசி சீர்த்தி என்பவளை மணந்து சிபி, கும்பன், நிகும்பன் மற்றும் வீரோசனன் முத-யவர்களைப் பெற்றான். விரோசனன், தேவி என்பவளை மணந்து மஹாப-யை பெற்றான். (மஹாப- பற்றிய விவரங்கள் அடுத்த அத்தியாயத்தில் காண்க.)

இரணிய கசிபுவின் தங்கை சிம்ஹிகை விப்பிரசித்தி என்னும் அசுர அரசனை மணந்து சல்-யன், சுப-, பலன், நமுசி, சசிதரன், அஞ்சுனன், சூரமான், சரகற்பன் முத-யவர்களைப் பெற்றாள். ஹிலாதனுக்குப் பிறந்த ஸ்ரீவதன் என்பவனுக்கு ஆயுஷ்மான், சிபி, தாலன் என்ற பிள்ளைகள் பிறந்து சேர நாட்டை ஆண்டனர்.

இரணிய கசிபுவின் தம்பி இரண்யாக்ஷன் என்பவனின் புதல்வர்கள் அந்தகன், குருகரன் (சாகரன்) , சகுனி, பூதசந்தநாபன், மகாநாதன், சம்பரன், காலநேமி, காலநேமியின் புதல்வன் குரு. அவனது மகன் துர்கமன். இரண்யாக்ஷனின் புதல்வி ஜில்-கை. (வராகமூர்த்தியின் மேல் காதல் கொண்டாள்) மற்றும் சுக்லா, கிருஷ்ணா முத-ய பெண்கள். மதங்க முனிவரின் புத்திரர்களான தத்தியனை சுக்லாவும், சோனகன் என்பவனை கிருஷ்ணாவும் மணந்து கொண்டனர். இரண்யாக்ஷன் தான் வராகமூர்த்தியால் சம்ஹாரம் செய்யப்படப் போவதை முன்னதாகவே அறிந்து விநாயகரை வழிபட்டு தன்னை காப்பாற்றும்படி வேண்டினான்.

ஒரே ஒரு முறை காப்பாற்றுவதாக கூறி, கட-ல் குதித்த வராகமூர்த்தியின் கால்களை தனது துதிக்கையால் கெட்டியாக பிடித்துக் கொண்டார். அம்முறை இரணியாக்ஷன் தப்பி விட்டான். வராகமூர்த்தி மனம் வெதும்பி விநாயகரை பிரார்த்திக்க அவர் வராகமூர்த்திக்கு அனுக்ரஹம் செய்தபின் இரணியாக்ஷனை, வராகன்

கொன்றான். (இக்கதை வேதத்திலுள்ளது) . வராகன் திருமா-ன் அம்சமாகக் கருதப்பட்டான். ஏழுமலைகள் உள்ள திருப்பதி நாட்டின் அரசன் வராகன். சோழ இளவரசி பூமாதேவியை மணந்து கடேசன் என்பவனைப் பெற்றான். அசுர அரசர்கள் நர்மதை நதிக்கு தெற்கே உள்ள பிரதேசத்தி-ருந்து கருநாடகம், சேரநாடு, காளஹஸ்தி வரையிலுள்ள பிரதேசங்களில் பரவி ஆட்சி செய்தனர்.

குமரிக் கண்டத்தில் ஒளிச்செங்கோ என்னும் சூரிய வம்ச அரசன் பெருவள நாட்டில் ஆண்டபோது அவுணர்களையும், மஞ்சள் நிற கோ-யர்களையும் சான்ம- தீவத்தி-ருந்த அரசர்களையும் (சீனர்கள்) அடிமைகளாக இழுத்து வந்து பஃறுளி ஆற்றை வெட்டச் செய்தான். ஒளிச்செங்கோவிற்குப் பிறகு பெரும் கடற்கோள் ஏற்பட்டது. அப்போது ஸ்வேதவராகன் (வெள்ளைப் பன்றி ஒளிச்செங்கோவின் மகள் பூமாதேவியுடன் தப்பி அடிமைகளை விடுவித்து நக்கவரம் (பன்றி நாடு - நிக்கோபார் அந்தமான்) உள்ளடக்கிய சான்ம- தீவத்து நாடுகளைப் பிடித்து ஆட்சி செய்தான். இது முதல் மநுவுக்கு முன்னதாக நடந்த நிகழ்வு. எனவே முதல் மநுவின் காலம் முதல் ஸ்வேத வராக கல்பம் எனப்பட்டது.

(சான்ம- தீபத்தில் பன்றி நாடு, சிங்க நாடு குரங்கு நாடு, கரடி நாடு, கருட நாடு, யானை நாடு, நாக நாடு எனப் பல நாடுகள் இருந்தன. அங்கே அரசர்கள் போரிடும்போது மரத்தாலான பன்றி முகம், சிங்க முகம், குரங்கு முகம், கரடி முகம், குதிரை முகம், யானை முகம் போன்ற முகமூடிகளை அணிந்தும், பயமூட்டுவதற்காக விசித்திரமான கண்கள், கொம்புகள், கோரப் பற்கள் அடங்கிய முகமூடி அணிந்து போரிடும் பழக்கமும் இருந்தன. எனவேதான் அவர்களை பன்றிமுகன், கரடி முகன் என அழைக்கலாயினர். சான்ம- தீவத்திலும் கடற்கோள் ஏற்பட்டபோது சிங்கமுகன் வழியினர் பாரதத்தின் கிழக்கு கடற்கரையில் ராமனாதபுரம் பகுதிகளிலும், கருடமுகன் வழியினர் தஞ்சை கடற்கரைப் பகுதிகளிலும், பன்றிமுகன் ஆந்திரப் பிரதேசங்களிலும், ஒரிசா கடற்கரைப் பகுதிகளிலும் குடியேறி ஆங்காங்கே ஆட்சி செய்த அசுர அரசர்களை வென்று ஆட்சிகள் அமைத்தனர். ஏழுமலைப் பகுதிகளில் குடியேறிய பன்றி நாட்டு மக்கள் (சாளுக்கியர்கள்)



நீலவராகன் தலைமையில் இரணியாக்ஷனைக் கொன்று திருப்பதி மலை நாட்டில் ஆட்சியைத் தொடங்கினர். ஆமை நாட்டுப் பகுதியில் (கச்சத் தீவு) பன்றி நாட்டு மக்கள் போரிட்ட போது அவர்களை பரமேஸ்வர பாண்டியன் விரட்டி ஒடுக்கினான். இதனால் பரமேஸ்வரனுக்கு வராகஹாரி எனப் பெயர் ஏற்பட்டது.

ராமானாதபுரம் திருக்கோஷ்டியூர் அருகே உள்ள கதம்ப முனிவர் ஆசிரமத்தில் சிங்க நாட்டு பெண்ணுக்கு வைகாசி மாதம், சுக்லபக்ஷ சதுர்தசி பிரதோஷம் கூடிய வேளையில் திருமா-ன் அம்சமாக சிங்கமுகன் (நரசிம்மம்) என்னும் குழந்தை பிறந்து பேரரசனாகி இரணியகசிபுவைக் கொன்று இரணியகசிபுவின் மகன் பிரஹலாதனை அரசனாக்கி அசுரர்களுடன் நட்பு கொண்டான். அகோபிலம் மலையில் நரசிம்மன், செஞ்சுலக்ஷ்மி என்னும் இளவரசியை மணந்து ஆட்சி செய்தான். ஒன்பது பிள்ளைகளை பெற்ற நரசிம்மனை தஞ்சை மாவட்டம் திருபுவனம் நாட்டு அரசன் சரபன் தோற்கடித்து ஆட்சியை பிடித்தான்.

இந்த இரண்டு அரசர்களையும் (வராக மூர்த்தி, நரசிம்ம மூர்த்தி) திருமா-ன் அம்சமாக மக்கள் வழிபடத் தொடங்கினர். அசுர அரசர்களின் கொடுமையால் அவதிப்பட்ட மக்கள் இந்த இரண்டு அரசர்களையும் திருமா-ன் அம்சமாக கருதி வழிபடலாயினர்.

இரணியகசிபுவின் மகன் பிரஹலாதன் பேரரசனாகி, கந்தமாதன நாட்டை நர நாராயணர்களின் வம்சத்து அரசர்களை ஒடுக்கி அவர்கள் ஆட்சி செய்த நாடுகளையும், சந்திர வமிச அரசன் ரஜி ' என்பவனை தோற்கடித்து அவனது நாடுகளையும், தேவேந்திரனை தோற்கடித்து வடபுலத்து நாடுகளையும் பிடித்து பாரதம் முழுதும் ஆட்சி செய்தான். திருமாலுக்கு பல இடங்களில் ஆலயம் நிறுவினான். மந்திராலயம் என்னுமிடத்தில் பிருந்தாவனம் (துளசிவனம்) ஏற்படுத்தி திருமாலை வழிபட்டான்.

பிரஹலாதன் வழியில் சிபி, கும்பன், நிகும்பன், விரோசனன் முத-ய புதல்வர்கள் ஆட்சி செய்தனர். விரோசனன், ஆங்கிரஸ் என்ற முனிவரின் பெண்ணை கடத்தி வந்தபோது, விரோசனனைக் கண்டித்து ஆங்கிரஸ் மகளை விடுவித்து அவளது காதலனான ருவுக்கு அவளை மணமுடித்தான் பிரஹலாதன்.

## 12. மஹாப-

தேவர்களுக்கும் இரணியகசிபு என்னும் அசுர அரசனுக்கும் போர் நடைபெறும் போது தனது மனைவியான பியாதுவை நாரத முனிவர் ஆஸ்ரமத்தில் பாதுகாப்பாக விட்டுச் சென்றான். பியாது அப்போது கர்ப்பிணியாக இருந்தாள். நாரத முனிவர் பியாதுவின் கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கு உபதேசம் செய்து திருமா-ன் பெருமைகளைக் கூறினார். பியாதுவுக்கு பிரஹலாதன் என்னும் மகன் பிறந்து திருமால் பக்தனாக இருந்தான். இரணிய கசிபு தனது மகனான பிரஹலாதனை குலகுரு சண்டன், அமர்களன் என்பவரிடம் அனுப்பி வைத்தான். குலகுருவாலும் பிரஹலாதனை மாற்ற முடியவில்லை. இரணியகசிபு சிறுவன் பிரஹலாதனுக்கு அநேக கொடுமைகள் செய்தான். இரணிய கசிபுவை நரசிம்ம மூர்த்திசம்ஹாரம் செய்து பிரஹலாதனை அசுர அரசனாக்கினார். பிரஹலாதன் பாரதம் முழுதும் ஆட்சி செய்தான். பிரஹலாதன் மகன் விரோசனன், தேவி என்பவளுக்கும் விரோசனனுக்கும் பிறந்தவன் ப-.

ப- மிகவும் பலசா-யான அரசனாக இருந்தான். விதற்ப அரசியான விந்தியாவளி என்பவனையும், அசனை என்பவளையும் ப- மணந்து கொண்டான். ப-யின் தங்கை மந்தரை என்பவள். ப-க்கும் அசனை என்பவளுக்கும் பாணன் பிறந்தான். அவனுடைய வழியில் 100 அரசர்கள் ஆண்டனர்.

ப- அல்லது மஹாப-யின் குரு சுக்ராச்சாரியார். மஹாப- நர்மதை நதிக்கரையில் உள்ள ப்ருகு - கச்சத்தில் "விஸ்வஜித்" என்ற வேள்வி செய்தான். (ஆந்திர தேசம் நரசாபட்டிணம் ரெயில் நிலையத்தி-ருந்து 23 மைல் தூரத்தில் "ப-கட்டம்" என்னுமிடத்தில் ப- பல தானங்கள் செய்தான் என்று கூறப்படுகிறது.) மஹாப-யின் வேள்விக்கு வாமனர் என்ற சிறிய பிள்ளை உருவில் திருமால் வந்தார்.

கஸ்யபர் என்னும் முனிவருக்கும் அதிதி என்பவளுக்கும் புதல்வனாக, (புரட்டாசி மாதம், சுக்கில பக்ஷம், விஜய துவாதசி திதி, திருவோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் அபிஜித் முகூர்த்தத்தில் - திருமால் அம்சமாக) அவதரித்தார். சிறு வயதிலேயே வேத சாஸ்த்திரங்கள், யோகம் முத-யவை கற்று மஹாப-ச் சக்ரவர்த்தியிடம், தானம் வாங்க அந்தண பிரம்மசாரியாக வாமனர் வந்தார். மஹாப- சக்ரவர்த்தியிடம், தனது காலால் மூன்று அடி நிலம் தானம் கேட்டார். குல குருவான சுக்ராச்சாரியார்,



மஹாப-யிடம் வந்திருக்கும் அந்தண பிரம்மச்சாரி திருமா-ன் அம்சம் என்றும் அவர் மஹாப-யை அழித்து விடுவார் என்றும் கூறி தானம் அளிப்பதைத் தடுத்தார். மஹாப- அதைக் கேளாது மூன்று அடி நிலம் தானம் செய்தார். வாமனராக வந்திருந்த திருமால் தனது சிறிய உருவத்தை வானளாவிய பேருருவாக மஹாப-க்கு காட்சி கொடுத்து வானுலகை ஒரு அடியாலும், பூவுலகை ஒரு அடியாலும் அளந்து காட்டி மீதமுள்ள ஒரு அடி எங்கே என்று கேட்க, மஹாப- தனது சிரசில் ஒரு அடியை வைக்கும்படி கூறினான். வாமனரும் அவ்வாறே அவன் சிரசில் ஒரு அடியை வைத்து மஹாப-யை அடிமையாக்கிக் கொண்டார்.

மஹாப- கைப்பற்றிய வானவர் நாட்டினை மீண்டும் இந்திரனுக்கு அளித்தும், அவ்வாறே பல நாடுகளை அந்தந்த அரசர்களிடம் மீண்டும் ஒப்புவித்தார் வாமனர். அசுர அரசர்கள் மீண்டும் பாரதத்தில் ஆட்சி செய்யக் கூடாது எனவும் மஹாப- தெற்கிலுள்ள (பாரதத்திற்கு தெற்கே பிலக்ஷத் தீவுகளில்) நாடுகளில் சென்று ஆட்சி செய்யும்படி சத்யம் பெற்றுக் கொண்டார். திருவோணத் திருநாளில் மீண்டும் மீண்டும் தனது பிரஜைகளையும், நாட்டினையும் பார்க்க மஹாப-ச் சக்ரவர்த்தி, வாமனரிடம் வரம் பெற்றான். (கேரள தேசத்தில் ஓணத் திருநாளில் மஹாப-ச் சக்ரவர்த்தி மீண்டும் வருவதாக மக்கள் குதூகலமாக பண்டிகை கொண்டாடுவர்) .

மஹாப-ச் சக்ரவர்த்தியின் மகன் பாணாசுரன். சாவகம், சான்ம-, பிலக்ஷத் தீவுகளைக் கைப்பற்றி பாணாசுரன் பேரரசனாக இருந்தான். அவனது வழியில் 100 பேரரசர்கள் மேற்கண்ட தீவுகளில் ஆட்சி செய்தனர்.

பாணாசுரன் வழியில் பிரபாகரன் என்னும் அசுர அரசன் சாவகத் தீவில் பேரரசனாக இருந்தான். பிரபாகரனுக்கு பதுமன், சிங்க முகன், தாரகன் என்ற பிள்ளைகளும் அஜமுகி என்னும் பெண்ணும் பிறந்தனர். தாரகன் மிகப்பலம் பொருந்தியவனாகி, மீண்டும் வானவர் நாடு, பாரதம், கிரௌஞ்சம் முத-ய பிரதேசங்களில் கொடுங்கோல் ஆட்சி செய்தான். (இவ்வரசன் வரலாறு 4. மேருபாண்டியன் என்னும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது) .

பதுமன் (சூரபதுமன்) , சிங்க முகன், தாரகன் முத-ய அசுர அரசர்களை முருகவேள் வென்று மீண்டும் வானவர்'க்கு அவரது நாடுகளையும் அந்தந்த அரசர்களுக்கு அவரவர் நாடுகளையும் மீட்டுத் தந்தார்.

(இவ்வரலாறு 7. முருகவேள் என்னும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது) .

(திருமா-ன் இரண்டாவது அவதாரமான கூர்மம், மூன்றாவது அவதாரமான வராகம், நான்காவது அவதாரமான நரசிம்மம், ஐந்தாவது அவதாரமான வாமனம் பற்றிய விவரங்கள் மேற்கூறப்பட்ட அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளது. இனி வரும் வைவஸ்சுத மன்வந்திரத்தில் 7வது மநு) திருமா-ன் இதர அவதாரங்கள் பற்றிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

## 13. வைவஸ்ஸுதன்

(வைவஸ்ஸுதன் என்னும் அரசன் ஏழாவது மநுவாக புராணங்களில் கூறப்படுகிறான். இந்த அரசன் சூரிய வம்சத்தில் தோன்றியவன். மதுரையை அடுத்து ஓடும் கிரதுமால் என்னும் நதிக்கரையில் தலைநகர் அமைத்து அரசாண்ட திராவிட அரசன். ஏறத்தாழ 13,000 B.C. யில் நடந்த கடற்கோளில் தப்பி வடபாரதத்திற்கு சென்று அயோத்தி என்னும் இடத்தில் தலைநகர் அமைத்து ஆட்சியைத் தொடங்கினான். வைவஸ்ஸுதன் மகன் இக்ஷுவாகு பிரசித்தி பெற்ற அரசன், இக்ஷுபாகு வம்சம் (சூரிய வம்சம்) தொடர்ந்து பல்லாயிரம் ஆண்டுகள் அயோத்தியில் இருந்து அரசு செய்தது. வைவஸ்ஸுதன் என்னும் அரசனுக்கு வரிசை எண் 3 எனக் கொண்டு சூரிய வம்சத்து அரசர்களுக்கு சம காலத்தில் வாழ்ந்த இதர பாரத வம்ச அரசர்களுக்கும் அதே வரிசை எண் தரப்பட்டுள்ளது. இதனால் அந்த அரசர்கள் சுமாராக எந்த நூற்றாண்டில் வாழ்ந்தனர் என்று யூகிக்கலாகும். ஒரு தலைமுறைக்கு 100 ஆண்டுகள் எனக் கணக்கிட்டு 1 முதல் 108 தலைமுறை அரசர்கள் அதாவது 13,900 B.C. யி-ருந்து 3100 B.C. வரை ஆண்ட சூரிய வம்ச அரச பரம்பரை பின்வரும் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

புராணங்களின்படி தக்ஷன் II (பிரசேதஸ் என்பவர்களுக்கும் மாரிஷை என்பவனுக்கும் பிறந்தவன்) என்றும் அரசன் அசிக்கினை என்பவளையும் இதர அரசிகளையும் மணந்து 60 பெண்களைப் பெற்றாள்.



அந்த 60 பெண்களில்

| | |
|---|---|
| 1) தரும சோழன் | 10 பெண்கள் |
| 2) சந்திர பாண்டியன் | 27 பெண்கள் |
| 3) காஸ்யபன் | 13 பெண்கள் |
| 4) பூதபாண்டியன் | 2 பெண்கள் |
| 5) ஆங்கிரஸ் | 2 பெண்கள் |
| 6) கிருசாஸ்வன் | 2 பெண்கள் |
| 7) அரிஷ்டநேமி | 4 பெண்கள் |
| மொத்தம் | 60 |

சூரசேன சோழன் மகனான தருமன் மணந்த 10 பெண்கள் பெயர்கள் அவர்கள் வழியில் தோன்றியவர் மற்றும் சந்திரபாண்டியன் மணந்த 27 பெண்கள் பற்றிய விவரங்கள் முந்தைய அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன. இனி காஸ்யபன் முதலானவர்கள் மணந்த பெண்களின் பெயர்கள் அவர்கள் வழியினர் பற்றி கீழே தரப்பட்டுள்ளன.

மரீசி என்னும் சேர அரசன் வழியில் வந்த அரிசியின் மகன் காஸ்யபன். தக்ஷன் II இன் 13 பெண்களை காஸ்யபன் மணந்தார்.

| தக்ஷனின் II பெண்கள் (1) | காஸ்யபனுக்கும் தக்ஷனின் பெண்களுக்கும் பிறந்தவர்கள் (2) |
|---|---|
| 1. அதிதி | 1) தாதுமித்ரன், 2) அர்யமான், 3) இந்திரன், 4) வருணன், 5) அமிசுபகன், 6) ருதுவன், 7) விவஸ்வரன், 8) பூஷன், 9) சவித்ரன், 10) துவஷ்டா, 11) விஷ்ணு, 12) மார்த்தாண்டன் (ஆகிய 12 பேரும் ஆதித்யர்கள். சூரிய வம்ச அரசர்கள்) தரணி (பெண்) . |
| 2. திதி | பதுமன், சிங்கமுகன், தாருகன், பாணன் காஸ்யபன், மயன், தூமகேது, ப- முத-ய தைத்யர்கள். அஜமுகி என்னும் பெண்கள் (திதி காஸ்யபனை விட்டு பிரபாகரன் என்னும் அசுரனை மணந்ததால் இவர்கள் அசுரர்கள் ஆனார்கள்) அஜமுகி, துர்வாசரை மணந்து கொண்டாள். |

| | |
|---|---|
| 3) தநு | விப்ரசித்தி, நமுகாசி முத-ய 40 பேர் மற்றும் காலநேமி, சம்பரன், வலன், பாகன், கூபன், கந்தன், அம்பன், (இவர்கள் தானவர்கள் என்றும் அசுர கூட்டத்தில் சேர்ந்ததால் அசுரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். |
| 4) காலை (இளை) | விநாசன், குரோதன் முத-ய 50 பேர் (இவர்களும் அசுரர் கூட்டத்தில் சேர்ந்தனர்) |
| . 5) ஆபு (தாமரை) | விஜயன், விரஜன், வீரன், விருத்திரன் இவர்களும் அசுரக் கூட்டத்தில் சேர்ந்தனர்) |
| 6) சிம்ஹிகை | ராகு முத-ய நாக அரசர்கள் (இவர்களும் அசுர கூட்டத்தில் சேர்ந்தனர்) |
| 7) மனுசுரபி | பீமசேனன், உக்கிரசேனன் முத-ய 16 பேர் (இவர்கள் கந்தர்வ கூட்டத்தில் சேர்ந்தார்கள்) |
| 8) முநி | சருஷ்ணி (வருணன் மனைவி) , ரேவதி (தாது மித்ரன் மனைவி) (இவர்கள் ஆதித்யர்களுடன் சேர்ந்தனர்) |
| 9) குரோதை (குணவதி) | கணன் முத-ய அரசர்கள் (இவர்கள் சோழ அரசர்களுடன் சேர்ந்தனர்) |
| 10) வாசை (சமை) | நாக அரசர்கள் (பைசாசர்கள் என்னும் கூட்டத்தில் இணைந்தனர்) |
| 11) அனுகை (அரிஷ்டை) | கின்னரர்கள், சித்த கணங்கள் (சிவகணத்துடன் சேர்ந்தனர்) |
| 12) விநதை | அருணன், கருடன், சம்பாதி, ஜடாயு முத-ய கருட அரசர்கள் இவர்கள் சூரிய வம்ச சோழர்களுடன் சேர்ந்தனர். |
| 13) கத்ருவை | ஆதிசேஷன், வாசுகி, தக்ஷன், ஐராவதி, கோபதுமன், கம்பளன், சங்கன், திருதராஷ்ட்ரன், மஹாசங்கர், நீலன், பத்ரகன், கார்க்கோடகன், நகுலன், தனஞ்ஜயன், சுபதரன், சங்கபாலன், புஷ்பதந்தன், கமலன், துர்முகன், ஏலாபத்ரன், ஜலர்காரு (பெண்) இவர்கள் நாக அரசர்கள் ஆதித்யர்களுடன் இவர்கள் சேர்ந்து கொண்டனர்) . |

தக்ஷன் II -இன் பெண்களான சருபா, ரூபா என்னும் இவர்களை பூதபாண்டியன் மணந்து கொண்டான்.

பூதபாண்டியனுக்கும் சருபாவுக்கும் 11 ருத்திரர்கள் பிறந்தனர். அவர்களாவன :



| | | | |
|---|---|---|---|
| 1) | மன்னியு | மனைவி | புத்தி |
| 2) | மநு | மனைவி | த்ருதி |
| 3) | மகாகாளன் | மனைவி | ரசானை |
| 4) | மஹான் | மனைவி | உமை |
| 5) | பூமன் | மனைவி | நியது (திக்ஷ¬) |
| 6) | ரிஷபத்துவஜன் | மனைவி | சர்பி (நாக இளவரசி) |
| 7) | ஊர்த்துவரேதஸ் | மனைவி | இளை |
| 8) | பவன் | மனைவி | அம்பிகை |
| 9) | காலன் | மனைவி | இளாவதி |
| 10) | வாமதேவன் | மனைவி | ஸ்வதா |
| 11) | த்ருதவிரதன் | மனைவி | ருத்ராணி |

தக்ஷன் II-இன் பெண்களான சுதா, சதி என்பவர்களை ஆங்கிரஸ் என்பவன் மணந்தான்.

தக்ஷன்II-இன் பெண்களான அர்சிசு, திக்ஷணை என்பவர்களை கிரசாஸ்வன் என்பவன் மணந்தான்.

தக்ஷன் II -இன் நான்கு பெண்களான அரிஷ்டநேமி என்பவன் மணந்து கொண்டான்.

அதிதிக்குப் பிறந்த 12 பேர். வசுக்களுக்குப் பிறந்த 8 பேர், பூதபாண்டியனுக்கும் சருபாவுக்கும் பிறந்த 11 பேர், விவஸ்வானுக்குப் பிறந்த 2 அஸ்வினிகள் ஆகிய 33 பேர்கள், கோடிகோடியாகப் பெருகி 33 கோடி தேவர்கள் ஆனார்கள்.

அதிதியின் மகனான இந்திரனை ஏற்றுக்கொள்ளாத திதியின் புத்திரர்கள் ப-ந்திரன் தலைமையில் கூடி அசுரர்கள் எனப்பட்டனர். தேவர்கள் பாரத தேசத்திலும் அசுரர்கள் ஏனைய தேசங்களிலும் ஆண்டனர்.

காஸ்யபனுக்கும் (1) தக்ஷன் II -இன் பெண் அதிதிக்கும் பிறந்த 12 ஆதித்யர்களில் ஒருவனான விவஸ்வான் (2) விஸ்வகர்மாவின் (பிரபாஸனின் மகன்) பெண்ணான ஸ்ரேணு (சமுஞா தேவி) மற்றும் சாயா தேவி என்பவர்களை மணந்து கொண்டான்.

விவஸ்வானுக்கும், ஸ்ரேணுவுக்கும் வைவஸ்ஸ¬த மநு (3) யமன், யமுனை (பெண்) மற்றும் அஸ்வினி தேவர்கள் ரேவந்தன் முத-யோர் பிறந்தனர். விவஸ்வானுக்கும் சாயாவுக்கும் சனைச்சரன், சாவர்ணி, தபதி (பெண்) முத-யோர் பிறந்தனர். விவஸ்வான் பிரபை என்பவளை மணந்து கொண்டு உஷை (புலகி) என்பவளைப் பெற்றாள்.

வைவஸ்ஸ¬தன் வசும்னி என்பவளை மணந்து அத்திரி பிறந்தார். அத்திரி அனசூயாவை மணந்தார். அத்திரியின் மகளான பத்திரா, உதத்தியர் என்பவளை மணந்தார்.

வைவஸ்ஸ¬த மனுவுக்கு இக்ஷ¬பாகு (2) , நிருகன் (சிபி) , த்ருஷ்டன் (அம்பரீஷன்) , சர்யாதி, நரிஷ்யந்தன், நாபாகன், அரிஷ்டன்

கருஷன், விருக்ஷத்திரன் (ஆத்மநாபன்) , புருடதன் என்பவர்கள் பிறந்தனர்.

வைவஸ்ஸ¬த மநுவின் மந்திரி விச்சிரவாகு, வைவஸ்ஸ¬தனின் குரு தீர்கத்ருஷ்டி என்பவர். சைத்ர வம்ச அரசன் சுரதன் என்பவன் வைவஸ்ஸ¬தனை தோற்கடித்து நாட்டை விட்டு விரட்டினான். இதன் பிறகு வைவஸ்ஸ¬தன் காட்டில் தங்கியிருந்தான். அப்போது அவனது கமண்டலத்தில் இருந்த மீனை குளத்தில் விட மறுநாள் அது பெரிதாக வளர்ந்து அப்போது அது வைவஸ்ஸ¬தனிடம் தன்னை கட-ல் விடும்படி கூறியது. அங்ஙனமே வைவஸ்ஸ¬தன் அதனை கட-ல் கொண்டு விட அந்த மீன் "வைவஸ்ஸ¬தனிடம் இன்னும் சிறிது நாட்களில் பெருமழை, புயல் ஏற்படும். அப்போது கடல் பொங்கும் பல நாடுகள் கட-ல் மூழ்கும். வைவஸ்ஸ¬தனே நீ கடற்கரைக்கு வா. ஒரு படகில் ஏறிக்கொள் உன்னை பத்திரமான இடத்திற்கு கொண்டு சேர்க்கிறேன். அங்கு நீ ஆட்சி அமைப்பாய் உன் தலைமுறை அங்கு பல ஆயிரம் ஆண்டுகள் அரசாளும்" - என்று கூறியது. அங்ஙனமே வைவஸ்ஸ¬தன் கடற்கோளி-ருந்து தப்பி வடபாரதத்தில் அயோத்தியை அடைந்து தலைநகர் அமைத்து ஆட்சி தொடங்கினான். உலக மக்களுக்கு அவன் எழுதிய நூல் மநுதர்ம சாஸ்த்திரம் எனப்படும்.

வைவஸ்ஸ¬த மநு (3) அயோத்தியில் ஆண்டபோது பாண்டி நாட்டில் கபாடபுரம் என்னும் தலைநகரி-ருந்து ஆண்ட பாண்டியன் காய்சின வழுதியின் மகன் பாண்டியன் மாகீர்த்தி (3) . இப்பாண்டியனுக்குப் பிறகு அவனது மகன் மேருபாண்டியன் (4) , மேருபாண்டியன் தங்கை மேருதேவி (4). மேரு தேவி, வைவஸ்ஸ¬தன் (3) மகள் நாபியை மணந்து கொண்டு ரம்யை என்ற மகளைப் பெற்றாள். ரம்யை சூரிய வமிச அரசன் இளாவிரதனை மணந்து கொண்டாள். போகவதி என்னும் நாகபுரத்து அரசன் பக்திசோழன் மற்றும் சத்யையின் புத்திரன் சாத்தன் (சத்தியபுத்திரன்) முத-ய சூரியவம்ச அரசன் இக்ஷு¬பாகுவுடன் நட்பரசர்களாக வாழ்ந்து தமிழகத்தில் ஆட்சி செய்தனர்.

இக்ஷு¬பாகுவின் (4) சகோதரர்கள் நிருகன் (சிபி அல்லது சிவன்) .திருஷ்டன் (அம்பரீஷன்) . சர்யாதி, நரிஷ்யந்தன், நாபகன், அரிஷ்டகன், கருஷன், விருக்ஷத்திரன் (ஆத்மநாபன்) , புருடதன் முதலானோர் வடபாரதத்தில் பல நாடுகளை உருவாக்கி ஆட்சி செய்தனர்.

இக்ஷு¬பாகுவின் மகன் விகுக்ஷி (5) , நிமி (5) , தண்டன் (5), முத-ய 100 பேர், விகுக்ஷி கோசல இளவரசனாக இருந்தபோது சிரார்த்த தினத்தன்று முயல் மாமிசம் சாப்பிட்டதால் "சசாதன்" எனப் பழிக்கப்பட்டான்.



நிமி (5) மிதிலை நகரையும், தண்டன் (5) முத-ய 48 பேர் தென்பாரதத்திலும், சகுனி முத-ய 50 பேர் சிந்து நதிக்கரைகளிலும் நாடுகளை அமைத்துக்கொண்டு ஆண்டனர்.

விகுக்ஷயின் மக்கள் 15 பேர். மேருபாண்டியனின் புத்திரிகளை மணந்து குமரி நாட்டில் ஆட்சி செய்தனர். விகுக்ஷியின் மக்களில் ஏனைய 114 பேர் சோழ, சேர இளவரசிகளை மணந்து தக்ஷிண பாரதத்தில் நாடுகளை அமைத்தனர்.

(வைவஸ்ஸ¬தன் என்னும் திராவிட அரசன் 7வது மநுவாக புராணங்களில் கூறப்படுகிறான்) .

## 14. காய்சின வழுதி

முதலாம் நிலம்தரு திருவிற்பாண்டியன் வழியில் வந்த பாண்டிய அரசன் காய்சின வழுதி என்பவன். இந்த அரசனை இரண்டாம் நிலம் தருவிற்பாண்டியன் என்று தமிழ் வரலாற்று நூல்கள் கூறுகிறது. கடற்கோளுக்கு தப்பி வேறு இடங்களில் குடிபெயர்ந்து ஆட்சியைத் தொடங்குபவர்களை புராணங்கள் "மநு" என்றும், தமிழ் நூல்கள் "நிலம் தந்தவன்" (நிலம் தரு) என்றும் கூறுகின்றன.

முருகவேள் (அத்தியாயம் 7-ஐ காண்க) தென்புலம் வந்து மேருமலையை அடுத்த வீரமகேந்திரபுரத்தி-ருந்த சூரபதுமன் என்னும் அசுர மன்னனை வென்று பாண்டியர்களுக்கு அவர்கள் நாடுகளை மீட்டுத் தந்தார். சூரபதுமனது நாடும் மேரு மலையை அடுத்த பல நாடுகளும் பூகம்பத்தால் அழிந்து கட-ல் மூழ்கின. ("தடநீர் குமரி வடபெருங்கோட்டில் காணும் கடல் கொண்டழிதலால்" என்னும் அடியார்க்கு நல்லார் உரையி-ருந்து மேரு மலைத் தொடரில் வடக்குப் பகுதியில் உள்ள மலையும் அதி-ருந்து உற்பத்தியாகும் குமரி ஆறும் இந்த கடற்கோளில் அழியவில்லை எனத் தெரிகிறது. ஏழ் மதுரை நாட்டின் தலைநகர் தென் மதுரை என்பது குமரி ஆற்றங்கரையில் உள்ள ஒரு பாண்டியர் தலைநகர். இங்கு குமரி ஆற்றோடு "வேணுகி"
என்னும் நதி சங்கமம் ஆவதால் இது "கூடல் நகர்"என்றும் பெயர் ஏற்பட்டது. இங்கு முதன் முத-ல் தலைச்சங்கம் (தமிழ் கல்லூரி போன்ற அமைப்பு) ஏற்படுத்தப்பட்டது. தமிழில் நூல்கள் எழுதப்பட்டு போதிக்கப்பட்டது. பல கலைகள் கற்றுத் தரப்பட்டன. பல தேசங்களி-ருந்து இளவரசர்கள் மாணாக்கர்களாக தங்கி கல்வி கற்றனர். (இக்காலத்தில் தமிழ் எழுத்து சீனா, ஜப்பான் முத-ய மொழிகள் எழுதப்படுவது போல் மேல் எழுத்தாக எழுதப்பட்டது.

பனை ஓலைகள், பதனிட்ட தோல்கள் மீது செய்திகள் வரையப்பட்டன. ஆண்கள் குடுமி வைத்து பின்னித் தொங்கிவிட்டுக் கொண்டும், நீண்ட தொங்கு மீசை (சீனக் கலாசாரம் இருந்ததைப் போல) வைத்துக் கொண்டும் இருந்தனர். பாண்டிய ஆசான்கள் பண்டிதர் எனவும் பாண்டித்யம் பெற்றவர் எனவும் புகழப்பட்டனர். சுரக்காய் கூடுகள், காய் குடுவைகள், கப்பரைகள் (தேங்காய் ஓடு) , மரக் கரண்டிகள், பானை, சட்டிகள் பாத்திரங்களாக , இருந்தன. மரப்பட்டைகள், பின்னப்பட்ட பனை ஓலைகள் ஆடைகளாகவும், சங்கு சோழிகள் அணிகலன்களாகவும், நாணயமாகவும் பயன்படுத்தப்பட்டன. இறந்த பிராணிகள், திமிலங்கள், கத்தி மீன் முத-யவற்றின் எலும்புகள் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டன. மூங்கில் கழி கொண்டு சிலம்பம் முத-யன கற்றுத் தரப்பட்டன. கற்களை தேய்த்து நெருப்பு உண்டாக்கப்பட்டது. மிருகங்களின் தோல்கள் (சிங்கம், கரடி மான் போன்றவை) உடைகளை இளவரசர்கள் அணிந்தனர். பு- நகங்களை ஆபரணமாக அணிந்தனர்) .

**தலைச் சங்கத்தைப் பற்றிய பாடல் (அகத்தியர் இயற்றியது) வருமாறு:**

"வேங்கடம் குமரி தீம்புனற் பவ்வத்து
இந்நான் கெல்லையில் இருந்தமிழ் பயின்ற, **செந்நாப்புலவர்**
செய்தியை யீண்டுரைப்பின்
ஆடகக் குடுமி மாடக் கூட-ன்
முன்னர்ச் சங்கம் கன்மாப் பலகையில்
திரிபுரம் எறித்த விரிசடைக் கடவுள்,
மன்றல் மராஅத்தார் குன்றெறி இளம்சேய்
திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி,
பதிமுடி நாகன், நிதியின் கிழவன்,
இணையர் **ஐந்நூற்று நாற்பத்தொன் பதின்மர்**
ஆணையர் நானான்காயிர நூற்றொடு
நாற்பத் தொன்பதின்மர் பார்க்கிற்செந் தமிழோர்
புரிந்தன செய்யுள் **பெரும் பரிபாடலும்**
முதுமை அடுத்த **நாரையும், குருகும்,**
கதியுறச் செய்த **களரியா விரையும்**
ஆங்கவர் இருந்தும் அத்தொகை யாகும் ;
ஈங்கிவர் தம்மை இரீஇய **பாண்டியர்கள்**
**காய்சின வழுதி முதல் கடுங்கோன்** ஈறு
ஏசிலா வகை எண்பத்தொன் பதின்மர்';
கவியரங் கேறினான் **எழுவராகும் ;**
மகத்துவமுடைய **அகத்தியர் இலக்கணம்"**,



தலைச்சங்கத்தை கூடல் நகரில் தொடங்கிய முதல் தலைவர் சிவபெருமான். அடுத்து அவரது இளைய மகன் முருகன் (மூத்த மகன் விநாயாகர்) தலைவராகவும், அடுத்து குள்ள உருவமுடைய அகத்திய மாமுனிவர் தலைவராக இருந்தனர். இச்சங்க உறுப்பினராக பதிமுடி நாகரையர் (பத்து மகுடங்கள் உடையவர் என்று புராணம் கூறுகிறது) . பெருஞ் செல்வமுடைய குபேரன் (கவேரன்) முத-ல் 549 பேர் புலவர்களாக விளங்கினர். 4,449 புலவர்கள் தலைச்சங்கத்தினால் உருவாக்கப்பட்டனர். இச்சங்கத்தில் காய்சின வழுதி முதல் பாண்டியன் கடுங்கோன் முடிய 89 பாண்டிய அரசர்கள் பங்கேற்றனர். கவியரங்கேறி தலைமை தாங்கிய பாண்டிய அரசர்கள் ஏழு பேராவர். பெரும்பரிபாடல், நாரை, குருகு, களரியா விரை முத-ய நூல்கள் வெளியிடப்பட்டன. களரியா விரை என்பது ஞான நூல் என்றும் போர்க்கலை என்றும் கூறுவர். வாதாபி அகத்தியம், குமரம் முத-ய இலக்கண நூல்களும், முருகன் அகப்பொருள் விருத்தி (உபநிடதம்) , களவியல், பெருநூல், இயனூல், பொதியமலை அகத்தியம் முத-ய நூல்கள் போதிக்கப்பட்டன. காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை இச்சங்கம் 4,400 ஆண்டுகள் நடைபெற்றன. (கி.மு. 14000 முதல் கி.மு.9600 முடிய) என்றும் கூறலாகும். கி.மு.8,500-இல் நடந்த அடுத்த கடற்கோளில் இத்தலைச்சங்கமும், பாண்டி நாடும் அழிந்தன. எனவே 89 பாண்டிய அரசர்களின் பெயர்கள் தெரியவில்லை.

**ஸ்தல புராணங்களில் கீழ்கண்ட பெயர்கள் காணப்படுகின்றன**

| | | |
|---|---|---|
| 1. காய்சின வழுதி | : | திருப்புளிங்குடி (விஷ்ணு ஸ்தலம்) திருநெல்வே-க்கு கிழக்கே 17 மைல் |
| 2. பரமேஷ்டி பரமேஸ்வரன் (இந்திரத்துய்மன்) | : | தாய் தேவஅதிதி, மனைவி சுவலை |
| ஈஸ்வர பாண்டியன் | : | (பிரதிகன்) பரமேஷ்டியின் மகன் |
| 3. பிரஸாத பாண்டியன் | : | (பிரதிகன்) பரமேஷ்டியின் மகன் |
| 4. வீரகுப்த பாண்டியன் | : | இராமேஸ்வரம் |
| தருமகுப்த பாண்டியன் | : | இராமேஸ்வரம் |
| 5. சந்திரகாந்த பாண்டியன் (சுத்யும்னன்) (மனைவி தேவசித்தி) | : | இராமேஸ்வரம் |
| 6. தார்மீக பாண்டியன் (மனைவி வித்ருவதை) | : | சந்திரகாந்த பாண்டியன் மகன் |
| 7. ஜயகீர்த்தி (நிலம்தருவிற்பாண்டியன்) | : | தலைச்சங்கம் ஏறி'ய பாண்டியன் (எழுவரில் ஒருவன்) முடத்திருமாறன் |

8. மனோஜவப் பாண்டியன் : இராமேஸ்வரம்
(மனைவி சுபத்திரை)
மகன் சந்திரகாந்த பாண்டியன்
9. பிருகத்துய்மன் : இந்திரத்துய்மன் வழிவந்த
(குரு ரைப்யர்) பாண்டியன்
10. சல்-ய பாண்டியன் : திருத்தண்கால் (சாத்தூர் மேற்கு 13 மைல்) விஷ்ணுத்தலம்

தென் மதுரை தலைச்சங்கத்தை இறுதியாக நடத்தியவன் கடுங்கோன் என்னும் அரசன். இக்ஷுவாகு வம்ச அரசன் (சூரிய வம்சம்) சகர மஹாராஜன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவன் சகர மஹாராஜன் நடத்திய அஸ்வமேத யாகத்தில், அஸ்வமேத குதிரையை தேவேந்திரன் திருடிக்கொண்டு போக, சகர புத்திரர்கள் (60,000 பேருடன்) அஸ்வமேத குதிரையைத் தேடி கடலை இணைத்து பயணப்பட்டபோது கடற்கோள் ஏற்பட்டது. அதனால் கடலுக்கு "சாகரம்" என்னும் பெயர் ஏற்பட்டது.

தொல்காப்பிய பொருள் உரையில் "சகரர் வேள்விக் குதிரை நாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறு பனை நாட்டோடு கெடுவதற்கு முன்பு" எனக் கூறப்பட்டுள்ளது. இதி-ருந்து வங்காள விரிகுடாப் பகுதிகளில் சகர புத்திரர்கள் வேள்விக் குதிரையைத் தேடும் பொருட்டு கடலை விரிவுபடுத்தினார்கள் என்பதும் அப்போது குமரியாறும், பனை நாட்டின் பல பகுதிகளும் கடற்கோள் ஏற்பட்டு கடலுள் மூழ்கின என்பது தொல்காப்பிய பொருள் உரையின்படி தெளிவாகிறது. எனவேதான் தலைச்சங்கமும் கடுங்கோனது பாண்டிய நாடும் குமரியாறு, பனைநாட்டுப் பகுதிகளும் கட-ல் அழிந்தன. பாண்டிய நாட்டு மக்களும், அரச குடும்பங்களும் கடற்கோளுக்குத் தப்பி தென்பாரதத்திலுமும், சோழர்களின் (தமிழர்கள்) உதவியால் வடபுலத்திலும் குடியேறி அங்கு ஆட்சி தொடங்கினர். சாவகத் தீவம், சான்ம-த் தீவம், ப்லக்ஷத் தீவிலும் கடற்கோள்கள் ஏற்பட்டு அங்குள்ள மக்கள் மத்திய தரைக்கடல் நாடுகள், எகிப்து முத-ய தேசங்களிலும் குடியேறினர். எனவே தென்னாட்டில் பாண்டியர் ஆட்சி ஏற்பட சிலநூறு வருஷங்கள் ஏற்பட்டன.

வடபுலத்தில் இக்ஷுவாகு வம்சம் தொடர்ந்து ஆட்சி செய்து வந்தது. இதுபற்றி பின்வரும் அத்தியாயத்தில் கூறப்படுகிறது.



## 15. இக்ஷுவாகுவின் வம்சம்

காஸ்யபனுக்கும் (1) , அதிதிக்கும், விவஸ்வான் (2) பிறந்தான். விவஸ்வானுக்கும் ஸ்ரேணு என்பவளுக்கும், வைவஸ்ஸுதன் (3) என்னும் ஏழாவது மநு பிறந்தான். வைவஸ்ஸுதனுக்கும், வசும்னி என்பவளுக்கும் இக்ஷுபாகு (4) பிறந்தான்.

இக்ஷுபாகுவின் சகோதரர்கள் நிருகன், திருஷ்டன், சர்யாதி, நரிஷ்யந்தன்,நாபாகன், ரிஷ்டகன், கரூஷன், விருக்ஷத்திரன், புருடதன் முத-யவர்கள். இக்ஷுபாகு அநேக இளவரசிகளை மணந்து பாரதம் முழுதும் ஆட்சி செய்தான். இக்ஷுபாகுவின் வம்சம் பிரசித்தி பெற்ற சூரிய வம்சம் ஆகும்.

இக்ஷுபாகுவின் மக்கள் விருக்ஷி (5) , நிமி, தண்டன் முத-ய 100 பேர்கள், விருக்ஷி கோசலை தேசத்தையும், (நிமி (5) மிதிலையையும், தண்டன் (5) முத-ய 48 இளவரசர்கள் தக்ஷிண பாரதத்தையும், சகுனி (5) முத-ய 50 பேர்கள் உத்தர பாரதத்ததையும் ஆண்டனர்.

விகுக்ஷி (5) யின் மகன் புரஞ்ஜயன் (6) , இவன் காளையின் மீது ஏறி இந்திரனுக்கு உதவியாக அசுரர்களுடன் போர் புரிந்தான். எனவே இந்திரவாகனன் எனப் புகழப்பட்டான். புரஞ்ஜயன் மகன் காகுத்தன் (7) , காகுத்தன் மகன் அனேனசு (8) , (பிரசேனன், அரிநாபன், சுயோதனன்) அனேனசுவின் மகன் பிருகன் (9) (பிருது மஹாராஜன்). பிருகனின் மகன் புத்ரீகன் (10) (அத்ரீகன், விஸ்வசகன்) புத்ரீகன் மகன் மறதிகன் (11) (அல்லது விஷ்டராஸ்வன், யுவனாஸ்வன்) மறதிகன் மகன்ஆசு (12) , மஹாராஜன் ஆசு (அஸ்வமஹாராஜன், யவனாஸ்வன், அஸ்வத்தி)-வின் மகன் யுவநாகன் (13) , இவன் மகன் சாபஸ்பதி (14) (சாபத்திரன், சிராவான், சாவந்தன்) . இவன் மகன் இளதன் (15) (வத்ஸாஸ்வன்) . இவன் வழியில் பிருஷதாஸ்பன் (16), குவலாஸ்யவன் (17) , திருடாஸ்வன் (18) மற்றும் ஹம்சன் (சந்திராஸ்வன், தண்டன்) , கபிலாஸ்வன் மற்றும் 100 பேர். பிரமோதன் (19) , ஹர்யஸ்வன் (20) , நிகும்பன் (21) , அமிதாஸ்வன் (22) (அங்கதாஸ்வன், சங்கிதாஸ்வன், சம்பவாஸ்வன், பர்ஹிஜபுவன்) , கிருசாஸ்வன் (23) , அருணாஸ்வன் (23) பிறந்தனர். அருணாஸ்வன், த்ருக்ஷத்பதி என்பவளை மணந்து பிரசேனஜித் (24) என்னும் மகனைப் பெற்றான். பிரசேனஜித் கௌரி என்பவளை மணந்து யௌவனாஸ்வனை (25)ப் பெற்றான். யௌவனாஸ்வன் அநேக இளவரசிகளை மணந்தான். யௌவனாஸ்வன் மகன் மாந்தாதா(26).

குவலயாஸ்வன் (17) துந்துபி என்னும் அசுர அரசனை குஜராத் கடற்கரையில் கொன்றான். இதனால் இவனுக்கு துந்துமாறன் எனப் பெயர் ஏற்பட்டது. குவலயாஸ்யவனனின் குரு மஹாத்மா உதங்கர்.)

மாந்தாதா (26) சேர மன்னன் சசபிந்துவின் (விருஷ்ணிகுல அரசன் சித்திரரதன் மகன்) மகளான சைத்யராதை (இந்துமதி) என்பவளை மணந்து முசுகுந்தன் என்பவனைப் பெற்று கரூரில் அரசனாக்கினான். மாந்தாவின் காலத்தில் சிந்து நதிக்கு மேற்கே சோழ அரசர்கள் பிலக்ஷத் தீவி-ருந்து வந்த நீக்ரோ அடிமைகளை வைத்து பெரிய நகரங்களை உருவாக்கினர். தாஸர்கள் (தாஸ்யூக்கள் -அடிமைகள்) புரட்சி செய்து சோழ அரசர்களைக் கொன்று நாட்டைக் கைப்பற்றினர். இந்த தாஸ்யூக்களை மாந்தாதா கொன்று குவித்து மீண்டும் சோழ இளவரசர்களிடம் நாட்டை ஒப்புவித்தான்) .

மாந்தாதா (26)-வின் மகன் புருகுச்சன் (27), நாபாகன், அம்பரீஷன், முசுகுந்தன், தர்மகேது முத-யோர் மற்றும் 50 பெண்களும் பிறந்தனர். புருகுச்சன் மகன் மால்விருத்தன் (28) புருகுச்சனுக்கும், நர்மதை என்னும் நாக கன்னிகைக்கும் பிறந்தவன் மால்விருத்தன். இவன் மீண்டும் தாஸ்யூக்கள் என்னும் நீக்ரோ இனத்தவர் மீது படையெடுத்து அவர்களை அழித்தான்.

மாந்தாதா (26)-வின் காலத்தில் ருக்வேதியான சௌபரி என்னும் முனிவர் மகாநதிக் கரையில் வாழ்ந்து வந்தார். இவர் பலகாலம் நீரில் மூழ்கி தவம் செய்தார். அப்போது மீன் குஞ்சுகள் மீது கவனம் திரும்பி, திருமண வாழ்க்கையில் இச்சைப்பட்டு, மாந்ˋதாதாவிடம் சென்று பெண் கேட்டார். அவரது மூப்பு நிலை கண்டு மாந்தாதா யோசனை செய்யவே, அந்தப்புரம் சென்று அவரை விரும்பும் பெண்ணை திருமணம் செய்து கொள்ளும்படி கூறினான். தவமுனிவரான சௌபரி தன் உருவத்தை அழகான வா-பனாக மாற்றி அந்தப்புரத்தில் நுழையவே மாந்தாதாவின் 50 பெண்களும் அவரை விரும்பினர். எனவே, சௌபரி முனிவர் 50 பெண்களையும் மணந்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு பின்னர் தனது தவற்றை உணர்ந்து சன்னியாசியாகி திருமாலை வழிபட்டு பரமபதம் அடைந்தார்.

மாந்தாதாவின் (26) மகன் அம்பரீஷன் (27) . திருமாலை வழிபட்டு துர்வாசரின் சாபத்தி-ருந்து தப்பினார் அம்பரீஷன் (27) மகன் யுவனாஸ்வன் (28) (ரதன், கேதுமான், சம்பு) அவன் மகன் விருஷபன் (29) மகன் விருஷதாஸ்வன் (30) அவன் வழியில் ரதிதரன் (31), ஆங்கிரஸ் (32) பிறந்தனர். ஆங்கிரஸ் குருகுலம் அமைத்து அரச குருவானார். யுவனாஸ்வன் (28) மகன் ஹரிதன் (29) . இவன் திருமாலை வழிபட்டு ஸ்ரீபெரும்புதூர் வந்து திருமாலுக்கு ஆலயம் அமைத்து முனிவரானார். இவருடைய வழி வந்தவர்கள் ஹரித கோத்திரத்தை தென்னாட்டில் பரப்பினர்.

மால்விருத்தன் (28) வழியில் அனரண்யன் (29) , விஷ்ணு (30) , வயிஷ்டு (30) , பிருதாஸ்வன் (31) , ஹரியஸ்வன் (32) ,



ஹஸ்தன் (33) (ஹஸ்தினாபுரம் நிர்மாணித்தவன்) , வசுமனசு (34) (நூறு அஸ்வமேத யாகம் செய்தவன்) , திரிதனுவா (35) (இவனது குரு தண்டி) . திரய்யாருணி (36) , சத்யவிரதன் (37) என்பவர்கள் பிறந்தனர்.

சத்யவிரதன் (37) கேகய இளவரசி சத்யராதை என்பவளை மணந்து அம்பரீஷன் என்பவனைப் பெற்றாள். சத்யவிரதனின் (37) இன்னொரு மனைவியான தருமவதிக்கு ஹரிச்சந்திரன் (38) பிறந்தான்.

சத்யவிரதனின் குரு விஸ்வாமித்திரர். சத்தியவிரதனுக்காக ஒரு சொர்க்கத்தை ஏற்படுத்தினார் விஸ்வாமித்திரர். (இதுவே திரிசங்கு சுவர்க்கம் எனப்பட்டது) .

அம்பரீஷன் (38) மகள் ஸ்ரீமதி . இவள் மேல் நாரத முனிவரும் அவரது சீடன் பர்வதரும் மையல் கொண்டனர். ஸ்ரீமதி இறைவன் திருமால் மேல் பிரேமையுற்று அவரை மணந்து கொண்டாள்.

தர்மவதியின் மகன் ஹரிச்சந்திரன் (38) . இவன் கன்னோஜியை ஆண்ட சந்திரதத்தன் (மதிதயன்) என்பவனின் மகளான சந்திரமதி என்பவளை மணந்தான். இவர்களுக்கு பிள்ளைப்பேறு இல்லாமையால் மித்ரா-வருணர் என்னும் தேவதையைக் குறித்து தவம் செய்தனர். மித்ரா-வருணர் எதிரில் தோன்றி முத-ல் பிறக்கும் ஆண் குழந்தையை ப-யிட்டால் வம்சம் விருத்தியாகும் என வரம் தந்தார். ஹரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் லோகிதாசன் என்னும் மகன் பிறந்தான். பிள்ளையை மித்ரா-வருணருக்குப் ப-கொடுப்பதற்கு பதிலாக அஜிகர்த்தன் (ருசிகன்) என்னும் பிராமணின் மகன் சுனச்சேபன் என்பவனை மாடுகளை கொடுத்து விலைக்கு வாங்கி புருஷமேதயாகம் செய்ய வருணனுக்கு ப-கொடுக்க ஏற்பாடுகள் செய்தான். விஸ்வாமித்திர முனிவர் அந்த யாகத்தில் வந்து சுனச்சேபனை மீட்டு தனது குமாரனாக ஏற்றுக் கொண்டு தேவ விரதன் (பார்கவன்) எனப் பெயரிட்டு வளர்த்தார்.

ஹரிச்சந்திரன் அமைச்சர் சத்யகீர்த்தி. குலகுரு வசிஷ்டர். ஹரிச்சந்திரனிடம் விஸ்வாமித்திரர் தானம் கேட்டு அவனது ராஜ்யத்தையே கேட்டார். கொடுத்த சத்தியத்தை மீற முடியாமல் ஹரிச்சந்திரன் தனது மனைவி சந்திரமதி, லோகிதாஸனுடன் நாட்டைவிட்டு வெளியேறினான். அவ்வாறு சத்தியம் செய்யவில்லை என்று கூறினால் நாட்டை திரும்ப அளித்து விடுவதாக விஸ்வாமித்திரர் கூறினார். அதையேற்க மறுத்த ஹரிச்சந்திரன் சுடுகாட்டுத் தலையாரியாக வேலைபார்த்து ஜீவனம் செய்தான். சந்திரமதி வீட்டு வேலைகள் செய்யும் வேலைக்காரியானாள். சந்திரமதியின் மகன் லோகிதாசனை பாம்பு கடித்து இறந்து விடவே சந்திரமதி அவனை சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றாள். பணம் கொடுக்காமல் சுடுகாட்டில்

எரிக்க ஹரிச்சந்திரன் மறுத்துவிட்டான். அவனுக்கு தனது மனைவியை அடையாளம் தெரியவில்லை. இந்த நிலையிலும் சத்யம் தவறாத ஹரிச்சந்திரன் முன்பாக இறைவன் சிவபெருமான் தோன்றி வரம் அளித்து காப்பாற்றினார். விஸ்வாமித்திரரும் மகிழ்ந்து ஹரிச்சந்திரனுக்கு நாட்டைத் திருப்பி அளித்தார்.

ஹரிச்சந்திரனுக்கு (38) அவன் வழியில் லோகிதாசன் (39) , ஹரிதன் (40) , சம்பன் (41) (சம்பனின் சகோதரி சஞ்சு குமாரியை துந்துபி என்னும் அசுர இளைஞன் காத-த்து மணந்தான்) , ஸ்வேதன் (42) , விஜயன் (வசுதேவன்(43) , ருருகன் (44) , விருகன் அல்லது த்ருவசந்தி அல்லது பிரசேனஜித் (45) , பாஹ¬கன் என்னும் சமுத்திரராஜன் அரசர்களாக வாழ்ந்தனர்.

பாஹ¬கன் (பரதன்) என்னும் அரசன் காளிந்தி என்பவளை மணந்தான். பாஹ¬கனின் (46) மனைவி சுபாலை என்பவள். காளிந்தி கர்ப்பவதியாக இருக்கும்போது வஞ்சனையால் அவளுக்கு உணவில் விஷம் வைத்தாள். பாஹ¬கனை பிலக்ஷ தீவத்தி-ருந்து வந்த ஹேஹயர்கள் (ஹேஹயர்கள், தாலஜங்கர்கள், சசவிந்தர்கள்) முத-ய வேற்று நாட்டவர் கொன்று கோசல நாட்டை கைப்பற்றினார்) . ஔரவஸ் என்னும் பிருகு வம்சத்து முனிவர் காளிந்தியை காட்டில் காப்பாற்றி அவளுக்கு கொடுக்கப்பட்ட விஷத்தை எடுத்து அவள் வயிற்றி-ருக்கும் சிசுவைக் காப்பாற்றினார். அந்த பிள்ளையே சகரன் என்பவன். ஔரவ முனிவர் சகரனை வளர்த்து அரசனாக்கினார். பார்வத முனிவர் (க்ஷீரகடம்பன் மகன்) அதர்வண வேத பண்டிதன் மகாகாளன், முத-யவர்களிடம் கல்வி கற்றான். க்ஷீரகடம்பன், ககருதன் சகரனின் நண்பர்கள்.

சகர மஹாராஜன் வைதற்ப இளவரசி கேசினி (கிருச்மதன் மகள்) மற்றும் பிரபை (சுமதி) என்பவளையும் மணந்தான். சுயோதனனுக்கும் அதிதிக்கும் பிறந்த சுலஸை என்பவளையும் ஸ்வயம்வரத்தில் மணந்தான். கேசினிக்கும், சகரனுக்கும் அசமஞ்சன் (மோசமான நடத்தை உள்ளவன்) என்பவன் (48) பிறந்தான். பின்னர் அஸ்வமேத யாகம் செய்தான். யாகக் குதிரையை இந்திரன் கவர்ந்து சென்று கபிலருடைய ஆஸ்ரமத்தில் ஒளித்து வைத்தான். பிரபையினுடைய புத்திரர்கள் (மற்றும் 60,000) கடலை விரிவுபடுத்தி நாவாய் மூலம் கபிலர் ஆஸ்ரமத்தை அடைந்து கபில முநிவரை இழிவுபடுத்தினர். கபிலர் தமது தவ வ-மையால் அந்த 60,000 பேர்களையும் எரித்துக் கொன்றான். பின்னர் அசமஞ்சன் (48) மகன் அம்சுமான் (49) கபில முநியை வணங்கி ஆசி பெற்று யாகக் குதிரையை மீட்டுச் சென்றான். கபில முனிவர் வானவர் நாட்டில் ஓடும் கங்கையை பாரதத்தில் பாயச் செய்து அதில் சகர புத்திரர்களின்



சாம்பலைக் கரைத்தால் அவர்கள் சுவர்கம் செல்வார்கள் என்று அம்சுமானுக்கு (49) வரம் அருளினார். அம்சுமானின் மகன் திலீபன் (50) சுதேக்ஷிணை என்பவளை மணந்து பகீரதனைப் (51) பெற்றாள்.

சகர மஹாராஜன் காலத்தில் அஜிதர் என்னும் இரண்டாவது ஜைன தீர்த்தங்கரர் அவதரித்தார். இக்ஷ¬வாகு வம்ச அரசன் ஜிதசத்ரு (46) என்பவனுக்கும் விஜயசேனை என்பவளுக்கும் அஜிதன் (47) மாசி மாதம், சுக்ல பக்ஷம், தசமி, ரோகினி நக்ஷத்திரத்தில் பிறந்தார். இவரை மக்கள் அஜித பகவான் என்று ெ்காண்டாடினர்.

சகர மஹாராஜன் தனது புத்திரர்கள் இறந்தமையால் தானும் சமுத்திரத்தில் விழுந்து இறந்தான். சகர மஹாராஜன் காலத்தில் குமரி நாட்டில் கடுங்கோன் என்னும் பாண்டியன் தென் மதுரையி-ருந்து ஆண்டான். இக்காலத்தில் ஏற்பட்ட கடற்கோளால் தென்மதுரை தலைச்சங்கமும் குமரியாறும் பெரும் நிலப்பரப்பும் கட-ல் மூழ்கி அழிந்தன. சிந்து, ஸரஸ்வதி, யமுனை நதிகள் போக்கு மாறியது. ஸரஸ்வதி நதி கிழக்கு பக்கம் ஓடியது திரும்பி ராஜஸ்தான் வழியாகச் சென்று கட்ச் வளைகுடாவில் விழுந்து மறைந்தது. ஒரு பகுதி அந்தர்வாகினியாக யமுனையுடன் பிரிந்து கலந்தது.

சகர மஹாராஜன் (47) , வைவஸ்வத மநுவின் (3) தலைமுறையில் 47 வது அரசன். ஒரு அரசன் ஆண்ட காலம் 100 வருடங்கள் என்று கொண்டால் 47-3=44 X 100 = 4400 வருடங்கள் ஆகிறது. ஏறத்தாழ குமரி நாட்டில் காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை 89 பாண்டியர்கள் 4400 வருடங்கள் வரை தலைச்சங்கம் நடத்தினர் என்பதும், சகரன் காலத்தில் (கடுங்கோன் என்றும் பாண்டியன் காலம் முடிய) ஏற்பட்ட கடற்கோள் 13900 B.C.- 4400 = 9500 B.C. யில் இக்கடற்கோள் நிகழ்ந்திருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. தலைச்சங்கம் 13,900 B.C முடிய 4400 வருடங்கள் நடைபெற்றது என்று கூறுவது தவறாக ஆகாது.

இதே காலகட்டத்தில் (13,900 B.C முதல் 9,500 B.C முடிய 4400 வருடங்கள்) தென்புலத்தில் முசுகுந்த சோழ சக்கரவர்த்திக்குப் பிறகு பெருவள நாடு (குமரிக் கண்டம்) கரூர், உறையூர் முத-ய இடங்களில் அரசாண்ட சோழ அரசர்களின் பெயர்கள் வருமாறு :-

1) ஒளிச்செங்கோ (ஜயமாஞ்ஜெயன்) , 2) சக்கரன் , 3) பக்தி சோழன், 4) மநு காதலன் உலகளித்த சோழன் (மனைவி சித்திரசேனை-இக்ஷ¬வாகு வமிச அரசன் விகுக்ஷியன் மகள்) , 5) இந்திர வாகனன் (மக்கட் சாதி வகுத்த சோழன்) , 6) காகுத்தன் நண்பன் ஏதறிந்த சோழன், 7) மகாசேனன் (புக-யுடுத்த சோழன் - வைரராஜன் நண்பன்) , 8) காஞ்சனா என்னும் நாக கன்னிகை கை பிடித்த சோழன் (பிரது மகாராஜன்) , 9) தன்னுயிரை மன்னுயிர்க்கு

அளித்த சோழன், 10) அழகு நந்தன், 11) திரிலோக சோழன், 12) கவேரன் (குபேரன்) , 13) வில்வலன் க-கண்ட சோழன், 14) புகை கண்ட சோழன், 15) செம்பியன் (சிபி வழி வந்தவன்) கம்பனார் கோயில் செம்பொன் வேய்ந்த சோழன், 16) மறவநாடு கண்ட சோழன், 17) சோழன் கபிலன், 18) இலவந்திகை (உத்திரகோசமங்கை) கண்ட சோழன், 19) கைலாசம் வாசம் கண்ட சோழன் (மனைவி சீர்த்தி அசுர மங்கை) , 20) அரைதசை ஈந்த சோழன் (திருவெண்குடி) , 21) க-ங்கன் தரை கண்ட சோழன், 22) பூ-காருண்ய சோழன், 23) சேரன் துறந்த சோழன், 24) சிலை கடிந்த சோழன் (விஷ்ணு வில்லை முறித்தவன்) , 25) மறைகளில் அக்ஷரம் கண்ட சோழன், 26) தீக்குறி கண்ட சோழன் (மாந்தாதாவின் மகள் சேரதேவியை மணந்தவன்) , 27) அபயங்கர சோழன், முசுகுந்தன் (மனைவி புருகுச்சனின் பெண்), 28) விக்ரம சோழன், 29) ஏக சக்ராதிப சோழன் (குரு ஹரித மகரிஷி, ஸ்ரீபெரும்புதூர்) , 30) தக்க சோழன், 31) உத்துங்க சோழன், 32) குலோத்துங்க சோழன் (குரு-ஆங்கிரஸ்) , 33) இராஜேந்திர சோழன், 34) திருமுடிச் சோழன் (சேய்கொண்ட சோழன்) , 35) கருவன்னம் சுரியிட்ட சோழன் (கஜசம்ஹாரன்-கரி-காலன்) , 36) தரும சோழன் (அருந்தவச் சோழன்) , 37) திருநீற்றுச் சோழன், 38) வீரசோழன் (மனைவி சத்யை-ஹரிச்சந்திரன் மகள்), 39) வசுதேவ சோழன் (யாதவன்) , 40) விட்ட சிறை சோழன், 41) ஆறில் ஒரு கடமை கொண்ட சோழன், 42) சிவ-ங்க சோழன் (மனைவி பத்மவல்- - மநு நீதி கண்ட சோழன், 43) வருணனை நிலையிட்ட சோழன், 44) திண் வசந்த சோழன், 45) தீர சோழன் (சம்பிரதாய சோழன்) , 46) நித்யோத்ஸவ சோழன் (சகரன் துணை கண்ட சோழன்) .

(சேர வம்ச மன்னர்களின் பெயர்கள் கிடைக்கப் பெறவில்லை.)

(சோழ மன்னர்களும், சூரிய வம்சத்தை சார்ந்த மன்னர்கள் - தமிழர்கள்)

இக்ஷ¯வாகு (4) வின் வம்சத்தில் அவன் சகோதரன் விருக்ஷத்திரன் (4) , நிருகன் (4) , சுமதி (5) , பூத ஜோதிஸ் (6), ஒகவான் (7), ஒகவதி (7), கணவன் சுதர்சனர் முத-யோர் சிற்றரசர்களாக இருந்தனர்.

இக்ஷ¯வாகுவின் (4) சகோதரன் நரிஷ்யந்தன் (4) வழியில் சித்ரசேனன் (5) , தக்ஷன் (6) , மிட்டுவான் (7) , இந்திரசேனன் (8), வீதிஹோத்திரன் (9) , சத்தியசிரவா (10) , உத்திரசிரவசு (11) தேவதத்தன் (12) அக்நிவேச்யன் (13) முத-யோர் உத்தரகுரு நாட்டில் அரசர்களாக இருந்தனர்.

இக்ஷ¯வாகுவின் வம்சத்தில் நிமி (5) என்பவர் மிதிலையி-ருந்து ஆட்சி செய்தனர். நிமியின் அவையில் கவி,



ஹவி, அந்தரிக்ஷன், பிப்பலாயனர்,அவிர்ஹோத்திரர், சமஸர், கரபாஜனர் மற்றும் தமிழரான திராவிடர் பல யோகிகள் இருந்தனர். நிமியின் மகன் விதேகன் (6) அவள் வழியில் ஜனகன் (7) (வைதேகன், மிதிலன்) , உதாவசு (8) , நந்திவர்மன் (9) , சுகேது(10), தேவராதன் (11) , பிருஹதுத்தன் (12) , மஹாவீர்யன் (13) , சுதருதி (14) , திருஷ்டகேது (15) , ஹர்யஸ்வன் (16) , மரு (17) , பிரதிகன் (18) கிருதராதன் (19) , தேவமீடன் (20) , விபுதன் (விதூர்த்தன்) (21) , மஹாத்ருதி (விபு) (22) முத-யோர் மிதிலையி-ருந்து ஆண்டனர்.

விபு (22) என்னும் அரசனை சக்ரபாணி என்னும் அசுர அரசன் கொன்றான். சக்ரபாணியின் மனைவி வக்கிரை (வருணன் மகள்) , சக்ரபாணியின் மகன் சிந்துராஜன் (24) அசுரேந்திரன் ஆனான்.

சிந்துராஜன் அமைச்சர் மித்ரன், தளபதிகள் கதம்பாசுரன், சம்பாசுரன், அனலாசுரன், கேலாசுரன், சிந்துராஜனையும் ஏனைய அசுரர்களையும் வினாயகர் கொன்று, விபுவின் மகன் கீர்த்திராதன் (23) என்பவனை அரசனாக்கினார். அவன் வழியில் மஹாரோமன் (24) , சுவர்ணரோமன் (25), தாளத்வஜன் (26) , ஸ¯தனுவா (27) முத-யோர் மிதிலையை ஆண்டனர். மீண்டும் மிதலையை அசுர அரசர்கள் தாருகன் முடிய (47) கைப்பற்றி ஆண்டனர். 33 அசுர அரசர்கள் சகரன் காலம் வரை ஆண்டனர். சகரன் மிதிலையைக் கைப்பற்றி ஆட்சி செய்தான்.

## 16. ருதுபர்ணன்

இக்ஷ¯வாகு வம்சத்தில் உத்தரகோசல நாட்டில் திலீபன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். இவன் மனைவி சுதேக்ஷிணை இவர்கள் காமதேனுவின் மகள் நந்தினி என்னும் கோமாதாவின் அருள் பெற்றவர்கள். திலீபன் I (50) மகன் பகீரதன் (51) . (பகுரதன் அல்லது பஃறேர் செம்பியன்) இவன் தவமிருந்து சிவபெருமான் அருளால் கங்கை என்னும் ஆற்றை இமயத்தி-ருந்து (ஆறு ஓடிவர பூமியை வெட்டி அகலப்படுத்தி) பெருகி வரும் அலக்நந்தா மற்றும் வருணா, அசி என்னும் ஆறுகளை இணைத்து, கபிலாஸ்ரமம் சென்று சகரபுத்திரர்களின் சாம்பலை கங்கையில் கரைத்து அவர்கள் ஆத்மாவை நற்கதியேற சடங்குகள் செய்தான். பகீரதனுக்கு, ஜன்னு என்னும் முனிவரும் உதவினார். இதனால் கங்கை ஆற்றுக்கு பாகீரதி என்றும், ஜான்னவி என்னும் பெயர்களும் ஏற்பட்டன.

பகீரதன் மகன் சுகோத்திரன் (52) , இவன் சிரத்தை என்பவளை மணந்து சுத்யும்னன் (இளை) (53) என்பவனைப் பெற்றார். இவன் பெண்ணாக மாறி புதன் என்னும் சந்திர வம்ச அரசனை மணந்து புரூரவஸ் (54) என்பவனைப் பெற்றாள். புரூரவஸ் சந்திர வம்சத்தை வடபுலத்தில் தோற்றுவித்தான்.

கடுங்கோன் என்னும் பாண்டியனும், தென்மதுரை (குமரி நாடும்) யும் தலைச்சங்கமும் அழிந்துவிட பாண்டியர்கள் வடபுலம் இமயம் அருகில் குடியேறி ஆட்சி நிறுவினர். இச்செய்தியினை :-

"வடிவேல் எறிந்த வான் பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசையாண்ட தென்னவன் வாழி"

-சிலப்பதிகாரம் -காடுகாண் காதை-

மூலம் அறியலாகும்.

சுகோத்திரன் (52) மகன் நாபகன் (53) , அம்பரீஷன் (53) , இவர்கள் வழியில் சிந்துத்வீபன் (54) அயுதாஜி (55) , இவன் மகன் ருதுபர்ணன் (56) .

ருதுபர்ணன் காலத்தில் கடற்கோளுக்குத் தப்பி உத்தர பாரதத்தில் பாண்டிய இளவரசன் யஜக சந்திர பாண்டியன் என்பவனை அசுர அரசன் தஞ்சம் கொடுத்து வளர்த்தான். இவன் தேவ குருவான பிருகஸ்பதியிடத்தில் கல்வி கற்க மாணாக்கனாக சேர்ந்தான். பிருகஸ்பதியின் மனைவிக்கும் சந்திரனுக்கும் காதல் மலர்ந்தது. சந்திரன் கல்விகற்று முடிந்தவுடன் தனது நாடு திரும்பும்போது தாரையையும் கவர்ந்து சென்றான். பிருகஸ்பதி இந்திரனிடம் முறையிட தேவர்கள் சந்திரன் மீது படையெடுத்தனர். சந்திரனுக்கு உதவியாக அசுர அரசர்கள் தேவர்களுடன் போரிட்டனர். பிரமன் தேவர்களையும் அசுரர்களையும் சமாதானப்படுத்தி தாரையை மீட்டு பிருகஸ்பதியிடம் ஒப்புவித்தார். தாரைக்கு புதன் என்னும் மகன் பிறந்தான். புதன் சந்திரனின் மகனே என்று பிரம்மதேவர் கூற பிருகஸ்பதி தான் வளர்த்த புதனை எடுத்துச் சென்று சந்திரனிடம் ஒப்புவித்தார். புதன் என்பவன் இக்ஷுவாகு வம்சத்தில் உதித்த சுத்யும்னன் (53) என்பவன் பெண்ணாக மாறவே (இளை) அவளை மணந்து புரூரவஸ் (54) என்பவனைப் பெற்றான். புரூரவஸ் சந்திர வம்சத்தை வடபுலத்தில் தோற்றுவித்து பிரதிஷ்டானபுரத்தி-ருந்து ஆட்சி செய்தான்.

ருதுபர்ணன் காலத்தில் சந்திர வம்ச அரசனான வீரசேனன் என்பவன் மாவிந்த நகரத்தி-ருந்த நிஷத தேசத்தை ஆண்டு வந்தான். வீரசேனன் மகன் நளன். மிக அழகு வாய்ந்தவன். இவனிடம் ஒரு அன்னப் பறவை குண்டினபுரத்து அரசன் மகள் தமயந்தியின் அழகு பற்றிக் கூற, தமயந்தியிடமும் நளனைப் பற்றி கூறியது. தமயந்தியின் ஸ்வயம்வரத்தின்போது இந்திரன், வாயு, அக்னி, யமன் ஆகிய நால்வரும் நளனைப் பேலவே தங்கள் உருவை மாற்றிக் கொண்டு



நள மகாராஜன் அருகிலேயே அமர்ந்து விட்டனர். தமயந்தி தனது உள்ளுணர்வால் உண்மையான நளனைக் கண்டறிந்து அவனுக்கு மாலையிட்டாள்.

நளன் தனது அண்டை நாட்டரசனாகிய புஷ்கர ராஜனிடம் சூதாடி நாட்டையிழந்தான். நளன் தனது மனவைி தமயந்தி மற்றும் மகன் இந்திரசேனனையும், மகள் இந்திரசேனையுடன் காட்டிற்குச் சென்றான். தமயந்தி தனது மகன் இந்திரசேனனையும், மகள் இந்திரசேனையையும் தனது தந்தை வீமராஜனிடம் அனுப்பிவிட்டு, தனது கணவன் நளனுடன் காட்டிற்குச் சென்று விட்டாள். நளன் ஒரு அன்னப்பறவையைப் பிடிக்க தனது இடுப்பு வஸ்த்திரத்தால் பிடிக்க அன்னம் அந்த வஸ்த்திரத்தைத் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டது. நளன் தனது மனைவி தமயந்தியின் புடவையைக் கிழித்து இடுப்பில் கட்டிக் கொண்டு தமயந்தியை விட்டுத் தனியே சென்றுவிட்டான்.

தமயந்தி தனது கணவன் நளனைக் காணாமல் போகவே பக்கத்தி-ருந்த சேதி ராஜ்யம் சென்று அந்நாட்டு அரசன் உதவி பெற்று தந்தை வீமராஜனிடம் சென்றடைந்தாள். நளனை ஒரு பாம்பு கடிக்க கருப்பு நிறமாக மாறி வாருகன் என்னும் பெயருடன் கோசல தேசம் சென்று ருதுபர்ணனிடம் தேரோட்டியாக இருந்தும், சமையற்காரனாக இருந்தும் உயிர் வாழ்ந்தான்.

தமயந்தி தனது கணவன் நளன், வேறு பெயரில் கோசல தேசத்தில் ருதுபர்ணனிடம் இருப்பதை ஒரு முனிவரின் தீர்க்க த்ருஷ்டியால் அறிந்து தனக்கு மீண்டும் சுயம்வரம் நடக்கப்போவதாக ருதுபர்ணனுக்கு ஒலையனுப்பச் செய்தாள். ருதுபர்ணன் தனது தேரோட்டியான நளனுடன் (வாருகன்) குண்டினபுரம் சென்றான். தமயந்தி அங்கே நளனைக் கண்டுபிடித்து மீண்டும் ருதுபர்ணன் ஆசியுடன் வாழ்க்கையைத் துவங்கினாள்.

(நளன் தென்னாட்டிற்கு வந்து காரைக்கால் அருகிலுள்ள திருநள்ளாறு சிவன் கோயில் உள்ள சனி பகவானை வழிபட்டு நளதீர்த்தம் என்னும் குளத்தில் நீராடி நல்ல சரீரம் பெற்றான்) நிஷத அரசன் குமாரன் நளனுக்கும் தமயந்திக்கும் நளாயினி என்ற மகளும் நபன் என்னும் புதல்வனும் பிறந்தனர்.

நளனுக்குப் பிறகு (56), இந்திரசேனன் (57) , அவன் மகன் சந்திராங்கதன் (58) (மனைவி சீமந்தினி) முத-யோர் நிஷதராஜ்யத்தை ஆண்டனர்.

(ருதுபர்ணன் (56) காலம் வைவஸ்ஸுதன் (2) காலத்தி-ருந்து 54 தலைமுறை கழித்து அதாவது 56-2=54 X 5400 வருடங்கள், 13900 B.C. - 5400 = 8500 B.C. எனக் கொள்ளலாகும் . 8500 B.C. யில் மக நக்ஷத்திரத்தில் சப்தரிஷி மண்டலம் இருந்ததால் பெருங்கடற் கோள் பூமியில் ஏற்பட்டது.)

(குமரியாறு கடற்கோளில் அழிந்தபிறகு கவாடபுரத்தை தலைநகராகக் கொண்டு சில பாண்டிய அரசர்கள் ஆண்டனர். கடுங்கோன் (47) , பிறகு ஹேஹய மன்னர்கள் (48 & 49) , பிரபாகர பாண்டியன் (50) , சல்-ய பாண்டியன் (51) (பகீரதன் காலம்) , வீரசேன பாண்டியன் (52) , அவன் மனைவி சுகந்தகேசி (திருத்தண்கால் - காளையார் கோயில்புராணம்) , இவன் மகன் சுத்யும் ்னன் (பிருத்வி பாண்டியன்) , பாண்டியன் மாகீர்த்தி II, இவன் மகள் பிரபாவதி (ஆயுசுவின் மனைவி) (புரூரவஸ் காலம்) , பராக்ரம பாண்டியன் (55) , வீரபாண்டியன் (56) முத-ய அரசர்கள் ஆண்டனர்.

கரூர் மற்றும் உறையூரில் நித்யோத்ஸவ சோழன் (47) வழியில் பிராதாபருத்திரன் (குபேரன் - காவிரி கண்ட சோழன்) மகள் காவிரி, குரு அகஸ்த்தியர், சுந்தரசோழன் (சமுத்திரம் சேர்ந்த சோழன் (49) , பொக்க-பூ சோழன் (50) , இந்திரனை பு-யாகக் கொண்ட சோழன்(51) சுந்தரசோழன் (52) , வ-யினிற் குருதி கொடுத்த சோழன் (53) , வரதராஜன் பணி கொண்ட சோழன் (54) , தூங்கு எயில் எறிந்த தொடிதோட் செம்பியன் (55) , இந்திர விமானம் கண்ட சோழன் (56) முத-யோர் ஆண்டனர்.)

## 17. மலையத்துவஜ பாண்டியன்

புரூரவன் (54) என்னும் சந்திர வமிச அரசன் வடபுலத்தில் பிரதிஷ்டானபுரம் என்னும் தலைநகரி-ருந்து பாஹ்லீக தேசம் முழுதும் ஆண்டு வந்தான். ஊர்வசி என்னும் நடனமங்கை மீது மோகம் கொண்டு பல நாட்கள் அவளுடன் வாழ்ந்து வந்த போது, கந்தர்வர்கள் ஊர்வசியை தனது நாட்டிற்குத் திரும்ப அழைத்துச் சென்று விட்டனர். ஊர்வசி மேல் பைத்தியமாக இருந்த புரூரவனுக்கு குட்ட நோய் பிடித்துவிட, வசிட்டர், அகத்திய முனிவர்கள் அறிவுரைப்படி தென்னாடு வந்து காரைக்கால் அருகே உள்ள திருநள்ளாறு குளத்தில் நீராடி சிவபெருமானை பூஜை ெ்சய்ய அவனது நோய் அகன்றது.

புரூரவன் தென்புலத்து பண்டிதர்களிடம் வேதங்களைக் கற்று அவற்றை மூன்றாகப் பிரித்து, அக்நியை மூன்றாகப் பிரித்து, சிரார்த்த நியமங்களையும் வகுத்தான். ஆர்த்தரவன் முத-ய விஸ்வ தேவர்களை வழிபடும் முறைகளையும் ஏற்படுத்தினான்.

புரூரவன் தென்னாடு அடைந்தபோது பாண்டிய மன்னர்கள் தாமிரபரணி நதிக்கரையிலுள்ளள கவாடபுரத்தி-ருந்தும், மணவூர் என்னுமிடத்தி-ருந்து கொற்கை (மேற்குக் கடற்கரை) துறைமுகத்தி-ருந்தும் மூன்றாகப் பிரித்து ஆட்சி செய்தனர். மணவூர் பட்டிணத்தி-ருந்த குலசேகரப் பாண்டியன் (54) அரண்மனை சிலகாலம் புரூரவன் தங்கி பிரதிஷ்டானபுரம் திரும்பினான்.



புரூரவனுக்கு ஆயுசு (55) மற்றும் அமாவசு என்னும் விஜயன் விஸ்வாவசு, சுருதாயு, சதாயு, அயுதாயு, த்ருதாயு, த்யுதிமான் முத-ய பிள்ளைகள் பிறந்தனர். புரூரவன் மகன் ஆயுசு (55) அல்லது அக்னி அல்லது அம்பரீஷன் என்பவனுக்கும், பிரபை என்னும் இளவரசிக்கும், நகுஷன் (56) அல்லது மாக்லீகன் மற்றும் க்ஷத்திர விருத்தன் (56) (காசியரசன்) (56) முத-யவர்கள் பிறந்தனர்.

விஜயனுக்கு (56) பீமனும் (59) (கௌசிக வம்சம் காண்க) . சுருதாவுக்கு வசுமானும், சதாயுவுக்கு தனஞ்ஜயனும், அயுதாயுவுக்கு மிதனும், திருதாயுவுக்கு தானுதன், ஏகன் முத-யவர்களும் பிறந்து வடபாரதத்தை ஆண்டனர். மணவூரில் குலசேகரப் பாண்டியன் ஆட்சி செய்தபோது இந்திரன் கடம்பவனத்தில் உள்ள சிவ-ங்கத்தை சித்ரா பௌர்ணமி அன்று வழிபட்டு நீங்கப் பெற்றான். கருப்பாக மாறிய வெள்ளை யானையும் (ஜராவதமும்) சாப விமோசனம் பெற்று மீண்டும் வெள்ளை யானையாக மாறியது.

துர்வாசர் ஒரு சமயம் சிவபூஜை செய்த பிரஸாத புஷ்பத்தை தேவேந்திரனிடம் அளிக்க அவன் அதை ஜராவதத்தின் தலையில் அலட்சியமாக வைக்க, ஐராவதம் அதை துதிக்கையால் எடுத்து காலால் மிதித்தது. இதனால் தேவேந்திரனுக்கு சாபம் ஏற்பட்டது. கர்வமடைந்த தேவேந்திரன் தனது குருவான பிருகஸ்பதியை அலக்ஷியம் செய்ய அவரும் தேவலோகம் விட்டுச் சென்றார். தேவேந்திரன் இலங்கைத் தீவின் வடக்கிலுள்ள மாதோட்டம் (மஹாதுவஷ்டா நகரம்) சென்று துவஷ்டாவின் பிள்ளை திரிசிரசு என்பவனை குருவாகக் கொண்டு யாகம் செய்தான். திரிசிரசு (விஸ்வாவசு) அசுரர்களுக்கு உதவி செய்வது கண்டு அவன் தலையை வெட்டி விட்டான். துவஷ்ட்டா இந்திரனைப் பழிவாங்க விருத்திராசுரனை அவன் மீது ஏவிவிட, இந்திரன், அவனிடம் நட்பாக இருப்பதுபோல் நடித்து அவனை தனது வஜ்ஜிராயுதத்தால் கொன்றான். இந்த செயலால் இந்திரன் தனது பாவத்தைப் போக்க கடம்ப வனம் வந்து சிவபெருமானை வழிபட்டு பாவம் நீங்கினான். இதைக் கண்ட தனஞ்ஜயன் என்னும் வணிகன் குலசேகரப் பாண்டியனிடம் கூற, பாண்டியன் கடம்ப வனத்தில் இருந்த சிவபெருமானுக்கு ஆலயம் எழுப்பினான். அந்த ஆலயத்தைச் சுற்றி ஆலவாய் (மதுரை) ஒரு நகரை எழுப்பினான். நகரைக் காப்பதற்கு குலதெய்வமான சாஸ்தாவுக்கு (அய்யனார்) கிழக்கிலும், திருமாலுக்கு மேற்கிலும், சப்தகன்னியருக்குத் தெற்கிலும், துர்கைக்கு (பத்ரகாளி) வடக்கிலும் ஆலயங்கள் எழுப்பினான். குலசேகரனுக்கு மலையத்வஜ பாண்டியன் என்னும் மகன் பிறந்தான். மலையத்துவஜன்(பிருதிவி பாண்டியன் II) சூரசேன சோழன் மகளான காஞ்சனமாலையை திருமணம் செய்து கொண்டு மணவூரி-ருந்து பாண்டிய நாட்டை

ஆண்டான். மலையத்துவஜன் பெண் தடாதகை (மீனாக்ஷி). தடாதகை பாரதம் முழுதும் ஆட்சி செய்தாள். இறைவன் சோமசுந்தர பாண்டியனை மணந்து உக்கிரகுமாரன் என்னும் வெற்றிவேல் பாண்டியன் (ஆரஞ்சாத்து பாண்டியனை) பெற்றாளர். உக்கிரகுமாரன், சோழ இளவரசி காந்திமதியை மணந்தான். உக்கிரகுமாரன் கைலாயம் சென்ற பிறகு அவனது தம்பி வீரபாண்டியன் மதுரையி-ருந்து ஆட்சி செய்தான். இக்காலத்தில் பிரஹலாதன் என்னும் அரசன் பாண்டி நாட்டைக் கவர்ந்தான். (அசுர அரசன் பிரஹலாதன் (மஹாப-யின் புதல்வன் அல்ல) இந்திரன் மீது படையெடுத்தான். ரஜி என்னும் சந்திர வம்ச அரசன் இந்திரனுக்கு உதவியாக பிரஹலாதனை போரிட்டுத் தோற்கடித்தான். ரஜியின் பிள்ளைகள் 500 பேர் இந்திரனைத் தோற்கடித்து நகுஷனை இந்திரன் ஆக்கினர்) .

கி.மு.8,600இல் நகுஷன் (56) வடபுலத்தில் நூறு அஸ்வமேத யாகம் செய்து இந்திரப் பதவியை அடைந்தான். இந்திர பட்டாபிஷேகம் செய்ய சப்தரிஷிகளை பல்லக்குத் தூக்க நகுஷன் பல்லக்கு ஏறிச் செல்கையில், சப்தரிஷிகளல் ஒருவரான அகஸ்த்தியரை வேகமாகச் செல்லும்படி பணிக்க (சர்ப்ப, சர்ப்ப என்று விரட்ட அகஸ்த்தியர் நகுஷனை ஸர்ப்பமாக (பாம்பாக) மாறும்படி சபித்தார்.

கொற்கையை ஆண்ட பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் 100 யாகங்கள் செய்து இந்திரப் பட்டம் அடைய பலவேள்விகள் செய்யத் தொடங்கினான். குலசேகரப் பாண்டியன் உறவினனான பெருவழுதி(56) பல யாகங்கள் செய்து அநேக தானங்கள் அளித்தான். (கி.மு.8600-இல்)

வேள்விக்குடி செப்பேடு பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதியைப் பற்றிய பாடல் வருமாறு :-

"கொல்யானை பலவோட்டிக் கடாமன்னர் குழாஅம் தவிர்த்து
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனும் பாண்டியாதிராசனால்"
என்றும் "சுருமார்கம் பிழையாத கொற்கை கிழான்
நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க " என்றும் கூற்றால்

"நற்கொற்றன் " இந்த வேள்விகளை நடத்தினார் என்று கூற இயலும்

"ஒல்கா வேற்றானையொடு ஓதவே- உடன்காத்த பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி எனும் பரமேச்சுரனால் வேள்விக்குடி எனப்பட்டது ".

-எனும் கூற்றால் பரமேஸ்வர பாண்டியன் என்னும் பெருவழுதியே இந்த வேள்விகளைச் செய்தான் என்று கூறலாகும். அகஸ்த்திய முனிவரும், ஏனைய தமிழ்ப் புரவர்களும் , பரமேஸ்வர பாண்டியனைத் தடுத்து இந்திரப் பட்டம் தேவையற்றது என்றும் மீண்டும் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்து பாண்டிய நாட்டை நல்லாட்சி செய்ய



வேண்டவே பரமேஸ்வர பாண்டியன் இந்திர பதவி அடைய வேள்வி செய்வதை நிறுத்தினான். 8500 B.C.)

முதுகுடுமி தமிழ்ச் சங்கம் கொற்கை (மாறோக மண்டலம்) துறைமுகப் பட்டிணத்தில் ஏற்படுத்தப்பட்டது. இ˙ச்சங்கத்தில் ஐந்திரம் என்னும் நூலை இயற்றிய இந்திரன், காரிகிழார், நெடும் பல்-யத்தார், நெடும்பல்-யத்தை (பல்-யம் என்னும் இசைக்குழு) நெட்டிமையார், பரதமுனிவர், அகத்தியர் (கூத்து நூல்) முத-ய தமிழ்ப் புலவர்கள் இருந்தனர். ஐந்திணை அகநூல் (களவியல்) குமரம், அகப்பொருள் விருத்தி, ஐந்திரம், பரதம், கூத்து நூல் முத-யன வெளியிடப்பட்டன.

பரமேஸ்வர பாண்டியனுக்குப் பிறகு, அகத்தியர், பிருதிவி பாண்டியன் முத-யோர் சங்கமேறினர்.

வடபுலத்தில் கோசல தேசத்தில் ருதுபர்ணன் என்னும் சூரிய வம்சத்தில், அனுபர்ணன் என்னும் சர்வகாமன் (57) , சுதாஸ் (58) , சௌதாஸ் (59) (மித்ரஸன், கல்மாஷ்பாதன், ப்ரவிருத்ததன், திவோதாஸ், நளன், வீரஹஸன்) சௌதாஸனின் மனைவி வைதற்பதேச இளவரசி மதயந்தி) ஆண்டனர்.

சௌதாஸன் தனது குலகுருவுக்கு உணவு பரிமாறும்போது அதில் நரமாமிசம் இருக்கக் கண்டு சௌதாஸனை சண்டாளனாகப் போகும்படி சபித்தார். பதிலுக்கு சௌதாஸனும் வசிஷ்டரை சபிக்க கையில் ஜலம் எடுத்து மந்திரிக்க, அவனது மனைவி மதயந்தி அதை மடுக்கவே, அம்மந்திர நீரை தன் கா-லேயே விட்டுக் கொண்டான். கால் கருகிப் போயிற்று. எனவே அவனுக்கு கல்மாஷபாதன் (கரிகாலன்) எனப் பெயர் ஏற்பட்டது. (இப்பெயரையே சோழர்களும் கரிகாலன் என்று பெயர் வைத்துக் கொண்டு பெருமைப்பட்டனர்) .

சௌதாஸனுக்குப் பிறகு (59) , அஸ்மகன் (60) , மூலகன் அல்லது நகுலன் அல்லது நகுஷன் (61) (இவனது குரு கவுசாதி) , சர்வகாமன் (62) , அனரண்யன் (63) (இவன் துர்வாஸர் ஆசியில் பிறந்தான்) . விஸ்வஸஹன் (64) கட்வாங்கன் (65) இந்திரனுக்கு உதவியாகப் போரிட்டு அசுரர்களை வென்றான். இந்திரன் என்ன வரம் வேண்டும் என்று கேட்க, தனது வாழ்நாள் எவ்வளவு என்று கேட்க, இந்திரன் ஒரு முகூர்த்தம் என்று சொல்ல, அந்த ஒரு முகூர்த்தத்தில் மனதை அடக்கி யோக சித்தியால் பரமபதம் அடைந்தான்) .

கட்வாங்கனுக்குப் பிறகு, தீர்க்க பாகு (66) , வீரசேனன் (66) தீர்க்கபாகுவின் மகன் ரகுமஹாராஜன் (67) முத-யோர் ஆட்சி செய்தனர்.

(கி.மு. 8,500-இல் எற்பட்ட கடற்கோளில் சான்ம- தீவின் பகுதிகள் அழிந்து (கோமாரா அல்லது குமரிக்க கண்டம் சேரர்களின்

அரசன் அதியமான், துருக்கி தேசம் சென்று அங்கு ஒரு குகையில் தங்கி ஆட்சியை தோற்றுவித்தான். அது இன்றும் அதியமான் குகை என்றே பேசப்படுகிறது. சேரர்களின் கிளையான பொற்காரி எகிப்து தேசம் சென்று குடியேறினான்)

## 18. அனந்த குணபாண்டியன்

உக்கிர குமாரன் (66) கைலாஸம் சென்ற பிறகு, வீரபாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டான். அவனுடைய பட்ட மகிஷிகளுக்கு ஆண் மகவு இல்லை. வீரபாண்டியன் வேட்டையாடும் போது இறந்தான். அவனது பட்ட மகிஷிகள் வீரபாண்டியன் பொக்கிஷத்தை களவாடி சென்று விட்டனர். வீரபாண்டியனுக்கும் அவனது போகஸ்திரீக்கும் பிறந்த அபிஷேக பாண்டியன் (67) பட்டம் ஏற்றான். (இறைவனே அவனது பட்டாபிஷேகத்திற்கு மாணிக்க, வைர கற்கள் அளித்ததால் அவனுக்கு அபிஷேக பாண்டியன் என்னும் பெயர் ஏற்பட்டது) . விக்ரம பாண்டியன் (68) , ராஜசேகர பாண்டியன் (69) (இவனுக்காக சிவபிரான் வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடினார்) . குலோத்துங்க பாண்டியன் (70) ( இவனது மகள் கிருதாசி, அரிசகன் என்பவனை மணந்தாள்) . குலோத்துங்க பாண்டியன் (70) மகன் அனந்த குணபாண்டியன் (71) (இம்மன்னன் காலத்தில் இராம, இராவண யுத்தம் நடைபெற்றது. (கி.மு.7,000) .

பாரத தேசம் வடபுலத்தில் கோசல தேசத்தில் ரகு மஹாராஜன் (சூரிய வம்சம்) அவனுக்குப் பிறகு ) திலீபன் II (68) , அவன் மகன் அஜன் (69) முத-யோர் ஆண்டனர். அஜனை விதற்ப தேசத்து இளவரசி இந்துமதியை ஸ்வயம்வரத்தில் மணந்தாள். அவனுடைய மகன் தசரதன் (70) . தசரதன் கோசலை, கைகேயி, சுமத்திரை முத-ய இளவரசிகளை மணந்தான். பேரரசனாகி தசரத சக்ரவர்த்தியானான். தசரதனுக்கு வேறு மனைவியிடம் சாந்தை என்னும் பெண் பிறந்தாள். பிள்ளைகள் பிறக்க வேண்டி புத்ரகாமேஷ்ட்டி யாகம் செய்தான் தசரதன்.

தசரதன் பெண் சாந்தை என்பவளை க-ங்க மன்னன் ரோமபாதன் ஸ்வீகாரம் செய்து கொண்டு, விபாண்டக முனிவரின் புத்ரனுக்கு சாந்தையை மணமுடித்து வைத்தான். நிஷத தேச அரசன் நளாயணன். அவன் மகள் நளாயினி மௌத்கல்ய முனிவரை மணந்தாள். நளாயினி தனது கணவன் முத்கலனை ஒரு கூடையில் வைத்து வேசி வீட்டிற்கு எடுத்துச் செல்லும் போது சிலுவையில் அறையப்பட்ட ஆணிமாண்டவ்யர் மீது பட வ- பொறுக்காது நளாயினியை சபித்தார். ஆணிமாண்டவ்யர் மகன் விபாண்டகர். விபாண்டகர் மகன் ருஸ்யசிருங்கர். ருஸ்யசிருங்கருக்கும் சாந்தைக்கும் சதுரங்கன் பிறந்தான். அவனுக்கு யாதவக்ரீவன்



பிறந்தான். ருஸ்யசிருங்கர் தசரதனுக்கு புத்ரகாமேஷ்டியாகம் செய்தார். தசரதனுக்கு (70) , கோசலையிடம் ஸ்ரீராமனும் (71) , கேகய இளவரசி கைகேயிடம் பரதனும் (71) , மத்ர தேசத்து இளவரசி சுமித்திரையிடம் லக்ஷ்மணன் (71) மற்றும் சத்ருக்கனனும் (71) பிறந்தனர்.

ரகுமஹாராஜன் (67) , சிற்றப்பன் வீரசேனன் (66) . இவன் சிம்மள தேசத்து (இலங்கை) அரசன் சந்திரசேனனுக்கும், குணவதிக்கும் பிறந்த மந்தோதரி (சகோதரி இந்துமதி) யை காத-த்தான். மந்தோதரி தனது அழகில் கர்வம் கொண்டு எல்லா அரசகுமாரார்களையும் நிராகரித்தாள். கடைசியில் அவளை யாரும் மணக்க முன்வராமல் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டாள்.

ரகு மஹாராஜன் சகோதரன் பாரதராஜன் அவனுக்கு ரேணுகன், ரேணுகை (பெண்) பிறந்தனர். ரேணுகையைஜமதக்கினி (69) முனிவர் மணந்தார். பாரதராஜன் தங்கை ஸ்ரீமதியை (ரகுவின் மகன்) சஹஸ்ரபாகு (விருஷ்ணி குலம்) வின் சிறிய தகப்பன் சதபிந்து மணந்து கொண்டார். ரகுவின் நண்பர்கள் க-ங்க தேசாதிபதி ஹேமாங்கதன் (67) , மாகிஷ்மதி அரசன் பிரதீபன், உறையூர் சோழன் தருமன் மகன் வரசேனன் (67) , ரகுவின் பெண்களான வைஜயந்தி மற்றும் லக்ஷ்மியை வரசேன சோழன் மணந்தான். லக்ஷ்மிக்கு புண்டரிகாக்ஷன் பிறந்து சோழ இளவரசி பத்மாவதியை மணந்தான்.

சோழ வரசேனனுக்குப் பிறகு, காஞ்சி திருத்தி காடு வெட்டிய சோழன் கரிகாலன் என்னும் பிரதாபருத்திரன் (68) , காவிரி கரைகண்ட சோழன் காந்தன் (69) , காந்தனின் தாசி மகன், ககந்தன் (70) , காந்தனின் நேர் வாரிசு கம்புகண்டன் (71) முத-யோர் சோழ நாட்டை ஆண்டனர்.

சேர நாட்டை மாந்தரன் சேரல் (71) கொற்கையி-ருந்து ஆண்டு வந்தான். சேர நாட்டின் பிற பகுதிகளில் அரக்கர்கள் கரன், தூக்ஷணன் என்பவர்களும், தஞ்சை திருச்சி பகுதிகளில் கரனின் சகோதரன் திரிசரஸ் என்பவர்களும் ஆண்டனர். கரன் தூக்ஷணன் திரிசரஸ் என்ற அரக்கர்கள் விந்திய மலை அருகில் ஜனஸ்தானம் வரை ஆண்டனர். (திருவெறும்பூர் கோயில் புராணம் காண்க) .

தெலுங்கு தேசம் , ஒரிசா (முத-ய இடங்களில் சம்பரன் என்னும் அசுரனும், கிஷ்கிந்தையில் வா-யும், கருநாடக தேசத்தில் மகிஷாசுரனும், மாகிஷ்மதியில் கார்த்த வீர்யார்ஜுனனும், கிழக்குத் தொடர்ச்சி மலை (வைத்தீஸ்வரன் கோயில்) பகுதிகளில் சம்பாதி, ஜடாயு முத-ய கழுகு அரசர்களும் ஆண்டனர்.

வடபுலத்தில் சந்திர வம்ச அரசன் நகுஷனுக்குப் பிறகு (56) அவன் பிள்ளைகள் யதி, யயாதி, சம்யாதி, (சம்பூதி அல்லது சர்யாதி), ஆயாதி, கிருதி முத-ய எழுவர் ஆண்டனர். சர்யாதியின் வேள்வியை

சியவன் முனிவர் நடத்தினார். யயாதி பலம் பொருந்தியவனாக இருந்து ஆட்சியை கைப்பற்றினான்.

புரூரவசுக்குப் பிறகு (54) ஆயுசு (55) , ரம்பன் (56) , அனேனசு, ரஜி, க்ஷத்திர விருதன், ரம்பன் மகன் தபசன் (57) . கம்பீரன் (57) ஆண்டனர். சுக்கிரன் இந்திரன் மகள் ஜயந்தியை மணந்தான். சுக்கிரன் மகள் தேவயானை சுக்கிரன் விருஷபர்வன் (விடபதுமன்) என்னும் அசுர அரசனின் குருவானான். விருஷபர்வாவின் மகள் சன்மிஷ்டை. சுக்கிரன் மகள் தேவயானை, சன்மிஷ்டை மீது பொறாமை கொண்டு அவளை கிணற்றில் தள்ளினாள். சுக்கிராச்சாரியரிடம் கல்வி கற்க வந்த கசன் என்பவன் மீது தேவயானை காதலுற்றாள். கசன் தேவயானையை நிராகரி ்த்து சென்று விடவே, யயாதி தேவயானையையும் சன்மிஷ்டையையும் மணந்தான்.

யயாதி (57) யின் புதல்வர்கள் யது (58) , ஹரிவர்மன் (துர்வசு) (58) , துருகியு, அனு, பூரு என்ற பிள்ளைகளும், உபதானவி, ஹயசிரை என்னும் பெண்களும் பிறந்தனர். யயாதிக்குப் பிறகு பூரு (58) ஆட்சியைக் கைப்பற்றி கோசலை , கைகேயி என்னும் இளவரசிகளை மணந்தான். பூருவின் மகன் ஜனமேஜயன் (59) கேகய இளவரசி நந்தை என்பவளை மணந்து பிராசீனன் (60) என்பவனைப் பெற்றான். பிராசீனன் மனைவி சுத்தி. பிராசீனனுக்குப் பிறகு, வீரமன்யு (மனைவி விதற்ப இளவரசி பானுமதி) , சார்வபௌமன் (61) , (மனைவி கேகய இளவரசி சுநந்தை) , ஜெயசேனன் (62) , (மனைவி விதற்ப இளவரசி சுபத்திரை) , நயுதன் (63) (மனைவி சுதா) , குரோதனன் (64) (மனைவி கரந்துவை) , தேவாபி (65) , உருசகன் (60) (மனைவி தேவ்யை) , அரிசகன் (67) , பத் ்ராவசு (68) , ரௌத்திராஸ்வன் (69) , பத்திராஸ்வன் (70) (மனைவி மகத இளவரசி சுபாலை) , அரிசகன் (70) (மனைவி பாண்டிய இளவரசி கிருதாசி ) என்பவர்கள் ஆண்டனர்.

(நயுதன் (63) அல்லது சுதர்சனன் மித்ரசேனை என்பவளை மணந்து ஹர பகவானைப் பெற்றாள்-18வது ஜைன தீர்த்தங்கரர்)

யயாதிக்கும் தேவயானைக்கும், யது, துர்வசு (58) பிறந்தனர். யதுவுக்குப் பிறகு யாதவ குலத்தில் சஹஸ்ரஜித் (51) (சகோதரர்கள் குரோஷ்ட்டு, நளன், ரகு, அஞ்சிகன்) , சதஜித் (60) ஹரிவர்மன் மனைவி ஹேஹய இளவரசி லக்ஷ்மி) , ஏகவீரன் (61) (மனைவி ஏகாவளி - அம்பாள் உபாசகி) , ஹைஹயன் (62) (சகோதரர்கள் வேணுஹயன், உத்தரஹயன், தர்மநேத்திரன் (63) , மகிஷ்மான் (64) , சஹஸ்ரஜித் (65) , மகிஷ்மான் (66) , (அனுபம தேசம்) , பக்தசிரேணியன் என்னும் ப்ரதீபன் (67) , உத்தமன் (68) , தனகன் (69) , கிருதவீர்யன் (70) , கார்த்த வீர்ய அர்ஜுனன் (71) (மாகிஷ்மதி மஹேஸ்வர் அரசன் - முசுகுந்தனிடமிருந்து கைப்பற்றிய நாடு) .



கார்த்த வீர்யார்ஜுனன் குரு தத்தாத்ரேயர் (அத்திகிரி மற்றும் அனசூயைக்குப் பிறந்தவர் - மும்மூர்த்திகள் அம்சம்) மற்றும் ஜமதக்கினி முனிவர். ஜமதக்கினி முனிவர், சவுனகன் வம்சத்தில் உதித்தவர். பிருகு முனிவர் வழியில் சவுனகன் (43) ( , குருகன் (44) , நந்தி கோத்திரன் (45) (காப்பிய கோத்ரன்) , ஔரவன் (46) (மனைவி சுமேதை) , (சகரன் காலம்) . சமி பெண் + மந்தரன் (47) (48 முதல் 56 வரை பெயர்கள் கிடைக்கவில்லை.) , (சவுனகன் (57) (சர்யாதி என்னும் சந்திரவம்ச அரசன் சுகன்யாவை மணந்தான்) . ஆனந்தன்(58) , குரு (59), (மனைவி பிரமத்வரா) , கவி (68) , சவுனகன் (61) இந் ்திரனை தோற்கடித்தவன், 4 வர்ணங்களை தோற்றுவித்தவன், கங்கையில் மூழ்கி தவமிருந்த போது, நகுஷ மஹாராஜனால் காப்பாற்றப்பட்டான்) . ருசிகன் (62) , ஔரவன் (63) பிருகு (64) , சதபிந்து (65) . சனகன், ருசிகன் (66) , (மகிஷ்மானின் குரு) , கவி (67) , நந்திவர்மன் (68) , ஔரவன் (69) (மனைவி மனுகன்யை) , ருசிகன் (70) (மனைவி சத்யவதி காசிராஜன் மகள்) , ஜமதக்கினி (71) (கார்த்தவீர்யன் குரு ) (மனைவி ரேணுகை) (சகோதரன் உரூரவன் அவன் மகன் பகன்) .

(ஜமதக்கினிக்கும் ரேணுகைக்கும், ருமண்வான், ஸுஷேனன், வசு, விஸ்வாசு, பரசுராமன், புலத்தியன் (த்ருதூமாக்கினி -ஐந்திரம் நிறைந்த காப்பிய கோத்திர அந்தணர் - அகத்தியரின் மாணவர் - தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியன் - இவர் பொதிய மலையில் அகத்தியர் என்னும் முனிவரிடம் தமிழ் பயின்றவர்) .

சவுனகனுக்குப் பிறந்த ஆனர்த்தன் (58) கடல் நடுவேயுள்ள தீவைக் கைப்பற்றி (பிலக்ஷத் தீவுகள்) ஆட்சி செய்தான். தலைநகரம் குசஸ்த-. இவன் மகன் ருரு. இவன் பிரம்தவரா என்பவளைக் காத-த்தான். பிரமத்வராவை பாம்பு கடிக்க, ருரு தன் ஆயுளில் பாதியை கொடுத்து உயிர்ப்பித்தான். (விசுவாசுக்கும் மேனகைக்கும் பிறந்தவள் ப்ரமத்வரா) . ருரு வழியில் ரோசமானன் (59) , ரேவதன் (60) , ரைவதன் (61) இதன் பிறகு 99 பேர் ஆண்டனர். ரைவதன் (61) சகோதரியை பாண்டிய இளவரசன் இந்திரத்யும்னன் மணந்தான். (இந்திரத்துய்மன் தன் மகள் ரேவதியுடன் பிரமலோகம் சென்று பூமிக்கு பலராமன் காலத்தில் திரும்பினான். பலராமன் ரேவதியை மணந்தார்).

அனந்த குணபாண்டியன் (71) காலத்தில் காசியை ஆண்டவன் ஸ்வவிபு (71) அவன் மகன் புரூரவஸ், ஆயுசு (55) , க்ஷத்திர விருத்தன் (56) , சுகோத்திரன் (57) , காசியன் (58) , ராஷ்ட்ரன் (59) , தீர்க்த தமசு (60) , தன்வந்திரி (61) , கேதுமான் (62) , திவோதாஸ் (பீமரதன்) (63) , பீரதர்த்தனன் (64) , வத்ஸன் (65) , வத்ஸபூமி, அனர்க்கன் (66) , சந்நிதி (67) , சுநீதன் (68) , சுகேது (69) , விபு (70) வழியில் வந்தவன்.

அனந்த குணபாண்டியன் (71) காலத்தில் கௌசிகன் என்னும் அரசன் வசிட்டருடன் போரிட்டு காமதேனுவை கவர எண்ணினான். அவனுடைய வித்தை யாவும் வசிட்டருடைய யோக தண்டத்தின் முன் தோற்று விட்டது. கௌசிகன் தவம் செய்து பிரம்மரிஷி விஸ்வாமித்ரன் என பட்டம் பெற்றான். இந்த விஸ்வாமித்திர முனிவரே இராமனுக்கும் சீதைக்கும் மணமுடித்தார். கௌசிகன் சந்திர வம்ச அரசர்களுள் குருவானவர். சந்திர வம்சத்தில் புரூரவஸ் ஊர்வசிக்குப் பிறந்த அமாவசு (55) , பூமன் (56) , காஞ்சனன் (57) , சுகோத்திரன் (58) , ஜன்னு (59) , சுமந்து (60) , அசுகன் (61) , பலகாஸ்வன் (62) , குசிகன் (63) (மனைவி விதேக இளவரசி - மகோதய பட்டணம்) . குசாம்பன் (64) , (கௌசாம்பி பட்டணம்) , குசநாபன் (65) , அதூர்த்த ராஜன் (66) (தர்மாரண்ய பட்டணம்) வசு (67) , குசநாபன் (68) (மனைவி கிருதாசி) , காதி (69) (இவன் பெண்ணை வைசா- அரசன் சோமதத்தன் மகன் பிரமதத்தன் மணந்தான்) . காதியின் மகன் கௌசிகன் (70) (தங்கை கௌசிகி, அல்லது சத்யவதி (ருசிகன் மனைவி) மற்றும் அநேகர்) ருசிகன் காது மட்டும் பச்சையாக உள்ள 1000 குதிரைகளை வரதட்சிணையாக கொடுத்து சத்யவதியை மணந்தான்.

அனந்த குணபாண்டியன் காலத்தில் முனிசூவ்ரதன் என்னும் 20-வது ஜைன தீர்த்தங்கரர் வாழ்ந்தார். இவர் ஹரிவம்சத்து அரசன் (மகதம்) சுமித்திரனுக்கும் பத்மைக்கும் பிறந்தவர்.

அனந்த குணபாண்டியன் காலத்தில் மருத்தன் என்னும் யாதவ அரசன் இராவணனுடன் போரிட்டான். மருத்தன் என்னும் யாதவ அரசன் யயாதி (57) , யதி (58) , குரோஷ்ட்டு (59) , சினிவரன் (60) சுவஹா (61) , விசங்கு (62) , சித்ராதன் (63) , சசபிந்து (64) (சைத்ராதி, பிரத்யக்ஷு , பிரதுசர்மன், பார்கவன்) , பிரது (65) , நயக்கியன் (66) சுயஞ்ஞன் (67) , உசனன் (68) , (யௌவனாஸ்வன், ஹர்யஸ்வன் இவன் மனைவி மதுமதி) , திதீக்ஷு (69) , மித்ரகன் (70) வழியில் வந்தவன் (மருத்தன் -71) .

ருஸ்யசிருங்கர் என்பவர் அனந்த குணபாண்டியன் காலத்தில் வாழ்ந்த முனிவர். இவரே தசரத சக்ரவர்த்திக்கு புத்ரகாமேஷ்டி யாகம் செய்து வைத்தார். ருஸ்யசிருங்கர், க-ங்க அரசன் ரோமபாதன் வளர்ப்பு மகள் சாந்தையின் கணவர். இந்த அரசன் அனுவம்சத்தில் உதித்தவன். யயாதி (57) என்பவனுக்கும் சன்மிஷ்டைக்கும் பிறந்தவன் அனு (58) , (துருகியு) சபாநரன் (59) , சஞ்சயன் (60) , உசீநாசு (61). நிருகன் (62) , திதீக்ஷு (63) , ப- (64) , (வைதற்ப இளவரசி சுதேக்ஷினைமனைவி) ததிவாகனன் (65) , விந்தன் (66) , சித்ராதன்(67)



சத்யாதனன் (68) , சத்யரதன் (69) , அவன் மகனே ரோமபாதன் (க-ங்க மன்னன்) .

அனந்த குணபாண்டியன் காலத்தில் கிருதன் என்னும் அரசன் ஆந்திர தேச கடற்கரைப் பகுதியில் ஆண்டான். இவன் துர்வசு வழியில் வந்தவன். யயாதிக்கும் தேவயானைக்கும் பிறந்தவன் துர்வசு (ஹரிவர்மன்) (58) , பானு (59) , திரைசனி (60) , காந்தன் (காந்தமன்) (61) , மருத்தன் (61) , துஷ்யந்தன் (பௌரவன் (63) , வருதன் (64) , அண்டிரன் (ஆந்திரன்) (65) , கைதுரு (66) , பப்புரு வாகனன் , அமரன், சேதுபாண்டியன், (கேரளன்) , சாத்தன் (சேரன்) (67) , காந்தாரன் (68) , தருமன் (69) , தருமன் மகன் கிருதன் என்பவன்.

அனந்த குண பாண்டியன் காலத்தில் சிங்களத் தீவிற்குத் தெற்கே உள்ள இலங்கைத் தீவில் மன்னன் (குபேரன்) அமிதவேகன் என்பவன். இவன் இராவணன் சகோதரன். அமிதவேகனை இலங்கையை விட்டு விரட்டி இராவணன் அங்கு ஆட்சி செய்தான். இராவணன் பிரமன் வழியில் வந்த யக்ஞோபவீதன் (56) , தனன் (57) , திவாகரன் (58) , வித்யுத்து (59) , ஆதன் (60) , வியாக்ர தனன் (61) , கற்பன் (62) , ரதன் (63) , பவுருதேயன் (64) , பிரகேதி (65) , கேதி (66) (மனைவி பயை காலனின் தங்கை) , வித்யுத்சேனன் (67) (மனைவி காலங்கடை) , சுகேசன் (68) , (மனைவி தேவவதி, கிராமணி என்னும் கந்தர்வ அரசன் மகன்) . மா-யவான் (69) , சுமா- (69) , மா- (69) , விகடன் (70) (விகடன் மகள் கைகசி. இவள் மகனே இராவணன்) .

அனந்த குணபாண்டியன் காலத்தில் வைசா- என்னும் தேசத்தில் ஹேமசந்திரன் என்பவன் ஆண்டான். வைவஸ்தன் (3) , அம்பரீஷன் (4) , நாபாகன் (5) , பலந்தனன் (6) , வத்ஸப்பிரீதி (7) , பிராம்சு (8) , பிரமிதி (9) , அக்னிமித்திரன் (10) , சக்ஷுரஷன் (11) , விம்சகன் (12) , கனிநேத்ரன் (13) , அதிவிபூதி (14) , இதற்குப் பின் ப- என்னும் அசுரன் வைசா-யை கைப்பற்றினான். 43 கொடுங்கோல் அசுரர்கள் வைசா-யை ஆண்டனர். பின்பு கனிநேத்ரன் (59) , கரந்தமன் (60) , மருத்து மஹாராஜன் (60) , (மருத்து மஹாராஜன் செய்த வேள்வியை பிரஹஸ்பதி என்னும் தேவகுருவின் தம்பி ஸம்வர்த்தனர் நடத்தினர்) . பின்பு நரிஷ்யந்தன் (60) , தமன் (61) , ராஜ்யவர்த்தனன் (62) , சுவிருத்தி (63) , கேவலன் (64) , சுதிருதி (65) , பந்துமான் (66) , வேகவான் (67) , புதன் (68) , திருணபிந்து (69) இவன் மகனே ஹேமசந்திரன்.

அனந்த குணபாண்டியன் காலத்தில் ஸ்ரீராமன், இராவணனுடன் யுத்தம் செய்ய இலங்கை வந்தான். ஸ்ரீராமன் வரலாறு அடுத்த அத்யாயத்தில் கூறப்படுகிறது.

## 19. ஸ்ரீ ராமன்

வடபுலத்தில் மநு என்னும் திராவிட அரசன் அயோத்தி என்னும் பட்டணத்தை அமைத்து ஆட்சியைத் தொடங்கினான். இவன் வழியில் இக்ஷுபாகு, மாந்தாதா, சகரன், ருதுபர்ணன், ரகு, தசரதன் முத-யோர் பிரசித்தி பெற்ற அரசர்கள்.

தசரத (70) சக்ரவர்த்தியின் மகன் ஸ்ரீராமன். இக்காலத்தில் வால்மீகி முனிவர் இராமாயணம் என்னும் ஆதிகாவியத்தைப் படைத்தார். இராமாயண காவியத்தின்படி வால்மீகி இராமாயணத்தில் ஸ்ரீராமன் பிறந்த நேரத்தில் வானில் நக்ஷத்திரங்கள், கிரஹங்கள் எவ்வாறு இருந்தன என கூறப்பட்டுள்ளது. அதன்படி ஜோதிட ஆராய்ச்சியாளர்கள் ஸ்ரீராமனுடைய ஜாதகத்தை கீழ்க்கண்டவாறு கணித்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புதன் | | கேது |
| | இராசி | | ல சந், குரு |
| செவ் | | | |
| ராகு | | சனி | |

ஹேவிளம்பி □, சித்திரை □, உத்தராயணம் 11ஆம் தேதி, சுக்லபக்ஷ நவமி, புனர்வசு நக்ஷத்திரம், புதன்கிழமை, பகல் 11 நாழிகை 59 வினாடி (உத்திரப்பிரதேசம், கோசல நாடு) 21-4-7013கி.மு

வைவஸ்ஸுதன் (வ.எண்.3) என்னும் மன்னன் முதல் ஸ்ரீராமன் (வ.எண்.71) வரை 68 தலைமுறை சூர்யவம்ச அரசர்கள் அயோத்தியில் ஆட்சி செய்துள்ளனர். ஒரு அரசனுக்கு 100 ஆண்டுகள் ஆட்சி செய்தனர் என்று கணக்கிட்டால், வைவஸ்ஸுதனுக்கு (13,900 B.C.) பிறகு 68 100 = 6800 ஆண்டுகள் கழித்து ஸ்ரீராமன் அயோத்தியில் ஆட்சி செய்தான் என்று கொள்ளலாகும். அதாவது 13,900 B.C.- 6800 = 7100 B.C. யில் ஸ்ரீராமன் வாழ்ந்திருக்கலாம்.

கி.பி.2002-இல் தமிழ் ஆண்டு விஷு வருஷம் 45 ஆண்டுகளுக்கு முன்பு ஹே விளம்பி வருஷம் (2002-45=1957 A.D. அதாவது கி.பி.1957-இல் தமிழ் ஆண்டுகள் மொத்தம் 60 வருஷங்கள் 1 சுழற்சி. 151 சுழற்சிகளுக்கு 9060 வருடத்தில் விஷு □ 9060-45 =9015 B.C. -2002 A.D. = 7013 B.C. யில் ஹேவிளம்பி வருஷம் என்று கொள்ளலாம். இந்தக் கணக்கின்படி 7013 B.C. யில் ஸ்ரீராமன் பிறப்பு.

| | |
|---|---|
| ஸ்ரீராமன் பிறப்பு | 21-4-7013 B.C. |
| ஸ்ரீராமன் வனவாசம் | 21-4- 6988 B.C. |



| | |
|---|---|
| கர, தூஷண வதம் | 14-9-6976 B.C |
| இராம இராவண யுத்தம் | 4-12-6976 B.C |
| ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் | 6977 B.C |
| ஸ்ரீராமன் பரமபதம் 62 வயது | 6951 B.C |

இராம, இராவண யுத்தத்தின்போது, " மஹாகோர" என்னும் வால் நக்ஷத்திரம் மூல நக்ஷத்திரம் அருகில் இலங்கை வானில் தென்பட்டது. (யுத்தகாண்டம் காண்க) என்று இராமாயணம் கூறுகிறது. இது 75.5 வருடங்களுக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றும் " ஹீ-யோஸ்" தூமகேது என்று கூறலாகும் .

(சீதை பிறப்பு - வைகாசி மாதம், சுக்லபக்ஷம், நவமி, மிதிலை)

இராவண ஜாதகம், ஆஞ்சநேயர் ஜாதகம் கீழ்க்கண்டவாறு கணிக்கப்பட்டுள்ளது.

இராவணன் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| சந்தி புதன் | கேது சூரியன் சுக்கிரன் | | |
| சனி | இராசி | | லக் மாந்தி |
| செவ் | | | |
| | | ராகு குரு | |

ஆஞ்சநேயர் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| கேது | லக் செவ் | | |
| | இராசி | | |
| சனி | | | குரு |
| சந்தி | | சூரியன் | |

**இராவணனின் தாய் வழி**

சுகேசன் (68) என்னும் அரக்கன் தேவவதி என்பவனை மணந்து, மா-யவான், சுமா-, மா- (69) என்பவர்களைப் பெற்றான். இவர்கள் இராவணனது மாமன்மார்கள்.

மா-யவானுக்கும் (69) சுந்தரி என்பவளுக்கும் வஜ்ரமுஷ்டி, யக்ஞகோபன், உன்மத்தன், விருபாக்ஷன், ஸப்தக்னன், மககன், துன்முகன் என்னும் பிள்ளைகளும், மா-னி என்னும் பெண்ணும் இருந்தனர்.

சுமா- என்பவனுக்கும் கேதுமதி என்பவனுக்கும் விகடன், பிரஹஸ்த்தன், காலகார்முகன், பாலகர்ணன், அகம்பனன், தண்டன், சங்கிருதி, தூம்ராக்ஷன், ரைபாக்ஸுவன் என்னும் பிள்ளைகளும் கைகசி, கும்பீனசி, புஷ்போற்கடை என்னும் பெண்களும் இருந்தனர்.

**இராவணின் தகப்பன் வழி**

பிரம்மாவின் புதல்வர்கள் வழியில் விருமி (66), ஹைஸ்ரகீவன்

(67) , சதக்கிரீவன் (68) , புலஸ்தியன் என்னும் பஞ்சாசத்கிரீவன் (69) , விஸ்ரவஸ் (70) , வைசா- அரசன் திருணபிந்து (69) (அத்யாயம் 17 -அனந்தகுணபாண்டியன் காண்க) . இவன் அலம்புசை என்ற அரக்கர் குலமங்கையை மணந்தான். இவனுடைய மகள் இளிபினி. இவளை புலஸ்தியர் மணந்து விஸ்வரவஸ் என்பவனைப் பெற்றான். (திருணபிந்து - திருவாரூர் அருகே உள்ள திருக்கைச் சின்னம் - புராணம் காண்க) .

விஸ்ரவஸ் (70) என்பவள் பாரத்வாஜரின் மகள் தேவவாரிணியை மணந்து வைஸ்ரவணன் (குபேரன்) மற்றும் தேவநிதி என்னும் பெண்ணையும் பெற்றான். வைஸ்ரவணன் மகன் நளகூபரன் (மனைவி ரம்பை) . நளகூபரனின் மனைவியை இராவணன் கற்பழித்தான்.

விஸ்வரஸ் என்பவர் மேலும் சுமா-யின் பெண்ணான கைகசி (மேகஸ்ரீ) என்பவளை மணந்து இராவணன், கும்பகர்ணன் என்பவர்களையும் கிரௌஞ்சை என்னும் பெண்ணையும் பெற்றான்.

விஸ்வரஸ் என்பவன் சுமா-யின் பெண் புஷ்போற்கடை (பாகை) என்பவள் கரன் (71) (கேரளம் - திருகற்குடி கோயில் புராணம் காண்க) . மகோதரன், பிரகதத்தன் என்னும் புதல்வர்களையும் புஷ்போற்காதி, சூர்ப்பநகை முத-ய பெண்களையும் பெற்றான்.

விஸ்வரஸ் என்பவர் மா-யவான் பெண்ணான மா-னி என்பவளை மணந்து விபீஷணன், திரிசிரஸ் (திருச்சிராப்பள்ளி கோயில் புராணம் காண்க) . தூஷணன் (திருவெறும்பூர்-திருச்சி அருகில்-கோயில் புராணம் காண்க) . வித்யுத்ஜித்ஹ்வன் (சூர்ப்பநகையின் கணவன்) . சிவூகன், கடஜிஹ்வன் (மனைவி கிரௌஞ்சை) மற்றும் ரம்யை என்னும் பெண்ணையும் பெற்றான்.

இராவணனின் மனைவி மந்தோதரி (மயனுக்கும் ஹேமா என்பவளுக்கும் பிறந்தவள். வா-யின் மனைவி தாரையின் சகோதரி. மந்தோதரியின் பிள்ளைகள் இந்திரஜித் (மேகநாதன், நாக இளவரசி சுலோசனையின் கணவன் மற்றும் அக்ஷ குமாரன் என்னும் இருவர்.

இராவணனின் மற்றொரு மனைவி தான்யமா-னிக்கு, திரிசிரன், அதிகாயன், நராந்தகன், தேவாந்தகன் முத-யோர் பிறந்தனர்.

கும்பகர்ணனின் மனைவி விருத்திரஜ்வாலை (அசுர அரசன் விரோசனை மகள்) மற்றும் புஷ்கரிணி. விருத்திர ஜ்வாலைக்கு மூலகன், கும்பகன், நிகும்பன், சூரன் முத-யோர் பிறந்தனர். புஷ்கரிணிக்கு வீமன் என்பவனும் கற்கடிகையும் (விராடன் மனைவி) பிறந்தனர். பீமன், காமரூபதேசத்தை வென்று அத்தேச அரசன் பிரியதர்மன் மனைவி தக்ஷிணையை கற்பழிக்க முயலும்போது சிவ



பெருமானால் கொல்லப்பட்டான்.

விபீஷணனின் மனைவி சாமை (கந்தர்வ அரசன் சைஹுஷன் மகள்) என்பவளுக்கு பிறந்தவள் திரிஜடை(மகள்) .

இராவணனின் தங்கை சூர்ப்பநகையின் முதல் கணவன் வித்யுத்ஜிஹ்வன் (இராவணனால் கொல்லப்பட்டான்) . இரண்டாவது கணவன் காலகேயன். இவன் மகன் சாம்பன்.

மயன் என்னும் அரசனுக்கு மாயாவி, துந்துபி (இருவரும் வா-யினால் கொல்லப்பட்டனர்) என்னும் பிள்ளைகளும் மந்தோதரி (இராவணனின் மனைவி) மற்றும் தாரை (வா-யின் மனைவி) என்ற பெண்களும் பிறந்தனர்.

கும்பகர்ணன் மகன் மூலகனை சீதையின் தாதி சண்டி கொன்றாள். நிகும்பன் மகன் பௌண்டரகன் (அவனை விருஷ்ணிகுல அரசன் சூரன் கொன்றான்.) மற்றும் மதுமதி என்பவளையும் பெற்றாள்.

இராவணன் நண்பன் சுகேது. இவனது மகள் தாடகை (ஸுந்தனின் மனைவி) என்பவளுக்கு, மாரீசன், சுபாகு, காலகேது முத-யவர்கள் பிறந்தனர்.

(தென்புலத்தில் சம்பராசுரன் பெரும்படையுடன் வந்து ஆந்திரதேசம் முழுதும் பிடித்துக் கொண்டான். வானவர்களும், தசரத சக்ரவர்த்தியும் இப்போரில் ஈடுபட்டனர். வானவர்களுக்கு கிஷ்கிந்தையைச் சுற்றி வாழும் ஆதிகுடியினர் பெரும் உதவி செய்தனர். வானவர்கள் ஆதிவாசிகளின் பெண்களை மணந்து கொண்டனர். வானவர்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் (வானவர்-நரர் சேர்ந்த) வானரர் சந்ததி ஏற்பட்டது.

ஆதிவாசியான வானர அரசன் கேசரி என்பவனின் மனைவி அஞ்சனை. இவள் மருதன் (வாயு) என்னும் வானவனுடன் கூடி மாருதியை பெற்றாள். இந்திரன் என்னும் வானவர் தலைவன், விருஷபர்வாவின் மனைவி ரிக்ஷரஜஸ் என்பவளுடன் கூடி வா-என்பவனைப் பெற்றான். ரிக்ஷரஜஸ் மேலும் சூரியன் என்னும் வானவனுடக் கூடி சுக்ரிவனைப் பெற்றான். வருணன் என்னும் வானவன் குந்தி என்பவளைக் கூடி ஸுஷேனைப் பெற்றான். விஸ்வகர்மா என்னும் வானவன் ஆதிமந்தி என்பவளைக் கூடி நளன் என்பவனைப் பெற்றான். அக்னிதேவனுக்கும் ஆதிமந்திக்கும் நீலன் என்னும் மகன் பிறந்தான். தேவகுருவான பிருகஸ்பதிக்கும் ஒரு ஆதிவாசி பெண்ணுக்கும் தாரன் என்பவன் பிறந்தான். ஆதிவசாசிகளின் தலைவன் ஸுநாபன், அநேக வானவர் படைத்தளபதிகளுக்கு அநேக ஆதிவாசி பெண்களை மணமுடித்து வைத்தான். அங்ஙனம் ஆதிவாசிகளின் தலைவன் தூம்ரன் என்னும் ஜாம்பவான் தனது குடிமக்களில் பல ஆதிவாசி பெண்கள் வானவ

படைவீரர்களுக்கு மணமுடித்து வைத்தான். இவ்வழியில் பிறந்தவர்கள் மைந்தன், துவிதன், ரம்பன், பனஸன், குமுதன், சரபன், சதவ-, கஜன், விந்தன், கவயன், கவாக்ஷன், தூம்ரன், ஜ்யோதிமுகன், சுமுகன், பிரஜஸ்கன், ஸஞ்ஜதன், திரிமுகன், ததிமுகன், இந்திர ஜானு முத-ய வீரர்கள் பிறந்தனர். மார்ஜாரமுகி என்னும் கேசரியின் மனைவி நிருதிதேவனை மணந்து பைசாசனைப் பெற்றாள். இவ்வாறு பிறந்தவர்களை வானரர்கள் என்று பாரத அரசர்கள் அழைத்தனர். இவர்கள் சம்பராசுரனையும் இதர அரசுப் படைகளையும் விரட்டி ஆந்திர தேசம் மற்றும் தமிழ்நாட்டின் பெரும்பகுதிகளைக் கைப்பற்றி கிஷ்கிந்தையி-ருந்து ஆட்சி செய்தனர்.

(காவிரியின் இருகரைகளிலும் தஞ்சை மாவட்டத்தில் வாலீஸ்வரம், குரங்காடுதுறை முத-ய சிவன் கோயில் புராணம் காண்க.)

**இராமாயணக் கதை**

அயோத்தி அரசன் தசரத சக்ரவர்த்தி புத்திர காமேஷ்ட்டி யாகம் செய்து அதன் பலனாக தனது பட்டமகிஷிகள் கோசலையிடம் ராமனையும், கைகேயிடம் பரதனையும், சுமித்திரையிடம் லக்ஷ்மணன் மற்றும் சத்துருக்கினனைப் பெற்றான். ராமன் முத-யவர்கள் வசிஷ்டர் என்னும் குல குருவிடம் வித்தைகள் பயின்றனர். தசரதன் அவைக்கு விஸ்வாமித்திர முனிவன் வந்து தனது வேள்வியைக் காக்க ராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்துச் சென்றார். போகும் வழியில் ராமன் தாடகையைக் கொன்றார். விஸ்வாமித்திரர் வேள்வியைத் தடுக்க வந்த சுபாகுவைக் கொன்று மாரீசனை விரட்டினார். பின்பு விஸ்வாமித்திரருடன் மிதிலை நகர் சென்று சீதையின் ஸ்வயம்வரத்தில் வில்லை ஒடித்து சீதையை மணந்து கொண்டார்.

சீதை என்பவள் மிதிலை அரசன் சீரத்வஜன் (ஜனகன்) என்பவனின் வளர்ப்பு மகள். சீரத்வஜன் என்னும் அரசன் சூர்ய சாவர்ணி குலத்தில் வந்தவன். மிதிலையை ஆண்ட அசுர அரசர்களை விரட்டி மீண்டும் சூர்யசாவாணி (59) மிதிலையைக் கைப்பற்றி ஆண்டான். இவன் வழியில் விரஜன் (60) , சர்வரீவன், நிர்மோகன், தக்ஷசாவர்ணி (61) , திருதகேது (62) , (தீப்தகேது, பஞ்சஹஸ்தன், நிராமயன், பிரது சிவன்) , பிரும்ம சாவர்ணி என்னும் ரவுச்சியன் (63) சுக்ஷேத்திரன் (64) (உத்தமன்யு, புரிஷேணன் முத-ய 10 பேர்) , தர்மசாவர்ணி (65) , (நந்திசேனன், கும்பன்) , ரதத்துவஜன் (61) , மேரு சாவர்ணி (70) (ஸ்வயம்பிரபையின் தந்தை) , சீரத்துஜன், தர்மத்வஜன், குசத்வஜன் மற்றும் திமித்வஜன் (70) முத-யவர்கள் மிதிலை அரசர்கள்.

சீரத்துவஜன் (ஜனகன்) , மனைவி சுநயனா (பிரபாவதி)



சீரத்வஜன் வளர்ப்பு மகள் சீதை (மற்றும் பௌமன்) , தர்மத்வஜன் , மாதவி என்னும் இளவரசியை மணந்து துளசியை பெற்றான் (சங்கசூடன் மனைவி) . சீரத்வஜனுக்கும் சுநயனாவுக்கும் பிறந்தவள் ஊர்மிளை. தர்மத்வஜன், மோகினி என்னும் நாக கன்னிகையை மணந்து இலக்குமி என்பவளைப் பெற்றான். குசத்வஜன், பானுமதி என்னும் இளவரசியை மணந்து பானுமான் என்னும் மகனையும் வேதவதி (மணிமதி) , மாண்டவி, சுருதகீர்த்தி என்னும் பெண்களைப் பெற்றான். குசத்துஜன், தம்பன் என்னும் அசுரனால் கொல்லப்பட்டான்.

சீரத்வஜனின் (மனைவி சுநயனா) வளர்ப்பு மகன் சீதையை இராமனும், ஊர்மிளையை லக்ஷ்மணனும், குசத்வஜன் மகளான மாண்டவியை பரதனும், சுருதகீர்த்தி என்பவளை சத்ருக்கினனும் மணந்தனர். மிதிலையில் வாழ்ந்த சரத்வான் (கௌதம வம்சம்) - இன் மனைவி அக-கைக்கும் பிறந்த சதானந்தர் (71) இத்திருமணங்களை நடத்தி வைத்தார். வேதவதி இராவணனால் பிடிக்கப்பட்டு பிறகு இராவணனை சபித்து தீயில் விழுந்து மாண்டான்.

சீரத்வஜன் சபையில் யாக்ஞவல்கீயர், அஷ்டகோண மகரிஷி (ஏகபாதன் மற்றும் சுகோதைக்கும் பிறந்தவர்) முத-ய யோகிகள் இருந்தனர்.

மிதிலையில் திருமணம் நடந்தேறிய பிறகு அயோத்தி திரும்பி வந்த சில வருடங்களில் இராமனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய முடிவு எடுத்தான் தசரதன். ஆனால் கைகேயின் (மந்தரை சூழ்ச்சி) வார்த்தை கேட்டு ராமன், சீதை, லக்ஷமணன் ஆகிய மூவரும் 14 வருடம் தண்டகாரண்ய வனவாசம் சென்றனர். இராமனது பிரிவால் தசரதன் உயிரிழந்தான்.

ஸ்ரீராமர், சீதை, லக்ஷ்மணன் முத-யோர் மரவுரி தரித்து வனம்போக கங்கைக் கரை குகன் (வேட அரசன்) நட்பு அடைந்து, கங்கையைக் கடந்து பரத்வாஜ முனிவரை தரிசித்து, சித்ர கூடத்தில் தங்கினார்கள். ஸ்ரீராமன் வனவாசம் சென்றதால் தசரதர் உயிர்விட குலகுரு வசிட்டன், பரதனை அழைத்து ஈமச்சடங்குகள் செய்யச் சொல்ல, பரதனும் தன் தாயான கைகேயி தூஷித்து, பித்ரு கடன்கள் முடித்து, ஜாபா- முத-ய குருமார்கள், மந்திரி பிரதானிகளுடன் சித்திர கூடம் வந்து ஸ்ரீராமனை வணங்கி, அயோத்தி வரும்படி வேண்ட, ஸ்ரீராமன் அதை மறுத்திட, ஸ்ரீராமன் பாதுகையைப் பெற்று, நந்திக் கிராமத்தில் தங்கி தானும் மரவுரி தரித்து, பாதுகைக்கு பட்டாபிஷேகம் செய்து ஆட்சி செய்தான்.

ஸ்ரீராமன், சீதை, லக்ஷ்மணர் மூவரும் தண்டகாரண்யம் செல்ல, அங்கு விராதனை வதைத்து அத்திரிரிஷி (மனைவி அனசூயா) , சரபங்கர், சுதீக்ஷணர், அகஸ்த்தியர் முத-ய முனிவர்கள்

I1st Proof



ஆஸ்ரமங்களில் தங்கி, பஞ்சவடி என்னும் இடத்தில் ஆஸ்ரமம் அமைத்து தங்கினர். அங்கு இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை வந்து, சீதையை தூக்கிக் கொண்டு போக முயற்சிக்கையில், லக்ஷ்மணர் அவளது மூக்கையும், ஸ்தானங்களைளயும் அறுத்து விரட்டினர். சூர்ப்பநகை அரக்க அரசர்களான கரன், தூக்ஷணன், திரிசிரஸ் இவர்களிடம் முறையிட அவர்கள் மூவரும் படையுடன் வந்து ஸ்ரீராமனை எதிர்க்க அவர்களையும் அரக்க சேனையையும் ஸ்ரீராமன் அழித்தார்.

இதன் பிறகு சூர்ப்பநகை இலங்கை சென்று இராவணனிடம் முறையிட, இராவணன் ஏவலால் மாரீசன் பொன்மானாக வந்தும், இராவணன் சந்நியாசியாகவும் பஞ்சவடி வந்து, சீதையின் வேண்டுகோளால் ஸ்ரீராமன் பொய்மானைத் துரத்துகையில், மான் மீது அம்பு விழ, மாரீசன் ஹே சீதா, லக்ஷ்மணா என்று உயிர் விட சீதை பயந்து லக்ஷ்மணனைப் போய் பார்த்துவர சொல்ல, அச்சமயத்தில் இராவண சந்யாசி, சீதையைத் தூக்கிக் கொண்டு புஷ்பக விமானத்தில் இலங்கை நோக்கிப் பறந்தான். புஷ்பக விமானம் பறக்கும் வழியில் ஜடாயு என்னும் கழுகு அந்த விமானத்ததைத் தாக்க இராவணன் அதைக் கொன்று, சீதையை இலங்கையில் அசோக வனத்தில் சிறை வைத்தான். ஸ்ரீராமன் சீதையைத் தேடி புறப்பட்டு வழியில் ஜடாயுக்கு ஈமச்சடங்குகள் செய்து, கவந்தன் என்னும் அரக்கனைக் கொன்று, பம்பாசரஸ் வந்து, மதங்க முனிவன் ஆஸ்ரமத்தில் இருந்த சபரி என்னும் கிழவிக்கு மோக்ஷம் அளித்து ருஸ்யமுகம் வந்து, ஆஞ்சனேயரைக் கண்டு அவர் மூலம் சுக்கிரீவனுடன் நட்பு கொண்டு, அவன் அண்ணன் வா-யைக் கொன்று, கிஷ்கிந்தையில் சுக்ரீவனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்தும் வா-யின் மகன் அங்கதனுக்கு இளவரசன் பட்டாபிஷேகம் செய்தும், நான்கு திசைகளிலும் வானர வீரர்களை அனுப்பி சீதையைத் தேடச் சொல்ல, (தெற்கு திசையில் ஆஞ்சநேயரை) அனுப்பினான் சுக்ரீவன்.

(பொதிய மலையில் அகத்தியருடைய தமிழ் பள்ளியைப் பற்றியும், பாண்டியர்களுடைய கவாடபுரம் என்னும் தலைநகர் பற்றியும் சுக்கிரீவன் தனது தூதன் ஆஞ்சநேயரிடம் விளக்கிச் சொன்ன குறிப்புகள் ராமாயணத்தில் உள்ளன.)

ஆஞ்சநேயர் தென்னாட்டில் உள்ள கந்தமாதனம் (இராமேஸ்வரம்) வழியாக கடலைத் தாவி, இலங்கையை அடைந்து, இலங்கையை காக்கும் தெய்வம் லங்கிணியைக் கொன்று அசோக வனத்தில் சீதையைக் கண்டு, ராமர் கொடுத்த முத்திரை மோதிரத்தை சீதையிடம் கொடுத்து, சீதையிடமிருந்து சூளாமணியைப் பெற்று பின்பு அரக்கர்களால் பிடிபட்டு, அவர் வா-ல் நெருப்பு வைக்க, அதனால்



அவர் இலங்கையை எரியூட்டி, திரும்பி கிஷ்கிந்தை வந்து ஸ்ரீராமனிடம் விவரம் சொல்ல, இராமர் வானரப் படையுடன் புறப்பட்டு, தஞ்சை கடற்கரை வழியாகச் (வைத்தீஸ்வரன் கோயில், நாகைப்பட்டினம், மதுரை, இராமேஸ்வரம், தனுஷ்கோடி) சென்று சேதுவில் பாலம் கட்டி கடல் கடந்து இலங்கை சென்று இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் முத-யவர்களைக் கொன்று விபீஷணனுக்கு இலங்கையில் முடிசூட்டி, பின்பு புஷ்பக விமானத்தில் ஏறி, கிஷ்கிந்தை வந்து நந்திக்கிராமம் சென்று பரதனையும் அழைத்துக் கொண்டு அயோத்தி சென்று பட்டாபிஷேகம் செய்து கொண்டார். (இராமாயணம் பல மொழிகளில் உள்ளது. வால்மீகி ராமாயணம், தமிழில் கம்பராமாயணம், ஹிந்தியில் துளதிதாஸ் ராமாயணம் என்று பல மொழிகளில் ராமாயணக் கதை உள்ளது. முழு விவரங்கள் அவைகளைப் படித்து அறிந்து கொள்ளலாம். பாரதத்தில் அரக்கர் ஆட்சி ஏற்படுவதை தடுத்ததாலும், அரக்கர்கள் கொடுமையி-ருந்து மக்களை காத்ததாலும் ஸ்ரீராமனை தெய்வமாக வழிபடுகின்றனர் பாரத தேசத்தவர்) .

(பரஞ்சோதி முனிவர் (நரசிம்மவர்ம பல்லவன் காலம்) தமிழில் திருவிளையாடல் புராணம் இயற்றி மதுரையில் சிவபெருமான் நடத்திய திருவிளையாடல்கள் பற்றியும், பாண்டிய அரசர்கள் பற்றியும் தமிழில் ஒரு காவியம் படைத்துள்ளார். அதில் சீதையைத் தேடி ஸ்ரீராமன் அனந்த குணபாண்டியன் ஆட்சியில் மதுரைக்கு வந்து பசுமலையை அடுத்த இடபக்க குன்றில் தங்கி அகஸ்தியரை மீண்டும் கண்டு ஆசிகள் பெற்று மதுரை பொற்றாமரைக் குளத்தில் நீராடி சிவபெருமானையும் வழிபட்டு அவர் ஆசி பெற்று இராவணனை அழித்தார் எனக் கூறப்பட்டுள்ளது.)

**இராமாயண கால அரசர்கள்**

| | இஷுவாகு வம்சம் | மனைவிகள் | தேசம்தலைநகர் |
|---|---|---|---|
| 1) | குசன் (இராமன் + சீதை) | சம்பிகை (பூரி கீர்த்தியின் பேத்தி) | தக்ஷிணகோசம்-குசாவதி |
| | குசன் (இராமன் + சீதை) | குமுதவதி (நாகஅரசன் குமுதன் மகள்) | -குசாவதி |
| 2) | லவன் | சாருமதி (பூரி கீர்த்தியின் பேத்தி) | வட கோசலம் |
| | லவன்(இராமன் + சீதை) | காஞ்சனா(நாக இளவரசி) | தலைநகர்- சிராபதி |
| 3) | அங்கதன் (லக்ஷ்மணன்+ஊர்மிளா) | கஞ்சலோசனி (நாக இளவரசி) | காரூபம் |
| | அங்கதன் (லக்ஷ்மணன்+ஊர்மிளா) | சந்திரிகா (கந்தர்வ இளவரசி) | தலைநகர்-அங்கதீயா |
| 4) | சந்திரகேது (லக்ஷ்மணன்+ஊர்மிளா) | கஞ்சகிரி (நாக கன்னிகை) | காமரூபம் |

| | | |
|---|---|---|
| சந்திரகேது (லக்ஷமணன்+ஊர்மிளை) | சந்திரவதனி (கந்தர்வ இளவரசி) | தலைநகர் சந்திரகாந்தா |
| 5) புஷ்கரன் (பரதன் + மாண்டவி) | கலாவதி (நாக கன்னிகை) | மேற்கு பாரதம் |
| புஷ்கரன் (பரதன்+ மாண்டவி) | சஞ்சலை (கந்தர்வ இளவரசி) | புருஷபுரம் - Peshawar |
| 6) தக்ஷன் (பரதன்+மாண்டவி) | கா-கை(நாக கன்னிகை) | மேற்கு பாரதம் |
| தக்ஷன் (பரதன்+மாணடவி) | சபலை(கந்தர்வ இளவரசி) | தக்ஷசீலம் (Taxila) |
| 7) சுபாகு (சத்ருக்னன்+சுருதகீர்த்தி) | கமிலை (நாக கன்னிகை) | வடமதுரை |
| சுபாகு (சத்ருக்னன்+சுருதகீர்த்தி | கலை (கந்தர்வராஜன் மகள்) | |
| 8) யூபகேது (சத்ருக்னன்+சுருதகீர்த்தி) | மாலதி (நாக கன்னிகை) | தக்ஷிணபாரதம் |
| யூபகேது (சத்ருக்னன்+சுருதகீர்த்தி) | மதனசுந்தரி (சோழ அரசன் கம்பு கண்டன் மகள்) | தலைநகர் விதிசா |

(குசனுக்கும் குமுதவதிக்கும் பிறந்த பெண் ஹேமை. இவளை அவந்தி அரசன் உக்கிரபாகுவின் குமாரன் சித்திராங்கதன் ஸ்வயம்வரத்தில் தூக்கிச் சென்றான். கம்புகண்டன் பெண்ணான மதனசுந்தரி (சோழ இளவரசி) சுயம்வரத்தில், சத்ருக்கினன் மகனான யூபகேது அவளைத் தூக்கிச் சென்றான்.

| | |
|---|---|
| பூரிகீர்த்தி | பூர்வதேச அரசன் |
| விஜயன் | கர்நாடக அரசன் |
| உக்கிரபாகு | அவந்தி அரசன் |
| பிரதீபன் | ஹைஹயதேசம் அரசன் |
| சுஷேணன் | ஆவரணம், சூரசேனம் |
| ஹேமாங்கதன் | க-ங்கம் |
| மதிவாணன் | பாண்டியன் நாகபுர அரசன் |
| மஞ்சுகீர்த்தி | நீபவம்சம் ஹரித்வாரம் |
| அங்கநாதன் | விகற்பம் |
| பரந்தபன் | கீகடம் |
| கம்புகண்டன் | காகந்தி, காஞ்சி, பிரமபுரம்(சீர்காழி) |
| வா- | கிஷ்கிந்தை |
| இராவணன் | இலங்கை அரசன் |
| சீரத்வஜன் | மிதிலை அரசன் |
| அனந்தகுணபாண்டியன் | மதுரை |
| கார்த்த வீர்யார்ஜுனன் | மாகிஷ்மதி |
| மாந்தரன் சேரல் | சேர அரசன் (கொற்கை) |



சந்திர வம்ச அரசர்கள்/சூரியவம்ச அரசர்களுடன் யுத்தம் செய்தனர்.

| | | |
|---|---|---|
| (72) நளன் | X | குசன்(72) |
| (72) நதியுகன் | X | லவன்(72) |
| (72) ஜாதிகரன் | X | அங்கதன்(72) |
| (72) வசுதரன் | X | சந்திரகேது(72) |
| (72) சுரதன் | X | தக்ஷன், புஷ்கலன்(72) |
| (72) அஜமீடன் | X | சுபாகு(72) |

**இராமாயண கால முனிவர்கள் :**

வசிட்டன், விஸ்வாமித்திரன், சரத்துவான் என்னும் கௌதமன் (அக-கையின் கணவன்) அகத்தியர், பரத்துவாஜர், வான்மீகி, ஜாபா-, அத்ரி, சதானந்தர், ருஸ்யசிருங்கர், பரசுராமன் (ஜமதக்னியின் மகள்) யாக்ஞவல்கீயன்.

**இதர விவரங்கள்**

தநு என்னும் (தம்பன்) அரசன் கருநாடக தேசத்ததை பிடித்து ஆண்டான். இவனது மகன் ரம்பன் மற்றும் கரம்பன் என்னும் இருவர். ரம்பனின் (70) மகன் மகிஷன்(71), மகிஷி (பெண்-71) , மகிஷன் மகன் ரத்தபீஜன், சும்பன், நிசும்பன் (72) , தம்பன் (70) , மகன் சங்கசூடன் (மனைவி துளசி என்னும் காண்டகி) மற்றும் பிருந்தை (காலநேமியின் மகள்) , சங்கசூடன் குரு ஜைகிஷ்வயர், சங்கசூடன் மந்திரி பிங்களாக்ஷன், தளபதிகள் விருஷபர்வா, விப்ரசித்தி, தம்பன், காலாங்கவன், கோகர்ணன், காலகேயன், மயன், ஸம்ஹாரன், விஜயகணன், சத்ஜயன், திருதராஷ்ட்ரன், ரக்தாக்ஷன், ரத்னசாரன், சோபாகரன், பிடாரன், சாக்ஷன், உக்ரகண்டன், ரத்தினன்.

மகிஷாசுரனை சண்டிகை கொன்று ஆட்சியை சத்ருக்னனிடம் ஒப்படைத்தாள். அசுர அரசன் விப்பிரசித்தியின் (70) மகன் மநு. இவன் மகன் லவணாசுரன் (71) மற்றும் சுகேது, மதுமதி(பெண்) , லவணாசுரன் மகன் அந்தகன் (72) , லவணாசுரனையும் அந்தகனையும் இராமனின் தம்பி சத்ருக்னன் அழித்தான்.

(i) உச்நர நகரத்து அரசன் மருத்தன் இராணனுடன் யுத்தம் செய்து தோற்றான்.
(ii) வருணனுடைய பிள்ளை புஷ்கரன். இவன் சேனாபதி சோ(சோழன்) இவனுடன் இராவணன் யுத்தம் செய்து தோற்றான்.
(iii) கார்த்தவீர்யார்ஜுனனிடம் போரிட்டு ராவணன் தோற்றான்
(iv) அகத்தியருடன் நடந்த யாழிசைப் போட்டியில் ராவணன் தோற்றான்.

1Ist Proof



(V) ஸ்வேத தீபம் சென்று கபிலரிடம் போரிட்டு இராவணன் தோற்றான்.

(VI) போகவதி (சிங்கப்பூர்) அரசன் வாசுகியுடன் போர் செய்து பின் சமாதானம் செய்து கொண்டார்.

(VII) காலகேயர் (மலேஷியா) அரசன் மணிமதி நாகனை இராவணன் வென்றான்

(VIII)சேர அரசன்! மாந்தரன் சேரல் என்பவனிடம் இராவணன் போரிட்டுத் தோற்றான். சேரனின் குரு பர்வதர் உடன் இருந்தார்.

(IX) குபேரனை இலங்கையி-ருந்து விரட்டி ராஜ்யத்தையும் புஷ்பக விமானத்தையும் ராவணன் அபகரித்தான்.

(X) ராமனால் இலங்கை அழிந்தது. ராவணன் கொல்லப்பட்டான்.

## இராம, இராவண யுத்தத்தில் போரிட்டவர்களின் பட்டியல்

| | இராமன் படை | இராவணன் படை (கொல்லப்பட்டவர்கள்) |
|---|---|---|
| 1) | ராமன் | ராவணன் |
| 2) | ராமன் | கும்பகர்ணன் |
| 3) | ராமன் | அக்னிகேது |
| 4) | ராமன் | ரஸ்மிகேது |
| 5) | ராமன் | யக்ஞகோபன் |
| 6) | ராமன் | அச்சுதக்கன் |
| 7) | லக்ஷ்மணன் | இந்திரஜித் (ராவணன் மகன்) |
| 8) | லக்ஷ்மணன் | விருபாக்ஷன் |
| 9) | லக்ஷ்மணன் | அதிகாயன் |
| 10) | சுக்கிரீவன் | பிரகதத்தன் |
| 11) | மாருதி | அக்ஷயகுமாரன், சம்புமா- |
| 12) | நளன் | பிரதாபனன் |
| 13) | கஜன் | தபனன் |
| 14 | சம்பாதி | பிரசங்கன் |
| 15) | மஹிந்தன் | வஜ்ரமுஷ்டி |
| 16) | துவிதன் | அக்நி பிரமன் |
| 17) | சேனன் | வித்யுன்மா-, மகோதரன் |
| 18) | அங்கதன் | நராந்தகன், தேவாந்தகன், அதிகாயன் |
| 19) | நீலன் | பக்தன் |
| 20) | ஜாம்பவான் | பவுலோமன், சுகன் |
| 21) | விபீஷணன் | மித்ராதக்ஷன் |



# 20. பரசுராமன்

கி.மு. 7500 முதல் பாரத தேசத்தில் அன்னியர்கள் (அசுரர், அரக்கர்) ஆட்சி ஏற்பட்டது. கொடுங்கோன்மை அதிகரித்தது. அரச குலத்தவர் போக வாழ்க்கையில் ஈடுபட்டு ஒருவருக்கொருவர் எதிரியாக இருந்தனர். இதனால் அன்னியர்கள் பாரதத்தில் எளிதாகப் புகமுடிந்தது. அரசர்களின் இந்தப் போக்கை வெறுத்த பரசுராமன் அரசர்களை அழித்து புதிய ஆட்சிகளை நிறுவி அன்னியர் ஆதிக்கத்தை எதிர்த்தான். இதனால் மக்கள் பரசுராமனை திருமா-ன் அவதாரமாகக் கருதினர். பின்பு சூர்ய வம்ச ராமனிடம் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு தவம் செய்யச் சென்றார் பரசுராமன்

பரசராமன் திருமா-ன் 10 அவதாரங்களுள் ஆறாவது அவதாரமாக கருதப்படுகிறார்.

பாண்டியன் கடுங்கோள் காலத்தில் ஏற்பட்ட கடற்கோளுக்குத் தப்பி, குமரிக்கண்டத்தி-ருந்த போஜர், அவந்தியர், வீதிஹோத்திரர், ஸ்வயம் ஜாதர் சௌண்டிக்யர் என்னும் ஐந்து பிரிவினரான பஞ்சசேனர்கள் (ஹேஹயர்கள்), படையரசர்கள், மழுவீட்டு அரையர்கள் முத-யோர்) தென்பாரதத்தில் குடியேறி ஆட்சி செய்தனர். இவர்களும் தமிழ்மொழி பேசுபவர்கள் யாதவகுலம் எனத் தங்களை அழைத்துக் கொண்டு பாரதம் முழுதும் பரவினர்.

தசரதன் அயோத்தியில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் யாதவகுல அரசன் கார்த்தவீர்யஜு-னன் மாகிஷ்மதி (மஹேஸ்வர்) என்னும் தலைநகரி-ருந்து ஆட்சி செய்தான். இவனது குரு தத்தாத்ரேயர் (அத்தரிக்கும் அநசூயைக்கும் பிறந்தவர்). சவுனகன் வம்சத்தில் வந்த புரோகிதர் ருசிகன் (70), காசியரசன் மகள் சத்யவதி என்பவளை மணந்து ஜமதக்கினியைப பெற்றான். ஜமதக்கினி யாதவகுல புரோகிதராக இருந்தவர். ஜமதக்கினி கன்யாகுப்ஜ அரசன் மகள் ரேணுகையை மணந்து ருமண்வான் (இந்திரராமன்), ஸு-ஷேணன் (ஸ்வேதராமன்), விஸ்வாவசு, பரசுராமன் (வைகாசி மாதம், சுக்லபக்ஷ திருதியையில் பிறந்தவர்), வசு என்னும் புலத்தியன் (த்ருண தூமாக்கினி) முத-யவர்களைப் பெற்றான். ஜமதக்கினியின் சகோதரன் ஊருரவன். அவன் மகன் பகன். கார்த்த வீர்யார்ஜு-னனின் மக்கள் ஜமதக்கினியின் மேல் பொறாமை கொண்டு அவனைக் கொன்று விட்டனர். இதன்பொருட்டு கோபம் அடைந்த பரசுராமர் க்ஷத்திரிய அரசர்களை கொல்வதாக சபதம் எடுத்து கார்த்தவீர்யனையும் அவன் பிள்ளைகளையும் கொன்றார்.

21 க்ஷத்திரிய அரசர்களைக் கொன்று மாற்று ஆட்சி ஏற்படுத்தினர். ஜமதக்கினியின் மனைவி ரேணுகயைின் சகோதரர் ரேணுகா. இவர் இலங்கையில் பல இடங்களில் 1008 -ங்கங்களை பிரதிஷ்டை செய்தார்.

பரசுராமன், தசரதனைக் கொல்ல வரும்போதெல்லாம் தரசதன் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதால் பரசுராமனிடமிருந்து தப்பினான். எனவே தசரதனுக்கு நாரீகவசன் என்று பெயர் ஏற்பட்டது.

சோழ அரசன் காந்தன் என்பவனை பரசுராமன் கொல்ல வரும்போது அகஸ்த்தியர் ஆஸ்ரமத்தில் ஒளிந்து கொண்டு தப்பினான்.

அகஸ்த்தியர் விதற்ப நாட்டு இளவரசி லோபாமுத்திரை என்பவளை மணந்து கொண்டு பொதிய மலையில் வந்து தங்கி தமிழ் போதித்து வந்தார். அவருடைய பள்ளியில் ஜமக்கினியின் புதல்வர் த்ருணதூமாக்கினி (தொல்காப்பிய கோத்திரம்) எ`னபவர் தமிழ் பயின்றார். இவர் தஞ்சை மாவட்டத்தில் காப்பியக் குடி என்னும் ஊரில் வசித்தார். இவரே அகத்தியருக்குப் பிறகு தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். இக்காலத்தில் பாரதம் முழுமும் தமிழ் பள்ளிகள் ஏற்பட்டு தமிழ் போதிக்கப்பட்டு வந்தது. எழுத்து முறை, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் நூல்கள் கூத்து இலக்கணம், மெய்ப்பொருள் விருத்தி, களரியா விரை முத-யன போதிக்கப்பட்டன. சாஸ்த்திர நூல்கள், வேதங்கள், சரித்திர வரலாறுகள் யாவும் தமிழில் எழுதப்பட்டு போதிக்கப்பட்டது. எனவே மொழி இலக்கணம் அவசியமாயிற்று.

தமிழர்களான சோழ அரசர்கள் (நாகர்கள்,-நகரங்கள் எழுப்பி நாகரீகம் வளர்த்தவர்கள். எல்லா மொழிகளுக்கும் எழுத்துகளை ஏற்படுத்தியவர்கள்) சூர்யகுல அரசர்களுடன் தொடர்பு கொண்டு பலம்பொருந்திய அரசர்களாக இருந்தனர். கம்புகண்டன் என்னும் சோழ அரசன் அனந்தகுண பாண்டியனுடன் நட்பு கொண்டவனாக இருந்தான். கம்புகண்டன் பெண்களை சூர்ய வம்ச அரசர்கள் மணந்தனர். இக்காலத்தில் சிவனை வழிபடும் மதம், சக்தியை வழிபடும் மதம், சாஸ்த்தாவை வழிபடும் மதம், திருமாலை வழிபடும் மதம், முருகனை வழிபடும் மதம் என்று பல மதங்கள் இருந்தன. இம்மதவாதிகளால் மக்களிடையே சண்டைகள் மூண்டன.

இம்மதங்களையும், வழிபாட்டு முறைகளையும் கண்டித்து ஜைன மதம் மீண்டும் தழைத்தது. முநிசூவ்ரதர் என்னும் தீர்த்தங்கரர் (ரிஷப தேவரி-ருந்து 20வது பீடம்) ஜைன மதத்தை போதித்தார். இவர் திராவிடர்.இவர் ஸ்ரீராமனது வழியை பாராபட்டி மக்கள் அனைவரும் சண்டையிடாது ஜைன மதத்தில் சேரும்படி வேண்டி, ஜைன மதத்தை பாரதம் முழுதும் பரப்பினர்.



ஜமதக்கினியின் புதல்வர்களில் த்ருணதூமாக்கினியும் முநிசூவ்ரதர் போதனையில் ஈடுபட்டு அவரது கருத்துகளை தனது நூலகளின் மூலம் பரப்பினர்.

## 21. தீர்த்தங்கரர்கள்

**முதல் தீர்த்தங்கரர்** : ரிஷபதேவர் (நாபி என்ற மன்னனுக்கும் பாண்டிய இளவரசி மேருபுத்திரிக்கும் பிறந்தவர்).

**இரண்டாவது தீர்த்தங்கரர்** : அஜீதபகவான் (இக்ஷுவாகு வம்ச அரசன் ஜிதசத்ருவுக்கும் விஜயசேனைக்கும் பிறந்தவர்) சகரன் மஹாராஜன். காலம் (கி.மு. 9,500).

**மூன்றாவது தீர்த்தங்கரர்** : சம்பவ ஸ்வாமி (இக்ஷுவாகு வம்ச அரசன் திரிடராஜனுக்கும் சுஷேணை என்பவளுக்கும் பிறந்தவர்).

**நான்காவரு தீர்த்தங்கரர்** : அபிநந்தன் (இக்ஷுவாகு வம்ச அரசன் சுயம்வரன் என்பவனுக்கும் சித்தார்த்தைக்கும் பிறந்தவர்).

**ஐந்தாவது தீர்த்தங்கரர்** : சுமதிநாதர் (சாகேத நகர அரசன் மகாரதன் என்பவனுக்கும் மங்கலை என்பவளுக்கும் பிறந்தவர்).

**ஆறாவது தீர்த்தங்கரர்** : பத்மபிரபன் (இக்ஷுவாகு வம்சம் கௌசாம்பி அரசன் தரணன் என்பவனுக்கும் சுசீமை என்பவளுக்கும் பிறந்தவர்).

**ஏழாவது தீர்த்தங்கரர்** : சுபார்ஸ்வன் (இக்ஷுவாகு வம்சம், வாரணாசி அரசன் சுப்பிரதிஷ்டன் என்பவனுக்கும் பிருத்விக்ஷேணை என்பவளுக்கும் பிறந்தவர்).

**எட்டாவது தீர்த்தங்கரர்** : சந்திரப் பிரபன் (இக்ஷுவாகு வம்சம்-சந்திரப் பிரபா நகர அரசன் மகாசேனன் என்பவனுக்கும் லக்ஷ்மணை என்பவளுக்கும் பிறந்தவர்).

**ஒன்பதாவது தீர்த்தங்கரர்** : சுவீதி என்னும் புஷ்பநந்தன் (சோழ அரசன் காகந்திபுர அரசன் சுக்ரீவன் என்பவனுக்கும் ஜயராமை என்பவளுக்கும் பிறந்தவர்).

**பத்தாவது தீர்த்தங்கரர்** : சீதனர் (இக்ஷுவாகு வம்சம், ராஜபுத்திர தேசம் த்ருடரதன் என்பவனுக்கும் சுநந்தை என்பவளுக்கும் பிறந்தவர்).

**பதினொன்றாவது தீர்த்தங்கரர்** : சிரேயாம்ஸ ஸ்வாமி (சிம்மபுர அரசன் விஷ்ணு என்பவனுக்கும், சித்தார்த்த நகர இளவரசிக்கும் பிறந்தவர்). பாகுப- வம்சத்து அரசன் பிரஜாபதி என்பவனுக்கும் மிருகாவதி என்பவளுக்கும் விஜயன் (வெண்மை நிறம், முதல் -

லக்ஷ்மணன் அம்சம்), திரிப்பிருஷ்டன் (கருப்பு நிறம், முதல் ராமன் அம்சம்), திரிப்பிருஷ்டன் அஸ்வக்கிரீவன் என்னும் யக்ஷனைக் கொன்றான்... குபேர பட்டிணம் என்னும் அளகாபுரியை ஆண்டயக்ஷன், மயூரக்கிரீவன். இவனது மனைவி நீலாக்க்ஷன்... மயூரக்கிரீவன் பிள்ளைகள் அஸ்வக்கிரீவன், நீலதரன், நீலகண்டன், சுகண்டன், வஜ்ரகண்டன் முத-யோர்.

**பன்னிரண்டாவது தீர்த்தங்கரர்** : வாசு பூஜ்யர். (இக்ஷுவாகு வம்சம், சம்பாபுர அரசன் வசுபூஜயன் என்பவனுக்கும் ஜயவதி என்பவளுக்கும் பிறந்தவர் வாசுபூஜ்யர்).

இக்காலத்தில் இக்ஷுவாகு வம்சத்தில் துவாரகையில் பிரம்மன் என்னும் அரசனுக்கு இரண்டு மனைவிகள் (சுபத்திரை, உமை) இருந்தனர். சுபத்திரைக்கு வெண்மை நிறத்தில் (லக்ஷ்மணன் அம்சமாக) அசவன் என்பவனும், கறுப்பு நிற்தில் இரண்டாவது ராமனின் அம்சமாக திரிப்பிரஷ்டனும் பிறந்தனர். திரிப்பிரஷ்டன், அசுர அரசன் தாருகனை வென்றான்.

**பதின்மூன்றாவது தீர்த்தங்கரர்** : விமல ஸ்வாமி (இக்ஷுவாகு வம்சம் காம்பீ-ய தேச அரசன் கிருதவர்மன் என்பவனுக்கும் ஜயச்யாமை என்பவளுக்கும் பிறந்தவர் விமல ஸ்வாமி).

இக்காலத்தில் துவாரகையை ஆண்ட ருத்திரன் என்ற அரசனுக்கும் சுபத்திரை என்பவளுக்கும் பிறந்தவன் தருமன் (லக்ஷமணன் - III). சூத்திரனுக்கும் பிருத்வி என்பவளுக்கும் பிறந்தவன் சுயம்பு (III-வது ராமன்). சுயம்பு இரத்தினபுரியை ஆண்ட அசுரன் மதுவை வென்றான்.

**பதினான்காவது தீர்த்தங்கரர்** : அனந்த நாதர். (நான்காவது ராமன் புருஷோத்தமன் (சோமப்பிரபனுக்கும் சீதைக்கும் பிறந்தவன். நான்காவது லக்ஷமணன் சுப்பிரபன் (சோமப்பிரபனுக்கும் ஜெயவதிக்கும் பிறந்தவன்).

**பதினைந்தாவது தீர்த்தங்கரர்** : தர்மஸ்வாமி. (குருவம்சம் இரத்தினபுரம் அரசன் பானுவின் மகன்.)

(ஐந்தாவது ராமன் இக்ஷுவாகு வம்சம். அகபுரத்தின் அரசன் சிம்மசேனனுக்கும் அம்பிகைக்கும் பிறந்த புருஷ சிம்மன் ஐந்தாவது லக்ஷமணன். சுதர்சனன் (சிம்மசேனனுக்கும் விஜயை என்பவளுக்கும் பிறந்தவன்).

**பதினாறாவது தீர்த்தங்கரர்** : சாந்திநாதன் (குருவம்சம் அஸ்தினாபுரம் அரசன் அமிதசேனனுக்கும் அஜிதைக்கும் பிறந்தவன் விஸ்வசேனன். இவனுக்கும் ஐராவதிக்கும் பிறந்தவன் சாந்திநாதன்.

**பதினேழாவது தீர்த்தங்கரர்** : குந்து ஸ்வாமி (குரு வம்சம் அஸ்தினாபுரம் அரசன் சூரசேனனுக்கும், ஸ்ரீகாந்தைக்கும் பிறந்தவர்



**பதினெட்டாவது தீர்த்தங்கரர்** : ஹரஸ்வாமி (குரு வம்சம் அஸ்தினாபுரம் அரசன் சுதர்சனன் என்பவனுக்கும் மித்ரசேனை என்பவளுக்கும் பிறந்தவர்).

ஆறாவது ராமன் வரசேனன் என்னும் இக்ஷுவாகு வம்ச அரசனுக்கும் லக்ஷமிமதி என்பவளுக்கும் பிறந்த புண்டரீகன். ஆறாவது லக்ஷமணன் வரசேனனுக்கும் வைஜயந்தி என்பவளுக்கும் பிறந்த நந்திஷேனன். புண்டரீகன் அரக்கன் நிசும்பனைக் கொன்றான்.

**பத்தொன்பதாவது தீர்த்தங்கரர்** : மல்-நாதன். (இக்ஷுவாகு வம்சம், மிதிலை அரசன் கும்பன் என்பவனுக்கும் மஹாதேவி என்பவளுக்கும் பிறந்தவன்).

ஏழாவது ராமன் வாரணாசி அரசன் அக்னிசிகன் என்பவனுக்கும் கேசவதி என்பவளுக்கும் பிறந்த தத்தன். ஏழாவது லக்ஷமணன் அக்னிசிகனுக்கும் அபராஜிதைக்கும் பிறந்த நந்திமித்ரன்.

**இருபதாவது தீர்த்தங்கரர்** : முனிசூவ்ரதன். (ஹரிவம்சம், மகததேச அரசன் சுமித்ரன் என்பவனுக்னும் கோசலை என்பவளுக்கும் பிறந்தவன். தசரதனுக்கும் சுமித்ரைக்கும் பிறந்தவன் எட்டாவது லக்ஷமணன். இராவணன் என்னும் அரக்கனை எட்டாவது ஸ்ரீராமன் கொன்றார். (கி.மு. 7100) ).

ஜைன மதத்தை பாரதம் முழுதும் பரவச் செய்து, பெரும் புரட்சி செய்தவர் முனி சூவ்ரதர். உலகில் சமாதானம் செய்ய பல தேசங்களுக்கு சென்று உபதேசித்தவர் முனி சூவ்ரதர். மகத தேசத்தில் ஆயிரக்கணக்கான சமண சன்யாசிகள் மகாநாடு இவர் காலத்தில் நடந்தது.

முனிசூவ்ரதருக்குப் பின்னர் மஹாவீரர் வரை 24 தீர்த்தங்கரர்கள் பாரதத்தில் அவதரித்து சமண மதத்தைப் பரப்பினர். சமண மதம் பரவிய காலத்தில் சமண முனிவர்கள் ஒவ்வொரு தேசத்திற்கும் சென்று அந்தந்த பாஷைகளைக் கற்று, அந்தந்த தேச வரலாறுகளை எழுதிய பெருமையும் மக்களுக்கு கல்வியறிவு, அறிவியல், சமூகத் தொண்டு இவற்றில் சமண முனிவர்கள் பெரும்பங்காற்றினர்.

அனந்தகுணபாண்டியன் காலத்திலும் முனிசூவ்ரதர் மதுரை நகர் வந்து சமணத்தைப் பரப்பினர். அப்போது அகஸ்தியர் சைவ மதத்தைப் பரப்பி பாண்டியனுக்கு குருவாக இருந்தார். ஆனால் அகஸ்த்தியர் மாணாக்கர் திருணதூமாக்கினி (புலத்தியர் - தொல்காப்பியர்) சமண முனிவர் கருத்துகளை ஆதரிப்பவரா வாழ்ந்தார்).

## 22. துஷ்யந்தன்

(சந்திர வம்ச அரசர்களுள் துஷ்யந்தன் கதை மிகவும் பிரசித்தி பெற்றது. துஷ்யந்தன்-சகுந்தலை காதல் காவியம் மிகவும் பிரபலமானது. ஏறத்தாழ இம்மன்னன் காலம் 5800 B.C. எனக் கணக்கிடப்படுகிறது.)

ஸ்ரீராமனுக்குப் பிறகு (71) சூரிய வம்சத்தில் குசன் (72), அதிதி (73) ஹேமை (இவளது கணவன் சித்திராங்கதன் (அவந்தி மன்னன் உக்கிரபாகுவின் மகன்), நிஷிதன் (74), அனலன் (75), நபசு (76), புண்கரீகன் (77), க்ஷேமதனுவா (78), தேவாநீகன் (79), அஹீன குஹன் (80), குரு (81), சஹஸ்வான் (82), வீரசேனன் (83) (மனைவி கௌசல்யாதேவி மற்றும் உருக்காதேவி), பலன் (பரீக்ஷித்து) (84) என்பவர்கள் ஆண்டனர். பரீக்ஷித்தின் மனைவி சோபனை (ஆயுதராஜன் மகள்).

சந்திர வம்சத்தில் அரிசகனுக்கு (70), ருதேபு, தண்டிலேபு, புண்யபூ, தர்மேபு, திருதேபு, தலேபு, சன்னதேபு, வனேபு முத-யவர்கள் ஆண்டனர் கிருதாசி என்ற இளவரசிக்னும், அரிசகனுக்கும் தக்ஷணி என்பவனிடத்தில் நளன், நதியுகன், ஜாதிகரன், வசுதரன், லகுசுதன், சுரதன், அஜமீடன் பிறந்தனர் இவர்கள் சூரிய வம்ச அரசன் குசனால் தோற்கடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். சந்திர வம்ச இளவரசி சரஸ்வதி என்பவளை மதுரை அரசன் பாண்டியன் மதிவாணன் மணந்து வடபுலத்தில் மீண்டும் சந்திர வம்சத்தைத் தோற்றுவித்தான். மதிவாணன் (80), வழியில் ரந்தி நாரன் (81) (மனைவி மனசுனி), சுமதி (82), திகடன், துருவன், திற்சனு முத-யவர்களும் திற்சனுவின் புதல்வன் நீலன் (83) (உபதானவி) (இவன் மனைவி பாண்டிய இளவரசி இரத்தின மாலை) இவனுக்குப் பின் துஷ்யந்தன் (84) ஆட்சி பீடத்திலேறினான் (கி.மு. 5800).

இக்காலத்தில் கண்ணுவர் என்னும் முனிவரும் விசவாமித்திரரும் நண்பர்களாக இருந்தனர் கண்ணுவர் தென்பாரதம் முழுதும் பயணம் செய்து பல அரசர்களை சந்தித்து வடபுலத்து அரசியல் நிலைமையைக் கூறி உதவிகள் கோரினார். சுகுணசேகரபாண்டியன் (84) சகோதரன் வீரசேகரபாண்டியன் (84), கண்ணுவரிஷி வளர்த்து வந்த மானை வீரசேகர பாண்டியன் அம்பெய்து கொன்றதால் கண்ணுவரிஷி அவனை சபித்தார். (திருக்கோவிலூர் ஸ்தலபுராணம்-திருப்பத்தூர்-இராமநாதபுரம் கிழக்கு 10 மை-ல் உள்ளது). திருக்கண்ணுபுரம் திருமாந்துரை-வாளாடி கிழக்கு 2 மைல், திருநெல்வாசர் - சிதம்பரம் தென் கிழக்கு 3 மைல், திருக்கடம்பந்துறை - திருக்கோயிலூர் கிழக்கு 1 மைல், ஸ்தல புராணம் காண்க. கண்ணுவரிஷியும் அவர் சீடன் மதுப்பிரிய ரிஷியும் தன்னாடு திரும்பினர்.



(கண்ணுவ ஆஸ்ரமம் - ராவல்பிண்டி (பாகிஸ்தான்) க்கு மேற்கு சமீபம். இதில் விஸ்வாமித்திரர்க்கும் மேனகைக்கும் பிறந்த சகுந்தலை வளர்ந்தாள். குருநாட்டரசனான துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த மகன் பரதன் அவன் வாழ்ந்த இடமும் இதுவே. துஷ்யந்தன் (84) மகன் பரதன் (85) குரு வம்ச அரசன்) பாரதம் முழுதும் ஆண்டனர்.

மதுரையில் ஆண்ட அனந்தகுணபாண்டியனுக்குப் பிறகு (71) அவன் மகன் குலபூஷணன் (72) ஆட்சி செய்தான். இவனது தளபதி சவுந்திர சாமந்தன். இத்தளபதி சேதி அரசன் மதுரை மீது படையடுத்து வருவது குறித்து பாண்டியன் படைதிரட்ட தளபதியிடம் பொற்காசு அளிக்க. அவன் அதை கோயில் சட்ட செலவழித்தான். பாண்டியன் இதைக் கேட்டு சவுந்திர சாமந்தனை தண்டிக்க நினைக்கையில், சேதி அரசனை பு-கடித்து அவன் மாண்டான் என்ற செய்தி கேட்டு தளபதியை விடுவித்தான். கோயிலுக்குச் செலவழித்த பணம் சொக்கநாதன் அருளால் உலவாகிழியாக பாண்டியனிடம் வந்து சேர்ந்து. இக்காலத்தில் சோமசுந்திரக் கடவுள் வளையல் செட்டியாக வந்து லீலை புரிந்தார். குலபூஷணன் (72) மதுரையில் ஆட்சி செய்த காலத்தில் சோழ நாட்டை ஆண்டு வந்தான் வகாமனசு என்னும் காடு வெட்டிய சோழன் (72) (கம்புகண்டன் மகன்). குலபூஷணன் மகள் இராஜேந்திர பாண்டியன் (73) மற்றும் ராஜசிங்கன் (73) காடுவெட்டிய சோழன் மகளை, குலபூஷணன் புதல்வர்கள் இருவரும் விரும்பினர். காடுவெட்டிய சோழன் (வகாமனசு) தன் மகனை ராஜசிங்க பாண்டியனுக்கு மணமுடித்தார். இதனால் கோபமடைந்த இராஜேந்திர பாண்டியன் சோழனை சிறை செய்தான். பின்பு சான்றோர் ஆலோசனையின் பேரில் சோழனை விடுவித்தான். இராஜேந்திர பாண்டியனுக்குப் பிறகு (73) இராஜேசன் (74) (வெண்தேர் செழியன்), இராஜ கம்பீரன் (75), அவன் மகன் பாண்டிய வம்ச தீபன் (76), புரந்தரஜித் (77), சுந்தரேச பாத சேகரன் (78), சுந்தரேச பாத சேகரனுக்கும் சோழன் ஆயிரம்பரிக்கோர் சேவகன் (78) என்பவனுக்கும் போர் மூண்டது. சோழன் தோல்வி அடைந்தான். பின்னர் வரகுணபாண்டியன் (79) (திருவிடைமருதூர் புராணம் காண்க). ராஜராஜ பாண்டியன் (80), ராஜாதிராஜ பாண்டியன் (81), இவன் புலத்தியரின் சாபத்திற்காளான பன்றியரசன் விச்சாதரனைக் கொன்றான். விச்சாதரனின் மனைவியை சருச்சரன் என்னும் பாண்டிய தளபதி கொன்றான். இறைவன் இவர்களது குழந்தைகளைக் காப்பாற்றினர். ராஜாதி ராஜ பாண்டியனுக்குப் பிறகு சுகுணபாண்டியன் (82), சுகுணபாண்டியனுக்குப் பிறகு வரதுங்க பாண்டியன் (83), பாண்டியன் சுகுணசேகரன் (81) ஆண்டனர்.

சுகுணசேகர பாண்டியன் காலத்தில் துஷ்யந்தன் மகன் பரதன் பாண்டிய நாடு மீது படையெடுத்தான். பிறகு சான்றோர்கள் சொல் கேட்டு சுகுணசேகரன் பரதனுடன் சமாதானம் செய்து கொண்டான்.

சோழர்கள் காகந்தி (பூம்புகார்), உறையூர், பிரமபுரம் முத-ய இடங்களி-ருந்து ஆட்சி செய்தனர். சோழன் கம்புகண்டனுக்குப் பிறகு (71) சிவ-ங்கசோழன் (வகாமனசு - காடு வெட்டிய சோழன்) (72) இவன் புதல்வி சோழதேவியை ராஜசிங்க பாண்டியன் மணந்தான். பின்னர் சோழன் உசீநரன் (73), மகாமநு (70), சோழ மந்திரி மருதாநந்த நாதர், சிபி (75) (சிபியின் மகள் சயித்திரை. இவள் கணவன் சியாமகன். பின்பு சூரவாதித்தன் (76), வயலவ ஆதித்தன் (77), செம்பியன் - ஆயிரம் பரிக்கோர் சேவகன் (78) (இவன் பாண்டியன் சுந்தரேச பாதசேகரனுடன் சண்டையிட்டு தோற்றான்). பின்னர் தஞ்சன் என்னும் அரக்கன் (தஞ்சை நகர்) சோழர்களை விரட்டி சோழ நாட்டை ஆளத் தொடங்கினான். சோழ நாட்டை ஆண்ட அரக்கர்கள் பெயர்கள் (வ.எண் 79, 80, 81, 82, & 83) கிடைக்கவில்லை. திருமால் ஒரு அந்தணன் வடிவம் கொண்டு தஞ்சன் என்னும் அரக்கனை மாய்த்து, குலோத்துங்க சோழனை (84) அரியணையில் ஏற்றினார். குலோத்துங்க சோழனுக்குப் பிறகு அவன் மகன் பீமசோழன் (85), (இவன் மனைவி வித்யுத்வதை), வீரசேனன் (86), ஆஸ்ரிதன் (துஷ்யந்தனின் பேரன், பரதன் மகன்), வீரசேனன் (87), சோழன் திறையன் (88), கிருத்திஹரன் (89) என்னும் கரிகாலன், சுகுணன் (90), சற்குணசோழன் (91), சசிசேகர சோழன் (92) (இவன் மகள் குணவல-யை சித்திரவர்ம பாண்டியன் மணந்தான்). தேவசோழன் (93), ஆகாசராஜன் (94) (ஆகாச ராஜன் வளர்ப்பு மகள் பத்மாவதி என்னும் அலர்மேல்மங்கை (இலக்குமி அம்சம்). ஏழுமலையில் வகுளமா-கையின் வளர்ப்பு மகனான ஸ்ரீநிவாஸன் (திருமால் அம்சம்) பத்மாவதியை மணந்து கொண்டார். வகுளமா-கையின் புதல்வர்கள் ஆகாசராஜனுக்கு உதவியாக படைதிரட்டி அரக்கர்களை அழித்து சோழ நாட்டை அரக்கர்களிடமிருந்து மீட்டார். இக்காலத்தில் வாழ்ந்தவர் குணசீல மகரிஷி. இவர் கோயில், ஸ்ரீரங்கம் முத-ய இடங்களில் ஆலயம் எழுப்பப்பட்டடது. ஸ்ரீநிவாசனுக்குப் பிறகு அவன் மகன் சக்கரவேந்தன் என்னும் சக்ரபாணி துந்துபி என்னும் அசுரனைக் கொன்றவன் (96), அச்சுதன் (97), நாராயணன் (98) முத-ய மன்னர்கள் சோழ நாட்டை ஆண்டனர். நாராயணனுக்குப் பிறகு 10 சோழ மன்னர்கள் சோழ நாட்டை ஆட்சி செய்தனர். (அவர்களின் பெயர் கிடைக்கவில்லை). பிறகு சேதி ராஜ்யத்தை ஆண்ட உபரிசிரவசு சோழ நாட்டின் மீது படையெடுத்தான். (உபரி சிரவசு பற்றிய செய்திகள் - ஸ்ரீவைகுண்டம்,



நாங்கூர், தேரெழுந்தூர், உத்தமர் கோயில், கரம்பனூர், திருக்கண்ணபுரம் கோயில் ஸ்தல புராணம் காண்க). உபரிசிரவசு (107) தன் மகளான பத்மினியை திருமா-ன் அம்சமான சௌரிராஜனுக்குத் திருக்கண்ணபுரத்தில் மணமுடித்து சோழ நாட்டை ஒப்புவித்து, இந்திரன் கொடுத்த விமானத்தில் வடநாடு திரும்பினான். உபரிசிரவுக்கும் அத்ரிகா என்பவளுக்கும் பிறந்த மத்ஸகந்தியை சந்தனு மஹாராஜன் (குரு வம்சம்) மணந்தாள்). பின்னர் சோழ நாட்டை செந்தாமரைக் கண்ணன் (108), சோழன் செங்கணான் (109), சூடமசோழன் (110), குமராங்குசன் (111) ஆண்டனர். குமராங்குசன் மஹாபாரதப் போரில் கலந்து கொண்டான்.

உதியன் சேரலாதன் (பெருஞ்சோற்று உதியன்) பாண்டவர், கௌவர் படைகளுக்கு உணவளித்தான்.

## 23. இடைச்சங்கம்

திருநெல்வே-யில் ஓடும் தாம்பிர பரணி ஆற்றின் முகத்துவாரத்தில் ''கவாடபுரம்'' (கவாடம்= கதவு-Gate way) என்னுமிடத்தில இடைச்சங்கம் ஏற்பட்டது. இச்சங்கத்தை நிறுவியவன் '' வெண்தேர் செழியன்'' என்னும் பாண்டியன். வெண்தேர்செழியன் முதல் முடத்திருமாறன் வரை 59 பாண்டிய அரசர்கள் ஆண்ட காலத்தில் (3700 ஆண்டுகள்) இச்சங்கம் நடந்ததாக கூறப்படுகிறது.

இச்சங்கம் குறித்து அகவற்பா பின்வருமாறு :-

“வடுவறு காட்சி நடுவட் சங்கத்து
அகத்தியர், தொல் காப்பியத் தமிழ் முனிவர்,
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்,
என்னாப் புலமை வெள்ளூர் காம்பியன்,
இறவா இசையிற் சிறு பாண்டரங்கன்,
தேசிக மதுரை ஆசிரியன் மாறன்,
**தவரொப்ப பாய துவரைக் கோமான்,**
தேருங்கவிபுனை கீரந்தையார், இவர்
**ஒன்பதோ டடுத்த ஐம்பதின் பதின்மராகும்,**
தவடருங் கேள்வித் தன்மையர் உள்ளிட் (டு)
இவர் மூவாயிரத் தெழுநூற்று வரே;
வையகம் பரவச் செய்த செய்யுளும்
இருங்க- கடிந்த பெருங்க-த் தொகையோடு,
குருகு, வெண்டாளி, தெருள் வியாழமாலை,
அந்நாள் இலக்கணம் அகத்தியம், அதனொடு
பின்னாட் செய்த பிறங்கு தொல்காப்பியம்,

மதி நலங் கவின்ற மா அ புராணம்,
புது நலங் கனிந்த பூத புராணம்,
வல்-தி னுணர்ந்த நல்இசை நுணுக்கமும்,
தாவாக் காலம் தமிழ் பயின்றதுவும்
**மூவாயிரத்தோடும் எழுநூற்றியாண்டு**
பரீ இய சங்கம் இரீஇய பாண்டியர்கள்
**“வெண்டேர் செழியன்”**முதலா விறல் கெழு
திண்டேர்க் கொற்ற “முடத்திருமாறன்”,
முரசுடைத்தானை மூவா வந்தம்
முழுதும் ஆண்டவர் ஐம்பத்தொன்பதின்மர்
இவ்வகை அரசரிற் கவியரங்கேறினார்
ஐவகை அரசர் ; ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு சீர்த்திக்
**கண்ணகன் பரப்பில் கபாடபுரம் என்ப**”

(மேற்குறிப்பிட்ட பாட-ன்படி துவரை (துவாரகை)யின் அரசன் கண்ணன் (ஸ்ரீகிருஷ்ணன்) தமிழ் புலவராக இடைச் சங்கத்தில் இருந்தான் என அறியலாகும். ஸ்ரீகிருஷ்ணன் பிறந்தது கி.மு. 3112 என கணக்கிடப்பட்டுள்ளது. எனவே வெண்டேர் செழியன் காலம் சுமார் கி.மு. 3100 + 3700 (சங்கம் நடந்த வருஷங்கள்) = கி.மு. 6800 எனக் கணக்கிடலாகும்.

அகஸ்த்தியர் இடைச்சங்கத்தைத் துவக்க “கங்கைக்கரை-கரும்பலூர் ஆஸ்ரமத்தி-ருந்து 18 வேளிர் (அரசர்கள்), 8000 தமிழ் அந்தணர்கள், அருவாளர்களையும், வெண்டேர் செழியன் காலத்தில் தமிழகம் அழைத்து வந்தார்.

“சகோதர அகத்தியரே நீர் எங்களைச் சேர்ந்தும் எம்மை
ஏமாற்றுவானேன். உங்கள் எண்ணம் எங்களுக்குத் தெரியும்
எங்களுக்கு சேர வேண்டியதைக் கொடுத்துவிடும்”
-ரிக் வேதம் I-170-173

‘கெல்’என்னும் மன்னன் அகத்தியன் நண்பன்”
செப்புனைந்தியற்றிய சேனெடும் புரிசை
உவரா வீகை துவரையாண்டு, நாற்பத்தி ஒன்பது
வழிமுறை வந்த வெளிருள் வேளே (பு--கடி-மால்)
-புறநானூறு 201

(18 வேளிர்கள் (யாதவ அரசர்கள்) என்பவர்கள் சூரசேன, அனந்த, சேதி முத-ய ராஜ்யங்களை அமைத்தனர். மகதி, அவந்திஜா, ப்ராசி, சூரசேனி, அர்த்தமகதி, பாஹ்-க மொழிகள் தமிழி-ருந்து தோன்றியவை).



“துவராபதிப் போந்து நிலம் கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண்
பதினென்குடி வேளிர் உள்ளீட்டாரையும், அருவாளரையும்
கொடுபோந்து காடு கெடுத்து நாடாக்கி,”
-தொல்காப்பியம் - பாயிரம்

“இது மலைய மாதவன் நிலங்கடந்த நெடுமுடி அண்ணலுழை நரபதியுடன் கொணர்ந்த பதினெண் வரை குடிப்பிறந்த வேளிருக்கும்
வேந்தன் தொழில் உரித்தென்கிறது.
- தொல்காப்பியம் - பொருள் - 32

துவாரகையில் இருந்து கி.மு. 6800-இல் 49 தலைமுறையாக இருந்து வந்த அகத்தியரும் ஏனைய தமிழ்குடி மக்களுடன் பாண்டிய நாடு வந்தனர். இவர் வடபுலத்தி-ருந்து வந்த போது அனைத்து செல்வங்களுடன் தமிழகம் வந்தார். இதில் பங்கு கேட்ட மற்றைய அரசர்களின் (வடபுலம்) வேண்டுகோளை நிராகரித்தார். தென்னாடு வந்த அகத்தியர், இடைச்சங்கம் தொடங்க வெண்டேர் செழியனுக்கு (74) பேருதவி செய்தார். அகத்திய முனிவர் இல்லையேல் இடைச்சங்கம் இருந்திராது. (பின்னர் துவாரகயைின் பெரும்பகுதி கட-ல் மூழ்கியது).

இராஜேந்திர பாண்டியன் (73) மகன் இராஜேச பாண்டியன் (74) என்பவன் இராம. இராவணப் போர் (கி.மு. 6913) முடிந்து 113 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சிக் கட்டிலேறிய பாண்டிய மன்னன் (வெண்தேர்செழியன்) (வைவஸ்வதமநுவுக்குப் பிறகு (3) சூர்யவம்சத்து அரசன் நிஷிதன் (74) காலத்தில் இடைச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதாவது 74-3=71 X 100=7100, 13900 B.C.-7100-6800 B.C.)

இராஜேசபாண்டியன் என்னும் வெண்தேர் செழியன் (74) இவனுக்குப் பிறகு இராஜகம்பீரன் (75), பாண்டிய வம்ச தீபன் (76), புரந்தரஜித் (77), சுந்தரேச பாதசேகரன் (78), வரகுணபாண்டியன் (79), ராஜராஜ பாண்டியன் (80), வரதுங்க பாண்டியன் (83), சுகுணசேகர பாண்டியன் (84), சித்திர விரதன் (85), சித்திமேரு (86), உக்கிரகுமார பாண்டியன் என்னும் செம்பூட் சேய் (87), சித்திரபூஷண பாண்டியன் (88), கௌமார பாண்டியன் (89), சித்திரத்துவஜன் (90), சித்திரவர்மன் (91), (இவன் மனைவி சசிசேகர சோழன் மகள் குணவல்-), சித்திரசேனன் (92), இவன் தம்பி ராஜேந்திரன் (98),, ராஜ குலோத்துங்கன் (99), இவன் சகோதரன் ராஜசிங்கன் II(100), இவன் தம்பி ராஜேசன் (100, ராஜகம்பீரன் (101), பாண்டிய வங்கீச தீபபாண்டியன் (102), புரந்தரஜித் (103), பாண்டிய வம்சதுரந்தரன் (வங்கியபதாகன்) (104) பாண்டியன் வங்கிசபாதசேகரன் (105), (சென்னிரேஸ்வர பாண்டியன்)

சுந்தரேஸ்வர பாதசேகரன் II(106) (நிலம்தருவிற்பாண்டியன் ஆயிரம் பரிக்கோர் சேவகன்), வரகுணபாண்டியன் (107), இவன் சகோதரன் ராஜமார்த்தாண்டன் (107), ராஜசார்ந்தூலன் II (108). மண- என்னும் தலைநகரி-ருந்து ஆண்ட பிரபஞ்ச பாண்டியன் (109) (த்விஜராஜ குலோத்தமன்), ஆயோதனப் ப்ரவீணன் (110), ராஜகுஞ்சாரன் (111), (முடத்திருமாறன்), (74 to 110 - 37 பாண்டியர்கள் X 100 வருட ஆட்சிக்காலம் = 3700 வருடங்கள்) (இடைச்சங்கத்தில் 37 பாண்டிய மன்னர்களும் இவர்களின் சகோதரர்கள் 22 பேரும் ஆக 59 பேர் சங்க புலவராக இருந்தனர். ஸ்ரீகிருஷ்ணன் காலத்தில் கபாடபுரத்தி-ருந்த பாண்டியன் ராஜகுஞ்சாரன் என்னும் முடத்திருமாறன் (III). இவன் மகன் அநாகுல பாண்டியன் மற்றும் அப்ஸரஸுக்கு பிறந்தவன்) இவனுக்காக சிகண்டியார் என்னும் முனிவர் இசை நுணுக்கம் என்னும் செய்தார். சிறு பாண்டரங்கன் என்னும் இசைக்கலைஞர் இதற்கு உதவி செய்தார்.

தமிழ் இடைச்சங்கத் தலைவராக இருந்தவர்கள் இறையனார் III 2. வெண்டேர் செழியன் என்னும் இராஜேசன், 3. பாண்டியன் செம்பூட்சேய் (உக்கிரகுமாரன்), 4. அநாகுல பாண்டியன், 5. ராஜகுஞ்சாரன் என்னும் முடத்திருமாறன் என்னும் ஐவர்.

பொதிகை அகத்தியன், அவிநயன் (பரதம் பாடியவர்), அறிவனார் (பஞ்சமரபு பாடியவர்), ஆதி வாயிலார் (பாரத சேனாபதியம்), அதங்கோட்டு (திருவிதாங்கூர்) ஆசான், லோபாமுத்திரை கணவர் அகத்தியர், தொல்காப்பியர், கௌதம முனிவர், நாரத முனிவர் (பஞ்சபாரதீயம்), மார்க்கண்டேய முனிவர், வாமனர், இராமாயணம் என்னும் ஆதி காவியம் எழுதிய வால்மீகி முனிவர், இயாமளேந்திரர் (இந்திர காவியம்), இருந்தையூர் கருங்கோழி மோசியார் (மோசி என்னும் யூதர்) இளம் கீரந்தையார், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் (தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணம் செய்தவர் கழாரம்பனார் (பேரிசை சூத்திரம்) காப்பியக்குடி தொல்காப்பியர், கீரைந்தையார், உக்கிரகுமாரன் என்னும் செம்பூட்சேய், சோழன் திறையன் மாறனார், துரா-ங்கம் எழுதிய புலவர், நத்தத்தம் எழுதிய புலவர், பனம்பாரனார், பூதபுராணம் எழுதிய புலவர் காக்கைபாடினியார் (அகத்திய முனிவரிடம் தமிழ் பயின்றவர்), மதுரை தமிழ் பேராசிரியர் மாறனார், மயேச்சுரயாப்பு எழுதிய சமண முனிவர், மாபுராணம் எழுதிய புலவர், வாய்பியம் எழுதிய புலவர், வையாபிகம் எழுதிய புலவர், வெள்ளூர் காப்பியனார் சிகண்டியார் (இசை நுணுக்கம் ஆசிரியர்) இசைநூல் எழுதிய சிறு பாண்டரங்கனார் முத-யோர் இடைச் சங்க மேறியவர்கள்.

தமிழில் முத-ல் இலக்கணம் செய்தவர்கள் இறையனார். அகத்தியர், மார்க்கண்டேய முனடிவர், வான்மீகர், கௌதம முனிவர்



(தலையாய ஒத்து) பின்னர் தொல்காப்பியம் (இடையாய ஒத்து), கடைசியில் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் எழுதிய தமிழ் இலக்கணமாகும். முத-ல் தமிழில் 51 எழுத்துகள் இருந்தன. இவை 31 ஆக குறைக்கப்பட்டது. (உயிர் எழுத்து 12, மெய் எழுத்து 18, ஆயுத எழுத்து 1) தமிழில் வேதங்கள் எழுதப்பட்டன. வேள்வி செய்ய வேண்டிய முறைகள் தெளிவாக்கப்பட்டன. பின்னரே இவைகள் வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. எனவே இவை ஆரியர்களால் எழுதப்பட்டன என மயக்கம் ஏற்பட்டன. தமிழில் வாய்ச்சொற்கள் எப்படி இருக்க வேண்டும் என வாய்பியம் என நூல் வரையப்பட்டது. இது பரவி தூய தமிழ் பயிற்றுவிக்கும் பழக்கம் கடைச்சங்கம் இறுதியிலேதான் உறுதியாக்கப்பட்டன.

வடபாரதத்தில் நுழைந்த அசுரர்கள், வடமேற்கு பகுதிகளில் வந்த புஷ்கரதீவு மக்கள். இதனால் பஞ்சாபில், காந்தார தேசத்தில் ஆண்ட மன்னர்கள் துரத்தப்பட்டனர். காஷ்மீர் பகுதியில் மணா-யில் சித்திரவாகன பாண்டியன் அவன் சித்திர விக்கிரமன் ஆண்டனர். சித்திர வாகன பாண்டியன் மகள் சித்திராங்கதை (அருச்சனன் மனைவி) இவளுடைய மகன் பப்புருவாகனன் (பாண்டியன் கீரன் - கீரிப்பிள்ளை வாகனன்).

மஹாபாரதப் போருக்குப் பிறகு வடபுலத்தில் ஆண்ட தமிழர்கள் விரட்டப்பட்டனர். துர்வாசர் குந்தியின் மூலமாக பஞ்ச பாண்டவர்களை (தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்) தோற்றுவித்தார். மீண்டும் தென்புலத்தார் ஆட்சியைத் தொடங்க ஸ்ரீகிருஷ்ணனர் (கறுப்பு நிறமுடையவர்) உதவி செய்தார். எனவே ஸ்ரீகிருஷ்ணர் தெய்வமாக வழிபடப்பட்டார். பஞ்சபாண்டவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என துர்வாசர் (தமிழர்கள் குலகுரு) என எல்லோரையும் நம்பச் செய்தார். ஸ்ரீராமன், ஸ்ரீகிருஷ்ணன் முத-யோர் வடபுலத்தில் வாழ்ந்த தமிழ் அரசர்கள் எனக் கருதலாகும். இதற்குப் பின் க- பிறந்தால் தமிழ் மக்கள் திராவிட தேசத்தில் குடியேனர். வடபாரதம் முழுதும் அன்னியர் ஆட்சிக்குட்பட்டது.

## 24. ஸ்ரீகிருஷ்ணன்

ஸ்ரீ கிருஷ்ணன் யாதவ குலத்தில் (யது வம்சம்) உதித்தவர். யாதவ குல அரசன் மருத்தன் (71) இராவணனுடன் யுத்தம் செய்தான். இவன் வழியில் கம்பள பர்ஹி (72), ருக்மகவசன் (73), பரிகன் (74), ருக்மேக (75), சியாமகன் (76), ஹரியன் (77), குசன் (78), சிதேகு (79), கசவன் (80), சாரவிருத்தன் (81), உறுவியன் (82), விதற்பன் (83), கிரதன் (84), குந்தி (85), விருஷ்ணி (86),

த்ருடன் (87), ரணத்ருஷ்ட்டு (88), விடூரதன் (89), தாசருகன் வியோமன் (90), தசரதன் (91), சகுனி (92), காம்பன் (93), தேவநாதன் (94), மது (95), துர்வசு (96), குருகுச்சன் (97), செந்து (98), புருஷோத்தமன் (சுரதன்) இவன் மனைவி ஹேமை - விஸ்வசஹறன் என்னும் ரகு வம்ச அரசன் மகன் (99), சத்வதன் (100), போஜன் (101), குரூரன் (102), கபோதராமன் (103), சமித்ரதன் (104), நளன் (105), ஆனககுந்துபி (106), புனர்வது (107), ஆருகன் (108), தேவகன் (109) (உபதேவன் சஹதேவன், தேவரக்ஷிதன்), தேவவான் (110).

தேவவான் மனைவிக்கு பிறந்த பெண்கள் விருகதேவி, உபதேவி, தேவரக்ஷிதை, ஸ்ரீதேவி, சுதேவி, தேவகி (வசுதேவன் மனைவி) தேவகியின் மைந்தன் ஸ்ரீகிருஷ்ணன் (111).

போஜனுடைய பிள்ளை யசமானன் (102) அவன் வழியில் விடூரதன் (103, ராஜாதிதேவன் (104), சுவேதாகனன் (105, சோனாஸ்வன் 106),, சத்யாஜித் (107), நரபதி விருஷ்ணி (108), (இவன் மனைவி பத்மாவதி), உக்கிரசேன மஹாராஜன் (109, கம்சன் (110) இவனது சகோதரர்கள் ந்யக்ரோதன், சுநாமா, அனகாஸ்வன், சங்கு, ராஷ்ட்ரபாலன், முஷ்டிகன், சுமுஷ்ட்டி, சுவிகரன், சுபூமி முத-யோர். உக்கிரசேன மஹாராஜாவின் பெண்கள் வருமாறு :

| **பெண்கள்** | **கணவன்** | **பிள்ளைகள்** |
|---|---|---|
| 1. கம்சை | தேவபாகன் | சித்ரகேது, பிருகத்பலன் |
| 2. கம்சாவதி | தேவசிரன் | சுவீரன், இக்ஷு‾மான் |
| 3. சதனு | ச்யாமகன் | ஹிரண்யகேசன், இரணியாக்ஷன் |
| 4. ராஷ்ட்ர பா-கை | ச்ருந்ஜயன் | விருஷன், துர்மர்ஷணன் |
| 5. கங்கை | கங்கன் | பகன், சத்யஜித், புருஜித் |

சத்ராஜித் (107) வழியில் சமுத்ரி, கீர்த்தி (108), கீர்த்தியின் மகன் குந்திபோஜன். சமுத்ரியின் மகன் பீஷ்மகன் (109), இவனுடைய பெண் ருக்மிணி (கணவன் ஸ்ரீகிருஷ்ணன்). பீஷ்மகன் புதல்வர்கள் ருக்மி, ருக்மீரதன், ருக்மிபாகு, ருக்மிகேசி, ருக்மிநேத்ரன். விருஷ்ணி (101)யின் வழியில் தேவமீடன் (102), மித்ரன் (103), யுதாஜித் (104), சினி (105), அனமித்ரன் (106), பருச்சனி (107), சித்ராதன் (108), ஸ்வர்கன் (109), அக்ரூரன் (110) (கம்சன் மந்திரி). அனமித்ரன் (106) வழியில் நக்னன் (107), பிரசேனன் (108), சத்ராஜித் (109), பங்ககானன் (110), சத்யபாமை (111) (ஸ்ரீகிருஷ்ணனின் மனைவி). யுதாஜித்தின் (104) மகன் சினி (105), அவன் வழியில் சத்யகன் (106), சங்கன் (107), விருஷ்ணி (108), சினி



(109), சத்யகன் (110), சாத்யகி (111) (கிருஷ்ணனின் ஒன்றுவிட்ட சகோதரன்), யுயுதானன் (112). யாதவ குலத்தில் மதுவின் (95) வழியில் ரைவதன் (96), ரிக்ஷன் (97), விஸ்வகர்பன் (98), அந்தகன் (99), சமானன் (100), விடூரதன் (101), சூரன் (102), சமி (103), பிரதிஹோத்ரன் (104), போஜன் (105), க்ருதி (106), த்ருதவர்மன் (107), பப்ரூ (105), சூரசேன் மஹாராஜன் (109) (மனைவி மரீஷை), வசுதேவன் (110), ஸ்ரீகிருஷ்ணன் (111). சூரசேன மஹாராஜாவின் (109) பிள்ளைகள் வசுதேவன், தேவபாகன் தேவசிரவன், அஷ்டகன், சங்கு, சூடன், ச்ருஞ்ஜயன், சயாமன், ச்மிசன், கண்டூஷன் முத-யோர்.

சூரசேன மஹாராஜாவின்

| பெண்கள் | கணவர் | புதல்வர்கள் |
|---|---|---|
| 1. குந்தி | பாண்டு | பஞ்சபாண்டவர்கள் |
| 2. ச்ருதசேவை | விருத்ததர்மன் (சேதி ராஜ்யம்) | தந்தவக்ரன் |
| 4. ச்ருதகீர்த்தி | த்ருஷ்டகேது (கேகய அரசன்) | ஜயந்தன் |
| 5. ராஜாதிதேவி | அரிமர்த்தன் (பாண்டியன்), அவந்தி தேசம் | விந்தன், அனுவிந்தன் |

சூரசேன மஹாராஜன் பிள்ளை வசுதேவன் (110) என்னும் ஆனகதுந்துபி

| வசுதேவன் மனைவிகள் | பிள்ளைகள் |
|---|---|
| 1. தேவகி | சுஷேனண், கீர்த்திமான், பத்திரசேனன், புடதாசன், உதாசி, விதேகன், 7வது சங்கர்ஷணன் (பலராமன்), 8வது ஸ்ரீகிருஷ்ணன், சுபத்திரை (பெண்) (முதல் 6 பேர் கம்சனால் கொல்லப்பட்டனர். |
| 2. உபதேவி | ஜெயன், ரோசமானன், வர்த்தமானன், தேவலன், கல்வபிருக்ஷன் ஆகிய 10 பேர். |
| 3. சக்ரதேவி | ஹவ்யவாஹன் முத-ய 8 பேர் |
| 4. விருகதேவி | நந்தன், உபநந்தன், கிருதகன், த்ரவிஷ்டன் |
| 5. தேவரக்ஷிதை (சிரத்தை) | கௌசிகன், நவசாத்திரன், கேதன் |
| 6. மித்ரதேவி | புண்ட்ரன், பலன், பத்திரன், பிரசியமன், பிரசித்தன் |
| 7. ஸ்ரீதேவி | கபிலன், வசு, அம்சன், சுதனன் |

1Ist Proof



8. ரோகினி பலராமன் (தேவகி கர்ப்பத்தி-ருந்து கொண்டு வரப்பட்டவன்), கேதன், அனு, யது, புகு, சித்ராக்ஷி (பெண்)
9. பௌரவி (பாண்டிய இளவரசி) சுபத்திரன், பத்திரபாகு, துர்மதன், பத்திரன், பூதன் (பூதபுராணம் செய்தவன்)
10. பத்திரை கேசினி (பெண்) உபநந்தன், கிரிதகன், தரன்
11. ரோசனை (விதற்ப இளவரசி) அஸ்த்தன், ஹேமாங்கதன்
12. இளை உருவலகன்

## ஸ்ரீகிருஷ்ணன் ஜாதகம்

ஆதாரம் :

1. ஸ்ரீமத் பாகவதம் 10வது காண்டம், 30வது அத்யாயம்-சந்திரன், ரோகிணி நக்ஷத்திரம் அருகில் இருந்தான்.
2. விஷ்ணுபுராணம் 5வது அம்சம், 1வது அத்யாயம், 26வது ஸ்லோகம்-ஆவணி மாதம், கிருஷ்ணபக்ஷம், அஷ்டமி நள்ளிரவு.
3. ஹரிவம்சம்-முதல் பாகம்-52வது அத்யாயம்-ஆவணி மாதம், கிருஷ்ணபக்ஷம், அஷ்டமி, நள்ளிரவு.
4. ஸ்ரீமத் பாகவதம் - 11வது காண்டம் - 7வது அத்யாயம்-2-வது ஸ்லோகம் - கிருஷ்ணன் பரமபதம் எகியதும் க- பிறந்தது. பிரமாதி □

(ஸ்ரீ கிருஷ்ணனுடைய அவதார காலத்தில் 5 கிரஹகங்கள் சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், குரு, உச்சம்). க-யுகம் பிறக்கும் போது கும்பராசியில் (அவிட்டத்தில்) புதன், சுக்ரன், செவ், குரு, சனி இந்த 5 கிரஹங்களும் ஒரே ராசியில் இருந்தது). க-பிறந்தது 18-2-3102B.C. (அல்லது 3100 B.C. என்று கணக்கிடப்படுகிறது.)

ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீமுக வருடம், தக்ஷிணாயணம், ஆவணி மாதம், கிருஷ்ணபக்ஷம், அஷ்டமி திதி, ரோகிணி நக்ஷத்திரம், புதன்கிழமை இரவு 11.40க்கு வடமதுரை சிறையில் வசுதேவருக்கும், தேவகிக்கும் 8வது மகனாக பிறந்தார்.

| | | | |
|---|---|---|---|
| | ல / சந் | | |
| | இராசி | | செவ் சுக் ராகு |
| கேது | | | சூரி குரு |
| | சனி | | புதன் |

| | | | |
|---|---|---|---|
| | | கேது | ல / சந் |
| | அம்சம் | | செவ் |
| புதன் | | | |
| குரு | ராகு சனி | சுக் | சூரி |



பிறந்த இடம் வடமதுரை - உத்திரப்பிரதேசம் - தீர்க்கரேகை 88-41 கிழக்கு அக்ஷரேகை 27-25, வடக்கு அயனாம்சம் + 50-49 ஜனன காலத்தில் சந்திர தசை இருப்பு 11 □ 2 மீ, 21 நாட்கள். ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தது 27.7.3112 B.C. என்றும் கணக்கிட்டு கூறப்படுகிறது.

மஹாபாரத யுத்த காலத்தில் 14ஆம் நாள் யுத்தத்தில் மாலை வேளையில் ஒரு தூமகேதுவினால் சிறிது நேரம் சூரியன் மறைக்கப்பட்டது என்றும் ( "புஷ்யம் சக்ரம்ய திஷ்டமஹி சேன யோகா சிவம் கோரம் கரிஷ்யதி மஹா கோரா). சப்தரிஷி மண்டலம், மகநக்ஷத்திற்கு அருகில் கி.மு. 3100-இல் இருந்தது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மஹாபாரத காலத்தில் சூரிய வம் அரசன் பிருகத்பலன் இருந்தான் என்றும் கூறப்படுகிறது. ரகு வம்சத்தில் பிறந்த பிருகத்பலன் பற்றி அடுத்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

# 25. ரகு வம்சம்

ரகுவினுடைய வம்சத்தில் உதித்த ஸ்ரீராமனுக்கு பிறகு (71) அவன் வழியில் (துஷ்யந்தன்-அத்யாயத்தின் காண்க) பலன் (84), ஜலன் (85), நலன் (86), வலன் (87), உற்கன் (88), வஜ்ஜிரநாபன் (89), சங்கணன் (90), வியுக்ஷிதாஸ்வன் என்னும் சஹஸ்வான் (91), விஸ்வஸஹன் (92), வீரசேனன் (93) (சஹஸ்வானின் மகன்), ஹிரண்யநாபன் (93), (மற்றும் ஹேமை + புருஷோத்தமன்), கௌசல்யன் (94), கோசலை (94), பிரமிஷ்டன் (95), புத்திரன் (96), தனயன் (97), புஷ்யன் (98), த்ருவசந்தி (99), (இவன் மனைவி மனோரமை - க-ங்கராஜன் வீரசேனன் மகள் (மற்றைய மனைவி லீலாவதி - உஜ்ஜியினி அரசன் யுதாஜித்தின் மகள்), சுதர்ஸனன் (100, அக்னிவர்ணன் (101, சீக்ரஹன் (102), மரு (103), பிரசுருகன் (104), சுசாந்தி (105), அமர்ஷ (106), உபரிசிரவசு (107) (சேதி ராஜ்ய அரசன்).

(சுதர்ஸனன் (100) பராசக்தியின் அருளால் மீண்டும் எதிரிகளை ஜெயித்து அரசு கட்டில் ஏறினான். சுதர்ஸனின் மனைவி சசிகலை (காசிராஜன் மகன்).

உபரிசிரவசு (107) (மனைவி கிருதாசி மற்றும் அத்ரிகா) உபரிசிரவசுவின் மகள் பத்மினி. இவள் சோழநாடு திருக்கண்ணாபுரம் வந்து திருமா-ன் அம்சமான சோழ அரசன் சௌரிராஜனை மணந்தாள். உபரிகிரவசின் வழியில் ஸஹஸ்வான் (108), விஸ்வஸஹன் (109), இவன் சகோதரன் சந்திராபூபன், நக்னஜித்

(109). இவனது மகள் சத்யை ஸ்ரீகிருஷ்ணனின் மனைவி (111), விஸ்வஸஹன் புதல்வன் பிருகத்பலன் (110), தீர்க்கபிரஞ்ஞன் (111), தீர்க்கபிரக்ஞன், பிருகத்பலன் இருவரும் மஹாபாரத யுத்தத்தில் பீமனால் கொல்லப்பட்டான்.

(வைவஸ்ஸ¬தன் (3) முதல் தீர்க்க பிரக்ஞன் வரை (111) நூற்றி எட்டு தலைமுறை அரசர்கள் சூர்ய வம்சத்தில் ஆட்சி செய்தனர் (111 - 3 = 108 X 100 = 10,800 வைவஸ்வத மநு 13,900 B.C. மஹாபாரத காலம்). 13,900-10800= 8100 B.C.

**குரு வம்சம் :** சந்திரவம்ச அரசன் துஷ்யந்தன் (84) இவனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்தவன் பரதன் (85). இவனுக்கு சுநந்தை முத-ய மூன்று மனைவிகள். இவர்களிடத்தில் ஒன்பது பிள்ளைகள் பிறந்தனர், தன் மனைவிகளை சந்தேகித்து தனது மனைவிகளையும் பிள்ளைகளையும் பரதன் கொன்றுவிட்டு பிரஹஸ்பதிக்கும் மம்தாவுக்கும் பிறந்த பரத்வாஜனை தனது வாரிசாக்கினான் (பிருஹஸ்பதியின் தம்பி உசத்தியர் இவர் மனைவி மம்தா. தனது தம்பியின் மனைவி மம்தாவுடன் கூடி பிரஹஸ்பதி தீர்க்கதமசு என்னும் முனிவர் - பிறவிக் குருடர்). பெற்றார். பரத்வாஜனுக்குப் பின்பு மன்யு (87) பிருககஷத்திரன் (88), சுகோத்திரன் (89) (இவன் மனைவி விருஷ்ணி குல அரசன் பீமன் மகள் அசலாதேவி). ஹஸ்தி (90) (ஹஸ்தினாபுரம் கட்டியவன்) இவன் மனைவி சந்தனுவதி (சூரகேதுவின் மகள்), நிகும்பன் (91) (மனைவி சுதேவி), அஜமீடன் (92) (இவன் மனைவி கேசினி விதற்ப இளவரசி) அஜமீடனுக்கும் கௌசல்யாதேவிக்கும் பிறந்தவன் ரிக்ஷன் (93) இவன் மகன் சவ்வருணன் (94) (சவ்வருணனுக்கும் சூரியன் மகள் தபதிக்கும் பிறந்தவன் குரு (95) (இவன் மனைவி சுவாலா தேவி). குருவின் புதல்வர்கள் சுதனு, ஜன்னு, பரீக்ஷித்து, அரிமேஜயன்.

குரு வம்சத்தில் (95), ஜன்னு (96), வடூரதன் (97), சார்வபௌமன் (8), ஜயசேனன் (99), ஆராதிகன் (100), அயுதாயு (101), சுரதன் (102), தேவாதிதி (103), ரிக்ஷன் (104), பீமசேனன் (105), திலீபன் (106), பிரத்தீபன் (107), பிரத்தீபன் புதல்வர்கள் தேவாபி, பாக்லீகன், சந்தனு, தேவாபியை வேதநிந்தகன் என்று அஸ்வநாபன் என்ற அமைச்சன் சந்தனுவை மன்னனாக்கினான். சந்தனுவுக்கும் (108) கங்கைக்கும் பிறந்தவன் தேவவிரதன் (பீஷ்மன்). சந்தனுக்கும் மத்ஸயகந்தி என்பவளுக்கும் பிறந்தவன் விசித்திரவீர்யன். இவன் மகன் பாண்டு (110), பாண்டுவுக்கும் குந்திக்கும் பிறந்தவர்கள் பாண்டவர்கள் சந்தனு (109) மத்ஸயராஜன் மகள் மத்ஸயகந்தியை மணந்து சித்திராங்கதனை (109)ப் பெற்றாள். சித்திராங்கதன் மகன் திருதராஷ்ட்ரன் (110),திருதராஷ்ட்ரன் (110) புதல்வர்கள் கௌரவர்கள் (துரியோதனன் முத-யவர்).



விவஸ்வான் (3) என்னும் வழியில் இளை (53), பெண்ணாக மாறிய இளை சந்திரன் மகன் புதனுடன் கூடி புரூராவனை (54)ப் பெற்றாள். சந்திரவம்ச அரசன் வழியில் பரதன் மற்றும் குரு பிறந்தனர். குருவின் வழியில் பாண்டு (110) இவனது மக்கள் பஞ்சபாண்டவர்கள் (111) (111-3=108 X 100 = 10,800 வருடங்கள் வைவஸ்ஸ¬தன் 13,900 B.C. -10,800=3100 B.C.) இதுவே மஹபாரத காலம்.

சக்தி என்னும் முனிவரின் மகன் பராசரர். இவர் மத்ஸ்யகந்தியுடன் கூடி வியாஸர் (109) என்பவரைப் பெற்றார். வியாஸர் தேவ மங்கை கிருதாசியைக் கூடி சுகர் என்பவரைப் பெற்றான். சுகர், மேனகை (பிவரி) என்பவளைக் கூடி கீர்த்தி (பெண்), கிருஷ்ணன், பூரிசிரவசு, சம்பு, கௌரவன், புரபு என்னும் புதல்வர்களைப் பெற்றான். கீர்த்தி என்பவள் அனுகன் (விப்ரராஜன் மகன்) என்பவளை மணந்து பிரமதத்தன் என்பவனைப் பெற்றாள். பிரமதத்தன் வழியில் சன்னிதி விஸ்வசேனன் மற்றும் உக்ராயுதன் வாழ்ந்தனர்.

இனி மஹாபாரதக் கதை, இக்காலத்தில் வாழ்ந்த அரசர்கள் பற்றி அடுத்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

## 26. மஹாபாரத காலத்தில் வாழ்ந்த அரசர்கள்

| | |
|---|---|
| 1. உக்கிரசேனன் | யாதவ குலம்-வடமதுரை |
| 2. சூரசேனன் | |
| 3. கம்சன் | உக்ரசேனன் மகன், வடமதுரை அரசன் |
| 4. வசுதேவன் | கம்சனின் தங்கை கணவன் |
| 5. ஜராசந்தன் | மகத தேசம் |
| 6. நரகாசுரன் | காமரூபம்-பிராக்ஜோதிஷ்புரம் (Guahati) |
| 7. பகதத்தன் | நரகாசுரன் மகன் |
| 8. பீஷ்மன் | கங்காபுத்திரன்-அஸ்தினாபுரம்-குருவம்சம் |
| 9. திருதராஷ்ட்ரன் | |
| 10. பாண்டு | |
| 11. கர்ணன் | குந்தி புத்திரன்-அங்க தேசம் |
| 12. தருமன் | |
| 13. பீமன் | பஞ்சபாண்டவர்கள் அஸ்தினாபுரம் -குருவம்சம் (Aligar, Meerut, Delhi) |
| 14. அருச்சுனன் | |
| 15. நகுலன் | |
| 16. சகாதேவன் | |

| | |
|---|---|
| 17. பலராமன் <br> 18. கிருஷ்ணன் | துவாரகை அரசர்கள்- யாதவ வம்சங்கள் |
| 19. சகுனி | காந்தார தேசம் (Kandahar), மல்லதேசம் (Kabul) |
| 20. சிசுபாலன் | குண்டினபுரம்-பீஷ்மன் மகன் |
| 21. தந்தவக்ரன் | காரூச தேசம்-யாதவ குலம் |
| 22. நீலன் | மாகிஷ்மதி அரசன் (பாலகேயர், ஜயம்பகர், தைத்யர், அர்த்தவாலர், அம்பரர்) |
| 23. சுவர்மன் | தாசார்ண தேசம் (தலைநகர் மதுமதி) |
| 24. த்ருஷ்டத்யும்னன் | பாஞ்சாலம் (திருஷ்டகேது, சிகண்டியின் தந்தை) (Rohilkand) |
| 25. தீர்க்கபிரஞ்சன், பிரகத்பலன் | கோசல தேசம்-சூரியவம்சம் |
| 26. கௌசல்யன், கோபாலன் | ஸ்ரீராமன் வழியினர் |
| 27. ஜம்பகன் | சர்மண்வதி நகரம் |
| 28. விந்தன், அனுவிந்தன் | அவந்தி தேசம் |
| 29. பீஷ்மகன் | குண்டினபுரம் |
| 30. சித்திரவாகனன் | மணா- (மிருத்திகாவதி), காஷ்மீர் |
| 31. கடோத்கஜன் <br> 32. அலம்பகன் | இலங்கை விபீஷணன் வழியினர் |
| 33. பூரிசிரவசு | யாதவ அரசன் |
| 34. யுதாமன்யு | கேகயம் |
| 35. விருககஷத்திரன் | சிந்து தேசம் (ஜயத்ரதன் தந்தை) |
| 36. ஜயத்ரதன் | நரகாசுரன் மகன் (மகதம்) |
| 37. உதியன்சேரலாதன் | கேரளம் |
| 38. அநாகுல பாண்டியன் | பாண்டிய தேசம் |
| 39. சோழன் செங்கண்ணன் (குமராங்குசன்) | சோழ தேசம் |
| 40. சத்திய விரதன் | சேர நாடு |
| 41. அங்கன் | மிலேச்ச தேசம் |
| 42. சம்புகுப்தன் | கழுகு அரசர்கள் கந்தமாதனம் |
| 43. பப்ருவாகனன் | மிருத்திகாவதி அரசன் (பாண்டியர் வழி), மணா-, காஷ்மீரம் |
| 44.அரவான் | நாக நாடு அரசன் |
| 45.பர்பரீகன் | பீமன் பேன்-காமாக்யா தேசம் |
| 46.சாத்யகி | யாதவ குலம்-கிருஷ்ணனின் சகோதரன் |
| 47.குந்திபோஜன் | போஜ தேசம் |
| 48.சல்-யன் | மத்திர தேசம்-பாண்டவர்களின் மாமன் |
| 49.துரோணர் | கௌரவர்களின் குரு |
| 50.அஸ்வத்தாமா | (துரோணரின் மகள்) |



| | |
|---|---|
| 51.கிருபன் | கௌவர்கள் குரு |
| 52.துர்யோதன்(சுயோதனன்) திருதராஷ்ட்ரன் மகன் | |
| 53.சுதக்ஷிணன் | (காம்போஜம்) |
| 54.சுபலன் | காந்தாரம் (காந்தாரியின் தந்தை) |
| 55.சுசர்மன் | திரிகர்த்த தேசம் (விராடம் அருகில்) |

56. சேகிதானன், 57. சங்கன் (மத்ஸய ராஜன்), 58. கேதரன், 59. துர்மதன், 60. விவிம்சதி, 61. விருஷசேனன், 62. ஜயன் (போஜன்), 63. சுபாகு, 64. காளிங்கன், 65. காம்போஜன் (Jalalabad, Afghan) 66. வத்ஸ நாட்டு அரசன் (Allahabad) 67. சேதி அரசன் (Kanpur) முத-ய 67 தேச அரசர்கள் வாழ்ந்தனர். (இதர அரசர்களின் பரம்பரையை மஹாபாரதக் கதையில் காண்க).

(விராட தேசம் என்பது திராவிடர்கள் தேசம். பஞ்ச திராவிடர்கள், பஞ்ச கௌடர்கள் அக்காலத்தில் வாழ்ந்தனர். கீழ்க்கண்ட ஸ்லோகத்தால் அது விளக்கப்படுகிறது. பாண்டிய சோழ, சேர, தேசங்களில் வாழ்பவர்களை இப்பாடல் குறிக்கவில்லை).

“கராடம் ச விராடம் ச
மராடம் கொங்கணம் ததா
ஹவ்யகம் தௌ-வம் ச
கேரளம் சேஇதி சம்யகம்

(கராடம் - கர்ஹாட், விராடம் - தெற்கு மராட்டியம், ஹவ்யகம் - வடகன்னடம் - கொங்கணம் - கொண்கானம் - பனவிஸே, கோவா, தௌ-வம் - துளுதேசம், கேரளம் - மலையாளதேசம் - சத்யகம் - சத்யை புத்திரர்கள் வாழும் தெற்கு, கேரளம் - இங்கு வாழ்பவர்கள் திராவிட இனத்தவர்).

1. **திராவிடர்கள் :** ஆந்திரா,கன்னடர்,மராட்டியர்,கூர்ஜரர்,பல்லவர்
2. **கௌடர்கள் :** உத்கலர் (ஒரிஸ்ஸர்), கன்யாகுப்ஜம் (பஞ்சாப்), கௌடர் (வங்கம், க-ங்கம், சங்கம்), ஸாரஸ்வதர் (காஷ்மீர்), மைதிலா (நேப்பாளிகள்).
3. **பாண்டிய, சோழ தேசம் :** (வேங்கடம் முதல் குமரி - கந்தவர்கள், நாகர்கள்)

(மஹாபாரத காலத்தில் பாரதத்திற்கு வெளியே இருந்து வந்த மக்கள் அசுரர்கள், ஹேஹயர்கள், அரக்கர்கள் இன்றும் பல இன மக்கள் பாரதகலாசாரத்தை (திராவிட கலாசாரத்தை) அழித்து, வரலாற்றை அழித்து கொடுங்கோண்மை புரிந்ததால் மஹாபாரதப் போர் நடந்தது என்று கொள்ளலாகும். பஞ்சபாண்டவர்கள், கிருஷ்ணன் உதவியுடன் திராவிட கலாச்சாரத்தை - வேதங்களை காப்பாற்ற போரிட்டனர் என்று யூகிக்கப்படுகிறது.

21 தீர்த்தங்கரர் - அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள முனிசுவ்ரதர் (20 ஆவது தீர்த்தங்கரர் (கி.மு. 6900) என்பவர் இராமாயண காலத்தில் சமண மதத்தை பரப்பி வந்தார். எல்லோரையும் ஒரு மதத்தில் இணைக்கவும் - பிராக்கிருத மொழி மற்றும் பல பாரத மொழிகளை வளர்க்கவும், கொல்லாமை முத-ய நன்னெறிகள் தழைக்கவும், சாதி பேதங்கள் அழியவும் போதித்தார். இவர் வழியில் 21 ஆவது தீர்த்தங்கரர் நமிநாதர் (இக்ஷுவாகு வம்சம்-மிதிலை-விஜய மகாராஜனுக்கும் பிப்பலா தேவிக்கும் பிறந்தவர்) அவருக்குப் பிறகு 22-ஆவது தீர்த்தங்கரர்-நேமி (அரிஷ்ட நேமி) மஹபாரத காலத்தில் (கி.மு. 3106) வாழ்ந்து சமணத்தை பரப்பினர். இவர் துவாரகை அரசன் சமுத்திர விஜயன் என்பவனுக்கும் சிவதேவி என்பவளுக்கும் பிறந்தவர். இவரது சீடர்கள் காஞ்சிபுரம் வணிகர்கள் சூரதத்தன், சுதத்தன் என்னும் சகோதரர்கள் பிரசித்தமானவர்கள்.

இக்காலத்தில் அகஸ்த்தியரின் சீடர்களில் ஒருவரான த்ருணதூமாக்னி வழியில் வந்த பரசுராமன் கேரள தேசத்தில் வாழ்ந்து வடபுலத்து க்ஷத்திரிய அரசர்களின் பலதாரமணம், சுயம்வரம், கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்தும் பாரத திராவிட கலாசாரத்தை காப்பாற்றவும் பெரும் போர் நிகழ்த்தி வந்தார்.

**ஸ்ரீ கிருஷ்ணனின் மனைவிகள் பிள்ளைகள்**

| மனைவிகள் | பிள்ளைகள் |
|---|---|
| 1. ருக்மிணி (குண்டினபுரி பீஷ்மகன் மகள்) | சாருதேஷ்ணன், சுதேஷ்ணன், சாருகுப்தன், சாரு, சுசாரு, பத்திரசாரு, அனுகுப்தன், சதாசிவன்,பரசு,ப்ரத்யும்னன், சாருமதி(பெண்) |
| 2. சத்யபாமை (சத்ராஜித்தின் மகள்) | பீமதக்ஷிணன்,பானு,சீர்த்திமான்உரோசிதன், பிரவத்திரன்,சலந்தமன் மற்றும் 4 பெண்கள். |
| 3. ஜாம்பவதி (ஜாம்பவந்தன் மகள்) | சாருதிஷ்ட்ரன்,சாம்பன் (இவன் துரியோதனன் பெண்ணை ஸ்வயம்வரத்தில் தூக்கி்ச சென்றான்). |
| 4. மித்ரவிந்தை (காளிந்தன் அவந்தி) | மித்ரவிந்தன். |
| 5. பத்திரை (கேகயன் சுருதகீர்த்தியின் மகன்) | சங்கரசித்தன், அனியன் |
| 6. சத்யவதி (கோசல அரசன் நக்னஜித்தின் மகள்) | மித்திரபாகு, சுநீதன், அஸ்வசேனன். |
| 7. லக்ஷணை (மத்திரதேசாபதி சுதேஷ்ணன் மகள்) | பிரக்கோடன், கோத்ரவான் முத-ய 10 பேர். |
| 8. காளிந்தி (காளிங்கன் மகள்) | சோமகன்(மற்றும்ஸ்ரீ கிருஷ்ணனது மனைவிகள் சுபாமை,நசுசி,காந்தரி, லக்ஷ்மி,மாத்ரி,கௌசலை,விஜயை முத-ய 10,101 பேர்). |



ஸ்ரீ கிருஷ்ணன் மேலும் சுரபானு கோநாயகன் மகன் விருஷபானு, கோநாயன் மகள் ராதையையும் மணந்தான். (விருஷபானுவின் மனைவி கலாவதி-தக்ஷன் வம்சம்).

பலராமன் மனைவி ரேவதி (ரைவதன் அல்லது இந்திரத்துய்மன் மகள்) பலராமன் மகன் நிசித்தன், உல்முகன்.

(ஸ்ரீகிருஷ்ணர், பலராமருக்கு ஜாதக கர்மா செய்தவர் கார்க்கி என்னும் முனிவர். இவர் வசுதேவரின் நண்பர். பின்பு யாதவர்களிடம் விரோதம் பூண்டு எகிப்து நாட்டு யவன அரசனிடம் சென்றார். யவன அரசனின் (மோரியன்) மனைவிக்கும், கார்க்கி முனிவருக்கும் காலகேது (காலநேமி) பிறந்தான். (அக்காலத்தில் எகிப்தில் ஆதன் என்னும் சேரமன்னன் (மின் அல்லது மநு) கி.மு. 4241இல் முதல் வமிச அரசனாக இருந்தான். இவனே மெம்பிஸ் என்னுமிடத்தில் நைல் நதியில் அணை கட்டினான். மநுவிக்குப் பிறகு எகிப்தில் 330 அரசர்கள் ஆட்சி செய்தனர். இவர்களில் சிசிரன் (சிஸோவிட்ரிஸ்) என்பவன் கி.மு. 4000-இல் பாலஸ்தீனத்தை வென்று இந்தியாவில் உள்ள சிந்து நதிக்கரை வரை படையெடுத்து வந்தான். எகிப்திய அரசர்களில் ஆஹா-ஊஹு (கந்தர்வன், நாரிமன் (Narmen) உதியன் சேரன் (Djo-Ser) உதியன் சேரன் திதி (Djo-Ser-Teti) ஹேமகன் (Hemaka) முத-யவர்கள் பிரசித்தமான யவன அரசர்கள். தமிழகத்தி-ருந்து சென்ற சேரர் மரபினர். இவர்களிடத்தில் கார்க்கிய முனிவர் சென்று தனது புதல்வன் காலநேமியுடன் பாரத-யாதவ அரசர்கள் மீது கோபம் கொண்டு படையெடுத்து வந்தார். காலகேதுவை முசுகுந்தன் என்னும் சோழன் கொன்றான்.)

ஸ்ரீகிருஷ்ணன், குசேலர் முத-யவர்களுக்கு இளவயதில் கல்வி, யோக சாஸ்த்திரம் கற்பித்தவர் சாந்தீபினி முனிவர். இவர் தமிழ் அறிந்தவர். ஸ்ரீகிருஷ்ணருக்கு தமிழ் இலக்கணமும், இசை நுணுக்கமும் போதிக்கப்பட்டது. (சாந்தீபினி முனிவர் ஆஸ்ரமம் அவந்தி தேசத்தில் உஜ்ஜயினிக்கருகில் இருந்தது.)

ஸ்ரீகிருஷ்ணன் தென்புலம் வந்து சிதம்பரம் (தில்லை) வந்து தில்லைவாழ் மூவாயிரம் அந்தணர்களிடமும் தமிழ் பயின்றார். (சிற்றம்பலம்-சிதம்பரம்; மா அம்பலம் = மாம்பலம் - சிற்றம்பலத்தில் வியாக்கிர பாதருக்கும், மாம்பலத்தில் அகஸ்த்தியருக்கும் சிவ நடன தரிசனம் கிடைத்தது.) வியாக்கிர பாதர் என்பவர் மத்தியந்தன்

முனிவரின் புதல்வர். வியாக்கிர பாதர் (திருமன்யு) என்னும் முனிவர் வசிட்டவருடைய தங்கையை மணந்து உபமன்னியு என்பவரைப் பெற்றார். வசிட்டர் ஆஸ்ரமத்தில் உள்ள காமதேனு (மகள் சபளை, விமலை மற்றும் நந்தினி)-வின் பாலை அருந்தியதால் ஞானமைடைந்து உபமன்யு முனிவரானார். இவர் சிதம்பரத்தில் வாழ்ந்த போது ஸ்ரீகிருஷ்ணன் இவரிடம் சிவ பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றார். (உபமன்யு முனிவர் புராணம்-திருச்சாய்க்காடு என்னும் திருவெண்காடு, திருப்பேர் நகர், வன்புருஷோத்தமம் என்னும் நாங்கூர் ஸ்தலபுராணம் காண்க). வியாக்ர பாதர், பதஞ்ச-சிதம்பரத்தில் சிவநடனம் கணடனர் (3100 B.C. )

ஸ்ரீகிருஷ்ணர் காலத்தில் மகததேசத்தை ஆண்டவன் ஜராசந்தன் (ஜராசந்தன் உஜ்ஜயினி காளியால் உயிர்ப்பிக்கப்பட்டவன்). குரு வம்சத்தில் சுதனு (95), பிரசவன் (97), சுகோத்திரன் (98), சியவனன் (99), உபரிசிரவசு (100), பிரகத்ரதன் (101, குசாக்கிரன் (102), விருஷயன் (103), புஷ்பவான் (104), சத்யவரிதன் (105), சதனுவா (106), சந்து (107), சாம்பவன் (108), பிருகத்ரதன் (109), ஜராசந்தன் (110), சகதேவன் (111) பிறந்தனர். பிரத்தீபன் (107) வழியில் பாகுலீகன் (108), சோமதத்தன் (109), பூரிசிரவசு, சல்-யன் (110) சல்-யன் பாண்டவர்களுக்கு மாமன் முறை.

ஸ்ரீகிருஷ்ணன் காலத்தில் மிதிலையை ஆண்ட அரசன் பகுளாஸ்வன் என்னும் ஜனகன். இவனது நண்பன் சுருதிசேனன் என்னும் பிராமணன் சுருதிசேனனும், ஸ்ரீகிருஷ்ணனும் நண்பர்கள். மிதிலையில் சீரத்வஜன் என்னும் ஜனகனுக்கு (70) பிறகு குசத்வஜன் பிள்ளை பானுமான் (71) (ஸ்ரீராமன் காலம்), சுத்யும்னன் (72), கும்பன் (73), நந்திசேனன் (74), ஊர்ஜன் (78), ரிதத்துவஜன் (79) (ரிதத்துவஜன் பட்ட மஹிரிஷி மதாலஸா என்பவன் சிறந்த ஞானி. தனது மூன்று பி ்ள்ளைகளையும் ஞானியாக்கினாள். ரிதத்துவஜனுக்குப் பிறகு சிகித்வஜன் (80) (இவன் மனைவி சூடலா, சிகித்துவஜனுக்கு உபதேசம் செய்து ஞானியாக்கினாள்). பிறகு ஊர்த்துவகேது (81), ரஞ்ஜனன் (82), புருஜித்து (83), அரிஷ்டநேமி (84), கிருஞ்ஜன் (84), ஷேமாவி (85), அனேனசு (86), பவுரதன் (87), கிருதாயு (88), சுபார்ஸவன் (89), சத்யராதன் (90), சுபர்ணன் (96), சுவர்ச்சு (96), சுபாஷணன் (97), சுங ்ருதன் (98), ஜயன் (99), விஜயன் (100), ஹிருதன் (101), சுநயனன் (102), வீதஹவ்யன் (103), திருதி (104), வகுளாஸ்வன் (105), கிருதி (106), திருதி (107), பகுளாஸ்வன் (108) சந்திரசாவர்ணி (109), அனகன் (பௌமன்) (110), பகுளாஸ்வன் (ஜனகன்) (111) (ஸ்ரீகிருஷ்ணர் காலத்தவன்).



ஸ்ரீகிருஷ்ணர் காலத்தில் பாஞ்சால தேசத்தில் அரசனாக இருந்தவன் துருபதன். இவனது மகளே திரௌபதி (பாஞ்சா-). பாண்டியவர்கள் வமிசம் (சந்திர வம்சம்) பாஞ்சாலத்திலும் ஆட்சி செய்தது. துஷ்யந்தன் மகன் பரதனக்குப் பிறகு கண்ணுவரிஷி (தமிழர்) ஆலோசனையின் பேரில் பரத்வாஜன் என்னும் அரசன் ஆண்டான். பரத்வாஜனுக்குப் பிறகு அவன் வழியில் அஜமீடன் (93), கண்ணுவன் (94) மேதாதிதி (95), நீலன் (96), சாந்தி (97), புருசானு, பிரது, பத்திராஸ்வன் (98), சுசாந்தி (99), சோமகன் என்னும் புரஞ்ஜயன் (100) (பாஞ்சாலர்கள் ஐந்து பிரிவினர் சோமகர்கள் சிருஞ்ஜயர்கன், பிரகதிஷுூக்கள், யவீநரர்கள், கிரமிலாஸ்வர்கள்). புரஞ்ஜயனுக்குப் பிறகு (100), இந்திரசேனை (101), ஹர்யஸ்வன் (102) (இவன் மனைவி மேனகை), திவோதாஸ் (103), மித்ராயு (104), சயவனன் (105), சயவனன் காலத்தில் மீண்டும் எகிப்து தேசத்தி-ருந்து தஸ்யூக்கள் என்னும் அடிமை அரசர்கள் சுசனன், குவயன் முத-யவர்கள் பாரதத்தில் நுழைந்து சிந்து நதியைத் தாண்டி பாஞ்சாலத்தின் மீது படையெடுத்தனர். இவன் தஸ்யூக்கள் நகர்களான் பிப்ரு, மிருகயா, சசுவான் முத-யவற்றை அழித்து ஐந்து லக்ஷம் தஸ்யூக்களை கொன்றான் ரிஜஸ்வான் (ருக்வேதம் 6-26-211-25) ச்யவனன் என்னும் திவோதாஸ் (105)-இன் மகன் சுதாஸ் (106). இவன் யயாதி வழியில் வந்த அனு, துருகியு வழி வந்த 6666 பேரையும் ஐந்து தாஸயூ அடிமை அரசர்களையும் கொன்றான். பிருஷதன் (109), இவன் மகன் துருபதன் (110) (இவனது நண்பர் துரோணாசாரியர் பிராமணன்) துருவதன் மகள் த்ரௌபதி (அர்ஜுூனன் சுயம்வரத்தில் மணந்தான்) புதல்வர்கள் சிகண்டி, த்ருஷ்டத்யும்னன் (111), திருஷ்டகேது (111).

## மஹாபாரதக் கதை

இக்காலத்தில் அஸ்தினாபுரத்தை (புதுதில்- கிழக்கு 51 மைல் மீரட்டுக்கு 22 மைல் மேற்கு) ஆண்ட குருவம்ச அரசன் சந்தனு. இவன் கங்கையை மணந்து தேவவிரதன் (பீஷ்மன்) என்பவனைப் பெற்றான். பிறகு சந்தனு, மத்ஸராஜன் பெண்ணான மத்ஸ்யகந்தி (பரிமளகந்தி) என்பவளை மணக்க விரும்பவே, பீஷ்மன் தனது தந்தையின் விருப்பத்தை அறிந்து, இளவரசு பட்டத்தையும், திருமணத்தையும் துறந்தான். சந்தனுவுக்கும் பரிமளகந்திக்கும் சித்திராங்கதன், விசித்திர வீர்யன் என்னும் இரண்டு புதல்வர்கள் பிறந்தனர். (சித்திராங்கதன் போரில் கந்தர்வ அரசன் சித்ரரதன் என்பவனால் கொல்லப்பட்டான். பிறகு விசித்திர வீர்யன் பட்டமேற்றான்). காசியரசன் பெண்களான அம்பிகை, அம்பா-கை, அம்பா இம்மூவரையும் பீஷ்மன் தூக்கி வந்தான். அம்பா என்பவள்

சாளுவ அரசனை காத-த்ததால் பீஷ்மன் அவளை திருப்பியனுப்பிவிட்டான். இவளை காசியரசனும், சாளுவனும் ஏற்காததால் பாஞ்சாலதேசம் வந்து தற்கொலை செய்து கொண்டாள். இவளே சிகண்டியாக (அ-) பிறந்தாள்.

சித்திராங்கதன், விசித்திர வீர்யன் இருவருமே பிள்ளைகளில்லாமல் இறந்து விட்டதால், மத்ஸயகந்தி (பரிமளகந்தி)க்கும் பராசர முனிவனுக்கும் பிறந்த வியாஸர் (கிருஷ்ண த்வைபாயனர்) அம்பிகையின் மூலம் த்ருதராஷ்ட்ரனையும், அம்பா-கையின் மூலம் பாண்டுவையும், காந்தினி என்னும் தாசியின் மூலம் விதுரனையும் பெற்றெடுத்தார். திருதராஷ்டிரன் பிறவிக்குருடனாக இல்லாததால் பாண்டு அரசன் ஆனான் திருதராஷ்ட்ரனுக்கு பீஷ்மன் காந்தார தேசத்தின் மீது படையெடுத்து காந்தார இளவரசி காந்தாரியை எடுத்து வந்து மணமுடித்தான்.

பாண்டு என்பவன் போஜர்களின் வழியில் வந்த குந்தி என்பவளையும், மத்திர தேச இளவரசி மாத்ரி என்பவளையும் மணந்தான். அஸ்தினாபுரம் வந்த துருவாசர் என்னும் முனிவர் குந்திக்கு தேவதைகளை வசியப்படுத்தும் மந்திரங்களை உபதேசித்தார். அதை சோதித்து பார்க்க விரும்பிய குந்தி, சூரியனுடைய மந்திரத்தை உச்சரிக்க, சூரிய பகவான் அனுக்கிரஹத்தால் குந்திக்கு. கர்ணன் என்னும் மகன் பிறந்தான். குந்தி, கர்ணனை ஒரு தொட்டியில் விட்டு ஆற்றில் மிதக்க விட்டாள். அது அஸ்தினாபுரத்து தேரோட்டி கண்டெடுத்து வளர்த்தான். பின்னர் பாண்டு மஹாராஜனும், மாத்ரியும் குந்தியுடன் வேட்டைக்கு வனத்திற்குச் சென்றனர். அங்க பாண்டு மஹாராஜன் தனக்கு நேர்ந்த சாபத்தைக் கூறினான். அப்போது குந்தி தனக்கு துர்வாசர் உபதேசித்த மந்திரத்தை எடுத்துக்கூற பாண்டுவின் அனுமதியின் பேரில் குந்தி, யமதருமனை மந்திரத்தால் வரவழைத்து அவன் அருளால் தருமபுத்திரனையும் , வாயுபகவான் அருளால் பீமனேனையும், இந்திரன் அருளால் அருச்சுன்னையும் பெற்றாள். மாத்திரிக்கு அந்த மந்திரங்களைக் கூறி, அஸ்வினி தேவதைகள் அருளால் நகுலன், சகாதேவன் என்னும் இரு புதல்வர்களை மாத்திரி பெற்றாள். பின்னர் பாண்டு இறந்ததும் திருதராஷ்ட்ரன் அரசனாகி, பஞ்ச பாண்டவர்களில் மூத்தவனான தருமபுத்திரரை இளவரசனாக்கினான். காந்தாரிக்கும் திருதராஷ்ட்ரனுக்கும் நூறு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் மூத்தவன் சுயோதனன் (துர்யோதனன்). பஞ்சபாண்டவர்களும் துரியோதனனும், துரோணாசாரியார் என்னும் பிராமணன் குருவிடம் வில்வித்தை பழகினர். காந்தாரியின் தமையனான சகுனி, குரு வம்சத்தின் மீது உள்ள காழ்ப்பு உணர்ச்சியால் பஞ்சபாண்டவர்கள் மீது துரியோதனனுக்கு வெறுப்பு ஏற்படுத்தி, சதி செய்து, அரக்கு மாளிகை கட்டி அங்கு பஞ்சபாண்டவர்களை அனுப்பி அம்மாளிகைக்கு எறியூட்டினான். அமைச்சரான விதுரனின் உதவியால் பீமசேனன் அரக்கு மாளிகையில் ஒரு சுரங்கம் வெட்டி அதன் மூலம் சகோதரர்களுடன் தப்பிச் சென்றான். பீமன் காட்டில் இடும்பாசுரனை வென்று அவன் மனைவி இடும்பியை மணந்தான். பிறக பகாசுரனை வென்றான். அங்கிருந்து பாஞ்சாலதேசம் சென்று திரௌபதியை சுயம்வரத்தில் அருச்சுனன் அடைந்தான். குந்தியின் ஆலோசனையின் பேரில் பஞ்சபாண்டவர் ஐவருக்கும் திரௌபதி மனைவியானாள். (முற்பிறவியில் நளாயணன் மகளாகப் பிறந்த நளாயினி, மௌத்கல்ய முனிவரின் பத்தினியாக இருந்தாள். மௌத்கல்யா, நளாயினியை மிகவும் சோதித்த்தார். தன்னை ஒரு கூடையில் வைத்து வேசி வீட்டிற்கு எடுத்தச் செல்லும்படி பணித்தார். வழியில் மரச்சிலுவையில் ஆணியால் அடிக்கப்பட்ட மாண்டவ்யர் மீது அவன் தூக்கி வந்த கூடை இடித்தது. மாண்டவ்வியர் வ- பொறுக்க முடியாமல், சூரியோதயத்தின் போது நளாயினியின் தலை வெடிக்க சாபமிட்டார். நளாயினி சூரியோதயமே நிகழக் கூடாது என மனு சாபமிட்டாள். இதனால் தேவர்கள் பயந்து சிவபெருமானிடம் முறையிட அவர் நளாயினிடம் வந்து வேண்டும் வரம் கேட்க, அவன் ஐந்து முறை நல்ல கணவன் வேண்டும் என்று ஆவேசமாக கூற, அவ்வரத்தின் காரணமாக துருபதன் மகளாக துரௌபதியாக பிறந்து ஐந்து கணவரைப் பெற்றாள் என்று புராணம் கூறகிறது.)



பஞ்ச பாண்டவர் ஐவரும் துரௌபதியுடன் மீண்டும் அஸ்தினாபுரம் வந்து திருதராஷ்ட்ரன் ஆணையால் ராஜ்யத்தைப் பிரித்து தருமபுத்திரனுக்கு ஒரு பகுதி இந்திரப் பிரஸ்தம், துரியோதனனுக்கு அஸ்தினாபுரம் என்று முடிசூட்டினார். தருமபுத்திரர் புதிய தலைநகரில் இராஜசூய வேள்வி நடத்தினார். இதனால் பொறாமை கொண்ட துரியோதனன் சகுனியுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து. பாண்டவர்களை சூதாட அழைத்து ராஜ்யத்தையும், பாண்டவர்களையும் அடிமைகளாக வென்று, திரௌபதியையும் சூதில் வென்றான். பின்பு திருதராஷ்ட்ரன் ஆலோசனைப்படி பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் செய்ய

விராடதேசம் சென்றனர். அஞ்ஞாத வாசம் முடிந்த பிறகு மஹாபாரதப் போர் நிகழ்ந்தது. துவாரகை அரசனான கண்ணனின் சமாதான தூது பயனளிக்கவில்லை. யாதவ சேனைகள் துரியோதனன் பக்கமும், கண்ணன் பஞ்சபாண்டவர் பக்கமும் இருந்தனர். ஜராசந்தன் பெண்களை மணந்த கம்சனை அவனது மருகன் கண்ணன் கொன்றதால் ஜராசந்தன் துரியோதனன் பக்கம் இருந்தனர். பாண்டிய அரசனும் ஏனைய திராவிடசேத அரசர்களும் பஞ்சபாண்டவர் பக்கம் இருந்தனர். (ஏறக்குறைய தேவாசுர யுத்தம் போல் 18 நாட்கள் யுத்தம் நடைபெற்றது) சேர மன்னன் உதியன் இரு பக்கமும் சேராது இரு எதிரிப் படைகளுக்கும் உணவளித்தான். எனவே பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் எனப்புகழப்பட்டான். துரியோதனனும் அவனது சகோதரர்களும், பீஷ்மன், துரோணன், கர்ணன் முதலான அரசர்கள் கொல்லப்பட்டனர். திருதராஷ்ட்ரன், குந்தி, காந்தாரியுடன் வனத்திற்குச் சென்றனர். அர்ச்சுனனுக்கும் சுபத்திரை (கண்ணனின் சகோதரி) என்பவளுக்கும் பிறந்த அபிமன்யு யுத்தத்தில் கொல்லப்பட்டான். அபிமன்யுவின் மகன் பரீக்ஷித்து, பஞ்சபாண்டவர்களுக்குப் பிறகு அஸ்தினாபுரத்தி-ருந்து அரசாண்டான். பரீக்ஷித்து மஹாராஜன் ஒரு சாபம் காரணமாக தக்ஷன் என்னும் பாம்பு தீண்ட மரணமடைந்து பரீக்ஷித்து மகாராஜன் பிள்ளை ஜனமேஜயன், சர்ப்ப யாகம் செய்து அனைத்து சர்ப்பங்களையும் யாகத்தில் இட்டு அழித்தான்.

(மஹாபாதரதக் கதையின் சுருக்கம் இ'ங்கே கூறப்பட்டது. முழு விவரங்களுக்கு வியாஸர் எழுதிய ''மஹாபரதம்'' காண்க. வியாஸர் மஹாபாரதத்ததை வடமொழியில் எழுதவில்லை. அக்காலத்தில் சம்ஸ்கிருதம் என்னும் மொழி ஏற்படவில்லை. தமிழில் மகாபாரதக் கதையை எழுதியவர் பெருந்தேவனார். கடைச்சங்கத்தில் இவர் வழியில் வந்த பெருந்தேவனார் புலவராக இருந்தார். அக்காலத்திலேயே தமிழகம் பாரதத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. அங்ஙனமே இராமாயணமும் வால்மீகியால் சம்ஸ்கிருதத்தில் எழுதப்படவில்லை. தமிழ் அல்லது பிராகிருத மொழியால் எழுதப்பட்டிருக்க வேண்டும். வால்மீகி இடைத்தமிழ் சங்க புலவர். சென்னையை அடுத்த திருவால்மீகியூரில் பிறந்தவர். கௌதமர், மார்கண்டர் முத-யனவரும் தமிழ் சங்கப் புலவர்கள். கௌதமர், தருமபுத்திரர் நடத்திய இராஜசூய யாகத்தில் கலந்து கொண்டார் என்று தெரிகிறது.)



இதர விவரங்கள்:

மகாபாத காலத்தில் - ஸ்ரீகிருஷ்ணன் (கறுப்பு நிறம்) காலத்தில் வாழ்ந்தவர் வேத வியாஸர். இவர் 28-வது வியாஸர்- வேதங்களையும் புராணங்களையும் மீண்டும் தொகுத்ததால் ''வியாஸர்'' எனப்பட்டார். இவரது இயற்பெயர் த்வைபாயனர். ஒரு தீவில் பிறந்ததால் த்வையாயர் என்றும் கறுப்பு மனிதர் என்பதால் ''க்ருஷ்ணத்வைபாயனர்'' என்றும் (கிருஷ்ணன்=கறுப்பு) அழைக்கப்பட்டார். இவர் பராசரர் என்னும் முனிவருக்கும் (விஷ்ணு பக்தர்மூ செம்படவப் பெண்ணான ''மத்ஸகந்திக்கும்'' பிறந்தவர். (இதி-ருந்து இவர் ஆரியர் அல்லர் என்று கூறலாகும்.)

பராசரர் என்பவர் வசிட்டர் வழியில் வந்தவர். சக்தி என்னும் முனிவருக்கும் தரசந்தி என்பவளுக்கும் பிறந்தவர். தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போது சக்திமுனிவரை உதிரன் என்ற அரக்கன் கொன்றுவிட்டான். திரசந்தி என்பவளுடைய கர்ப்பத்தை கீரி எடுத்ததால் ''பராசரர்''எனப்பட்டார். இவரும் கறுப்பு நிறத்தவரே (தமிழ்நாட்டில் தஞ்சை, லால்குடி, திருப்பேர் நகர் முத-ய இ'டங்களிலுள்ள திருமால் கோயில்களுக்கு வந்தவர்). பராசரருடைய மகனே வேதவியாஸர், (வேதவியாஸர் பற்றி அடுத்த அத்யாயத்தில் காண்க).

**பஞ்சபாண்டவர்கள் பிறப்பு**

1. தருமன் பிரஜோத்பத்தி □, ஐப்பசி மாதம் - 3230 BC
2. பீமசேனன் ஆங்கீரஸ □, ஐப்பசி மாதம்
கிருஷ்ணத்ரயோதசி- சனி - 3229-310
3. அர்ச்சுனன் ஸ்ரீமுக□,பங்குனி மாதம், சுக்கல
சதுர்த்தி, உத்திராபங்குனி-திங்கள் - 3227-
4. கிருஷ்ணன் ஸ்ரீமுக□, ஆவணி □, கிருஷ்ண பட்சம்,
அஷ்டமி, ரோகிணி-புதன்கிழமை - 3228-3102BC)
5. நகுலன்
சகாதேவன் பவ □, பங்குனி மாதம் -3226-3102BC)
6. சுபத்திரை திருமணம் - 3171 BC (வெள்ளி)
7. அபிமன்யு பிறப்பு - 3171BC

அ) பஞ்சபாண்டர் ஹஸ்தினாபுரம் வருகை - ஜுலை3199BC
ஆ) தருமன் இளவரசு பட்டாபிஷேகம் - நவம்பர்3119BC
இ) திரௌபதி சுயம்வரம் - ஏப்ரல் 3190BC
ஈ) தருமன் இந்திரப்பிரஸ்தம் கட்டியது. - நவம்பர் 3184BC
உ) தருமபுத்திரர் ராஜசூய யாகம் செய்தது - 25-10-3150BC

யுதிஷ்டிரன் (தருமன் பட்டாபிஷேகம்) - (புதன்) 26-10-3138BC
மார்கழி-சுக்ல பிரதமை, மூலம் யுதிஷ்ட்டிரசகம்)
ஊ) பாண்டவர் வனவாசம் - (வெள்ளி) நவம்பர் 3138BC
எ) அரவான் களப்ப- - 13-10-3139BC
ஏ) குருக்ஷேத்திரப் போர் - 14-10-3139BC -31-10-3139BC (18 நாட்கள்)
ஐ) 14நாள் யுத்தத்தின் போது
சூரியன் மாலையில் மறைந்தது - 27-10-3139BC
ஒ) பீஷ்மர் முக்தி - 18-1-3138BC
ஓ) ஸ்ரீகிருஷ்ணர் பரமதம் ஏகியது - 18-2-3102BC
ஔ) யாதவ குலம் அழிவு - 13-4-3102BC

**பஞ்சபாண்டவர்கள் வம்சம்**

| பாண்டவர் பெயர் | திரௌபதிக்கும் பாண்டவர்களுக்கும் பிறந்தவர்கள் |
|---|---|
| 1. தருமன் | பிரதிவிந்தன் |
| 2. பீமசேனன் | சுருதசேனன் |
| 3. அர்ஜுனன் | சுருதகீர்த்தி |
| 4. நகுலன் | சதாநீகன் |
| 5. சகாதேவன் | சுருதகாமன் |

| பாண்டவர்களின் வேறு | மனைவிகள் | புதல்வர்கள் |
|---|---|---|
| 1. தருமன் | யௌதேயி | தேவகன் |
| தருமன் | வேதினை | சுதேயன் |
| 2. பீமசேனன் | ஜலந்தரை | சுகுணன் |
| பீமசேனன் | இடும்பி | கடோற்கஜன் (அரக்கன்) |
| 3. அர்ஜுனன் | சுபத்திரை | அபிமன்யு |
| அர்ஜுனன் | சித்திராங்கதை (பவளக்கொடி) | பப்புருவாகனன்(சாத்தன்) |
| 4. நகுலன் | இலகீர்த்தி | மித்திரன் |
| நகுலன் | ரேணுமதி | நிமித்திரன் |
| 5. சகாதேவன் | விஜயை | வேத்திரன் |

மஹாபாரத காலத்தில் சந்திரவம்ச (குருவம்சம்) குலகுரு கிருபாச்சாரி. இவர் ராமாயண காலத்தில் வாழ்ந்த சதானந்தர் (71) வழியில் வந்த நுர்வேதி (106) சத்யத்ருதி (107), மிதுனன் (108),
சத்யத்ருதி (109) மனைவி ஊர்வசி) கிருபன், கிருபி (110), கிருபியின் கணவர் துரோணர். இவருடைய மகன் அஸ்வத்தாமா (111).

ஸ்ரீகிருஷ்ணனுக்கும் ருக்மிணிக்கும் பிறந்தவன் பிரத்யும்னன். இவன் அழகைக் கேள்விபட்டு சிறுவனாக இருக்கும்போதே, சம்பராசுரன் மனைவியை தூக்கிச் சென்று, வளர்த்து பின்பு அவளையே மணந்து கொண்டான். பிரத்தியும்னனை, சும்பன் என்னும் அசுரனின்



மனைவி லக்ஷமியும் மணந்தாள். பின்னர் யாதவசேனை பிரத்யும்னனை மீட்டு வந்து இளவரசனாக்கி சாருமதி (ருக்மியின் மகள்) என்பவளுடன் மணம் செய்து வைத்தனர். இவர்களுக்கு அநிருத்தன் பிறந்தான். இவனை தூக்கிச் சென்று பாணாசுரன் மகள் உஷை மணந்து கொண்டாள். அநிருத்தன் மகன் வஜ்ரன் (114) பின்பு பிரதிவாகு (115) சுபாகு (116) உக்கிரசேனன் (117), அருட்சேதனன் (118) முத-யோர் யாதவ அரசர்களாக இருந்தனர்.

ஜராசந்தன், நரகாசுரன், பாணாசுரன் முத-ய அசுர அரசர்களை யாதவ சேனை ஸ்ரீகிருஷ்ணன் தலைமையில் கொன்றனர். ஜராசந்தனின் படையெடுப்புக்கு பயந்து ஸ்ரீகிருஷ்ணன் வடமதுரையி-ருந்த தலைநகரை துவாரகைக்கு மாற்றினார். (குஜராத் கடற்கடை). ஸ்ரீகிருஷ்ணர் (13-2-3031BCயில்) பரமபதம் ஏகிய சில வருடங்கள் துவாரகை பூகம்பத்தினால் கட-ல் மூழ்கியது. ஸ்ரீகிருஷ்ணனைப் பிரந்த துக்கத்தில் பரீக்ஷித்து (அபிமன்யு மகன்) என்பனிடம் அரசை ஒப்புவித்து பஞ்சபாண்டவர்கள் கானகம் சென்றனர்.

ஒரு சமயம் யாதவர்களின் குலகுருவாக் கார்க்கிய முனிவர் இருந்தார். அப்போத யாதவ இளைஞர்கள் ஒருவனுக்கு கர்ப்பவதியாக வேஷமிட்டு கார்க்கியரிடம் இவனுக்கு என்ன குழந்தை பிறக்கும் என கே- செய்தனர். அவர் இவன் வயிற்றில் ஒரு உலக்கை பிறக்கும். அந்த உலக்கை யாதவர்களைக் கொல்லும் என் சாபமிட்டார். அந்த இளைஞ்சன் பயந்து வேஷமிட்ட நபரின் வயிற்றி-ருந்து உலக்கையை எடுத்து அதை பொடி செய்து கட-ல் தூவிவிட்டனர். பிறகு கடற்கரை ஓர்த்தில் கோரைப்புற்கள் முளைத்தது. மஹாபாதரப் போரில் யார் பக்கம் தவறு இருந்தது என் யாதவர்கள் கோஷ்டியாகப் பிரந்து, ஒருவருக்கொருவர் சண்டையிட்டு கோரைப்புற்களைப் பிடுங்கி அடித்துக் கொண்டும், போரிட்டும் அநேகர் மடிந்தனர். துவாரகை கட-ல் மூழ்கியது. லக்ஷக்கணக்கான யாதவர்கள் அழிந்தனர்.

துவாரகை பூகம்பத்தால் கட-ல் மூழ்கிய போது, தென்பாரதத்திலும் பூகம்பம் ஏற்பட்டு, திருநெல்வே-யில் உள்ள பல பகுதிகளும், கவாடபுரமும் இடைத்தமிழ்ச் சங்கமும் கட-ல் மூழ்கி விட்டது (கி.மு. 3100)

மஹாபாரத யுத்தத்தில் மாண்ட திருதராஷ்ட்ரன் புதல்வர்கள். 1) துரியோதனன், 2) யுயுத்சு, 3) துச்சாதனன், 4) துச்சகன், 5) துச்சலன், 6) துர்முகன், ய7) விவிஞ்சதி, 8) விகர்ணன், 9) சலசந்தன், 10) சுலோசனன், 11) விந்தன், 12) அனுவிந்தன், 13) தூர்த்தருடன், 14) சுபாகு, 15) துர்த்தர்ஷன், 16) துர்கருணன், 17) கர்ணன், 18) துர்மர்ஷன், 19) துர்முகன், 20) சித்திரன்

21. உபசித்திரன், 22. சித்திராங்கதன், 23. சாரு, 24. சித்திராக்ஷன் 25. துர்மதன், 26. தர்பிரகாசன், 27. விவித்சு, 28. விகடன், 29. சமன், 30. ஊர்னநாபன், 31. பத்மனாபன், 32. நந்தன், 33. உபநந்தன், 34. சேநாபதி, 35. சுக்ஷேணன், 36. குண்டோதரன், 37. மகோதரன், 38. சித்திரபாகு, 39. சித்ரவர்மன், 40. சித்ரநாபன், 45. சுருண்டவன், 46. வீமவேகன், 47. வீமபலன், 48. பலாகன், 49. வீமவிக்ரமன், 50. உக்ராயுதன், 51. வீமசரன், 52. கனகாயு, 53. திருடாயுதன், 54. திருடவர்மன், 55. த்ருடன், 56. சோமகீர்த்தி, 57. அநூதரன், 58. ஜராசந்தன், 59. திருடாசந்தன், 60. சத்தியசந்தன், 61. சஹஸ்ரபாகு 62. உக்கிரசிரவசு, 63. உக்கிரசேனன், 64. சேநாநி, 65. மகாமூர்த்தி, 66. அபாராஜிதன், 67. பண்டிதன், 68. விசாலாக்ஷன், 69. தூராதரன், 70. திருடகத்தன், 71. சுகத்தன், 72. வாதவேகன், 73. சுவர்ச்சஸ், 74. ஆதித்யகேது, 75. வெகுவாதி, 76. நாகதத்தன், 77. அநுயாயி, 78. நிஷங்கி, 79. கவசி, 80. தண்டி, 81. தண்டரதன், 82. தனுக்கிரஹன், 83. உக்கிரன், 84. பீமரதன், 85. வீரன், 86. வீரவாகு, 87. அலோலுபன், 88. அபயன், 89. ரௌத்ர கர்மன், 90. திருடரதன், 91. அநாதிருஷ்ட்டி, 92. குண்டபேதன், 93. விராவி, 94. தீர்˙க்கலோசனன், 95. தீர்க்கபாகு, 96. மகாபாகு, 97. வியுடோரு, 98. கனகாங்கதன், 99. குண்டசித்து, 100. சித்திரகன் என்னும் கௌரவர்கள்.

## 27. வேதவியாஸர்

ஸ்ரீகிருஷ்னர் காலத்தில் மீண்டும் வேதங்களையும் புராண வரலாறுகளையும் தொகுத்தவர் (கி.மு. 3100) கிருஷ்ண-த்வைபாயனர். இவர் வசிஷ்டர் வம்சத்தில் வந்த சக்தியின் பேரனும் பராரரின் புத்திரனும், சுகமுனிவன் தந்தையும் ஆவர். இவர் கறுப்பு நிறம் (ஆரியர் அல்லர்). மற்றும் இவர் 28வது வியாஸர் ஆவர்.

வேதம் (Wisdom) என்பது யாரால் எப்போது தொகுக்கப்பட்டது என கூற இயலாது. இதைத் தொகுத்தவர்கள் செவிவழிச் செய்திகள் மூலம் கேட்ட வரலாறு, இசை, கணிதம், அறிவியல், மருத்துவம், சோதிடம், மந்திரம் முத-யவற்றை வாய்மொழி மூலம் (சந்தஸ்) தனது சீடர்களுக்கு உபதேசித்தனர். கறுப்பு நிறத்தவரும், கட-ல் வாழ்பவருமான திருமா-ன் மூலமாக இது உலகுக்கிடைத்தது. (கறுப்பு இனத்தவரே இதைத் தொகுத்தவர்கள். ஆரியர் அல்லர். தமிழில் இருக்கு, சாமம், தலவகாரம், பவுடிகம் முத-ய வேதங்கள் இருந்தன. இது திரிந்தமையால் முருகன் மீண்டும் தமிழில் அகத்திய முனிவருக்கு போதித்தான். வழுதியர் தமிழில் "ஓம்" என்னும் பிரணவ மந்திரம் கூறப்பட்டது.



வேதம் அருளிச் செய்தவர்கள் 28 வியாஸர்கள் வருமாறு : 1. கடவுள் (பிரமன்), 2. சுயம்பு மநு (யமுனை நதிக்கரையில் வாழ்ந்தவன்), 3. சுக்ரன், 4. பிருஹஸ்பதி, 5. சூரியன், 6. யமன், 7. இந்திரன், 8. வசிட்டன், 9. ஸாரஸ்வதன் (அச்சுதன்), 10. திரிதாமன், 11. திரிசிகன், 12. பாரத்வாஜன், 13. அந்தரிக்ஷன், 14. வர்ணி (தாக்கு), 15. திரய்யாருணி, 16. தனஜ்ஜயன், 17. கிரதுஞ்ஜயன், 18. சஞ்ஜயன், 19. கௌதமன், 20. உத்தரன், 21. வாஜஸ்ரவசு (வேனன்), 22. சுஷ்காயணன், 23. திருணபிந்து (வைசா-யர்), 24. ரக்ஷணன், 25. வால்மீகி, 26. சக்தி, 27. பராசரர், 28. கிருஷ்ண த்வைபாயனர்.

கிருஷ்ண த்வைபாயனரின் சீடர்கள் சுமந்து, ஜைமினி, பைலர், சுகர், வைசம்பாயனர் முத-யவர்கள். (இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் என நான்கு வேதங்கள் தொகுக்கப்பட்டன). இருக்கு வேதத்தை பைலர் என்வரும், யஜுர் வேதத்தை வைசம்பாயனர் என்பவரும், சாம வேதத்தை ஜைமினி என்பவரும், அதர்வண வேதத்தை சுமந்து என்பவரும் எழுதினர். வேதத்திற்கு விளக்கமாக உபநிஷதங்கள், ஸ்ருதி, ஸ்மிருதி, தர்சனம், தந்திரம், சம்ஹிதை (பாஞ்சராத்ரம்-215-சைவம்-28) மார்கம் (சாஸ்த்ரம்) முத-ய பொருள்களில் நூல்கள் எழுதப்பட்டன. இராமாயணம், மகாபாரதம் முத-ய நூல்களும் எழுதப்பட்டன.

இக்காலத்தில், 18 புராணங்களும் எழுதப்பட்டன.

| | புராணத்தை கூறியவர் | கேட்டவர் | புராணம் | ஸ்லோக எண்ணி˙க்கை | உபபுராணம் |
|---|---|---|---|---|---|
| 1. | பிரமன் | மரீசி | பிரம்ம | 10,000 | சனத்குமாரம் |
| 2. | பிரமன் | மரீசி | பத்மம் | 15,000 | நாரசிங்கம் |
| 3. | குரு | பராசரர் | விஷ்ணு | 8,000 | காந்தம் |
| 4. | குரு | பராசரர் | வாயு | 12,000 | - |
| 5. | குரு | பராசரர் | பார்கவ | 18,000 | துர்வாசம் |
| 6. | பிரமன் | நாரதன் | நாரதீயம் | 25,000 | சிவதர்மம் |
| 7. | பிரமன் | நாரதன் | நாரதீயம் | 25,000 | சிவதர்மம் |
| 8. | பிரமன் | வசிஷ்டர் | ஆக்நேயம் | 15,000 | கபிலம் |
| 9. | பிரமன் | வசிஷ்டர் | பவிஷ்யம் | 30,000 | மாணவம் |
| 10. | சாவர்ணி | நாரதர் | பிரம்ம கைவர்த்தம் | 18,000 | |
| 11. | சாவர்ணி | அக்னி | -ங்கபுராணம் | 11,000 | |
| 12. | திருமால் | பூமாதேவி | வராகம் | 24,000 | |
| 13. | திருமால் | பூமாதேவி | ஸ்காந்தம் | 1,00,000 | |
| 14. | இந்திரன் | இந்திரதுய்மன் | கூர்மம் | 6,000 | |
| 15. | இந்திரன் | கருடன் | கருடபுராணம் | 19,000 | |
| 16. | திருமால் | வைவஸ்ஸுதன் | மச்சபுராணம் | 19,000 | மாரீசம் |
| 17. | பிரம்மா | | பிரம்மாண்டபுராணம் | 12,500 | பார்க்கவம் |
| 18. | பிரம்மா | | வாமனம் | 14,000 | |

(13 வதாக கூறப்பட்ட புராணம் - ஸ்காந்தம் - முருகவேள் பற்றியது. இதில் மிக அதிகமான ஸ்லோகங்கள் உள்ளன. இதில் திராவிட தேசத்தவர் வணங்கும் - தர்ம சாஸ்த்தா பற்றிய குறிப்புகள் உள்ளன. இந்த புராணங்களில் பாரத தேசத்தில் வாழ்ந்த அரசர்கள் பற்றியே கூறப்படுகின்றன. எனவே இவைகள் ஆரிய தேசக் கதைகள் (ரஷ்யா) அல்ல. ஆரியர்கள் எழுதியது அல்ல).

(மேற்குறிப்பிட்ட வேதங்கள், புராணங்கள், உபநிஷத்துக்கள், இராமாயணம், மஹாபாரம் முத-யன பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் (கி.மு. 798-இல் தேவநாகரி ் எழுத்தில் சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டன). ஏறத்தாழ கி.மு. 3100-இல் தமிழில் வேதங்களை எழுதியவர் "நம்-ஆழ்வார்" இவர் தென்பாண்டி நாட்டில் பிறந்தவர்.

க-யுகம் பிறந்து (கி.மு. 3100) 43-வது நாளில் பிரமாதி வருடம் வைகாசி மாதம், பௌர்ணமி, வெள்ளிக்கிழமை, விசாக நட்சத்திரத்தில் திருக்குறுகூர் (திருநெல்வே- மேற்கு - 26 மைல்) என்னுமிடத்தில் பிறந்து, குழந்தையாய் இருக்கும் போது தவழ்ந்து வெளியே சென்று புளியமரப் பொந்தில் ஊமையாக 16வயது வரை தவம் செய்தார். பொற்காரி என்பவருக்கும் உடைய நங்கைக்கும் பிறந்தவர் நம்-ஆழ்வார் ( சக்ரபாணி(106) அச்சுதர் (107) செந்தாமரைக் கண்ணன் (108) செங்கணான் (109), பொற்காரி (110), நம்மாழ்வார் (111) ). இவரை மதுரகவி ஆழ்வார் பாண்டி நாட்டில் வந்து தரிசித்து சீடரானார். நம்-ஆழ்வார் பாடியது "திருவாய்மொழி" எனப்படும் (100 பதிகம் 1102 செய்யுள்) மேலும் திருவிருத்தம், திருவாசியம், பெரிய திருவந்தாதி, முத-யவற்றை நம்-ஆழ்வார் சொல்லக்கேட்டு தமிழில் எழுதியவர் மதுரகவியாழ்வார்.

மதுரகவியாழ்வார் "செத்தத்தின் வயிற்றில் சித்தது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று நம்மாழ்வாரைக் கேட்க, முதன் முத-ல் வாய் திறந்து "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என பதில் உரைத்தார்.

"திருவாய்மொழிக்கு" - ஆறாயிரம், ஒன்பதாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்தி நாலாயிரப் படி, முப்பதாறாயிரப்படி, பிரமாணத் திரட்டு, திரமிடோபநிஷத்சாரம் முத-ய விளக்க நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

நம்-ஆழ்வார், 36 வைணவத் தலங்களுக்குச் சென்று திருமாலைப்பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார், 1. திருக்குறுங்குடி, 2. தொலைவில்- மங்கலம், 3. திருக்கோளூர், 4. திருப்பேரை, 5. ஆழ்வார் திருநகரி, 6. ஸ்ரீவரமங்கை, 7. திருவிண்ணகர் (உப்பி-யப்பன்



கோயில்), 8. கும்பபோணம் சாரங்கபாணி கோயில், 9. ஸ்ரீரங்கம், 10. கோவிலடி (திருப்பேர் நகர்), 11. திருவனந்தபுரம், 12. திருவாட்கறை (எர்ணாகுளம் அருகே உள்ளது), 13. திருவண்பரிசம் (நாகர்கோயில் வடக்கு / மைல்), 14. திருமுழிக்களம் (அங்கமா- அருகே கேரளம்), 15. திருச்செங்குன்றம் (செங்கனூர் - கேரளம்), 16. திருவல்லவாழ் (கேரளம்), 17. திருவன்வண்டூர் (கேரளம்), 18. திருக்கடித்தானம் (கேரளா), 19. திருவாறன்விளை (செங்கணூர் அருகே - கேரளம்), 20. வடமதுரை, 21. துவாரகை, 22. திருப்பு-யூர், 23. திருவட்டாறு, 24. திருவேங்கடம், 25. திருமோகூர், 26. திருமா-ருஞ்சோலை, 27. வரகுணமங்கை, 28. திருக்குளந்தை, 29. திருப்புளிங்குடி, 30. திருநாவாய் (கள்ளிக்கோட்டை தெற்கு 8 மைல்)(31 to 36 பெயர் கிடைக்கவில்லை) முத-ய இடங்களில் உள்ள திருமாலை ஆலயங்களுக்குச் சென்று தமிழில் மங்களாசாஸனம் செய்துள்ளார் என்பதி-ருந்து கி.மு. 3100லேயே இந்த இடங்களில் ஆலயம் இருந்தன என்றும் சேர நாடு முத-ய இடங்களில் தமிழ் அந்தணர்கள் வாழ்ந்தனர் என்றும் அறியலாகும்.

(வேத வியாஸர் பாரத கலாசாரத்திற்கும், வரலாற்றுக்கும் ஆற்றிய தொண்டுக்கு பாரதவாசிகள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர், அம்மாதிரியே நம்மாழ்வார் ஆற்றிய தொண்டுக்கு தமிழர்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்கள் ஆவர். வேதங்களையும், புராணங்களையும், ஹிந்து மதச் சடங்குகளையும் ஆரி ்யர்கள் இந்தியாவில் ஏற்படுத்தினர் என்று கூறுவது அறியாமையாகும். மக்களை திசை திருப்பி சுயலாபம் சம்பாதிக்கும் மோசடிப் பேர்வழிகள் கூற்று ஆகும்).

**இருக்குவேத பரம்பரை :**

வியாசர், இவரிடம் பைலர், வைசம்பாயனர், ஜைமினி, சுமந்து பயின்றனர். பைலரிடம் இந்திரப் பிரமதி, பாஷ்கலர்; இந்திரப் பிரமதியிடம் மாண்டுக்யர், இவரிடம் சாகல்யா, கோகல்யர், சிசிரர், சாதுகாரணர், இவரிடம் பைங்கர், வைதானர், பாலகர், விரசர் பயின்றனர்.

**யஜுர்வேத பரம்பரை :**

வியாசர், இவரிடம் வைசம்பாயனர், இவரிடம் சரகர், இவரிடம் யாக்ஞய வக்கீயர், இவரிடம் கண்ணுவர், மாத்யந்தனர் பயின்றனர்.

(யாக்ஞய வல்கீயரின் தந்தை சுநந்தன், தாய் பிரம்ம ரதி பிறப்பு - குருபாஞ்சாலம், கார்த்திகை மாதம், சுக்ல துவாதசி, சதயம்; குரு ஜைமினி, அருணி, வைசம்பாயனிரடம் பயின்றார். மிதிலை அரசன் ஜனகன் (பகுளாஸ்வன்) நடத்திய பஹுதக்ஷிணயாகத்தில், கஹோலா, அஹ்வலா, யாக்ஞவல்கீயர்ன் மனைவிகள் மைத்ரேயி, காத்யாயனி, யாக்ஞவல்கீயர் இயற்றியது சுக்ல யஜுர்வேதம், தைத்ரீயம். இவர் தருமபுத்திரர் நடத்திய இராஜசூய யாகத்தில் பங்கேற்றவர்).

**சாமவேத பரம்பரை :**

வியாசர் ஜைமினி, சுகவர்மா, ஆவந்தியன்; சுகவர்மனிடம் இரண்ய நாபன், பவுஷ்பஞ்சி; ஆவந்தியினிடம் உதச்சியர் பயின்றார்.

ஜைமினியிடம், சுமந்து; இவரிடம் சுதன்வா; பவுஷ்பஞ்சியிடம் இலவுகாருக்ஷி, இலங்காலன், குல்-யன், ருஷிதன், குஷி; இரண்ய நாபனிடம் பிராச்சியன், கிருதன் பயின்றனர்.

**அதர்வண வேத பரம்பரை :**

சுமந்துவினிடம் கபந்தன், இவரிடம் பத்தியன், வேததரிசனன் இவரிடம் சாலங்காயினி, பிரம்மவ-, மேதாதா, பிப்லாயனர் பத்தியனிடம், குமுதன், சுநகன், ஜாபா-; சுநகரிடம் பப்புரு, சயிந்த வாயினர், இவரிடம் சவரன், நக்ஷத்திர கலமன், சாந்திர வர்க்கன், ஆங்கீரஸ் முத-யவர்கள் பயின்றனர்.

**புராண பரம்பரை :**

வியாஸரிடம் அருஷணர், இவரிடம் திரய்யாருணி என்னும் சூதர் (நைமிசாரண்யத்தில் ரிஷிகளுக்கு புராணம் சொன்னவர்), காஸ்யபா, சாவர்ணி, அகர்த்த வுருணர், சிசுபாயனர், ஹரிதர், சுகரிடம் (ஸ்ரீமத் பாகவதம் எழுதியவர்), காஸ்யபர், சாவர்ணி, அகர்த்த வுருணர், சிசுபாயனர், சூதர், ஹரிதர் முத-யோர் ஸ்ரீமத் பாகவதம் பயின்றனர்.

**இருக்குவேத விவரங்கள் :**

இருக்கு என்றால் மந்திரங்கள் அல்லது தோத்திரங்கள் என்று பொருள்படும். இவ்வேதத்தில் 10,552 மந்திரங்கள், 21 சாகைகள் உள்ளன. இவ்வேதம் முத-ல் பதம், கிரமம், ஜடை, கனம் என்றவாறு ஒதவேண்டும். இதில் பல ருஷிகளும், அரசர்களும் பாடியுள்ளனர். இதில் சுயநயநீகை கதை, அசங்கன் உருமாறிய கதை, சிந்து த்வீபன் கதை, நபானே திக்ஷிதன் ததை, பல ருஷிகள் கதைகள், அசுரர்கள் பெயர்கள், பல பொருள்களின் பெயர்கள், பிரமன், விஷ்ணு, சிவன் நாமாவளிகள், முடிவாய் "எல்லாம் ஒரே கடவுள்" எனக் கூறும் பாடல், "ஓம்" என்னும் பிரணவ மந்திரம், காயத்ரி மந்திரம், வானப்பிரஸ்தன், சந்யாசிகள் சடங்குகள், பரமாணுக்கள் பற்றிய விவரங்கள், குத்சன், திருதன், ஆப்தியரின் கதைகள், அகஸ்த்தியர், இந்திரன், மருந்துக்கள் சம்வாதம், விஸ்வாமித்திரர், அகஸ்த்தியரின் பாடல்கள், வசிஷ்டரின் கதை, அம்பரீஷன் புத்திரி வாக்காள் என்பவளின் பாடல்கள், சாவித்திரி, சகனா, தக்ஷுணா, யமுனா முத-யோர் கதைகள், அகமருஷணின் பாடல்கள், ஐதேரேய ப்ராம்மணம், பட்டாபிஷேகம் நடத்தப்பட வேண்டிய விதம், சத்யகாம ஜாபா- உத்தாலகரின் பாடல்கள், பரீக்ஷித் மஹாராஜன் பட்டாபிஷேகம், உலக ஸ்ருஷ்ட்டி, ஆத்ம விசாரணை, கௌஷீத்தி பிராம்மணம், பிரகதத்தனுக்கு செய்த உபதேசம், அஜாதசத்ரு (தருமன்)வின் உபதேசம் என்னும் பல விஷயங்கள் உள்ளன.



**யஜுர்வேத விவரங்கள் :**

இருக்குவேத மந்திரங்கள் போலவே இந்த வேதத்திலும் மந்திரங்கள் உள்ளன. இந்த வேதத்தில் 1975 மந்திரங்கள்,101 சாகைகள், நைவேத்யம், வேள்விகள் செய்யும் முறை, அமாவாஸ்யை, பௌர்ணமியில் செய்ய வேண்டிய வேள்விகள், அக்னிஷ்ட்ட-ஹோமம், வாஜபேயம், ராஜசூய-பித்ருமேதம், ததியக்ஞன் செய்த ஈசாவாஸ்ய விரயத்து ஆரண்யகம், சதபதப் பிராம்மணம், பிரகதாரண்ய உபநிஷத், யாக்ஞ வல்கீயர்ன் கீதங்கள் (உலக அழிவு, விராட ஸ்வரூபம், மனித உற்பத்தி, பிராணி உற்பத்தி, பாலகீ கார்க்கி, கார்க்கேயன் கதைகள், ஆத்ம-அநாத்ம, லக்ஷணம், யாக்ஞவல்கிய-மைத்ரேயி சம்வாதம், யாக்ஞ வல்கீய-ஜனகா சம்வாதம், அமர்வண-ஆங்கீரஸ் பாடல்கள், அஸ்வினி தேவர்களுக்கு ததியக்ஞனால் கூறப்பட்ட பிரசங்கம், தைத்ரீயம், நாராயணம், மகாநாராயணம், வாருணஉபநிஷத், வாருண-பிருகு சம்வாதம், மைத்ராயணி உபநிஷத், சுவேதாஸ்ரவோப நிஷத், ருத்ரம் மு-யன கூறப்பட்டுள்ளன. பித்ரு கடன் பற்றியும் கூறப்பட்டுள்ளது. காதக உபநிஷத் முத-யனவும் பாடப்பட்டுள்ளது.

**சாமவேத விவரங்கள் :**

(சொல் இலக்கணப்படி பாபநிவாரணம் செய்து பலத்தை தருவது என்று பொருள்). உயிர்-அளபெடை-ஈருயிர்ப் புணர்ச்சி-ஓசையை ஒழுங்கு செய்தல், இலக்கங்களை எற்படுத்தும் இலக்கணம், கீதம் பாடும் விதம், ஊககானம், சாரதி விநிஷம், அத்பூத பிராம்மணம், சாயனாச்சாரியார் வியாக்கியானம், பஞ்சீகம், அக்னிஷ்ட்ட ஹோமம், சாந்தோக்யம், சவேத கேது-உத்தாலகர் சம்வாதம், பிராச்சீன சாலன், சத்யஜநயன், இத்திரத்யும்னன், ஜனகன், ஊதியன், உத்தாலக்-அஸ்வபதி ஞான விசாரணை, தலவகார சாகை, கேன - உபநிஷத் முத-யன கூறப்பட்டுள்ளன. (சாமம் தேவதைகளுக்குப் பிடித்தமான வேதம். இராவணனால் தப்பின்றி பாடப்பட்டவேதம், மேலும் திராவிட தேச கீதங்களைப் பற்றி எழுதப்பட்ட வேதம்). இவ்வேதத்தில் 1875 மந்திரங்கள், 1000 சாகைகள் உள்ளன.

**அதர்வண வேத விவரங்கள் :**

"ஆயிரம் கைகள், ஆயிரம் கண்கள் உடைய ஆதிபுருஷன்" என்று கடவுளைப் பற்றி கூறுகிறது. சத்ரு நாசம் செய்யக் கூடிய மந்திரங்கள்,27நக்ஷத்திரங்கள், நக்ஷத்திர மண்டலம், சூரியமண்டலம், கிரஹங்கள் பற்றிய விவரங்கள், அறிவியல் சம்பந்தப்பட்ட விவரங்கள், 52 உபநிஷத்துக்கள், பிரமன், அதர்வணனுக்கும், அதர்வணன் ஆஞ்கீரஸுக்கு, ஆங்கீரஸ்-சத்தியவகனுக்கும் செய்த பிரம்ம ஞான உபதேசம், ஆங்கீரஸ் - சௌன சம்வாதம், குகேசன், சத்தியகாமன், கர்க்கன், சௌரயாணி, சௌசல்யன், காத்யானன், வாய்தர்பி (வாய்பியன்-தமிழர்) இவர்கள் பிப்பலாதனக்கும் தேகத்திற்கும் -

தேகிக்கும் உள்ள சம்மந்தம் பற்றி விளக்கி கூறிய பாடல்கள்; ஆத்மா-அந்தக்காரண சம்மந்தம்; மந்த யூகம் (மிக முக்கியமான கிரந்தம்), வாஜ்சிரவசுவின் பிள்ளை நசிகேதஸ் (கேனோப நிஷத்)-க்கு செய்த உபதேசம்; அனந்தவல்-, பிருகுவல்-, நாராயணவல்- முத-ய தோத்திரங்களும், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், ஆகம சாஸ்திரங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வேதத்தில் 3977 மந்திரங்கள், 9 சாகைகள் உள்ளன.

(குமரம், விஸ்வாமித்திரர், துர்வாசர், அகஸ்த்தியர், பூரு, யது முத-யோர் தமிழில் செய்த வேத நூல்கள் கிடைக்கப் பெறவில்லை. அதன் அடிப்படையில் மேற்கூறப்பட்ட வேதங்கள் மொழி பெயர்க்கப்பட்டு பாடல்கள் எழுதப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். தலவகாரம், பௌடிகம் என்பன தமிழ் வேதங்கள். கறுப்பு நிறக் கடவுளான திருமால் மீன் உருவமெடுத்து (பாண்டியர் கொடி-மீன்) சோமுகன் என்னும் அரசனிடமிருந்து வேதங்களை மீட்டுத் தந்தார் என்று புராணம் கூறுவதால், வேதங்கள் முத-ல் கறுப்பு நிற மக்களால் (தமிழர்கள்) பாடப்பட்ட பாடல்களாக இருக்கும் எனக் கருதப்படுகி'றது.

**வேள்விகள் :**

வேள்விகள் (வேள் - அரசன்; விழா - வேள்வி), யாகம், ஹோமம் என்பது பாரத தேசத்தில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக நடத்தப்படும் ஒரு பழக்கம். (கி.மு. 1500க்குப் பிறகு ஆரியர்கள் வருகைக்கு பிறகு ஏற்பட்டது எனக் கூறுவது தவறு. ரஷ்யா, ஐரோப்பா, சீனா, எகிப்து முத-ய எந்த நாட்டு மக்களிடமும் இந்தப் பழக்கம் எப்போதுமே கிடையாது.)

தக்ஷ யாகம், இந்திர பட்டம் அடைய 100 வேள்விகள் நடத்தியது, மஹாப- நடத்திய "விஸ்வஜித்" யாகம், ஹரிச்சந்திரன் நடத்திய நரமேதம் என்னும் யாகம்; பாண்டியன் முதுகுடுமி பெருவழுதி நடத்திய வேள்விகள், மலையத்துவஜ பாண்டியனுக்காக அகஸ்த்தியர் நடத்திய புத்திரகாமேஷ்ட்டியாகம் (மீனாக்ஷிஅவதாரம்), சகரர்நடத்திய அஸ்வமேத யாகம், நகுஷன் நடத்திய 100 வேள்விகள், துவஷ்டா நடத்திய யாகம் (விருத்திரா சுரன் பிறப்பு), தசரதன் நடத்திய புத்திர காமேஷ்ட்டி யாகம், இந்திரஜித் நடத்திய நிகும்பலை யாகம், தருமபுத்திரர் நடத்திய இராஜசூயம், ஸ்ரீராமன் நடத்திய அஸ்வமேத யாகம், சோழன் பெருநற்கிள்ளி நடத்திய இராஜசூயம்; சேரன் செங்குட்டவன் நடத்திய வேள்வி எனப் பலப்பல அரசர்கள் பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே நடத்திய வேள்விகள் பற்றி புராண வரலாறுகள் கூறுகின்றன. க-யுகம் பிறந்த பிறகு ஜனமேஜயன் நடத்திய சர்ப்ப யாகம். இந்த மாதிரி வேள்விகள் எப்படி நடத்தப்பட்டன, எப்படி நடத்தப்பட வேண்டும் என வியாஸரால் வகுத்த வேதங்களில் கூறப்படுகின்றன.



வேள்விகள் (யாகங்கள்) பிரம்மம், தெய்வம், பூதம், பித்ருக்கள், மானுஷம் எனப் பல வகைப்படும். இவையாவும் அக்னி மூலமாக செய்யப்படுகின்றன. உலக நன்மைக்காக மழை வேண்டி உற்பாதங்கள் தவிர்க்க வேதம் ஓதி ஒரே கடவுளை பிரார்த்திப்பது, ஹோமம் (அக்னி) வளர்த்து தனக்கு இஷ்டமான தெய்வத்தை பிரார்த்தித்து வேண்டும் வரம் பெறுவது; நரப-, மிருகப-, பறவை ப- முத-யவற்றைச செய்து துஷ்ட தேவதைகளையும், பூதங்களையும் வரவழைதது ஏவல் கொள்ளுதல், பூத வேள்வியாகும் ஹோமம், தர்ப்பணம் (யவம், கறுப்பு எள் முத-யனவற்றை தண்ணீரில் கலந்து அர்க்கியம் விடுதல்) செய்து ரிஷிகணங்களையும், தேவதைகயையும் முன்னோர்களையும் பிரார்த்திப்பது. இரப்போர்க்கு தானம் அன்னமிடுதல் மானுஷ யாகம். இவைகள் செய்ய மந்திரங்கள், யாக குண்ட அமைப்புகள், வேதிகைகள், குறி'பபிட்ட சில மரங்களி-ருந்து கிடைக்கும் காய்ந்த குச்சிகள், நெய், அன்னம், பழங்கள், விதைகள் முதலரியவற்றை அக்னியில் இட்டு பிரார்த்தனை செய்தல், இவை செய்ய வேண்டிய முறைகள், வேதங்களில் கூறப்பட்டுள்ளன. (அக்னிஷ்ட ஹோமம், அதி அக்னிஷ்ட ஹோமம், உக்தீயம், சோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், சண்டிஹோமம், அப்தோரியாமம், அக்னி ஹோத்ரம், தர்ச பூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், நிருட்பசுபந்தம், ஆக்கிரயணம், சௌந்திராமணி, அஷ்டகை, பார்வணம், சிரார்த்தம், சிராவணி, அக்ரசாயனி, சைத்ரீ, ஆஸவபுசி, விஸ்வஜித் ஆதானம், நாசிகேத சயனம், காடக சயனம், ஆருண கேது சயனம், கருடசயனம், பௌண்ட்ரீகம், சத்திரயாகம், சாவித்ரசயனம், துவஷ்ட்டாஹோமம், அவஹந்தி, ருத்திரஹோமம், நரமேதம், அஸ்வமேதம், புத்ரகாமேஷ்ட்டி, ராஜசூயம், சர்ப்பயாகம், அதிருத்திரம், மஹாருத்ரம் எனப் பல தேவதைகள் (யாகங்கள்) பற்றிய விளக்கங்கள் வேதங்களில் உள்ளன.

உபவேதமான தநுர் வேதத்தில் வில் எப்படி செய்ய வேண்டும், அம்புகள் எப்படிச் செய்ய வேண்டும், எந்த மந்திரங்களை உச்சரிக்க வேண்டும், எப்படிப்பட்ட ரவல்களை செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளன. முக்கியமாக கூறப்படும் மந்திரபூர்வமான அஸ்திரங்களின் பெயர்கள் வருமாறு: பாசுபதாதஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம், பிரம்மாஸ்த்திரம், ஆக்நேயாஸ்திரம் (நெருப்பு கக்குவது), வருணாஸ்திரம் (மழை பொழிவது), வாயுவாஸ்த்ரம் (பேய்க்காற்று அடிப்பது), நாகாஸ்த்திரம் (பாம்புகளாக விழுவது), மோகனாஸ்திரம் (எதிரிகளை பெண்களாக காட்டுவது), தண்ட சக்ரம், தரும சக்ரம் (சுதர்ஸனம்), கால சக்ரம், விஷ்ணு சக்ரம், இந்திராஸ்த்ரம், வஜ்ஜிராஸ்த்ரம், சிவசூலம், வேற்படை, பிரமசிவம், ஐஷிகாஸ்த்ரம், தரும பாசம், காலபாசம், வருண பாசம், சுந்தாசனி, ஆர்த்ராசனி,

பினாகாஸ்திரம், ஹயசிரஸ், கிரௌஞ்சம், விஷ்ணு சக்தி, ருத்திரசக்தி, கங்காளம், முஸலம், காபாலம், கங்கணம் காந்தருவம், மாளவம், பிரஸ்வாபனம், பிரசமனம், ஸகனம், சௌரம், தர்ப்பணம், சோஷணம், ஸந்தாபனம், வியாபனம், மதனம், தாமஸம், ஸம்வர்த்தம், மௌசலம், சதியம், மாயாதரம், தேஜபிரமம், மோதகி, சிகரி, சுஷ்கப், வைத்தியாதராஸ்த்திரம், தேஜப்பிரபாஸ்த்திரம், சௌம்யாஸ்த்திரம், துவஷ்டாஸ்த்திரம், ஸிதேஷா, மானவாஸ்த்திரம், சத்தியவருதம், சத்யகீர்த்தி, திரஷ்டம் ரபஸம், பிரதிகாரதரம், பிராமுகம், அவாங்முகம், வட்சாக்ஷம், விஷமம், திருடநாபம், சுநாபகம், சோதிஷம், கிருசனம், நைராசியம், விமலம், யோகந்திரம், அரித்திரம், சார்ச்சி, சர்மா-, திருதிர்மா-, விரத்தியமான், ருசிரகம், பிதுரு சௌமனசம், விதூனம், மகரம், கரவீகரம், தனம், தான்யம், காமரூபம், காமருசி, ஆவரணம், ஜிரும்பகம், சர்வநாபம், சந்தானம் முத-யன (இந்த அஸ்திரங்களின் வித்தைகளை விஸ்வாமித்திரர், ஸ்ரீராமனுக்கு போதித்தார்).

மேலும், யுத்தத்தின் போது தேர் செய்வது எப்படி, குதிரைகளை இயக்குவது எப்படி, யானைகளை இயக்குவது எப்படி எனவும், கதை, கோடரி, பரசு முத-ய பல ஆயுதங்களை எறிவது, மூங்கில் கழி, எறிவளை பல ஆயுதங்கள், விதவிதமான சங்குகள், ஒ-வித்யாசங்கள், மணி அடித்தல் முதலானவை பற்றியும் கூறப்பட்டுள்ளன.

**ஆயுர்வேதம் :**

இது ஐந்தாம் வேதம் எனப்படும். பிணிகள் அவற்றை நீக்கும் மருந்துகள் செய்யும் விதம், அறுவை சிகிச்சை, உபகரணங்கள், பத்தியம், ஆகாரம் (காஷாயம், லேகியம், பஸ்மம், கற்பம் முத-யன) முத-ய பற்றியும் கூறப்பட்டுள்ளது. தன்வந்திரி, திவோதாஸ், காசிராஜன், அஸ்வினி தேவர்கள், நகுலன், சகதேவன், யமன், சியவனன், ஜனகன், புதன், சாவாலன், ஜாபா-, பைலர், காதன், அகஸ்த்தியர், (இவர் வழியில் போகர் முத-ய 18 சித்தார்கள்) முத-யோர் சஞ்ஜீவி மூ-கைகள், மேலும் பல மூ-கைகள், நோய்கள் பற்றிய விவரங்கள் இ`வ்வேதத்தில் கூறப்பட்டுள்ளன.

**காந்தருவ வேதம் :**

இதில் இசை, இசைக் கருவிகள், தோல் கருவிகள், துளைக் கருவிகள் முத-யன பற்றியும், அபிநயம், (அவிநயம், பரதம்) பற்றிய விவரங்களும் இதில் கூறப்பட்டுள்ளன.

**ஜோதிடம் :**

கிரகங்கள், கிரக பலரன்கள், நக்ஷத்திரங்கள், கிரகணங்கள், உத்பாதங்கள், கால அளவுகள், பிறந்த நேரப் பலன்கள் முத-யனவும் கூறப்பட்டுள்ளன.



இவை தவிர, லக்ஷண சாஸ்திரம், நிமித்தகம், ரேகை சாஸ்த்திரம், எண் சாஸ்த்திரம், ஆகம சாஸ்த்திரம் முத-யனவும் பல ரிஷிகளால்எழுதப்பட்டுள்ளன. இவைகளை கற்க உலகின் பல பாகங்களி-ருந்து பாரதத்திற்கு மாணவர்கள் வந்து பயின்றனர். பாரதமெங்கும் குருகுலங்கள் ஏற்பட்டன. (இதர விவரங்கள் வேத சாஸ்திரங்கள், புராணங்களில் காண்க.)

**இதர விவரங்கள்**

| | | |
|---|---|---|
| (ரிக்வேதம் | 5-41-6 - | வாயுக்களை உபயோத்து வண்டிகள் ஒட்டுவது |
| ரிக்வேதம் | 1-20-10 - | பல்வேறு குதிரை சக்திகள் கொண்ட எந்திர வண்டிகள் பற்றி கூறுகிறது. |
| ரிக்வேதம் | 9-14-1 - | கட-ல் வேகமாக செல்லக்கூடிய யந்திரப் படகுகள் பற்றி கூறுகிறது. |
| ரிக்வேதம் | 6-58-3 - | நீராவியால் ஓட்டப்படும் “அக்நிரதம்”பற்றி கூறுகிறது. |
| இராமாயணம் | : | ஆகாயத்தில் பறக்கும் புஷ்பக விமானம் பற்றி கூறுகிறது. |

பரத்வாஜ மகரிஷி எழுதிய “யந்திர ஸர்வாஸ்யா” - என்னும் நூ - ல்

| | | |
|---|---|---|
| 1. கிரீத்தக ரஹஸ்யம் | : | விமானங்கள் தயாரிப்பதற்க தேவைப்படும் அடிப்படை மூலப்பொருள்கள் பற்றி கூறுகிறது. |
| 2. கூடி ரஹஸ்யம் | : | யாசா, வியாசா, பிரயாசா என்னும் விண்வெளியிலுள்ள வாயுப் பொருள் பற்றி கூறுகிறது. |
| 3. அபரோக்க்ஷ ரஹஸ்யம் | | மின்சக்தி பற்றியும் பறக்கும் விமானத்தை முன்னால் உள்ள பொருட்களை இரவில் தெளிவாக பார்க்கக் கூடிய ரகஸ்யம். |
| 4. சர்ப்பகமான ரஹஸ்யம் | | சூரிய சக்தியை பயன்படுத்தி விமானத்தை வளைத்து ஒட்டிச் செல்வது பற்றி கூறுகிறது. |

போஜராஜர் எழுதிய : "யுக்தி கல்பத் தரு"என்னும் நூ-ல் கப்பல்கள் கட்டுவது பற்றிய விவரங்கள் உள்ளன. ஸர்ப்ப மந்திரம், மத்ய மந்திரம், சுர்க்க மந்திரம், கிர்கம், உன்னாகம், தாரணி, லோலா, காமினி, தாரி, பேகினி, ஜங்கலா, ஊர்த்துவா, அனூர்த்வா, ஸ்வர்ணமுகி, மந்தரா, முத-ய கப்பல்கள் பற்றி கூறுகிறது.)

**விஸ்வாமித்திரர் :**

சந்திர வமிசத்து புரூரவஸ் வழியில் வந்த ருசிகன், காதி வம்சத்தினர் வடபுலத்து சந்திரவம்ச தமிழரசர்கள் குலகுரு. பூருக்கள், துர்வசுக்கள், யதுக்கள், விஸ்வாமித்திரர்கள், வல்மீகர்கள், அகஸ்த்தியர்கள் முத-யோர் தமிழ் அறிந்த முனிவர்கள், சூரிய வமிச குலகுருவான வசிட்டர்களின் எதிரிகள். விசுவாமித்திரர் பிறப்பினால் ஒரு அரசர். இவர் வசிட்டரிடம் தோற்று, பின்னர் தவம் செய்து, பிரம்ம ரிஷியானார். இருக்கு வேதத்தின் மூன்றாவது காண்டத்தில் அடங்கி இருக்கும் கீதங்களக்கு கர்த்தா. இவர் ஸ்ரீராமனுக்கு வில்வித்தை, "பலா அதிபலா" மந்திரங்களை உபதேசித்தவர் சூரியனை வழிபடுவர். "காயத்ரி மந்திரத்தை" தந்தவர். மந்திரங்களுக்கு எல்லாம் தாய் "காயத்ரி" என்று புகழப்படுகிறது. காயத்திரி மந்திர பலத்தால், திரிசங்கு என்னும் சூரிய வம்ச அரசனுக்கு ஒரு "சுவர்க" லோகத்தையே உருவாக்கியவர். (இந்த காயத்திரி மந்திரத்தையே பிராமணர்கள் பூணூல் அணியும்போது உபதேசமாகப் பெற்று, காலை, மதியம், மாலையில் ஓதி வருகிறார்கள். விஸ்வாமித்திரர் கறுப்பு நிறம். ஆரியர் அல்லர்).

**காயத்திர் மந்திரம்**

"தத் ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமிஹி'
தியோ யோனப் பிரசோதயாத்"

ஸவிதா - பிரமன் ; வரேண்யன் - விஷ்ணு; பர்கன் - சிவன், ருஷி - விஸ்வாமித்திரர் ; சந்தஸ் - நிச்ருத், காயத்திரி சந்தஸ் - தேவதை - ஸவிதா.

(பலா, அதிபலா மந்திரமும் காயத்திரி மந்திரத்தை உள்ளடக்கியது)

**உபவேதங்கள் :**

ஆயுர் வேதம், தநுர்வேதம், காந்தருவ வேதம், அர்த்த வேதம் எனபன உபவேதங்கள். ஆயுர்வேதத்தை இயற்றியவர் அஸ்வினி தேவதைகள் தன்வந்திரி. தநுர்வேதத்தை இயற்றியவர் தநுர்வேதி என்னும் விஸ்வாமித்திரர் (தநுர்வேதி என்பவர் பாஞ்சால அரசன் துருபதனுக்கும்,



துரோணாசாரியருக்கும் குரு). தனுர்வேதத்தில், முக்தம், அமுக்தம், முக்தாமுக்தம், யந்திரமுக்தம் என்று வேறுபாடுக்ள உண்டு. சக்கரங்கள் எறிவது முக்தம்; வாட்போர் என்பது அமுத்தம்; நாராசம் முத-யன எறிதல் முக்தா முக்தம்; நெருப்புப் பந்துக்கள் வீசுவது யந்திர முக்தம் என்பனவாகும்.

காந்தருவவேதம் பரத முனிவரால் இயற்றப்பட்டது. (பரத முனிவர் இடைச் சங்க தமிழ் புலவர்) ஸ்வரம், ராகம், தாளம், ஆடல், அவிநயம், இசைக் கருவிகள் பற்றிய நூல்.

அர்த்த வேதம் என்பது சிற்பம், நீதி, அஸ்வ சாஸ்திரம், அரசியல் தந்திரங்க்ள பற்றிய நூல். இதற்கு பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

**உப-ஸ் மிருதி :** இது தர்ம சாத்திரம். கண்ணுவர், கபிலர், லோகிதர், தேவலர், காத்யாயனர், லோகாக்ஷி, புதன், சர்தாதபர், அதிகர், பிரசேதஸ், தக்ஷன், திருமால், விருத்த விஷ்ணு, விருத்த மநு, தௌமியர், நாரதர், பௌலஸ்த்தியர், உத்தரங்கர், சுக்கிரன் முத-ய பலர் இயற்றியுள்ளனர்.

**உபநிஷத் :** இவை வேதங்களி-ருந்து தோன்றியவை. இறைவன், ஆத்மா பற்றிய விளக்கங்கள் உள்ளன. ஈசாவாஸ்ய உபநிஷத், கேனோபநிஷத், முண்டகோபநிஷத், மாண்டூக்ய உபநிஷத், தைத்ரீய உபநிஷத், ஐதரேய உபநிஷத் சாந்தோக்கிய உபநிஷத், கடாப நிஷத், பிரச்னோப நிஷத், முண்டகோப நிஷத், பிருகதாரேண்ய உபநிஷத், பிரம்மோபநிஷத், கைவல்யோப நிஷத், சாபாலோப நிஷத், ஸ்வேதாஸ்ரவோப நிஷத், அம்சோபநிஷத், ஆணிகோப நிஷத், கர்போபநிஷத், நாராயணோப நிஷத், பரமஹம்ஸோப நிஷத், அமிர்தபிந்தூப நிஷத், அமிர்த நாதோப நிஷத், அதர்வ சீர்ஷோப நிஷத், அமிர்த சிகோப நிஷத், மைத்திராயண்யு பநிஷத், என 108 உபநிஷத்துக்கள் மற்றும் 71 உபநிஷத்துக்களும் உள்ளன. இவைகள் பல முனிவர்களால் எழுதப்பட்டுள்ளன.

(வேதங்கள், சாஸ்த்திரங்களைக் காப்பாற்ற பாரதமெங்கும் பல முனிவர்கள் தோன்றி குருகுலம் அமைத்து வாய்மொழியாகவே போதனை செய்து வந்தனர். வேற்று நாட்டு மக்கள் (அசுரர்கள், அவுணர்கள், அரக்கர்கள் முத-யோர் சமண மதம் போன்ற இதர மதங்களை பரப்பி பாரத கலாசாரத்தை அழிக்கவும், பல மொழிகளை உற்பத்தி செய்து பாரத தேசத்தவரிடையே பிரிவினை எற்படுத்தவும் முயற்சித்ததால் பல முனிவர்கள் தனது சீடர்கள் (கோத்ரங்கள்) மூலம் வேதங்களை ஓதி பரப்பினர். அந்தணர்கள் என்று ஒரு பிரிவை எற்படுத்தி வேதங்களை கற்கவும், கற்பிக்கவும், சமூகத்தில் பழைய பழக்க வழக்கங்கள் வரலாறுகள், சடங்குகள், வேள்விகள்,

மறையாம-ருக்க முடிவுகள் மேற்கொண்டனர். அரச குடும்ப வாரிசுகளுக்கு வில் வித்தை, வாள் வித்தை போன்ற ஆயுதப் பயிற்சிகள் படைகள் வியூகம் அமைத்தல், அரசியல் தந்திரங்கள் போதிக்கப்பட்டன. வணிக மக்களுக்கு நிலநூல், பயிர்கள் விளைவித்தல், வாகனங்கள் அமைத்தல், கப்பல்கள் அமைத்தல் முத-யனவும், வான சாஸ்திரமும் போதிக்கப்பட்டன. இதர மக்களுக்கு பலவித தொழில்கள் பற்றியும், ஆடை அலங்காரப் பொருள்கள் உற்பத்தி செய்தல்' வீடு கட்டுதல் முத-யனவும், ஆலயம் அமைத்தல், அணைகள் கட்டுதல் பற்றியும் போதிக்கப்பட்டன. எல்லாவித நூல்களை எழுதும் பொறுப்பும், ஓதுவிக்கும் பொறுப்பும், மருத்துவம் செய்வது பற்றியும், மந்திரதந்திரங்கள், வேள்விகள், சடங்குகள் செய்வது பற்றியும் ருஷிகளின் சீடர்கள் (கோத்திரங்கள் - அந்தணர்கள் மட்டுமே செய்து வந்தனர். இவர்களை ஆரியர் என்றும், ஆசிரியர் என்றும் அய்யர் என்றும் பலவிதமான பெயர்களின் அழைக்கப்பட்டனர். (ஆரியர் என்றால் NobleMen என்றே பொருள்). இப்படி சமூகத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்த ருஷிகளின் பெயர்கள் வருமாறு:)

**ருஷிகளின் பெயர்கள் :**

அத்திரி, பிருகு, குத்ஸர், கௌதம, வசிஷ்ட்ட, அகஸ்த்திய, ஆங்கீரஸ, காஸ்யபர், விஸ்வாமித்திரர், மௌத்கல்ய, கண்ணுவர், கௌண்டின்யர், கர்க்கர், சாண்டில்யர், பரத்துவாஜர், கௌசிகன் போன்ற முனிவர்கள் முக்கியமானவர்கள். பெரும்பாலான முனிவர்கள் தமிழறிஞர்களாகவும் இருந்துள்ளனர். (பிரசித்தமான ருஷிகளின் பெயர்கள் வருமாறு :

அத்திரி, அரிஷ்டநேமி, ஆங்கீரஸ், அதிதி, இந்திரப் பிரதமர், இத்மவாகனர் (பாண்டியர்), ஆரக்ஷணர், அவுசவர், அகஸ்த்தியர் (பாண்டியர்), அஜிதர், அவாந்தரமசு, ஆசூரி, அவிஷ்மார், ஆமலகப்பிரியர், இருடி, இ-கிதர், உத்தாலகர், உசத்தியர், உபமன்யு, ருஸ்யசிருங்கர், இருக்கு - வர்யர், ஆர்த்திகர், உக்ரவீரர் (பாண்டியர்), ஏகபாதர், உத்தமர், இரண்யாக்ஷன், ஆபத்தர், உலேஹுபர், அதர்பர், அப்பிரீதர், அக்நிவர்ணர், இலம்பகர், அக்நிவேஸ்யர், ஹரிதர், ஆத்ரேயர், ஆபஸ்த்தம்பர், ஐதிசயானர், அவடர், அரஷ்டிஷேணர், அதரபர், சட்சீவானர், கௌமுகர், கௌதமர் (சேரர்), கமஷ்டர், கபிலர் (சோழர்), காலவர், க-ஷ்டர், காச்யபர் (சோழர்), கிரது (சோழர்), கர்த்தமர் (சோழர்), கங்கணர் (திராவிடர்), காலாக்கினி (திராவிடர்), உருத்திரர் (பாண்டியர்), கல்லார் கண்டு, கண்ணுவார் (திராவிடர்), களாதரர், கிலீபர், காலமா-, கார்க்கி (யாதவர்), காத்யாயனர் (சோழர்), சார்த்தூரவர், சங்கரர் (பாண்டியன்), சுவேதகேது, சாண்டில்யர், சம்வர்த்தனர், சுமந்து, ஜமதக்னி, சியவனர், சதகர் (பாண்டியர்), சநந்தர் (பாண்டியர்), சனத்குமாரர் (பாண்டியர்), சனத்சுஜாதர், ஜைகீஷ்வியர், ஜிதசத்ரு, சுகர் சுவேதாஸ்வதரர், சுவேதபாகு, சங்கு,



சம்பு, சக்திதரர், சங்குகர்ணர், சனைச்சரர், சபாவர்ணர், சமக்கிரீவர், சரகர், சுஸ்ருதர், சருகர்ணர், சௌமியர், சாதாதபர், சுதீக்ஷணர், சரபங்கர் (திராவிடர்), சாவர்ணி (நேப்பாளி), சிவந்தி, ஜாபா-, தேவலர், துர்வாசர் (தமிழர்), தீர்க்கதமசு, தண்டி (தமிழர்), தேவ ஹோத்ரா, திரிபாதா (ப்ருங்கி - தமிழர்), துவிபாதர், தக்ஷா (சேரர்), நாரதர், பிருகு, பராசரர்', பரசுராமர், பரத்வாஜர், பிப்பலாதர், பர்வதர், பதஞ்ச- (தமிழர்), பாண்டாயினி (பாண்டியர் - பெண்), பைலர், புலஹர் (தமிழர்), பிரசேதஸ், புரத்தியர் (தமிழர்), பதுமநாபர் (சேரர்), பக்ஷாபிலர், பேவா, பார்க்கவர் (சுக்ரன்), போதாயனார், பார்த்தர், மைத்ரா வர்ணர், மேதா, மைத்ரேயர், மைத்ரேயி (பெண்), மார்கண்டேயர் (சோழர்), மகோதரர், மகாவாகு, மசகாண்டர், மாண்டு கர்ணர், யக்ஞ வல்கீயர், வசிட்டர், விஸ்வாமித்திரர் (தமிழர்), வியாசர், வியாக்ரபாதர் (சோழர்), வைஸ்வாநரர், வால்மீகி (தமிழர்), வைசம்பாயனர், வாலகில்யர், விபாண்டகர், வாமதேவர், விரசர், விசுவர், வத்ஸர், வைரோஹிதி, வீதஹவ்யர், வாத்ஸாயனர், வைநர, ததிசி (பாண்டியர்), அருணநன் (காண்டரிஷி), விஸ்வேதேவன் (காண்டரிஷி), உரோமரிஷி, அம்பரீஷர், யௌவனாஸ்வர், த்ருணபிந்து, வாகடர், ஜைமினி, வைசம்பாயினர் போன்ற அநேக ரிஷிகள் பாரதத்தில் பிறந்து பாரத கலாச்சாரம் ஹிந்து மதத்திற்கு புத்துயிர் அளித்துள்ளனர்,

(இந்த ரிஷிகள் அனைவரும் சந்நியாசிகள் அல்லர். ஒவ்வொருவருக்கும் மனைவிகள் உண்டு. எல்லா ரிஷிகளும் பிறப்பினால் பிராமணர்கள் அல்லர். ரிஷி மூலம், நதி மூலம் பார்க்கக் கூடாது எனபர். தாசிகளுக்கும், செம்படவ ஜாதி, கள்ளர்களுக்கும் ரிஷிகள் பிறந்துள்ளனர். ரிஷிகள் நகரங்களில் வசிக்காது காட்டியலே வசிப்பவர்கள். இவர்கள் ஆரியர்கள் அல்லர். இவர்கள் காட்டிய வழியிலேயே வைதீக சடங்குகள், யாகங்கள் முத-யன செய்யப்படுகின்றன. பாரத தேசத்தில் ஹிந்து மதம் வாழ்ந்து கொண்டிருப்பது இந்த மகிரிஷிகள் செய்த தவமேயாகும்).

வேதாபாகங்கள் : 1. ஸம்ஹிதை, 2. பிராம்மணம், 3. ஆரண்யகம், 4. உபநிஷத் என நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| 1. ஸம்ஹிதை | : ருக், யஜுஸ், ஸாம, அதர்வ என நான்கு வகைப்படும். அதில் மந்திரங்கள்,பிரார்த்தனைகள், ஸ்வஸ்தி வசனங்கள், யாகம் செய்யும் வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. |
| 2. பிராம்மணம் | : யாகங்கள் செய்யும் முறை, கர்ம காண்டம் பற்றி கூறுகிறது. |

| | |
|---|---|
| ருக்வேதம் | : கௌஷீதகி, ஐதரேய |
| யஜுர்வேதம் | : கிருஷ்ண யஜுர் : மைத்ராயணி, காடகம், தைத்ரீயம் |
| சுக்லயஜுர் | : சதபதம், வாஜஸ்னேய |
| சாமவேதம் | : தாண்டய, ஸாம விதான, ஜைமினி |
| அதர்வேதம் | : கோபதம் |
| (இதர பிராமணங்கள்) | : ஐந்திரம் (தமிழ் மொழியி-ருந்து மொழிபெயர்க்கப் பட்டது) உபாஸநம், தேவகீர்த்தி, தீஷண்யம், வாஜசிரவசு, ஹிரண்யம் |
| ஆரண்யகம் | : பிரம்ம வித்தைய அத்யயனம் |
| (உபநிஷத் | : முன்பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளது). |

வேதாங்கங்கள் : (1) சிக்ஷா, (2) கல்பம், (3) வியாகரணம், (4) சந்தஸ், (5) நிருக்தம், (6) ஜயோதிஷம் (அறு வகைப்பட்ட பார்ப்பன பக்கம்).

சிஷா : 6 அங்கங்கங்கள் (வர்ணம் ஸ்வரம், மாத்திரை, பலம், ஸாமம், ஸந்தானம்)

இதற்கான நூல்கள் பாணிநீயசிக்ஷா, பராசரி சிக்ஷா, கேச்வீய சிக்ஷா மல்லசர்ம சிக்ஷா, ஸ்வராகும்ச சிக்ஷா, வர்ணரத்ன ப்ரதீபிகா, மாண்ட்வய சிக்ஷா, அமோகா நந்தினிசிக்ஷா, ஷோடச லோகீய சிக்ஷா, மாண்டூகி சிக்ஷா, நாரதீய சிக்ஷா). பாணினியின் சிக்ஷா என்பது (1) ஸ்தான பிரகரணம், (2) காணப்ரகரணம், (3) அந்தப்ரகரணம், (4) பாஹ்ய ப்ரயத்ன பிரகணம், (2) காணப்ரகரணம், (3) அந்தப்ரகரணம், (4) பாஹ்ய ˚ப்ரயத்ன பிரகரணம், (5) ஸ்தானாபிதான ப்ரகரணம், (6) விருத்திகார ப்ரகரணம், (7) பரக்ரம ப்ரகரணம், 8. நாபிதல ப்ரகரணம் என்பன.

**கல்பம் :** வேத கர்மாக்களை விளக்குவது கல்பம் இவை 1. ஸ்ரௌத ஸுத்ரம், 2. க்ருஹ்ய சூத்ரம், 3. தர்மசூத்ரம், 4. கல்ப சூத்ரம், ஸ்ரௌத சூத்ரம், 14 (ருக் வேதம், 1. சாங்கலாயன,2. ஆச்வலாயன கிருஷ்ணயஜுர் வேதம், 1. ஆபஸ்தம்ப, 2. இரண்யகேசின், 3. போதாயன, பாரத்வாஜ, 5. மானஸ, 6. வைகானஸ; சுக்ல யஜுர் வேதம், 1. காத்யாயன சூத்ரம் **ஸாம வேதம் :** 1. ஆர்ஷேய, 2. த்ராஹ்யாயன, 3. லாட்யாயன. **அதர்வ வேதம் :-** வைதான க்ருஹய சூத்ரம்:- ருக்வேதம், சாங்கலாயன, ஆச்வலாயன; கிருஷ்ணயஜுர் ஆபஸ்த்ம்ப, இரண்ய கேசின், போதாயன, மானவ, காடக, பாரத்வாஜ, வைகானஸ, சுக்ல யஜுர், பாரஸ்கர, காடேய; நைமவேதம், கோபீல், காதிர.

**அதர்வ வேதம் :**

கௌசிக க்ருஹ்ய ஸுத்ரம், தர்ம ஸுத்ரம், கல்ப சூத்ரம் முத-ய இதர நூல்கள்.



**வியாக்கரணம்** (இலக்கணம்), பாணினி, பதஞ்ச-, காத்யாயனர் முத-யோர் செய்த இலக்கண நூல்கள்.

**சந்தஸ் :** ˚ஸர்வானுக்ர மணிகா˚ என்னும் நூ-ல் காத்யாயனர் ரிஷியால் கூறப்பட்ட சந்தஸ் 7.

1. காயத்ரி சந்தஸ் : 8 எழுத்துகள் 3 வரி = 24 எழுத்துகள்
2. உஷ்ணிக் சந்தஸ்: 7 எழுத்துகள் 4 வரி = 28 எழுத்துகள்
3. அனுஷ்டுப் சந்தஸ்: 8எழுத்துக்ள 4 வரி = 32 எழுத்துகள்
4. ப்ரஹதி சந்தஸ் : 9 எழுத்துகள் 4 வரி = 36 எழுத்துகள்
5. பங்தீ சந்தஸ் : 10 ஏழுத்துகள் 4 வரி= 40 எழுத்துகள்
6. த்ருஷ்டுப் சந்தஸ்11 எழுத்துக்ள 4 வரி = 44 எழுத்துகள்
7. ஜகதீ சந்தஸ் : 12 எழுத்துகள் 4 வரி = 48 எழுத்துகள்

(மொத்தம் 52 சந்தஸ்-கள் உள்ளன). ஜபம் செய்து வரும் காயத்ரிக்கு 23 எழுத்துக்கள் இருப்பதால் "நிச்ருத் காயத்ரி" என்று பெயர்.

**நிருத்தம் :**

வைதீக சப்தங்களின் நிகண்டு. "யாஸ்கர்" என்பவர் எழுதிய நிகண்டுகவில் 1. அத்யயன விதி, 2. சந்தோ விபாகம், 3. சந்தோ விநியோகம், 4. உப லக்ஷித கர்மாநு கூலம், 5. பூத காலம், 6. உபதர்சித லக்ஷணம் என ஆறு அத்தியாயங்கள் உள்ளன.

**ஐ˚யோதிஷம் :** கணித ஸ்கந்தம் (வருடம், அயனம், ருது, மாதங்கள், பக்ஷம், நக்ஷத்திரம், திதி, வாரம், உபராகம் (கிரஹணம்) போன்ற கால தத்துவங்கள்), ஹோரஸ்காந்தம் (ஆயுள், சுகம், துக்கம், யோகம் முத-யன விளக்கப்பட்டுள்ளன). வேதாங்கஜ்யோதிஷம் என்பது வேதகாலத்து வான நூல். அதர்வ ஜ்யோதிஷம் என்பது 14 பிரகரணங்கள் உள்ளன. இவை பற்றி ஆர்யபட்டர், வராஹமிஹிரா, பிரம்ம குப்தர், பாஸ்கராசார்யர், கமலாகரர் எழுதிய நூல்கள் பிரசித்தம்.

**வேத - உபஅங்கங்கள் :** 1. மீமாம்ஸா (ஜைமினி எழுதிய பூர்வ மீகாம்ஸா. பாதராயணர் எழுதியது உத்தர மீமாம்ஸா என்ப) என்பது கர்மகாண்டம், ஞான காண்டம் பற்றி கூறுவதாகும், 2. வேதாந்தம் எனபது வியாஸர் எழுதிய ப்ரம்மசூத்ரம் என்பது. 3. ந்யாயம் என்பது தர்க்க ஸாஸ்த்ரம, அன்வீக்ஷிதி என்பன. இதை எழுதியவர் கௌதமர். ந்யாய தர்சனத்தில் உள்ள 16 தத்துவங்கள் வருமாறு: 1. பிரமாணம், 2. பிரமேயம், 3. சம்சயம், 4. பிரயோஜனம், 5. த்ருஷ்டாந்தம், 6. ஸித்தாந்தம், 7. அவயவம், 8. தர்க்கம், 9. நிர்ணயம், 10. வாதம், 11. ஜல்பம், 12. விதண்டா, 13. ஹேத்வா பாஸம், 14. ஜாதி, 19. சலம், 16. நிக்ரஹஸ்தானம் (இதற்கு பாஷ்யம் செய்தவர் வாத்ஸாயனர், உத்யோகதர் செய்த ந்யாய வார்த்திகம், 3. வாசஸ்பதி, 4. உதயணர், 5. ஜயந்தர் முத-யவர்கள் பாஷ்யம் செய்துள்ளனர்.

வைஷேிகம் என்பது 7 தத்துவங்கள் கொண்டன (திரவ்யம்,

குணம், கர்மம், ஸாமான்யம், விசேஷம், ஸமவாயம், அபாவம் முத-யன).

**லாங்க்ய தர்சனம் :** 25 தத்துவங்கள் அடங்கிய புருஷனைப் பற்றியது (ஈஸ்வர கிருஷ்ணர், கௌடபாதர், வாசஸ்பதி, விஞ்ஞான பிக்ஷு முத-யோர் பல நூல்கள் செய்துள்ளனர்). இது த்வைத சித்தாந்தம்.

**யோக தர்சனம் :** இது எட்டு அங்கங்கள் கொண்டது (யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, த்யானம், ஸமாதி என்பன) பதஞ்ச- முனிவர் எழுதிய நூல்கள் பிரஸித்தம்.

(தமிழ்நாட்டில் யோகிகளை சித்தர்கள் என்று அழைப்பர்கள். சத்யநாதர், சதோகநாதர், ஆதிநாதர்,அநாதிநாதர், வெகுளி நாதர், மதங்க நாதர், மச்சேந்திர நாதர், கருடேந்திர நாதர், கோரக்க நாதர், யூகி முனி, அகத்தியர், போகர், கைலாசநாதர், சட்டை முநி, திருமூலர், நந்தி, தேரையார், கூன் கண்ணர், கொங்கணர், மச்சமுநி, வாசமுநி கூர்ம முநி, கமல முநி இடைக்காடர், புண்ணாக்கீசர், சுந்தரானந்தர், உரோமரிஷி, பிரம முனி, குதம்ப சித்தர், பாம்பாட்டி சித்தர், காலாங்கிநாதர், சிவவாக்யர், பட்டிணத்தடிகள், அழுகணி சித்தர், அரவிந்தர், ரமணர், குழந்தையானந்தர் என பல சித்தர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்து இறை உணர்வை வளர்த்து வந்துள்ளனர்.

மதுரையில் சொக்கநாதர் (சுந்தரேசர்) பல சித்து விளையாடல்கள் புரிந்துள்ளார். மற்றைய தேசங்களில் இவ்வளவு சித்தர்கள் பிறந்ததில்லை. இன்னும் பல சித்தர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆலயம் சென்று கடவுளை தரிசிப்பதை விட இப்படிப்பட்ட சித்தர்களை தரிசிப்பது நமது வாழ்நாளில் நாம் செய்யும் மிக மிக நல்ல காரியம் "பாரத வம்சாவளி" என்னும் இந்நூ-ல் சித்தர்களைப் பற்றி எழுதுவதே சிறப்பான அம்சம். பெரியோர்களைக் கொண்டு சித்தர்களின் சரிதைகளைப் பற்றி கேட்டு அறிந்து கொள்க.

(வேத வியாஸர், பாரதம் முழுவதும் பயணம் செய்து பல முநிவர்களையும் சித்தர்களையும் சந்தித்து வேதங்கள் எழுத பல செய்திகளை சேகரித்தார். தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கண்டியூர் என்னுமிடத்திற்கு கிழக்கே 2 மைல் தூரத்தில் "திருவேதிகுடி" என்னுமிடத்தில் ஆஸ்ரமம் அமைத்து தமிழ்நாட்டு முனிவர்களையும், சித்தர்களையும் சந்தித்து அநேக செய்திகளை சேகரித்தார். அங்ஙனமே திருமறைக்காடு (வேதாரண்யம்), மறையூர், வேதாசலம் முத-ய பல தலங்களுக்குச் சென்று பல மாதங்கள் தங்கி வேதங்களை தொகுப்பிக்க தமிழ் முனிவர்களிடம் பயின்றார் என்று தெரிகிறது.)



## 28. தலைச்சங்கம் மற்றும் இடைச்சங்க காலத்தில் ஆண்ட பாண்டிய மன்னர்கள்

1. காய்சின வழுதி (உக்கிர வழுதி அல்லது உக்கிர குமார பாண்டியன்)
2. பரமேஸ்வர பாண்டியன் (இந்திரத்துய்மன்) தாய் தேவ அதிதி, மனைவி சுவலை.
3. ஈஸ்வர பாண்டியன் (பிரதிகன்)
4. பிரஸாத பாண்டியன். இவன் இந்திரதுய்மன் என்னும் பாண்டியன் வழி வந்த பாண்டியன்.
5. வீரகுப்த பாண்டியன்
6. தருமகுப்த பாண்டியன்
7. சந்திரகாந்த பாண்டியன் (சுத்யும்னன்) மனைவி தேவசித்தி.
8. தார்மீக பாண்டியன் (மனைவி வித்ருவதை). வித்ருவதையை பிரமராக்ஷஸ் என்னும் பேய் பற்றிக் கொண்டது. காஞ்சி நதியில் மூழ்கி இந்தப் பேய் விலகியது.
9. ஜயமாகீர்த்தி (நிலம் தருதிருவிற்பாண்டியன்).
10. மனோஜவ பாண்டியன் (மனைவி சுபத்திரை).
11. சந்திரகாந்த பாண்டியன் II (தண்டகேது).
12. பிருகத்துய்மன் (குரு ரைப்யர்).
13. சல்-ய பாண்டியன்.
14. பிரபாகர பாண்டியன். இவனுக்கு பிள்ளையில்லாததால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து புண்யகீர்த்தி என்பவனைப் பெற்றான்.
15. பாண்டியன் புண்யகீர்த்தி. இவன் காசிக்குச் சென்று கங்காதேவியைக் காண தவம் செய்து கங்காதேவி தரிசனம் பெற்று முக்தி அடைந்தான்.
(16 முதல் 36 வரை பெயர் கிடைக்கவில்லை)
37. சந்திரசேன பாண்டியன். (மனைவி சுலவை, விதற்ப தேசம்).
(38 முதல் 46 வரை கிடைக்கவில்லை)
47. உக்கிரசேனன் (கடுங்கோன்) (கி.மு. 9576 - இக்ஷுவாகு சகர மஹாராஜன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவன்).
48. (பெயர் கிடைக்கவில்லை) (காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை 89 பாண்டிய அரசர்கள், தலைச்சங்க காலத்தில் வாழ்ந்தனர். பாண்டிய நாடு பல தலை நகரங்களுடன் இருந்தது. எனவே பாண்டிய அரசர்கள் பல பகுதிகளி-ருந்து ஆண்டனர். 1 முதல் 47 பாண்டியர்களின்

சகோதரர்கள் பிள்ளைகள் பலர் ஆண்டிருக்கக் கூடும். எனவே 89 பாண்டியர்கள் ஆண்டனர் எனக் கூறப்பட்டது.

49. வஜ்ஜிராங்கத் பாண்டியன். வஜ்ஜிராங்கத பாண்டியன் முற்பிறப்பில் இந்திரனாக வாழ்ந்தவன். சாபத்தினால் பாண்டியனாகப் பிறந்தான். இவன் ஒரு நாள் திருவண்ணாமலை சென்று, குதிரை மீதேறி வரும் வழியில் ஒரு புனுகுப் பூனை குறுக்கே ஓடவே அதை துரத்திச் சென்றான். குதிரையும், பூனையும் இறந்து கந்தர்வனாக மாறினர். அரசன் சிவதரிசனம் கண்டு முக்தி அடைந்தான்.

50. பிரபாகர பாண்டியன் II

51. சல்-ய பாண்டியன் II. (பகீரத மஹாராஜன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவன்).

52. வீரசேன பாண்டியன் என்னும் மலையத்துவஜ பாண்டியன். மனைவி சுகந்தகேசி. மகள் சிரத்தை. இவளது கணவன் சுகோத்திரன். சிரத்தையின் மகன் சுத்யும்னன்.

53. சுத்யும்னன் (பிருதிவி பாண்டியன்)

54. பாண்டியன் மாகீர்த்தி. மனைவி பிரபை (பிரபாவதி). இவளது கணவன் சந்திரவம்ச அரசன் ஆயுசு. (புரூருவஸ் காலத்தில் பாண்டிய தேசத்தை ஆண்டவன்).

55. பராக்கிரம பாண்டியன்.

56. வீரபாண்டியன். வடதேசத்தில் ருதுபர்ணன் (சூரிய வம்சம்). நகுஷன் (சந்திரவம்சம்), நளன் (நிஷத தேசம்) முத-ய அரசர்கள் ஆண்டனர் (கி.மு. 8500). (கொற்கை பாண்டியன் பெருவழுதி) (பரமேஸ்வர பாண்டியன்).

57. தனபாண்டியன்

58. வீரபாண்டியன் II (விஸ்வாமித்திர முனிவரின் சீடன் காலவரின் கையை துண்டித்தவன். காலவர் யயாதி என்னும் சந்திரவம்ச அரசனின் மகள் மாதவியை மணம் செய்து கொண்டார். வீரபாண்டியன் தம்பி பிரபஞ்ச பாண்டியன் I.

59. உக்கிர வழுதி (உக்கிர குமாரன்).

60. வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் என்னும் குணநிதி பாண்டியன் மனைவி விந்தியாவளி. மகள் இலக்குமி. (இவள் திருமால் அம்சமான சேதுமாதவனை மணம் செய்து கொண்டாள்).

61. சேது பாண்டியன்

62. வீரசேகர பாண்டியன் (கண்டு மகரிஷி காலம்).

63. குலசேகர பாண்டியன் (மணவூர் பட்டிணத்தி-ருந்து ஆட்சி செய்த பாண்டியன்).



64. மலையத்துவஜ பாண்டியன் (தலைநகர் மதுரை). மனைவி சூரசேன சோழனின் மகள் காஞ்சன மாலை. இவளது மகள் மீனாக்ஷி.

65. தடாதகை (மீனாக்ஷி) அல்லது அங்கயற்கண்ணி. கணவன் சோமசுந்தர பாண்டியன் (சிவபெருமான்) அல்லது சொக்கநாதன் (கி.மு. 7600).

66. உக்கிர குமார பாண்டியன் (வெற்றிவேல் செழியன்). முருகவேள் அம்சம் (ஆரஞ்சாத்து பாண்டியன்) மனைவி சோமசேகர சோழன் மகள் காந்திமதி.

67. அபிஷேக பாண்டியன் (வீரபாண்டியனுக்கு போகஸ்திரியிடம் பிறந்தவன். சிவபெருமான் வணிகராக வந்து பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய மாணிக்கம், வைரக் கற்களை அளித்தார். (ரகுமஹாராஜன் காலம்).

68. விக்ரம பாண்டியன். இவன் காலத்தில் மதுரையில் சமண மதம் பரவிற்று.

69. ராஜசேகர பாண்டியன் (இவன் பொருட்டு நடராஜர் கால் மாறி ஆடினார்).

70. குலோத்துங்க பாண்டியன். மனைவி மாணிக்க மாலை. இவன் மலையத்துவஜ பாண்டியன் II என பெயர் சூட்டி பட்டமேற்றான். மகள் கிருதாசி. இவள் வடபுலத்து சந்திரவம்ச அரசன் அரிசகனை மணந்தாள். (தசரத மஹாராஜன் அயோத்தியிலும், இராவணன் இலங்கையுலும் ஆட்சி செய்தனர். கி.மு. 7100).

71. அனந்தகுணபாண்டியன், மதிவாணன், ஜயமாகீர்த்தி III, மதிவாணன் மனைவி சரஸ்வதி. (ஸ்ரீராமனுக்கும் இராவணனுக்கும் இலங்கையில் போர் நடந்த காலம்).

72. குலபூஷண பாண்டியன்.

73. ராஜேந்திர பாண்டியன். இவன் தம்பி ராஜசிங்கன். காடுவெட்டிய சோழன் வகாமனசுவின் புதல்வி சோழதேவியை மணந்தான். ராஜசிங்கன் மகன் ராஜபுரந்தரன்.

74. ராஜேச பாண்டியன் (வெண்தேர் செழியன்) தலைநகரம் பொருநை (தாம்பிரபரணி) ஆற்றின் முகத்துவாரத்தி-ருந்த கவாடபுரம். கி.மு. 6800.

75. ராஜகம்பீரன்.

76. பாண்டிய வம்ச ஸ்தாபகன் (வம்சதீபன்).

77. புரந்தரஜித்.

78. சுந்தரேச பாதசேகரன் (சோமசுந்தரேச பாதசேகரன். இவன் காலத்தில் சிவபெருமான் உலவாக்கிழி அருளினார்).

79. வரகுணபாண்டியன் (திருவிடைமருதூரில் சிவபெருமான் சிவலோகம் காட்டிய லீலை).
80. ராஜராஜபாண்டியன்.
81. ராஜாதி ராஜ பாண்டியன்.
82. சுகுணபாண்டியன் மூன்றாம் நிலந்தரு திருவிற்பாண்டியன். சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்கு அருளியது. கரிக்குருவி`க்கு உபதேசம். சேனாபதி சகுச்சான். சகலன் + சகலை திருமணம். இவன் தம்பி வீரபார்க்கவபாண்டியன்.
83. வரதுங்க பாண்டியன்.
84. சுகுண சேகர பாண்டியன்.
85. சித்திர விரத பாண்டியன்.
86. சித்திர மேரு பாண்டியன் கிருஷ்ண சர்மா
87. உக்கிர பாண்டியன் (என்னும் செம்பூட்சேய்).
88. சித்திர பூஷண பாண்டியன் (மணலூர்புரம் - தலைநகர்) இவன் தம்பி சித்திர விக்ரமன்.
89. கௌமார பாண்டியன் (பெருந்துறை மன்னன்).
90. சித்திரத்துவஜன்.
91. சித்திரவர்மன் (இவன் மனைவி சசிசேகர சோழன் மகள் குணவல்-.
92. சித்திரசேனன்.
93. சித்திர விக்ரமன்.
94. ராஜமார்த்தாண்டன்.
95. ராஜ சூடாமணி.
96. ராஜாதி ராஜன்.
97. ராஜசார்த்தூலன் (எகிப்திய மனு சேரன் சிசிரன் -கி.மு. 4241 ல் பாண்டிய நாட்டை ஆண்டவன்). சசிசேரன் சிந்து ராஜ்யத்தை ஆண்டவன்.
98. ராஜ சுந்தரன் (இவன் தம்பி ராஜேந்திரன்)
99. ராஜ குலோத்துங்கன். இவன் சகோதரன் ராஜசிங்கன். (இவன் மதுரையை ஆண்ட 32வது பாண்டியன். (பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் காலம்).
100. ராஜேசன் (ராஜகுலோத்துங்கன் தம்பி).
101. ராஜ கம்பீரன்.
102. பாண்டியன் வங்கீச தீபன்.
103. புரந்தரஜித்.
104. பாண்டிய வம்ச துரந்தரன் (வங்கிய பதாகன்).
105. பாண்டிய வங்கீச பாதசேகரன் (சென்னிரேஸ்வரன்).
106. சுந்தரேஸ்வர பாதசேகரன் II (நிலம்தரு திருவிற்பாண்டியன், ஆயிரம் பரிக்கோர் சேவகன்).



107. வரகுணபாண்டியன் (இவன் சகோதரன் ராஜமார்த்தாண்டன்).
108. ராஜசார்த்தூலன் II.
109. பிரபஞ்ச பாண்டியன் (தலைநகர் மண-).
110. த்வி`ஜராஜ குலோத்தமன் (ஆயோதனப் பிரவீணன்).
111. ராஜகுஞ்சாரன் (முடத்திருமாறன்). (இடைச்சங்கத்தில் 37 பாண்டிய அரசர்களும் (வெண்தேர் செழியன் முதல் முடத்திருமாற்ன வரை) இவர்களின் சதோதரர்க்ள பிள்ளைக்ள 22 பேரும் ஆக 59 பாண்டியர்கள் இடைச்சங்க காலத்தில் ஆண்டனர்.

(மகாபாரத காலத்தில் அதாவது ஸ்ரீகிருஷ்ணர் அவதார காலத்தில் கி.மு. 3100இல் கபாடபுரத்தி-ருந்து ஆண்ட பாண்டியன் ராஜகுஞ்சாரன் என்னும் முடத்திருமாறன்). க-யுகம் பிறந்த 43வது நாள் பிரமாதி வைகாசி மீ, பௌர்ணமி, வெள்ளிக்கிழமை, விசாகம், கடக லக்னத்தில் நம்மாழ்வார் சுபஜனனம்.) ராஜகுஞ்சாரன் தம்பி மலையத்துவஜ பாண்டியன் உக்கிரசேன்ன மற்றும் பூபாலக பாண்டியன் (பாண்டவர்கள் நண்பன்) அநாகுல பாண்டியன். இவன் மகன் சாரகுமாரன், பூபாலக பாண்டியன் மகன் ஜயசேனன் முத-யோர் பாண்டி நாட்டை ஆண்டனர்).

## 29. தலைச்சங்கம் மற்றும் இடைச்சங்கத்தில் வாழ்ந்த சோழ அரசர்கள்

1. அரித்துவஜன் (திவோதானன்). மனைவி நாகர் அரசர் ஆதிசேஷனின் மகள் சுமதி.
2. ஒளி`ச்செங்கோ (ஜயமாஞ்ஜயன்). நாக இளவரசி அங்கமோகினி சூரிய கொடி ஏந்திய அரசன். பஃறுளி ஆறு தோண்டியவன். பெருவளநாட்டு அரசன்.
3. சக்கரராஜன். (இவன் மகன் போகவதிபுரத்து அரசன் பக்திசோழன்). மகள் பார்வதி அம்சம்.
4. உலகளித்த சோழன் (மநுகாதலன்) இவன் மனைவி இக்ஷுவாகு வம்ச அரசன் விகுக்ஷியின் மகள் சித்திரசேனை.
5. இந்திரவாகனன் (மக்கட் சாதி வகுத்த சோழன்) (பு-வாகனன்).
6. ஏதறிந்த சோழன் (காகுத்தன் நண்பன்).
7. மகாசேனன் (புக-யுடுத்த சோழன் - வைரராஜன் நண்பன்).
8. சூரசேனன் (காஞ்சனா என்னும் நாக இளவரசி கைபிடித்த சோழன்) பிரது மகாராஜன் நண்பன்.

9. தன்னுயிரை மன்னுயிர்க்களித்த சோழன்.
10. அழகுநந்தன்
11. திரிலோகசோழன்
12. கவேரன் (குபேரன்)
13. வில்வலன் க-கண்ட சோழன் (வில்வலன் என்னும் அசரனை அழிந்தவன்).
14. புகை கண்ட சோழன்.
15. கம்பனார் கோயில் செம்பொன்வேய்ந்த சோழன் செம்பியன்
16. மறவ நாடு கண்ட சோழன்.
17. சோழன் கபிலன் (சுராதிராஜன்).
18. இலவந்திகை (உத்தரகோச மங்கை) கண்ட சோழன்.
19. கைலாஸவாசம் கண்ட சோழன். மனைவி கீர்த்தி.
20. அரைத்தசை ஈ ந்த சோழன்.
21. க-ங்கன் தரை கண்ட சோழன்.
22. பூ-காருண்ய சோழன்.
23. சேரன் துறந்த சோழன்.
24. சிலை கடிந்த சோழன் (விஷ்ணு வில்லை முறித்தவன்).
25. மறைகளில் அக்ஷரம் கண்ட சோழன்.
26. தீக்குறி கண்ட சோழன். இவனது மனைவி சேரமாதேவி. மாந்தாதாவின் மகள் (கி.மு. 11,600).
27. அபயங்கர சோழன் (முசுகுந்தன்) மனைவி புருகுச்சனின் மகள்.
28. விக்ரம சோழன்.
29. ஏக சக்ராதிப சோழன் (குரு ஹரித மகரிஷி)
30. தக்க சோழன் (தக்ஷன்)
31. உத்துங்க சோழன்
32. குலோத்துங்க சோழன் (குரு-ஆங்கீரஸ்).
33. ராஜேந்திர சோழன்.
34. திருமுடிச் சோழன் (சேய் கொண்ட சோழன்).
35. கரு வன்னம் சுரியிட்ட சோழன் (கஜ-சம்ஹாரன், கரி-காலன்).
36. தருமசோழன் (அருந்தவச் சோழன்)
37. திருநீற்றுச்சோழன் (உறையூர் அரசன்)
38. வீரசோழன் (மனைவி சத்யை - சூரிய வம்ச அரசன் ஹரிச்சந்திரன் மகள்)
39. வசுதேவ சோழன்.
40. விட்ட சிறை சோழன்.
41. ஆறில் ஒரு கடமை கண்ட சோழன்.



42. சிவ-ங்க சோழன் (மநு நீதி கண்ட சோழன் - மனைவி பத்மவல்-).
43. வருணனை நிலையிட்ட சோழன் (வீரசோழன், மனைவி, ஹேமவல்-).
44. திண்வசந்த சோழன் (கரிகாலன்)
45. தீரசோழன் (சம்ப்ரதாய சோழன்)
46. நித்யோத்ஸவ சோழன்.
47. சகரன் துணை கண்ட சோழன்.
48. பிரதாப ருத்திரன் (காவிரி கரை கண்ட சோழன்) மகள் காவிரி.
49. சுந்தரசோழன் (சமுத்திரம் சேர்ந்த சோழன்)
50. பொக்க - பூசோழன்.
51. இந்திரனை பு-வாகனமாக கொண்ட சோழன்.
52. சுந்தரசோழன் II
53. வ-யினில் குருதி கொடுத்த சோழன்.
54. வாதராஜன் பணிகொண்ட சோழன் (வாயு பகவானை வேண்டி போர்க் கப்பல்களை ஓட்டியவன்)
55. தூங்கு எயில் எறிந்த தொடிதோட் செம்பியன். (பறக்கும் கோட்டைகளை அழித்தவன். பூம்புகாரை நிறுவியவன். இந்திரவிழா எடுத்தவன். குரு அகஸ்த்தியர்).
56. இந்திரனிடம் விமானம் பெற்ற சோழன்.
57. தருமனுக்கு உதவி செய்த சோழன்.
58. சித்திரவர்ம சோழன். (நாக கன்னிகை கை பிடித்தவன்). வீரபாண்டியன் நண்பன். விஸ்வாமித்திரனின் சீடர். காலவர் ஒரு குரு.
59. சூர்வர்மன் (சூர்ய ஜோதி) மனைவி யசோவதி மகள் சீமந்தினி. (சேரன் சந்திராங்கதன் மனைவி) மகன் ராஜ்யவர்த்தனன் (குரு தீர்க்கதமஸு). ராஜ்ய வந்தனன் மகன் சூர்யஜோதி. இவன் மனைவி லீலாவதி. இவன் மகன் சுதர்ஸனன்.
60. வீரசேனன் (தளை நீக்கிய சோழன்)
61. சுதரும சோழன்.
62. பராக்கிரமசேனன் (செந்தாமரை கண்ணன்).
63. சூரசேன சோழன் II (இவனது மகள் காஞ்சன மாலை. மலையத்துவஜ பாண்டியனை மணந்து காஞ்சன மாலை மீனாக்ஷியைப் பெற்றாள்).
64. உக்கிர சேனன்.
65. சோமசேகர சோழன் (மகள் காந்திமதி. உக்கிரபாண்டியன் மனைவி காந்திமதி).
66. வீரசேனன் (தருமசோழன்).

67. வரசேனன் (இவன் மனைவிகள் வைஜயந்தி மற்றும் இலக்குமி. இலக்குமியின் மகன் புண்டரீகாக்ஷன். இவன் மனைவி பத்மாவதி).
68. காஞ்சி திருத்தி காடுவெட்டிய சோழன் கரிகாலன் (பிரதாப ருத்திரன் II ).
69. காந்தன்.
70. ககந்தன்.
71. கம்புகண்டன், மகன் கம்பு கண்ட்யை, மதனசுந்தரி (இவளை சத்ருக்னன் மகன் யூபகேது சுயம்வரத்தின்போது தூக்கிச் சென்று மணந்தான்.
72. சிவ-ங்க சோழன் (வகாமநசு).
73. உசீநரன்.
74. மகாமநு (சோழ மந்திரி மருதாநந்த நாதர்.
75. சிபி. இவன் மகள் சயித்திரை. (இவள் கணவன் சியாமகன்).
76. சூரவாதித்தன்.
77. வயலவ ஆதித்தன்.
78. செம்பியன் ஆயிரம் பரிக்கோர் சேவகன். இவன் பாண்டியன் சுந்தரேச பாதசேகரனுடன் சண்டையிற்று தோற்றான்.
79,80,81,82,83 சோழ அரசர்கள் பெயர் கிடைக்கவில்லை சோழ நாட்டை தஞ்சன் என்னும் அசுர மன்னன் பிடித்து ஆட்சி செய்தான். எனவே தஞ்சன் ஊர்-தஞ்சாவூர் ஆயிற்று. திருமால் ஒரு அந்தண வடிவம் கொண்டு தஞ்சனை மாய்த்து, குலோத்துங்கன் என்னும் சோழ இளவரசனை மன்னனாக்கினார்.
84. குலோத்துங்கன் + மாணிக்கமாலை.
85. பீமசேனன் சோழன் (இவன் மனைவி வித்யுத்வதை).
86. வீரசேனன், ராஜராஜேந்திரன் + கம-னி (பாண்டிய இளவரசி) கரிகாலர் (வீரமார்த்தாண்டன்).
87. ஆஸ்ரிதன் (இவன் துஷ்யந்தன் - சகுந்தலைக்கு பிறகு ஆண்ட பரதனின் மகன்). ஆஸ்ரிதன் தம்பி வீரசேனன் சோழ அரசனானான்.
88. சோழன் திறையன்.
89. கிருத்திஹரன் (கஜசம்ஹரன் - கரிகாலன்).
90. சுகுணன்.
91. சற்குண சோழன்.
92. சசிசேகர சோழன். (இவன் மகள் குணவல்-யை சித்ரவர்ம பாண்டியன் மணந்தான்).
93. தேவசோழன், சங்கமராஜ சோழன், சங்கரராஜ சோழன், குமார குலோத்துங்கன்.



94. ஆகாச ராஜன். (இவன் வளர்ப்பு மகள் பத்மாவதி என்னும் அலர்மேல்மங்கை. ஏழுமலை (திருப்பதி)யில் வசித்த வகுளமா-கையின் வளர்ப்பு மகன் ஸ்ரீநிவாசன் (திருமால் அம்சம் - வெங்கடசேன்) பத்மாவதியை மணந்தான்.
95. ஸ்ரீநிவாசன்.
96. சக்ரபாணி (உறையூர்).
97. அச்சுதன்.
98. நாராயணன்.
99-106 பெயர்கள் கிடைக்கவில்லை.
107. உபரிசிரவசு (சேதி ராஜ்ய அரசன். சோழ நாட்டை ஆண்டான்). உபரிசிரவசுவின் மகள் பத்மினி. இவளை திருமா-ன் அம்சமான சௌரிராஜன் மணந்தான்.
108. செந்தாமரைக் கண்ணன் (அச்சுதன் மகன்).
109. சோழன் செங்கணான்.
110. சூடம சோழன்.
111. குமராங்குசன். (இவன் மகாபாரதப் போரில் கலந்து கொண்டான்).

## 30. வரலாற்றுத் துளிகள்

பாரத நாடு முழுவதும் ஒரு காலத்தில் மக்கள்அனைவரும் தமிழ் மொழியே பேசினர். தமிழகத்தின் வடக்கு எல்லை இமயமலையாக இருந்தது. காரிகிழார் என்னும் தலைச்சங்கப் புலவர் (பல்யாக சாலை முது குடுமி பெருவழுதி என்னும் பாண்டிய அரசன் காலத்து வாழ்ந்தவர்). கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

“படாஅது பனிபடு நெடுவரை வடக்கம்
தெனாஅதுரு கெழு குமரியின் தெற்கும்
குணா அது கரை பொரு தொடு கடற்குணக்கும்
குடா அது தோன்று முதிர் பௌவத்தின் குடக்கும்”

(வடக்கே இமயமலை; தெற்கே குமரியாறு; கிழக்கே தொடுகடல்; மேற்கே மலைத் தொடர்).

முந்தைய அத்தியாயங்களில் குமரிக் கண்டத்திலுள்ள 49 நாடுகள் கட-ல் மூழ்கிய பின்பு மதுரை அருகே அரசாண்ட சூரிய வம்சத்தினர் (வைவஸ்ஸ-ுதன்) வடக்கே சென்று அயோத்தியி-ருந்து ஆட்சி செய்ததும், பாண்டிய சோழ மன்னர்கள் காந்தாரம் (Afghanistan - Kandahar - Jalalabad) பாஞ்சாலம், அவந்தி முத-ய இடங்களில் சென்று ஆட்சி அமைத்தது பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

மேலும் தமிழ்ப் புலவர்கள், தமிழை ஆதரித்த வள்ளல்கள் பெயர்களை தலை ஏழு வள்ளல்கள், இடை ஏழு வள்ளல்கள், கடை ஏழு வள்ளல்கள் என பெருமைப்படுத்தி பாடல்கள் பாடியுள்ளனர்.

தலைஏழு வள்ளல்கள் 1. குமணன், 2. சகரன், 3. சாகரன், 4. செம்பியன், 5. துந்துமாரி, 6. நளன், 7. நிருதி முத-யோர்.

குமணன் தமிழ்நாட்டில் வாழ்ந்த அரசன். சகரன் சூரியகுலத்து அயாத்தி நகர அரசன். சாகரன் (பகீரதன்) என்னும் அரசனும் அயோத்தியில் வாழ்ந்தவன். செம்பியன் சிபி என்னும் சோழ அரசர்கள் வழி வந்தவன். பூம்புகார் நகர் அமைத்து இந்திர விழா எடுத்த "தொடிதோட்செம்பியன்" என்னும் தமிழ்நாட்டு அரசன், துந்துமாரி என்பவன் துந்துபி என்னும் அசுரனை அழித்த ஹர்யஸ்வன் என்னும் வடபுலத்து அரசன். நளன், வடபுரத்தே உள்ள நிஷாததேசத்து அரசன். நிருதி என்பவன் நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஆப்பிக்கா (மொரீஷஸஸ் அல்லது எத்தியோப்பியா தேச அரசன்) தேசத்தவன்.

இடை ஏழு வள்ளல்கள் அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான், அக்ரூரன், கர்ணன், சிசுபாலன், தந்தவக்கிரன் ஆகியோர். அரிச்சந்திரன் சூரிய வம்சத்தை சேர்ந்த அரசன். அந்திமான், சந்திமான் பற்றிய விவரங்கள் தெரியவில்லை. அக்ரூரன் வடமதுரை ஆண்ட கம்சனின் மந்திரி. ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பிரியமானவர். குமட்டூர் கண்ணனார் என்னும் தமிழ்ப்புலவர் அக்ரூரனைப் பற்றி பாடியுள்ளார். அதுபோன்றே மகாபாரத காலத்தில் வாழ்ந்த கர்ணன், சிசுபாலன், தந்தவக்கிரன் முத-யவர்களைப் பற்றி தமிழ்ப் புலவர்கள் பல பாடல்கள் பாடியுள்ளனர்.

துவாரகாபுரி அரசன் ஸ்ரீகிருஷ்ணன் தலைச்சங்க (தமிழ்) உறுப்பினர் ஆவார். தருமபுத்திரரை கௌதமனார் என்னும் தமிழ்ப்புலவர் நேரில் சென்று பாடி பரிசில் பெற்றுள்ளார். இம்மாதிரி அநேக உதாரணங்கள் உள்ளன. இவற்றி-ருந்து வடபாரதத்தில் முதல் மன்வந்திரம் முதல் க-யுகம் (கி.்மு. 3100) பிறக்கும் வரை தமிழ்மொழி பேசப்பட்டு வந்தது. தமிழ் புலவர்கள் வடபாரதத்திலும் வாழ்ந்தனர் என கூறலாகும்.

கிழக்கு திசை அதிபதியான இந்திரன், தமிழ் தலைச்சங்க உறுப்பினர். தென்கிழக்கு திசையின் அதிபதியான அக்னி மற்றும் அவர் அம்சமாகப் பிறந்த முருகவேள் தமிழ் தலைச்சங்கத் தலைவர். தெற்கு திசை வாழ்ந்த பாண்டியர், சேரர், சோழர்கள் தமிழர்கள், தென்மேற்கு திசை அதி்பதியான நிருதி, தலைஏழு வள்ளலல்களில் ஒருவன் என்று தமிழ் புலவர்களால் பாடப்பட்டவன். மேற்கு திசை அதிபதியான வருணனின் மகனான அகஸ்தியர் தமிழ்தலைச்சங்கத் தலைவர். வடமேற்கு திசை அதிபதியான வாயு (மருந்து) மற்றும் பஞ்சாப்,



காந்தாரத்தாரம் முத-ய நாட்டில் வாழ்ந்தவர்களும் தமிழ் மொழி பேசுபவர்கள். வடக்கு திசை அதிபதியான குபேரன் (கவேரன்) சோழர்கள் பிரிவைச் சேர்ந்த தமிழன். ஈசானிய திசை அதிபதியான சிவபெருமான் தமிழ் தலைச்சங்கத்தை ஸ்தாபித்தவர். எனவே பாரதம் முழுதும் ஒரு காலத்தில் தமிழ்மொழியே பேசப்பட்டு வந்தது என்பதற்கு இவை உதாரணங்களாக அமைகிறது. வடமேற்கு திசையில் (ராவல்பிண்டி - பாகிஸ்தான்) வாழ்ந்த கண்ணுவர் தமிழ் மொழியி-ருந்து தெலுங்கு பாஷையை தோற்றுவித்தவர். அவர் தமிழ்நாட்டில் பல திருமால் ஆலயத்திற்கு வந்து வழிபட்டுள்ளார். வடநாட்டில் காசியின் அரசனாக மலையத்துவஜ பாண்டியன் என்பவன் மகாபாரத காலத்தில் ஆட்சி செய்துள்ளான். திபெத்தில் புத்தர் ஆலயங்களில் திருமூலர் எழுதிய திருமந்திரத்தி-ருந்து இன்னமும் தமிழ்பாபாடல்கள் பாடப்படுகின்றன. சீன தேசத்திற்கு காஞ்சிபுரத்தி-ருந்து சென்ற பௌத்தர் தமிழ்ப் புலவர் தர்மபாலர் பௌத்த மதத்தை சீனாவில் பரப்பியுள்ளார். அநேக தமிழ் வார்த்தைகள் சீன மொழியில் இன்னும் புழக்கத்தில் உள்ளன. பர்மா, சயாம், இந்தோனேஷியா, மலேஷியா நாடுகளில் இராமாயண காலந்தொட்டே தமிழ்மொழி பேசப்பட்டு வந்துள்ளது. மனோஜவ பாண்டியன் போன்ற சில பாண்டியர்கள் இந்திர பதவி வகித்துள்ளனர். பல வேள்விகள் அக்காலத்தில் தமிழ் முனிவர்களே முன்நின்று நடத்தியுள்ளனர்.

மேலும் மொகஞ்சதாரோ (மறைசதரை) முத-ய பல நகரங்களில் சிந்துவெளி நாகரிகம் பற்றி கூறியுள்ள அறிஞர்கள் அங்கு தமிழ்மொழியே பேசப்பட்டு வந்துள்ளது என்று கூறுகின்றனர். ஈரான், ஈராக்கு, துருக்கி, இத்தா-, கிரீக், எகிப்தி தேசங்களில் உள்ள பல நகரங்களின் பெயர்கள் (ஊர்) இன்றும் தமிழ் மொழியிலேயே உள்ளன. தென் அமெரிக்க நாடுளில் (பெரு, பொ-வியா, அர்ஜன்டினா) உள்ள பழைய ஆலயங்களில் சிவன், நடராஜர் விக்ரஹங்கள் உள்ளன. அங்குள்ள பழைய இனத்தவர் மயன் (மாயன்), அஸ்திகன் (ஆஸ்டெக்), இனகுலன் (இன்காஸ் அல்லது சூரிய குலத்தவர்) முத-ய நாகரீகங்கள் தோன்றிய காலத்தி-ருந்து இன்றுவரை வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் மொழியில் பல தமிழ்ச்சொற்கள் கலந்து உள்ளன. வடஅமெரிக்கா க-போர்னியாவில் "சாஸ்தா - பூங்கா, சாஸ்தா மலை" என்ற பெயரில் இன்றும் வழிபாட்டுத்தலங்கள் உள்ளன. இதி-ருந்து உலகம் முழுதும் இந்து மதமும் தமிழர்களுடன் பயணம் செய்து உலகம் முழுதும் பரவியிருந்தன என்று கூறலாகும்.

மேலும் சில வரலாற்று உண்மைகள் கீழே தரப்படுகின்றன.

**இத்தா-**

ஏதென்ஸ் நகரை நிர்மாணித்து அதி-ருந்து ஆண்ட முதல் மன்னன் "பாண்டியன்" என்பவன் (கி.மு. 2000). பாண்டியனின் தங்கைகள் பீ-வளை, விரோசனி என்பவர்கள். பாண்டியனின் மகன் பூதபாண்டியன், ஏறிசாத்தன் என்னும் இரட்டையர். எறிசாத்தன் (Erechteus) மனைவி பிரதக்ஷினை (Prazithea), எறிசாத்தன் மகன் சிசிரப்பன் (Cecerops) மற்றும் பிரதிக்ஞை (Protogonia), பாண்டிராணி (Pandora), விரோசனி (Procenis) முத-ய பலர்சிசிரப்பன் மகன் பாண்டியன். இவன் மகன் அஜன் (Aegeus), இவன் மனைவி ஆதிரை (Athra), அஜன் மகன் தீசன் (Thesus), .இவன் ராகுலன் (Hercules) என்பவனுடன் சேர்ந்து அமேசான் ராணிகளை வென்றான் (கி.மு. 1400), -பியா (வடக்கு ஆப்பிரிக்கா) நாட்டு ராணிகள் அமேசான் ராணிகள் எனப்படுவர். உலரபி என்பவள் அமேசான் ராணியாக இருந்தபோது "காவிரி" விழா (இந்திர விழா) 9 நாட்கள் (நவராத்திரி) கொண்டாடப்பட்டது. அமேசான் ராணி மாரி - அன்னை (Ma-Ri_Enna) காலத்தில் பெரும்போர் நடந்தது. பாண்டி நாட்டு புரோகிதர்கள் (போற்றிமார்) சிவன் (Zeus) கோயில் பூசாரிகளாக இருந்தனர்.

குருகு (கிரௌஞ்சம்) என்னும் கிரீக் அல்லது கிரேக்க நாட்டு புராணங்களில் பாண்டிய, சேர மன்னர்களின் பெயர்கள் உள்ளன. (இது கி.மு. 3100க்கு முன் நடந்த நிகழ்வுகளை குறிப்பனவாக உள்ளன).

**எகிப்து**

எகிப்தின் முதல் தலைமுறை (கி.மு. 4240) அரசன் மநு (Menes). முதல் தலைமுறை அரசர்களில் உதியன் சேரன் (Djo-Ser), உதியன் சேரன் திதி (Djo-Ser-Teti) என்ற அரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

இரண்டாவது தலைமுறை கி.மு. 3100-ருந்து 2686 கி.மு. வரை 17 அரசர்கள் ஆட்சிபுரிந்தனர். மூன்றாவது தலைமுறை 2686 கி.மு. முதல் கி.மு. 2617 வரை 17 வருடங்கள் ஆட்சிபுரிந்தனர். அதில் உதியன் சேரன் (Djo-Ser), நாபாகன் (Nabaka), உதியன்-சேரன்-திதி என்னும் அரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

நான்காவது தலைமுறை கி.மு. 2617 முதல் 2502 வரை 115 வருடங்கள் 9 அரசர்கள் ஆட்சி செய்தனர். அதில்ஈசபிரான் (Sneferu), ருத்ர சடையன் (Redjedf), மிசிரன் (Mycernius), ஹரதத்தன் (Hordedef), சபேசன் (Shepseses) முத-ய பெயர்கள் காணப்படுகின்றன.

ஐந்தாவது தலைமுறை கி.மு. 2500-ருந்து கி.மு. 2360 வரை



140 வருடங்கள் பத்து அரசர்கள் ஆண்டனர். அதில் சகரன் (Sahure), சடையன்காரி ஈசன் (Djed-Kare-Ises), நீபன்-காரி (Neferir-Kare), சபேசன் காரி (Shepses-Kari), ஆசிரியன் காரி (User-Kare), இவன் மனைவி ஐயை புத்ரி (I-Put), நீதி சேரன்-காரி (Netjery-Kare), மாறன்-அரி (Maren-Re), அந்துவன் சேரல் (Antyem-Ser) முத-ய பெயர்கள் காணப்படுகின்றன.

ஆறாவது, ஏழாவது தலைமுறையினர் கி.மு. 2360 முதல் கி.மு. 2174 வரை 9 அரசர்கள் ஆண்டனர். அதில் நித்யகீர்த்தி (Nitu-Kerty) என்னும் பெயர் காணப்படுகிறது,

எடடாவது தலைமுறை கி.மு. 2173 முதல் கி.மு. 2157 வரை 6 அரசர்கள் ஆண்டனர். அதில் நீபன்-காரி (Nefer-Kare), நீபன்-உக்ரன் (Nefer-Kahor), துஷ்ட-மோசி (Tut-Mose) என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

9வது தலைமறை கி.மு. 2156-ருந்து கி.மு. 2048 வரை 13 அரசர்கள் ஆண்டனர். அதில் அச்சுதன் (Acthos), நீபன்-காரி (Nefer-Kare) முத-ய பெயர்கள் காணப்படுகின்றன.

10ஆவது, 11ஆவது தலைமுறை கி.மு. 2047 முதல் கி.மு. 2022 வரை ஆண்டது. அதில் அச்சுதன், நீப-புத்திரன், மந்தகோபன், சூரிய வாகனன், சூரன்-சங்கிலாதன், நிபுத-வைரி, சிசிரன்-அத்ரி, சங்கன் காரி என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

12ஆவது முதல் 16ஆவது தலைமுறையினர் கி.மு. 1872 முதல் கி.மு. 1317 வரை ஆண்டனர். அதில் இக்ஷுவாகு சாருகண் (Hyksos Sharek), நீப-ஐராவதன், அமாவசு, துஷ்டமோசி முத-ய பெயர்கள் காணப்படுகின்றன.

19ஆவது முதல் 20ஆவது தலைமுறையினர் கி.மு. 1318 கி.மு. 1085 வரை ஆண்டனர். அதில் சேது (sethos), ராமசேஷன் (Ramses), மோசி (Moses) முத-ய பெயர்கள் காணப்படுகின்றன. (மோசஸ் கி.மு. 1196 முதல் 1190 முடிய எகிப்தில் இருந்து பின்னர் ஹீப்ரு மக்களை அடிமை தளத்தி-ருந்து விடுவித்து இஸ்ரேலுக்கு அழைத்து வந்தான்).

கி.மு. 1085இல் ஹரிஹரன் (Hariharas) என்னும் அரசன் எகிப்தை ஆண்டான்.

மேற்குறிப்பிட்ட தகவல்களி-ருந்து சேர மக்கள் (காரி - சேரன்) எகிப்தை அடைந்து ஆட்சி அமைத்தனர் என்று கெரிகிறது.

**சுமேரியா**

இங்கே உள்ள பாகா (Baga-Baghas-Kevi) என்னும் நகரத்தைப் பற்றி ரிக்வேதத்தில் கூறப்படுகிறது. விஸ்வாமித்திரரின் பிள்ளைகள் சந்திரவம்ச (அனு, துரு வம்சம்) அரசர்களுக்கு புரோகிதர்களாக இருந்தனர். இவர்களை 'காதி' வழியினர் (Khattis அல்லது Hittitees)

என்று கூறப்படுகிறது. இவர்கள் சுமேரியாவில் குடியேறிய தமிழ் மரபினர் என்று கருதலாகும். சுமேரிய அரசர்கள் (கி.மு. 3100இல்) பெயர்களில் சுகாந்தன், நவரதன், சுகாமன், சுநாமா, சுமா- என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. பிரத்யங்கரா (அல்லது குடைஷ்) என்னும் துர்க்கையை வழிபட்டனர் சுமேரியர்கள். மேலும் சிவன், ரிஷபம் (Osiris, Abys) முத-யவற்றையும் சுமேரியர் வணங்கினர்.

எபிரேய ஆகமத்தில் "ஊர்"என்னும் நகரத்தை விட்டு அபிராமன் (Abraham) கி.மு. 1728இல் எகிப்து சென்றான் என்று கூறப்படுகிறது,. (அபிராமன்-ஹிந்து பெயரே ஆகும்).

"காலா" என்னும் பட்டினம் அசிரியாவில் இருந்தது. இதை ஆண்ட மன்னர்கள் காலா-கேது, காலா-நேமி போன்ற அரசர்கள் வடபாரதத்தில் போர் தொடுத்து கொள்ளை அடித்தனர் என்று கூறப்படுகிறது (கி.மு. 3100).

வைதீக மார்க்கத்தை தங்கள் மொழியில் மொழி பெயர்த்து ஆரியர்கள் வைதீக மதத்தை பின்பறறினர். ரஷ்யாவில் உள்ள "வோல்கா" என்னும் நதிக்கரையில் புதிய பாரத கலாசாரம் உருவெடுத்தது. நாகர்கள் மற்றும் பாரதத்தி-ருந்து வந்து குடியேறியவர்கள் தங்களை "ஆரியர்கள்" என்க்கூறி பல இடங்களைப் பிடித்து ஆட்சி செய்தனர். ஆரிய அரசர்கள் கி.மு. 1400-இல் பாரதத்தில் படையெடுத்து பல இடங்களை கைப்பற்றினர். (கி.மு. 1400க்கு முன்பாக ஆரியர்கள் சிந்து நதியின் உபநதியான சட்லெஜ் நதியதைத் தாண்டி பாரதத்தில் நுழையவில்லை). பாரதத்தில் உள்ள ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம் முத-யனவும் ராமாயணம், மகாபாரதம் முத-ய நூல்கள் ஆரியமொழியில் (சம்ஸ்கிருதம், தேவநாகரி -பி) மொழிபெயர்க்கப்பட்டன. வடபாரதத்தில் இருந்த மொழிகளி-ருந்து வார்த்தைகள் சம்ஸ்கிருதத்தில் சேர்க்கப்பட்டு புதிய மொழி உண்டாயிற்று.

வடபாரதத்திலுள்ள நாடுகள் ஆரிய அரசர்கள் ஆட்சிக்குட்பட்டதால் தமிழர்கள் தென்பாரதம் தொடங்கினர். வடபாரதத்தில் வாழ்ந்த மக்கள் ஆரிய அரசர்கள் கொடுமைக்கு பயந்து சம்ஸ்கிருத மொழியைப் பயின்றனர். முக்கியமாக பௌத்தர்கள் தேவநாகரி மொழியில் எழுதப்பட்ட சம்ஸ்கிருதத்தை பாரதம் எங்கும் பரப்பினர். (எவ்வாறு மங்கோ-ய இஸ்லாமியர் பாபர் முதல் ஔரங்கசீப் பரை இந்தியாவில் புகுந்து இஸ்லாமிய மதத்தை, உருது, பாரசீக மொழியையும் பரப்பினார்களோ, எவ்வாறு ஆங்கிலேயர் ஆங்கில மொழியை பாரதத்தில் பரப்பினார்களோ அவ்வாறே சம்ஸ்கிருதம், ஹிந்து, பௌத்த, ஜைன மதத்தின் குருமார்கள் மூலம் உலகெங்கம் பரவியது. பழைய பாரத கலாசாரம், மொழி, உடை, சம்பிரதாயங்கள் முத-யன மாற்றப்பட்டது.



வரலாறுகள், கோயில்கள் மாற்றப்பட்டு தகர்க்கப்பட்டன). தென்பாரதத்திலும் இந்த மாற்றத்தின் தாக்கம் இருந்தன. இத்தாக்கத்தி-ருந்து தமிழைக் காக்கவும், பழைய வரலாறுகளை காக்கவும் முடத்திருமாறன் III என்னும் பாண்டிய அரசன், ஆலவாய் அல்லது நான்மாடக்கூடல் அல்லது மதுரை என அழைக்கப்படும் நகரை ஏற்படுத்தி, தமிழர்களை ஒன்றுபடுத்தி, தமிழ் புலவர்களைக் கூட்டி கி.மு. 1715இல் தமிழ் சங்கம் நிறவினான். கி.மு. 3100 முதல் கி.மு. 1716 வரை பாரதத்தில் மக்கள் இடப்பெயர்ச்சி, பூகம்பம், பேரழிவு, யுத்தம் முத-யன ஏற்பட்டு பெரும் வல்லரசுகள் ஏதும் அமையவில்லை.

கடைச்சங்கம் கி.மு. 1715இல் ஆரம்பிக்கப்பட்டு கி.பி. 235 முடிய 1950 ஆண்டுகள் நடைபெற்றன. பாண்டிய அரசர்கள் 49 பேர் இக்காலத்தில் ஆட்சி செய்தனர். இதில் கவி அரங்கமேறிய அரசர் மூவர். இச்சங்கத்தில் மொத்தம் 449 புலவர்கள் கலந்து கொண்டனர். தமிழ் மொழிக்கு புதிய எழுத்து வடிவம் நிர்ணயிக்கபட்டு தென்னாடெங்கும் பயிற்றுவிக்கப்பட்டது. இக்காலத்தில் தமிழ் புலவர்களில் பலர் வடமொழியையும் கற்று வடபாரதம் சென்று ஹிந்து மதம் அழியாமல் இருக்க தொண்டாற்றினர். இச்சான்றோர்களால் பாரதத்தில் ஹிந்து மதம் அழிந்து விடாமல் காக்கப்பட்டது. மக்கள் மீண்டும் சிவன், திருமால், ராமன், கிருஷ்ணன், மாருதி முத-ய ஹிந்து தெய்வங்களை வணங்க ஆலயங்கள் எழுப்பப்பட்டன. இக்கடைச் சங்கம் பற்றிய விவரஙகள் பின்வரும் அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன.

(கி.மு. 3100 முதல் கி.மு. 1700 முடிய உள்ள கால கட்டத்தில் வாழ்ந்த அரசர்கள் முக்கியமாக சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பெயர்கள் அடுத்த அத்தியாயத்தில் கூறப்படுகின்றன).

## 31. ஜனமேஜயன்

மஹாபாரதப் போரில் பாண்டவர்களின் புதல்வர்கள் அஸ்வத்தாமாவினால் கொல்லப்பட்டனர். துரியோதனன் முதலான கௌரவர்கள் போரில் மாண்டனர். அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் அபிமன்யு பிறந்தான். அபிமன்யுவுக்கும் விராட அரசன் புத்திரி உத்தரைக்கும் பரீக்ஷத்து பிறந்தான். உத்தரையின் கருவிலே பரீக்ஷத்து வளர்ந்த போது அஸ்வத்தாமாவின் பிரம்மாஸ்த்திரத்தால் அழிந்து விடாமல் ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய யோக சக்தியால் அவனைக் காப்பாற்றினார். பரீக்ஷித்து பின்பு வளர்ந்து குரு வம்ச அரசனானான். பரீக்ஷித்து காட்டில் வேட்டையாட சென்றபோது ஒரு மிருகத்தை தொடர்ந்து சென்ற அங்கிருந்த சமீக மகரிஷியின் ஆஸ்ரமத்தை அடைந்து அவரிடம் அந்த மிருகத்தைப் பற்றிக் கேட்க, அவர்

தியானத்தில் இருந்தமையால் பதில் சொல்லவில்லை. கோபமுற்று பரீக்ஷித்து சமீக முனிவரின் கழுத்தில் ஒரு செத்த பாம்பை போட்டுவிட்டுச் சென்றுவிட்டான். சமீக முனிவரின் குமாரன் சிருங்கிமுனி அங்கே வந்து கோபித்து பரீக்ஷித்துக்கு சாபம் கொடுத்தான். பரீக்ஷித்து ஏழு நாளில் பாம்பு கடித்து இறந்து விடுவான் என்று தெரிந்து வியாஸரின் மகனான சுகரிடம் "ஸ்ரீமத்பாகவதம்" ஏழு நாள் கேட்டான் . பின்பு ஏழாவது நாளில் தக்ஷன் என்னும் பாம்பு கடித்து இறந்தான். பரீக்ஷத்தின் மகன் ஜனமேஜயன். இவன் தன்தந்தை பரீக்ஷித்து பாம்பு கடித்து இறந்ததால் கோபமுற்று உலகத்திலுள்ள பாம்புகளையெல்லாம் அழிக்க "சர்ப்பயாகம்" செய்தான். சர்ப்பராஜன் வாசுகியின் சகோதரி ஜரத்காரு அதே பேருள்ள ஜரத்காரு முனிவரை மணக்க அவர் ஜனமேஜயனிடம் வந்து சமாதானம் செய்து சர்ப்பயாகத்தை நிறுத்தினார். சர்ப்பாயாகம் செய்து பாம்புகளை அழித்ததால் ஜனமேஜயனுக்கு குஷ்ட்டரோகம் பிடித்தது. இதனால் ஜனமேஜயன், கேரள தேசத்திலுள்ள குருவாயூரப்பன் கோவி-ல் விரதமிருந்து குஷ்ட்டரோகம் விலகி தன்னாடு திரும்பினான்.

ஜனமேஜயனுக்குப் பிறகு குரு வம்சத்தில் சதானீகன், அஸ்வமேதன், சோமன் கிருஷ்ணன், நிசக்குனி (இவன் காலத்தில் ஹஸ்தினாபுரம், கங்கை, யமுனை வெள்ளத்தால் அழிந்தது), பூரிசிரேஷ்ட்டன், சித்திர விரதன் (உஷ்ணன்), விசித்ராதன், விருஷ்ணிமான், சுக்ஷேணன், சுனிதன் (சேனன்), ந்ருபசக்ஷு, சுகிபாலன் (நளன்), பாரிப்பிலவன், சுநயனன் (சுதவன்), மேதாவி, ரிபுஞ்ஜயன், அருவன், திக்ஷுமான் (நிமி), பிருஹத்ரதன் (கிரதிதரன்), வசுதாசன், சதானீகன், உதயணன், விஹிநரன், தண்டபாணி (இராமித்ரன்), க்ஷேமகன் முத-யோர் ஆண்டனர். இதற்குப் பிறகு மகத அரசர்கள் ராஜ்யத்தை கைப்பற்றினர்.

## 32. ஆண்டாள்

பாண்டிய தேசத்தில் ஸ்ரீவில்-புத்தூர் என்னும் ஊரில் பெரியாழ்வார் என்னும் வைணவ அந்தணர் வாழ்ந்து வந்தார். இவர் பெருமாள் அர்ச்சனைக்கு நந்தவனம் அமைத்து பூச்செடிகள் வளர்த்து அவ்வூர் பெருமாளுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். இவரது நந்தவனத்தில் (கி.மு. 3003இல் நளவருடம்,ஆடிமீ, சுக்ல சதுர்த்தசி, செவ்வாய்க்கிழமை பூர நக்ஷத்திரத்தில்) ஒரு துளசி செடி அருகில் பெண் குழந்தை கிடைத்தது). பெரியாழ்வார் (3056 கி.மு.) அப்பெண் குழந்தைக்கு கோதை எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்.



பெரியாழ்வார் பெருமாளுக்கு தொடுக்கும் மாலையை தன் கழுத்தி-ட்டு கண்ணாடியில் அழகு பார்த்து இது பெருமாளுக்குப் பொருந்தும் என எண்ணிக் கொடுத்தனுப்புவாள். ஒரு நாள் இதைக் கண்ணுற்ற பெரியாழ்வார் திகைப்படைந்து, பெருமாளுக்கு வேறு மாலை எடுத்துச் செல்ல, பெருமாள், கோதை சூடிய மாலையே தனக்கு உவப்பாகுமென அசரீரியாய் கூற, பெரியாழ்வார் கோதையை பூமிப்-பிராட்டி என எண்ணி, கோதை விருப்பப்படி திருவரங்கம் அழைத்துச் சென்று, மணக்கோலத்துடன் திருவரங்கன் சன்னிதியில் விட அவள் திருவரங்கனுடன் கலந்து மறைந்தாள்.

ஆண்டாள் அருளிய தமிழ் நூல்கள் திருப்பாவை (நாச்சியார் திருமொழி) முத-யன.

பாண்டிய அரசன் பரவீரராஜ பயங்கரன், சோழ மன்னன் ருசிகன் இதைக் கேள்வியுற்று தமிழர்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு செய்து திருமால் ஆலயங்களில் "திருப்பாவை" ஓதப்படவேண்டும் என ஆனையிட்டனர். அதுமுதற்கொண்டு தமிழர்கள் திருப்பாவை, ஆண்டாள் திருக்கல்யாணம் முத-யவற்றை செய்து களிக்கின்றனர்.

## 33. பாண்டிய அரசர்கள்

மஹாபாரதப் போருக்குப் பிறகு கி.மு. 3105இல் கபாடபுரமும் இடைச்சங்கமும் இயற்கைச் சீற்றத்தினால் அழிந்தது. கி.மு. 3105 முதல் கி.மு. 1915 முடிய 1190 ஆண்டுகள் தமிழ் சங்கம் நடைபெறவில்லை. அடுத்தடுத்து நடந்த கடற்கோளினாலும், இயற்கை சீற்றத்தினாலும் பல நாடுகள் கட-ல் மூழ்கின். மக்கள் நாடு விட்டு நாடு பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்தனர். பாரதத்தின் எந்தப் பகுதியிலும் நிலையான அரசு ஏற்படவில்லை. கலவரங்களும், சண்டைகளும் மிகுந்து எராளமான பேர் அழிந்தனர்.

இக்காலத்தில் வாழ்ந்த சேர, சோழ, பாண்டியர்கள் பெயர்கள் வருமாறு:-

வ.எண் 112 ராஜகுஞ்சாரன் II (இவன் ஆயோதனப் பிரவீண பாண்டியனின் குமாரன்). இவன் மனைவி அங்கயற்கண்ணி. இவனது மகன் துவிஜராஜ குலோத்தமன். பூபால பாண்டியன் பாண்டவர்களுடன் சேர்ந்து பாரத யுத்தத்தில் பீஷ்மரால் கொல்லப்பட்ட பிறகு அவன் மகன் ஜயசேனனுடன் சேர்ந்து பாண்டிய நாட்டை ஆட்சிபுரந்தான்.

வ.எண் 113 பரவீரராஜ பயங்கரன் (பிரவீண பாண்டியன் II), உக்கிரசேன் பாண்டியன் இருவரும் பாண்டிய நாட்டை ராஜகுஞ்சாரனுக்குப் பிறகு ஆண்டனர். பரவீரராஜனின் மக்கள் மகாசேனன், சேரகுலசேன்ன இருவரும் சோழ நாடு, சேர நாடு முத-யவற்றைப் பிடித்து தமிழ்நாடு முழுவதும் ஆண்டனர்.

வ.எண் 114 சத்ருஞ்ஜய பாண்டியன். இவன் உக்ரசேன பாண்டியன்
குமாரன். இவன் சேரர்களை அடக்கியாண்டதால் சேரகுலாந்தகன் எனப் போற்றப்பட்டான்

வ.எண் 115 சத்ருஞ்ஜய பாண்டியனின் மகன் வீமத்தேர் பாண்டியன் (பீமரதன்) காலத்தில் சேர நாடு, சோழ நாடு பிரிந்து தனித்தனி அரசுகளானது. இப்பாண்டியன் சிங்கள நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கொண்டான்.

வ.எண் 116 பீமரதனுக்குப் பிறகு வீர உத்தண்டன், வீர பராக்கிரம பாண்டியன் என்னும் மன்னர்கள் ஆண்டனர்.

வ.எண் 117 பிரதாபமார்த்தாண்டன் ஆட்சி செய்த போது விஜயாதித்த சோழனின் மகன் விக்ரமாதித்ய சோழன் பலம் பொருந்தியவனாக இருந்து பாண்டி நாட்டின் பல பகுதிகளை கைப்பற்றி ஆண்டான்.

வ.எண் 118 விக்ரமகஞ்சுகன் (விக்ரம பாண்டியன்). பிரதாப மார்த்தாண்ட பாண்டியனின் மகன். இவன் சோழ அரசர்களுடன் சமாதானம் செய்து கொண்டு தனது மகளான கோமளவல்-யை குலோத்துங்கச் சோழனுக்கு மணமுடித்து வைத்தான்.

வ.எண் 119 சமரகோலாகலன். விக்ரம பாண்டியன் மகனான இப்பாண்டியன், குலோத்துங்க சோழனுடன் சேர்ந்து காஞ்சிக்கு வடக்கே உள்ள ராஜ்யங்களை பிடித்து ஆட்சி செய்தான். சோழ, பாண்டியர்களை நெல்லூர் முத-ய இடங்களில் குடியமர்த்தினான்.

வ.எண் 120 சமரகோலாகலனின் மகன் அதுலவிக்ரமன். இவன் மகன் அதுலகீர்த்தி பாண்டியன். இவன் மகன் வங்கிய குலசேகரபாண்டியன் முத-யோர் காலத்தில் பாண்டி நாட்டில் கொடுங்கோலாட்சி நிலவியது. சோழர்கள், சேரர்கள் படையெடுப்பு நிகழ்ந்தது.

வ.எண் 121 கீர்த்தி பூஷணபாண்டியன் (வம்ச குலசேகரன்) என்பவன் அதுல விக்ரமனுக்குப் பிறகு பட்டமேற்றான்.



இவன் காலத்தில் பல நாட்கள் விடாமல் மழை பெய்து மதுரை அழிந்தது. பிறகு ஆலவாய் என்னுமிடத்தில் மீண்டும் தலைநகரம் நிர்மாணிக்கப்பட்டு வங்கிய குலசேகரனின் மகன் வங்கியசூடாமணி என்னும் பாண்டியன் ஆட்சிக்கு வந்து சிவன் கோயில்களை கட்டினான். திருநெல்வே-யில் சிவன் கோயில் கட்டி நித்யபூஜைக்கு சண்பக மரங்களை கோயில் தோட்டத்தில் நட ஏற்பாடு செய்தான். எனவே இவனை சண்பகமாறன் என்று போற்றினர். நக்கீரர் I என்னும் புலவரும் தருமி என்னும் குருக்களும் இக்காலத்திலே வாழ்ந்தனர்.

வ.எண் 122 பிரதாபசூரியன் (வங்கிய சேகரன்) என்னும் இப்பாண்டியன் விக்ரம் சோழனை போரில் வென்று அவனுடைய மகனுடன் படைகளை குவித்து கங்கை வரை சென்று பல நாடுகளை வென்றான். சோழனிடம் சோழநாட்டை ஆட்சி செய்யும்படி ஒப்புவித்தான்.

வ.எண் 123 வங்கிதுவஜ பாண்டியன் (வம்ச துவஜ பாண்டியன்). பிரதாப சூரிய பாண்டியனின் மகன். இவன் கங்கைகொண்ட சோழனுடன் நட்பு கொண்டு பாண்டி நாட்டில் பல நகரங்களை உருவாக்கி, கோயில்கள், குளங்கள் கட்டி அந்தணர்களுக்கு வேதம் ஒத பல கிராமங்களை தானம் செய்தான்.

வ.எண் 124 ரிபுமர்த்தன பாண்டியன் (வங்கித்துவஜ பாண்டியன் குமாரன்). இவன் மகததேசத்தை ஆண்ட ஜராசந்தன் வழியில் வந்த அசுரன் ரிபு என்பவன் மீது படையெடுத்து வெற்றி கொண்டான். விஸ்வஜித் என்பவனின் மகளை நட்புகொண்டு அவனை மகத தேச ராஜ்யத்தில் அரசனாக்கினான். விஸ்வஜித் மகனும் ரிபுஞ்ஜயன் என்னும் பட்டம் கொண்டான். இந்த ரிபுஞ்ஜயனை அவனது மந்திரியே கொன்றான்.

வ.எண் 125 ரிபுமர்த்தன் பாண்டியனின் மக்கள், பராக்கிர பாண்டியன், சோம சூடாமணி பாண்டியன் என்பவர்கள். பராக்கிரம பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து விக்ரம சோழனை வென்று சோழவம்சாந்தகன் எனும் பெயர் சூட்டிக் கொண்டான்.

வ.எண் 126 குலசூடாமணி பாண்டியன் (சோம சூடாமணி பாண்டியனின் மகன்). இவன் மதுரையி-ருந்து ஆண்ட 52ஆவது பாண்டியன். சேர நாட்டின் மீது

படையெடுத்து சேர நாட்டை முழுதும் வசப்படுத்தி சேர இளவரசியை மணந்து கொண்டு தனது மகனான யதுகுலசேரனை சேர நாட்டிற்கு அரசனாக்கினான். சேர நாடு முழுவதும் விருஷ்ணி குல யாதவர்கள் ஆட்சி முடிந்து மீண்டும் தமிழர் ஆட்சி துவங்கியது.

வ.எண் 127 ராஜ சூடாமணி பாண்டியன். (இவன் சூல சூடாமணியின் மகன்). இவனை பாண்டிய வம்சசேனன் என்றும் முடத்திருமாறன் என்றும் தமிழ்புலவர்கள் அழைக்கலாயினர். மீண்டும் தமிழ் சங்கத்தை ஏற்படுத்த நாடெங்கிலும் இருந்த தமிழ் புலவர்களை அழைத்து பரிசில்கள் கொடுத்து ஆதரித்தான்.

வ.எண் 128 வம்சசிரோன்மணி (வங்கி சிரோன்மணி). இவன் காலத்தில் வேங்கடத்தி-ருந்து ஆண்ட மன்னர்கள் சோழ நாட்டின் மீது படையெடுத்து சோழ அரசர்களை விரட்டி, சோழ நாட்டில் அநேக திருமால் கோயில்களை கட்டி வைணவத்தை போற்றி பரப்பினார். புண்டரீகாக்ஷன் என்னும் மன்னன் சோழ நாட்டை ஆட்சி செய்த போது பாண்டிய நாட்டின் மீதும் படையெடுத்தான். இப்படைகளை வம்ச சிரோன்மணி பாண்டியன் அவன் மகன் பாண்டி ஈஸ்வரன் (ஈஸ்வர பாண்டியன்) என்னும் அரசர்கள் வெற்றி கொண்டு பாண்டி நாட்டை காப்பாற்றினர். யதுகுல சேகரன் மகன் வம்சோத்துங்கா சேரனும் பாண்டிய நாட்டு படைகளோஹடு சேர்ந்து வடுகர் படைகளை வெற்றி கண்டான்.

வ.எண் 129 பாண்டீஸ்வரன் (வம்ச சிரோன்பணி பாண்டியன் மகன்) ஆட்சியின் போது நீலமேகஸ்யாமளன் என்னும் வடபுலத்து அரசன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து பல பகுதிகளை பிடித்துக் கொண்டான்.

வ.எண் 130 குலத்துவஜ பாண்டியன் என்பவன் பாண்டீஸ்வரனின் மகன். இவன் காலத்தில் வடநாட்டி-ருந்துரு (காசி) அந்தணர்களை அழைத்து வந்து பல வேள்விகள் நடத்தப்பட்டன. சேர அரசன் இந்த அந்தணர்களை சேர நாட்டில் குடிஅமர்த்தி வீடு, பூமி தானங்கள் செய்தான்.

வ.எண் 131 வம்ச விபூஷண பாண்டியன் (வங்கீச பூஷணன்). இவன் பாண்டிய நாட்டை பல மண்டலங்களாகப்



பிரித்து நிர்வாகத்தை சீர்படுத்தி, பாண்டி நாட்டை வளமாகினான்.

வ.எண் 132 குலேசன் (குலசூடாமணி). சோமசூடாமணி (சோமகாந்தன்), ராஜ சூடாமணி, பூப சூடாமணி, பவ்யசூடாமணி முத-ய பாண்டியர்கள் பாண்டிய நாட்டை ஆண்டபோது, பவ்ய சூடாமணி ஒரு இடத்தில் பசு தானே பால் சொறிந்து நின்றதைக் கண்டு தன் வாளால் அங்கே குருதி பெருகக் கண்டு அங்கே தோண்டிப் பார்க்க ஒரு சிவ-ங்கம் இருப்பதைக் பார்த்து அங்கே கோயிலமைத்தான் (இவனே முழுதுங்கண்டராமன் எனப் போற்றப்பட்டான்).

வ.எண் 133 பவ்யசூடாமணி பாண்டியனுக்குப் பிறகு வம்ச விவர்த்தன (அரிமர்தனன்) பாண்டியன். அவன் மகன் ஜகந்நாத பாண்டியன் பட்டமேற்றனர். ஜகநாத பாண்டியன் தம்வி சூரியசேகர பாண்டியன், வீரவாகு (முடத்திருமாறன் II) முத-யோர் பாண்டியன். சூரியசேகர பாண்டியன் குமாரி கம-னி என்பவளை கீர்த்தி வர்த்தன சோழன் மணந்து கொண்டான். (ஏறத்தாழ கி.மு. 1915இல் பாண்டியன் வீரவாகு (இரண்டாம் முடத்திருமாறன் காலத்தில் கூடல் எனப்படும் தென்மதுரை (திருப்பரங்குன்றம்)யில் ஒரு தமிழ் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இது கி.மு. 1715 வரை நடைபெற்றது).

வ.எண் 134 முடத்திருமாறன் II (மாலைமாறன்), பாண்டியன் குறுவழுதி (அண்டர்மகன்), பாண்டியன் மாறன் வழுதி, பராக்கிரம பாகு, வீரவாகு, விக்ரமபாகு, முத-ய பாண்டியர்கள் தமிழ் சங்கம் நடத்தினர், பெருந்தேவனார் இயற்றிய பாரதம், பேரகத்தியம், சிற்றகத்தியம், எட்டுத்தொகை முத-யன அரங்கேற்றப்பட்டன. கௌதம முனிவர், அகத்தியர் ஈழத்து பதிமுடி நாக அரையர் முத-ய பல புலவர்கள் இச்சங்கத்தில் இருந்தனர். பராக்கிரம பாகு என்னும் பாண்டியன் ஆட்சி செய்யும்போது ஒரு வேதியன் தான் காசிக்கு போவதாய் அரசனிடம் கூறிச் சென்றான். இரவில் மாறுவேஷத்தில் ஒவ்வொரு நாளும் அந்த வேதியன் வீட்டை அரசன் கண்காணித்து வந்தான். ஒரு நாள் அவவேதியின் வீட்டில் இரவில் ஆண் குரல் கேட்கவே அவ்வீட்டு`க கதவை அரசன் தட்டினான்.

காசியி-ருந்து திரும்பி வந்த வேதியன் "யாரது" என்று கேட்க, அந்தக்குரலை அடையாளம் கண்டு கொண்ட அரசன் எல்லா வீட்டுச் கதவையும் தட்டிவிட்டு சென்று விட்டான். மறுநாள் இதுபற்றி வேதியர்கள் அரசனிடம் புகார் செய்ய, அரசன் அந்த திருடனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று வேதியர்களைக் கேட்க, அவர்கள் தட்டிய கையை வெட்டவேண்டும் என்று சொல்ல, அரசன் வாளை உருவி தன்னுடைய கையை வெட்டிக் கொண்டான். அந்தணர்கள் மனம்வருந்தி தவற்றை மன்னிக்கும்படி கேட்க, அரசன் அவர்களை மன்னித்து, பொன்னால் கைவைத்துப் பொருத்திக் கொண்டான். எனவே இப்பான்டியனுக்கு "பொற்கைப் பாண்டியன்" எனப் பெயராயிற்று. முடத்திருமாறன் II (வீரவாகு அல்லது மூன்றாம் ஜயமாகீர்த்தி) என்னும் பாண்டியன். மகனே பொற்கைப் பாண்டியன் (விக்ரம் பாகு). இவனுக்குப் பிறகு பாண்டி நாட்டை சுரத பாண்டியன், துர்த்தம பாண்டியன் (மாறன் வழுதி) சுந்தரபாண்டியன் முதலானோர் ஆண்டனர். சுந்தரபாண்டியன், சுந்தரசோழன் மகளான உற்பலாவதியை திருமணம் செய்து கொண்டான். இவர்களுக்கு காருண்ய பாண்டியன் என்னும் மூன்றாம் முடத்திருமாறன் பிறந்தான். இவன் காலத்தில் தமிழ் கடைச் சங்கம் நிறுவப்பட்டது.

## 34. சோழ அரசர்கள்

மஹாபாரதக் காலத்திற்குப் பிறகு (கி.மு. 3105) கடைச்சங்கம் துவங்கப்படும் வரை (கி.மு. 1715) வாழந்த சோழ அரசர்கள் பெயர்கள் வருமாறு:-

வ.எண் 112 ருசிகசோழன் (மஹாபாரத யுத்தத்தில் குமராங்குசன் இறந்த பிறகு அவன் மகன் ருசிகன்) பட்டமேற்று ஆட்சி செய்தான். ருசிகசோழன், பாண்டிய ஜயசேனனுடன் நட்பாக இருந்து சோழ நாட்டை வளமாக்கினான்.

வ.எண் 113 ருசிகசோழன் மகன் நாராயண சோழன் திருமால் மீது பக்தி கொண்டவனாக இருந்து வைணவ



குருமார்களை ஆதரித்தான். திருவரங்கம் கோயிலுக்கு இறைபணிகள்செய்தான்.

வ.எண் 114 யாவதீய சோழன் (நாராயண சோழன் மகன்). இவன் காலத்தில் காவிரியில் பெருவெள்ளம் ஏற்பட்டு குடிமக்கள் அவதியுற்றனர். யாதவ வம்சத்து சேர அரசர்கள் சோழ நாட்டைத் தாக்கினர். பாண்டியன் சத்ருஞ்ஜயன் உதவிகளைப் பெற்று சேரர்களை அடக்கினான் யாவதீய சோழன்.

வ.எண் 115 ராஜராஜசோழன். இவன் பாண்டிய இளவரசிகளை மணந்து வீமத்தேர் பாண்டியனுடன் கருநாடகம், ஆந்திரம் முத-ய தேசங்களை கையகப்படுத்தி ராஜராஜசோழன் என்னும் பட்டத்துடன் சோழ அரசை விரிவுபடுத்தினான்.

வ.எண் 116 விஜயாதித்த சோழன் (ராஜ ராஜ சோழன் மகன்). இவனது கப்பல்கள் கீழை நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து சோழ நாட்டை வளமாக்கியது.

வ.எண் 117 விக்ரமாதித்த சோழன் (விஜயாதித்த சோழன் மகன்) இவன் விந்திய மலை வரை சோழ சாம்ராஜ்யத்தை விஸ்தரித்து ஆண்டான், பின்பு அசுரர்கள் சோழ நாட்டின் மீது படையெடுத்து ஆக்ரமித்துக் கொண்டனர்.

வ.எண் 118 குலோத்துங்கன். இவன் கரவட கிராமத்தில் ஒளிந்து கொண்டு இருந்தான். இவனுடைய தேவி கோமளை. இவனிடம் சிவமூர்த்தி கிழவன் ரூபத்தில் வந்து யாசகம் கேட்டார். கோமளையும், குலோத்துங்கனும் தங்களுக்கு வைத்திருந்த அன்னத்தை விருந்தாளிக்கு அளித்து உபசரித்தனர். இவன் பூர்வத்தில் குபேரனாக இருந்தவன். கிழவனான சிவபெருமானும், மோகினி ரூபத்தில் வந்த திருமாலும் தஞ்சாசுரனை வென்று, தஞ்சாவூர் என்னுமிடத்தில் குலோத்துங்கனுக்கு பட்டம் சூட்டினார். சூலோத்துங்கன் தஞ்சையில் காட்டைத் திருத்தி நாடாக்கி பெரிய நகரம் உருவாக்கி பல காலம் ஆண்டு அசுரர்களை வெற்றி கொண்டு சோழர் ஆட்சியை நிலைநாடடினான்.

வ.எண் 119 தேவ சோழன் (குலோத்துங்க சோழன் மகன்) அல்லது தந்துவர்த்தனன். இவன் புத்திரப் பேரில்லாது பவானி கூடலை அடைந்து சங்கு கன்னரால் தீர்த்த ஸ்நானம், பரிகாரம் செய்து அவரிடமிருந்து இலந்தைக் கனி

பெற்று உண்டான். தந்துவர்த்தன சோழனுக்கு பின்னர் குலவர்த்தனன் என்னும் மகன் பிறந்தான்.

வ.எண் 120 குலவர்த்தன சோழன். இவன் கும்பகோணம் முதல் உறையூர் வரையிலுள்ள நாட்டை ஆண்ட வங்கிய குலசேகரபாண்டியன் படையெடுத்து விக்ரம சோழனை விரட்டி, சோழநாட்டை தனது ஆட்சிக்கு கொண்டு வந்தான்.

வ.எண் 121 விக்ரம சோழன். (இவன் குலவர்த்தன சோழன் மகன்). இவன் ராஜ்யத்தின் மீது வங்கிய குலசேகர பாண்டியன் படையெடுத்து விக்ரம் சோழனை விரட்டி, சோழநாட்டை தனது ஆட்சிக்கு கொண்டு வந்தான்.

வ.எண் 122 கங்கை கொண்ட சோழன். இவன் பிரதாப சூரியன் என்னும் பாண்டியனுடன் நட்பு கொண்டு, கங்கை வரை உள்ள நாடுகளை வெற்றி கொண்டு, கங்கை கொண்டான் என்னும் பட்டம் சூட்டிக் கொண்டான்.

வ.எண் 123 சாரங்கதர சோழன். (இவன் கங்கைகொண்ட சோழன் மகன்). ஆந்திர நாட்டு வைணவ மத இளவரசிக்கும், கங்கைகொண்ட சோழனுக்கும் பிறந்தவன். இவன் காலத்தில் சோழ நாட்டில் திருமால் ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டு வைணவம் வளர்ந்தது.

வ.எண் 124 விக்ரம சோழன் (சாரங்கதர சோழன் மகன்). இவன் காஞ்சிக்கு வடக்கே உள்ள காடுகளை திருத்தி நாக கன்னிகையை மணந்து ஆதொண்டை சக்ரவர்த்தி என்னும் பெயர்பூண்டு சோழ ராஜ்யத்தை விஸ்தரித்தான்.

வ.எண் 125 சுதர்ம சோழன் (விக்ரம சோழன் மகன்). இவன் வடதேச யாத்திரை செய்து ஆட்சி செய்தான். இவன் காலத்தில் தஞ்சை, உறையூரி-ருந்து தலைநகரம் மாற்றப்பட்டு, காஞ்சி தலைநகராயிற்று. பாலாறு வழியாக கப்பல்கள் புறப்பட்டு கடலை அடைந்து வாணிபம் செய்ய பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டான்.

வ.எண் 126 தொண்டைமான் (சுதர்ம சோழன் மகன்) காஞ்சியை ஆண்டமன்னன்.

வ.எண் 127 வசுதானன் (தொண்டைமான் மகன்). இவன் காஞ்சியில் வரதராஜப் பெருமாளுக்கு ஆலயம் புதுப்பித்து, காஞ்சி மண்டலத்தில் பல திருமால் ஆலயங்களைக் கட்டி வைணவத்தை பரப்பினான்.

வ.எண் 128 புண்டரீகாக்ஷன் (இவன் வசுதானன் மகன்). வேங்கடம்



முதல் பாண்டி நாடு வரை வெற்றி கொண்டு திருவேங்கடமுடையான் ஆலயத்தை புதுப்பித்து பல வைணவ ஆலயத் திருப்பணிகள் செய்தான்.

வ.எண் 129 நீலமேகஸ்யாமளன் (இவன் புண்டரீகாக்ஷன் மகன்). தானவரீசன், பூபாரம் தீர்த்த சோழன், பராக்கிரம சோழன், விக்ரம சோழன், மநுநிலையட்ட சோழன், சந்திரகுலாதிக்க சோழன் முத-ய சோழர்கள் பல இடங்களி-ருந்து சோழ சாம்ராஜ்யத்தை ஆண்டனர்.

வ.எண்130-132 மநுநிலை கண்ட சோழன் மக்கள் வீரமார்த்தண்டன் சூரமார்த்தாண்டன், சூடாமணி சோழன், வீர ஆதித்த சோழன் முத-யோர், வீரமார்த்தாண்ட சோழனின் மனைவி சேர இளவரசி மாணிக்கவல்-. இவன் தேவசன்மன் என்னும் ஆச்சார்யனிடம் கொங்கணேசுரர் சரி˙தம் கேட்டு சிவபெருமான் அருளால் கீர்த்திவார்த்தன சோழன் என்னும் மகனைப் பெற்றான்.

வ.எண் 133 கீத்திவர்த்தன் சோழன், சூரியசேகர பாண்டியனின் பெண்ணான கம-னையை மணந்து ஜயசோழனைப் பெற்றான். இவன் குமரவேளிடம் (முருகன்) மிகுந்த பக்தி கொண்டவன். சோழநாட்டில் முருகனுக்கு பல ஆலயங்˙கள் எழுப்பி, காவிரி-யிருந்து “கீர்த்திமான்” என்ற உபநதி ஏற்படுத்தி சோழநாட்டை வளமாக்கினான். இவன் பல நாடுகளை வென்று குலோத்துங்கன், பராந்தகன் என்னும் பட்டங்களை சூட்டிக் கொண்டான். நாக இளவரசி காந்திமதியை காத-த்து மணந்து கொண்டான். எனவே நாகலோகம் கண்ட சோழன் எனப்பட்டான்.

வ.எண் 134 ஜயசோழன் (இவன் கீர்த்திவர்த்தன சோழன் மகன்). நாட்டியக் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டு சிவபெருமான் முன் நாட்டியங்கள் ஆடிவந்ததினால் ஆடகேஸ்வரன் எனப்பட்டான். வீரப்பிரதாப சேரன் மகள் காஞ்சனைமாலை இவனைக் காத-த்து. மணந்து கொண்டாள் இவர்கள் சிறந்த காதலர்கள். இவர்களுக்கு கனக பீதாம்பர சோழன் அல்லது கனக சோழன் என்னும் மகன் பிறந்தான். இவனை கனக சூடாமணி சோழன் என்றும் மக்கள் அழைத்தனர். இவள் சேர இளவரசி செண்பகாங்கி என்பவளை மணந்து சுந்தரசோழனை பெற்றான்.

கனகசோழன் காலத்தில் காவிரி தஞ்சைக்கு அருகே உள்ள திருவலஞ்சுழியிலுள்ள விநாயகரை வலம் வந்து, பூமியில் பிளவு ஏற்பட்டு அதனுள் ஒடி மறைந்தது. அரசனுக்கு விநாயகர் கனவில் தோன்றி "ஏரண்ட மகரிஷி" யின் அருளால் காவிரி திரும்பவும் ஓடும் என்று கூறியருளினார். பின்பு திருக்கோடீஸ்வரத்தில் தவம் செய்து கொண்டிருந்த ஏரண்ட முனிவரை அரசனும் அரசியும் வணங்கி பிரார்த்தித்துக் கொள்ள, ததீசி முனிவரைப் போன்று தனது உடல் நல்ல காரியங்களுக்குப் பயன்பெறட்டும் எனக்கூறி காவிரியில் விழுந்து அந்த பிலத்தில் நுழைந்து மறைந்தார். பின்பு கனகசோழன் ஏரண்டரிஷி தவம் செய்த இடத்தில் ஒரு -ங்கம் பிரதிஷ்டை செய்து ஆலயம் கட்டினான். 70 வருடம் ஆட்சி செய்து கனகசோழன் தன் மகன் சுந்தரசோழனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து முக்தி அடைந்தான்.

வ.எண் 134 (கி.மு. 1715) சுந்தரசோழன் (இவன் கனகசோழன் மகன்). இவன் பாண்டிய அரசன் சமரசார்த்தூலன் மகள் சித்ரவல்-யை மணந்து பாண்டிய அரசனுடன் நட்பு கொண்டான். தன் மகள் உற்பலாவதியை சுந்தர பாண்டியனுக்கு மணமுடித்து தனது பேரனான உத்தரக்கான சோழனை சோழ அரசனாக முடிசூட்டினான். இவனுக்குப் பிறகு கல்யாண சோழன் என்னும் ஜகத்ரக்ஷக சோழன் என்னும் சோழன் ஆட்சி செய்தான். இவன் மூன்றாம் முடத்திருமாறனுடன் நட்பு கொண்டு தமிழ் புலவர்களை ஆதரித்து கடைச்சங்கம் நிறுவ உதவினான்.

## 35. சேர அரசர்கள்

மஹாபாரதக் காலத்திற்குப் பிறகு (கி.மு. 3105) கடைசி சங்கம் தொடங்கப்படும் வரை (கி.மு. 1715) வாழ்ந்த சேர அரசர்களின் பெயர்கள் வருமாற :

**வ.எண் 112 முதல் 126 முடிய உள்ள காலம் :**

(கி.மு. 3105 முதல் கி.மு. 2300 முடிய உள்ள காலத்தில் சேர நாட்டை பெருஞ்சோற்று உதியனுக்குப் பிறகு விருஷ்ணி குல யாதவர்களும், அரக்கர்களும் ஆண்டதால் சேர மன்னர்களின் பெயர்கள் கிடைக்கவில்லை. ஆனால் சேர குடும்பத்தைச் சேர்ந்த பலர் கிரீக், எகிப்து தேசங்களில் குடியேறினர் எனத் தோன்றுகிறது. மலையமான் திருமுடிக்காரி என்பவன் வழியில் வந்த "காரி" என்னும் பட்டம் கொண்ட அரசர்கள் எகிப்தில் (யவன தேசம்) ஆண்டனர் என்பது



கீழ்கண்ட எகிப்திய தேச அரசர்களின் பெயர்களி-ருந்து அறியலாகும்.

எகிப்து 8ஆவது தலைமுறை :- நித்திய கீர்த்தி, நீபகாரி, நீப-தோரன், (துஷ்ட்ட) மோசி.

எகிப்து 9ஆவது தலைமுறை :- அச்சுதன் காரி, நீபகாரி, நாபகாரி, அச்சுதன் காரி முத-யோர்.

(எகிப்திய புராணங்களில் ராமசேஸ், ஹரிஹரன் முத-ய பெயர்களும் காணப்படுவதாலும், கிளியோ-பாட்ரா (கிள்ளிபுத்ரி) முத-ய பெயர்களும் தமிழ்நாட்டு சேர அரசர்களின் சந்ததிகள் யவன, மிசிர தேசங்களில் குடியேறி ஆட்சி செய்தனர் என்று கருதலாகும்.)

வ.எண் 127 யதுகுலசேரன் (இவன் குல சூடாணி பாண்டியனின் மகன்). இவன் பாண்டிய அரசன் துணைகொண்டு யாதவ அரசர்களையும், அசுரர்களையும் அடக்கி சேர நாட்டை மீண்டும் தமிழர் ஆட்சிக்கு உட்படுத்தினான்.

வ.எண் 128 வம்சோத்துங்க சேரன் (இவன் யதுகுல சேரனின் மகன்). இவன் பாண்டீஸ்வரன் என்னும் பாண்டிய அரசன் உதவியோடு, சோழ நாட்டை ஆண்ட வடுகர் படைகளை வெற்றி கொண்டான்.

வ.எண் 129 மநுமுறை நடத்திய சேரன் (இவன் வம்சோத்துங்க சேரனின் மகன்). இவன் வடபுலம் சென்று காசி முத-ய இடங்களில் தமிழ் அந்தணர்களை அழைத்து வந்து தனது நாட்டில் குடியேறச் செய்து, பல வேள்விகள் செய்து, ஆலயங்கள் கட்டி மநு நீதி தவறாமல் ஆட்சி செய்தான்.

வ.எண் 130 வேதப் பிரதாப சேரன் இவன் மநுமுறை நடத்திய சேரனின் மகன். சோழ நாட்டி-ருந்து அந்தணர்களை வரவழைத்து வேத பாடசாலைகள் ஆரம்பித்து வேதம் ஓதவும் வேள்விகள் புரியவும் எற்பாடு செய்தான். இவன் மக்கள் விக்ரம் மஹேஸ்வரன் (விக்ரம் கேசரி) மற்றும் வீரப்பிரதாப சேகரன் முத-யோர். சோழ மன்னன் ஜெயசோழனுடன் நட்பு கொண்டு தன் மகளான காஞ்சனமாலையை அவனுக்கு மணமுடித்து வைத்தான்.

வ.எண் 132 ரிபுகுலக்ஷய சேரன் (இவன் வீரப்பிரதாப சேகரின் மகன்). தன்னுடைய மகளான செண்பகாங்கி என்பவளை சோழ மன்னன் கனககோழனுக்கு மணமுடித்து, மகத தேச ரிபு என்னும் அசுரகுலம் வழிவந்த அரசர்களின் படையெடுப்பை முறியடித்தான். இவன் ஆட்சி கருநாடக தேசத்திலும் பரவிற்று.

வ.எண் 133 சமரசார்த்தூல சேரன் (இவன் ரிபு குலக்ஷய சேரனின் மகன்). இவனுடைய மகள் சித்திரவல்-. இவளை சுந்தரசோழனுக்கு மணமுடித்துக் கொடுத்து சேர, சோழர் உறவை பலப்படுத்தினான். மேலும் இன்னொரு மகளை வீரவாகு பாண்டியனுக்கு மணமுடித்து பாண்டியர்களுடனும் நட்பு கொண்டான்.

வ.எண் 134 புனல் நாடு கண்ட சேரன் (மாக்கோதை) இவன் சமரசார்த்தூரவன் மகன்). கருநாடக தேசத்தின் பல பகுதிகளைப் பிடித்து 'மாக்கோதை' என தன் பெயரில் ஒரு தலைநகரம் உருவாக்கி அதி-ருந்து ஆட்சி புரிந்தான். இவன் கோட்டம்பலம் என்னும் பட்டிணத்தில் மடிந்தால் கோடடம்பலம் துஞ்சிய மாக்கோதை எனப்பட்டான்.

வ.எண் 134 கி.மு. 1715 பு-க்கொடி பறித்த சேரன் (குட்டுவன் கோதை). இவன் மாக்கோதையின் மகன். பாண்டியன் முடத்திருமாறனுடன் நட்புகொண்டு, ஜகத்ரக்ஷய சோழனின் படையெடுப்பை முறியடித்து அவன் பு-க்கொடியைப் பறித்து அவனைக் கொன்றான். இவன் காலத்தில் கடைச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. குட்டுவன் கோதையை பாராட்டி பாண்டியன் முடத்திருமாறன் கடைச்சங்கத்தில் அவன் மீது ஒரு பாடல் பாடினான்.

## 36. கடைச்சங்கம்

உலகில் தமிழ் மொழியை பரப்ப தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் முத-ய மன்றங்கள் பாண்டிய அரசர்களால் நிறுவப்பட்டன. தலைச்சங்கம் மற்றும் இடைச்சங்கம் பற்றியும் முந்தைய அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. இனி இவ்வத்தியாயத்தில் கடைச்சங்கம் பற்றி கூறப்படுகிறது.

கடைச்சங்கம் கி.மு. 1715 முதல் கி.பி. 235 முடிய 1950 ஆண்டுகள் நடைபெற்றது. இச்சங்கத்தை நிறுவிய முதல் அரசன் மூன்றாம் முடத்திருமாறன். கடைசியாக வாழ்ந்த அரசன் உக்கிரப் பெருவழுதி II. மூன்றாம் முடத்திருமாறன் முதல் இரண்டாம் உக்கிரப் பெருவழுதி முடிய 49 பாண்டிய அரசர்கள் கடைச்சங்க காலத்தில் பாண்டி நாட்டை ஆண்டதாக குறிப்பிடப்படுகிறது. இரண்டாம் உக்கிரப் பெருவழுதி காலத்தில் கடைச்சங்க தலைவராத இருந்தவர் நக்கீரர். இவருக்கு முன்பாக கடைச்சங்க தலைவராக இருந்தவர் மாங்குடி மருதனார் என்பவர்.



கடைச்சங்கத்தின் கடைசித் தலைவராக இருந்த நக்கீரர் (இறையானார் அகப்பொருள் உரை) கடைச்சங்கத்தில் மொத்தம் 449 புலவர்கள் பங்கேற்றனர் எனக் கூறியுள்ளார். நக்கீரர் என்னும் தமிழ் அறிஞர், இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன், தலையானங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் II, உக்கிரப் பெருவழுதி என்னும் மூன்று பாண்டிய அரசர்களையும் பாடியுள்ளார்.

நக்கீரர் காலத்தில் வாழ்ந்த சோழ அரசர்கள் கிள்ளிவளவன், நலங்கிள்ளி, காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, இவன் மகன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவர் ஆவர்.

நக்கீரர் காலத்தில் வாழ்ந்த சேர அரசர்கள் செங்குட்டுவன், அவன் மகன் குட்டுவன் சேரல் என்னும் மாரி வெண்கோ, யானைக்-கட்சேய் மாந்தரன் சேரல் இரும்கொறை என்பவர் ஆவர்.

களவியல் உரையால் உக்கிரப் பெருவழுதி II-இன் காலத்திற்குப் பின் கடைச்சங்கம் அழிவுற்றது எனத் தெரிகிறது. ஆராய்ச்சியாளர் கூற்றும்படி கி.பி. 235-இல் இது நடைப்பெற்றது எனக் கூறப்படுகிறது. எனவே 1950 வருடங்கள் கடைச்சங்கம் நடைபெற்றது என்று கொண்டால் 1950 - 235 = 1715 கி.மு.வில் மூன்றாம் முடத்திருமாறன் காலத்தில் கடைச்சங்கம் துவக்கப்பட்டது என்று கொள்ளலாகும்.

தலைச்சங்கம் தென்மதுரையில் நடந்தது. கடைச்சங்கம் வடமதுரையில் நடந்தது. கம்சன் ஆண்ட வடமதுரை என கொள்ளலாகாது).

கடைச்சங்கத்தில் கவி அரங்சேறிய அரசர் (1) பாண்டியன் மதிவாணன் (2) பாண்டியன் அறிவுடைய நம்பி (3) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்னும் மூவர்.

இச்சங்கத்தில் “தொல்காப்பியம்” (தமிழ் இலக்கணம்) மற்றும் “களவியல்” மீண்டும் புதிப்பிக்கப்பட்டது. முத்தொள்ளாயிரம், சிற்றிசை, பேரிசை, வரி, கூத்து, திருமுருகாற்றுப்படை (நக்கீரர்), பொருநர் ஆற்றுப்படை (முடத்தாமக் கண்ணியார்), சிறுபாணாற்றுப்படை (இடைகழி நாட்டு நல்தத்தனார்), பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை (கடியலூர் உருத்திரங்கண்ணனார்), முல்லைப்பாட்டு (காவிரிப் பூம்பட்டினத்து பொன் வணிகன் மகனார் நப்பூதனார்), மதுரைக் காஞ்சி (மாங்குடிமருதனார்), நெடுநல்வாடை (நக்கீரர் I), குறிஞ்சிப்பாட்டு (கவிலர் II),மலைபடுகடாம் (இராணிய முட்டத்துப் பெருங்குன்றூர் கௌசிகனார்) முத-ய நூல்கள் அரங்கேற்றப்பட்டன. மேலும் நற்றிணை, க-த்தொகை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், அகநானூறு, புறநானூறு, எட்டுத்தொகை, கைந்நிலை முத-ய நூல்கள் தொகுக்கப்பட்டன.

கடைச்சங்க காலத்துப் புலவர்களால் போற்றிப் புகழப்பட்ட அரசர்கள் சோழன் கரிகாலன், ஒய்மா நாட்டு நல்-யக் கோடன், தொண்டைமான் இளந்திரையன், பாண்டியன் நெடுஞ்செழியன், ஆரிய அரசன் பிரகதத்தன், நன்னன்சேய் ஆதன், பல்யானை செல்கெழு குட்டுவன், களங்கண்ணி நார் முடிச்சேரல், செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டு சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்கொறை, யானைகட் சேய் மாந்தரன் சேரல் இரும்பொறை முத-யோர்.

கடைச்சங்கத்தில் சேராத புலவர்கள் இளங்கோ அடிகள்,திருத்தக்க தேவர், தோலாமொழித் தேவர், கொங்குவேளிர், திருவள்ளுவர், மாந்தரன் சேரல், திருமூலர் முத-யோர், கடைச்சங்கம் பற்றி கீழ்க்கண்ட அகவ-ல் விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

“அருங்கடைச் சங்கம் இருந்தோர் யாரெனில்
சிறுமேதாவியார், சேந்தம் பூரனார்,
அறிவுடை அரனார், பெருங்குன்றூர் கிழார்,
பாடல் சான்ற இளம் திருமாறன்,
கூடல் ஆசிரியனார் நல் அந்துவனார்,
பாவு தமிழ் மதுரை மருதன் இளநாகனார்
அவிர் கணக்காயர், நவில் நக்கீரர்,
கீரன் கொற்றன், கிளர் தேனூர் கிழார்,
அரும்கலை மணலூர் ஆசிரியர்,
நல்லூர் புளியங்காய் பெரும் சேந்தனார்,
செல்லூர் ஆசிரியர், முண்டம் பெறாங் குமரர்
முசிறி ஆசிரியர் நீலகண்டனார்,
அசைவிரி குன்றத்து ஆசிரியர், அன்றி
நாத்தலம் கணிக்கும் சீத்தலை சாத்தனார்,
முப்பால் உணரும் உப்பூரிகுடி கிழார்,
உருத்திர சன்மா, மருத்துவராகிய
நாம நாற்கரை தாமோதரனார்,
மாதவளநாரோடு, ஓதும் இளநாகனார்,
கடியும் காமப்படியங் கொற்றனார்,
அருஞ்செயலூர் வாழ் பெருஞ்சுவனாருடன்,
பு-புகழ் புலமைக் கபிலர், பரணர்,
இன்னாத் தடித்த இளநாகர், அன்றியும்
ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்துக்கு
உரையிடை இட்ட விரகர் கல்லாடர்,
போர் மூலம் உணரும் மாமூலர், தம்மோடு



விச்சை கற்றிடும் நச்செள்ளையார் முதல்
தேன் ஊற்றெடுப்ப செந்தமிழ் பகர்ந்தோர்
நானூற்றுவர் முதல் நாற்பத்தொதின்மர்,
பீடுபெற உலகில் பாடிய செய்யுள்
முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை,
அகநானூறு, புறநானூறு,
குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, வரியோடு,
அறம்புகல் பதிற்றுப்பத்து, ஐம்பொதொடிருபான்
பெரும் பரிபாடல், குறுங்க- நூற்றைம்
பது முதல் ஆகிய நவையறுங்கலைகள்,
அக்காலத்தவர் அகத்தியம், அதனோடு
மிக்காம் இலக்கணம் விளங்கு தொல்காப்பியம்,
எண்ணூர் கேள்வியர் இருந்தது “ஆயிரத்து
தொள்ளாயிரத்து ஐம்பது வருடம்” -என்ப;
இடர்படாது இவர்களை சங்கம் இரீஇயனார்
“முடத்திருமாறன்” முதலா “உக்கிரப்
பெருவழுதி”, ஈறாக பிறங்கு பாண்டியர்கள்
நரபதிகளாகும் “நாற்பத்தொன்பதின்மர்”;
இவருள் கவியரங் கேறியர் மூவர்,
புவியுற் சங்கம் புகழ் “வடமதுரை”
ஆதி முச்சங்கத்து அருந்தமிழ் கவிஞர்,
ஓதிய செய்யுள் உலவாப் பெரும் பொருள்
வானாக் கேட்கும் தோளா செவிக்கும்
கேட்டும் தெரியா ஒட்டை நெஞ்சினுக்கும்
நுழையா; ஆத-ன் நுழைபுலன் தன்னோடும்
விழைவார்க் குரைக்க வேண்டுவர் தெரிந்தே”

மேற்கூறப்பட்ட அகல்படி 49 பாண்டிய மன்னர்களின் பெயர்கள் திருவிளையாடற் புராணம், ஹாலாஸ்ய மகாத்மியம் (வடமொழி) முத-ய பல நூல்களில் பாண்டிய அரசர்களின் பெயர்களை வடமொழியில் மொழிபெயர்த்தோ அல்லது வேறு குறிப்புகளை வைத்தோ கூறப்பட்டுள்ளன. இப்பெயர்கள் தூய தமிழில் இல்லாததால் இவ்வரலாற்றுக் குறிப்புகளை நாம் ஒதுக்கிட முடியாது. அவ்வாறு குறிப்பிடப்பட்ட பாண்டிய அரசர்களின் பெயர்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. (அந்தப் பாண்டிய அரசர்கள் எந்த நூற்றாண்டில் வாழ்ந்திருக்க கூடும் என்பதையும் யூக அடிப்படையில் கீழே கூறப்படுகிறது).

1. (வ.எண் 135 - 1715 கி.மு.) : சுந்தரபாண்டியன் (தூர்த்தமபாண்டியன் அல்லது மாறன் வழுதி) என்பவனுக்கும் சோழ இளவரசி உற்பலாதேவி என்பவளுக்கும் பிறந்த காருண்ய பாண்டியன் (மூன்றாம் முடத்திருமாறன்). கவாடபுரத்து இடைச்சங்கம் அழிந்து 1950 வருடங்கள் கழித்து வடமதுரையில் கடைச்சங்கத்தை நிறவினான். குரு வமிசத்து அரசன் உதயணன், பெரும்பகுதிகள் இந்துமாக் கட-ல் மூழ்கிடவே பாண்டியர்கள் நாட்டினர் இத்தா- நாட்டு ஏதென்ஸ் பகுதிகளிலும், கிரீக் (குருகு) தேசத்திலும் குடியேறி அரசு அமைத்தனர். மத்திய ஆசியப் பகுதிகளிலும் கடற்கோள்

ஏற்பட்டது. ஊர் என்னும் நாட்டில் வாழ்ந்த யூதர்கள் எகிப்து தேசம் சென்றனர். (அபிராமன்-ஆபிரகாம் எகிப்து சென்றது கி.மு. 1728).

2. வ.எண் 136-1600 கி.மு.) : சர்வ சாதக பாண்டியன்
3. சர்வ சாதக பாண்டியன் மகன் வேல்மாறன்.
4. (வ.எண் 137-1500 கி.மு.) : சார்த்தம பாண்டியன், சீர்மாறன்
5. (வ.எண் 138-1400 கி.மு.) : நாகரீக பாண்டியன், நெடுமாறன்
6. (வ.எண் 139-1300 கி.மு) : செங்கோல் நிலையிட்ட பாண்டியன்
7. (வ.எண் 140-1200 கி.மு.) : வித்யா விநோத பாண்டியன் (கொடுங்'கோலன்) பாண்டியன் பெருவழுதி. (செங்கோல் நிலையிட்ட பாண்டியன் காலத்தில் எகிப்தில் ராம்ஸேஸ் II என்ற அரசன் ஆண்டு வந்தான். இவனது உறவினன் மோஸஸ். எகிப்து தேசத்திலும் கடற்கோள் ஏற்பட்டது. மோசஸ்ஸுடன் யூதர் எகிப்து தேசத்தி-ருந்து தப்பி இஸ்ரேயில் நாடு சென்று ஆட்சி அமைத்தனர். கி.மு. 1284).
8. (வ.எண்) 141-1100 கி.மு.) : உக்கிர குமாரன் (உக்கிர பெருவழுதி).
9. (வ.எண் 142-1000 கி.மு.) : கீர்த்தி பூஷண பாண்டியன். (இவன் காலதத்தில் பாண்டியர் தூதுக்குழு இஸ்ரயில் நாட்டுக்குச் சென்று தாவீத் மற்றும் சாலமன் அரசன் வேண்டுகோளின்படி தேக்கு மரங்கள் முத-ய கொடுத்து ஆலயங்கள் கட்ட உதவி செய்தான்).
10. (வ.எண் 143-900 கி.மு.) : இறையனார் பேராலவாயர் (பாண்டியன் ஆலவாய் கோன்).



11. (வ.எண் 144-800 கி.மு.) : நல்வழுதி, (இவனுடைய தம்பி இளம்பெருவழுதி கடல் வழியாக எகிப்து தேசம் சென்று திரும்பும் போது, கப்பல் கவிழ்ந்து கடலுள் மாய்ந்தான்). இளம் திருமாறன் என்னும் பாண்டியன் சோழ இளவரசி குணவல்- என்பவளை மணந்து பாண்டி நாட்டை வளமாக்கினான்).
12. (வ.எண் 145-750 கி.மு.) : சத்ரு சம்ஹார பாண்டியன். (பெருவழுதி - பன்னாடு தந்த மாறன் வழுதி). இவன் வடபுலம் சென்று பல நாடுகளை ஜெயித்து பாண்டி நாட்டை விஸ்தரித்தான்.
13. (வ.எண் 146-650 கி.மு) : பெருங்'கடுங்கோன், இளங்கடுங்கோன், அதன் பிறகு சோம சுந்தரபாண்டியன் (நல்-இறையனார்).
14. (வ.எண் 147-650 கி.மு.) :பாண்டியன் கீரன் சாத்தன் (குதிரை சாக்கையன்). இவன் அரபு நாட்டு குதிரைகளின் மீது ஆசை கொண்டு அவைகளை வாங்கி படைகளை வலுப்படுத்தினான்.
15. (வ.எண் 148-600 கி.மு.) : கோட்டம்பலத்து துஞ்சிய பாண்டியன்.
16. சங்கவருணன்.
17. நாகரீக பாண்டியன் II, 18, பெருங்கடுங்கோ. (இவனது மகள் கல்யாணியை கல்யாண சோழன் என்னும் அரசன் மணந்து கொண்டான்).
18. கற்பூர சுந்தர பாண்டியன்.
19. (வ.எண் 149-500 கி.மு.) : பெரும்பூத பாண்டியன் (கோடை பாடியவன்).
20. கீர்த்தி பூஷண பாண்டியன் II : (இவனது காலத்தில் மகத தேசத்தில் அஜாதசத்ரு என்பவன் ஆண்டான் கௌதம புத்தர் உபதேசம் கேட்டு மக்கள் பௌத்த மதம் தழுவினர்).
22. குமாரசேகர பாண்டியன். (இவன் பௌத்த மதத் துறவிகளை ஆதரித்தான். சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் புத்த மதம் பரவிற்று.
23. (வ.எண் 150-450 கி.மு.) : பாண்டியன் மதிவாணன் (குமார சந்தரபாண்டியன்).
24. (வ.எண் 151-400 கி.மு.) : ஷண்முகராஜ பாண்டியன் (பாண்டியன் அறிவுடை நம்பி). இவன் காலத்தில் சிங்களத்தீவில் பௌத்த மதம் பரவிற்று. பாண்டு அபயன் சிங்களத் தீவில் பௌத்த மதத்தை பரப்பினான்.

25. (வ.எண் 152-350 கி.மு.) : சுவர்ணபாண்டியன்.
26. பூதபாண்டியன் (ஒல்லையூர் தந்தவன்).
27. மேரு சுந்தரபாண்டியன் (பெருங்கோப்பெண்டு என்பவளுக்கும் பூத பாண்டியனுக்கு பிறந்தவன்).
28. இந்திரவர்ம பாண்டியன்.
29. (வ.எண் 153-250 கி.மு.) : சந்திரகுலதீபன் I. (இவன் காலத்தில் மகதத்தில் சந்திரகுப்ர மௌரியன் ஆட்சியைப் பிடித்தான்).
30. சர்வமித்ரபாண்டியன் (நம்பி சடையன் வழுதி)
31. மீன கேதன பாண்டியன்.
32. (வ.எண் 154-200 கி.மு.) பற்றார் சிம்ம பாண்டியன் (மாறன் குறுவழுதி).
33. மார்த்தாண்ட பாண்டியன்.
34. குணாலய பாண்டியன்.
35. குவலயானந்த பாண்டியன். (க-ங்கத்து காரவேலன் மீது படையெடுத்தான்).
36. (வ.எண் 155-150 கி.மு.) : குந்தள பாண்டியன்.
37. மீனத்துவஜ பாண்டியன்.
38. மலையத்துவஜ பாண்டியன் (நம்பி நெடுஞ்செழியன்), செழியன் சேந்தன் (ஜயந்தன்).
39. மகரத்துவஜ பாண்டியன்.
40. (வ.எண் 156-100 கி.மு.) : சத்ருபீகர பாண்டியன். (வெள்ளியம்பலத்துஞ்சிய மாறன் பெருவழுதி).
41. (வ.எண் 156-50 கி.ம.) : சத்ருசம்ஹாரா பாண்டியன். (வீரவர்மன் அல்லது வீரபாகு), பாண்டிய நல்வழுதி, நெடுங்செழியன் + கோப்பெருந்தேவி (பூங்கோதை). கண்ணகி தன் கால் சிலம்பை உடைத்துக்காட்டி தனது கணவன் கோவலன் கள்வன் அல்லன் என நெடுஞ்செழியனுக்கு நிரூபித்துக் காட்டி மதுரையை எறடியூட்டினாள். நெடுஞ்செழியன் தவறான தண்டனை கொடுத்தமைக்கு உடனே இறந்தான். அவன் மனைவி கோப்பெருந்தேவியும் உடனே இறந்தாள். (“கண்ணகி” அத்யாயம் காண்க).
42. (வ.எண் 158-50 B.C. - 31 AD ) : கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி இரும்பிடர் தலையார் என்னும் புலவரால் புகழப்பட்டவன். இவன் காலத்தில் பாண்டியர் தூதுக்குழு ரோம் நாட்டுக்குச் சென்று அகஸ்டஸ் சீசரை சந்தித்தது. (20 BC)



43. (வ.எண் 159 - 31 AD to 124 AD) : கானப் பேரெயில் எறிந்த உக்கிரப் பெருவழுதி. காளையார் கோயில் அருகே உள்ள கோட்டையை உடைத்து வேங்கை மார்பன் என்னும் அரசனைக் கொன்றவன். இவன் அவையில் திருவள்ளுவர் இருந்தார். திருவள்ளுவர் குறளுக்கு சிறப்புப் பாயிரம் கூறியவன். “ஔவையார்” என்னும் தமிழ் மூதாட்டியால் புகழப்பட்டவன். இவனது காலத்தில் கொற்கையி-ருந்து அரசாண்ட பாண்டியன் நன்மாறன் என்பவன்.
44. (வ.எண் 160 - 125 AD to 144 AD) : சந்திரகுலதீபன் (ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் II) ஆந்திர தேசத்தில் ஆண்ட கௌதமீபுத்ர சாதகர்ணி பாண்டிய தேசத்தின் மீது படையெடுத்தான். இவ்வரசன் தன்னை ஆரியன் என அழைத்துக் கொண்டதால் இவனது படை ஆரியப்படை என அழைக்கலாயிற்று. இவற்றை வெற்றிகொண்டான் நெடுஞ்செழியன் II. இவனது காலத்தில் கொற்கையி-ருந்து அரசாண்ட பாண்டியன் “சடையன் வழுதி” என்பவன்.
45. (வ.எண் 161 - 144 AD to 174 AD) : சித்திரமாடத்துக் துஞ்சிய மாறன் வழுதி மதுரை கூல வாணிகன் சீத்தலை சாத்தனாரால் பாடப்பெற்றவன். இவனது காலத்தில் கொற்கையி-ருந்து அரசாண்டவன் வெற்றிவேல் செழியன் (சடையன்) என்பவன்.
46. (வ.எண் 162 - 175 AD to 204 AD) : இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன் (174 AD to 204 AD). இலவந்திகைப்பள்ளி நன்மாறனை தமிழ்நாட்டு அரசர்கள் முக்குலத்தவரிலும் மேம்பட்டு விளங்கினான் என்று மதுரை மருதன் இளநாகனார், மதுரை கணக்காயர் மகனார் நக்கீரர், காரிக்ண்ணனார், மூலங்கிழார் வடம வண்ணக்கன் பெரும் சாத்தனார் முத-யோர் பாடிப் புகழ்ந்துள்ளனர். மாறன் வெற்றிவேல் செழியன் II. (பு-க்கொடி பறித்த பாண்டியன்). இவனது காலத்தில் கொற்கையி-ருந்து ஆண்டவன் சடையன் வழுதி.
47. (வ.எண் 163) சடையன் நெடுஞ்செழியன் (நம்பி நெடுங்செழியன் III) மீன க்கொடி பிடித்த பாண்டியன் (180 AD to 201 AD).
48. (வ.எண் 164 - 201 AD to 204 AD) : கூடாகாரத்துஞ்சிய மாறன் வழுதி (குலேசன், மகரத்துவஜன்) கொற்கை - நல்வழுதி (பூரிக்கோ) 201 AD to 204 AD . தலையாளங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன். இவன்

இளவயதில் சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான் ஆகியவரை தலையாலங்கானம் (திருவாரூர் அருகே உள்ளது) என்னுமிடத்தில் வெற்றி கண்டான். மாங்குடி மருதனார் இவனை பாடியுள்ளார்).

49. (வ.எண் 165 - 204 AD to 235 AD) : உக்கிரப்பெருவழுதி II (இப்பாண்டியனை மூலங்கிழார், மதுரைக் கணக்காயனார் முத-யோர் பாடியுள்ளனர். இவன் காலத்திற்குப் பிறகு ஆந்திர ஆரிய அரசர்கள் படையெடுப்பினால் பாண்டியர் ஆட்சியும் தமிழ் சங்கமும் அழியுற்றன.

கடைச்சங்க காலத்தில் (1715 BC முதல் 235 AD முடிய ) வாழ்ந்த சோழ அரசர்களின் பெயர்கள் வருமாறு :

**சோழ அரசர்கள் :**

1. (வ.எண் 135 - 1715 BC) : ஜகத்ரக்ஷக சோழன், (இவன் உத்தரகான சோழன் மகன்) க-யாண சோழன். (உறையூரி-ருந்து ஆண்ட மன்னர்கள்).
2. (வ.எண் 136) திருநீற்றுச் சோழன், பத்திரசோழன் (1600 BC)
3. (வ.எண் 137) கம்பீர்ய சோழன் (1500 BC)
4. (வ.எண் 138) விக்ரமசோழன் (1400 BC)
5. (வ.எண் 139) : ஆரஞ்சாத்துச் சோழன். (இவன் சிவபெருமானுக்கு அபிஷேக நீர் நிறைந்த குடத்தை தாங்கி கொண்டு செல்லும் வழக்கமுயைவன். திருவானைக்காவில் உள்ள (ஜம்புகேஸ்வரம்) சிவபெருமானுக்கு காவிரியில் நீர் எடுத்து வருகையில், இவன் கழுத்தி-ருந்து முத்துமாலை நீர் குடத்தில் விழுந்து விட்டது. இது சிவபெருமான் விளையாட்டு என்று கருதி சிவ-ங்கத்தின் கழுத்தில் முத்துமாலையிட்டு அபிஷேகம் செய்தான். எனவே ஆரஞ்சாத்துச் சோழன் எனப்பட்டான்).
6. (வ.எண் 140 - 1200 BC) : சந்திரசேகர சோழன், குலோத்துங்கன் (20 வருடங்கள் ஆண்டான்).
7. (வ.எண் 141 - 1200 BC) : காலனை வென்ற சோழன். (இவன் சிவபெருமானை பூசித்து ஜோதிடர்களால் கூறப்பட்ட மரணபயத்தை வென்றான்.
8. (வ.எண் 142 1000 BC) : தேவ சோழன் (60 வருடங்கள் ஆட்சி) இவனது கப்பல்கள் சீனம் முத-ய நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தது.



9. (வ.எண் 143 - 900 BC) : சசிசேகர சோழன். இவனது மனைவி செண்பகவல்-. தேவசோழன் மகனான சசிசேகரசோழன் காலத்தில் காவிரியில் பெருவெள்ளம் வந்து குடிமக்கள் துன்பமுற்றனர். இவன் 48 நாள் விரதமிருந்து சிவபெருமானை நினைத்து தவம் செய்தான். சிவபெருமான் கனவில் தோன்றி திருவரங்கம் வடக்கே கொள்ளிடம் நதியை தோண்டச் செய்து காவிரியில் அணைகட்டும்படி பணித்தார். இவனுக்கு கரிகாலன் என்றும் ஒரு யெர் உண்டு. இலங்கையி-ருந்து 12,000 அடிமைகளைக் கொணர்ந்து காவிரியில் அணை கட்டினான். எனவே காவிரி அணை கட்டிய சோழன் எனப் புகழப்பட்டான். இவனது மகள் குணவல்-. பாண்டிய இளவரசன் இளம்திருமாறனுக்கு தனது மகளான குணவல்-யை மணமுடித்து பாண்டிய நாட்டுடன் நட்பு கொண்டான் சசிசேகர சோழன். (70 வருடங்கள் ஆட்சி செய்தான்)
10. (வ.எண் 144 - 800 BC) : சிவ-ங்கசோழன். இவன் 76 வருடங்கள் ஆட்சி செய்து தனது தந்தை சசிசேகர சோழன் செய்த பணிகளை பூர்த்தி செய்தான். இலங்கயை-ருந்து கொண்டு வந்த அடிமைகளை காடுதிருத்தி நாடுகள் ஏற்பட பணித்தான்.
11. (வ.எண் 145 - 700 BC) : சிவ-ங்க சோழன் மகனான வீரசோழன் (சுந்தரசோழன்) 87 வருடங்கள் ஆட்சி செய்து பல ஆறுகள் தோண்டி சோழ நாட்டை வளப்படுத்தினான். (வீரசோழன் ஆறு பெயர் காண்க).
12. (வ.எண் 146 - 700 BC to 600 BC) : வீரசோழனுக்கு, காலகால சோழன், பீமசோழன், நீதிநெறி சோழன் முத-ய பல பிள்ளைகள் இருந்தனர். நீதி நெறிச் சோழனை காஞ்சிக்கு அரசனாக்கினான் வீரசோழன். சோழ நாட்டை இரு பங்காக பிரித்து கும்பகோணத்தி-ருந்து காலகாலசோழன் (90 வருடங்கள் ஆட்சி), பீம சோழனை உறையூரி-ருந்து ஆட்சி (77 வருடங்கள் ஆட்சி) செய்யும்படி பணித்தான். இவர்களது காலத்தில் சோழ நாடு வளமட பெருகியது. காலகாலசோழன் மனைவி சேர இளவரசி குணவதி. தாளவனம் என்னும் ஊரில் ஒரு ஈஸ்வரன் கோயி-ல் உள்ள -ங்கம் ஒரு வேதிய சிறவன் பொருட்டு சற்று வளைந்து கொடுத்தது. அந்தக்

அந்தக் கோயிலுக்கு காலகாலசோழன் வந்தபோது சிவ-ங்கத்தை நிமிர்த்த சிவ-ங்கத்தில் ஒரு கயிற்றை கட்டி தன் கழுத்தில் மறுபாதியைக் கட்டி இழுத்தான். இதனால் காலகாலசோழன் கழுத்தில் இரத்தம் வடிந்தது. இதனால் "குருதி கொடுத்த சோழன்" என்று அவனுக்கு பெயர் ஏற்பட்டது. பிறகு சிவபெருமான் சோழனுக்கு தரிசனம் கொடுத்து ஆசியருளினார். காலகாலசோழன் மகன் கல்யாண சோழன் பிறகு அரியணை எறினான்.

13. (வ.எண் 147 - 650 BC) : கல்யாண சோழன் (ராஜேந்திர சோழன் என்னும் பட்டத்துடன்) கரூரி-ருந்து 80 வருடங்கள் ஆண்டான். சேர அரசன் பெருங் கடுங்கோவின் மகளான கல்யாணி என்பவளை மணந்து பத்திரசோழன், ஜனநாதசோழன் என்னும் மக்களைப் பெற்றான். இவன் காலத்தில் நீதிநெறிச் சோழன் மகன் உக்கிர சீதள சோழன் காஞ்சியி-ருந்து ஆண்டு வந்தான்.

14. (வ.எண் 148 - 600 BC) : பத்திரசோழன் கரூரி-ருந்தும், ஜனநாதசோழன் உறையூரிலுருந்தும், உக்கிரசீதள சோழன் மகன் ஹேமசீதள சோழன் காஞ்சியி-ருந்தும் ஆட்சி செய்து சோழ நாட்டை பலம் பொருந்தியதாககினார். பத்திரசோழனுக்கு வாரிசு ஏற்படவில்லை.

15. (வ.எண் 149 - 550 BC) : ஜனநாதசோழன் மகனான வயலவஆதித்தன் (வீர ஆதித்தன்) கரூர் என்னும் தலைநகரி-ருந்தும் அவனுடைய சகோதரன் சூளாமணி சோழன் உறையூரி-ருந்தும், ஹேமசீதள சோழன் மகன் ராஜசேனன் (477 BC) காஞ்சியி-ருந்தும் ஆண்டனர். கும்பகோணம், நாகை முத-ய பிரதேசங்களில் நாக அரசர்கள் ஆண்டனர். சூளாமணி சோழனுக்குப் பிறகு உறையூரி-ருந்து வீர ஆதித்தன் மகன் சூர ஆதித்த சோழன் ஆட்சி செய்தான். சூர சூதித்த சோழன் திருசிராமலை அரசன் (நாகர்) மகள் காந்திமதியை மணந்து நாகர்களுடன் தோழமை பூண்டான். காந்திமதிக்கு பராந்தகன், வீரஆதித்தன் (குலோத்துங்கன்) என்னும் மக்கள் பிறந்தனர். சூரவாதித்தன் பட்டத்து யானை தெருவில் வரும்போது துதிக்கையால் தெருவில் இருக்கும் கோழிக் குஞ்சுகளை ஊதி துரத்தியது. இதைக் கண்டு கோபமுற்ற சேவல் பறந்து சென்று பட்டத்து யானையின் மத்தகத்தில் தனது அலகால் குத்தியது. பயந்த யானை



அங்குமிங்கும் ஓடி பயத்தால் இறந்தது. கோழியின் வீரத்தைக் கண்டு மெச்சிய சூரவாதித்தன் அந்த இடத்தை "சோழியூர்" என்று பெயரிட்டு பஞ்சர்வணேஸ்வரர் என்னும் சிவன் கோயிலைக் கட்டினான்.

16. (வ.எண் 150 - 450 BC) : வயலவ ஆதித்தன் மகன் சுபசோழன் மகன் கரூரி-ருந்தும், சூரவாதித்தன் மகன் பராந்தக சோழன் உறையூரி-ருந்தும் ஆண்டனர். பராந்தக சோழன் மனைவி புவனா என்னும் சோழ இளவரசி. இவன் காலத்தில் திரிசிர மலையில் "சாரமா" முனிவர் தாயுமானவருக்கு புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். சாரமா முனிவரின் பூந்தோட்டத்தில் வளர்ந்த செவ்வந்திப் பூக்களை உறையூர் அரசி புவனா விரும்பியதால் சோழ வீரர்கள் தோட்டத்திலுள்ள செவ்வந்தி மலர்களை பறித்து அரசியிடம் கொடுக்க, சாரமாமுனிவர் சிவபெருமானிடம் முறையிட கிழக்கு நோக்கியுருந்த தாயுமானவர் மேற்கு நோக்கி திரும்ப, உறையூரில் மண்மாரி பொழிந்தது. (பாண்டமங்கலம் அருகே உள்ள சோழ அரசன் மாளிகை மீது மண்மாரி பொழிந்து 20 அடி பூமியின் கீழே சென்று விட்டது. பராந்தக சோழன் மகன் கரிகாலன், காவிரியாற்றில் விழுந்து நீந்தி, திருக்காட்டுப் பள்ளிக்கு அருகே உள்ள விஷ்ணம்பேட்டையில் கரையேறி, அங்குள்ள வேதியர்களால் வளர்க்கப்பட்டு, பின்பு கழுமலம் (சீர்காழி) சென்று குருகுலத்தில் படிக்கையில், பட்டத்து யானை மாலையிட அரசனானான். (இவன் கரிகாலன் எனப் புகழ்ப்பட்டான்)

17. (வ.எண் 151 - 400 BC) : சுபசோழன் மக்கள் வரகணன், ஞானவர்மன் என்பவர்கள். இவர்கள் கரூரி-ருந்து ஆண்ட சோழ மன்னர்கள்.

18. (வ.எண் 152 - 300 BC) : ஞானவர்மனுக்குப் பிறகு கரூரி-ருந்து சோழ நாட்டை ஆண்டவன் புகழ்சோழன். இவனை அதிகன் என்னும் மலைநாட்டரசன் எதிர்த்துப் போரிட்டான். சோழ வீரர்கள் அதிகன் படைகளை கொன்று குவித்தனர். அவ்வாறு கொன்று குவிக்கப்பட்ட உடல்கள் அருகே ஒரு சிவனடியார் தலை இருக்கக் கண்டு அதை ஒரு தடடில் எந்தி தீவலம் வந்து தீப்புகுந்தான்.

19. (வ.எண் 153 - 250 BC) : உறையூரில் மண் மாரி பொழிந்து அதி-ருந்து தப்பிய கரிகாலன் சிறு வயதில் சீர்காழியில் ஒரு சிற்றரசனாகப் பதவியேற்று தனது வ-மையால் பல சிற்றரசர்களை ஜெயித்து ஒரு பெரும் சோழப் பேரரசை

ஏற்படுத்தினான். இவன் வழியில் மநுநீதிச் சோழன் கிருபாலயன் சீர்காழியி-ருந்தும் தர்மவர்மசோழன் உறையூரி-ருந்து, ரவிவர்ம சோழன் கரூரி-ருந்தும் ஆட்சி செய்தனர்.

20. (வ.எண் 154 - 200 BC) : சிவ-ங்க சோழன் அல்லது வீதிடங்கன் (பிரிய விரதன்). இவன் இளவரசனாக இருக்கும்போது பசுங்கன்றின் மீது தேரோட்ட அது இறந்துபட்டது. அந்தக் கன்றின் தாய்ப்பசு சோழ அரசன் அரண்மனை வாச-ல் கட்டப்பட்டிருந்த மணியை அடித்து தனது சோகத்தை அரசனுக்குத் தெரிவித்தது. அரசன் பசுவின் வருத்தத்தை அறிந்து தனது மகன் மீது தேராட்டி கொல்லும்படி ஆணையிட்டான். அந்த ஆணையை செயல்படுத்த முற்படும்போது சிவபெருமான் அரசனுக்கு தரிசனம் தந்து அவன் மகனையும், பசுவின் கன்றையும் உயிரெழுப்பித் தந்தார். வீதிவிடங்கனின் சகோதரன் அபயகுலசேகரன்.

21. (வ.எண் 155 - 200 BC to 150BC) : வீதிவிடங்கனுக்குப் பிறகு பூபாலக் சோழன் சோழ நாட்டை ஆண்டான். பூபால சோழனின் சகோதரன் சற்குணசோழன். (சீர்காழி,நன்நிலம், திருக்குறுங்குடி முத-ய பகுதிகளை ஆண்டான். இவன் காலத்தில் க-ங்கப் பேரரசனாக இருந்தவன் காரவேலன். இக்காரவேலனை எதிர்த்து சோழ மன்னர்கள் போரிட்டு தோல்வி அடைந்தனர். ( 176 BC to 163BC) . இச்சோழன் காலத்தில் சோழர் படைகள் சிங்களத் தீவில் பெரும்பகுதியை கைப்பற்றி ஆண்டது. சோழன் ஏலேலசிங்கன் (ஏலாரா) கி.மு. 205 முதல் கி.மு. 161 முடிய 44 வருடங்கள் சிங்களத் தீவில் ஆட்சி செய்தான்.

22. (வ.எண் 156 - கி.மு. 150 முதல் கி.மு. 100 முடிய) : பெருமாவளவன் (பொத்த ஆண்ட பெருமசோழன்). இவனை சேரர்களின் அரசன் பெரும்சேரல் இரும்பொறை என்பவன் எதிர்த்துப் போரிட்டு கரூரைப் படித்துக் கொண்டான். கருவூர் ஏறிய பெரும் சேரல் எனப் பட்டம் பெற்று சேர நாட்டின் தலைநகரை கரூருக்கு மாற்றினான். பெருமாவளவனடின் மாமன் சிசுபாலன் (இளம் சேட்சென்னி) நெய்தனங்கானல் என்னுமிடத்தில் சேரர் படைகளை வென்றான். காரிகண்ணனார் இவனைப் பாராட்டி பாயடியுள்ளார். குராப்பள்ளி என்னுமிடத்தில் பெருமாளவன் இறந்த பிறகு (குராப்பள்ளித் துஞ்சி யவெருமாவளவன்)



அவன் மகன் கரிகாவன் (கரிகால் பெருவளத்தான்) பட்டம் ஏற்றான்.

23. (வ.எண் 157 - 100 BC to 50BC) : கரிகால பெருவளத்தான் சோழர் ஆட்சியை விரிவுபடுத்தினான். இளம்சேட்சென்னி கரிகாலனுக்குப் பேருதவியாக இருந்தான். கரிகாலன், காஞ்சியில் சென்று குலதெய்வமான அய்யனாரிடம் செண்டு (செங்கோல்) பெற்று ,இமயமலை வரை சென்று வழியிலுள்ள அரசர்களை வென்று, இமயமலையை (நேபாளம் அருசே சோ-ல-கணவாய்) செண்டாலடித்து கைப்பற்றி திரும்ப தமிழ்நாடு வந்து பூம்புகாரை நாக அரசர்களிடமிருந்து அதை சிறந்த துறைமுகப்பட்டிணமாக்கி உலகில் பல நாடுகளுடன் கப்பல் மூலம் வாணிபத் தொடர்பு கொண்டு தமிழர் பெருமையை நிலைநாட்டினான். இவன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் நெடுஞ்செழியன் (கோப்பெருந்தேவியின் கணவன்). இம்மன்னன் கண்ணகிக்கு அநீதி செய்தமை நினைத்து வருந்தி உயிர் விட்டான். (கண்ணகி கதை அடுத்த அத்யாயத்தில் காண்க)

கரிகால் பெருவளத்தான் கருவூர் அரசன் பெரும்சேரல் இரும்பொறை (மெய்ப்பொருள் கண்ட சேரன்). அவன் மகன் உதியன். மனைவி நல்-னி-வெளியன்வேள்மான் மகள். மற்றும் ஆட்டன் அத்தி என்பவனுக்கும் சோழ அரசில் பதவிகள் கொடுத்து கௌரவித்தான். கரிகால் பெருவளத்தானின் மகள் ஆதிமந்தி) இவள் சேர இளவரசன் ஆட்டன் அத்தி மீது காதல் கொண்டாள். ஆட்டன் அத்தி காவிரி வெள்ளத்தில் மாய்ந்திடவே அவனைத் தேடி காவிரி கரை முழுதும் தேடி, கட-ல் விழுந்து மாய்ந்தாள். கரிகால் பெருவளத்தானின் வெற்றிகளை பரணர் முத-ய பல கடைச்சங்கப் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர்.

24. (வ.எண் 158 - 50 BC 50AD) :
கரிகாற்பெருவளத்தானுக்குப் பிறகு அவனுடைய மக்கள் மணக்கிள்ளி, நெடுங்கிள்ளி (உறையூர்) வேல் பஃறடக்கை பெருவிற்கிள்ளி (பூம்புகார்), முடித்தலைக்கோ பெருந்றகிள்ளி முத-யோர் சோழ தேசத்தை ஆண்டனர். தித்தள் என்பவன் சேனாபதியாகவும் அவன் மகன் போர்வைக்கோ பெருநற்கிள்ளி உபசேனாபதியாகவும் இருந்தனர். மணக்கிள்ளியின் மகள் நற்சோனை. இவள் சேர அரசன்

நெடும்சேரல் ஆதன் என்பவனை மணந்து சேரநாட்டு பட்ட மகிஷியானாள்.

25. (வ.எண் 159 - 31 AD to 120AD) : கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி முத-ய மன்னர்கள் சோழ நாட்டை ஆண்டபோது மீண்டும் உறையூரில் மண்மாரி பெய்தது. கிள்ளி வளவன் குளமுற்றம் என்னுமிடத்தில் இறந்தான். நற்சோனையின் மகன் காரியாறு என்னுமிடத்தில் இறந்தான். நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் என்பவனும் இம்மண்மாரியில் இறந்தான். காணப்பேரெயில் மன்னர் வேங்கைமார்பனைக் கொன்ற உக்கிரப்பெருவழுதி சோழ மக்களுக்கு பேருதவி செய்து அவர்களைக் காப்பாற்றினான். உறையூரில் மண்மாரி பெய்த போது அங்கிருந்து தப்பிய ஆதிரை என்னும் சிறுமி, பகவன் என்னும் அந்தணர் ஆஸ்ரமத்தில் அடைக்கலம் ஆனாள். பகவனுக்கும் ஆதிரைக்கும் திருவள்ளுவர் முத-யோர் பிறந்தனர். (திருவள்ளுவர் கதை வேறு அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது).

26. (வ.எண் 160 - 120 AD to 150AD) : கிள்ளிவளவனுக்குப் பிறகு சோழ நாட்டை நெடுமுடிக்கிள்ளி (பூம்புகார்), கோப்பெருஞ்சோழன் இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி, தேர்வண்கிள்ளி, தொடுகழல்கிள்ளி முத-யோர் ஆண்டனர். நெடுமுடிக்கிள்ளி (புகார்) என்னும் சோழன். சீர்த்தி என்பவளை மணந்தான். இவர்களுக்கு உதயகுமாரன் என்னும் மகன் பிறந்தான். கோவலன்-மாதவிக்குப் பிறந்த மணிமேகலையை உதயகுமாரன் காத-த்தான். உதயகுமாரன் கொலையுண்ட பிறகு மணிமேகலை பௌத்த துறவியானாள். பூம்புகாரை கடல் கொண்டது.

27. (வ.எண் 161 - 150 AD) : இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குப் பிறகு சோழ நாட்டை தொடுகிள்ளி (நல்உருத்திரன்) (காலனுக்கு வழக்குரைத்த சோழன்) ஆண்டான். காஞ்சியி-ருந்து தொடுகழல் கிள்ளியின் மகன் இளங்கிள்ளி என்பவன் ஆண்டான். ஐயூர் முடவர் என்னும் புலவர் இக்காலத்தில் வாழ்நதார்.

28. (வ.எண் 162 - 170 AD) : தொடுகிள்ளிக்குப் பிறகு பெருநற்கிள்ளி (கோட்செங்கணான்) என்னம் சோழ அரசன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து மாறன் வெற்றிவேல் செழியனிடம் தோற்றான். பெருநற்கிள்ளியின் சகோதரனை புகழ்சோழன் உறையூரி-ருந்து ஆட்சி செய்தான்.



29. (வ.எண் 163 - 160 to 180AD) : பெருநற்கிள்ளிக்குப் பிறகு சோழ நாட்டை கோப்பெருஞ்சோழன் (தேர்வண்கிள்ளி) ஆண்டான். இவன் காலத்தில் பிசிராந்தையார், கண்ணாகனார் முத-ய புலவர்கள் இருந்தனர். தன்னிரண்டு குமாரர்களுடன் பகைகொள்ளப் புல்லாற்றூர் எயிற்றியனார் இவனை சமாதானம் செய்து பகை நீக்கினார். தன்னாடு துறந்து வடக்கிருந்தது தண்டு இரங்கினான்.கருவூர் பெருஞ்சதுக்கத்து பூதனார் சமாதானம் செய்தும் கேளாமல் சோழன் உயிர்விட்டான். இவனது நண்பர் பிசிராந்தையார் இவர் பிரிவால் உயிர் விட்டார்.

30. (வ.எண் 164 - 190 AD) : சோழன் நல் உருத்திரன். கோப்பெருஞ்சோழனுக்குப் பிறகு சோழ நாட்டை ஆண்டான்.

31. (வ.எண் 165 - 204 AD to 235 AD) : சோழன் நல் உருத்திரனுக்குப் பிறகு சோழ நாட்டை சோழன் வங்கி சாத்தன் என்பவன் ஆண்டான். இவன் காலத்தில் பாண்டி நாட்டை மூன்றாம் உக்கிரப் பெருவழுதி ஆண்டு வந்தான். தமிழ்நாட்டில் பெருமழை, புயல், பூகம்பம் ஏற்பட்டு கடைச்சங்கம் இக்காலத்தில் அழிவுற்றது.

**கடைச்சங்க காலத்தில் (1715 BC to 235 AD) வாழ்ந்த சேர அரசர்களின் பெயர்கள் வருமாறு :**

1. (வ.எண் 135 - 1700 BC) : பு-க்கொடி பறித்த சேரன் (கோட்டம் பலத்துஞ்சிய மாக்கோதை) இவன் ஜகத்ரக்ஷக சோழனை வென்று அவன் பு-க்கொடியை பறித்தான். பாண்டியன் முடந்திருமாறனால் புகழ்ப்பட்டவன்.
2. (வ.எண் 136 - 1600 BC) : குட்டுவன் கோதை (எல்லை கரைகண்டசேரன்). இவன் மேற்குக் கடல்வரை உள்ள நாடுகளை வென்று முசிறிப்பட்டிணத்தி-ருந்து கப்பல்கள் ஓட்டி வாணிபம் செய்தான்.
3. (வ.எண் 137 - 1500 BC) : ராஜகம்பீர சேரன் I (கோதைமார்பன்). கொண்கானம், மாறோக மண்டலம் முத-யவற்றை பிடித்து சேர அரசை விரிவுபடுத்திய சேரன்.
4. (வ.எண் 138 - 1400 BC) : முன்நீலமணியிட்சேரன். (இவனது வாணிபத்தின் மூலம் யவன தேசத்தி-ருந்து கொண்டுவரப்பட்ட நீலமணிகளை மாலையாக அணிந்து காட்சி கொடுத்தவன். இவன் மகள் மாணிக்கவல்-யை வீரமார்த்தாண்ட சோழனுக்கு மணமுடித்தான்.

5. (வ.எண் 139 - 1300 BC) : ராஜகம்பீரன் II. (முரசு அறைந்த சேரன்). இவன் நாட்டின் மீது பராந்தக சோழன் திடீரென்று படையெடுக்கவே தானே முரசறைந்து போர்ப்படைகளை திரட்டி வெற்றி கொண்டான்).
6. (வ.எண் 140 - 1200 BC) : ராஜமார்த்தாண்ட சேரன். இவன் வித்யா விநோத பாண்டியனுடன் (பாண்டியன் பெருவழுதி) போரிட்டுத் தோற்றான். காலனை வென்ற சோழன் இவனுக்கு உதவி புரிந்தான்.
7. (வ.எண் 141 - 1100 BC) : ராஜராஜேஸ்வரன். (இவன் கடுங்கோன் என்னும் பாண்டியனுடன் நட்பு கொண்டு சந்திரசேகர சோழனை வென்று சோழநாட்டைப் பிடித்து அவனுடைய பெண்களை மணந்தான்).
8. (வ.எண் 142 - 1000 BC) : ராஜப்பிரதாப சேரன். இவ்வரசன் கீர்த்திபூஷண பாண்டியனுடன் நட்புகொண்டு மேற்கடல்களில் கப்பலோட்டி வாணிபம் செய்தான். இஸ்ரவேல் மன்னன் சாலமனுக்கு பரிசாக யானை தந்தம், சந்தன மரம் முத-யவற்றை அனுப்பினான். தமிழ்வேள் என்னும் பட்டத்துடன் வாழ்ந்த இவனது வாணிப கப்பல்கள் மேற்கு கடல் தாண்டி ஆப்பிரிக்கா கண்டம் வரை சென்றன.
9. (வ.எண் 143 - 900 BC) : மன்றில் மணியிட்ட சேரன். இவனது கப்பல்கள் கொண்டுவந்த மணிகள் (வைரம், வைடூரியம் முத-யன) முத-யவற்றை அரசவையில் கொட்டி குவித்து மக்கள் பார்க்கும்படி செய்தான். இதனால் இவனுக்கு செல்வ கடுங்கோ எனப் பெயர் ஏற்பட்டது.
10. (வ.எண் 144 - 800 BC) : மும்மூர்த்தி சேரன். இவன் பாண்டியன் இளம் பெருவழுதியுடன் கடற்போரில் வெற்றிபெற்றான். சசிசேகர சோழனுக்கு காவிரி அணை கட்ட பொருள்கள், ஆட்கள் கொடுத்து உதவினான். சேர, சோழ, பாண்டிய மக்கள் இவனை வாழ்த்தி மும்மூர்த்தி சேரன் என்று அழைத்தனர்.
11. (வ.எண் 145 - 760 BC) : ஆறிலொரு கடமை கண்ட சேரன். இவன் சுந்தரசோழனுடன் நட்புகொண்டு கும்பகோணம், உறையூர் முத-ய இடங்களில் உள்ள அந்தணர்களை தன் நாட்டிற்கு வரவழைத்து பூமிதானம் செய்து வேதங்கள் கற்பிக்க ஏற்பாடு செய்தான். வேதநெறி இவன் காலத்தில் சேர நாட்டில் வேரூன்றியது.
12. (வ.எண் 146 - 700 BC) : அனந்தகுணசேரன். இவன் பெருங்கடுங்கோன் என்னும் பாண்டிய அரசர் மகளை தத்து



எடுத்து வளர்த்து கல்யாணி எனப் பெயர் சூட்டி, கல்யாண சோழனுக்கு முணமுடித்து வைத்தான். இவன் காலத்தில் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் ஒற்றுமையாக வாழ்நதனர்.
13. (வ.எண் 147 - 600 BC) : மதன விஸ்தாரசேரன் (வம்ச பரிபாலன்). நல் இறையனார் என்னும் பாண்டிய ஆசானிடம் தமிழ், போர் கலைகள் கற்று, காஞ்சி உக்ரசீதள சோழனுடன் நட்புகொண்டு வடபுலங்களில் உள்ள அரசுகளை வென்று அநேக ராஜகுமாரிகளை மணந்து சேரவம்சத்தை விரிவுபடுத்தினான்.
14. (வ.எண் 148 - 500 BC) : வரகுணோற்பாலன், மங்களசேரன், சத்யவர்மன், ராஜசேகரன் முதலான சேர மன்னர்கள் சேர ராஜ்யத்தை பகுதிகளாகப் பிரித்து ஆண்டனர். இக்காலத்தில் மகத தேசத்தை பிம்பிசாரன், அவன் மகன் அஜாதசத்ரு என்ற அசர்கள் ஆண்டனர். கௌதமபுத்தரின் பௌத்த மதக கொள்கைகளை நாடெங்கும் பரப்பினர். வேதமார்க்கம் அழியத் தொடங்கியது. கும்பகோணத்தி-ருந்து குடிபெயர்ந்த அந்தண குடும்பத்தின் வாரிசாக சங்கரர் (ஆதிசங்கர பகவத் பாதர்) பிறந்து பௌத்த மதத்தை கண்டித்து தனது அத்வைத சித்தாந்தத்தை உபதேசித்தார். வேதமார்க்கம் தழைக்க இது உதவியது. (ஆதி சங்கர் வரலாறு வேறு அத்யாயத்தில் காண்க).
15. (வ.எண் 149 - 400 BC) : தனவிஸ்தார சேரன். இவன் காலத்தில் சோழ நாட்டில் இடர்பாடுகள் நிகழ்ந்தன். எனவே சோழ அரசனுக்கு, பொருள்கள், உணவு தான்யம் கொடுத்து உதவியதால் தனவிஸ்தாரக சேரன் என புகழப்பட்டான். உறையூர் பராந்தக சோழனை காப்பாற்றி உதவினான்.
16. (வ.எண் 150 - 350 BC) : சத்யவர்ம சேரன். இவன் சேர நாட்டை வளப்படுத்தி முசிறிப்பட்டிணத்தை எதிரிகளிடமிருந்து மீட்டு, மீண்டும் முசிறி, தொண்டி, கொற்கை துறைமுகங்களி-ருந்து, மேற்கு கடல் மூலம் வாணிபம் செய்தான். சந்திரகுப்த மௌரியன் என்னும் மகத தேச அரசனுக்கு நண்பனாக இருந்தான்.
17. (வ.எண் 151 - 300 BC) : ஆஸ்ரம நிலையிட்ட சேரன். இவன் தந்தையின் வழியே சென்று வடபுலத்து வேதியர்களை வரவழைத்து வர்ணாஸ்ரம் கொள்கைகளை சேர நாட்டில் பரப்பினான்.

18. (வ.எண் 152 - 260 BC) : அநுபூதி சேரன். (ஆதன்-அழிசி). இவன் ஒலலையூர் தந்த பூதப்பாண்டியனுடன் நட்புகொண்டு சேர நாட்டில் வாணிபம் பெருகவும், செல்வம் பெருகவும் வழி செய்தான். சிவ-ங்கங்கள் பிரதிஷ்டை செய்து சிவன் சோயில் கட்டினான். சிவபக்திமானாகத் திகழ்ந்தமையால் அநுபூதி சேரன் எனப் புகழப்பட்டான்.
19. (வ.எண் 153 - 200 BC) : அவிர்பாக சேரன். இவன் காலத்தில் அசோகனுடைய படைகள் சேர நாட்டில் புகுந்தது. அவைகளை வெற்றி கொண்டு, சோழ நாட்டில் தலைநகர் உறையூரைப் பிடித்து தனது மக்கள், தர்மவர்மன், ரவி வர்மன் முத-யவர்களுக்கு சோழ நாட்டில் முடிசூட்டினான்.
20. (வ.எண் 154 - 150 BC) : சிவபாத சேகரன். (தியாகசமுத்திரன்). இவன் பாண்டியன் மீனகேதன பாண்டியன் (சர்வ மித்ர பாண்டியன்) என்பவனுடன் நட்புகொண்டு சிங்களத் தீவில் பல சிவன் கோயில் கட்டினான்.
21. (வ.எண் 155 - 100 BC) : குட்டுவன் முடத்திருமாறன் (திருநீற்றுச் சேரன்) இளங்குட்டுவன் முத-ய சேர மன்னர்கள் சேர நாட்டை ஆண்டனர்.
22. (வ.எண் 156 - 100 BC) : ஏழுதிசை வென்ற சேரன் (எழுதிசா சேரன்) எந்தை சேரமான் என்னும் இம்மன்னன் பொத்தி-ருந்து ஆண்ட சோழனை வென்று, சோழர்களை வென்று, கரூரை சேரர்களின் தலைநகராக்கினான். கருவூர் ஏறிய பெரும் சேரல் இரும்பொறை எனப்பட்டம் கொண்டு சேரநாட்டை ஆண்டான்.
23. (வ.எண் 157 - 100 BC to 50 BC) : பெருஞ்சேரலாதன், இளஞ்சேரலாதன் என்னும் இரண்டு அரசர்களயைும் கரிகால் பெருவளத்தான் என்னும் சோழன் வென்று சேர அரசர்களை சிறையிலடைத்தான். எனவே அரவர்களுக்கு முடங்கி கிடந்த பெருஞ்சேரலாதன், முடங்கி கிடந்த இளஞ்சேரலாதன் எனப் பெயர் வழங்கலாயிற்று. மெய்பொருள்கண்ட சேரன் (சேரல் இரும்பொறை அவன் மகன் உதியன் முத-யோர். முசிறியி-ருந்து ஆண்டனர். இக்காலத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன், கண்ணகிக்கு தவறிழைத்தமைக்கு மாண்டான்.
24. (வ.எண் 158 - 50 BC to 50 AD) : கிரீடம் இல்லாததால் ஆடுகோட்பாட்டு சேரலாதன் தம்பி சேர இளவரசனுக்கு களாக்காயினால் கிரீடம் செய்து முடிசூட்டினர் சேரவீரர்கள்.



எனவே இவனுக்கு களங்காய்கண்ணி நார்முடிச் சேரல் எனப் பெயராயிற்று. இவன் வளர்ந்து பெரியவனாகி சேரநாட்டை மீட்டான். இவனது மக்கள் குடகோச்சேரல் (நெடும்சேரலாதன்) மற்றும் (மையூர்கிழான் மகன் அந்துவன் சேரல் இருவரும் முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி என்னும் சோழ அரசுடன் போரிட்டு தலைநகரை மீட்டனர். இரும்பொறை வழிவந்த மாந்தரன் சேரல் (பரணர்க்கு நிதி தந்த சேரன்) சோழர் நட்பு கொண்டு சேர நாட்டை தன்வசப்படுத்தினான். இவன் கரிகாலனுடன் இமயப் படையெடுப்பில் பங்கேற்றான். இவனை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனப் புலவர்கள் புகழ்ந்தனர். இவனது மனைவிகள் பதுமன்தேவி மற்றும் சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோனை. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகன் ஆடுகோட்பாட்டு சேலாதன். (பாஸ்கரபாநு) இவனை கௌதமனார் என்னும் புலவர் போற்றியுள்ளார்.

25. (வ.எண்-159) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடவரசர்களை வென்று சேரநாட்டை பலப்படுத்தினான். யானைப் படைகளைக் கொண்டு போர் நடத்திய பல்யானை செழுகுட்டுவன் ஔவையின் சகோதரனான அதிகமான் நெடுமான் என்பவனை வளர்த்து சேரநாட்டின் ஒருபகுதிக்கு அரசனாக்கினான். எதிரிகளை தாக்குவதற்கு பயந்தால் அதிகமான நெடுமாறன் அஞ்சி என அழைக்கப்பட்டான். இவனே ஔவைக்கு கரு நெல்-க்கனி கொடுத்தவனாகும். (இவன் காலத்திலும் பிளினி என்னும் மேலை நாட்டு அறிஞர் பாரதம் வந்து யாத்திரை செய்தார். (23 AD to 79AD)
26. (வ.எண் 160 - 113 to 136 AD) : சேரன் செங்குட்டுவன் (அக்ஷயபாத்திர சேரன்). இவனது தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். தாய் நற்சோனை (சோழன் மணக்கிள்ளியின் மகள்). தம்பி இளங்கோ. சேரன் செங்குட்டுவன் மனைவி வேண்மான் (வேளிர்குலம்) செங்குட்டுவன் மகன் குட்டுவன்சேரல். செங்குட்டுவன் மாமன் காரியாற்றுச்த துஞ்சிய நெடுங்கிள்ளி. செங்குட்டுவன் நண்பன் மௌரிய அரசன் அறுகை. இவன் கண்ணகிக்கு சிலை செய்து கங்கையில் நீராட்ட நினைக்கையில் வடநாட்டரன் உத்திரன், விசித்ரன், ருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கள், தநுர்தரன், ஸ்வேதன், கனகன், விஜயன் முத-யோர் போருக்கு வரவே

அவர்களை வெற்றி கொண்டு கனக விஜயன் மற்றும் ஐம்பது தேர் வீரர்களை சிறைப்பிடித்து கண்ணகி சிலையை அவர்கள் தலையில் சுமக்கச் செய்து சேர நாடு வந்து கண்ணகிக்கு கோயில் அமைத்தான். கண்ணகியின் கதையை "சிலப்பதிகாரம் என்னும் காவியத்தை செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் எழுதினார். இது தமிழில் ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்றாகக் கருதப்படுகிறது. (ஐம்பெருங்காப்பியங்கள் 1. சிலப்பதிகாரம், 2. மணிமேகலை, 3. சீவக சிந்தாமணி, 4. வளையாபதி, 5. குண்டலகேசி). செங்குட்டுவன் சிவபெருமான், திருமால் இருவரையும் வழிபட்டு வந்தான். இளங்கோவடிகள் சமண மதத்தைத் தழுவினார். இவனது வடநாட்டு வெற்றிகளை மாமூலனார், சீத்தலைசாத்தனார் முத-யோர் புகழ்ந்து பாடியுள்ளனர். செங்குட்டுவன் காலத்தில் மாந்தாஞ்சேரல் இரும்பொறை, சேரமான கடலோட்டிய வெல்கொழுகுட்டுவன் (பாணரால் பாடப்பெற்றவன்), சேரமான் யானைகட்சேய் மாந்தரன் (தெய்வகுஞ்சாரன்), குண்டுகட்பாழி செல்வக் கடுங்கோ வாழியாதன் (கபிலரால் பாடப் பெற்றவன்) முத-ய சேர அரசர்கள் சேர நாட்டின் பல பகுதிகளில் ஆண்டனர். மங்களசேரன், பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ (இவனுடைய மகன் அகுதை) முத-யோர் இக்காலத்தில் வாழ்ந்த சிற்றரசர்கள்.

### சேரன் செங்குட்டவன் சுற்றத்தார்
(கி.பி. 113 முதல் கி.பி. 136)

| | |
|---|---|
| 1. தந்தையை பெற்ற பாட்டன் | : உதியன் சேரல் |
| 2. தந்தையை பெற்ற பாட்டி | : வெளியன் வேண்டுமான் நல்-னி |
| 3. தந்தை | : இமயவரம்பன் நெடும்சேரல்ஆதன் |
| 4. தாய் | : நற்சோனை (சோழ நாடு) |
| 5. இளைய சகோதரர் | : இளங்கோ அடிகள் |
| 6. மனைவி | : இளங்கோ-வேண்மான் |
| 7. மகன் | : குட்டுவன்சேரல் |
| 8. சிறிய தந்தை | : பல்யானை செல்கெழு குட்டுவன் |
| 9. தாய்ப்பாட்டன் | : சோழன் மணக்கிள்ளி |
| 10. அம்மான் | : காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி |
| 11. அம்மான்-சேய் | : இராஜயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி |



| | |
|---|---|
| 12. மாற்றாத்தாய் | : பதுமன் தேவி (ஆவி-குடி) |
| 13. மாற்றாந் தாய் வயிற்றில் பிறந்தவர் | : நார்முடிச்சேரல்; செல்வக்கடுங்கோ : ஆடுகோட்பாட்டு சேரலாதன் |
| 14. மாற்றாந்தாய் பாட்டன் | : வேள்-ஆவிக்கோமான்-பதுமன் |
| 15. தாயத்தார் | : இடும்பொறை மரபினர் அதியமான் மரபினர் |

### சமகால அரசர்கள்

| | |
|---|---|
| 1. உறையூர் சோழன் | : நெடுங்கிள்ளி |
| 2. பூம்புகார் சோழர்கள் | : கிள்ளிவளவன் |
| 3. திருக்கோவிலூர் சிற்றரசன் | : மலையமான் திருமுடிக்காரி- உறையூர் சோழன் சேனாபதி இவன் மகன் திருக்கண்ணன் |
| 4. உறையூர் இளஞ்சோழன் (மைத்துனன்) | : இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி |
| 5. மதுரை | : நெடுஞ்செழியன். இவன் மனைவி கோப்பெருந்தேவி |
| 6. கொற்கை இளவரசன் | : வெற்றிவேல் செழியன் (நன்மாறன்) |
| 7. மதுரை | : மகன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன். |
| 8. மதுரை | : நெடுஞ்செழியன் மகன் கானப்பேரெயில் எறிந்த உக்கிரப் பெருவழுதி III |
| 9. கொங்கு நாடு | : கொங்கிளங்கோசர் |
| 10. ஆந்திரம், மாளுவம் | : வசிஷ்ட்ட புத்ர சாதகர்ணி |
| 11. இலங்கை | : கயவாகு காமினி |
| 12. வடுக நாடு | : மகிஷன் |
| 13. கங்கவாடி | : கங்கன் |
| 14. தலைக்காடு | : கட்டியர் |
| 15. குடநாடு | : அறுகை |

### அரசிருக்கை

1. கரூர் (வஞ்சி) மற்றும்
2. மாக்கோதை (துறைமுகம்)
3. தொண்டி (துறைமுகம்)

### தமிழ் புலவர்கள் மற்றும் இதரர்கள்

1. பரணர், சீத்தலை சாத்தனார், கபிலர், கல்லாடனார்
2. சேனாபதி வில்லவன் கோதை
3. அமைச்சர் அழும்பில்வேள்
4. தூதுவன் சஞ்ஜயன்

5. புரோகிதன் மாடல மறையோன்
6. கூத்தில் வல்லவன் சாக்கையன்

**பகையரசர்கள்**

1. பாண்டிய சேனாபதி மோகூர் பழையன்
2. உத்தரதேசம் (குயிலாலுவம்) உத்தரன், விசித்ரன், ருத்ரன், வைரவன், சித்திரன், சிங்கன், தநுர்தரன், ஸ்வேதன், கனகன், விஜயன்
3. சோழ சிற்றரசர்கள் ஒன்பது பேர்.

✪ ✪ ✪

27. (வ.எண் 161 - 137 AD to 170 AD) : குடகோச்சேரல் இரும்பொறை (வம்ச பரிபாலகன் II), ஏனாதிசேரன், அனந்தகுணசேரன் முத-யோர் செங்குட்டுவனுக்குப் பிறகு சேர நாட்டை ஆண்டனர். குடகோச் சேரலை, பெருங்குன்றூர் கிழார் பாடியுள்ளார்.

28. (வ.எண் 162 - 171 AD to 200 AD) : சேரமான் கணைக்கால் இரும்பொறை. இவன் சோழன் செங்கணானுடன்போரிட்டவன். தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையும் இக்காலத்தில் வாழ்ந்த அரசன்.பெருஞ்சேரல் இரும்பொறையின் மனைவி அந்துவன் செள்ளை. இவனை மோசிகீரனார் என்னும் புலவர் பாடியுள்ளார்.

29. (வ.எண் 163 - 200AD) : சிவ வம்சோத்தாரக சேரன், தனவிஸ்தாரக சேரன், சிவதர்மோத்தம ராஜசேகரன் முத-ய சேர அரசர்கள் சேரமான் கணைக்கா-ரும் பொறைக்குப் பிறகு சேர நாட்டை ஆட்சிபுரிந்தனர்.

30. (வ.எண் 164 - 200 AD to 225 AD) : சிவநேச சேரன் என்னும் அரசன் நல்லுருத்திரன் என்னும் சோழ அரசனுடன் போரிட்டு மாண்டான்.

31. (வ.எண் 165 - 220 AD to 235 AD) : ஜீவோற்பவ சேரன் (சிவோத்பால சேரன்). இவன் பாண்டிய அரசன் உக்கிரப் பெருவழுதியுடன் சிறந்த நண்பனாக இருந்தான். கடைச்சங்கம் இக்காலத்தில் இயற்கை சீற்றத்தினால்அழிந்தது.

## 37. மகாவீரர்

வடபாரதம், விதேத ராஜ்யத்தில், குண்டலபுரம் என்னும் தலைநகரி-ருந்து ஆண்ட சித்தார்த்தன் என்னும் அரசன் பிரியகாரிணி என்னும் பெண்ணை மணந்து கொண்டார். இவர்களுக்கு சித்திரை மாதம், சுக்லபக்ஷதிரயோதசி, உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்



வர்த்தமான மகாவீரர். இவர் ஜைன மதத்தின் 24-ஆவது தீர்த்தங்கரர்.(கி.மு. 598 முதல் கி.மு. 527 முடிய). இவர் காலத்தில் மகத சாம்ராஜத்தை ராஜகிருஹதம் என்னும் தலைநகரி-ருந்து ஆண்ட அரசன் குணிகன். இவன் மனைவி ஸ்ரீமதி. இவர்களுக்கு பிறந்தவன் சிரேணிகன். இசன் சக்ரவர்த்தியாகி ஒரு பிராமணப் பெண்னை மணந்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்தவன் அபயகுமாரன்.

கௌசாம்பியி-ருந்து சதானீகன் என்னும் அரசன் (மனைவி மிருகாவதி), தசார்ணதேசத்து அரசன் தசரதன் (மனவி சுப்பிரபை), வத்ஸ தேசத்து அரசன் உதயணன் (மனைவி பிரபாவதி), ராஜக்ருஹத்து அரசன் சிரேணிகன் (மனைவி சே-னி), காந்தார தேசத்து அரசன் சத்யகன் (மனைவிஜ்யேஷ்டை). இவர்கள் வர்த்தமான மகாவீரர் காலத்தில் ஆண்ட அரசர்கள்.

மகாவீரர் அரியணையி-ருந்து துறந்து துறவறம் பூண்டு, யாகம், மாமிச பக்ஷணம், ப-யிடல், மறக் காரியம் இவற்றைத் தவிர்த்து அகிம்சை, பரதர்மம் என்று போதித்து வடக்கே பாவாபுரி என்னுமிடத்தில், கார்த்திகை மாதம் சுத்த கிருஷ்ண பக்ஷ சதுர்தசியில் நிர்வாணமடைந்தார். அதே சமயத்தில் யாவருங்காண ஒரு பெருஞ்சோதி அவர் உடம்பி-ருந்து புறப்பட்டு வானில் மறைந்தது. அன்று அத்தினத்தை தீபாவளியாக கொண்டாடப்படுகிறது. வர்த்தமானருக்குப் பிறகு பத்திரபாகு வரை தீர்த்தங்கரர்கள் ஜைன மதத்தை பரப்பினர்.

## 38. கௌதம புத்தன்

மஹாபாரத யுத்தத்தில் (கி.மு.3100) இக்ஷுவாகு வம்சத்து அயோத்தி அரசன் பிருஹத்பலன் அவன் மகன் தீர்க்கப் பிரஞ்ஞன் இருவரும் பாண்டவர்களால் கொல்லப்பட்டனர். பிறகு அயோத்தியில் பிருகத்க்ஷணன், உருஷ்யன், வஜ்ரவ்யூஹன், பகுத் வியோமன், திவாகரன், சகதேவன், பிருதாஸ்வன், சுப்ரதீகன், பானுரதன், பிரதிதாஸ்வன், சுப்ரதீகன் II மருதேவன், சுருக்ஷத்திரன், குருக்ஷகன், அந்தரிக்ஷன், சுபர்ணன், அர்த்தஜித், பிருஹத்பாஜன், தருமி, க்ருதஞ்ஜயன், ரணஞ்ஜயன், சஞ்ஜயன், சாக்கியன் முதலானோர் கி.மு.550வரை ஆண்டனர். சாக்கியகுலத்து அரசர்கள் இரண்டு பிரிவாக பிரிந்து வேறு வேறு தலைநகரங்களி-ருந்து ஆட்சி செய்தனர்.

வடபாரதத்தில், கங்கையின் உபநதியாகிய ரோகிணியின் கரையில் உள்ள கபிலவாஸ்த்து என்னும் தலைநகரி-ருந்து

சாக்கியனுக்குப் பிறகு, மஹாசம்மதன், சீஹஹானு, சுத்தோதனன் (இவன் தம்பி அமிதோதன்), சித்தார்த்தன் (கி.மு.557 முதல் கி.மு.437) முத-யோர் ஆட்சி செய்தனர்.

வேறு தலைநகரி-ருந்து சாக்கியனுக்குப் பிறகு சுத்தோதனன், ராகுலன், பிரசேனஜித், க்ஷுத்ரகன், குண்டகன்(அளர்க்கன்), சுரதன், சுமித்ரகன் முத-யோர் (கி.மு.550 வரை) ஆண்டனர்.

கபிலவாஸ்த்துவி-ருந்து ஆண்ட சுத்தோதன மனைவி மாயா. இவர்களுக்கு வைகாசி மாதம், பௌர்ணமி தினத்தன்று சித்தார்த்தன் என்னும் மகன் பிறந்தான் (நேபாளம் - லும்பினி தோட்டம்). குழந்தை சித்தார்த்தன் பிறந்த ஏழாம் நாளில் தாய் - மாயா இறந்தாள். செவி-த் தாயாகிய பிரஜாபதி சித்தார்த்தனுக்கு கல்வி போதித்தார். சித்தார்த்தனுக்கு திருமண வயது வந்ததும், சுப்ரபுத்திரன் குமாரியாகிய யசோதரை என்பவளை மணமுடித்தனர். சித்தார்தனுக்கும், யசோதரைக்கும் ராகுலன் என்னும் மகன் பிறந்தான். அரண்மனையை விட்டு வெளியே செல்லாத சித்தார்த்தன், ஒரு நாள் தனது தேரில் சாரதி சன்னனுடன் வெளியே சென்றான். போகும் வழியில் ஒரு கிழவனையும், ஒரு நோயாளியையும் ரோகிணி நதிக்கரையில் ஒரு பிணத்தையும் எரிக்க கண்டு தனது சாரதியிடம் விளக்கம் கேட்க, எல்லா மனிதருக்கும் இவ்வாறு நடக்கும் எனக் கூறக் கேட்க மிகவும் வருத்தம் கொண்டு, பல நாட்கள் இதுபற்றி சிந்தனை செய்து ஒரு நாள் அரண்மனையை விட்டு இரவில் தனியே வெளியேறி பலரிடம் விளக்கம் கேட்டு, கடைசியில் போதி மரத்தடியில் அமர்ந்து தவம் செய்யத் தொடங்கினான். பல நாட்கள் தவம் செய்த பிறகு போதி மரத்தடியில் சித்தார்த்தனுக்கு ஞானம் பிறந்து கௌதம புத்தன் என்னும் பெயர் பூண்டு மக்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினான். மனிதனின் ஆசையே எல்லாவற்றிற்கும் காரணம் எனக்கூறி, மக்கள் அஹிம்சை வழியில் நடக்கும்படி உபதேசித்தான். கௌதம புத்தரது உபதேசம் மக்களை ஈர்த்தது. புத்த மதம் பிறந்தது. பாரதத்திற்கு மேற்கே உள்ள ஈரான், ஈராக், கிரேக்கம், இஸ்ரேல் நாடுகளில் உள்ள மக்களும் வடக்கே சிக்கிம், பூடான், ஆப்கானிஸ்தான், மங்கோ-யா, சீனா, ஜப்பான், கொரியா, கம்போடியா, பர்மா, சிங்கப்பூர், இலங்கை, முத-ய தேசங்களில் உள்ள புத்த மதத்தை தழுவினர்.

ஹிந்துக்கள் மஹாவிஷ்ணுவின் அவதாரம் என இவரை வழிபடத் தொடங்கினர். ஆந்திர தேசத்தில் நாகார்ச்சுனர், தமிழ்நாடு-காஞ்சிபுரத்தில் உள்ள தருமபாலர் முத-ய பௌத்த துறவிகள் சிறந்து விளங்கினர். வடபாரதத்தில் நாலந்தா என்னுமிடத்தில் பௌத்த-பல்கலை கழகத்தில் உலகின் பல பாகங்களி-ருந்து வந்து



மாணவர்கள் பயின்றனர். காஞ்சியில் பெரிய பௌத்த சங்கம் ஏற்பட்டு சிறந்து விளங்கியது. இதி-ருந்து பல பௌத்த துறவிகள் புறப்பட்டு சீனத்தியேயே பௌத்த மதத்தை பரப்பினர். நாகைப்பட்டினத்திலும் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டன.

கௌதம் புத்தரை 28-ஆவது புத்தராக பௌத்தர்கள் போற்றினர். 28 பௌத்தர்கள் பெயர்கள் வருமாறு : 1. தண்ணகாரர், 2.மேதங்கரர், 3. சரணங்கர், 4. தீபங்கரர், 5. கௌண்டியர், 6. மங்களர், 7. சுமங்களர், 8. ரேவதர், 9. சோபிதர், 10. அநோமதர்சி, 11. பத்மர், 12. நாரதர், 13. பத்மோத்தரர், 14. சுமேதர், 15. சுஜாதா, 16. பிரியதர்சி, 17. அர்த்தர்சி, 18. தர்மதர்சி, 19. சித்தார்த்தர், 20. திஷ்பர், 21. புஷ்யர், 22. விபச்சித், 23. சுகி, 24. வ்ருஷபர், 25. ககத்தர் (காகந்தர்), 26. கோநாகாமர், 27. கஸ்யபர், 28. கௌதம புத்தர்.

புத்த மதத்தின் முக்கிய கோட்பாடுகள் : புத்தம், தர்மம், சங்கம். கொள்கை : பஞ்சசீலம் (1. கொல்லாமை, 2. திருடாமை, 3. பொய்யாமை, 4. குடியாமை, 5. காமம் இன்மை). அஷ்டசீலங்கள் : (1. நன்நம்பிக்கை, 2. நன்னோக்கம், 3. நற்பேச்சு, 4. நற்கெய்கை, 5. நல்வாழ்க்கை, 6. நன்முயற்சி, 7. நல்எண்ணம், 8. நல் ஒழுக்கம்).

திரிபிடகம் என்பது : 1. சத்தபிடகம், 2. அபிதமம் பிடகம், 3. விநயபிடகம் என்று மூன்றவித பொக்கிஷங்களாகும். சுத்தபிடகம் என்பது 1. திகநியாய (நியாயக் கூட்டம்-34 பகுதிகள் அடங்கியது), 2. மச்சிம நிகாய-152 விளக்கங்கள் 3. அங்குத்தர நிகாய-பெரிய புத்தகம், 4. சம்யுத நிகாய, 5. குட்டக நிகாய, குட்டக பதம், தம்ம பதம், உதானா, இதுவாதுகா, தேரகதா, தேரி கதா, ஜாதக கதா, நிசோதா, பதிசம்பிதா, சுபதனா மற்றும் புத்த வம்சா (24 முந்தைய புத்தர்களின் வரலாறு).

**2. அபிதம்மம் :** (புத்த மனோதத்துவம்) : 1. தம்ம சங்கிணி (வேறு உலக நிலை), 2. விபாங்கா (18 விளக்கங்கள்), 3. கதவத்து (1000 சந்தேகங்கள், விடைகள், விசாரணைகள்), 4. பக்கள பன்னதி (தன்னைப்பற்றிய விசாரணை), 5. தாது கதா (பூ-தத்துவம்), டு? ஜமா (பூமியிலுள்ள புற நிலை), 7. பத்தனா (வாழ்க்கை தத்துவம்).

**3. விநய பிடகம் :** பௌத்த சங்க ஒழுக்கங்கள் (1. சுத்த விபாங்கியா, 2. காந்தங்கள், 3. பரிவர்ய பதா).

**4. தம்ம பதம் :** (பிராமணன் யார் என்ற விளக்கங்கள், தர்ம விளக்கம்).

மேலும் சீனா, ஜப்பான் முத-ய இடங்களில் (ஷா-ஒ--ன்) தற்காப்புக்கான போர்க் கலைகளும், இதர மந்திர, தந்திர கலைகளும் கற்றுத்தரப்பட்டன. புத்தர் ஞானம் பெற்ற போதி மரத்தின் கிளை ஒ`வவொரு யுகத்திலும் இலங்கைத் தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நடப்பட்டது.

| யுகம் | பௌத்தரின் பெயர் | இலங்கையின் பெயர் | அப்போது இலங்கையை ஆண்ட அரசன் |
|---|---|---|---|
| முதல் யுகம் | காகசந்தர் | ஓஜதீபம் | அபயன் |
| இரண்டாவது யுகம் | கோநாகமன் | வரதீபம் | சமிதன் |
| மூன்றாவது யுகம் | காஸ்யபர் | மந்ததீபம் | ஜயந்தன் |
| நான்காவது யுகம் | கௌதமர் | சிம்மள தீபம் | துஷ்ட-காமினி |

(புத்தர் காலத்தில் பாண்டிய தேசத்தை ஆண்டவர்கள் கோடை பாடிய பெரும்பூதன், கீர்த்திபூஷண பாண்டியன் II, குமாரசேகர பாண்டியன் முதலானோர். சோழ தேசத்தை கரூரி-ருந்து சுபசோழனும், உறையூரி-ருந்து சூரவாதித்தனும், காஞ்சியிலுருந்து ஹேமசீதள சோழன், ராஜசேன சோழன் முதலானோர் ஆண்டனர். சேர நாட்டை மாந்தரன் சேரல் வழியில் மெய்பொருள்கண்ட சேரன், சேரல் இரும்பொறை முதலானோர் ஆண்டனர்).

கௌதம் புத்தன் காலத்தில் மகத தேசத்தை ஆட்சி செய்தவன் அஜாத சத்ரு (கி.மு. 500 முதல் கி.மு. 475). இவன் பிம்பிசாரன் (விதிசாரன்) என்னும் அரசன் மகன். மகாபாரதப் போரில், பீமனால் கொல்லப்பட்ட ஜராசந்தனுக்குப் பிறகு சகதேவன், சோமாபி, அனசிதசிரவன், அயுதாயு, நிரமித்திரன், சுநேத்திரன், சதன் பிரக்கர்மா, ஸ்யேனஜித, ச்ருதஞ்ஜயன், சுபலன், சுசி, க்ஷேமியன், சுவிரதன், தர்மன், சசிரவன், த்ருடசேனன், சுபலன், சுநீதன், சத்யஜித் மந்திரிகனகன் அவனுக்குப் பிறமு பிரத்யோதனன், பாலகன், விசாகயூபன், ஜனகன், நந்திவர்த்தனன், (கி.மு. 789 முதல் 928 முதல் கி.மு. 790 முடிய) பின்பு சிசுநாகன் (கி.மு. 789 முதல் கி.மு. 747 முடிய) ; காகவர்ணன், க்ஷேமதர்மன், தேகாத்திரன் என்பவரும் பிறகு பிம்பிசாரனும் ஆட்சி செய்தனர். அஜாதசத்ருவுக்குப் பிறகு மகத தேசத்தை துருபதன், அஸ்வகன், தர்சகன் (கி.மு. 475 முதல் கி.மு. 450) வத்ஸநாடு அரசன் உதயணன் (கி.மு. 450 கி.மு. 425), நந்திவர்த்தனன் (சர்வார்த்த சித்தி) (கி.மு. 425 முதல் கி.மு. 400) ஆண்டனர். அஜாதசத்ருவின் மகன் உதியபத்ரகன், அநிருத்ரகன், முண்டன், நாகதாசன், சிசு நாகன், காலசோகன், அதற்குப் பிறகு மஹாபதும் நந்தன் (நவநந்தர்கள்) ஆட்சியைக் கைப்பற்றினர் (கி.மு. 413 முதல் கி.மு 321 முடிய) நவநந்தர்களின் மந்திரி ராக்ஷஸன். நவநந்தர்கள் ஆட்சியில் சணகன் என்னும் வேதியன் கொடுமைப்படுத்தப்பட்டு இறந்தான். இவன் மகனே சாணக்கியன் (விஷ்ணு குப்தன்) சிறு வயதிலேயே மகத தலைநகரை விட்டு வெளியேறி, முரா என்பவனுடைய மகன் சந்திரகுப்த மௌரியனை அரசனாக்கினான் (கி.மு. 321 முதல் கி.மு 287 முடிய). இவன் காலத்தில் மாசிடோனியா இளவரசன் அலெக்சாண்டர் பல நாடுகளை வென்று, சிந்து நதிக்கரை அரசன் புருஷோத்தமனை வென்று மகதம் நோக்கி படையெடுது˙தான். சாணக்கியன் தந்திரத்தினால்,



அலெக்ஸாண்டருடன் சந்திரகுப்த மௌரியன் சமாதானம் செய்தான். செலூகஸ் நிகேடார் என்பவனை கிரேக்க பிரதிநிதியாக மகதத்தில் விட்டு விட்டு, அலெக்ஸாண்டர் நாடு திரும்பினார். சாணக்யன் உதவியால் சந்திரகுப்த மௌரியன் வடபாரதம் முழுதும் ஆண்டான். (சாணக்கியன் எழுதிய அரசியல் நூல் அர்த்தசாஸ்த்திரம் எனப்படும்). சந்திரகுப்த மௌரியனுக்குப் பிறகு (கி.மு. 321 முதல் கி.மு. 287 முடிய), பிந்துசாரன் (கி.மு. 286 முதல் கி.மு. 273 முடிய) சுசீமன், சம்ராட் அசோகன் (கி.மு. 274 முதல் கி.மு. 237 முடிய).

அசோகன் (வ.எண் 154) க-ங்கத்தின் மீது படையெடுத்து வெற்றிகண்டு, உபகுப்தன் என்னும் பௌத்த துறவியின் உபதேசத்தால் போரை வெறுத்து, பௌத்தத்திற்கு ஆதரவு அளித்து தமிழ்நாடு தவிர பாரதம் முழுதும் ஆட்சி செய்தான். அசோகனுக்குப் பிறகு (வ.எண் 155) சுயன், சம்யுதன், சா-சூகன், சோமசர்மா, சததநுவா, பிருஹத்ரதன் (கி.மு. 237 முதல் கி.மு. 85 முடிய) ஆண்டனர். பின்பு மகத தேசத்தை (வ.எண் 156) சுங்க வமிசத்தைச் சேர்ந்த புஷ்யமித்ரன், அக்னிமித்திரன், சச்சியேஷ்ட்டன், வசுமித்ரன், உதங்கள், பு-ந்தகன், கோஷவசு, வஜ்ரமித்ரன், தேவபூதி (கி.மு. 184 முதல் கி.மு. 72 முடிய) முத-யவர்கள் ஆண்டனர். தேவபூதிக்குப் பிறகு கண்வ வம்சத்தை சேர்ந்த வசுதேவன் என்னும் பிராமணன் ஆட்சி செய்தான். கண்ணுவ வம்ச 45 அரசர்கள் (கி.மு. 63 முதல் கி.மு. 27 முடிய) ஆண்ட பிறகு ஆந்திரதேச அரசர்கள் மகத சாம்ராஜ்யத்தை ஆண்டனர்.

## 39. ஆதிசங்கர பகவதபாதர்

பாரத தேசத்தில் மீண்டும் வேதம் தழைக்கவும், ஹிந்து மதம் தழைக்கவும், நாஸ்த்திக வாதம் அழியவும் காரணமாக விளங்கியவர் சங்கரர். (இவரது தத்துவம் அத்வைதம் எனப்படும். இருப்பது பிரமம் ஒன்றே. அதை மாயை (இயற்கை) அறிந்து கொள்ள விடாமல் மயக்குகிறது. பரமாத்மா, ஜீவாத்மா, இயற்கை சக்திகள், பஞ்சபூதங்கள் பிரமத்தில் தோன்றியவையே என்பதாகும்).

கேரளம் எனப்படும் மலையாள தேசம், சேர அரசர்கள் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தது. மக்கள் பேசும் மொழி தமிழாகவே இருந்தது. (இக்காலத்தில் மலையாள மொழி உருவாகவில்லை). சோழ நாடு - கும்பகோணம் அருகிலுள்ள ஊர்களி-ருந்து அந்தணர்கள் சேர நாட்டிற்கு குடிபெயர்ந்தனர். அங்கு சேர அரசர்கள் பூமிதானம் செய்து அந்தணர்கள் வாழ உதவி செய்தனர். அவ்வாறு காலடி என்னுமிடத்தில் வாழ்ந்த அந்தணர் வித்யாதிராயர். இவருடைய மகன் சிவகுரு. இவர் மகிபண்டிதரின் பெண்ணான ஆர்யாம்பாள் என்பவளை

திருமணம் செய்து கொண்டார். வெகு நாட்கள் இவர்களுக்கு புத்திரப் பேரில்லை. சிவபெருமான் அருளால் ஈஸ்வர வருடம், வைகாசி மாதம், திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு சங்கரன் எனப்பெயரிட்டு வளர்த்து வந்தார் சிவகுரு. சிறு குழந்தையாய் இருக்கும் போது ஒரு நாகப்பாம்பு குழந்தையை சுற்றி படமெடுத்தது. எல்லோரும் பதறி நிற்கையில் அப்பாம்பு ருத்திராக்ஷ மாலையாக மாறிவிட்டது. ஒரு நாள் குழந்தை காணாமல் போக, திடீரென்று பூசணிக்காயி-ருந்து வெளிவந்தது. சுழல் காற்றில் ஆகாயத்தில் மறைந்து, எட்டு குழந்தைகளாய் தோன்றி மீண்டும் ஒரே குழந்தையாய் மாறியும் அற்புதங்கள் நடந்தன. பாடலேசுரர் கோயில் திருத்தேர் விழாவின்போது குழந்தை உத்ஸவ வித்ரஹனுமாகவும், பின்பு குழந்தையாகவும் மாறிய அற்புதங்கள் நடந்தன. சங்கரரின் சிறுவயதில் சிவகுரு மரணமடைந்தார். அவரை சிதை மே-ட்டு தீயிடுகையில் ஒரு தருப்பையைக் கிள்ளி சிதை மே-ட்டு நறுமணம் வீசச் செய்தார். பின்பு உபநயனம் செய்து வீடு வீடாக பிக்ஷை கேட்டு பிரமசரிய ஆஸ்ரமத்தை தொடர்ந்தார். அவ்வாறு இருக்கையில் அயாசித தீக்ஷிதர் மனையில் பிக்ஷை கேட்கையில் அந்த வீட்டு அம்மணி பிக்ஷை பாத்திரத்தில் ஒரு நெல்-க்கனி

இட்டாள். அக்குடும்பத்தின் வறுமை நீங்க சங்கரர், “கனகதாரா கோத்திரம்” பாட மஹாலக்ஷ்மி பொன்மாரி பெய்தாள். தனது தாயின் சௌகரியத்திற்கு பூரணா நதியை தனது வீட்டருகில் ஓடும்படி செய்தார். சத்தியவந்தன் எனும் அரசனுக்கு புத்திரப்பேறு உண்டாகும்படி சிவபெருமானைப் பாடி, அவனுக்கு அருள் செய்தார். ஒரு நாள் நதியில் ஸ்நானம் செய்கையில் முதலை அவர் காலைப் பிடித்துக் கொண்டது. தனது தாயாரிடம் சந்நியாஸ ஆஸ்ரமம் பெற்றுக் கொள்ள அனுமதி கொடுத்தால், முதலை விட்டு என்று சொல்-, தாயார் உத்திரவு கொடுக்க, சந்நியாசம் மேற்கொணடார். அப்போது அவருக்கு வயது எட்டு. சங்கரர் சந்நியாசம் மேற்கொண்டு கோவி ்நத பகவத்பாதர் என்பவரை குருவாக ஏற்று அவரிடம் உபதேசம் செற்றார். தனது ஆசிரியர் ஒரு நாள் வெய்யி-ல் வரக்கண்டு, இடுப்புத் துண்டை ஆகாயத்தில் வீசி எறிந்தார். அது அவருடைய ஆசிரியருக்கு குடைபோல அந்தரத்தில் மிதந்து வந்தது. ஒரு நாள் நர்மத்தை ஆற்றினுக்கருகில் ஒரு குகையில் தங்கி இருக்கையில், நர்மதையில் வெள்ளம் பெருகி, குகை நோக்கி ஒடி வந்த வெள்ளத்தை தனது கமண்டலத்தில் அடங்கும்படி செய்தார். தீர்த்தயாத்திரை செய்து பத்ரிகாஸ்ரமம் முத-ய இடங்களுக்குச் சென்று. வியாஸ முனிவர் அவருக்கு காட்சி கொடுக்க, அவர் ஆசிபெற்று, காசி முத-ய க்ஷேத்திரங்களைத் தரிசித்து பல மதவாதிகளை வெற்றி கொண்டு,



ஷண்மத ஸ்தாபனம் செய்து பின்னர் பௌத்தர்களை வென்ற குமாரிலபட்டரை தரிசித்து, அவர் ஆணையின்படி மண்டனமிசிரர் என்பவருடைய வீட்டில் சிரார்த்தம் நடக்கும்போது பூட்டப்பட்ட வீட்டில் தன்யோக சக்தியால் உள்நுழைந்து வாத பிக்ஷை கேட்க மண்டனமிசிரரின் மனைவி உபயபாரதி (சாரதை) நடுவராயிருக்க சம்மதித்து மண்டனமிசிரரை வாதில் தோற்கடித்தார். பின்னர் உபயபாரதி சிற்றின்ப விஷயமாய் கேள்விகள் கேட்டு, சற்று கால அவகாசம் கேட்டு, போஜ ராஜ்யத்தில் “அமரகன்” இறந்துபடக் கேள்விப்பட்டு, தனது உடலை சீடர்களை பாதுகாக்கும்படி கூறி, கூடுவிட்டு கூடு பாயும் வித்தையை பிரயோகித்து அமரகன் உட-ல் புகுந்து, சிற்றின்பம் பற்றிய கேள்விகளுக்கு விடையறிந்தார். சங்கரரின் உடலை அத்தேச மந்திரி எரித்து விடும்படி கட்டளையிட, அமரகன் உடலை விட்டு மீண்டும் தன்னுடைய உட-ல் புகுந்து, மண்டனமிசிரர் வீடு சென்று அவருடைய மனைவி உபயபாரதியிடம் வாதிட்டு வெற்றி கண்டார். மண்டனமிசிரர், சுரேஸ்வர் என்னும் பெயரில் சங்கரரின் சீடரானார். ஒரு நாள் ஒரு கபா-கன் இவரது தலையை யாசிக்க, அவர் எடுத்துக் கொள்ளும்படி தியானத்தில் அமர்ந்தார். அவரது சீடன் பத்மபாதர் மீது நரசிம்ம ஸ்வாமி ஆவேசம் வந்து கபா-கனை கிழித்துக் கொன்றார். கொல்லூர் மூகாம்பிகையை தோத்திரம் செய்து ஒரு வேதியனின் இறந்த மகனை எழுப்பித் தந்தார். ஸ்ரீவல்-புரத்தில், பிரபாகர பட்டர் என்பவரின் பிறவி ஊமை மகனை பேசச் செய்தார். பின்னர் சிருங்ககிரியில் மடம் ஸ்தாபித்து, தனது சீடர்கள், தோடகர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், சுரேஸ்வரருடன் கூடி பல கிரந்தங்கள் செய்தார் தனது தாய் மரணத் தருவாயில் இருப்பதை உள்ளுணர்வால் அறிந்து, ஆகாய மார்க்கமாய், காலடி சென்று, வாழைப் பட்டைகளை வைத்து எறியூட்டி தாயாருக்கு சம்ஸ்காரம் செய்தார். பின்பு அபிநவகுப்தன் என்னும் மந்திரவாதியை வென்று. ஒரு பிராமணனுக்கு பிடித்திருந்த பிரம்மராக்ஷஸனை விரட்டி, ஸர் வக்ஞ பீடமேறி எல்லா மதவாதிகளையும் வென்றார். கேதாரம், பத்ரிகாஸ்ரமம், துவாரகை, ஜகன்னாதம், காஞ்சிபுரம் முத-ய இடங்களில் சங்கரமடங்களை ஸ்தாபித்தார். பின்பு திருக்கயிலை சென்று தனது 32 வயதில் சிவபெருமானுடன் ஐக்கியமானார்.

சங்கரர் வடமொழியில் இயற்றிய நூல்கள் வருமாறு:-

பஜகோவிந்தம், கல்யாண விருஷ்டி ஸ்தவம், காருண்யபூர்ணஸ்தவம், மகாபாகஸ்தவம், சந்நியாசோத்தாரம், நிரீதி ஸ்தவம், கங்காஷ்டகம், மனீஷாபஞ்சகம், சிவாத்ம பூர்ணானுபவம், தோத்திர மஞ்ச்ரி, பிரம்ம சூத்ர வியாரணம், பஞ்ச ருத்ரோபநிடத வியாக்கியானம், நரசிங்க தாபனி வியாக்கியானம், கௌஷீதகி

பிராம்மண வியாக்கியானம், ஸ்ரீருத்ராத்யாய வியாக்கியானம், பகவத் கீதா பாஷ்ய வியாக்கியானம், சன்றசுஜாதீய வியாக்கியானம், விஷ்ணு ஸகஸ்ரநாம பாஷ்ய வியாக்யானம், ஆத்மபோதம், கலாரோகணம், தத்வாயோகம், அபரோக்ஷானுபூதி, அத்வைத ஸ்தவம், அமரகம், சௌந்தர்யலகரி முத-ய நூல்களும் ப்ரஸ்ன-உத்தர மா-கா (கேள்வி-விடை) போன்ற கிரந்தங்களும் செய்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் ஆண்ட சோழ மன்னன் ராஜசேனன் (கி.மு. 477) ஆதிசங்கர பகவத் பாதரை மிகவும் ஆதரித்து மடங்கள் கட்டித்தந்தான். காஞ்சி வரதராஜ ஸ்வாமி ஆலயத்தை ஆதிசங்கரரின் ஆணைப்படி புனர் நிர்மாணம் செய்தான். மண்டனமிசிரருடன் கூட வந்த அந்தணர்களுக்கு வீடுகள் கட்டித் தந்து (மண்டன மிசிரர் அக்கிரஹாரம்) விளை நிலங்களை தானம் செய்தான். ஆதிசங்கரர் பின்னர் கேரளம் சென்று (ராஜசேகரன் என்னும் சேர அரசன் காலத்தில்) அங்கு தங்கினார். சேர அரசன் ராஜசேகரன் மகன் சத்யவர்மன் சங்கரரிடம் உபதேசம் பெற்று வடமொழியில் பல நாடகங்கள் எழுதி அவருடைய ஆசி பெற்றான்.

ஆதிசங்கர பகவத்பாதர் காஞ்சியில் தங்கியிருக்கம் போது திருநெல்வே- - பத்தமடை என்னும் கிராமத்தி-ருந்து வந்த "மகாதேவன்" என்னும் சிறுவனுடைய மேதாவிலாஸத்தைக் கண்டு சாரதா பீடம், துவரகா பீடம், பூரி ஜகன்னாத பீடம், முத-யவற்றை ஸ்தாவித்தார். ஹரித்துவாரத்திலுள்ள சங்கர மடத்தில் அநேக மாணவர்கள் வேதம், அத்வைதத்தில் பயிற்சி பெற்று பௌத்த, சமண மதங்களை வெற்றி கண்டு வேதமார்க்கத்தை மீண்டும பாரதத்தில் நிலைநிறுத்தினார்.

## 40. கண்ணகி

கண்ணகி என்னும் பத்தினி தெய்வத்தின் வரலாற்றை கூறும் காவியம், "சிலப்பதிகாரம்". இது தமிழர்கள் போற்றும் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. (சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி முத-யன ஐம்பெருங்காப்பியங்கள்). சேரன், செங்குட்டுவன் என்னும் அரசனின் தம்பியாகிய இளங்கோவடிகள். (பௌத்த துறவியாகி எழுதியது), இவர் கி.பி. 113 முதல் கி.பி. 136 வரை வாழ்ந்ததாக கூறப்படுகிறது.

இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன் என்பவன் உதியன் சேரல் என்ற மன்னனுக்கும், வெளியின் வேண்மான் மகள் நல்-னிக்கும் பிறந்தவன். உதியன் சேரல் என்பவன், மகாபாரத காலத்தில் வாழ்ந்த பெருஞ்சோற்று உதியன் வழி வந்தவன். சேரர்களது நாடு பற்றி வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் 43வது சர்கம், 12ஆம் சுலோகத்தில்



"முரசீபத்தனம்" (முசிறிபட்டிணம்) என்னும் கடற்கரைப் பட்டிணம் பற்றி கூறுகிறது. (வராகமிஹிரர் பிருஹத் சம்ஹிதையில் இது "மரீசிபத்தனம்" என விவரிக்கப்படுகிறது). "சுள்ளி" எனப்படும் பெரியாறு கட-ல் கலக்குமிடத்தில் உள்ளது. ("தாலமி" கிரேக்க வரலாற்று ஆசிரியர் இங்கு வந்து இந்நகரம் பற்றி கூறியுள்ளார். முசிறி இருந்த இடத்தில் பிற்காலத்தில் தோன்றிய நகரம் மகோதை (கொடுங்கோளூர்) அல்லது குரங்கணூர் என்னும் வா-யின் பட்டிணம் "மாக்கோதை" என்னும் சேர அரசனால் கட்டப்பட்ட நகரம். (சம்ராட் அசோகனது கல்வெட்டில் கேரளபுத்திரர் பற்றி கூறப்பட்டுள்ளது).

சிலப்பதிகாரம், காடுகாண்காதை (18-வது அடி முதல் 22 அடி வரை) பஃறுளியாறு, பன்மலை அடுக்கம், குமரிக்கோடு பற்றி கூறப்பட்டுள்ளது. குமரி நாடு, பெருவள நாடு, ஒளிநாடு என்று மூன்று நாடுகளும், குமரி நாட்டி-ருந்த (ஏழ் மதுரை நாடு, ஏழ் குணகரை நாடு முத-ய) 49 நாடுகள் கட-ல் மூழ்கின என்றும் கூறப்பட்டுள்ளது.

இம்மாதிரி பல அரிய செய்திகளை "சிலப்பதிகாரம்" கூறுகிறது. இது ஒரு வரலாற்று நூல் ஆகும். இனி கண்ணகி என்னும் பத்தினி தெய்வத்தைப் பற்றி "சிலப்பதிகாரம்" கூறுவது வருமாறு:

சோழ நாட்டில், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் உள்ள காவிரிப் பூம்பட்டிணத்தில் (புகார்) மாசாத்துவன் என்னும் வணிகர் தலைவன் இருந்தான். இவனுடைய மகன் கோவலன். இவனுடைய மனைவி கண்ணகி (மாநாயக்கன் என்னும் வணிகன் மகள்). கோவலன் இந்திர விழாவில் நாட்டியமாடும் சித்ராபதி என்பவள் மகள் "மாதவி" மேல் மோகமுற்று அவளுடன் வாழ்ந்தான். கோவலனக்கு, மாதவிக்கும் மணிமேகலை என்னும் பெண்குழந்தை பிறந்து. கோவலன் சிலகாலம் மாதவியுடன் இருந்து பிறகு அவளுடன் ஒரு அற்ப காரணத்திற்காக சண்டையிட்டு தன்மனை திரும்பினான்.

கோவலன் தன் செய்கை பற்றி வருந்தி கண்ணகியுடன் வாழ்ந்து, பிறகு வணிகம் செய்ய விரும்பி, கண்ணகியின் சிலம்பு மற்றும் நகைகளை விற்க, பாண்டியர் தலைநகரமான மதுரையை அடைந்தான். அங்கே பொற்கொல்லர் தலைவனிடம் கண்ணகியின் பொற்சிலம்பைக் காண்பிக்க, அப்பொற்கொல்லன் கோவலனை தன் மனையில் இருத்திவிட்டு அரசனிடம் சென்று, அரசியின் பொற்சிலம்பை திருடிய கள்வனைப் பிடித்து விட்டேன் என்று கூறினான். உண்மையில் அப்பொற்கொல்லனே அரசியின் பொற்சிலம்பை திருடியவன். தான் தப்பிக்கவெண்ணி கோவலன் மீது திருட்டுப்பழியை சுமத்தினான். அரசன் நெடுஞ்செழியனும் உரிய விசாரணை செய்யாது, பொற்சிலம்பை திருடிய கள்வனை கொல்லுக எனவும்,

பொற்சிலம்பை கவர்ந்து வருக எனவும் ஆணையிட்டான். கோவலன், அரசு சேவகர்களால் கொலை செய்யப்பட்டான். சிலம்பு பாண்டியனிடம் அளிக்கப்பட்டது. கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு, கண்ணகி தன் கணவன் கள்வன் அல்ல எனக் கூறி தனது சிலம்பை உடைத்து அதில் மாணிக்க பரல்கள் இருப்பதைக் காட்டினாள். பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவியின் சிலம்பில் முத்துக்கள் இருந்தன.

பாண்டியன் தான் நீதி தவறியதை உணர்ந்து, சி ்ங்காதனத்திலேயே உயிர் விட்டான். கணவன் இறந்ததைக் கண்டு கோப்பெருந்தேவியும் உயிர்நீந்தாள். பின்பு கண்ணகி மதுரையை விட்டு நீங்கி சேர நாடு சென்று நெடுவேள் குன்றம் அடைந்து ஒரு வேங்கை மரத்தினடியில் பதினைந்து நாள் விரதமிருந்து, தெய்வ வடிவோடு வந்த கோவலனுடன் வானுலகு ஏகினாள்.

கண்ணகி தனது கோவலனுடன் தெய்வ வடிவுடன் வானுலகு சென்றதை கண்ணுற்ற வேட்டுவ குல மக்கள், சேரன் செங்குட்டுவனுக்கு தகவல் கூற, சேரன் கங்கை சென்று, இமயத்தி-ருந்து எடுத்து வந்த கல்லை புனித நீராட்டி, சேர நாடு கொண்டு வந்து நெடுவேள் குன்றத்தில் சிலை அமைத்து கோயில் கட்டி வழிபட்டான். இக்கோயில் தமிழ்நாடு, கேரள எல்லையுள் இன்றும் உள்ளது. மக்கள் பத்தினி தெய்வத்தை இன்றும் வழிபடுகின்றனர்).

(இனி மாதவிக்கும், கோவலனுக்கும் பிறந்த மணிமேகலையின் கதையைப்பற்றி கவனிப்போம்).

தமிழர்கள் போற்றும் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று "மணிமேகலை" . இக்காப்பியத்தை இயற்றியவர் சீத்தலை சாத்தனார் என்னும் தமிழ்புலவர். பௌத்த மதம் தழுவியவர். சேரன் செங்குட்டுவன் காலத்தவர்.

கோவலன் கொலையுண்ட பிறகு மாதவி தனது மகள் மணிமேகலையுடன் பௌத்த மடாலயம் பௌத்த பிக்ஷுணியானாள். அங்கு அறவண அடிகள் என்னும் சன்யாசினி அரவணைப்பில் மணிமேகலை வளர்ந்து பெரியவள் ஆனாள். மணிமேகலையின் அழகைக் கண்டு சோழன் கிள்ளிவளன் (மனைவி சீர்த்தி) மகன் உதயகுமாரன் காதலுற்றான். உதயகுமாரனிடமிருந்து தப்பிக்க மணிமேகலை ஒரு பூஞ்சோலையின் நடுவேயுள்ள பளிங்கு மண்டபத்தில் ஒளி ்ந்து கொண்டாள். அங்கிருந்து மணிமேகலா தெய்வம் அவளைத் தூக்கிக் கொண்டு மணிபல்லவம் என்னும் தீவிற்கு கொண்டு சென்றது.

"மணிபல்லவம்" என்னும் தீவு பூம்புகார் என்னும் துறைமுகத்திற்கு தெற்கே இரத்தினத் தீவுக்கு (இலங்கை) கிழக்கே,



சாவகத் தீவுக்கு (ஜாவா) வடக்கேயும் இருந ்தது. இவ்விடத்தில் ஒரு புத்த பீடிகையும் இருந்தது. பூம்புகார் மற்றும் பல தீவுகளை கடல் கொண்ட போது இத்தீவும் மூழ்கியது.

மணிமேகலை, மணிபல்லவம் என்னும் தீவில் உள்ள புத்த பீடிகையை தரிசி ்த்ததால் தனது முற்பிறப்பை அறிந்தாள். அத்தீவி ்ன்காவல் தெய்வமான தீவதிலகையின் உதவியால், கோமுகி என்னும் பொய்கை அடைந்து, அங்கே ஆபுத்திரன் என்பவனால் விடப்பட்ட அமுதசுரபி (அள்ள-அள்ள குறையாத உணவுப் பாத்திரம்) -யைப் பெற்று மீண்டும் புகார் நகரை அடைந்தாள்.

(ஆபுத்திரன் என்பவன் சா- என்னும் பிராமணப் பெண்ணால் அனாதையாக்கப்பட்ட குழந்தை, இதற்கு தினமும் ஒரு பசு பால் கொடுத்து காப்பாற்றியது. பிறகு ஒரு அந்தணன் அக்குழந்தையை எடுத்து வளர்த ்து வந்தான். ஆபுத்திரனுக்கு, மதுரையில் உள்ள சிந்தாதேவி (கலைமகள்) பிரஸன்னமாகி ஒரு அமுதசுரபி அளித்தாள். அதை வைத்துக்கொண்டு அவன் ஏழைகள் பசியை ஆற்றினான். பின்னர் மணிபல்லவம் தீவு வந்து அமுதசுரபியை கோமுகியில் விட்டு உயிர்நீத்தான்) .

மணிமேகலை அந்த அமுதசுரபியை வைத்துக் கொண்டு, ஏழைகளுக்கு அன்னதானம் செய்தாள். மீண்டும் கிள்ளவளவன் என்னும் சோழ மன்னன் உதயகுமாரன், மணிமேகலையின் மேல் மோகம் கொண்டு பின்தொடர்ந்தான். மணிமேகலை வேறு பெண் உருக்கொண்டு, உதயகுமாரனிடம் வாழ்க்கை நிலையாது எனஉபதேசிக்க அப்பெண்ணிண் கணவன்உதயகுமாரன் மீது கோபம் கொண்டு அவனைக் கொலை செய்துவிட்டான். இதன் காரணமாக மணிமேகலை சிறையிலடைக்கப்பட்டாள். பின்பு இராசமாதா சீர்த்தியின் உதவியால் விடுவிக்கப்பட்டு, சாவக நாடு சென்று புண்ணியராசன் (நாகபுரம்-அரசன்) நாட்டைஅடைந்து, அவனோடு மணிபல்லவம் தீவு சென்று அவனது முற்பிறப்பை உணர்த்தினாள்.

காவிரிபூம்பட்டினம், கடல் கொண்ட சேதி அறிந்து, மணிமேகலை சேரர்களின் தலைநகர் வஞ்சியை அடைந்து அங்கிருந்து சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்ட பத்தினித்தெய்வம் - கண்ணகியை தரிசித்து, அங்கிருந்த தனது தாய் மாதவி, மாசாத்துவான், அறவண அடிகளைக் கண்டு அங்கிருந்து "தொடுகழல்கிள்ளி" என்னும் காஞ்சி சோழ அரசனின் தலைநகர் சென்று பசியால் வருந்திய உயிர்க்கெல்லாம் ் உணவளித்து, தவம் செய்து வானுலகம் ஏகினாள்.

(இக்காவியத்தில் பல வரலாற்றுக் குறிப்புகள் அடங்கியுள்ளன. பாரத தேசத்தில், காந்தகார்(ஆப்கானிஸ்தான்) மற்றும் பல இடங்களில்

ஏற்பட்ட பூகம்பங்கள், கடல் கொந்தளிப்பு, பேரழிவு முத-ய பல செய்திகள் உள்ளன. இந்த நிகழ்ச்சிகள் கி.பி.136-இல்நடைபெற்றன எனக் கொள்வது பொருந்தும்.

கடைச்சங்கம் அழிவுக்கும் இந்த இயற்கை சீற்றங்கள் காரணமாக இருக்கலாம். இதனால் மக்கள் இடம் பெயர்ந்து சேர, சோழ, பாண்டிய அரசுகள் நிலைகுலைந்தன எனக் கொள்வது பொருந்தும்) .

## 41. இந்திர விழா

தேவர்களுக்குத் தலைவன் இந்திரன். தேவர்கள் 33 கோடி பேர்கள்.(ஆதித்யர்கள் 12 கோடி, ருத்திரர்கள் 11 கோடி, வசுக்கள் 8 கோடி, அஸ்வினி தேவதைகள் 2 கோடி) வேதங்களில் இந்திரனுக்கு, அக்னி மூலம் செய்ய வேண்டிய பிரார்த்தனை வேள்விகளில் ஓதுக்கப்பட வேண்டிய மந்திரங்கள் கூறப்படுகின்றன. இந்துமதம் மட்டுமின்றி புத்த மதத்திலும் இந்திரன் போற்றப்படுகிறான்.

எட்டுத் தி`க்கிலும் உள்ள தேவர்களில், இந்திரன் கிழக்கு திசைக்கு அதிபதி. (கிழக்கு - இ`ந்திரன், தென்கிழக்கு - அக்னி, தெற்கு - யமன், தென்மேற்கு - நிருதி, மேற்கு - வருணன், வடமேற்கு - வாயு வடக்கு - குபேரன், வடமேற்கு - ஈசானன்) .

புராணங்களின்படி தற்போது ஏழாவது மன்வந்திரம் என்னும் வைவஸ்வத மன்வந்திரம் நடைபெறுகிறது. ஒவ்வொரு மன்வந்திரத்திற்கும் வேறு வேறு இந்திரன் ஆட்சி செய்தனர்.

முதல் மன்வந்திரமான சுயம்பு மன்வந்திரத்தில் - காஸ்யப ரிஷிக்கும் அதிதி என்பவளுக்கும் 1. தாதுமித்திரன். 2. அர்யமான், 3. சக்கரன் (சக்கரன் என்பவன் இந்திரன்), 4. வருணன், 5. அமிசுபகன், 6. ருதுவன், 7. விவஸ்வான், 8. பூஷன், 9. சவித்ரன், 10. துவஷ்ட்டா, 11. விஷ்ணு, 12. மார்த்தாண்டன் என பன்னிரண்டு ஆதித்யர்கள் (அதிதிபுத்திரர்கள்) பிறந்தனர். இதில் 3வதாக கூறப்பட்ட சக்கரனே முதல் இந்திரன்.

**சூரிய வம்சம்**

மேருமலைத் தொடர் உள்ள குமரிக்கண்டத்தில், மணிமலை என்னும் மலை வாசஸ்தலத்தில் "ஒளிச்செங்கோ" என்னும் சோழ அரசன் எற்படுத்திய தமிழ்சங்கத்து தலைவனாக இருந்தவன் "சக்கரன்". இதற்குப் பின் நடந்த தமிழ் சங்கங்களிலும் "இந்திரன்" தமிழ்சங்க உறுப்பினராக இருந்தான். இந்திரன் எழுதிய தமிழ் இலக்கணநூல் "ஐந்திரம்" எனப்படும். இதில் பின்னர் தமிழ் இலக்கணம் வகுத்த தொல்காப்பியன் சிறந்தவனாக இருந்தமையால்



அவன் "ஐந்திரம் - நிறைந்த தொல்காப்பியன் " எனப்பட்டான். தமிழ் சங்கத்தில் இந்திரன் இயற்றிய தமிழ் நூல் "இந்திர-காளீயம்" எனப்படும்.

இனி, ஏழு மன்வந்திரங்களில் வாழ்ந்த இந்திரனின் பெயர்கள் கீழே தரப்படுகிறது :-

| | | |
|---|---|---|
| 1. சுவயம்பு மநு | - | சக்கரன் |
| 2. சுவரோஷிஷ | - | விபச்சித் |
| 3. உத்தமன் | - | சுசாந்தி |
| 4. தாமசன் | - | சிபி (சோழ அரசன்) |
| 5. ரைவதன் | - | விபு |
| 6. சாக்ஷுூஸன் | - | மனோஜவன் (பாண்டியன்) |
| 7. வைவஸ்ஸுூதன் | - | புரந்தரன் |

மேலும் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்தவனை சப்தரிஷிகள் இந்திர பதவியில் அமர்த்துவர். சந்திர வமிசத்து யயாதி என்னும் அரசன் வழியில் வந்தவன் நகுஷன் என்னும் அரசன். இவன் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்து இந்திர பதவியை ஏற்கும்போது, சப்தரிஷிகள் பல்லாக்கு சுமந்தனர். குள்ளமான் அகஸ்தியரை வேகமாகப் போ (சர்ப்ப... சர்ப்ப) என நகுஷன் விரட்ட அகத்தியர் நகுஷனை பாம்பாகப் போகும்படி சபித்தார். பாண்டிய அரசனான "பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதி" நூறு யாகங்கள் செய்ய முற்படும்போது சான்றோர்களால் தடுக்கப்பட்டான்.

இந்திரனுக்கு, தை மாதத்தில் "இந்திர விழா" கொண்டாடி வந்தனர் தமிழ் மக்கள். [போகி - இந்திரன்) பண்டிகை இன்னமும் கொண்டாடப்படுகிறது]. பூம்புகார் என்னும் காவிரித் துறைமுகத்தில் சோழ அரசன் "தூங்கு எயில் எறிந்த தொடிதோட் செம்பியன்" அகஸ்த்தியர் ஆணையின் பேரில் இந்திர விழா கொண்டாடினான்.

மஹாபாரத காலத்திலும் "இந்திர விழா" நடைபெற்று வந்தது. அப்போது பாரத தேசம் முழுவதிலும் தமிழ்வேதம் பரவியிருந்தது. பகவான் ஸ்ரீகிருஷ்ணன் இந்திரனை கொண்டாடுவதை தவிர்த்து இயற்கையை கொண்டாடும்படி வ-யுறுத்தினார். பின்னர் இந்திரன் மீது அவதூறான புராணங்கள் (அகல்யை என்னும் கௌதம முனிவர் மனைவியை கெடுத்தவன், முகுந்தை என்னும் மௌத்கல்ய முனிவரின் மனைவியை கெடுத்தவன்) என எழுதப்பட்டன. இந்திர மதம் (ஐந்திரம்) அழியத்தொடங்கியது.

தேவர்கள் தலைவனான இந்திரனுக்கும், அரக்கர்கள், அசுரர்களுக்கும் அடிக்கடி போர் ஏற்படும்போதெல்லாம் மஹாவிஷ்ணு அவதாரமெடுத்து அசுரர்களையும், அரக்கர்களையும் கொன்று மீ`ண்டும் இந்திரனை சொர்க்கத்தின் தலைமைப் பதவியி`ல் அமர்த்தினார் என்று

புராணங்கள் கூறுகின்றன. மதுரை அரசி அங்கயற்கண்ணி (மீனாட்சி) மகன் உக்கிரகுமார பாண்டியன், இந்திரலோகம் சென்று இந்திரன் ஆசனத்தில் அமர்ந்து, முத்தாரம் பரிசு பெற்றவன்.

தலைச்சங்கத்தில் நிறுவிய "முருகவேள்", சூரபதுமன், தாருகன், சிங்கமுகன் போன்ற அசுரர்ர்களைக் கொன்று தேவ சேனாதிபதியாக நின்று இந்திரனை மீண்டும் பதவியில் அமர்த்தி, இந்திரனின் மகளான தேவயானையை திருப்பரங்குன்றத்தில் மணந்து கொண்டார் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீராமனின் தந்தையான தசரத சக்ரவர்த்தி இந்திரனுக்கு உதவியாக சம்பராசுரன் மீது போர் தொடுத்தார் என்று ராமாயணம் கூறுகிறது. சோழ அரசர்களும், பு-யாக மாறிய இந்திரன் மீது ஏறி அசுரர்களை வென்றனர் என்று தமிழ் புராணங்கள் கூறுகின்றன.(சோழர்கள் கொடி - பு-க்கொடி).

ஏறத்தாழ கி.மு.200-இல் பூம்புகாரில் இந்திர விழா கொண்டாடப்படாததால், நில நடுக்கம் ஏற்பட்டு - புகார் நகரத்தை கடல் கொண்டது என தமிழ் காவிங்கள் கூறுகின்றன. "மணிமேகலை" என்னும் தமிழ் நூ-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

கிள்ளிவளவன் பூம்புகார் அரசனாக இருந்தபோது நாக நாட்டு அரசன் வளைவண்ணன் என்பவனுக்கும், வாசமயிலை என்பவளுக்கும் பிறந்த பீ-வளை என்னும் நாக இளவரசியை கடற்கரையைச் சார்ந்த புன்னை மரச்சோலையில் கண்டு காத-த்து அவளுடன் உறவு கொண்டான்.பின்னர்"பீ-வளை"கிள்ளிவளவனிடம் சொல்-க்கொள்ளாமல் நாக நாடு திரும்பினாள். பிறகு பீ-வளை ஒரு மகனை ஈன்றாள். நாகநாடு வந்த கம்பளவணிகனிடம் அக்குழந்தையைக் கொடுத்து கிள்ளிவளவனிடம் சேர்ப்பிக்கும்படி கூறினாள். அவ்வணிகன் கப்ப-ல் குழந்தையை எடுத்துக்கொண்டு சோழநாடு வரும்போது புயல் வீசத் தொடங்கி கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு வணிகனும் குழந்தையும் கட-ல் முழ்கி இறந்தனர். இச்செய்தி கேட்டு கிள்ளிவளவன் வருத்தமுற்று "இந்திர விழா" கொண்டாவில்லை. இதனால் மணிமேகலா தெய்வத்தின் சாபமும், இந்திரனின் சாபமும் பூம்புகார் மற்றும் தென்னாட்டின் பல பாகங்களும் கட-ல் மூழ்கின.

இக்காலத்தில் சிங்களத் தீவில் "ஏலேல சிங்கன்"என்னும் சோழ மன்னன் ஆண்ட போது (கி.மு.205 முதல் கி.மு.161முடிய) கல்யாணி என்னும் தலைநகரி-ருந்து காகவனத்தீசன் என்னும் சிங்கள மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். கல்யாணி என்னும் தலைநகரி-ருந்து கடல் 7மைல் தொலைவில் இருந்தது. திஸ்ஸா என்னும் அரசன், நான்சீன் என்னும் பௌத்த ஆசிரியன் மீது சந்தேகம்



கொண்டு கொலை தண்டனை அளித்தான். இது பொறாத தெய்வம் (இராவணனது கொடுமையால் அவனுடைய 25 அரண்மனைளும் மன்னார்புரத்து பெரும்பகுதி நிலப்பரப்பும் கடல் கொண்டது போல) காகவனத்தீசன் ராஜ்யத்தில் ஒரு லக்ஷம் ஊர்களும் 970 வலைஞர் சிற்றுர்களும், 400 முத்துக்குளிப்போர் கிராமங்களும் மொத்த நிலப்பரப்பில் முக்காலே அரைக்கால் பகுதியை கடல் கொண்டது. மாதம்பை முத-ய சில ஊர்கள் கடற்கோளுக்குத் தப்பின.(ஆதாரம்- பௌத்தநுல்-இராஜாவளி).

காந்தார தேசத்தின் (Afganisthan)ஒரு பகுதியான பூர்வதேசத்தில் இடவயம் என்னும் தலைநகரி-ருந்து ஆண்ட அத்திபதி என்னும் அரசனின் பிரமதருமன் ஆட்சிசெய்தபோது சம்புத் தீவில் (பாரதத்தில்) பூகம்பம் ஏற்பட்டு, நாக நாட்டில் நானுறு யோசனைபரப்பும் வடக்கே உள்ள அவந்தி நகரமும் அழிந்தன.(ஆதாரம் - மணிமேகலை).

இந்த பூகம்பம், கடற்கோள் ஏற்பட்ட போது வாழ்ந்த அரசர்களும் அவர்களின் நாடுகளும் வருமாறு :

| | |
|---|---|
| 1. பூம்புகார் | நெடுமுடிக்கிள்ளி - இவன் மனைவி சீர்த்தி மகன் கிள்ளிவளவன் |
| 2. உறையூர் | இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி |
| 3. சேரநாடு | செங்குட்டுவன் |
| 4. பாண்டியநாடு | நெடுஞ்செழியன் |
| 5. ஆந்திரம் | புலுமாயி(சாதகர்ணி) |
| 6. சிங்களம் | பாதிக தீசன், நாசிக தீசன், காகவன தீசன் |
| 7. பாரசீகம் | வோல்காசீஸ் |
| 8. ஜாவா | தேவ வர்மன் (ஆபுத்ரன் மகன்) |
| 9. சாவகம் | பூமிசந்திரன் மகன் புண்ணியராசன் |
| 10. சம்பா | ஸ்ரீமாறன் |
| 11. ப்யூனான் | கௌண்டின்யன்(பிராமணன்) |
| 12. ரோம் | அன்டோனியஸ் பயஸ் |
| 13. ஆவந்தி | ருத்ரதாமன் |
| 14. ஆய்நாடு | அரண்மான்(தமிழன்) |
| 15. நாகநாடு | வளைவண்ணன் |
| 16. தொண்டை நாடு | திறையன் |
| 17. காஞ்சி | மணிமுடிச்சோழன், தொடுகழல்கிள்ளி மகன் இளங்கிள்ளி(புத்தர் கோயில் கட்டியவன் |
| 18. காந்தாரம் | கனிஷ்கன் மகன் குவிஷ்கன் |

19. இடவயம் அத்திபதி

(ஏறத்தாழ கி.மு.200-இல் பாரதமெங்கும் பூகம்பமும், கடற்கோள்களால் அழிவும், பெருமழை, புயல் முத-யவற்றால் பேரழிவு ஏற்பட்டது. இது இந்திரனுடைய சாபத்தால் ஏற்பட்டன என ஹிந்துக்களும், பௌத்தர்களும் நம்பினர்).

(பி.கு. : மத்திய தரைக்கடல் கரையருகே உள்ள "ரோட்"என்னும் தீவில் உலக அதிசயங்களில் ஒன்று என புகழப்படும் அக்நி தேவனது வெண்கலச்சிலை('260'உயரம் - இரண்டு கால்களின் உட்புற வழியில் அமைந்துள்ள படிகள் வழியாக ஏறி தலைப்பகுதி வரை செல்ல முடியும். இரண்டு கைகளாலும் பெரிய கப்பரை ஏந்தி நிற்கும். அதில் எப்போதும் நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். அச்சிலையின் இரண்டு கால்கள் வழியே கப்பல்கள் நுழைந்தால்தான் துறைமுகத்தை அடைய முடியும். எதிரி கப்பல்கள் இரண்டு கால்கள் வழியே நுழைந்தால், சிலையின் கைகளில் உள்ள கப்பரையி-ருந்து நெருப்பு விழுந்து கப்பல்களை தீக்கிரையாக்கும். இப்பெரிய சிலையும் பூகம்பத்தில் கீழே விழுந்து நொறுங்கியது) .

## 42. பாண்டியன்-புலத்தியன்

பாண்டிய நாட்டி-ருந்து கப்பல்கள் புறப்பட்டு கிரேக்க தேசம் யவன தேசம் முத-ய பல நாடுகளுக்கும், ஆப்பிரிக்கா கண்டத்து தார்சீஷ் துறைமுகங்களுக்கும் சென்று வாணிபம் செய்து வந்தன.

பெரும் வணிகனான பாண்டியன் புலத்தியன் என்பவன் யூதர்கள் நாட்டின் அரசன் (யூதேயா) ஹீராட் என்பவனின் நண்பனாக இருந்து, இஸ்ரேல் நாட்டின் சில பகுதிகளுக்கு ஆட்சிப் பொறுப்பில் (Governor) அமர்த்தப்பட்டான். அப்போது பெத்லகேம் என்னும் ஊரி`ல் ஜோசப் என்னும் தச்சுத் தொழிலாளி இருந்தான். இவனுக்கு மேரி என்னும் பெண்மணியை மணமுடித்தனர். திருமணத்திற்கு முன்பே கர்ப்பவதியாய் இருந்த மேரியை ஜோசப் வெறுத்தார். ஒரு நாள் கனவில் இறைவன் மேரி புனிதமானவள் என்றும் அவள் வயிற்றில் பிறக்கும் தேவகுமாரன் யூதர்களின் அரசனாகி, உலகம் போற்றுபவனாக இருப்பான் என்று கூறவே அவன் திரும்பவும் மேரியை அழைத்துக்கொண்டான்.

ஜோசப்பும் மேரியும் பெத்லகேமில் இருந்தபோது அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அப்போது வானத்தில் ஒரு வால் நக்ஷத்திரம் தோன்றி பெத்லகேமின் வானில் நிலை நின்றது. கீழைத் தேசத்தி-ருந்த மூன்று அரசர்கள் பிறந்த ஆண்குழந்தையைக் கண்டு வணங்கி பரிசளித்தனர். ஹிரோத் அரசனின் சோதிடர்கள் வானில் வால் நக்ஷத்திரம் தோன்றுவதால் அன்று பிறந்த குழந்தைகளால் அரசன் அழிந்து போவான் என ஜோதிடம் கூறினர். அதுகேட்டு ஹீரோது அரசன் அன்று பிறந்த குழந்தைகளை கொன்று விடும்படி உத்தரவிட்டான். ஜோசப்பும் மேரியும் குழந்தையை துக்கி`க் கொண்டு எகி`ப்து தேசத்திற்கு தப்பிச் சென்று அங்கு குழந்தையை வளர்த்தனர். அக்குழந்தையின் பெயர் இம்மானுவேல் (ஈசாயா) என்று பெயரிட்டு வளர்த்து தச்சுத்தொழி-ல் ஈடுபடுத்தினர்.



கப்பல்களில் தச்சு வேலை செய்த ஈசாயா ஒரு கப்ப-ல் புறப்பட்டு பாண்டிய தேசம் மற்றும் நூற்றுவர் கன்னர்களின் ஆந்திர தேசம், மகத தேசம் முத-ய தேசங்களை சுற்றிப் பார்த்து, நாலந்தா கல்விச் சாலையில் பௌத்தப் பள்ளியில் சில காலம் பயின்று மீண்டும் மயிலை வந்து மயிலை நாதர் என்னும் சமண மதம் பற்றி தெரிந்து கொண்டு, பின்பு சிவயோகிகளை தரிசித்து யோக சித்திகளைக் கற்று மீண்டும் எகிப்து தேசம் சென்று தாய் தந்தையுடன் கூடி இஸ்ரவேலர் தேசம் அடைந்து நாசரேத்து என்னுமிடத்தில் வந்து தங்கினர். தந்தை ஜோசப் இறந்த பிறகு "ஜான்"என்னும் தீர்க்கதரிசியிடம் ஞானஸ்நானம் பெற்று மதபோதகர் ஆனார்.

இஸ்ரவேல் தேசத்தில் மதபோதகராயிருந்த ஈசாயா என்னும் "கிறிஸ்த்து"தவறான மதப்பழக்கவழக்கங்களை கண்டித்தும், பௌத்த, சமண வாதங்களை கண்டித்தும் பொது மக்களிடம் உபதேசம் செய்வித்தும் அநேக அற்புதங்கள் செய்து காட்டியும் மக்களை கவர்ந்தார். இவர் செல்லுமிடங்களில் எல்லாம் மக்கள் கூட்டம் பெருகிற்று. இவருக்கு பீட்டர், அந்திரேயா, ஜாக்கப்பு, யோவான், பி-ப்பு, பார்த்தலோமியு, தாமஸ், மேத்யு, லப்பேயு, சீமோன், யூதா, லூகாஸ் முத-ய சீடர்கள் பிரியமானவர்களாக இருந்தனர்.

அக்காலத்தில் "பார்படாஸ்" என்னும் புரட்சியாளன், ரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராக புரட்சி செய்தான். யூத மதகுருமார்கள் ஈசாயாவின்மேல் பொறாமை பொண்டு ஈசாயா தானே யூதர்களின் அரசன் என்று கூறுகிறான் எனக் குற்றம் சாட்டி, பாண்டியன் - புலத்தியனிடம் (பொன்டியு - பிலாத்து) புகார் கொடுத்தனர். பாண்டியன் ஈசாயாவைப் பார்த்தவுடன் அவர் குற்றமற்றவர் என்றும், பெரும்ஞானி என்றும் தெரிந்து கொண்டாலும், யூத குருமார்கள் வ-யுறுத்தியதி`ன்பேரில் சிலுவையில் அறையும்படி தண்டனை அளித்தான். ஈசாயா சிலுவையில் அறையப்பட்டபோது மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று கண்ணீர் விட்டனர். ஈசாயா சிலுவையில் அறையப்பட்டு, முள் கிரீடம் தலையில்அடிக்கப்பட்டு, "யூதர்களின் அரசன்" எனக்கே- எசய்யப்பட்டார். அவர் இறக்கும் வேளையில்"ஏ -! ஏ -! லாமா சபக்தானி ! (கடவுளே கடவுளே எனைக்

கைவிட்டாயே" எனக் கூவி இறந்தார். அவருடைய சடலம் அவருடைய தாய் மேரியிடம் கொடுக்கப்பட்டது. சமாதியில் வைக்கப்படட்டது. ஈசாயா தான் இறந்த மூன்றாவது நாளில் உயிர்த்தெழுந்து தனது சீடர்களுக்கு காட்சியளித்து, தனித்து புறப்பட்டு பாரத தேசம் வந்து காஷ்மீரம் அருகில் ஆஸ்ரமம் அமைத்து தவம் செய்து இறைவனடி சேர்ந்தார்.

கிறிஸ்த்துவின் ஆணைப்படி தாமஸ் என்னும் சீடர், இஸ்ரவேல் நாட்டி-ருந்து கப்பல் வழியாக ஈரான் தேசமடைந்து, அங்கிருந்து தென் பாரதம் பாண்டி நாட்டில் வந்து சில காலம் தங்கி, அங்கிருந்து புறப்பட்டு மயிலை வந்து வாழ்ந்தார். மயிலை கொல்வதற்காக ஒரு வேடன் விட்ட அம்பு இவர் மீது பாய மயிலை கடற்கரையில் உயிரிழந்தார்.

ரோம் சாம்ராஜ்யத்தில் புரட்சி ஏற்பட்டு, ஹிரோது மன்னன் கொலையுண்டான். யூதேயாவில் தங்கியிருந்த பாண்டியன் - புலத்தியன் குடும்பம் தப்பித்து, கடல் வழியாக கொற்கைத் துறைமுகம் வந்து சேர நாட்டில் தஞ்சம் புகுந்தான்.

(கிறிஸ்த்துவின் உபதேசங்களால் கிறிஸ்த்துவ மதம் ஏற்பட்டது. அவருடைய வாழ்க்கை ஒரு சகாப்தமாயிற்று. ஆண்டுகள் கணக்கிடப்படும்போது கிறிஸ்த்துவுக்கு முன்பு(கி.மு.) மற்றும் கிறிஸ்த்துவுக்கு பின்பு (கி.பி.) எனக் கணக்கிடப்பட்டது. கிறிஸ்த்துவ மதம் உலகெங்கும்் பரவிற்று. கிறிஸ்த்துவ தேவாலயங்கள் உலகெங்கும் கட்டப்பட்டு பழைய மதங்கள் அழிக்கப்பட்டு கிறிஸ்த்துவ மதம் பல கண்டங்களில் பரவியது) .

(பாரத தேசத்தில் தமிழர்களின் வரலாறு விரிவாக எழுதப்படாமையால் இனிவரும் அத்தியாயங்களில் தமிழர்கள் ஆட்சி, தமிழ் நாட்டு வரலாறு, தமிழகத்தில் பிறந்த மகான்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, விவரங்கள் சேகரிக்கப்பட்டு தரப்பட்டுள்ளன) .

## 43. திருவள்ளுவர்

உறையூரில், பாண்டமங்கலத்தில் மண்மாரி பொழிந்து பேரழிவு ஏற்பட்ட பிறகு மக்கள் குடிபெயர்ந்து வடக்கே சென்று காஞ்சிபுரம், செங்கை, திருமயிலை முத-ய இடங்களில் குடியேறினர். தென்னாட்டி-ருந்து கங்கைக்கு நீராடச் செல்லும் அந்தணர் கூட்டம், உறையூர் வந்தபோது அனாதையாக விடப்பட்ட ஆதிரை (புலைச்சி) என்னும் சிறுமியை அழைத்துக்கொண்டு திருமயிலை அடைந்து, அங்கே உள்ள பெருஞ்சாகரன் என்னும் அந்தணன் மகனான யாளிதத்த பகவன் எனும் அந்தணனிடத்தில் ஆதி என்னும் அனாதைச் சிறுமியை விட்டுச் சென்றனர். தோட்ட வேலை செய்து வரும் வேளையில் ஆதி ஒரு நாள் பகவன் ஆஸ்ரமத்தில் நுழைந்து விடவே அங்குள்ளவர்கள் அவளை விரட்ட அவள் பயந்து ஓடி ஒரு கிணற்றில் விழுந்துவிட்டாள். கங்கை புனித நீராடி திரும்பி வந்த அந்தணர்கள் அந்த சமயம் அங்கு வரவே, ஆதியை காப்பாற்றி அழைத்துச்சென்று கல்வி கற்றுத் தந்து, திரும்பவும் மயிலை வந்து பகவனிடம் ஆதியை மணந்து கொள்ளும்படி கூறினர். அவர்களுடைய ஆணையை மீற முடியாமல் பகவன் ஆதியை மணந்து கொண்டான்.



ஆதியும் பகவனும் புனிதயாத்திரை மேற்பொண்டு, வழியில் ஆதி கர்ப்பமடைந்து குழந்தை பிறந்தால், பிறந்த ஊரிலேயே விட்டு விட்டு புனித யாத்திரையை மேற்பொள்ள வேண்டும் என முடிவு செய்தனர். இப்புனித யாத்திரையின்போது அவர்களுக்கு ஏழு குழந்தைகள் பிறந்தனர். அவர்களின் பெயர்கள் வருமாறு :-

| வ.எண் | குழந்தையின் பெயர் | ஊர் | இடம் |
|---|---|---|---|
| 1. | உப்பை | ஊத்துக்காடு | வண்ணார் வீடு |
| 2. | உறுவை | பூம்புகார் | கள் வினைஞர் வீடு |
| 3. | ஔவை | தஞ்சை(மேலூர்) | நரம்பிசைக் கருவிகள் செய்பவர் வீடு |
| 4. | வள்ளி | நாங்குநேரி | குறவர் கூட்டம் |
| 5. | வள்ளுவர் | திருமயிலை | பறையர்சேரி |
| 6. | அதியமான் | வஞ்சி | சேர அரசன்அரண்மனை |
| 7. | கபிலன் | திருவாரூர் | அந்தணர் வீடு |

வள்ளுவன் திருமயிலையில் பிறந்தபோது (மாசி, மீ, மகம், பௌர்ணமி, வியாழக்கிழமை) அவருக்கு இட்ட பெயர் வீர சம்புவன், ஒரு வேளாளர் அக்குழந்்தையை தத்து எடுத்து வளர்த்து ஐந்தாவது வயதில் ஒரு வேதியரிடத்தில் கல்வி கற்க அனுப்பி வைத்தார். பத்தாவது வயதில் கல்வி பூர்த்தியானதும் வேளாளர் ஆசாரத்தின்படி பூணூல் அணிவிக்கப்பட்டது. 10 வயது முதல் புராண பிரவசனங்கள்செய்தும் நெசவுத் தொழி-ல் ஈடுபட்டும் வந்தார். பிறகு திருவாலங்காடு சென்று அங்கு ஒரு ஆச்சார்யனிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று, மந்திர தந்திரவித்தைகள் கற்றார். பின்னர் காவேரிப்பாக்கம் என்னும் ஊர் அடைந்து மார்கசகாயர் என்னும் வேளாளர் வீட்டில் தொந்திரவு கொடுத்த ஒரு வேதாளத்தை விரட்டினார். மார்கசாயர் தனது பெண் வாசுகியை வீர சம்புவனுக்கு திருமணம் செய்து கொடுக்க விரும்பினார். வீர சம்புவன்இரும்புக்கடலையை வாசுகி சமைத்து உணவளித்தால் ஏற்பேன் என்றார். அங்ஙனமே வாசுகி இரும்புக்கடலையை சமைத்து உணவாகப் பரிமாறினாள். உண்மையான கடலையாகி உணவாக மாறிய

அதிசயத்தைக் கண்டு வீர சம்புவன் வாசுகியை மணந்தார். பின்பு மயிலை வந்த ஏலேலேசிங்கன் என்னும் வணிகனிடம் நூல் வாங்கி துணிகள் நெசவு செய்து தொழில் செய்தார். கைலாசத்தில் பிரதோஷ காலத்தில் சிவபெருமான் நாட்டியம் ஆடும்போது, காதி-ருந்து கழன்று விழுந்த குழையை கால்விரலாலே எடுத்து ஊர்த்துவ தாண்டவமாடி காதில் குழையை மாட்டிக் கொண்டார். இக்காட்சியை வீரசம்புவன் தனது மனக்கண்ணால் தரிசித்து ஆனந்தம் அடைந்தார்.

ஏலேலசிங்கன் பெரும் தனவந்தனாகி, கப்பல்கள் வாங்கி வாணிபம் செய்து பொருளீட்டினான். ஏலேலசிங்கனுடன், வீரசம்புவன் கப்பல்களில் சென்று பலதரப்பட்ட மதவாதிகளை சந்தித்தார். பின்னர் மதுரை சென்று உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன் அவையில் அமைச்சரானார். கானப்பேரெயில் அரசன் வேங்கைமார்பனுடன், பாண்டியன் உக்கிரப்பெருவழுதி போரிட்ட போது அவனது வெற்றிக்கு பல யோசனைகள் கூறி வெற்றி பெறச் செய்தார். உக்கிரப்பெருவழுதி, வீரசம்புவன் மீது மிகுந்த மரியாதை கொண்டு, வெற்றி பெற்ற நாஞ்சில் நாட்டுப்பகுதிக்கு 'வள்ளுவ நாடு' எனப்பெயரிட்டு, சிற்றரசனாக்கனான்.

பின்னர் அரசுப்பொறுப்புகளி-ருந்து விலகி, புலவர்களிடம் சேர்ந்து மதுரை அடைந்து, அழகானந்தர் என்னும் நண்பரி ன் ஆலோசனையின் பேரில் பல நூல்கள் எழுதினார். ஆனால் தமிழ் சங்க உறுப்பினராகச் சேரவில்லை. தனது சகோதரி ஔவை எனவும், கபிலர் தனது சகோதரர் எனவும் அறிந்து தமிழில் பல நூல்கள் எழுதினார். அவர் எழுதிய நூல்கள் வருமாறு :

1. ஞானவெட்டி - 1500 பாக்கள்
2. நவரத்ன வைத்ய சிந்தாமணி - 800
3. பஞ்சரத்னம் -500
4. கற்பம் - 300
5. நாதாந்த திறவுகோல்- 100
6. கற ்ப சூத்திரம் - 50
7. முப்பூ சூத்திரம் - 200
8. மலைமகள் - 30
9. வாதசூத்திலம் - 16
10. சூட்சுமப் முப்பூ - 12
11. கௌனமணி(ஜோதிடம்) - 00
12. கைவல்யம்
13. குறள் - 1330

(கற்பம் - 300 இல் பிரவசன சாரம், பஞ்சாங்காதி சாரம், நிலம சாரம், சமய சாரம் முத-ய விளக்கங்கள் உள்ளன. திருக்குறள்



1330-ஐ தமிழ் சங்கப் புலவர்கள் ஏற்றறுக்கொள்ளவில்லை. ஔவையார், உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியனிடம் சென்று, பொற்றாமரைக் குளத்தில் சங்கப் பலகையில் திருக்குறளை வைக்க அது மூழ்காமல் இருந்ததால் அது சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது).

அதன் பிறகு தனது நண்பர் திருத்தக்க தேவர் என்பவருடன் சேர்ந்து ஆருக மதம் பற்றி அறி ந்து கொண்டு, சீவக சிந்தாமணி என்னும் காவியம் எழுத திருத்தக்க தேவருக்கு உதவி செய்தார்.

பின்னர், ரலாச்சாரியார் (குந்த குப்தர்) வந்தவாசி தாலுக்கா பொன்னூர் மலையில் இருப்பதை அறி ந்து அவரிடம் தனது பழைய நட்பைக் கூறி அவரிடம் தங்கி பௌத்த சமயம் பற்றி அறி ந்து கொண்டார். திருமயிலை சென்று மயிலைநாதர் என்னும் சமணத் துறவியிடம் நட்பு பொண்டு சமண மதம் பற்றி அறிந்துகொண்டார். மேலும், அரேபிய வணிகர்களிடமிருந்து இஸ்மெயில் கூட்டத்தாரின் மதம் பற்றியும், யூதர்களின் தூதர் ஈசாயா தீர்க்கதரிசியின் உபதேசங்கள் பற்றியும் கேட்டு அறிந்தார். பின்பு மயிலையில் தனது மனைவி வாசுகியுடனும், மனைவி இறந்த பிறகு தனது நண்பன் ஏலேலசிங்கனுடன் வாழ்ந்தார். தனது நண்பனிடம் தான் இறந்த பிறகு புதைக்காமல், எரிக்காமல் தனது சவத்தை வெட்டி துண்டாக்கி பக்ஷிகளுக்கு இரையாக ஆகாயத்தில் எறியும்படி கூறி மாசி மீ உத்திர நக்ஷத்தில் முக்தியடைந்தார். அவரது மாமிசத்தை உண்ட பக்ஷிகள் தங்கமயமாக மாறி பறந்து சென்றன. (திருவள்ளுவர் காலம் கி.மு. 32 முதல் கி.பி.53 வரை)

“திருக்குறள்”என்பது தரும நீதி நூல். இதில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், என மூன்று பாலாகவும், இல்லறவியல், துறவறவியல், அரசியல், அங்கவியல், ஒழிபியல், களவியல், கற்பியல் என ஏழு இயல்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நூலுக்கு தருமர், மணக்குடையர், தர்மதத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையார், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் முத-யோர் உரை செய்துள்ளனர். இதில் பரிமேலழகர் உரையே சிறப்பாக அமைந்துள்ளது.

பரிமேலழகர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த ஸ்மார்த்த வேதியர். இவர் வடமொழி, தமிழில் புலமை மிக்கவர். காஞ்சி சோழனிடம் திருக்குறளுக்கு உரை எழுதியதாகக் கூற, இரும்பை பழுக்க காய்ச்சி இடிக்கும் பரி (இரும்பு அம்மி) மேல் நின்று கூறவும் எனப் பணித்தான். அங்ஙனமே அவர் அரசர்க்கு பரிமேல் இருந்து திருக்குறள் உரையைப் படித்துக்காட்டியதால் “பரிமேல் அழகர்”எனப்பட்டார். இவர் மதுரைக்கு அருகிலுள்ள ஒக்கூர் சென்று, நச்சினார்க்கினியனாரிடம், திருக்குறள் உரையை படித்துக் காண்பிக்க அவர் பாராட்டுதல்கள் பெற்றார். இவர் ஒரு தமிழ்க்கடல். பரிமேலழகர் உரையில் ஆங்காங்கு திருக்கோவையார்

சிலப்பதிகாரம், மணிமேகலை, நாலடியார், சீவகசிந்தாமணி முத-யவற்றில் உள்ள கருத்துக்களை உதாரணம் காட்டியுள்ளார்.

பரிமேலழகரின் ஆசிரியர் நச்சினார்க்கினியனார். மதுரைவாசி, பரத்வாஜகோத்திரத்து அந்தணர். இவர் பௌத்த நூல்களைப் படித்து "சீவகசிந்தாமணி" என்னும் காவியத்திற்கும், குறுந்தொகை முத-ய பல நூல்கட்கும் உரை செய்துள்ளார். சைவ பிராமணர் நச்சினார்க்கினியனார் செய்த தமிழ்த்தொண்டு போற்றுதற்குரியது) .

## 44. ஔவையார்

ஔவையார், ஆதிரைக்கும் பகவன்(யாளிதத்தன்) என்பவர்களுக்கு மகளாக, தஞ்சையில் வசித்து வந்த பாணர் என்னும் நரம்பிசைக் கருவிகள் செய்பவர் வீட்டில் பிறந்தார். இவர் திருவள்ளுவர்(வீர சம்புவன்)-இன் தமக்கையாவார். இவர் பாணன் வீட்டில் வளர்ந்து ஆடல், பாடல் முத-யன கற்று சிறந்து விளங்கினார். பிள்ளையர்ா மீது பக்தி கொண்டிருந்தார். சிறு வயது முதலே தமிழ் புலவர்களிடம் பாடம் படித்து சிறந்த கவிதைகள் பாடும் புலமை பெற்றிருந்தார். இவருக்கு திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட விருப்பமில்லாது இருந்தது. வளர்ப்புத்தந்தையான பாணர், இவருக்கு மணமுடிக்க ஒரு வரனைத் தேர்ந்தெடுத்து வீட்டிற்கு வரவழைக்க, இவர் விநாயகரை வேண்டித் துதிக்க, வந்திருந்த இளைஞன் கண்ணுக்கு இவர் கிழவியாகத் தோற்றமளித்தார். அவ்விளைஞன் எனக்கு இக்கிழவி வேண்டாம் என்று கூறிச் சென்றுவிட அதி-ருந்து இவருக்கு "ஔவை" எனக் கே-ப் பெயர் சூட்டப்பட்டது. இவர் தமிழ் புலவர்கள் கூட்டத்துடன் சேர்ந்து , சோழ நாடு, பாண்டிய நாடு முத-ய நாடுகளையும் தமிழ்நாடு முழுவதுமுள்ள ஊர்களிலும் தனியே சென்று, பெரும் அனுபவம் பெற்று, மக்களிடம் பெரும் செல்வாக்கு பெற்ற புலவராகத் திகழ்ந்தார்.

இவர் காலத்து வாழ்ந்த அரசர்கள் சேரன் அதிகமான் நெடுமான்அஞ்சி(ஔவையின் சகோதரர்) . அஞ்சியின் மகன் பொருட்டெழினி. மலையமான் திருமுடிக்காரி. இவன் மகன் தெய்வீகன். சேரமான் மாவெண்கோ, சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, கிள்ளிவளவன், தொண்டைமண்டலத்திலுள்ள வங்காள-திரையர், சீனத்திரையர், கடாரத்திரையர், சிங்களத்திரையர், பல்லவத்திரையர்களின் அரசன் தொண்டைமான் திரையன் முடியன் கொண்கானத்து நன்னன், கடையெழுவள்ளல்களில் (பாரி, ஓரி, நள்ளி, எழனி, ஆய், பேகன், மலையமான்) ஒருவனாகிய பாரிவேள், இளவிச்சிக்கோ, இருங்கோவேள், நாஞ்சில் நாட்டு வள்ளுவன், சேரமான் பெருமாள் முத-யோர்.



சேலம்-கோவைக்கு மேற்கே தகடூர் என்னும் ஊர் உள்ளது. இவ்விடத்தில் பறம்பு மலையில் கோட்டை கட்டி ஏறத்தாழ முந்நூறு ஊர்களில் ஆட்சி செய்தவன் பாரி. இவனது நண்பர் புலவர் கபிலர்(ஔவையின் சகோதரர்) . பாரி, தமிழ் புலவர்களால் மூவேந்தரிலும் சிறந்தவர் எனப் பாடப்பெற்றான். இது கண்டு பொறாத மூவேந்தரும் பாரியின் நாட்டைக் கைப்பற்ற முற்றுகை இட்டனர். கபிலரின் உதவியால் முற்றுகை தோல்வியுற்றது. மூவேந்தரும் புலவர்கள் போல் வேடமிட்டு, கோட்டைக்குள் புகுந்து பாரிவேளைக் கொன்றனர். பாரியின் பெண்களான அங்கவை, சங்கவை என்னும் இருவரையும் அழைத்துக்கொண்டு கபிலர் தப்பிச் சென்று திருக்கோவலூரில் உள்ள அந்தணர்களிடம் அவர்களைப் பாதுகாக்கும்படி விட்டுச் சென்றார். இச்செய்தி கேட்டு ஔவை அங்கு வந்து மலையமான் திருமுடிக்காரியின் மகன் தெய்வீகனுக்கு மணம் பேசி முடித்து, சேர, சோழ, பாண்டிய மன்னர்களை சமாதானப்படுத்தி, அவர்களையும் திருமணத்திற்கு வரவழைத்து முன்நின்று நடத்திக் கொடுக்கச் செய்தார்.

அரிய - நெல்-க்கனியை அதிகமான் நெடுமான் அஞ்சியிடம் பெற்று நீண்ட நாள் உயிர் வாழ்ந்தார். முருகவேள், கணபதி, சிவன், உமை முத-ய தெய்வங்களுடன் நேரில் பேசியவர். திருவள்ளுவரின் திருக்குறளை தமிழ்சங்கத்தி்ல் அரங்கேறச் செய்ய உதவியவர். "அணுவை துளைத்து ஏழ் கடலை"- என்னும் சொற்றொடரினாலும், "அணுவுக்கணுவாய்" -விநாயகர் அகவல்- என்னும் சொற்றொடரினாலும் ஔவையாருக்கு அணு வி்ஞ்ஞானம் தெரிந்துள்ளது என்றும் கூறலாகும். இவருக்கு முன்பு வாழ்ந்த திருமூலரும் "அணுவைச் சத கூறிட்ட கோணிலும்"(1/100) என்று கூறுவதால் அணுவை நூறு பங்காக பிரிக்க முடியும் என்றும் அணு விஞ்ஞானம் தமிழர்களுக்கு கி.பி. 1-ஆம் நூற்றாண்டிலேயே தெரிந்திருந்தது என்று கூறலாகும். இவர் செய்த நூல்கள் வருமாறு:

விநாயகர் அகவல், ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, அசதி்க்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ் மாலை, தரிசனப்பத்து, பந்தனந்தாதி, நான்மணிமாலை, ஞானக்குறள் மேலும் ஆயிரக்கணக்கான தனிப்பாடல்க்ள.

(ஔவையாருக்கு, தஞ்சைக்கு அருகே வளவனாற்றுக் கரையில் திரு-இடும்பாவனம் என்ற ஊருக்கு கீழ்திசையில், துளசியார்பட்டி என்னுமிடத்தில் ஒரு கோயில் உள்ளது. இவரது சகோதரி உப்பையின் விக்ரஹமும் அங்கு உள்ளது) .

## 45. திருதக்கதேவர்

தமிழர்கள் போற்றும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான "சீவக சிந்தாமணி" என்னும் காவியத்ததைப் படைத்தவர் இவர். திருவள்ளுவருடன் சிலகாலம் மயிலையில் வாழ்ந்தவர். இவர் சோழ அரசர் குலத்தில் உதித்தவர். ஆருகத சமயத்தை பின்பற்றி வாழ்ந்து துறவு பூண்டவர். மதுரை தமிழ்ச்சங்கப் புலவர்களிடம் நட்பாக இருந்தவர்(சங்கப் புலவர் அல்லர்) சங்கப் புலவர்கள் இவரை "காமநூல் " பற்றி எழுதும்படி கே- செய்ய, தனது ஆசிரியரிடம் சென்று ஆசி பெற்று, எட்டு நாட்களில் "சீவக சிந்தாமணி" என்னும் நூலை சூட்டுக் கோலை, கையால் பிடித்து தான் உண்மையான துறவியே என்று நிரூபணம் செய்தார். இவர் எழுதிய "சீவக சிந்தாமணி" கதை வருமாறு :

ஏமாங்கத நாட்டு அரசின் தலைநகரமான இராசமாபுரத்தின் அரசன் சச்சந்தன். இவன் மனைவி விஜயை. இந்த நாட்டின் மீது கத்தியவார் அரசன் கட்டியங்காரன் படையெடுத்து வந்து சச்சந்தனைக் கொன்றான். கர்ப்பவதியாய் இருந்த "விஜயை" ஒரு மயில்பொறி மீது பறந்து சென்று தப்பித்து, சுடுகாட்டில் ஒளிந்து கொண்டிருக்கையில்"சீவகன்" என்னும் மகனைப் பெற்றுவிட்டு இறந்தாள். கந்துக்கடன் என்னும் ஒரு வணிகன், சீவகனை எடுத்து வளர்த்து பெரியவனாக்கினான். சீவகன் உயிரோடு இருப்பதை அறிந்து கட்டியக்காரன் அவனைக் கொல்ல வருவதை அறிந்து, சீவகன் தப்பி வேறு நாடு சென்று காந்தர்வத்ததை, குணமாலை, பதுமை, கேசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, லக்ஷ்மணை முத-ய இளவரசிகளை மணந்து, அரசனாகி கட்டியக்காரனைக் கொன்று, நாட்டைக் காத்து சச்சந்தன், சுதஞ்சணன், தரணி, கந்துக்கடன், விஜயன், தத்தன், பரதன், கோவிந்தன் முத-ய பிள்ளைகளைப் பெற்று பின் முக்தியடைந்தான்.

ஆருகத சமயம் என்பது வடபாரதத்தில் பாடலீபுத்திரம் என்னுமிடத்தில் வாழ்ந்த ஆருகதன் என்பவனால் தோற்றுவிக்கப்பட்டது. இவன் ஜைன மதத்தைக் கண்டித்தவன். உருவமில்லாத 'அருகனே' சர்வக்ஞன். எக்காலத்திலும் சத்தியமாக இருப்பவன். காம, காஞ்சனம் பற்றிய ஆசையை விடுத்து, நற்கருமங்களை செய்தலே சிறந்தது எனப் போதித்தது இம்மதம். இம்மதத்தின் சந்நியாசிகள் பிக்ஷையேற்று உண்பர். சிவப்பு நிற வஸ்த்ரம், வெள்ளை நிற வஸ்த்ரம் அணிபவர்கள். சிலர் ஆடையில்லாத திகம்பரர். தலை மயிரை கையால் பிடுங்கி மொட்டை அடித்துக்கொள்பவர்'. கையில் கமண்டலம் எடுத்துச்செல்பவர்கள்.



இளவயதிலேயே (திருமணம் செய்துகொள்ளாமல்) நைஷ்ட்டிக பிரமசாரியாக இருந்து துறவு கொள்பவர்கள். (இம்மதத்தின் கொள்கைகள் பின்னர் சீக்கிய மதத்திலும், இஸ்லாத்திலும் நுழைந்தது).

## 46. வளையாபதி

இது கடைச்சங்க காலத்து காப்பியம். இதை இயற்றிய ஆசிரியர் பெயர் கூற முடியவில்லை. இது காத்தவராயன் கதையே என்றும் கூறுவர். காத்தவராயன் கதை வருமாறு :

நவகோடி நாராயணஞ் செட்டி என்பவர் வைர வாணிபம் செய்யும் மகரிஷி கோத்திரத்தான். இவனுக்கு இரண்டு மனைவி. இவன் கப்பல் மூலம் வாணிபம் செய்ய புறப்பட்டு சென்ற பிறகு, முத்தம்மை என்னும் காளியின் அருளினால் ஒரு மகனைப் பெற்றாள். பின்னர் வளர்ந்து பெரியவன் ஆன பிறகு, தந்தை நாராயணஞ்செட்டியிடம் சென்று தான் அவனுடைய மகன்தானென்று கூற அதை அவன் ஏற்க மறுத்து விடவே, காளி பிரத்யக்ஷமாகி சாக்ஷி கூறினாள். பின்னர் காத்தவராயன் வைர வாணிபம் செய்யும்போது, வங்கணச் சின்னான் என்பவனுடன் நட்பு கொண்டு அவனிடம் மந்திர தந்திர வித்தைகள் கற்று வடபாரதம் சென்று ஆரியமாலை என்னும் இளவரசியை மணந்துகொண்டான், பின்பு காவிரிபூம்பட்டினம் வந்து வண்ணான் மகள் வண்ணாரவல்-யையும் கந்தழகி செட்டி மகள் கறுப்பழகியையும் மணந்துகொண்டான். பின்னர் பாண்டிய தேசம் சென்று படைவீரர் தலைவன் ஆனான். சூது காரணமாக பாண்டிய அரசனிடம் செய்யாத குற்றத்திற்கு தண்டனை பெற்றான். ஏழைகளுக்கு உதவி செய்து அவர்களை காப்பாற்றி யதால் மக்கள் இவனை தெய்வ மகனாக கருதினர். இறந்த பிறகும் மக்கள் இவனை தெய்வமாக வழிபடுகின்றனர்.

## 47. குண்டலகேசி

குண்டலகேசி என்னும் காவியமும் கடைச்சங்கப் புலவரால் இயற்றப்பட்டதாக இருக்க வேண்டும். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது பௌத்த மதக் கருத்துக்களை கூறும் காப்பியம். குண்டலகேசி கதை வருமாறு :-

குண்டலகேசி என்பவள் ஒரு வைசியனுடைய மகள். இவளுடைய கணவன் காளன் என்பவன். ஒரு நாள் விளையாட்டாக காளனை, கள்ளன் என்று கூற, அதனால் கோபம் கொண்ட காளன்,

மலை வளம் காண தேரில் செல்வோமென அவளை அழைத்துக்கொண்டு மலைமீது ஏறி அவளை மலையி-ருந்து கொல்வேன் என்று சொல்ல, இறுதி ஆசையாக கணவனை மூன்று தரம் வலம் வந்து சாகிறேன் என்று குண்டலகேசி கூறினாள். பின்னர் வலம் வரும் சாக்கில் காளனை பின்னிருந்து மலை மீதிருந்து தள்ளி கொலை செய்தாள். பின்னர் வருந்தி, உஞ்சை மாநகரி-ருந்த அருக்க சந்திரன் என்பவனிடம் உபதேசம் பெற்று சந்நியாசினியாக மாறி பல மதவாதிகளை வென்று பௌத்த மதமே சிறந்தது எனக்கூறி வாதிட்டு வெற்றியடைந்து பின்னர் பரிநிர்வாணமடைந்தாள்.

## 48. நூற்றுவர் கன்னர்

ஆந்திர தேசத்தில் சேரன் செங்குட்டுவன் காலத்தில் சாதகர்ணி(நூற்றுவர் கன்னர்) அரசர்கள் ஆந்திரதேசம், மகத தேசம், கோசல தேசம், வரை ஆட்சி செய்தனர். ஆந்திர அரசர்கள், தமிழர்களுடன் நெருங்கிய நட்புடையவர்களாக இருந்தனர். பாரத வம்சாவளி பற்றி கூற முற்படும்போது ஆந்திர அரசர்கள் பற்றி கூறுவது அவசியமாகிறது.

பாண்டிய நாட்டில் நிலம் தருவிற் பாண்டியன் ஆண்டபோது, பாரதம் முழுதும் தமிழர்கள் பரவியிருந்தனர். ஒளிச்செங்கோ காலத்திலும், சோழர்கள் ஆட்சி பாரதமெங்கும் இருந்தது. மேரு பாண்டியன் காலத்திலும் ரிஷபதேவன் வழிவந்த பரதன் காலத்திலும் பாரதமெங்கும் தமிழர்கள் பரவியிருந்தனர். கடற்கோள் ஏற்பட்ட பிறகு ஆதிவராகன் தி`ருப்பதியி-ருந்து ஆட்சி செய்தான். பிறகு இரண்யகசிபு காலத்தில் ஆந்திரதேசத்தில் அசுரர்கள் ஆட்சி நடந்தது. நரசிம்மர் இரண்யகசிபுவைக் கொன்று, பிரகலாதனை முடிசூட்டினார். பிரகலாதன் வழியில் வந்த மஹாப- காலத்தில் வாமனர் அசுரர்கள் ஆட்சி`க்கு முற்றுப்புள்ளி வைத்தார். பரசுராமர் காலத்தில் ஆந்திர தேசத்தில் கார்த்தவீரிய அர்ஜுனன் ஆட்சி நடந்தது. பிறகு விருஷ்ணி குலம் பரசுராமரால் அழிக்கப்பட்டது. தசரத சக்ரவர்த்தி காலத்தில் ஆந்திர தேசத்தில் சம்பாசுரன் ஆட்சி நடந்தது. முசுகுந்த சோழன் காலத்தில் ஆந்திரம் வந்த சோழர்களும், வானவர்களாகிய சேரர்களும், இந்திரன் தலைமையில் தேவர்களும், தசரத சக்ரவர்த்தியும் ஆந்திர தேசத்தில் அசுரர்கள் ஆட்சியை முடிவு கட்டினர். பின்னர் வா-யும், அதன் பிறகு சுக்கிரீவனும் ஆட்சி செய்தனர். மஹாபாரத காலத்தில் அர்ஜுனன் வழி வந்த அரசர்கள் ஆண்டனர். மகத தேசத்தில் ஜராசந்தன் ஆட்சியில் ஆந்திரம் மகத அரசாட்சியில் சென்றது. பின்னர் இட்சுவாகு குல அரசர்கள் (சோழர்கள்) ஆந்திர தேசத்தை ஆட்சி செய்தனர்.



துஷ்யந்த மஹாராஜன் காலத்தில், கண்ணுவ ரிஷியின் வழி வந்தவர்கள் ஆந்திரதேசத்தை ஆண்டனர். இ`க்காலத்தில் தெலுங்கு பாஷை பிறந்தது. பின்னர் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான ஆய் அண்டிரன், தொன்டைமான் சக்ரவர்த்தி ஆந்திர தேசத்தை ஆண்டனர்.

ஆந்திரன் சுசருமன், ப-புச்சன், ஸ்ரீமுகன்(சிசுகன்)23 □ (கி.மு.235 முதல் கி,மு,212) ஸ்ரீகிருஷ்ணன்(10□), சாந்தகர்ணி, சீமலகர்ணி(10□),பூர்ண சசாங்கன்(18□) ஸ்கந்த சதகர்ணி(18□) ஸ்ரீசாதகர்ணி(56□), லம்போதரன், சிசுநாகன், மேகஸ்வாதி(18□) , ஆபீலகன்(12□) மேகஸ்வாதி (18□), சதஸ்வாதி (18□) ஸ்கந்த ஸ்வாதி (7□) மிருகேந்திர ஸ்வாதி(3□)குண்டலஸ்வாதி (8□) ,சௌம்ய ஸ்வாதி (1□), ஸ்ரீகிருஷ்ணன் (18□), புலுமாயி I சாதகர்ணி, மேகசாதகர்ணி, சீமல சாதகர்ணி(36□), அரிஷ்ட்ட சாதகர்ணி(25□), ஹலன், பூர்ணோத்சுந்தன் (5□), பு-ந்தசேனன் ஸ்ரீஸ்வாமி(21□) , சுந்தர சாதகர்ணி, கபோதர சாதகர்ணி(1□) , கௌதமி புத்ர சாதகர்ணி. இவன் மகன் சிவஸ்வாதி(28□-கி.மு.78 முதல் கி.பி.106), வசிஷ்ட்ட புத்ர சாதகர்ணி(24□ கி.பி.106 முதல் கி.மு.130), புலுமாயிII சாதகர்ணி(கி.பி.130 முதல் கி.பி.158), சிவஸ்ரீ புலுமாயி சாதகர்ணி(7□கி.பி.150 முதல் கி.பி.165), சிவஸ்கந்த சாதகர்ணி(3□,கி.பி.165 முதல் கி.பி.168), யக்ஞஸ்ரீ சாதகர்ணி(29□-கி,பி. 168 முதல்` கி.பி.197 முடிய), விஜயஸ்ரீ சாதகர்ணி(6□-கி.பி.197 முதல் கி.பி.203 முடிய), சந்திரஸ்ரீ சாதகர்ணி(10□-கி.பி.203முதல் கி.பி.213 வரை) புலுமாயிIII (7□-கி.பி. 213 முதல் கி.பி. 220 முடிய) வரை கி.மு. 295 முதல் கி.பி. 220 முடிய 515 வருடங்கள் சாதகர்ணி(நூற்றுவர் கன்னர்) அரசர்கள் ஆண்டனர். இக்காலத்தில் யவனம், மிசிரம், அரேபியா, ஈரான் முத-ய நாடுகளுடனும், சீனம், கம்கோடியா, பர்மா, ஜாவா, சிங்கப்பூர், சிங்களத்தீவிலுள்ள நாடுகளுடன் கப்பல்கள் வாணிபம் செய்து, ஆந்திரதேசம் செல்வச் செழிப்புடன் வளர்ந்தது. கருநாடகம், கொண்கானம், மராட்டியம், மாளவம், மகத தேசங்களிலும் ஆந்திர அரசர்கள் ஆட்சி செய்தனர். பின்னர் தெலுங்கு சோழர்கள், கீழைச் சாளுக்கியர்கள், மேலைச் சாளுக்கியர்கள் ஆட்சி நடைபெற்றது.

சாதகர்ணி வழியில் சுவாமிதத்தன், தமணன் முத-யோர் ஆந்திர தேசத்ததை ஆளும்போது சமுத்திர குப்பதன்(கி.பி. 330 முதல் கி.பி. 380) ஆந்திர தேசத்தை கைப்பற்றி ஆட்சி செய்தான். பல்லவர்களும், சாளுக்கியர்களும், களப்பிர மன்னர்களையும் சமுத்திர குப்தன் ஆந்திர தேசத்தை விட்டு விரட்டி அடித்தான்.

ஆந்திர பிருத்யர்கள் என்று கூறிக்கொண்ட சந்திர குப்தன்I (கி.பி. 319 முதல் கி.பி. 320 முடிய) மகத தேசத்தை ஆட்சி செய்தனர்.. இவர்கள் வழியில் கச்சன், சமுத்திர குப்தன்(கி.பி.330 முதல் கி.பி.380) மகத தேச அரசன் ஆனான். இவன் வடநாடு, தென்னாடுகள் மீது படையெடுத்து ராஜ்யத்தை விஸ்தரித்தான். சமுத்திர குப்தனுடன் போரிட்டுத் தோற்ற அரசர்களின் பெயர்கள் வருமாறு : (சமுத்திர குப்தன் தளபதி அரிசேனன்) .

கோசலம் - மகேந்திரன், காந்தாரம் - வியாக்கிர ராஜன், ஆர்யவர்த்தம்(வடபாரதம்) - ருத்திரதேவன், மிதிலன், நாகதத்தன், சந்திரபர்வன், கணபதிநாகன், அச்சுதன், நந்தி, பாலவர்மன், குபேரன் - மராட்டியம், விஷ்ணுகோபன் - பல்லவம், சுவாமிதத்தன், தமணன் - ஆந்திரம், நீலராஜன் - அவிமுக்தா, அஸ்திவர்மன் - வேங்கி, மேகவர்ணன் - ஈழம், மாந்தரன் சேரல் இரும்பொறை - சேர நாடு, முத-ய அரசர்களை சமுத்திர குப்தன் போரில் தோற்கடித்தான். சோழ அரசர்கள், பாண்டிய அரசர்களுடன் நட்பு கொண்டு கப்பல் வாணிபத்தை வளப்படுத்தினான்.

குப்தர்களின் ஆட்சி பாரதத்தின் பொற்காலம் எனப்பட்டது. பழைய வேத நூல்கள், உபநிஷதம், மஹாபாரதம், ராமாயணம் முத-ய நூல்கள் தேவநாகரி எழுத்தில் சம்ஸ்கிருத மொழியில் பெயர்ந்து எழுதப்பட்டது இக்காலத்தில்தான்.

வடமொழிக்கு இலக்கணம் வகுத்த பாணினி (கி.மு.7ஆம் நூற்றாண்டு) மற்றும் மருத்துவம் சம்பந்தப்பட்ட சரகருடைய நூல்கள் தேவநாகரி எழுத்தில் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டன.

(சரகர் - இவர் கி.மு. 8ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ராவல்பிண்டி(பாகிஸ்தான்)க்கு தெற்கே 20 மைல் தக்ஷசீலம் என்னும் ஊரில் புகழ்பெற்ற மருத்துவ சர்வகலா சாலை இருந்தது. இந்த மருத்துவ சர்வகலாசாலையில் ஆத்ரேயர், சரகர், சுஸ்ருதர், வாக்படர், புனர்வசு, ஆத்ரேயர் முத-யோர் மருத்துவ பரிசோதனைகள் செய்து பல நூல்கள் எழுதியுள்ளனர். இவை வடமொழியில் குப்தர் காலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. மருத்துவம் பற்றி இடைக்காடர், அகத்தியர், தேரையர், போகர், பு-ப்பாணி, திருமுலர், சட்டைமுநி, கபிலர், பெருநற்கணார், தாமோதரனார் முத-யோர் எழுதிய தமிழில் உள்ள மருத்துவ நூல்கள் ஆராயப்பட்டு ஆயுர்வேத நூல்கள் எழுதப்பட்டன.

சரகரின் சீடர்கள், அக்னி வேச்யர், பேலர் பராசரர், ஹரிதர், ஜாதுகர்ணர் முத-யோர் மருத்துவம் பற்றி எழுதிய நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டன.

பாரதமெங்கும் அறிவியல் நூல்கள், மத சம்மந்தமான நூல்கள் யாவும் பிரதி எடுக்கப்பட்டு, பாடசாலைகள் முலம் கற்பிக்கப்பட்டன.



குப்தர் ஆட்சிக்காலத்தில் பாரதமெங்கிலும் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு ஹிந்து மதம், அத்வைத சாஸ்த்திரம் முத-யன மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு, மக்களுக்கு விக்ஞானபூர்வமான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது.

குப்தர் அரசர்கள் வரிசையில் சமுத்திர குப்தனுக்குப் பிறகு சந்திர குப்தன் II (கி,பி.380 முதல் கி.பி.415) . குமார குப்தன் I (மகேந்திராதித்தன்) (கி,பி. 415 முதல் கி.பி.455) . ஸ்கந்த குப்தன் (கி.பி.455 முதல் கி.பி.467) குமார குப்தன் II (கி.பி.467 முதல் கி.பி.477) . ததாகத குப்தன், பாலாதித்யன் (கி.பி.545) . குமார குப்தன் III, தாமோதர குப்தன், தேவ குப்தன்(கி.பி.602) . ஆதித்ய சேனன்(கி.பி.647) முத-யோர் மகத தேசத்தை ஆண்ட அரசர்கள்.

## 49. மாணிக்கவாசகர்

கடைச்சங்கம் கி.பி.235-இல் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி காலத்துடன் முடிவுற்றதற்கு இயற்கையின் பெரும்சீற்றம் காரணமாக அமைந்தது. உக்கிரப்பெருவழுதிக்குப் பிறகு பாண்டிய நாட்டை குலசேகர பாண்டியன் ஆட்சி செய்தான். (கி.பி. 205) இவனுக்குப் பிறகு அரிமர்த்தன பாண்டியன்II என்னும் அரசன்ஆட்சி செய்தான். இவனிடம் அமைச்சராக இருந்தவர் மாணிக்கவாசகர். இவர் பாண்டி நாட்டில் வாதவூரில் வசித்து வந்த அமாத்தியர் குலத்தில் சிறந்த அந்தணரான சம்புபாதசரிதருக்கும், சிவஞானவதிக்கும் பிறந்தவர். பின்னர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி அரிமர்த்தன பாண்டியனிடத்தில் அமைச்சராகி திருவாதவூரார் தென்னவன் பிரமராயன் என்றும் சிறப்புப் பட்டம் பெற்றார். இருப்பினும் சிவ பெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டவராக இருந்தார். பாண்டிய நாட்டுப் படைகளுக்கு நல்ல குதிரைகள் வாங்க பாண்டியனிடம் ஒரு கோடி சவரன் பெற்று சோழ தேசத்தி`ல் பெருந்துறை (ஆவுடையார் கோயில்) என்னும் ஊருக்குச் சென்றார். பெருந்துறையில் அரேபியா, காந்தாரம் முத-ய பல தேசங்களி-ருந்து குதிரை வியாபாரிகள் குதிரைகளைக் கொண்டு வந்து விற்று, பாண்டி நாட்டு முத்து, துணி மணிகள், சேரநாட்டுத் தந்தம் , மிளகு, சந்தனம் முத-யவற்றை வாங்கிக் கொண்டு நாடு திரும்புவர்.

மாணிக்கவாசகரை சோதிக்க சிவபெருமான் பெருந்துறையில் ஒரு குருந்த மரத்தடியில் வேதியர் உருவத்தில் அமர்ந்து, சிவஞான போதத்தை அவருக்கு உபதேசித்து, ஆட்கொண்டார். பாண்டியன் கொடுத்த பணத்தை ஆலயம் கட்ட செலவழித்தார். பாண்டியனின் ஒற்றர்கள் இதை பாண்டியர் அமைச்சரை சிறைபிடித்து வரக் கட்டளையிட்டு அவரை சிறையில் அடைத்தான்.

சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளை குதிரைகளாக மாற்றி தானே பாண்டியனிடம் வந்து ஒப்புவித்து, மாணிக்கவாசகரை சிறை யி-ருந்து மீட்டார். மறுநாள் குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறி, இருக்கும் குதிரைகளைக் கொன்று காட்டிற்கு ஓடிவிட்டன. இதனால் கோபமடைந்த பாண்டியன் மீண்டும் மாணிக்கவாசகரைப் பிடித்து சுடும் வெய்யி-ல் நிற்க வைத்து சாட்டையால் அடித்தான். சிவ பெருமான் இதனால் கோபமுற்று வைகையாற்றில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தினார். பாண்டியன் கூ-யாட்களை அமர்த்தி வைகைக் கரைக்கு அணை கட்டினான். வந்தி என்ற கிழவியிடம் கூ-க்குப் பதில் பிட்டு வாங்கித் தின்று விட்டு சிவபெருமான் ஒரு கூ- ஆள் வேஷத்தில் மண் சுமந்து கொட்டினார். வேலை செய்து அசதியானது போல் தூங்குகின்ற கூ-யாளை பாண்டியன் கண்டு பிரம்பால் அடிக்க அந்த அடி எல்லோர் முதுகிலும் விழுந்தது. கூ-யாளாக வந்த சிவபெருமான் பாண்டியனுக்குத் தரிசனம் கொடுத்து, வைகை வெள்ளத்தை நிறுத்தி, மாணிக்கவாசகரை விடுவித்தார்.

பின்னர் மாணிக்கவாசகர் பாண்டியனிடம் விடைபெற்ற ஸ்தல யாத்திரை மேற்கொண்டு சிதம்பரம் சென்றார். அங்கு பௌத்தர்கள் மாணிக்கவாசகரை வாதத்திற்கு அழைத்தனர். அவர்களுடைய வாதத்திற்கு விடை சொன்னாலும் பௌத்தர்கள் அதை ஏற்கவில்லை. மாணிக்கவாசகர் கோபமுற்று பௌத்தர்களை ஊமையாக போகும்படி சபித்தார். அங்கு வந்த பௌத்தனான அரசன் தனது ஊமைப் பெண்ணை பேச வைக்கும்படி கேட்டுக்கொண்டான். மாணிக்க வாசகரும் அரசனின் ஊமைப் பெண்ணை பேச வைத்தார். பிறகு பௌத்த சந்நியாசிகள் தோல்வியை ஒப்புக்கொண்டு சைவர்களாக மாறியதும் அவர்களுக்கு பேச்சு வந்தது. பிறகு மாணிக்கவாசகர் “திருவாசகம்” “சிற்றம்பலக்கோவை” “திருவெம்பாவை” முத-ய நூல்கள் எழுதி, பௌத்த சமணர்களை வாதில் வென்று தமிழ்நாட்டில் மீண்டும் வேதமார்க்கம் தழைக்கச் செய்தார்.

சோழ நாட்டை ஆண்ட வங்கிசாத்தன் அவன் மகன் விக்ரம சோழன். மாணிக்கவாசகரைப் போற்றி சிவாலயப் பணிகள் மேற்கொண்டார். சேர அரசர்கள் சிவோற்பவ சேரன். இவன் மகன் தெய்வகுஞ்சாரன் முத-யவர்கள் மாணிக்கவாசகரை வரவேற்று அவர் சேர நாட்டு சிவத்தலங்களை தரிசிக்க தொண்டாற்றினார். பின்னர் ஆந்திர அரசன் புலுமாயி என்பவன் வேண்டுகோள்களால் ஆந்திர தேசத்திலுள்ள சிவன் கோயில்களை தரிசித்து பௌத்த, சமண மதவாதிகளை வாதத்தில் வெற்றி கொண்டார்.

மாணிக்கவாசகருடைய கீர்த்தி நாடெங்கும் பரவியது. மீண்டும் பாரதத்தில் வேதமார்க்கம் தழைக்கவும், பௌத்த, சமண



மதங்கள் மங்கிப் போகவும் இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார். மாணிக்கவாசகரின் பெருமைகளைக் கேள்விப்பட்டு, ஈழத்தில் வசித்து வந்த சைவப்பெருமக்கள் பாண்டிய தேசம் வந்து மாணிக்கவாசகரைத் தரிசித்து அரிமர்த்தன பாண்டியனிடம் சென்று ஈழத்திலுள்ள சிவாலயங்களை புதுப்பித்து கட்டித் தருமாறு வேண்டினர். மாணிக்க வாசிகரின் ஆலோசனையின் பேரில் அரிமர்த்தன பாண்டியன் ஈழத்திலுள்ள சிவாலயங்களை புதுப்பிக்க பொன்னும் பொருளும் கொடுத்து உதவி செய்தான்.

ஈழத்து சைவப் பெரியோர்கள் மாணிக்கவாசகரிடம் ஈழத்தின் (சிங்களம்-இலங்கை) வரலாற்றை கூறினர். சிங்களத்தின் வரலாறு வருமாறு :

கி.மு. 543-இல் வங்க நாட்டரசன் ஒருவன் க-ங்க நாட்டு இளவரசியை மணக்க அவர்களுக்கு ஒரு பெண் பிறந்தது. இவள் வளர்ந்து பெரியவளாகி சிங்கன் என்னும் காட்டுவாசியை மணந்தாள். இவளுக்கு சிம்மபாஹு என்னும் மகனும் சிம்மசீவ- என்னும் பெண்ணும் பிறந்தனர். சிம்மபாஹுவுக்கும் சிம்மசீவ-க்கும் விஜயன் மற்றும் சுமிதன் என்னும் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். விஜயன் தூர்த்தனாக வளர்ந்தபடியால் க-ங்க நாட்டு அரசன் இவர்களை நாடு கடத்தினான். விஜயனும் அவனுடைய நண்பர்கள் 700 பேரும், சூர்ப்பராகம் (பம்பாய் அருகிலுள்ளது) என்னும் துறைமுகத்தி-ருந்து அரபிக்கடல் வழியாக இலங்கை வந்து சேர்ந்தனர். தம்பனையில் அரசாண்ட காலசேனன் என்னும் அரசனைக் கொன்று, குவன்னா என்னும் யக்ஷிணியை மணந்து விஜயன் தம்பனையில் ஆட்சி செய்தான். பிறகு ஈழத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த உக்கிரசேன பாண்டியனிடம் நட்பு கொண்டு பாண்டிய இளவரசியை மணந்து கொண்டான். (விஜயன் ஆட்சிக்காலம் கி.மு. 477 முதல் கி.பி .439 வரை) விஜயனின் தம்பி சுமிதன், வடபாரதத்தில் ஆட்சி செய்த சாக்கிய பாண்டுவின் மகள் பத்திர காஞ்கனாவை மணந்தான்.

சுமிதனின் மகன் பாண்டு வாசுதேவன். இவன் மகன் அபயன். அபயனின் சகோதரி சித்திரா என்பவள் திகாயன் என்பவனை மணந்து பாண்டுஅபயனைப் பெற்றாள். பாண்டுஅபயன், சுபானபா- என்பவளை மணந்து பல போயில்களைக் கட்டினான். (அநுராதபுரம் அரசன் கி.மு. 370 முதல் கி.மு.337) இவனுக்குப் பிறகு கணதீசன். முக்தசிவன்(கி.மு.330 முதல் கி.மு.270), மகாநாகன் (கி.மு.270 முதல் கி.மு.237), தேவனாம்பிரியன் - தீசன், யத்தாலயக - தீசன், கோட்டை - அபயன், கந்தீசன், உசத்தியன், மகாசிவன், சூரத்தீசன், சுவர்ண பிண்ட தீசன் பின்னர் குதிரை வியாபாரியான தமிழர்கள் சேனன், குட்டன் என்னும் இருவர், அசேலன், ஏழாரன்,

துட்டகாமினி(காகந்தீசன் குமாரன்) , சைதாதீசன், துல்லநாகன், இலமினி-தீசன், வலகம் - வாகு, மகாசூலன் ஆண்டனர்.

காமினி - அபயன் (கி.மு.161 முதல் கி.மு.108 வரை) ஆட்சிக் காலத்தில் உலக பௌத்த மகாநாடு சிங்களத் தீவில் நடந்தது. மகத தேசத்தி-ருந்து இந்திர குப்தர், தருமசேனர், தலைமையில் ஆயிரக் கணக்கான பௌத்த துறவிகள், பல்லவபோகம்(ஈரான்-பாரசீகம்) என்னும் தேசத்தி-ருந்து நூற்றுக்கணக்கான பௌத்த துறவிகள், அலெக்ஸாண்டிரியா(பாகிஸ்தான்) என்னும் தேசத்தி-ருந்து தர்மராகிதர் தலைமையில் ஆயிரக்கணக்கான பௌத்தத துறவிகள் (30,000 கிரேக்க துறவிகள்) வனவாசி என்னுமிடத்தி-ருந்து துறவி சந்திர குப்தர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம் முத-ய இடங்களில் வசித்த பௌத்த துறவிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சம்ராட் அசோகன் காலத்தில் (கி.மு. 253-இல்) பாடலீபுத்திரத்தில் முதல் உலக பௌத்த மகாநாடு நடைபெற்றது. (இக்காலத்தில் மனித சமுதாயம் வளர புதிய மதம்' தேவைப்பட்டது. பழைய சம்பிரதாயங்கள், வழிபாடுகள் முத-யன நோயுற்ற சமுதாயமாகவும், பழைய சாதி, குல, கோத்ததிரங்கள் கிழடு தட்டிய சமுதாயமாதகவும், வேதங்கள், யாகங்கள் முத-யன கொளுத்தப்பட வேண்டிய பிணமாகவும் சித்தரிக்கப்பட்டது. இக்கருத்துக்களே மகா அலெக்ஸாண்டரின் உதவி கொண்டு ஒரு உலக சாம்ராஜ்யத்தை தோற்றுவிக்கத் தூண்டியது. இதுவே ரோம சாம்ராஜ்யத்தின் நோக்கமாக இருந்தது. ரோமன் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட கிறிஸ்துவர்கள் மனத்திலும் உலக சாம்ராஜ்ய கனவு நிழலாடியது. பின்னர் வந்த இஸ்லாமியரிடத்திலும் இக்கருத்து வேரூன்றியது.

மகாசூலனின் தம்பி சோர நாகன், மகாசூலனின் மகன் குடத்தீசன்(குதக்கண்ணதீசன்)(கி.மு.52 முதல் கி.மு.30), பாதிகாபயன் (கி.மு.30 முதல் கி.மு.2) , மகாலனி-தீசன், பாதிகாபயன்(கிறிஸ்து பிறந்த வருடம்) , மகாதா-ய மகாநகன் (கி.மு. 1 முதல் கி.பி. 10) , சூமந்தகாமினி (கி.பி. 10 முதல் கி.பி. 23) , கானுசானு தீசன் சூலாபயன் (கி.பி. 23 முதல் கி.பி. 25) , சிங்கவல்-, ஈழநாகன் (கி.பி. 25 முதல் கி.பி. 31) , சந்தமுக சிவன் (கி.பி. 31 முதல் கி.பி. 40) , எட்டான-தீசன்(கி.பி. 40 முதல் கி.பி. 48) , சுப்பம் (கி.பி. 48 முதல் கி.பி. 56) , வசபன் (கி.பி. 56 முதல் கி.பி. 100) , வங்கிய நாசிக-தீசன்(கி.பி. 100 முதல் கி.பி. 103) , கயவாகு-காமினி (கி.பி. 103 முதல் கி.பி. 125) , (சேரன் செங்குட்டுவன் நண்பன்) , கயவாகுவின் சகோதரன் மஹல்லக நாகன் (கி.பி. 125 முதல் கி.பி. 131) , பாதிபதீசன் (கி.பி. 131 முதல் கி.பி. 155) , கனகத்தீசன் (கி.பி. 155 முதல் கி.பி. 173) , துட்டநாகன் (கி.பி. 174) , ஸ்ரீநாகன்(கி.பி.



175 முதல் கி.பி. 194) , வைரத்தீசன், அபயசேனன் (கி.பி. 216 முதல் கி.பி. 224) , ஸ்ரீநாகன் II (கி.பி. 224 முதல் கி.பி. 226) , விஜயகுமாரன் (கி.பி. 227) , சங்கதீசன் (கி.பி. 227 முதல் கி.பி. 231) ,ஸ்ரீசங்கபோதி(கி.பி. 231 முதல் கி.பி. 233) , கோதகாபயன் (கி.பி. 233 முதல் கி.பி. 236) , மாதல தெட்டதீசன் (கி.பி. 246 முதல் கி.பி. 256) , மகாசேனன்(கி.பி. 256 முதல் கி.பி. 283) , முத-யோர் சிங்களத்தை ஆண்டனர்.

மகாசேனன், பாண்டிய தேச அரசன் அரிமர்த்தன பாண்டியனிடம் நட்பு கொண்டு ஈழத்தில் பல சிவாலயங்களை கட்டித் தந்தான். (மகாசேனன் க-ங்க நாட்டி-ருந்து குடியேறி சிங்களத்தை ஆண்ட விஜயன் (1-ஆவது) என்பவனி-ருந்து 53-வது அரசன் ஆவான்) .

## 50. ஹரதத்தர்

சோழ நாட்டில், காவிரிக்கு வடகரையில் உள்ள கஞ்சபுரத்தில் உள்ள வைஷ்ணவ அக்ரஹாரத்தில் வாசுதேவாச்சாரியார் (மதுசூதனாச்சாரியார்) என்பவருக்கு சுதர்சனாச்சாரியார் என்னும் மகன் பிறந்தான். சுதர்சனன் வளர்ந்து பெரியவனாகி சிவபக்தி மேலீட்டினால், விபூதி ருத்ராக்ஷம் அணிந்து கொண்டு அருகிலுள்ள அக்னீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று சிவ-ங்கத்தை தொழுது வந்தான். இதனால் கோபமடைந்த வாசுதேவாச்சாரியார் தன் மகனை வீட்டை விட்டு விரட்டி விட்டார். அக்கிரஹாரத்து வைஷ்ணவர்கள் கூடி சுதர்சனனை திருமால் ஆலய மண்டபர்திற்கு அழைத்து வந்து வாதிட்டனர். அப்போது சுதர்சனன் பழுக்க காய்ச்சிய இரும்புப் பலகை மீது அமர்ந்து, வேத மந்திரங்களைக் கூறி, ஈஸ்வர பக்தியே சிறந்தது என பிரசங்கம் செய்ய அங்குள்ள வைணவர்கள் பயந்து பலர் சைவ மதம் தழுவினர். வாசுதேவச்சாரியார் மகன் சுதர்சனனிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று ஸ்மார்த்தராகி, வாதுல கோத்ரத்தில் மகனுக்கு திருமணம் செய்வித்தார். சிவவாக்கிய சோழன் (சிவ-ங்க பூபதி) உன்னும் அரசன் கனவில் சிவபெருமான் தோன்றி, ஹரதத்தரின் பெருமையைக் கூற, சிவ வாக்கிய சோழன் ஹரத்த்தரைக் கண்டு உபதேசம் பெற்று முக்தி அடைந்தான்.

ஹரதத்தரின் பெருமை நாடெங்கிலும் பரவிற்று. வஜ்ஜிர நந்தி என்னும் அரசன்(சமண மதம்) அப்போது தஞ்சையின் பல பகுதிகளையும், பாண்டிய நாட்டின் பல பகுதிகளையும் ஆண்டு வந்தான். வஜ்'ஜிர நந்தி, ஹரதத்தரின் உபதேசத்தால் உறையூர் சோழன், சிவவாக்யன் மீது படையெடுக்கவில்லை.

வஜ்ஜிர நந்தி, களப்பிரர் வமிசத்தை சேர்ந்த மகாநந்திக்கும் (வங்கியாதன் மகன்) சோழ இளவரசிக்கும் பிறந்தவன். களப்பிரர்கள் கருநாடகத்தைச் சேர்ந்த சமண மதத்தினர்.

வஜ்ஜிர நந்தி கி.பி.340-இல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வரகுணபாண்டியனைத் தோற்கடித்து மதுரையி-ருந்து ஆட்சி செய்தான். (உக்கிரப் பெருவழுதியின் மகன் வரகுண பாண்டியன் I கி.பி. 235 முதல் கி.பி. 255 வரை மதுரையை ஆண்டான். வரகுணபாண்டியன் I மகன் அரிமர்த்தன பாண்டியன் II (கி.பி. 255 முதல் கி.பி. 330) . இவன் மகன் வரகுணபாண்டியன் II (கி.பி. 330 முதல் கி.பி. 340 வரை) .

களப்பிரர் ஆட்சி`க்காலத்தில் சமணர்கள் (1) பிரான் மலை (2) அழகர் மலை (3) ஆனை மலை (4) பசுமலை (5) நாகமலை (6) பரங்குன்றம் (7) பன்றி மலை (8) கழுகு மலை முத-ய இடங்களில் சமணப் பள்ளிகள் அமைத்து தமிழ் மொழியின் எழுத்துக்களைக் குறைத்து, வரிவடிவத்தை மாற்றி, பண்டைய தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் போது சமணக் கருத்துக்களைப் புகுத்தி, வேத மார்க்கத்தையும், சைவ, வைணவ மதங்களையும் அழிக்க முற்பட்டனர். இதற்காகவே திருப்பரங்குன்றத்தில் ஒரு தமிழ்சங்கத்தை தோற்றுவித்து பணியாற்றினர். எனவே ஹரத்தத்தர் சைவ, வைணவ ஒற்றுமையை வ-றுறுத்தி வேதமார்க்கம் தழைக்க பெரும் முயற்சிகள் செய்தார். ஹரதத்தருக்கு எட்டு குமாரர்கள், இரண்டு பெண்கள். இவர் செய்த நூல்கள் சதுர்வேத சாரம், தத்வ நிரூபணம், ஹரி-ஹர தாரதம்யம், ஸ்ரீகண்ட பாஷ்ய சமர்த்தனம், உஜ்வலம், ஞான-ரத்னாகரம், சிவாதிக்ய சிகாமணி, பக்தியாதிக்ய சிகாமணி, சைவாகம பூஷணம், விபூதி-ருத்ராக்ஷக பஞ்சகம் முத-யன. இவர் கிருஹஸ்தாஸ்ரமத்திலேயே சிவபதம் அடைந்தார்.

களப்பிரர் ஆட்சி ஒரு இருண்ட காலம். கி.பி.340 முதல்கி.பி. 520 வரை தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி நடைபெற்றது. அப்போது பாண்டிய மன்னர்கள் திருநெல்வே-யி-ருந்து ஆண்டனர். (வரகுண பாண்டியன் II. இவன் மகன் பெரும்பூதன் II , மாறன்நெடுஞ்செழியன் இவன் தம்பி சடையன் பெருவழுதி, மாறவர்மன், இவன் தம்பி சடையவர்மன், சுரபிமாறன் சடையன், சேந்தன் திருமாறன், வாகுவலய பாண்டியன் முதலானோர் கி.பி.350 முதல் கி.பி.520 வரை ஆண்ட பாண்டிய மன்னர்கள்) .

சுரபிமாறன் சடையன் மனைவி நக்கங்கொத்தியார். இவர் பல சிவாலயங்களில் இறைபணி செய்துள்ளார். குங்கும மாறன் மகனான வாகுவலய பாண்டியன் காலத்தில் மூர்த்தி நாயனார், கூற்றுவ நாயனார் என்னும் சிவபக்தர்கள் தோன்றி, களப்பிரரை



விரட்டி, மதுரையில் வெற்றிவேல் செழியன் II- க்கு மகுடாபிஷேகம் செய்தனர். (மூர்த்தி நாயனார் கி.பி.520 முதல் கி.பி.575. இவர் சொக்கநாதருக்கு சந்தனம் அரைத்துக் கொடுக்கும் கைங்கர்யம் செய்து வந்தார். சமண அரசன் சந்தனக் கட்டைகளைக் கொடுக்கக் கூடாது என்று உத்தரவிட, மூர்த்தி நாயனார் வெறுங்கையால் சந்தனக் கல்-ல் அரைக்க, இரத்தம் வடிய, சிவபெருமான் தோன்றி அரசன் மடிவான் என்று சொல்ல, அரசன் இறந்துவிட பட்டத்து யானை மூர்த்தி நாயனார் கழுத்தில் மாலையிட அவர் அரசராகி பல காலம் ஆண்டு மீண்டும் பாண்டியர்களிடம் நாட்டை ஒப்புவித்து முக்தி அடைந்தார்.

சோழ நாட்டிலும்(தஞ்சை) , மதுரையிலும் கி.பி.340 முதல் கி.பி. 520 முடிய மகாநந்தி, வஜ்ரநந்தி, மகாநந்தி, நந்தி, ரிஷபன், வீரநந்தி முத-ய களப்பிரர் ஆட்சியும் அதற்குப் பிறகு அச்சுத விக்ராந்த வர்மன் ஆட்சி செய்தான். பின்னர், சோழ ஆட்சி துவங்கியது.

உறையூரில் சிவவாக்கிய கோழன், இவன் மகன் சுபதேவ சோழன் (மனைவி கமலவதி) , கோ செங்கட்சோழன் (பூர்வ ஜன்மத்தில் திருவானைக்காவில் சிலந்தியாக இருந்து சிவ-ங்கத்தின் மீது கூடு கட்டியவன்) . இவன் மகன் புகழ்ச்சோழன் முத-யோர் ஆண்டனர். பிறகு அச்சுத விக்ராந்த வர்மன் என்னும் களப்பிரன் காலத்தில் சுந்தரசோழன் உறையூரை ஆண்டான்.

சேர நாட்டில் சிவோத்பவ சேரனுக்குப் பிறகு, சேரமான் தெய்வகுஞ்சாரன்(இளங்குட்டுவன்) . சிந்துநதிக்கரை வரை கப்பல்கள் செலுத்தி நாடுகளைப் பிடித்தாண்ட சிந்துவாரணீய சேரன் (கடல் பிறகோட்டிய வெல்கெழுகுட்டுவன்) . ஜீவசம்ரக்ஷக சேரன்(கடுங்கோ வாழியாதன்) , உறையூர் சோழன், சமுத்திர சோழனையும், சுபதேவ சோழனையும் வெற்றி கண்ட சிக்கற்பள்ளித்துஞ்சிய மாந்தரல் சேரல் திரிகோதர சேரல் இரும்பொறை, அச்சுத பிரதாப சேரன், ஆதுல பிரதாபசேரன், அகணித பிரதாப சேரன், வீரராஜேந்திர சேரன், பீமேஸ் வர சேரன் முத-யோர் கி.பி. 340 முதல் கி.பி. 520 வரை ஆட்சி செய்தனர்.

## 51. ஆர்யபட்டர்

ஆர்யபட்டர் என்பவர் “அஸ்மாக” என்னும் அந்தணர் குடும்பத்தைச் சேர்ந்தவர். திருவிதாங்கூர்(திருவாங்கூர்) என்னும் கேரள நாட்டுப் பகுதிக்கு “அஸ்மாகம்”எனப்பெயர். தமிழ் நாட்டில் கும்பகோணம் முத-ய ஊர்களி-ருந்து தமிழ் அந்தணர்கள் இங்கு குடியேறி வாழ்ந்தனர். பின்னர் விதற்ப தேசத்தில் (விந்திய மலைக்குத்

தெற்கே கோதாவரி, நர்மதா நதிக்கரை பிரதேசங்கள்) குடியேறி வேதங்களை ஓதி உபாத்யாயர்களாக வாழ்ந்தனர். இவர்களில் பலர் சாமவேதிகள். இங்கிருந்து குப்தர்கள் ஆட்சி'க்காலத்தில் மகத தேசம் (பீஹார்) தலைநகர் பாடலீபுரத்தில் சென்று குடியேறிய "அஸ்மாக"குல அந்தணர் குடும்பத்தில் கி.பி.476மார்ச்சு 21-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று மதிய நேரத்தில் "ஆர்யபட்டர்"பிறந்தார். (இவர் லங்கா அல்லது உஜ்ஜயினியில் பிறந்து தனது 23-வது வயதில் மகத தேசம் வந்து நாலந்தா பல்கலைக் கழகத்தில் கணித இயல், வானவியல், ஆசிரியராகப் பணியாற்றினார் என்று கூறப்படுகிறது) . இவரது மாணாக்கர்கள் பாண்டு ரங்கசாமி, லாடதேவன், நித்தியானந்தன் முத-யோர். லாடதேவன் வானவியல் பேரறிஞன். ஆர்யபட்டர் எழுதிய நூல் ஆர்யபட்டீயம் எனப்படும். இதில் மொத்தம் 121 ஸ்லோகங்கள் உள்ளன. (கணிதம், வானவியல் பற்றிய சூத்திரங்கள்) . ஆரியபட்டீயம் நான்கு பாகங்களாக உள்ளன. அவையாவன (1) கீதிகாபாதம், (2) கணித பாதம், (3) காலக்கிரியா பாதம், (4) கோள பாதம் எனப்படுவன. கீதிகா பாதம் 13 பாடல்கள் கணித பாதம் 33 பாடல்கள், காலக்கிரியா பாதம் 25 பாடல்கள், கோளபாதம் 50 பாடல்கள்(ஆக மொத்தம் 121 பாடல்கள் அடங்கியது ஆரியபட்டீயம்) கீதிகா பாதத்தில் முதல் பாடல் வாழ்த்துப் பாடல், இரண்டாவது பாடல் இந்நூ-ன் கையாளப்பட்ட மொழி பற்றியது. மீதமுள்ள 11 பாடல்கள் நூற்பயன் பற்றியது. ஆர்யபட்டீயத்தில் கீழ்க் கண்ட விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

(1) பை (22/7) என்பதின் துல்-யமான விளக்கம், வர்க்கமூலம், கனமூலம், திரிகோணம், ஆரம், வட்டம், வட்டத்தின் சுற்றளவு கணக்கிட உதவும் சூத்திரங்கள்.

(2) நாள், வாரம், மாதம், கிரகங்களின் சஞ்சாலம், காலஅளவு பற்றிய சூத்திரங்கள்.

(3) கோளபாதத்தில் கிரகங்களின் தோற்றம், மறைவு, பகல்-இரவு உண்டாக காரணம், வெவ்வேறு நாடுகளில் சூரியோதயம், கிரகணங்கள் பற்றிய விளக்கங்கள்.

(4) பூமி, கிரகங்கள், சந்திரன் முத-யன எவ்வளவு சூரிய ஒளி பெற்று பிரகாசிக்கின்றன என்பது பற்றிய விளக்கங்கள்.

(5) பூமி தன்னுடைய அச்சில் சுழல்கிறது. பூமி சூரியனை சுற்றி வருகிறது. மற்றைய கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்பது பற்றிய விளக்கங்கள்.

(6) இவர் மன்வந்திரங்கள் பற்றிய கணக்குகள் கூறுகிறார்.



(இந்தக் கணக்கு புராண வரலாற்றுக்குத் தொடர்புடையது அல்ல. இக்கணக்கை வைத்துக் கொண்டு ராமாயண மகாபாரத காலத்தின் அரசர்கள் வாழ்ந்த காலத்தை கணக்கிடுவது பிழையாக அமையும்) . இவர் கூற்றுப்படி,

| | | |
|---|---|---|
| 1) கிருதயுகம் | 17,28,000 | வருடங்கள் |
| 2) திரேதாயுகம் | 12,90,000 | வருடங்கள் |
| 3) துவாபரயுகம் | 8,64,000 | வருடங்கள் |
| 4) க-யுகம் | 4,32,000 | வருடங்கள் |
| ஒரு மகாயுகம் | 43,20,000 | வருடங்கள் |

ஒரு மன்வந்திரம் என்பது 71 மகாயுகங்கள் கொண்டது. (விஞ்ஞானிகள் கூற்றுப்படி மனிதக்குரங்கி-ருந்து மனிதன்தோன்றியது 4 மில்-யன் ஆண்டுகளேயாகும் . எனவே, இது தவறான கொள்கை யாக கருதப்படுகிறது) .

(7) நிழல்களின் அளவைக் கொண்டு சூரிய, சந்'திர கிரகணங்களை கணக்கிடுவது.

(8) கூட்டுக்கணிதம், பீஜகணிதம், அல்ஜீப்ரா, திரைராவிகா, விசேஷ மொழி, அசல் - வட்டி கணக்கிடுதல், சூத்திரங்கள்.

ஆர்பட்டீயம் என்னும் நூலைத் தவிர ஆரியபட்டர் சித்தாந்தம் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

ஆரியபட்டருக்கு முன்பேயே பாரதத்தில் வானவியல் உலகின் தோற்றம், ஐந்து கிரகங்கள்(புதன், செவ்வாய், குரு, சுக்ரன், சனி), சூரியன் சந்திரன், அச்சில் சுழலும் பூமி, கால அளவு, 27 நட்சத்திரக் கூட்டங்கள், தூமகேது, பூஜ்யக் குறிகளின் மதி'ப்பு முதி-யன பற்றி பல பாரத விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். கர்க்கா, வாகதர், வசிஷ்டர், அகஸ்தியர், விஸ்வாமித்தரர், போன்ற வானவியல் பல கருத்துக்கள் கூறுகின்றனர். கௌடில்யர் (விஷ்ணுகுப்தர்) எழுதிய பொறியியல், சூரியர் போன்ற திரிகோணமிதி பத்ரபாகு போன்ற வானவியல் விஞ்ஞானி, பூஜ்யத்தை கண்டுபிடித்த பிங்களர் (கி.மு. 200) உமாஸ்வதி, க்ஷத்ரபர் (கி.பி. 200), ஸ்ரீசேனர், வராகமிகிரர் (கி.பி. 505 முதல் கி.பி. 587), முதலாம் பாஸ்கரர் (கி.பி. 522) ஜீபைத்ரக- (கி.பி. 575) , உஜ்ஜைனில் வாழ்ந்த பிரம்மகுப்தர் (கி.பி. 605 முதல் கி.பி. 628), சித்தாசாரியார், லல்லா,கோவிந்தசாமி,வாசஸ்பதி, பிரூதுகடஸ்வாமி, மகாவீரர், நாராயணபண்டிதர் முத-யோர் வான இயல் மற்றும் கணித விஞ்ஞானிகள் (20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கணித மேதை ஸ்ரீநிவாஸ ராமானுஜம், அவர் கண்டுபிடித்த கணித சூத்ரம் இன்னும் மேலை விஞ்ஞானிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை) வாழ்ந்துள்ளனர்.

பூமி முத-யன அண்டங்கள்(முட்டை வடிவு) அண்டகோடிகள் முத-யன பற்றியும் வேதங்கள் கூறுகின்றன. வராகமிகரர் (வாக்கிய பஞ்சாங்கம் எழுதியவர்) . ஹோரை, முஹுர்த்தம், நாழிகை, திதி, வாரம், நட்சத்திரம், மாதம், வருடம், கிரகணம், அமாவாசை, முத-யன பற்றி 5000 வருடங்களுக்கு எழுதி வைத்துள்ளார்.

ஆரியபட்டருக்கு முன்பாக வான இயல் பற்றி ஐந்து சித்தாந் தங்கள் இருந்தன.

1) பைத்தாமவர சித்தாந்தம்
2) சௌரசித்தாந்தம்
3) வசிஷ்ட்ட சித்தாந்தம்
4) ரோமக சித்தாந்தம்
5) பவ்லீக சித்தாந்தம்

மேற்கூறப்பட்ட நூல் துல்-யமான கணக்குகளை கூறாமல் இருந்ததால் ஆரியபட்ட சித்தாந்தம் பிரசித்தி பெற்றது.

பாரசீகத்தைச் சேர்ந்த "அல்பரூனி" (கி.பி.973) தன்னுடைய நூ-ல் ஆரியபட்டரை மேற்கோள் காட்டியுள்ளார். (க--யோ போன்ற மேலை விஞ்ஞானிகள் சூரியன், பூமியைப் பற்றி கூறுவதற்கு முன்பேயே பாரத விஞ்ஞானிகள் வானவியல் பற்றி கூறியுள்ளனர்) .

கி.பி.629 இல் வாழ்ந்த முதலாவது பாஸ்கரர், ஆரியபட்டரை "ஆஸ்மகாச்சாரியார்" என்று குறிப்பிட்டுள்ளார். இதி-ருந்து ஆரிய பட்டரின் பெருமையை உலகம் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

## 52. விக்ரமாதித்தன்

வடபாரதத்தில் அவந்தி தேசத்தை, உஜ்ஜயினி என்னும் தலை நகரி-ருந்து (அம்பாவதி) பார-மாறன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். (ஏறத்தாழ கி.மு.380-இல் பார-மாறன் அரசு உஜ்ஜையினி -ருந்து சிந்து தேசம், காஷ்மீரம் வரை ஆட்சி செய்தது. இவர்களும் பல்லவர்களின் (பல்லவ சோகம் - பாரசீகம் - ஈரான்) ஒரு பிரிவினர் ஆகும். பாரமாறன், மஹா-மாறன், தெய்வீகன் தேவதத்தன், கந்தருவ சேனன், சங்க மஹாராஜன், கந்தர்வசேனன், விக்ரமாதித்யன், தேவ பக்தன், சங்கன், சா-வாகனன், சா-ஹோத்ரன் கி.பி. 137 வரை உஜ்ஜையினி-ருந்து ஆண்ட அரசர்களாவர்.

கந்தர்வசேனன் மகன் விக்ரமாதித்யன் கி.மு.101-இல் பிறந்து கி.மு.82-இல் அரசுக் கட்டிலேறினான். விக்ரமாதித்தியன் சாகர் களையும் மிலேச்சர்களையும் விரட்டி காஷ்மீரம் முதல் அவந்தி வரை ஆட்சி செய்தான். இந்த வெற்றியை கொண்டாட கி.மு. 55-இல் விக்ரம ஆண்டு தொடங்கப்பட்டு வடபாரதத்தில் புதிய வருடம்



தொடங்கப்பட்டது. பௌத்தம் சமணம் முத-ய மதங்கள் மங்கி மீண்டும் வேத மதம் ஸ்தாபிக்கப்பட்டது.(கி.பி.2002-க்கு இணையான விக்ரம சகம் 2058-59) . விக்கிரமாதித்யன் சகோதரன் பட்டி என்பவனே மந்திரியாக இருந்தான். விக்கிரமாதித்யன் வேதாளத்தை அடக்கி, காளியின் அருளைப்பெற்று பல மனைவிகளுடன் நல்லாட்சி செய்தான். மக்கள் விக்கிரமாதித்யனை மகாவிஷ்ணுவின் 10வது அவதாரமான கல்கியே (மிலேச்சர்களை விரட்டியதால்) என்று போற்றினர்.

பைடணபுரியில் சுரோசனன் என்னும் அந்தணனது குமாரி சுமித்ரை. இவனுக்கு ஆதிசேஷன் அனுக்ரஹத்தால் சா-வாகனன் பிறந்தான். (இவனை விக்கிரமாதித்தன் பேரன் என்றும் கூறுவர்) . சா-வாகனன் ஒரு குயவனுடைய வீட்டில் பிறந்து அங்கேயே வளர்ந்தான். சிறுவயதில் தன்னை அரசனென்றும் மற்ற சிறுவர்களை மந்திரிகள் என்றும் கூறி விளையாடுவான். களிமண்ணால் குதிரைகள், யானைகள், சிங்கம், காலாட்படைகள் செய்து அவைகளை தனது சேனைகள் என்றும் கூறுவான். இவனிடம் ஆதிசேஷன் அருளால் அமானுஷ்யமான சக்திகள் கிடைத்தன. மண் பொம்மைகள் உயிருள்ளவையாக மாறிவிடும். இவனுடைய புகழைக் கேள்விப்பட்ட விக்ரமாதித்தன், சா-வாகனனைப் பிடித்து சிறையில் அடைத்தான். இவன் மண்ணால் பறக்கும் குதிரை செய்த உயிரூட்டிதப்பித்து விட்டான். பின்னர் நடந்த போரில் விக்ரமாதித்தியன் இறந்தான்.

விக்கிரமாதித்தன் பிள்ளை தேவபக்தன், சங்கன் ஆட்சிக்குப் பிறகு சா-வாகனன் ஆட்சிக் கட்டிலேறினான். நர்மதை நதிக்குத் தெற்கில் உள்ள பிரதேசங்களான கருநாடகம், கேரளம் வரை ஆட்சி செய்தான். (இவனது வழிவந்தோர் உடையார்கள் எனப் பெயர் கொண்டு கருநாடகத்தை ஆட்சி செய்தனர். சா-வாகனன் கி.பி.78 முதல் ஆட்சி தொடங்கியதால் அது முதலாண்டாக கருதப்பட்டு சா-வான சகாப்தம் தொடங்கப்பட்டது. பின்னர் அவந்தி எதிரிகளால் கைப்பற்றப்பட்டது. ஹுணர்கள்(அவுணர்கள்) என்னும் இனத்தவர் ஆப்கானிஸ்தானுக்கு வடக்கேயிருந்து படையெடுத்து மாளவ தேசம், அவந்தி தேசத்தையும் கைப்பற்றினர். தோரமானா என்னும் அவுணர் தலைவன் மகன் மிஹிரகுலன் கி.பி.502 முதல் கி. பி.542 வரை வடமேற்கு பாரதத்தில் கொடுங்கோலாட்சி செய்தான். யானைகளை மலைமீது ஏற்றி உருட்டி விட்டு அவைகள் சித்திரவதைப்படுவது கண்டு ரசிப்பான். மிஹிரகுலனை மாளவ அரசன் யசோவர்மன் என்னும் விஷ்ணுவர்த்தனன் வெற்றி கொண்டான். யசோவர்மன், விக்ரமாதித்தன் பெயர் கொண்டு குப்தர்கள் உதவியுடன்

பட்டமேற்றான். (கி .பி.525 முதல் கி.பி.583) . விக்ரமாதித்தன் சபையில் நவரத்னங்களாக தன்வந்திரி, க்ஷவணன், அமரஸிங்கன், சங்கன், வேதாளபட்டர், கடகர்பன் காளிதாசன், வராஹமிஹிரன் வரருசி முத-யோர் இருந்தனர். காளிதாசன் என்னும் கவிஞன் பின்னர் போஜராஜன் என்னும் அரசனுடன் நட்பு கொண்டு அவன் அவையில் இருந்தான். மகாகவி காளிதாசன் வடமொழியில் இயற்றிய காவியங்களில் சாகுந்தலம், மேகசந்தேசம், ரகுவம்சம், முத்ர-ராக்ஷஸம் முத-யன பிரசித்தி பெற்றவை. வரருசி என்னும் பிராமணன் ஒரு ஹரிஜனப் பெண்ணை மணந்து நாராயண பிராந்தன் முத-யவர்களைப் பெற்றான்.

யசோவர்மனுக்குப் பிறகு மாளவம் அவந்தி முத-ய பிரதேங்களை உபேந்திரன், வைரிசிம்மன், சீயகன் I, வாக்பதிராஜன் வைரிசிம்மன் II ஹர்ஷசீலகன்(கி.பி.948 முதல் கி.பி.974) வாக்பதிராஜ முஞ்சன்(கி.பி.974 முதல் கி.பி.995 ) சிந்துராஜன்(கி.பி.995 முதல் கி.பி.1010) போஜன் I (கி.பி.1010 முதல் கி.பி.1010) ஜயசிம்மன் I (கி.பி.1055 முதல் கி.பி.1066) முத-யோர் ஆண்டனர்.

## 53. பரஞ்சோதியார்

பாண்டிய நாட்டில் வாகுவலய பாண்டியனுக்குப் பிறகு குங்கும மாறன் (வெற்றிவேல் செழியன் II) , கற்பூர பாண்டியன் (மாற வர்மன்) சடையன்ராஜாதிராஜன்,மாறவர்மன் புருஷோத்தம பாண்டியன் (கடுங்கோன்) , சடையன் அதிராஜன், பாண்டியன் மாறவர்மன், அவனி சூளாமணி வர்மன், சடையன் சத்ருசாதனன், மாறவர்மன் காருண்ய வழுதி, சடையவர்மன் செழியன் சேந்தன், புருஷோத்தம பாண்டியன் குமாரன் சத்ருசாதனபாண்டியன், திருநெல்வே- பாண்டியன், தேவபாண்டியன், மாறவர்மன் அரிகேசரி (கூன் பாண்டியன் - நின்ற சீர் நெடுமாறன்,சடையவர்மன் சுந்தர பாண்டியன் முத-ய பாண்டிய மன்னர்கள் கி.பி.520 முதல் கி.பி.670 வரை ஆண்டனர்.

மாறவர்மன் அரிகேசரியின் மனைவி காஞ்சி மணிமுடிச் சோழன் மகள் மங்கையர்க்கரசியார். மாறவர்மன் புனைந்த மதுரையி-ருந்தும், கொற்கையி-ருந்தும் ஆண்டனர். அரசன் மாறவர்மன் சமண மதத்தை ஆதரித்து 8000 சமண முநிவர்களை மதுரையி ல் குடியேற்றினான். மதுரை பாண்டியனின் அமைச்சர் குலச்சிறையார். இவர் சைவர்.

நரசிம்மவர்ம பல்லவன், சாளுக்கிய அரசன ் பு-கேசியை வாதாபி என்னுமிடத்தில் வென்று முன்னம் இழந்த நாடுகளை மீட்டான். (மஹாப-புரம்-மாமல்லபுரம் சிற்பங்கள் இவன் காலத்தியது) இவனுடைய படைத்தளபதி பரஞ்சோதி (சோழ நாடு) சிறுத்தொண்ட நாயனார் என்று போற்றப்படுபவர்.



மேற்குறிப்பிட்ட பு-கேசி சாளுக்ய சமிசத்தை சேர்ந்தவர். சாளுக்கியர் தங்களை பாண்டவர்களில் ஒருவரான அர்ஜுனன் சந்ததியோர் என்றும், நந்தராஜன் வழிவந்தவர்கள் என்றும் கூறிக் கொண்டனர்.

துரோணாச்சாரியார் மகன் அஸ்வத்தாமா இளம் பஞ்ச பாண்டவர்களை பிரம்மாஸ்த்திரத்தால் இரவில் கொன்ற பிறகு, காசியில் அவனைக் கண்டுபிடித்து ஐங்குடுமி வைத்து (பஞ்சிகை) சிந்து நதியைத் தாண்டி மேற்கே துரத்தி விட்டனர். அஸ்வத்தாமா துருக்கி தேசம் வரை சென்று அங்கு தென்னிந்திய சேர அரசர்களுடன் சேர்ந்து வாழ்ந்து பஞ்சிகர் என்னும் வமிசத்தை தோற்றுவித்தான். அஸ்வத்தாமாவுடன் துருக்கி தேசம் சென்ற சாளுவ வம்சந்தோறும் அங்கே சிற்றரசுகள் அமைத்தனர். கி.பி.500-இல் அரேபிய கா-பாக்கள் பாரத வம்சாவளியை துரத்தி, சமணர்களை (ஜீனர்களை) க் கொன்று கொடுங்கோன்மை ஆட்சி புரிந்தனர். துருக்கி, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் வரை அரேபியர்கள் ஆட்சி பரவியது. எனவே துருக்கி தேசத்திலுள்ள சாளுக்கியர்கள் கோசல தேசத்திலும், மராட்டிய தேசத்திலும் குடி பெயர்ந்தனர். ஈரான், சௌராஷ்ட்ரா, சிந்து தேசத்தில் வாழ்ந்த பஹ்லவியர் (பல்லவர்) தென்பாரதத்தில் குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்த சாளுக்கியர்கள். மராட்டிய தேசம் பாதாம் (வாதாபி) என்னுமிடத்தில் தலைநகர் அமைத்த ஆந்திர அரசர்களை விரட்டி ஆட்சி தொடங்கினர். இவ்வாறு குடிபெயர்ந்த ஆரீத - பஞ்சசிகா என்பவரின் வழித்தோன்றலான் பு-கேசி மராட்டிய தேசம் முதல் ஈரான் வரை ஆட்சி செலுத்தினான். தென்னாட்டின் மீது பு-கேசி படையெடுத்து வரும்போது நரசிம்ம பல்லவன் படைத்தளபதி பரஞ்சோதியார் (சோழன்) வாதாபியை தரைமட்டமாக்கி, பு-கேசியைக் கொன்று வாதாபியில் இருந்த கணபதி விக்ரஹத்துடன் நாடு திரும்பினார்.

இவர் மதுரையுலா, சிதம்பர புராணம் முத-யன இயற்றிய திருமலைநாதரின் மகனார். இவர் மெய்கண்ட சிவாச்சாரியார் வழிவந்த தத்துவஞான பிரகாச முனிவரின் சீடராவார்.

பரஞ்சோதியார்-சிறுத்தொண்ட நாயனார் எனப் போற்றப்படுவர். திருச்செங்காட்டாங்குடியில் வேதியர் குலத்தில் பிறந்தவர். வேத அத்யயனம், வில்வித்தை முத-யன கற்ற. சோழ அரசன் மந்திரியானார். இவரது மனைவி வெண்காட்டு நங்கை என்பவள். இவர்களுக்கு பிறந்த மகன் சீராளன் என்பவன். சிவனடியார்களக்கு அன்னமிடுவதை சங்கல்பமாகக் கொண்டவர் பரஞ்சோதியார். இவரை சோதிக்க சிவபெருமான் நரமாமிசம் உண்ணும் இமாசலவாசியான் பைராகி உருவம் தாங்கி, பிக்ஷு

கேட்கையில் பரஞ்சோதியார் ஒத்துக்கொண்டு வீட்டிற்கு அழைக்கையில் பிள்ளைக்கறி கேட்கையில், தனது மகனையே கொன்று சமைத்து உணவு பரிமாறுகையில், பைராகி, பரஞ்கோதியார் மகனையும் உடனிருந்து சாப்பிடும்படி கூற, பரஞ்சோதியார் அழைக்க சீராளன் உயிருடன் ஓடிவர, பைராகி மறைந்து சிவபெருமான் காட்சி தந்து அருளாசி வழங்கினார் என்று புராணம் கூறுகிறது.

(குறிப்பு : தென்னாட்டில் பிறந்த ஞானசம்பந்தர், அப்பர், சுந்தர், மாணிக்கவாசகர் போன்ற மகான்கள் செய்த அற்புத செயல்கள் போல உலகத்தில் எந்த தீர்க்கதரிசியும், தேவதூதர்களும் செய்யவில்லை. இது ஒன்றே தமிழ்நாடு, தமிழ்மொழி எவ்வளவு தெய்வீகமான என்பதைக் காட்டும்) .

## 54. திருஞானசம்பந்தர்

சோழ நாட்டில் பத்திரவர்மன் ஆட்சி செய்த போது சீர்காழியில், வேதியர் வம்சத்தில், கௌணியர் கோத்திரத்தில் சிவபாத இருதயர் என்பவருக்கும் பகவதியார் என்பவருக்கும் ஞான சம்பந்தர் அவதரித்தார். சிவபாத இருதயர் தனது மூன்று வயது குழந்தையான ஞானசம்பந்தரை அழைத்துக்கொண்டு குளத்திற்கு குளிக்கச் செல்கையில், குழந்தையை கரையில் விட்டு குளிக்கும்போது, பசியால் அழ, தோணியப்பர், உமாதேவியுடன் பிரஸன்னமாகி, உமாதேவியார் தனது முலைப்பால் எடுத்துச்சென்று ஞானசம்பந்தருக்கு கொடுத்தார்.

சிவபாத இருதயர் குளித்துவிட்டு வந்து குழுந்தையைப் பார்க்க வாயில் பால் வடிவதைக் கண்டு, பால் கொடுத்தது யார் என்று கேட்க, தோணியப்பரைக் காட்டி "தோடுடைய செவியன்" என்று பாட ஆரம்பித்தார். மறுநாள் சிவபாத இருதயர் குழந்தையை தோளில் தூக்கிக் கொண்டு திருக்கோலக்கா என்னும் ஊர் செல்ல, அங்கு "மடையில் வாளைபாய" என்னும் திருப்பதிகம் பாடி அருளினார் சம்பந்தர். அவர் கையில் ஆகாயத்தி-ருந்து "பொற்தாளம்" வந்து விழுந்தது. மூன்று வயது திருஞானசம்பந்தர் ஆசுகவி பாடுவதைக் கேட்க, திருநனிப்பள்ளி வேதியர் கேட்க ஆசைப்பட்டு அழைக்க, சிவபாத இருதயர் குழந்தையை தோளில் தூக்கிக் கொண்டு அவ்வூர் சென்று, அங்கு சம்பந்தர் திருப்பதிகங்கள் பாடி வேதியரை மகிழ்வித்தார். தனது தாய், தந்தையைக் காண தருமபுரம் வந்த திருநீலகண்ட யாழ்பாணர் (கீழ்சாதிக்காரர், யாழில் வல்லவர்) சம்பந்தரைக் கண்டு தரிசித்து, யாழில் அவரது திருப்பதிகங்களை இசைத்துக் காட்டி, சம்பந்தருடன் பிரியாதிருக்க வரம் பெற்றார். சிதம்பரம், திருஎருக்கத்தம் பு-யூர், திருநெல்வரியிலாத்துறை



(முத்துச்சிவிகை, முத்துக்கொடை, முத்துச்சின்னம் பெற்ற கோயில்) முத-ய பல ஊர்களில் உள்ள சிவபெருமானைப் பாடி சீர்காழி திரும்பி எட்டு வயதி`ல் உபநயனம் செய்து கொண்டார். பின்னர் திருநாவுக்கரசருடன் நட்பு கொண்டு பல சிவாலயங்கள் சென்றார். திருக்கண்ணார்கோயில், திருவடமாந்துறை, கொங்குநாடு, திருச்சாத்தமங்கை, திருச்செங்காத்தங்குடி,திருமருகல், திருப்புகலூர் திருவாரூர், திருக்கடவூர், திருவீழிமலை, வேதாரண்யம் முத-ய இடங்களில் அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டினார். இவருடன் சிறுத்தொண்ட நாயனார், (பரஞ்சோதியார்) . திருநீலநக்க நாயனார், குங்கி-க்கலய நாயனார், திருநாவுக்கரசர் முத-ய சிவபக்தர்கள் உடன் சென்று சம்பந்தர் செய்த அற்புதங்களைக் கண்டு அதிசயித்தனர். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசி மந்திரி குலச்சிறையாரை சோழ நாட்டிற்கு அனுப்பி, சம்பந்தரை பாண்டி நாட்டிற்கு வரவழைத்தனர். இவர் மதுரையில் ஒரு மடத்தில் தங்கி இருக்கையில் சமணர்கள் அந்த மடத்திற்கு தீ வைத்தனர். சம்பந்தர் அந்த தீ பாண்டியன் மேல் பரவுக என்று அருளாணையிட்டார்.

பாண்டியன் அரிகேசரி நெடுமாறன் வெப்பு நோயால் வருந்திய போது சமணமுனிவர்கள் மருந்து கொடுத்தும், மயிற் பீ-யால் மந்திரித்தும் அந்நோய் அடங்கவில்லை. மந்திரி குலச்சிறையார், சம்பந்தருடைய பெருமையைக் கூறி, அரசன் அனுமதி பெற்று வரவழைத்து, சம்பந்தரை அரசனின் வெப்பு நோய் தீர்க்குமாறு வேண்டிக் கொண்டார். சம்பந்தர் அரசன் மீது திருநீறு பூசி நோயைக் குணமாக்கினார்.

பின்னர் சமணர்கள், சம்பந்தரை அனல் வாதத்திற்கு அழைத்தனர். சமண முனிவர்களின் மந்திர ஓலை தீயில் இட அவை எரிந்து போயிற்று. சம்பந்தர் எழுதிய தமிழ் பதிகம் ஓலையை தீயில் இட அது பசுமையாக எரிந்து போகாமல் இருந்தது. பின்னர் சம்பந்தர் எழுதிய மந்திர ஓலையை வைகை ஆற்றில் எதிர்த்துச் சென்று கரை ஒதுங்கியது. சமணர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர். சமண மதத்தை தழுவியிருந்த அரசனும் மக்களும் சைவர்களாக மாறினர். "கூன் பாண்டியன்" என இகழப்பட்ட பாண்டிய அரசன் "நின்ற சீர் நெடுமாறன்" என புகழப்பட்டான். சம்பந்தரின் இந்த அற்புதச் செயல்கள் நாடெங்கிலும்` பரவியது.

சம்பந்தருடன் வாதிட்ட பௌத்த சந்நியாசிகள் சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன், கந்தசேனன், கனகசேனன் கனகநந்தி, புஷ்பநந்தி, பசனநந்தி, சுனகநந்தி, குணகநந்தி, திவணநந்தி, அநகநந்தி, முத-யோர் சம்பந்தருடன் வாதிட்டுதோல்வியுற்று சைவர்களாக

மாறினர். திருநாவுக்கரசர்(அப்பர்) சம்பந்தர் ஆகிய இருவரும் அநேக ஊர்களுக்குச் சென்று சிவ மதத்தை பரப்பினர். ஆண் பனைகளை பெண்பனைகளாக மாற்றியும், இறந்த வணிக புத்ரனை எழுப்பியும், மயிலைக்கு வந்து சிவநேசச் செட்டியார் மகள் பூம்பாவையின் எலும்புகளி-ருந்து மீண்டும் உடலோடு, உயிரோடு பூம்பாவை வரவழைத்துக் கொடுத்தார். உலகில் ஞானசம்பந்தர் அளவிற்கு அற்புதங்கள் செய்து காட்டியவர்கள் பிறந்ததே இல்லை. பௌத்த, சமண மதங்கள் அழிந்து மீண்டும் இந்து மதம் பரவிற்று.

சிவவாத இருதயர் சம்பந்தருக்கு திருமணம் செய்ய விரும்பி திருநல்லூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் குமாரியை நிச்சயம் செய்து, பெருமணம் என்னும் ஊரில் சம்பந்தருக்குத் திருமணம் செய்துவித்தார். திருமணம் முடிந்ததும் சம்பந்தர், அவர் மனைவி, திருநீலநக்க நாயனார், நம்பியாண்டார் நம்பி, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மற்றும் திருமணங்காண வந்த பலரும் சிவபெருமான் கர்ப்பகிருஹத்தில் நுழைந்து ஜோதியாய் மறைந்தனர். (சம்பந்தர் காலம் கி.பி.634 - கி.பி.650) .

## 55. திருநாவுக்கரசர்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாய்மூரில் வேளாளர் குலத்தில், குறுக்கையார் குடியில், புகழனாருக்கும், மாதினியாருக்கும் திலகவதி என்னும் பெண்ணும், மருணீக்கியார் என்ற மகனும் பிறந்தனர். திலகவதியார் மணப்பருவம் அடைந்ததும், அரசனிடத்தில் சேனாதிபதியாக இருந்த க-ப்பகையாருடன் திருமணம் செய்ய நிச்சயித்தனர். திடீரென போர் ஏற்பட்டு க-ப்பகையார் போரில் இறந்தார். திலகவதியாரின் தாய் தந்தையாரும் இச்செய்தி கேட்டு இறந்தனர். திலகவதியார், தம்பியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் உயிர் விடாது திருவதிகை வீரட்டானம் சென்று இறைபணியில் ஈடுபட்டார்.

மருணீக்கியார், திருப்பாதிரிப்பு-யூர் சென்று சமண மதத்தில் சேர்ந்து படித்து தருமசேனர் என்று தனது பெயரை மாற்றிக்கொண்டு சமணப் பள்ளி ஆசிரியராக இருந்தார். அவருக்கு சில நாட்களில் சூலை நோய் கண்டது. சமண முனிவர்கள் கொடுத்த மருந்துகள், செய்த மந்திரத் தந்திரங்கள், தருமசேனரை குணமாக்க முடியவில்லை. எனவே தனது தமக்கை திலகவதியார் வீடு வந்து சேர்ந்தார். திலகவதியார் தனது தம்பியை சிவபெருமான் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று விபூதி பிரசாதம் பெற்று உட-ல் தடவ சூலைநோய் அகன்றது. பின்னர் திருப்பாப்பு-யூர் சிவபெருமான்



மீது அநேக பதிகங்கள் பாடி "திருநாவுக்கரசர்" எனப் புகழப்பட்டார்.

திருநாவுக்கரசர் சமண மதத்தைத் துறந்து சைவராக மாறியதைத் தொடர்ந்து சமண முனிவர்கள் திருமுனைப்பாடி சிற்றரசன் காடவர்கோன் என்பவனிடம் சென்று முறையிட்டனர். காடவர்கோன் என்னும் அரசனும் சமண மதத்தைச் சார்ந்தவன். பல்லவ சிற்றரசன் காடவர்கோன், திருநாவுக்கரசரை நீற்றறையில் இ`ட்டும், விஷம் கொடுத்தும், யானைவிட்டு காலால் அவர் தலையை இடறும்படி ஆணையிட்டும். மலையி-ருந்து உருட்டி விட்டும், கல்-ல் கட்டி கட-ல் இ`ட்டும் கொடுமைகள் செய்தான். எல்லாத் தண்டனைகளி-ருந்தும் திருநாவுக்கரசர் தப்பி உயிர் பிழைத்தார். திருநாவுக்கரசர் செய்த அற்புதங்களைக் கண்ட காடவர்கோன் என்னும் அரசன் சமண மதத்தைத் துறந்து சிவபக்தனாகி, "குணதரீஸ்வரன்" கோயில் கட்டினான்.

திருநாவுக்கரசர் பின்னர் திருஞானசம்பந்தருடன் கூடி பல ஊர்களுக்குச் சென்று சைவ மதத்தை பரப்பினார். திங்களூர் என்னுமிடத்தில் அக்காலத்தில் வாழ்ந்த அப்பூதி அடிகள் என்பவர் திருநாவுக்கரசரைக் காணாமலேயே அவர் மீது பக்தி கொண்டு தனது பிள்ளைகளுக்கு திருநாவுக்கரசு எனப் பெயர் சூட்டி, திருநாவுக்கரசர் பேரில் பலப்பல பொதுத் தொண்டுகள் செய்து வந்தார். அப்போது திங்களூர் வந்த திருநாவுக்கரசரை, அப்பூதி அடிகள் வரவேற்று வீட்டிற்கு அமுதுண்ண அழைத்தார். அக்போது வாழை இலை பறிக்க கொல்லலைப்புறம் சென்ற அப்பூதி அடிகளின் மகன் பாம்பு கடித்து இறந்துவிட்டான். திருநாவுக்கரசர் சிவபெருமானைத் துதித்து இறந்த பி`ள்ளையை எழுப்பித் தந்தார்.

திருநாவு`க்கரசர் பல சிவாலயங்கள் கண்டு தரிசித்து, காசி`க்குச் சென்று அங்கிருந்து கைலாசம் சென்று அங்கு சிவபெருமானைத் தரிசித்து, ஒரு தடாகத்தில் மூழ்கி, திருவையாற்றில் ஒரு தடாகத்தில் எழுந்து, தமிழ் வேதத்தை தமிழ்நாட்டில் பரவச் செய்து, பூம்புகார் சென்று சிவபதம் அடைந்தார். (திருநாவுக்கரசர் - அப்பர் வாழ்நத காலம் கி.பி. 567 முதல் கி.பி.648) .

## 56. சுந்தரமூர்த்தி நாயனார்

பாண்டி நாட்டில் நின்ற சீர் நெடுமாறன் ஆட்சிபுரிகையில் சோழ நாட்டில் பத்திரவர்மன் என்ற அரசனும், காஞ்சிபுரத்தில் மணிமுடிச் சோழனும் ஆட்சி செய்து வந்தனர். இ`க்காலத்தில் திருநாவலூர் என்னும் ஊரில், ஆதிசைவ பிராம்மணர் குலத்தில் சடையனாருக்கும், இசைஞானியார் என்னும் பெண்மணிக்கும் சுந்தரர் அவதரித்தார். இவரது இயற்பெயர் நம்பி ஆரூரார்.

நரசிங்க முனையரையர் என்னும் அந்நாட்டரசர் நம்பி ஆருராரைக் கண்டு, அவருடைய தந்தை சடையனாரிடம் வேண்டி தன் அரண்மனைக்கு எடுத்துச் சென்று வளர்த்தார். சுந்தரர் வளர்ந்து பெரியவனாக ஆனதும், புத்தூர் என்னும் ஊரைச் சேர்ந்த சடங்கவி - மறையோன் என்னும் அந்தணனது குமாரியை திருமணம் செய்யும் நேரத்தில், ஒரு கிழவர் உருவில் சிவபெருமான் தோன்றி, சுந்தரர் எனது அடிமை எனக் கூறி ஒரு ஓலைச்சுருளை ஆதாரங்காட்டி, திருவெண்ணைநல்லூர் கோயில் கருவறை அழைத்துச்சென்று மறைந்தார்.

சுந்தரருக்கு சிவபெருமான் தரிசனம் கிடைத்தது. "பித்தாய் பிறைசூடி" என்னும் பதிகத்தைப் பாடித் துதித்தார். திருவாரூருக்குச் சுந்தரர் சென்றபோது, சிவபெருமான் அவரைத் தோழர் என்று அழைத்தார். பின்னர் திருவாரூர் ருத்திரகணிகை பரவை நாச்சியாரைத் திருமணம் செய்து கொண்டார். கோட்பு-யார் தனது புத்ரிகளான கிங்கடி, வனப்பகை என்பவர்களை சுந்தரருக்கு பணியாட்களாகக் கொடுத்தார். திருமுதுகுன்றம் அடைந்து அங்கு சிவபெருமான் அருளால் 1200 பவுன் பெற்று, மணிமுத்தா நதியில் போட்டுவிட்டு, திருவாரூர் குளத்தில் திரும்பப் பெறவேண்டும் என்று சிவபெருமானிடம் வேண்டிப் பெற்றார். திருவொற்றியூர் என்னும் ஊரையடைந்து அங்கு சங்கி- நாச்சியாரைக் கண்டு மோகித்து மகிழ மரத்தடியில் சத்தியம் செய்து மணந்து கொண்டு பின்னர் சத்தியத்தை மீறி திருவாரூக்குப் புறப்படும்போது இரண்டு கண்கள் பார்வையிழந்து, காஞ்சி அடைந்து ஒரு கண்பார்வை பெற்று, திருவாரூர் அடைந்து மற்ற கண் பார்வையும் பெற்று பரவை நாச்சியாருடன் மீண்டும் வாழ்ந்தார். ஏயர்கோன் க-க்காம நாயனார் இறைவனை சுந்தரர் தோழனாக நினைப்பது கண்டு பொறாது உயிர் விட்டார். சுந்தரர் மீண்டும் ஏயர்கோன் க-ˋக்காமரை உயிர்ப்பித்து, இறந்த சிறுவர்களை உயிர்ப்பித்து பல அற்புதங்கள் செய்து காட்டினார்.

பின்னர் திருவஞ்சைக்களம் சென்று சிவபிரானிடம் முக்தியருள வேண்ட வானுலகி-ருந்து வெள்ளையானை மீதேறி வானுலகம் சென்றார். சுந்தரனின் நண்பரான சேரமான் பெருமாள் நாயனார் வானுலகி-ருந்து வந்த வெள்ளைக் குதிரை மீதேறி கைலாயம் சென்றார். (இந்நாட்கள் ஔவையார் உயிரோடு இருந்தார் என்றும் கூறுவர்) .

சுந்தரர் காலத்தில் சோமயாஜி மாறனார், பெருமிழிலைக் குறும்பர், விறன்மிண்ட நாயனார், கோட்பு- நாயனார், மானக்கஞ்சாற நாயனார், சடையனார், ஏயர்கோன் க-க்காம நாயனார், இசைஞானியார் (சுந்தரரின் தாய்) முத-யோர் வாழ்ந்தனர். இளங்கோ



அறையர் என்னும் அரசனும் இக்காலத்தில் சோழ அரசனாக இருந்தார். (சுந்தரரது காலம் கி.பி. 630 முதல் கி.பி.660) .

(தேவாரம் பாடிய நால்வர் அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்கள் பாடியதே தமிழ்மறை எனப்பட்டு ஓதப்படுகிறது).

## 57. சித்தன்-போக தத்தன்

மஹாபாரதப் போருக்குப் பிறகு துரோணாச்சாரியார் மகன் அஸ்வத்தாமா மற்றும் துநுர்வேதியான விஸ்வாமித்திரரின் புதல்வர். சாளுவ குடும்பத்தினர் முத-யோர் குஃபா(ஈராக்) என்னுமிடத்திற்கு வந்து அங்கு வாழ்ந்த சேரர்கள் - அதியமான் குடும்பத்துடன் சேர்ந்து வாழ்ந்தனர். இவர்கள் வழியில் வந்தவனே பாரத தேசத்தவனான சித்தன் - போகதத்தன்(மீர்-சித்தானி) என்பவன். ஈராக்கிய தேசத்தில் சிற்றரசனாக இருந்தான். இக்காலத்தில் சஹாய-ராய், ஹரி ராய், வாஜ் என்பவர்கள் தத்தனின் நாட்டில் வசித்து வந்தனர். மேலும் ராய்-புண்ணியன் அவனுடைய ஏழு குமாரர்களும், தத்தனுடைய நாட்டில் வசித்து வந்தனர். இவர்கள் பிராமணர்கள்.

முகமது நபியின் மருமகன் அ- 27.1.661 A.D. பிரார்த்தனை செய்யும்போது குரைஷிகளால் அனுப்பப்பட்ட துரோகிகளால் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டான். அ-யின் மூத்த மகன் ஹாஸன். இரண்டாவது மகன் ஹுசேன்.

குரைஷிகளின் கொடுமை தாங்காமல் ஹுசேன்தனது மனைவி குழந்தைகளுடன் ஈராக்கில் குடியேறினர். அங்கே "கெர்பலா" என்னுமிடத்தில் ஹுசேனும் அவனது குடும்பத்தாரும் கொல்லப்பட்டனர்.

ஹுசேன் இறந்த 6 வருடங்களுக்குப் பிறகு கி.பி.686 இல் "முக்தார்-பின்-அபி-ஒபையது", ஹுசேன் மரணத்திற்குப் பழிவாங்க படைகளோடு ஈராக் புறப்பட்டனர். இவனது படையில் அஸ்வத்தாமா வழி வந்த பிராமணர்களும் இருந்தனர்.

"சித்தன் -போகதத்தன்" என்னும் சிற்றரசன் முகமது நபி, அவர் மகன் அ-, அ-யின் புதல்வன் ஹுசேனுக்கு நட்பாக இருந்தனர். "வாஜ" என்னும் ஹிந்து சாமியார் ஹுசேனுக்காக போராடி இறந்தார். சஹாய-ராயன், ஹரி-ராயன், ராயன்-புண்ணியன் இவனது ஏழு குமாரர்களும் முகமது நபியின் பேரன் ஹுசேனுக்காக போராடி இறந்தனர்.

முகமது நபி என்பவர், அரேபியா தேசத்திலுள்ள மெக்கா என்னும் தலைநகரில் குரைஷி வம்சத்தில் அப்துல் முத்த-ப்

என்பவரின் இளைய குமாரன் அப்துல்லாவுக்கும் ஆமீனா என்பவளுக்கும் 29-8-571 A.D. திங்கட்கிழமை காலையில் பிறந்தார். இவர் பிறப்பதற்கு சில மாதங்கள் முன்பாக தந்தை அப்துல்லா காலமாகிவிட்டார். இவருடைய ஐந்தாவது வயதில் தாயார் ஆமீனாவும் காலமாகிவி`ட்டார். இவர் பிறகு பாட்டன் அப்துல் முத்த-ப் என்பவர் வீட்டில் வளர்ந்தார். அதற்குப் பிறகு இவருடைய பெரிய தந்தை ஆபூத்-தலீப் வீட்டில் 25 வயது வரை நபிகள் நாயகம் வளர்ந்தார்.

நபிகள் தனது 25 வயதில், மெக்காவி`ல் உள்ள சீமாட்டி கதீஜா என்பவர் நடத்திய வியாபாரத்தில் பணியாற்றினார். சிரியா முத-ய தேசங்களுக்கு பல ஒட்டகங்கள் மீது பொருள்களை ஏற்றிக்கொண்டு சென்று வியாபாரம் செய்து வந்தார். அப்போது அரேபியா தேசத்திற்கு வந்த பல பாரத தேசத்து வணிகர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. மிகவும் நாணயமாகவும் ஒழுக்கத்துடனும் நடந்து கொண்ட இவர் மீது கதீஜாவிற்கு காதல் ஏற்பட்டது. நபிகள் தனது 25வயதில் தன்னைவிட 15வயது மூத்தவரான (40 வயது) விதவை கதீஜா-வை திருமணம் செய்து கொண்டார். கதீஜாவுடன் நபிகள் 25 வருடம் இல்லறம் நடத்தினார்.

அரேபியா தேசத்து வாசிகள் 300க்கு மேற்பட்ட உருவச்சிலைகளை வணங்கியும், கடல் கொள்ளை, அடிமை வியாபாரம், கொலை, கொள்ளை, பெண்களை வைத்து விபசாரம் செய்தல், முத-யனவற்றை செய்து வந்தனர். ஆளும் ஜாதியான குரைஷிகள் கொடுங்கோலர்களாக இருந்தனர். உருவச்சிலைகளுக்கு நரப- கொடுத்து வணங்கினர். எகிப்திய தேசத்து பழக்க வழக்கங்களை(தலை மொட்டை அடித்துக் கொள்ளுதல், சுன்னத் செய்து கொள்ளுதல்) மேற்கொண்டு கீழ்த்தரமான செயல்கள் புரிந்து அராஜகம் புரிந்து கொண்டு இருந்தனர். இதன் காரணமாக வருத்தமுற்று தனது 40-வது வயதில், மெக்காவிற்கு அருகில் உள்ள ஹீரா மலைக்கருகில் இறைவனை நோக்கி தவம் இருந்து உண்ணாவிரதத்தில் இருந்தார். 27-வது நாளில் நபிகள் முன் “ஜிப்ராயில்” என்னும் தேவதூதன் (இறக்கைகளுடன் கிரீடம் தரித்தும்) அவர் முன் தோன்றி இறைவனுடைய கட்டளைகளை அவரிடம் தெரிவித்தான். அது முதற்கொண்டு நபிகள் நாயகம் “இஸ்லாம்” என்னும் அன்பு மதத்தை பிரச்சாரம் செய்யத் தொடங்கினார். உருவற்ற ஒரே கடவுளை வழிபடுவது, எல்லோரையும் சகோதரர்களாகக் கருதுவது, வட்டி வாங்காமல் இருப்பது, ரமலான் மாதத்தில் நோன்பு மேற்கொண்டு, ஏழை எளியவர்களுக்கு உதவுவது



என்பன போன்ற சமத்துவக் கொள்கைகளை போதிக்கத் துவங்கினார். நபிகள் நாயகத்தை இப்ராஹிம், மோசஸ், ஏசுநாதர் முத-ய தீர்க்கதரிசிகள் வழியில் வந்த போதகர் என்று போற்றினர். (இஸ்லாமியர் முற்பிறப்பு, பாவமன்னிப்பு முத-ய கோட்பாடுகளை அங்கீகரிக்கவில்லை) . நபிகள் நாயகத்தின் போதனைகளைக் கண்டு குரைஷிகள் அச்சப்பட்டு அவரைக் கொலை செய்ய பலமுறை முயன்றனர். நபிகள் நாயகத்தை காப்பாற்ற அவரது சீடர்கள் தன் உயிரைத் தியாகம் செய்தனர். நபிகள் என்னும் பட்டம் பெற்ற பிறகு 10 வது ஆண்டில் அவரது மனைவி கதீஜாவும் சிறிய தந்தை ஆபூத் தலீபும் இறந்தனர். ஆபுத்தலீபின் மகன் அ-. இவர் முகமது நபியின் மருமகன். மெக்காவுக்கு வடக்கே உள்ள மதீனாவில் கி.பி.632-இல் நபிகள் இறைவனடி சேர்ந்தார்.

நபிகளுக்குப் பிறகு அ- இஸ்லாமிய மதத்ததை பரப்பி வந்தார். இவர் குரைஷிகளின் கொடுமை தாங்காமல் முராக்கிற்கு தப்பி வந்து ஒரு மசூதியில் பிரார்த்தனை செய்யும்போது துரோகிகளால் கொல்லப்பட்டார். அ-யின் பிள்ளைகளுக்கு சித்தன்-போக-தத்தன் அடைக்கலம் கொடுத்து காப்பாற்றினான். இதனால் குரைஷிகள் இவன் மீது கோபம் கொண்டுஅவனைக் கொன்றனர். அ-யின் இரண்டாவது மகன் ஹுசேனைக் காப்பாற்ற போராடிய ஹிந்து சாமியார் வாஜ் மற்றும் ராய்-புண்ணியன் அவனது ஏழு குமாரர்களையும், பிராமணர்களையும் குரைஷிகள் கொன்றனர்.

பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இஸ்லாமிய மதம் அரேபியா , ஈராக், ஈரான், பாரதம், இந்தோனேஷியா முத-ய பல கண்டங்கிளிலும் பரவிற்று. இஸ்லாமிய மதம் பரவிய பிறகு ஹிந்துக்கள் (சாளுக்கியர்கள் பல்லவர்கள், சௌராஷ்ட்டிரர்கள், கோசலர்கள்) பாரத நாட்டிற்கு அகதிகளாக ஓடி வந்து தங்கி வாழ ஆரம்பித்தனர்.

(முகமது நபியின் காலம் கி.பி.571 முதல் கி.பி.632 வரை)

புராண காலத்தி`ல் பெர்ஷியன் கடல், அரபிக்கடல், இவைகளை பாற்கடல் என்று அழைத்ததாக கூற ஆதாரங்கள் உள்ளன. “காஃபா” என்னும் சதுர வடிவமான கல்லை இஸ்லாமியர் ஏழுமுறை சுற்றி வணங்கி வருகிறார்கள். இந்`தக் கல்-ல் ஸ்ரீஹரியின் பாதம் உள்ளதாகவும், விகுண்டை என்னும் அரசன் வாழ்ந்த வைகுண்டம், அரேபியா என்றும் கூறப்படுகிறது. பாரத தேசத்தி-ருந்து ராஜா விக்ரமாதித்தன் இவ்விடம் வந்து தங்கவாள், தங்க கேடயம், சுதர்சன சக்கரம், சங்கு, முத்துமாலைகள் தந்தத்தினால் செய்யப்பட்ட பெட்டி முத-யவற்றை அர்ப்பணம் செய்துள்ளான் என்றும் கூறப்படுகிறது.

இங்கு வாழ்ந்த பாரத தேசத்தவர்களான சாளுக்கியர்கள் (ஸ்ரீஹரியை ஆதிவராகமூர்த்தியாக வழிபடுபவர்கள் - பன்றிக் கொடி உடையவர்கள்). இந்த புனித இடத்தில் திருவிக்கிரம அவதாரத்தின் போது பாதம் பதிந்த இடமாக வழிபட்டு வந்தனர் என்றும் கூறப்படுகிறது. சாளுக்கியர்கள் (சால்டியர்கள்) ஸ்ரீஹரியை வராகமூர்த்தியாக வழிபட்டு வந்ததால், இஸ்லாமியர்களாக மாறியதும் கூட சாளுக்கியர்கள் பன்றி மாமிசம் சாப்பிடமாட்டார்கள். வராகத்தை தெய்வமாக மதி்ப்பவர்கள் இஸ்லாமியர்கள்) .

**இஸ்லாமியரின் வேதங்கள்**

1. தென்ராத்து
2. ஜபூரு
3. இஞ்சிலு
4. குர்-ஆன்

**இறைவனால் (அல்-லாஹ்) அனுப்பப்பட்ட தேவதூதர்கள்**

1. ஜிப்ராயில்
2. மிகாயேல்
3. அஸ்ராயேல்
4. இஸ்ரவேல்

(1–4) பூமிக்கு மேல் ஏழு உலகங்கள் உண்டு ஏழாவது உலகத்தி-ருந்து இறைவனால் அனுப்பப்பட்ட தேவதூதர்கள்

5. ஹிப்லீஸ் - சைத்தான்

## 58. விஜயாலயன்

திருஞானசம்பந்தர் காலத்தில் (கி.பி.634 முதல் கி.பி.650) சோழ நாட்டை ஆண்ட அரசன் பத்திரவர்மன் என்பவன். இவனுக்குப் பிறகு ஆதித்த சோழன் (கி.பி.660 முதல் கி.பி.690 முடிய) சுவரன்மாறன் (கி.பி.660 முதல் கி.பி.690 முடிய) பிறகு பராங்குசவர்மன் சுபசோழன் (கி.பி.690 முதல் கி.பி.720முடிய), முத்தரையன் சுவரன் மாறனுக்குப் பிறகு தஞ்சையில் விடேல் விடுகு முத்தரையன்(கி.பி.690 முதல் கி.பி.720) சுபச்சோழன் மகன் குமராங்குச வர்மன் இரண்மய சோழன் (கி.பி.710 முதல் கி.பி.765 வரை) தஞ்சையில் சாத்தன் பழியி- மாறன் பெரும்பிடுகு முத்தரையன், இரண்மய சோழன் வழியில் தாயுமானவ சோழன், சுராதிராஜன், குமராங்குசன் தர்்மவர்மன், இவன் மகன் சுராதி ராஜன் II, இவன் மகன் விஜயாலய சோழன், இடைகழியார் மரபில் வந்த அரசியின் புதல்வன், இவன் பலம் பொருந்தியவனாகி முத்தரையர்களையும், பல்லவர்களையும் வென்று சோழ நாட்டை விஸ்தரித்தான். (கி.பி.846 முதல் கி.பி.871 முடிய).

விஜயாலயன் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த வரகுணன் சடையவர்மன் (வீரவாகு) என்பவன் மீது போரிட்டு தோல்வியுற்றான்.



வரகுணனது முன்னோர்கள் மாறவர்மன் அரிகேசரி சத்ரு சாதன பாண்டியன் (கூன்பாண்டியன்-நின்றசீர் நெடுமாறன்). இவன் மனைவி காஞ்சி மணிமுடிச்சோழன் மகள் மங்கையர்க்கரசி . மாறவர்மன் அரிகேசரிக்குப் பிறகு சடையவர்மன் சுந்தரபாண்டியன், பாண்டியன் கோச்சடையன் ரணதீரன் (மனைவி சோழ தேவி) (கி.பி.670 முதல் கி.பி. 710 முடிய), தேர் மாறன், சடையன் ராஜசிம்மன் I ,(கி.பி.661 முதல் 700 முடிய) பாண்டியன் அரிகேசரி பாராங்குசவர்மன் (கி.பி.661 முதல் கி.பி.750) , நெடும்சடையன் பராந்தகன் (கி.பி.701 முதல் 710) ,மாறவர்மன் ராஜசிம்மன் II, (கி.பி.741 முதல் 760), வரகுணன் சடையவர்மன் III (கி.பி.761 முதல் 780) , ஸ்ரீமாறன் பரசக்கர கோலாஹலன், இவன் மனைவி சோழ தேவி (கி.பி.781 முதல் கி.பி. 878) , இவன் மகன் நிருபதுங்க வர்மன் (கி,பி.820 முதல் கி.பி.825) இவன் மகன் வரகுண சடையவர்மன் (வீரவாகு) (கி.பி.826 முதல் கி.பி.876) , வரகுணன் சடையவர்மன் மீது விஜயாலயச் சோழன் போரிட்டுத் தோற்றான்.

பிரசித்தி பெற்ற மகேந்திரவர்ம பல்லவனுக்குப் பிறகு நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி.630 முதல் கி.பி.668) , பரமேஸ்வர பல்லவன், மகேந்திரவர்ம பல்லவன் II, நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி. 660 முதல் கி.பி.710) , ராஜசிங்கன்(கி.பி.685 முதல் கி.பி.720) (இவன் காலத்தில் தண்டி என்னும் சிவபக்தர் வாழ்ந்தார்) , ஜயவர்மன் (கி.பி.721 முதல் கி.பி.764) , நந்திவர்மன் II (கி.பி.825 முதல் கி.பி.850) நந்திவர்மன் II மனைவி சங்கா (அமோகவர்மன் மகள்) . இவள் சமண மதத்தைச் சேர்ந்தவள். சிவபூஜைக்குரிய பூவை முகர்ந்ததால் செருத்துணை நாயனார் இவளது மூக்கை அறுத்துவிட்டார். நந்திவர்மன் II-ன் இன்னொரு மனைவி கண்டன் மாறன்பாவை (இவள் சைவ மதம்) . நிருபதுங்க வர்மனுக்கும் வீரமஹாதேவிக்கும் பிறந்த அபராஜித பல்லவன் (கி.பி.,825 முதல் கி.பி.893) , சூர்யவர்மன், பரகேசரிவர்மன் (விஜயகம்பவர்மன்), இவன் மகன் ஜயவர்மன்II (வயிரமோகன்) (கி.பி.830முதல்) முத-ய பல்லவ அரசர்கள் ஆண்டனர். ஜயவர்மன் II-ஐ விஜயாலயனும் அவன் மகன் ஆதித்த சோழனும் தோற்கடித்து பல்லவராஜ்யத்தை சோழ அரசுடன் இணைத்துக்கொண்டனர்.

சேர அரசர்கள் சேரமான் பெருமான் நாயனாருக்குப் பிறகு பல்லவர்கள் சேரநாட்டை ஆண்டனர். மெய்ப்பொ்ருள் கண்ட சேரன்II, கொடுங்கோளூர் சேரமான், பெருமாள் நாயனார், பின்னர் பிருதிவீபதி சேரன் முத-யோர் சேர நாட்டை ஆண்டனர். பிருதிவீபதியை விஜயாலயன் மகன் ஆதித்தசோழன் போரில் தோற்கடித்து சேர நாட்டை சோழ அரசுடன் சேர்த்துக் கொண்டான்.

பல்லவ அரசன் ராஜசிங்கன் காலத்தில் வாழ்ந்தவர் தண்டியடிகள் நாயனார். திருவாரூரில் பிறந்தவர். பிறவிக் குருடர். இவர் கோயில் குளத்தை ஆழப்படுத்தும் போது சமணர்கள் கே-செய்தனர். பதிலுக்கு "எனக்கு கண் தெரிந்து விட்டால் நீங்கள் அனைவரும் ஊரை விட்டு ஒடி விடுவீர்களா?" -என்று கேட்டார். சிவபெருமான் அருளால் இவர் குளத்தில் குளித்து எழும்போது பார்வை பெற்றார். சமணர்கள் குருடர்களாயினர். அரசன் ராஜசிங்கன், தண்டியடிகளைப் போற்றி சைவன் ஆனான். (தண்டி அலங்காரம் இவர் செய்த நூல்) .

## 59. இராஜராஜசோழன்

தமிழ்நாட்டில் ராஜராஜசோழன் ஆட்சியை பொற்காலம் என்று கூறலாகும். தஞ்சை பெரிய கோயிலைக் கட்டியவன் ராஜராஜன். பெரும் சிவபக்தன். இம்மன்னன் விஜயாலயச் சோழன் வழி வந்தவன்.

விஜயாலயச் சோழனுக்குப் பிறகு (கி.பி.846 முதல் கி.பி.871), அவன் மகன் ராஜகேசரி ஆதித்தசோழன் (கி.பி.871 முதல் கி.பி.907), பராங்குசன் அரிகேசரி (கி.பி.907 முதல் 953) , பராந்தகன் வீரநாராயண சோழன் (கி.பி.907 முதல் கி.பி.947) , கந்தராதித்தன் (ராஜாதி ராஜன், ராஜாதித்யன்) (கி.பி.949 முதல் கி.பி.957) , சுந்தரச்சோழன் (கி.பி.956 முதல் கி.பி.970) , மதுராந்தகன் உத்தமசோழன் (கி.பி.970 முதல் கி.பி.984), சுந்தரச் சோழன் மூத்த மகன் ஆதித்ய கரிகாலன், பிறகு சுந்தரச் சோழனின் இரண்டாவது மகன் "பொன்னியின் செல்வன்" ராஜராஜ சோழன் (கி.பி.985 முதல் கி.பி.1017) ஆட்சி செய்தான்.

அருண்மொழித்தேவன் என்னும் ராஜராஜசோழன் பாண்டிய தேசத்தின் மீது படையெடுத்து சடையன் - குலவர்த்தனன் - அமரபுஜங்கன் மற்றும் குமாரசந்திர பாண்டியன், ராஜமார்த்தாண்ட வர்மன் என்னும் பாண்டிய அரசர்களை வென்று பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சியை ஏற்படுத்தினான். அமரபுஜங்கனுக்கு முன் வாழ்ந்த பாண்டிய அரசர்கள் வருமாறு : வரகுணன் சடையவர்மன் (கி.பி.826 முதல் கி.பி.876) , மகுடவர்த்தனன் மாறவர்மன் பராந்தகன் II (கி.பி.876 முதல் கி.பி.917) , சடையவர்மன் குமாரசிம்மன் (ராஜசிம்மன் III), வீரசேனன், வஜ்ஜிரசிம்மன் (கி.பி.918) , பின்னர் சோழ ஆட்சி, பிரதாப ராஜ பாண்டியன் மாறவர்மன் குலோத்துங்கன், வீரபாண்டியன் -வீரகுணராஜன் - அதிவீரராமன் (கி.பி.948 முதல் கி.பி.968) அமர புஜங்கன் நெடும்செழியன் (கி.பி.968 முதல் கி.பி.995 வரை) .

ராஜராஜசோழன் பிறகு கங்கபாடி, நுளம்பாடி, வேங்கிநாடு,



குடகு, காந்தளூர் போரில் சேரநாட்டுக் கப்பல்களை கொளுத்தி சேர நாட்டைப் பிடித்தான். தன் மகன் ராஜேந்திரனை வேங்கி நாட்டு மன்னனாக்கி, சாளுக்கிய அரசன் விமலாதித்தியனை சிறைபிடித்தான். (விமலாதித்தன் சோழ இளவரசி குந்தவையை மணந்து மீண்டும் கீழைச்சாளுக்கிய நாட்டை வேங்கியி-ருந்து ஆண்டான்) கொல்லம், ஈழம் முத-யவற்றை சோழ சாம்ராஜ்யத்தில் இணைத்தான். மாயிருடிங்கம், மாபப்பாளம், இலாமுரித்தேசம், காழகம், காம்போஜனம் முத-ய நாடுகளுடன் தொடர்பு கொண்டு கப்பல் வாணிபத்தை பெருக்கினான். ராஜராஜ சோழனின் மனைவியர் பஞ்சவன் மாதேவி, அபிமானவல்-, சோழமாதேவி, தந்திசக்தி விடங்கி, திரைலோக்கிய மாதேவி என்னும் ஐவர். இவனது குமாரன் ராஜேந்திரன். குமாரியர்கள் குந்தவ்வை, மாதேவ அடியள் முத-யவர்கள், ராஜராஜசோழனின் தமக்கை குந்தவ்வை. இவனது கணவன் வந்தியத் தேவன். அமைச்சர் அன்பில் அநிருத்த பிரம்மராயர், பழுவேட்டரையர்கள் அமைச்சர்கள், இவளது குரு கருவூர்த்தேவர், ராஜராஜன் சைவ, வைணவ, சமண புத்த மதங்களை ஆதரித்தான்.

ராஜராஜசோழன் காலத்தில் வாழ்ந்தவர் நம்பியாண்டார் நம்பி என்னும் விநாயகர் பக்தர். திருநாறையூர் என்னுமிடத்தில் நம்பிகளின் தாய், தந்தையர் வேற்றூருக்குச் சென்றபோது, நம்பிகள் பிள்ளையாருக்கு நிவேதனம் எடுத்துச் சென்று பூஜை செய்தார். சிறுவனான நம்பிகள் எவ்வளவு வேண்டியும் விநாயகர் அன்னத்தை உண்ணவில்லை. எனவே சிறுவன் கோபமுற்று சிலை மீது மோதி உயிர்விட எத்தனிக்கையில் பிள்ளையார் பிரத்யக்ஷயமாகி அன்னத்தை உண்டார். பிறகு தினம் தினம் இவர் கொடுத்த அன்னத்தை பிள்ளையார் உண்டார். இதைக் கேள்வியுற்ற ராஜராஜசோழன் அங்கு வந்து வண்டி வண்டியாக கரும்பு, வாழைப்பழம், இளநீர் போன்றவற்றை கொண்டு வந்து கொடுக்க, நம்பிகளின் வேண்டுகோளின் பேரில் பி`ள்ளையார் அதனை உட்கொண்டார். ராஜராஜசோழன் வியந்து நம்பிகளை தனது பல்லக்கில் ஏற்று சுமந்து வந்து சிங்காதனத்தில் உட்காரவைத்து, நால்வர் பாடிய தேவாரத்தை பிள்ளையார் மூலம் கண்டறிந்து சிதம்பரம் கோயில் சென்று அவைகளை மீட்டு, நம்பிகள் மூலம் திருமுறைகளை (தமிழ் வேதம்) வகுக்கச் செய்தார். நம்பியாண்டார் நம்பிகள் பிள்ளையார் அருளால் இரட்டை மணிமாலை, திருவிருத்தம், திருஞானசம்பந்தர் மும்மணிக்கோவை, திருஞானசம்பந்தர் உலா மாலை, திருக்கலம்பகம், திருஞானசம்பந்தர் திருத்தொகை, திருநாவுக்கரசனின் திரு. ஏகாதச மாலை,

திருத்தொண்டர் சரிதம், திரு அந்தாதி முத-ய அரிய தமிழ் நூல்களை எழுதினார். ராஜராஜசோழன் காலத்தில் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம் மாற்றப்பட்டன. ராஜராஜசோழன் காலத்தில் கருநாடகத்தில் மைசூருக்கு கிழக்கேயும் சோழர் ஆட்சி பரவிற்று. ஆதித்யவர்மராஜேந்திரன் (கி.பி.867முதல்கி.பி.927), வீரநாரயண சோழன் (கி.பி.927 முதல் கி.பி.977) , தாசோத்திய ராயன், பராந்தக ராயன் அரிமா-, தேவராய சோழன், திரிபுவன வீரதேவ சோழன் (கி.பி.986 முதல் கி.பி.1023) முத-யோர் ஆண்டனர்.

ராஜராஜசோழன் காலத்தில் கீழை தேசங்களிலும் சோழர் ஆட்சி பரவியது. சைவ, வைணவ மதங்களும் பரவியது.

## 60. இராமானுஜர்

பாரத தேசத்தில், பல தெய்வங்கள், பல மதங்கள் இருந்தன. மூடப்பழக்க வழக்கங்கள், சாதி சண்டைகள், மதச் சண்டைகள் ம-ந்து மக்கள் பெரும் அல்லல்பட்ட போது, புத்தமதம், சமண மதம், தோன்றியது. புத்த மதம், சமணமதம், பாரதமெங்கும் பரவி நாஸ்திக கொள்கைகள் வலுப்பெற்று, சர்வாதிகாரம், அராஜகம் ஏற்பட்டது. இதன் காரணமாக ஆதிசங்கரர் ஆறு மதங்களை இணைத்து (காணாபத்தியம், கௌமாரம், சைவம், சாக்தம், வைணவம், சௌரம்) "அத்வைதம்" (இருப்பது ஒன்றே - பரமாத்மாவே) என்னும் சித்தாந்தத்தைப் பரப்பி பௌத்த, சமண மதத்தின் நல்ல கொள்கைகளை ஏற்று மீண்டும் ஹிந்து மதத்திற்கு புத்துயிர் அளித்தார். பின்னர் தோன்றிய சமயக் குரவர்கள் சைவ மதத்திற்கு புத்துயிர் அளித்து மக்களை சைவ மதத்திற்கு மாற்றினர். அவ்வாறே கிறிஸ்த்துவ மதமும், இஸ்லாமிய மதமும் தோன்றி, நாஸ்திக கருத்துக்களை அழித்து, பௌத்த, சமணர்களை வென்று ஆத்திகத்தை உலகெங்கும் பரப்பினர்.

ஏறத்தாழ கி.பி.1000-த்தில் சைவ அரசர்களின் கொடுங்கோன்மை அதிகரிக்கவே பாரதத்தில் மீண்டும் வைணவ மதம் (திருமால் பக்தி) பரவ ஆரம்பித்தது. பாரதத்தில் இஸ்லாமிய, கிறிஸ்த்துவ மதம் பரவச் செய்யாமல் தடுக்க ஹரிபக்தியை பரப்பும் வைணவ ஆச்சாரியர்கள் தோன்றினர். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இராமானுஜர்.

தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூர் என்னுமிடத்தில், ஹரித கோத்திரத்தை சேர்ந்த அந்தணர் ஆசூரிகேசவப் பெருமாளுக்கும், பூமிப் பிராட்டிக்கும் (க- 4119 ஆம் வருடம் 4.4.1107 A.D.) பிங்கள □சித்திரை மாதம் 13ஆம் தேதி, வியாழக்கிழமை, சுக்ல பஞ்சமி, திருவாதிரை நக்ஷத்திரத்தில் இராமானுஜர் பிறந்தார். இவர் மாதவப் பிரகாசர் என்பவரிடத்தில் கல்வி பயின்றார். பின்னர் காஞ்சிபுரம் வந்து அந்தண வகுப்பைச் சாராத பெரிய நம்பியை குருவாகக் கொண்டு வைணவ மதத்திலும், தமிழிலும் ஈடுபாடு கொண்டு ஆதிசங்கரர் ஏற்படுத்திய சித்தாந்தத்தை மறுத்து "விசிஷ்டாத்வைதம்" (திருமாலே - பரமாத்மா) என்னும் சித்தாந்தத்தை ஏற்படுத்தினார். வைணவ முனிவர் ஆளவந்தாரின் பாடல்களைக் கேட்டு பரவசமடைந்து அவரைக் காணச் சென்றார். இராமானுஜரைப் பார்ப்பதற்கு முன்பேயே ஆளவந்தார் காலமாகிவிட்டார். ஆளவந்தாரின் இறுதி ஆசைகளை நிறைவேற்ற சபதம் மேற்கொண்டார் இராமானுஜர். திருக்கோஷ்ட்டியூர் நம்பியிடம் "நாராயண" மந்திரம் உபதேசம் பெற்று எல்லோர்க்கும் உபதேசம் செய்தார். உறங்காவில்- என்னும் வேட்டுவனுக்கு உபதேசம் செய்து அவரை திருமால் பக்தராக்கினார். பின்னர் காஷ்மீர் வரை சென்று விசிஷ்டாத்வைதத்தை பரப்பினார். கீதா பாஷ்யம் முத-யன செய்து வடநாட்டில் யாத்திரை செய்து திருமால் பக்தியை பரப்பினார்.



திருவேங்கடம் சென்று சங்கு, சக்கரம் முத-யவற்றை பெருமாளை தரிக்கச் செய்து வேங்கடேசப் பெருமாள் கோயில் வைணவச் க்ஷேத்திரமாக்கினார். டில்- பாதுஷாவிடம் திருமா-ன் உற்சவ மூர்த்தி இருப்பதை அறிந்து, "இராமப் பிரியரை" பாஷாவிடம் கேட்க, பாதுஷா, நீரே வரவழைத்துக் கொள்ளும் என்று கூற, இராமானுஜர் உற்சவ மூர்த்தியை வருக, வருக என தியானித்து அழைக்க, டில்- பாதுஷாவின் புத்திரியிடமிருந்து உற்சவ மூர்த்தி எழுந்து, இராமானுஜர் தொடையில் வந்து அமர்ந்து கொண்டார். உற்சவ மூர்த்தியை எடுத்துக் கொண்டு திருநாராயணபுரம் (திருப்பதி) வந்து பிரதிஷ்டை செய்து பூஜைகள் செய்தார். பிறகு திருவரங்கம் வந்து கூரத்தாழ்வானுக்கு ஸ்ரீபாத தீர்த்தம் வழங்கி பல கைங்கர்யம் செய்து கொண்டிருக்கையில், குலோத்துங்க சோழன் இவர் மீது சந்தேகம் கொண்டான். சோழர்களின் எதிரிகள், வைணவர்கள் போர்வையில் ஸ்ரீரங்கம் வந்து அரசியல் சதி செய்கிறார்கள் என்று கருதி அவரை கைது செய்து வரும்படி சேவகர்களை அனுப்பினான். இராமானுஜர் காஷாய ஆடைகளை கூரத்தாழ்வானிடம் கொடுத்து விட்டு, வெள்ளை ஆடை அணிந்து கொண்டு, கொங்குதேசம் சென்று விட்டல தேவராயர் அரண்மனையில் ஒளிந்து கொண்டார். கூரத்தாழ்வான் தானே இராமானுஜர் என்று கூறிக் கொண்டு ராஜ தண்டனையை ஏற்றார். குலோத்துங்கனை வைணவர்கள் "கிருமி கண்ட சோழன்" எனத் தூற்றினர். சோழன் தன் தவற்றை

உணர்ந்தாலும் வைணவர்கள் மீதும், வைணவ ஆலயங்கள் மீதும் எதிரிகளின் கூடாரம் என சந்தேகித்தான்.

ஸ்ரீராமானுஜர் க- 4229 ஆண்டு பிங்கள □, தை மாதம் 29ஆம் தேதி, சனிக்கிழமை (22.1.1138 A.D.) , சுக்ல தசமி திதி, திருவாதிரை நக்ஷத்திரத்தில் (120 வருஷம், 9 மாதம், 18 நாட்கள் பூமியில் வாழ்ந்து) , மத்தியானம், பிள்ளான் மடியில் திருமுடியையும், கிடாம்பி ஆச்சான் மடியில் திருவடிகளையும் வைத்து பரமபதம் அடைந்தார். இவர் அருளிச் செய்த நூல்கள் ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரஹம், கீதா பாஷ்யம் முத-யன.

இராமானுஜர் காலத்தில் வாழ்ந்த அரசன் குலோத்துங்கன் என்பவன். ராஜராஜசோழனுக்குப் பிறகு (கி.பி.985 முதல் கி.பி.1017) ராஜேந்திரன் I (கி.பி.1014 முதல் கி.பி.1042) , ராஜாதி ராஜன் (கி.பி.1042 முதல் கி.பி.1054) , ராஜேந்திர குலோத்துங்கன் (கி.பி.1054 முதல் கி.பி.1064) , வீரசோழன் (கி.பி.1060 முதல் கி.பி.1069) , வீர ராஜேந்திர சோழன் (கி.பி.1063 முதல் கி.பி.1069) , ராஜ மகேந்திரன் (கி.பி.1064 முதல் கி.பி.1067) , வீர ராஜேந்திரன் II (கி.பி. 1064 முதல் கி.பி.1077) அதி ராஜேந்திரன் மகன் குலோத்துங்கன் சோழன் (கி.பி.1077 முதல் கி.பி.1118) இவன் சாளுக்கிய இளவரசிக்குப் பிறந்தவன். மிகுந்த பராக்கிரம் உடையவனாக ஆட்சி செய்தான். இவனை கரிகாலன், அபயன், அநபாயன், விஜயதரன், சென்னி, சுங்கம் தவிர்த்த சோழன், திருநீற்றுச் சோழன் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டான். விளை நிலம் அளவுமுறை, கணிதம், அறிவியல், கப்பல் வாணிபம் முத-யவற்றில் அதிக கவனம் செலுத்தி, கீழ்த்திசை நாடுகளுடன் கப்பல் வாணிபம் செய்து பொருளாதாரத்தை மேம்படுத்தினான். இவனது மனைவிகள் மதுராந்தகி, தியாகவல்-, ஏழிசை வல்லபி முத-யோர்.

குலோத்துங்கனின் தளபதி வண்டை நகர அரசன் கருணாகரத் தொண்டைமான் ஆயிரம் யானைகளை அழைத்துச் சென்று க-ங்க தேசம் அரசன் அனந்தவர்மன் மீது படையெடுத்து வெற்றி கண்டான். இவனது க-ங்கப் படையெடுப்பை நேரில் கண்டு பரணி பாடியவர் (க-ங்கத்துப் பரணி) ஜயங்கொண்டார் என்னும் புலவர். இவர் சோழவள நாட்டில் நன்நிலம் என்னும் ஊருக்கு அடுத்த தீபங்குடியில் பிறந்தவர். பிறப்பால் சமணர். குலோத்துங்கன் காலத்தில் ஜைன, பௌத்த, வைணவ ஆலயங்கள் இடிக்கப்பட்டன. பல்லவ அரசர்கள், பாண்டிய அரசர்கள், மேலை சாளுக்கிய அரசர்கள், சேர அரசர்கள், சிங்கள அரசர்கள் முத-யோர் சோழனுடன் போரிட்டு அரசை இழந்தனர்.



ஆகவமல்லன் சோமேஸ்வரன் III (மேலை சாளுக்கிய மன்னர் (கி.பி.1127 முதல் கி.பி.1137) , பாண்டிய அரசன் விக்ரம பாண்டியன், சிங்கள அரசன் காசியபன் முத-ய மன்னர்கள் தோற்று ஓடியவர்கள்.

காஞ்சியில் விஜயகண்ட சோழன் வழியில், வினை நீக்கிய சோழன், உத்தண்ட சோழன், இவன் மகன் சுகுண சோழன், குலோத்துங்க சோழன் காலத்தில் ஆண்ட சோழ மன்னர்கள்.

பாண்டிய தேசத்தில் சடையன் குலவர்த்தனன், அமரபுஜங்கன், குமார சந்திர பாண்டியன், ராஜ மார்த்தாண்டன் (கி.பி.968 முதல் கி.பி.995) , பிறகு "வரைப் பெண்ணை சிறைஎடுத்த" வரதுங்க பாண்டியன் (திருநெல்வே- அரசன் கி.பி.995 முதல் கி.பி.1048) பிறகு மதுரையில் ராஜராஜ சோழன் ஆட்சி, பின்னர் ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன், மாறவர்மன் சோம சேகரன், சடையன் பஞ்சசேனன், விக்ரம பாண்டியன் (என்னும் ஐவர் ஆட்சி கி.பி.1048 முதல் கி.பி.1084) பின்னர் விக்ரம பாண்டியன் மகன் வீரபாண்டியன் (குலோத்துங்க சோழனிடம் தோற்றவன்) , சோம சுந்தரன் மாறவர்மன் திரிபுவன சக்ரவர்த்தி, பராக்கிரம பாண்டியன் கற்பூர சுந்தர பாண்டியன், ராஜராஜன் (கி.பி.1084 முதல் கி.பி.1100) முத-யோர் ஆண்டனர்.

சேர நாட்டில் குலசேகரன், சங்கிராம தீரன், சேரமான் பாஸ்கர ரவிவர்மன் (கி.பி.978 முதல் கி.பி.1036) பிறகு ஜெயசிம்மன். இவன் 33 வயதில் சேர அரசனாக முடிசூட்டிக் கொண்டு, பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வீரபாண்டியனை வென்று பாண்டிய சிம்மாசனம் ஏறினான்.

மேற்கூறப்பட்ட இராமானுஜர் காலத்தில் வடபாரதத்தில் பல மன்னர்கள் வைணவ மதத்தை ஆதரித்தனர். ஹொய்சளர், க-ங்கர், கேரளர், கருநடர், ஆந்திர அரசர்களும் வைணவ மதத்தை ஆதரித்து திருமால் ஆலயங்களைக் கட்டி ஹரிபக்தியை பரப்பினர்.

## 61. கம்பர்

(இளங்கோவடிகள், திருவள்ளுவர், கம்பர் இவர்கள் தமிழ்நாட்டின் சிறந்த கவிஞர்கள். கம்பன் எழுதிய கம்பராமாயணம் ஒரு அற்புதமான தமிழ் காவியம். வால்மீகி முனிவர் எழுதிய ராமாயணக் கதையை பலர் பல மொழிகளில் எழுதியுள்ளனர். கம்பனின் "இராமாயணத்திலுள்ள" சிறப்பு அவைகளில் காணப்படவில்லை) .

தஞ்சையில் குலோத்துங்கச் சோழன் I (கி.பி.1070-1118), ராஜாதி ராஜன், வீரசோழன், பரகேசரி வர்மன் விக்ரம சோழன் (மதுராந்தகன்) (கி.பி.1118-கி.பி.1133) பிறகு குலோத்துங்க சோழன்II (கி.பி.1133-கி.பி.1145) ஆட்சிக் காலத்தில் தேரழுந்தூர் என்னும் ஊரில் கம்பர் பிறந்தார். இளவயதில் மிகவும் புலமை வாய்ந்தவராக இருந்தமையால் கம்பரையும் அவருடைய தாயாரையும் திருவெண்ணை நல்லூரில் வாழ்ந்த சடையப்ப முத-யார் என்பவர் வரவழைத்து ஆதரித்து, கம்பரை கல்வி கேள்விகளில் சிறந்தவராக்கினார். சடையப்ப முத-யாரும், குலோத்துங்க சோழனும் சந்திக்கையில் கம்பருக்கு, குலோத்துங்க சோழன் அவையில் ஒரு பதவி அளிக்கும்படி கேட்டுக் கொள்ள, கம்பர் சோழனுடைய அவையில் ஒரு தமிழ் புலவராக அமர்ந்தார்.

காஞ்சிபுரத்தில் இக்காலத்தில் பிரபாகர சோழன் (தெலுங்கு சோழன்) என்பவன் ஆட்சி செய்தான். இவன் விஜயகண்ட சோழன், வினைநீக்கிய சோழன், உத்தண்ட சோழன், சுகுண சோழன் வழியில் வந்தவன். பிரபாகர சோழனின் மகன் குணசேகர சோழன், கம்பனிடம் தமிழ் கற்றான். மேலும் காகதீயப் பேரரசு இளவரசன் பிரதாப ருத்திரனும் கம்பரிடத்தில் தமிழ் கற்றான். கம்பருடைய கவியாற்றல் கேட்டு மகிழ்ந்து குலோத்துங்க சோழன் கவிச்சக்ரவர்த்தி என்னும் பட்டம் வழங்கினான் குலோத்துங்கன் II இவனுடைய அவையிலே ஒட்டக் கூத்தர் என்னும் புலவர் அமைச்சராக இருந்தார். குலோத்துங்கன் தந்தை விக்ரம சோழனும் ஒட்டக்கூத்தரும் நண்பர்கள். விக்ரமச் சோழன் பாடிய பாடலை ஒட்டிப் பாடியதால் இவருக்கு ஒட்டக்கூத்தர் எனும் பெயர் ஏற்பட்டது. திருவெண்ணை நல்லூர் சடையப்ப முத-யார், குலோத்துங்க சோழனிடம் இராம காவியத்தை தமிழில் எழுத வேண்டும் என விண்ணப்பிக்க, சோழன் ஒட்டக்கூத்தர், கம்பர் இருவரையும் ராமாயணத்தை தமிழில் எழுதச் சொன்னான். கம்பனுடைய ராமாயணத்தைக் கேட்டு, அதுவே சிறந்தது என ஒட்டக்கூத்தர் தாம் எழுதிய ராமாயணத்தை கிழித்து எறிந்து விட்டார். பின்னர் கம்பருடைய வேண்டுகோள் பேரில் உத்தரகாண்டத்தை எழுதினார். பின்னர் தொண்டை நாடு சென்று (காஞ்சி தலைநகர்) திருவொற்றியூர் (சதுரானன பண்டிதர் மடம்) தாசி, "வல் -" என்பவளைக் கண்டு அவளுடன் பலநாள் கூடியிருந்தார். பின்னர் திருமயிலை வந்து "வா -" என்னும் தாசியுடன் தங்கியிருந்தார். பின்னர் வா-யுடன் சோழநாட்டிற்குத் திரும்பி சில வருடங்கள் வாழ்ந்தார். கம்பருக்கு குரும்பை என்னும் பெண் மீது மோகம் பிறந்து அவளுடன் சில காலம் கழித்தார். இந்நாட்களில் அவர் கம்பராமாயணம் முழுதும் எழுதினார். ஒட்டக்கூத்தர் "கம்பராமாயணத்தை" தில்லை மூவாயிரவர் முன் பாடி ஒப்புதல் பெற வேண்டும் என்று ஒரு நிபந்தனை விதித்தார். சிதம்பரம் சென்று



மூவாயிரம் அந்தணர்களை கூட்டி ராமாயணத்தைப் பாடி ஒப்புதல் பெற முடியாமல் தவித்தார். அப்போது ஒரு அந்தணர் வீட்டு பிள்ளையை பாம்பு கடித்து இறந்துவிட அங்கே மூவாயிரம் அந்தணர்களும் வந்தனர். கம்பர், ஸரஸ்வதி தேவியைப் பாடி பாம்பு கடித்து இறந்த அந்தணர் சிறுவனுக்கு உயிர் கொடுக்க, அது கண்டு வியந்து தில்லை மூவாயிரவர், கம்பராமாயணத்திற்கு ஒப்புதல் அளித்து ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றுமாறு பணித்தனர். பின்னர் கம்பன் சோழ நாடு திரும்பி தஞ்சை அஞ்சனாக்ஷி (ஔவை) மற்றும் மாவண்டூர் கருமான், தன் மகன் அம்பிகாபதி முத-யவரிடம் ராமாயணத்தைப் படித்துக் காட்டி, ஸ்ரீரங்கம் சென்று "கம்பராமாயணத்தை அரங்கேற்றினார். ஸ்ரீரங்கத்தார் கேட்டுக் கொண்டபடி இரணிய வதைப்படலமும்"-அங்கே அரங்கேற்றினார். பின்னர் சோழ நாட்டில் சில காலம் தங்கி பாண்டிய நாடு சென்றார்.

பாண்டிய தேசத்தில் (கி.பி.1122 - கி.பி.1142 இல்) விக்ரம மாறவர்மன் (குலோத்துங்க சோழனின் மாமனார்) என்பவனின் மகன் சடையவர்மன் குலசேகரன் திருநெல்வே-யி-ருந்தும், பராக்கிரம வர்மன் குமாரசிம்மன், அவன் மகன் சடையவர்மன் பராக்கிரமன் கம்பரை வரவேற்று உபதேசித்து, தானே பல்லக்கு சுமந்து அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். பின்பு குலோத்துங்க சோழன் கம்பனின் தம்பி முறையான இளையார மார்பனை மதுரைக்கு அனுப்பி கம்பரை சோழ நாட்டிற்கு மீண்டும் அழைத்துக் கொண்டான்.

கம்பருக்கு அம்பிகாபதி என்னும் மகனும் ஒரு பெண்ணும் இருந்தனர். அம்பிகாபதியும் பெரும் தமிழ் புலவன். இவன் குலோத்துங்க சோழன் மகள் அமராவதியிடம் காதல் கொண்டான். அம்பிகாபதியும் அமராவதியும் ஒருவரையொருவர் காத-த்தனர். இதனால் கோபமடைந்த குலோத்துங்க சோழன் II , அம்பிகாபதிக்கு கொலை தண்டனை விதித்தான். பின்பு கம்பர், சோழநாட்டை விட்டு புறப்பட்டு காகதீய அரசன் பிரதாப ருத்திரன் உபசரிக்க அங்கே வாழ்ந்து வந்தார். காகதீய அரசன் பிரதாப ருத்திரனை சோழ நாட்டின் மீது படையெடுக்க கம்பர் தூண்டி விடுகிறார் என்று கருதி குலோத்துங்க சோழன் II சதி செய்து கம்பரைக் கொன்றான். இதன் காரணமாக காகதீயப் படைகளும் பாண்டியர் படைகளும் சோழ நாட்டின் மீது படையெடுத்து குலோத்துங்கனைக் கொன்று ராஜராஜ சோழன் என்பவனுக்கு முடிசூட்டி நாடு திரும்பினர். குலோத்துங்க சோழன் இறந்த சிறிது காலத்தில் ஒட்டக் கூத்தரும் இறந்தார். ஒட்டக் கூத்தர் செங்குந்த முத-யார் வகுப்பில் பிறந்தவர். புதுவையில் சடையன் என்பவரின் தந்தை சங்கரன் என்பவரிடம் வாணிபத்தில் உதவி புரிந்து வந்தார். பின்னர் காங்கேய முத-யார் வீட்டில் வளர்ந்து பெரும் புலவரானார். இவரது புலமை கண்டுவிக்ரம சோழன் தன்னுடைய ஆஸ்தான புலவராக்கினான். விக்கிரம சோழன் இறந்த

பிறகு குலோத்துங்க சோழன் II-க்கு முதலமைச்சர் ஆனார். செங்குந்தரில் சிலர் செங்குந்தர் மரபைப் பற்றி பாடுமாறு ஒட்டக் கூத்தரைக் கேட்க அவர் மறுத்துவிட்டார். இதனால் கோபமடைந்த செங்குந்தர்கள் ஒட்டக் கூத்தரைக் கொலை செய்ய முயற்சிக்க,சோழர் காவலாளிகள் செங்குந்தர்களைக் கொன்றுவிட்டனர். பின்னர் ஒட்டக்கூத்தர் ஸரஸ்வதியைப் பாடி துதிக்க செங்குந்தரின் தலைகள் மீண்டும் உட-ல் ஒட்டிக் கொண்டு உயிர் பிழைத்தனர். ஒட்டவைத்த கூத்தர்-ஒட்டக்கூத்தர் என்று குலோத்துங்க சோழன் II போற்றினான். குலோத்துங்க சோழனுக்கு பெண் வேண்டி பாண்டியன் மாறவர்மனிடம் சென்று அவன் மகள் பாண்டிமாதேவியை குலோத்துங்க சோழனுக்கு மணமுடித்தார். பாண்டிமாதேவியுடன் மதுரையி-ருந்து புகழேந்தி புலவரும் தஞ்சைக்கு வந்தார். புகழேந்திப் புலவர் மீது பொறாமை கொண்ட ஒட்டக் கூத்தர், புகழேந்தியின் மீது குற்றம் சாட்டி சிறையிலடைத்தார். பாண்டிமாதேவி தன் ஆசான் புகழேந்தியை விடுவிக்க அந்தப்புரத்தை தாளிட்டுக் கொண்டாள். (ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்) பின்பு புகழேந்தியார் விடுவிக்கப்பட்டார். புகழேந்தியார் வந்து பாண்டி மாதேவியிடம் தாள் திறக்கச் சொல்-குலோத்துங்க சோழனிடம் II சேர்த்து வைத்தார். ஒட்டக் கூத்தர் எழுதிய நூல்கள் விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராமாயணம், உத்தரகாண்டம், தக்கயாக பரணி, அண்டத்துப் பரணி, ஈட்டியெழுபது, எழுப்பெழுபது முத-யன கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் போல ஔவையார் II என்னும் பெண் புலவரும், புகழேந்தியாரும் குலோத்துங்க சோழன் II அவையில் இருந்தனர்.

புகழேந்தியார் தொண்டை நாட்டில் பொன் விளைந்த களத்தூரில் பிறந்த வேளாளர். இவரது புலமையைக் கண்டு முரணை நகர் சிற்றரசன் சந்திரன்சுவர்க்கி, ஆதரித்து வந்தான். முரணை நகர், சோழ நாட்டு உறையூர் அருகில் உள்ளது. பின்னர் இவர் பாண்டி நாட்டை அடைந்து மாறவர்மன் என்னும் பாண்டியன் அவையில் இருந்தார். பாண்டியன் மகளுக்கு ஆசானாக இருந்தார். குலோத்துங்க சோழன்II பாண்டிமாதேவியை மணந்துகொள்ள பாண்டிமாதேவி ஆசான் புகழேந்தியுடன் சோழநாடு சென்றார்.

புகழேந்தியார் செய்த நூல்கள் நளவெண்பா, கொற்றந்தை கலம்பகம், உபமான சங்கிரஹம், புகழேந்தியார் பின்னர் பாண்டி நாடு சென்று, வரதராஜன் (சார்வபௌமன்) என்னும் பாண்டியன் அரண்மனையில் தங்கி அங்கிருந்து சேர நாடு சென்று "ஆரியசேகரன்" அவையில் பெரும்புலவராக இருந்து, தனது கடைசி நாட்களில் பாண்டிய தேசத்தில் வாழ்ந்து மறைந்தார்.



## 62. சேக்கிழார்

தொண்டை மண்டலம், குன்றத்தூரில் சைவ வேளாளர் குடியில் பிறந்த சிறந்த சிவபக்தர். இவர் செய்தது திருத்தொண்டர் புராணம். சிதம்பரம் சென்று நடராஜ மூர்த்தி "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க திருத்தொண்டர் புராணத்தைப் பாடி சோழன் அபயனிடம் சென்று (குலோத்துங்க சோழன்) ஒரு வருடம் அதைப் பாடி அரங்கேற்றி, மன்னன் கவரி வீச யானை மீது பவனி வந்தார். உத்தமசோழ பல்லவராயர், அருண்மொழித் தேவர், சேவையர் காவலர், தொண்டர் சீர் பரவ வல்லார் என்னும் பட்டங்கள் பெற்று சோழன் அரசவையில் இருந்தார்.

பெரியபுராணம் இந்நூல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திரு அந்தாதியை வழி நூலாகவும் கொண்டது.

இது ஒரு வரலாற்று நூல் எனக் கருதப்படுகிறது. 63 சிவனடியார்களின் பெருமையை குறித்துப் பாடப்பட்ட இந்நூல் ஒரு தமிழ் பொக்கிஷம்.

இந்நூ-ல் பாடப்பட்டுள்ள சிவபக்தர்கள் பெயர், அவர்கள் பிறந்த ஊர், நாடு, சாதி, பிறந்த மாதம், நக்ஷத்திரம் முத-யன தொகுக்கப்பட்டு கீழே வழங்கப்படுகிறது. பிறந்த வருடம், தேதி முத-யன ஆராய்ச்சியாளர்களுக்கு விடப்பட்டுள்ளது.

**(அ) காலம் கி.பி.615க்கு முன்பாக**

| எண் பெயர் | ஊர் | குலம் | மாதம் | நக்ஷத்திரம் |
|---|---|---|---|---|
| 1. அமர்நீதி | பழையாறை | சோழர்-வணிகர் | ஆனி | பூரம் |
| 2. அரிவாட்தாயர் | கணமங்கலம் | சோழர்-வேளாளர் | தை | திருவாதிரை |
| 3. சண்டேசர் | திருசேய்ஞலூர் | சோழர்-அந்தணர் | தை | உத்திரம் |
| 4. காரைக்கால் அம்மையார் | காரைக்கால் | சோழர்-வணிகர் | பங்குனி | சுவாதி |
| 5. நமிநந்தி அடிகள் | திருஏமப்பேரூர் | சோழர்-அந்தணர் | வைகாசி | பரணி |
| 6. தண்டி | திருவாரூர் | சோழர்-அந்தணர் | பங்குனி | சதயம் |
| 7. புகழ்சோழன் | உறையூர் | சோழர்-அரசன் | ஆடி | கிருத்திகை |
| 8. கேட்செங்கணான் | உறையூர் | சோழர்-அரசன் | மாசி | சதயம் |
| 9. புகழ்துணை | அரிசிக்கரைபுத்தூர் | சோழர்-ஆதிசைவம் | ஆவணி | ஆயில்யம் |
| 10. எறிபத்தர் | கருவூர் | சோழர்-ஆதிசைவர் | மாசி | அஸ்த்தம் |
| 11. சாக்கியன் | சம்மங்கை | சோழர்-வேளாளர் | மார்கழி | பூராடம் |
| 12. கூற்றுவர் | களந்தை | சோழர்-அரசர் | ஆடி | திருவாதிரை |
| 13. கணம்புல்லர் | இருக்குவேளூர் | புதுக்கோட்டை-வேளாளர் | கார்த்திகை | கிருத்திகை |
| 14. மூர்த்திநாயனார் | மதுரை | பாண்டியர்-வணிகர் | ஆடி | கிருத்திகை |
| 15. கண்ணப்பர் | காளத்தி | பல்லவர்-வேடர் | தை | மிருகசீர்ஷம் |
| 16. திருமூலர் | இமயமலை(சித்தர்) | - | ஐப்பசி | அஸ்வதி |

**(ஆ). கி.பி.615 முதல் கி.பி.630 வரை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. திருநாவுக்கரசர் | திருவாய்மூர் | நடுநாடு-வேளாளர் | சித்திரை | சதயம் |

**(இ) கி.பி.630 முதல் கி.பி,.668 வரை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. குங்கி-ய கலயர் | திருக்கடவூர் | சோழர்-அந்தனர் | ஆவணி | மூலம் |
| 2. முருகநாயனார் | திருப்புகலூர் | சோழர்-அந்தணர் | ஆனி | மகம் |
| 3. அப்பூதி அடிகள் | திங்களூர் | சோழர்-அந்தணர் | தை | சதயம் |
| 4. திருநீலநக்கன் | திருச்சாத்தமங்கலம் | சோழர்-அந்தணர் | ஆனி | மகம் |
| 5. சிறுத்தொண்டர் | திருச்செங்காட்டன்குடி | சோழர்-மாமாத்திரம் | சித்திரை | பரணி |
| 6. திருநீலகண்டயாழ்பாணர் | எருக்கத்தம்பு-யூர் | சோழர்-பாணர் | ஆனி | மகம் |
| 7. திருஞானசம்பந்தர் | சீர்காழி | சோழர்-அந்தணர் | வைகாசி | மூலம் |
| 8. நின்றசீர் நெடுமாறன் | மதுரை | பாண்டியன்-அரசன் | ஐப்பசி | பரணி |
| 9. மங்கையர்க்கரசி | மதுரை | பாண்டியன்-அரசி | சித்திரை | ரோகினி |
| 10. குலச்சிறை | மணமேற்குடி | சோழன்-அந்தணர் | ஆவணி | அனுஷம் |

**(ஈ) கி.பி.685 முதல் கி.பி.840**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இயற்பகை | புகார் | சோழர்-வணிகர் | மார்கழி | உத்திரம் |
| 2. சிறப்பு- | ஆக்கூர் | சோழர்-அந்தணர் | கார்த்திகை | பூராடம் |
| 3. கணநாதர் | சீர்காழி | சோழர்-அந்தணர் | பங்குனி | ரோகினி |
| 4. ஆதிபத்தர் | நாகை | சோழர்-பரதவர் | ஆவணி | ஆயில்யம் |
| 5. சக்தி | விரிஞ்சியூர் | சோழர்-வேளாளர் | ஐப்பசி | பூசம் |
| 6. காரி | திருக்கடவூர் | சோழர்-வேளாளர் | மாசி | பூராடம் |
| 7. முனையடுவர் | நீடூர் | சோழர்-வேளாளர் | பங்குனி | பூசம் |
| 8. வாளாரியர் ஏனாதி | எ-னனூர் | சோழர்-ஈழவர் | புரட்டாசி | உத்திராடம் |
| 9. திருநீலகண்டர் | தில்லை | சோழர்-வேட்கோவர் | தை | விசாகம் |
| 10. ஆனாயர் | மங்கலம் | சோழர்-இடையர் | கார்த்திகை | அஸ்தம் |
| 11. நந்தன் | ஆதனூர் | சோழர்-பறையர் | புரட்டாசி | ரோகினி |
| 12. இடங்கழி | கொடும்பாளூர் | புதுக்கோட்டை | சிற்றரசர் | --- |
| 13. இளையான்குடிமாறன் | பாண்டி-வேளாளர் | ஆவணி மகம் | | |
| 14. மெய்பொருள் | திருக்கோவிலூர் | நடுநாடு-சிற்றரசர் | கார்த்திகை | உத்திரம் |
| 15. க-கம்பர் | பெண்ணாடகம் | நடுநாடு-சிற ்றரசர் | கார்த்திகை | உத்திரம் |
| 16. திருக்குறிப்புத்தொண்டர் | காஞ்சி | வண்ணார் | சித்திரை | சுவாதி |
| 17 மூர்க்க நாயனார் | திருவேற்காடு | காஞ்சி-வேளாளர் | கார்த்திகை | மூலம் |
| 18. க-ய நாயனார் | திருவொற்றியூர் | செங்கை-வணிகன் | ஆடி | கேட்டை |
| 19. வாயிலார் | மயிலை | செங்கை-வேளாளர் | மார்கழி | ரேவதி |
| 20. ருத்ரபசுபதி | திருத்தலையூர் | சோழர்-அந்தணர் | புரட்டாசி | அஸ்வதி |
| 21. நேசநாயனார் | காம்பீ- | குந்தளம் | - | - |

**(ஊ) கி.பி.84 முதல் கி.பி.85 வரை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. விறல்மிண்டர் | செங்குன்றூர் | சேரர்-வேளாளர் | சித்திரை | திருவாதிரை |
| 2. சேரமான்பெருமாள் | கொடுங்கோளூர் | சேரர்-அரசர் | - | - |
| 3. மானக்கஞ்சாரர் | கஞ்சாறு | சோழர்-வேளாளர் | மார்கழி | சுவாதி |
| 4. பெருமிழிலைகுறும்பர் | மிழிலை | சோழர்-சிற்றரசர் | - | - |
| 5. ஏயர்கோன்க-க்காமர் | பெருமங்கலம் | சோழர்-வேளாளர் | ஆனி | ரேவதி |
| 6. சோமயாஜி மாறனார் | அம்பர் | சோழர்-அந்தணர் | வைகாசி | ஆயில்யம் |
| 7. செறுத்துணை | ஆவூர் | சோழர்- வேளாளர் | ஆவணி | பூரம் |
| 8. கோட்பு- | நாட்டியத்தான்குடி | சோழர்-வேளாளர் | - | - |
| 9. சுந்தரர் | திருநாவலூர் | தென்னாற்காடு-ஆதிசைவர் | - | - |
| 10. சடையனார் | திருநாவலூர் | தென்னாற்காடு-ஆதிசைவர் | மார்கழி | திருவாதிரை |
| 11. இசைஞானியார் | திருநாவலூர் | தென்னாற்காடு-ஆதிசைவர் | சித்திரை | சித்திரை |
| 12. நரசிங்கமுனையதரையர் | திருமுனைப்பாடி | தென்னாற்காடு-சிற்றரசர் | புரட்டாசி | சதயம் |
| 13. கழற்சிங்க பல்லவன் | காஞ்சி | காஞ்சி-அரசர் | வைகாசி | பரணி |

(அரசர்கள் - 12 அந்தணர்கள் 12 ஆதிசைவர் 4 வணிகர் - 6 வேளாளர் 13 மற்றவர் 16 ஆக மொத்தம் 63 பேர்கள் அப்பாலுக்கப்பால் நாயானார் -1 = மொத்தம் 64 பேர்கள்) .



# 63. அங்கோர் -வாட்

பல்லவ போகம் (அல்லது பஹ்லவியர் தேசம்) என்பது பாரசீக (பெர்ஷியா) நாடு. பாரசீக நாட்டில் "ஜராதுஷ்ட்ர" என்பவனுடைய மதம் பரவியிருந்தது. ஜராதுஷ்ட்ரன்(சொராஸ்டர்) கி.மு. 1000க்கு முன்பு "ராய்" என்னும் நகரத்தில் பிறந்தவர். இவருடைய குரு "புக்கன்-காரு" இவர் "குஸ்தபன்" என்னும் அரசன் காலத்தில் வாழ்ந்தவர். அக்நி இவர்களது தெய்வம். இவரது மதம் பாரசீக மதம் எனப்படும். (இவர்களது வேதம்-ஜரானஹா-குர்ரான்) . "ஆஹூரா-மஸ்டா"கடவுள் பெயர். கி.மு.709-கி.மு.656-இல் எகபடன் என்னும் தலைநகரி-ருந்து டெயோனிஸ், கி.மு.656 முதல் 634 வரை பிரயோர்டிஸ், கி.மு.634 முதல் கி.மு.594 வரை ஸையக்ஸிஸ், கி.மு. 594 முதல் கி.மு.559 வரை அஸ்டியகெஸ், இவனது மகள் மந்தனே. இவள் கேம்பஸிஸ் என்பவனை மணந்து அரசியானாள். இவன் எகிப்து தேசம் வரை அரசாண்டான். கி.மு.558 முதல் கி.மு.529 வரை சைரஸ். கி.மு.529 முதல் கி.மு.512 கேம்பிஸிஸ். இவன் கி.மு.525-இல் எகிப்து தேசம் வரை ஆண்டான். இவன் மகன் தரியஸ் கி.மு. 521-கி.மு.485 வரையிலும் கி.மு.485முதல் கி.மு.465 வரை ஸெர்க்ஸிஸ் என்பவனும் ஆட்சி செய்தான். இவன் காலத்தில் புத்த மதம் பாரசீகத்திலும் பரவியது. தக்ஷசீலம் (Taxila) புருஷபுரம் (Peshavar) முத-ய இடங்களில் பல்கலைக்கழகம் இருந்தது. சரகர், சுஸ்ருதர் முத-யவருடைய மருத்துவம், ஜோதிடம், முத-யன கற்றுத் தரப்பட்டன. பஹ்-யர், காந்தார தேசத்திலும் ஆட்சி செய்தனர். (காந்தாரம்-Afgan-Kandahar) . காம்போஜம் என்னும் தலைநகரி-ருந்து பல்லவர்கள் ஆட்சி புரிந்தனர். பிறகு வெள்ளை ஹூணர்கள், மிலேச்சர் படையெடுப்பினால் பல்லவர்கள் தென்னிந்தியாவிலும், மணி பல்லவ தீவிலும் தாய்லந்து (Combodia) முத-ய தேசங்களிலும் குடியேறினர். பின்னர் பல்லவர்கள் தமிழ்நாட்டின் வடபகுதியிலும் ஆட்சி செய்தனர். மகேந்திர பல்லவன், நரசிம்ம பல்லவன் காலத்தில் கல்-ல் ஆலயங்கள், குகைக் கோயில்கள் (மஹாப-புரம், திருச்சி மலைக்கோட்டை) கட்டினர். பின்னர் பௌத்த, சமண மதத்தை துறந்து பல்லவர்கள் ஹிந்து மதத்ததை தழுவினர் / அமைத்தனர். ராஜராஜசோழன் காலத்தில் சோழர்களாலும், கீழை சாளுக்கியர்கள் ஆதிக்கத்தால் பல்லவர் ஆட்சி வீழ்ந்தது. தாய்லாந்து - காம்போஜ தேசத்தில் கம்பு என்பவன் சுலம்புவனி என்பவளை மணந்து ஹிந்து சாம்ராஜ்யத்தை தாய்லாந்தில் தோற்றுவித்தான்.

கம்பு, சுருதவர்மன், சிரேஷ்டவர்மன்(கி.பி.570) , பவவர்மன் (கி.பி.590)

சித்திரசேனன் (கி.பி.590 முதல் கி.பி.603) , மகேந்திர்வாமன்(கி.பி.604 முதல் கி.பி. 662) . பவவர்மன் II, ஜெயவர்மன் (கி.பி.665) , இந்திரவர்மன் (கி.பி.877 முதல் 889) , யசோவர்மன் (கி.பி.889 முதல் கி.பி.910) , ராஜேந்திரவர்மன் (கி.பி.944 முதல் கி.பி.965) , ஜெயவர்மன் IV (கி.பி.968 முதல் கி.பி.1001) , சூர்யவர்மன் (கி.பி.1002 முதல் கி.பி.1049) , ஜெயவர்மன், சூர்யவர்மன் (கி.பி.112 முதர் கி.பி.1152) , தாரா இந்திரவர்மன், ஜெயவர்மன் VII (கி.பி.1182 முதல் கி.பி.1201) காம்போஜத்தில் ஆண்ட பாரத வம்சா வளியினர்.

ஜெயவர்மன் காலத்தில் "அங்கோர் வாட்" என்னும் மிகப் பெரிய ஆலயம் கட்டப்பட்டது. இது மஹாமேரு மலை மற்றும் அதைச் சுற்றியுள்ள மலைகள் மற்றும் 54 கோபுரங்கள் , 5 நுழைவாயில்களும், மீ-காங்க் நதிக்கரையில் பெரிய ஏரியின் நடுவில் கட்டப்பட்டது. இதைக் கட்ட 37 வருடங்கள் ஆயின. தலைமை புரோகிதர்கள் 18 பேர், 2740 வேதியர்கள். 2202 பரிசாரகர்கள், 1615 நடன மங்கையர் முத-யோர் இக்கோயி-ல் இருந்தனர். இக்கோயில் உலக அதிசயங்களில் ஒன்று. தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைதல், ராமாயண வரலாறு, மஹாபாரத வரலாறு, பிரம்மாண்டமான பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான் முகங்கள் இவைகளெல்லாம் இக்கோயி-ல் உள்ளன. திருப்பாவை, திருவெம்பாவை, திருமூலர் திருமந்திரம், திருவாசகம் முத-ய தமிழ் பாசுரங்களும் இங்கு ஓதப்பட்டு வந்தன.

தாய்லாந்து நாட்டில் சம்பா (இந்திரபுரம்) என்னுமிடத்தி-ருந்து பாரத வம்சாவளியைச் சேர்ந்த அரசர்கள் ஆண்டனர். ஸ்ரீமாறன்(கி.பி.190) , போஜன், பத்திரவர்மன் (கி.பி.380 முதல் 413) ,தரும மகாராஜன், கங்கராஜன் (கி.பி.420 முதல் கி.பி.528) , ருத்திரவர்மன் I, சம்புவர்மன் (கி.பி.758 முதல் கி.பி.839) , பாரவர்மன்(கி.பி.900 முதல் கி.பி.906) , ராஜேந்திர வர்மன் (கி.பி.985 முதல் கி.பி.999) , ருத்திரவர்மன் (கி.பி.1061 முதல்கி.பி.1074) ஹரிவர்மன் (கி.பி.1080) , இந்திரவர்மன் (கி.பி.1139 முதல் கி.பி.1144) முத-ய அரசர்கள் பிரசித்தி பெற்றவர்கள். ப்பூனான் என்னுமிடத்தி-ருந்து பாண்டிய தேசத்தி-ருந்து கி.மு.2-இல் வந்த பிராமணன் ஒரு நாக இளவரசியை மணந்து ஹிந்துக்கள் ஆட்சியை ஏற்படுத்தினான். முகுந்தன் (கி.பி.245) , ஸ்ருதவர்மன் மகன் ஜெயவர்மன் (கி.பி.484 முதல் 514) இவன் வழியில் வந்தவர்கள். பா-த்தீவின் உக்கிரசேன பாண்டியன் (கி.பி.915 முதல் 933) . கம்போடியா நாட்டி-ருந்து "திரிதேவன்" என்னும் பிராமணன் 600 கிளிங் குடும்பங்களோடு சாவகம் சென்று (ஜாவா) பிரமகாளி என்னும் நாக அரசியை மணந்து முதல் ஹிந்து அரசன் ஆனான்.(கி.மு.2) இவன் வழியில் பூமிசந்திரன், 



புண்ணியராசன், ஆபுத்திரன், தேவவர்மன் (கி.பி.132) , குணவர்மன், பூரணவர்மன் (கி.பி.500 முதல் கி.பி.600) , சஞ்சயன் (கி.பி.732) முத-ய அரசர்கள் பிரசித்தி பெற்றவர்கள்.

கிழக்கு ஜாவாவில் சிந்தோக் (கி.பி.927 முதல் கி.பி.946) , தர்மவம்சன் (கி.பி.946 முதல் கி.பி.1008) , அயர்லங்கன் (கி.பி.1008 முதல் கி.பி.1019) , கெமர் அரசில் ஜெயவர்மன் (கி.பி.1100) , காமேஸ்வரன் (கி.பி.1115 முதல் கி.பி.1130) முத-ய ஹிந்து அரசர்கள் கி.பி.1400 வரை ஆண்டனர்.

கடாரம் (மலேஷியா - ஸ்ரீவிஜயம்) தேசத்தில் ஸ்ரீ விஜய தர்மோத்துங்கன் (கி.பி.950) , திரிபுவனோத்துங்கன், சங்கிராம விஜயோத்துங்கன், மகரத்துவஜ பாண்டியன், சூளாமணி வர்மன் (கி.பி.1001) . மாற விஜயோத்துங்கன் முத-ய அரசர்களும் பிரசித்தி பெற்றவர்கள்.

(மேற்குறிப்பிட்ட நாடுகளை ராஜராஜசோழன் படையெடுத்து வென்றான். கடாரம்-சுமத்ரா, ஸ்ரீவிஜயம்-பா-ம்பாங்க், பண்ணை-சுமத்ரா கீழ்க்கரை, மலையூர் - மலேஷிய தென்கோடி, இலாமுரி - சுமத்ரா வடபகுதி , அருமண நாடு - பர்மா(காழகம்) , மாயிருடிங்கம், மாபப்பாளம், தக்கோலம் - கம்போடியா தேசம் முத-யனவற்றை ராஜராஜசோழனின் கப்பற்படை வென்றது) .

## 64. மணிகண்டன்

திருநெல்வே-யி-ருந்து கி.பி.1084 முதல் கி.பி.1100 வரை சோமசுந்தரன் மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி, பராக்ரம பாண்டியன், கற்பூர சுந்தர பாண்டியன், ராஜராஜ பாண்டியன் முத-ய அரசர்கள் ஆண்டனர். சில பாண்டிய அரசர்கள் வள்ளியூரி-ருந்தும், சில பாண்டியர் தென்காசியி-ருந்தும் ஆண்டனர். அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை.மேலும் சோழர்கள், சேரர்களின் படையெடுப்புகளை அவர்களால் எதிர்கொள்ள முடியாமல் சிற்றரசர்கள் போல் வாழ்ந்தனர்.

கி.பி.1100 முதல் கி.பி.1106-இல் சடையவர்மன் பராந்தகன்III சந்திரசேகர பாண்டியன், ராஜராஜன் II , ராஜசேகர பாண்டியன், குலசேகர பாண்டியன் முத-ய பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்தனர். ராஜசேகர பாண்டியன் பந்தள நாட்டில் ஆட்சி அமைத்தான். (கி.பி.1081-இல் அச்சன் கோயில் வழியாக, கோன்னியூர் மற்றும் பந்தள நாட்டில் பாண்டியர்கள் பரவினர்) . இராஜசேகர பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவி. இவர்களுக்கு ஆண் வாரிசு இல்லை. ஒரு பெண் மட்டுமே இருந்தாள். ராஜசேகர பாண்டியன், கேரள தேசத்தில் பந்தளத்தில் ஆட்சி செய்கையில், சேர நாட்டில் வ-மையான அரசு இல்லாமையால் கொள்ளைக்காரர்கள், அராபிய கப்பல் கொள்ளைக்காரர்களும் ஆங்காங்கே வ-மை பெற்று இருந்தனர். உதயணன் என்னும்

கொள்ளைக்காரன் இஞ்சிப்பாறைக் கோட்டையி-ருந்து பல கொள்ளைகள், கொடுமைகள் புரிந்து வந்தான். இவன் ராஜசேகர பாண்டியன் அரண்மனையில் புகுந்து கொள்ளையடித்து, ராஜகுமாரியையும் கடத்திச் சென்று இஞ்சிப்பாறைக் கோட்டைக்குள் சிறை வைத்தான். மேலும் அவளை துன்புறுத்தி தன்னை மணந்து கொள்ளும்படி வற்புறுத்தினான்.

உதயணன் சௌரிகிரி (சபரிகிரி - கருடாத்திரி) என்னுமிடத்தில் உள்ள தர்மசாஸ்தா கோயில் குருக்களைக் கொன்று விக்ரஹத்தை உடைத்து, கோயில் சொத்துக்களை சூறையாடிச் சென்றான். பின்னர் கோயில் குருக்களின் மகன் ஜயந்தன் தனது தகப்பனை எரித்து ஈமச் சடங்குகளை முடித்து, உதயணனை பழிவாங்குவதற்காக இஞ்சிப்பாறைக் கோட்டைக்குச் சென்றான். வழியில் உதயணன் ஆட்கள் அவனைப் பிடித்து உதயணன் முன்பு நிறுத்தினான். தான் ஒரு சமையல்காரன் என்றும், பிழைப்புத்தேடி வெளியூர் செல்கையில் பிடிபட்டேன் என்று உதயணனிடம் கூறினான். கொள்ளைக்காரர்களுக்கு சிறையி-ருக்கும் இளவரசிக்கும் உணவு தயாரித்துக் கொடுத்து, சில நாட்கள் தங்கி, ராஜகுமாரியுடன் அக்கோட்டையை விட்டுத் தப்பி, பொன்னம்பலமேடு என்னும் ஊர் சென்று அங்கே ஒரு முனிவன் ஆஸ்ரமத்தில் அடைக்கலம் ஆகினான்.

அடைக்கலம் தந்த அந்த முனிவர் ஜயந்தனுக்கும் ராஜகுமாரிக்கும் திருமணம் செய்து வைத்து தனது சீடர்களாக மாற்றினார். எதிர்காலத்தை அறிந்த அந்த முனிவன், ஜயந்தனிடம் அவனுக்கு சாஸ்த்தாவின் அம்சமாக ஒரு மகன் பிறப்பான் என்று கூறினார். ஜயந்தனுக்கு சாஸ்த்தாவின் பெருமை பற்றி கூறினார்.

**சாஸ்த்தா மஹாத்மியம்**

சேர மன்னர்களை "வானவர்" என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. சேர மன்னர்களே மொழியை, தமிழ் வேதங்களை வளர்த்தவர்கள் முருகவேள் (சேரன்) , முசுகுந்த சோழன் முத-யவர்கள் வடபுலத்தி-ருந்து வந்த வானவர்கள். முருகவேள் தலைச்சங்கத்தை தொடங்கி வைத்தவர். முருகவேளுக்கு பிரம்ம-சாஸ்த்தா (பிரமனைக் குட்டியவர்) என்று பெயர். தக்ஷயாகத்தில் தக்ஷபிராஜாபதியைக் கொன்ற வீரபத்திரரை தக்ஷ-சாஸ்த்தா என்றும் கூறுகிறது புராணங்கள். திருக்கடவூர் எமனை எட்டி உதைத்தவர் கால சாஸ்த்தா.

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தின் எட்டுத் திசைகளிலும் (1) மஹா சாஸ்த்தா (2) ஜகன் மோகன சாஸ்த்தா (3) பால சாஸ்த்தா, (4) கிராத சாஸ்த்தா, (5) தர்ம சாஸ்த்தா, (6) விஷ்ணு சாஸ்த்தா, (7) பிரம்ம சாஸ்த்தா, (8) ருத்ர சாஸ்த்தா என எட்டு ஆலயங்கள் உள்ளன. மேற்குறிப்பிட்ட 8 அவதாரங்கள் தவிர விஸ்வ சாஸ்த்தா, சில்ப சாஸ்த்தா, கால சாஸ்த்தா, யோக சாஸ்த்தா, ஆகாச சாஸ்த்தா, ஆபத்துத் தாரக சாஸத்தா, வனபதி சாஸ்த்தா, யாம சாஸ்த்தா சர்வ சாஸ்த்தா என அவதாரங்கள் பற்றி பேசப்படுகின்றன.



கேரள தேசத்தில் அகஸ்த்தியர், பரசுராமர் முத-யவர்களால் பூஜிக்கப்பட்ட 108 சாஸ்த்தா கோவி˙ல்கள் இருந்தன என்று கூறப்படுகிறது. ஹரிஹரபுத்திரன், ஐயன், பூரணைக்கேள்வன், புட்கலை மணாளன், அறத்தைக் காப்போன், சாதவாகனன், கோழிக் கொடியோன், சாத்தன், வெள்ளை யானை வாகனன், காரி,(குதிரை வீரர்) , செண்டாயுதன் (சாட்டை ஆயுதம் ஏந்தியவன்) , யோகி, கடல்நிற வண்ணன் (தமிழ் பிங்கள நிகண்டுவைக் காண்க) என்று பல பெயர்கள் உண்டு. மகிஷாசுரன் தங்கை மகிஷியை கொன்றவன்.மலைகளில் குடியிருப்பவன், வனத்தில் வசிப்பவன், கரிய நிறத்தோன், பப்புரு (கீரி) வாகனன் என சாஸ்த்தா வர்ணிக்கப்படுகிறார். கடைச்சங்க காலத்தில் பல தமிழ் புலவர்கள் பெயர் சாத்தனார் என்று உள்ளது. இளங்கோ அடிகள், அப்பர், திருஞானசம்பந்தர் முத-யோர் சாஸ்த்தாவைப் பாடியுள்ளனர். சாஸ்த்தாவின் மனைவியர் இருவர் (பூரணை, புஷ்களை) மகன் சத்யன் என்னும் செல்லப் பிள்ளை. சேரர்களுக்கு சத்ய புத்திரர்கள் என்றும் பெயருமுண்டு. (சாஸ்த்தா-சாத்தன்-தமிழர்கள் வழிபட்ட ஆதி தெய்வம்).

ஜயந்தனுக்கும் அரசகுமாரிக்கும் சர்வதாரி □, பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரம், புதன் கிழமையன்று (14.1.1095 A.D.- கொல்லம் ஆண்டு 270) ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பிறந்தவுடன் கழுத்தில் ஒரு மாலையில் மணி இருந்ததால் மணிகண்டன் என அழைக்கப்பட்டான். பிறகு ஜயந்தனும் ராஜகுமாரியும் குளத்துப் புழையில் வசிக்கும் போது, குழந்தையை ராஜசேகர பாண்டியன் காட்டில் தனியாய் விடப்பட்ட நிலையில் கண்டெடுத்து அரண்மனைக்கு எடுத்துச் சென்று "கேரள வர்மன்" என்னும் பட்டம் சூட்டி வளர்த்து வந்தான். இதன் பிறகு ராஜசேகர பாண்டியனின் இரண்டாவது மனைவிக்கு ராஜராஜ பாண்டியன் என்னும் மகன் பிறந்தான். குழந்தைகளில் இருவரில் ராஜசேகர பாண்டியன் மணிகண்டன் மீது அதிக பாசம் வைத்து இளவரசனாக்கினான். இது கண்டு பொறாத அவனது இளைய மனைவி, தலைவ-க்கு பு-ப்பால் வேண்டுமென்று அதைக் கொண்டு வர மணிகண்டனை காட்டிற்கனுப்பினாள். வழியில் கம்பங்குடி அந்தண குடும்பத்தில் அமுதுண்டு இலைவாணிச்சியிடம் வெற்றிலைப் பாக்கு பெற்றுக் கொண்டு காட்டிற்குச் சென்று பு-க் கூட்டங்களை அழைத்துக் கொண்டு, பு- மீதேறி வரும் வழியில் இலைவாணிச்சியிடம் வெற்றிலை பாக்கிற்கீடாக பு-க்குட்டிகளைத் தந்து பந்தளம் அரண்மனை திரும்பினான். இந்த அதிசயத்தைக் கண்டு பயந்து இளையராணி மன்னிப்பு கேட்டாள்.

மணிகண்டன் தனது 12 வயதில் வண்டிப் பெரியாறு என்னுமிடத்தில் மானவிக்ரம பாண்டியனை, உதயணனிடமிருந்து காப்பாற்றினான். பின்னர் ராஜசேகர பாண்டியன் மந்திரிகள் ராமன், கிருஷ்ணன் என்னும் மந்திரி, சேனாபதியிடம் போர் பயிற்சி பெற்றான். கொச்சுக்கடுத்தை என்னும் மாவீரனை சுரிகை என்னும் ஆயுதத்தால்

தோற்கடித்தான். பிறகு துருக்கிய கொள்ளைக்கார மாலுமியான வாவரை வென்று நண்பனாக்கிக் கொண்டான்.

வாவர் ஒரு அரபு முஸ்லீம். இஸ்மெயில் வழியில் வந்தவன். சுலெப ராஜ்யம், கீர் தோட்டத்து ஆ-க் குட்டியின் மகன். மந்திர தந்திர வித்தைகளால், மணிகண்டன், வாவரை வென்றான். பின்னர் மணிகண்டன் அம்பலப்புழை சென்று ஈழவர்களின் தலைவன் சீரப்பனிடம் பயிற்சி பெற்று, அவனுடைய பெண் சிறுகூத்தியின் ஒரு தலைக் காதலை நிராகரித்து நாடு திரும்பினான்.

மணிகண்டன் தனது 16 வயதில் திரும்பவும் பாண்டிய தேசம் வந்து, மானவிக்ரம பாண்டியனை கண்டு பேசி, மக்கள் உதவியுடன் உதயணனைக் கொன்றான். கொச்சுக் கடுத்தை உதயணனின் நண்பனான புதுச்சேரி முண்டனைக் கொன்றான்.

பந்தளத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, சபரி மலையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலைக் கட்டி, சபரி சாஸ்த்தா கோயில்களையும் கட்டி முடித்து எல்லோருடைய முன்னிலையில் யோகாக்கினியில் ஒரு தீபமாகி மகர ஜோதியில் கலந்தான். கொல்லம் ஆண்டு 296-இல் (கி.பி.1112-இல்) தனது 26-வயதில் மணிகண்டன் ஜோதியில் ஐக்கியமானார்.

(மணிகண்ட சாஸ்த்தா வழிபாடு - ஐயப்ப வழிபாடு - ஜாதி, மத வித்தியாசமின்றி - சைவ, வைணவ பேதமின்றி, மொழி - மாநில வித்தியாசமின்றி பாரதமெங்கும் எல்லோராலும் நடத்தப்படுகிறது என்பது மிகச் சிறப்பான அம்சம்)

## 65. அருணகிரிநாதர்

குலோத்துங்க சோழன் II-க்குப் பிறகு (கி.பி.1133 - கி.பி. 1745) , ராஜராஜன் II (கி.பி.1145 - கி.பி.1163) , ராஜாதி ராஜன் (கி.பி.1165 - 1179) , குலோத்துங்கன் III (கி.பி.1178 - கி.பி.1218) , ராஜராஜன் III (கி.பி.1216 - கி.பி.1246) , இவன் மகன் ராஜேந்திர சோழன் (ருத்திர சோழன்) III ( கி.பி.1246-A.D.) முத-ய மன்னர்கள் சோழ நாட்டை ஆண்டு வந்தனர். ராஜேந்திர சோழன் III தனது குடும்பத்தோடு கங்கை சென்று மூத்தோர் கடன்களை நிறைவேற்றி நாடு திரும்புகையில் கௌட பிராமண குடும்பங்களை (வங்காளிகள்-காஸ்யப, கௌதம, சாண்டில்ய, சாவர்ண, ஸ்ரீவத்ச, பரத்வாஜ, சங்கிருதி கோத்திரத்தைச் சேர்ந்த) பண்டிதர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு நாடு திரும்பினான். திருவண்ணாமலையில் ஹொய்சாள அரசன் வல்லாளன் அண்ணாமலையார் கோயில் கட்டி அங்கே பிராமண குடும்பங்களை அமர்த்தினான். ராஜேந்திரசோழன் III



உடன் வந்த வங்காளி-கௌட-பிராமணர்கள் ஹொய்சள அரசன் வேண்டுகோளின்படி முள்ளண்டிரம் என்னும் கிராமத்தில் தங்கி வாழ்ந்தனர். அவ்வாறு வந்த பிராமண குடும்பங்களில் ராஜநாதர் என்பவருக்கும் அபிராமி (முத்தம்மை) என்பவளுக்கும் பிறந்தவர் சோணதரர் (அருணகிரிநாதர்) . இவர் பிறந்த இடம் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள முள்ளண்டிரம் என்னும் கிராமம். ஹொய்சள மன்னன் மூன்றாம் வல்லாளன் மகன் வீர விஜய விருபாக்ஷன்(பிரபுட தேவராயன் - கி.பி.1422 - 1446) என்னும் மன்னன் காலத்தில் வாழ்ந்தவர் அருணகிரிநாதர். இவர் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்தார். இவரை இவரது தமக்கையார் வளர்த்து வந்தார். திருவண்ணாமலையில் உள்ள தாசியின் உதவியால் வளர்ந்து பெரியவனாகி டிண்டிமம், வாசித்தல், ராகம், தாளம் முத-யனவற்றை கற்று பாடல்கள் பாடுவது, கவிதைகள் எழுதுவது முத-யனவற்றில் தேர்ச்சி பெற்றார். திருவண்ணாமலைக்கு வந்த பட்டிணத்து அடிகள் தாசி வீட்டிற்கு வந்து அருணகிரிநாதரைக் கண்டுஅவருக்குஆசிகள்அளித்தார்.

பட்டிணத்து அடிகள் பூம்புகார் பட்டிணத்தில் பிறந்தவர். சிவநேய குப்தரின் மகனாய் பிறந்தவர். இயற்பெயர் சுவேதாரண்யர். இவர் செட்டியார் வகுப்பசை சேர்ந்தவர். சுவேதாரண்யர் தனது 16-வது வயதில் சிவகலை என்னும் பெண்ணை மணந்தார். இவர்கள் சிவசருமர், சுசீலை என்னும் குழந்தைகளை வளர்த்து வந்தார். சிவசருமனுக்கு மருதப்பிரான் என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். மருதப்பிரான் வளர்ந்து பெரியவனாகி கப்பல் வாணிபத்தில் ஈடுபட்டு தந்தைக்கு உதவி செய்து வந்தார். ஒரு நாள் கப்ப-ல் வறட்டி ஏற்றி வந்தது கண்டு மருதப்பிரானைக் கேட்க, வறட்டியை உடைத்து மாணிக்கக் கற்களை காண்பித்து, “காதற்ற ஊசியும் கடைவழிக்கு வாராது” -என்று கூறி வீட்டை விட்டு சென்று விட்டார் மருதப்பிரான். பட்டிணத்தடிகள் மாயை அகன்று துறவு பூண்டு தாயின் ஈமக்கடன் முடித்து ஊரை விட்டு புறப்பட்டு வடநாடு சென்று உஜ்ஜயினியை அடைந்தார். அங்கு ஒரு பிள்ளையார் கோயி-ல் நிஷ்டையில் இருந்தார். உஜ்ஜையினி அரசன் பத்ரகிரி ராஜன் அரண்மனையை கொள்ளையடித்த திருடர்கள் போகும் வழியில் பிள்ளையாருக்கு ஒரு முத்து மாலையை வீசியெறிய அது பட்டிணத்தடிகள் கழுத்தில் வந்து விழுந்தது. மறுநாள் அரசனின் சேவகர்கள் பி`ள்ளையார் கோயில் வந்து, பட்டிணத்தடிகளை திருடர்களில் ஒருவன் என்று கருதி கைது செய்து அரசனிடம் இழுத்துச் சென்றனர். அரசன் விசாரணை செய்யாது பட்டிணத்தடிகளை கழுவேற்றும்படி ஆணையிட்டான். பட்டிணத்து அடிகள் கழுமரத்தை நோக்க அது பற்றி எறிந்தது.

பத்திரகிரிராஜன் பயந்து பட்டிணத்து அடிகள் கா-ல் விழுந்து வணங்கி உபதேசம் செய்யும்படி கேட்கவே, அரசைத் துறந்து திருவிடைமருதூர் சென்று மகா-ங்கம் சந்நிதியில் இருக்கும்படி உபதேசித்தார். பின்னர் பட்டிணத்தடிகள் பல சிவஸ்தலங்கள் தரிசித்து திருவிடைமருதூர் வந்து பத்ரகிரி அரசனுக்கு முக்தி அளித்து, பின்னர் திருவண்ணாமலை சென்று தாசி வீட்டில் வளரும் அருணகிரியாருக்கு ஆசியளித்து திருவொற்றியூர் சென்று முக்தியடைந்தார்.

அருணகிரிநாதர் பரத்தையர்களிடத்து மோகமுற்று பொருளை இழந்து, திருவண்ணாமலை ராஜகோபுரம் மீது ஏறி கீழே குதித்து தற்கொலை முயற்சி செய்யும் போது முருகக் கடவுள் ஒரு சித்தர்கள் உருவில் வந்து காப்பாற்றி “சும்மாயிரு” என்று உபதேசம் செய்தார். பின்னர் திருச்சிராப்பள்ளி வந்து வயலூர் சென்று முருகக் கடவுளிடம் பிரணவோபதேசம் பெற்று ஊர் ஊராகச் சென்று கடவுள் மீது “திருப்புகழ்” பாடி வந்தார். பின்னர் பிரபுட தேவராயன் அவைக்கு வந்து, சம்பந்தாண்டான் என்னும் மந்திரவாதி சவாலை ஏற்று, மண்டப கற்றூணில் மயில்மேல் வள்ளி தெய்வானையுடன் முருகக் கடவுளை வரவழைத்து பிரபுட தேவராயனுக்கு தரிசனம் செய்து வைத்தார். பின்னர் பிரபுட தேவராயனுக்கு கண்பார்வை போய்விட்டது. அருணகிரிநாதர் கிளி உருவம் எடுத்துக்கொண்டு வானுலகு சென்று பாரிஜாத மலர் கொண்டு வந்து, பிரபுட தேவராயனுக்கு கண்ணொளி கொடுத்தார். சம்பந்தாண்டான், அருணகிரிநாதர் உடலை கொளுத்தி விடவே, அருணகிரிநாதர் கிளி உருவத்தி-ருந்தே முக்தி அடைந்தார்.

சித்தர்கள் பலர் தமிழ்நாட்டில் பிறந்து மக்களுக்கு இறை உணர்வை ஏற்படுத்தி, நல்வழி காட்டினர். அவர்களில் நாத சித்தர்கள் சிறப்பானவர்கள். சத்யநாதர், சதோக நாதர், ஆதிநாதர், அநாதி நாதர், கைலாச நாதர், வெகுளிநாதர், மதங்க நாதர், மச்சேந்திர நாதர், கோரக்க நாதர், கடேந்திர நாதர், அருணகிரி நாதர் முத-யோர். இவர்கள் கடவுளை வரவழைத்துக் காட்டும் வல்லமையுடையவர்கள். அணிமாதி அஷ்ட சித்திகளையும் பெற்றவர்கள். (18 சித்தர்கள் பெயர்கள் வருமாறு : அகஸ்த்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர், நந்தி, கூன் கண்ணர், கொங்கணவர், மச்சமுனி, வாசமுனி, கூர்ம முனி, பதஞ்ச-, கமலமுனி, இடைக்காடர், புண்ணாக்கீசர், சுந்தரானந்தர், ரோமரிஷி, பிரம முனி, இவர்களையன்றி தன்வந்திரி, புலஸ்த்தியர், புகுண்டர், பு-ப்பாணி கருவூரார், ராமதேவர், தேரையர், கபிலர் முத-ய சித்தர்களும் தமிழ்நாட்டில் பிறந்து வைத்யசாஸ்த்திரம், மூ-கைகள், யோக சாஸ்த்திரம், வானவியல், சோதிடம், விஞ்ஞான-அறிவியல் போன்ற பல நூல்கள் இயற்றி போதித்து மானுடத்தை



வளர்த்தனர். இவர்கள் குறிப்பிட்ட வகுப்பையோ, இனத்தையோ, மாநிலத்தையோ சேராதவர். (ரிஷிமூலம், நதிமூலம் பார்க்கக் கூடாது) இந்த சித்தர்களைப் பற்றிய கதைகள் ஏராளம் . அதை விவரிக்கின் பல நூல்கள் எழுத வேண்டியிருக்கும். எனவே விருப்பமுள்ளவர் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று தேடி அவர்கள் வரலாறுகளைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக திருமூலரது “திருமந்திரம்” எளிதில் கிடைக்க வல்லது. 18 சித்தர்களின் பாடல்கள் எளிதில் கிடைக்க வல்லது.

(இக்காலத்திலும் பல சித்த புருஷர்கள் (குறிப்பாக தமிழ்நாட்டில்) வாழ்ந்து வருகிறார்கள். பல அற்புதங்களை (அமானுஷ்யமானவைகள்) செய்து காட்டி வருகிறார்கள். இவர்கள் இறைவனுடன் பேசுகிறார்கள். முக்காலமும் உணர்ந்தவர்கள். இவர்கள் செய்யும் செயல்கள் மேலை நாட்டு விஞ்ஞானிகளாலும், பேரறிவு படைத்தவர்களாலும் புரிந்து கொள்ள முடியாதனவாக உள்ளன. ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் ஒரு சித்த புருஷனை சந்தித்தால் அவனே பெரும் பாக்கியவான்) .

அருணகிரிநாதர் காலத்தில் வாழ்ந்தவர் வில்-புத்தூரார். (இவர் தமிழில் எழுதிய வில்-புத்தூர் பாரதம் எளிமையானது), இவர் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் வாழ்ந்த வீரராகவாச்சாரியார் என்னும் வைஷ்ணவ அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர். இவர் வாக்கபாகை நாட்டரசன், கொங்கர் குலபதியாகிய வரபதி ஆட்கொண்டானை புகழ்ந்து பாடியுள்ளார். சேரன் சமஸ்தானத்து வித்துவானாக இருந்த மற்ற தமிழரசர்களையும் புகழ்ந்து பாடியுள்ளார். திருவண்ணாமலை சென்று அருணகிரிநாதரிடம் போட்டியிட்டுத் தோற்றார். திருவண்ணாமலை பார்க்க விரும்பாது பல்லக்கில் அமர்ந்து திரையிட்டுக் கொண்டார். இதனால் இவருக்கு கண்பார்வை போனது. மீண்டும் அருணகிரியாரைக் கண்டு அவர் அருளால் கண்பார்வை பெற்றார். இவரது மகன் ‘வரந்தருவார்’ என்பவன். இவன் சைவ-வைணவ பேதமில்லாது இருந்தமையால் வில்-ப்புத்தூரார் வீட்டை விட்டு விரட்டி விட்டார். அவர் வேறு ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்று புலவரானார். தந்தையார் மகாபாரதத்தை அரங்கேற்றும் போது சபையோர் கேட்ட வினாக்களுக்கு ‘வரந்தருவார்’ விடையளிக்கவே, வில்-ப்புத்தூரார் மகிழ்ந்து தனது புதல்வனை மீண்டும் சேர்த்துக் கொண்டார்.

வில்-ப்புத்தூரார் தனது கடைகாலத்தில் திருவரங்கத்தில் வாழ்ந்து பரமபதம் அடைந்தார்.

(பின்குறிப்பு : அருணகிரிநாதர் திருப்புகழை தேடிக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்து நாட்டில் பரப்பியவர் வள்ளிமலை ஸ்வாமிகள் மற்றும் செங்கல்வராய பிள்ளை, திரு T.M. கிருஷ்ணசாமி அய்யர் முத-யோர்)

(அருணகிரி நாதர், சாம, வேத, கௌதம கோத்திரத்து அந்தணர். சார்வபௌம டிண்டிமக்கவி, அஷ்டபாஷா பரமேஸ்வரர், ஷட்தர்சன ஷண்முக கவி, சித்ரகவி, சந்தக் கவி போன்ற பல விருதுகள் பெற்றவர். வங்காளம், சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம் முத-ய 8 மொழிகள் தெரிந்தவர். சைவ, வைணவ பேதமில்லாதவர். இஸ்லாமியர்கள் கூட இவரது தமிழ் பாடல்கள் கேட்டு சன்மானம் அளித்துள்ளனர். தற்போது 13,300 திருப்புகழே கிடைத்துள்ளன) .

## 66. வித்யாரண்யர்

கர்நாடக தேசத்தில், துங்கபத்ரா நதிக்கரை அருகில், கிஷ்கிந்தை நகர் சமீபம் (கோல்கொண்டா) உள்ள விஜயநகரத்தில் போதாயன சூத்ரம், கிருஷ்ணயஜுர் வேதம், போதாயன சாகை, பரத்வாஜ கோத்திர அந்தணர் மாயனர் என்பவருக்கும் ஸ்ரீமதி என்பவளுக்கும் மாதவர் (வித்யாரண்யர்) பிறந்தார். இவரது சகோதரர் சாயனர், சோமநாதர் என்னும் இருவர். இவர் இளமையிலேயே கல்வி, கேள்விகளில் சிறந்தவராக இருந்து ''வித்யாரண்யர்'' என்னும் பட்டம் பெற்றார்.

டில்-மி-ருந்து மா-க்காபூர் என்னும் முகம்மதியன் (கி.பி.1334-இல்) ''ஆனைகுந்தி'' பட்டணத்தின் மீது படையெடுத்து அதைக் கொள்ளையடித்தான். ''ஆனைகுந்தி'' அரசன் பூபராயன் தீக்குளித்து இறந்தான். பூபராயன் என்னும் அரசனின் சேனாபதிகள், ஹரிஹரன், புக்கன் போரில் தோற்று ஓடி பம்பாவனத்தில் ஆஸ்ரமத்தில் தவம் செய்து கொண்டிருந்த வித்யாரண்யரிடம் தஞ்சமடைந்தனர். வித்யாரண்யர் ஒரு புதிய நகரத்தை உருவாக்கி வித்யாரண்ய நகரம் என்னும் பெயர் சூட்டி அதில் ஹரிஹரனை அரசனாக்கி, தானே முதன் மந்திரியாகி இருந்தார். புக்கன் சேனாபதியாக இருந்தார். இவர் காயத்ரி தேவியின் அனுக்கிரஹம் பெற்று, இஸ்லாமியர்களை விரட்டி, காயத்ரி தேவியின் அருளால் பூமிக்கடியில் உள்ள தங்கப் புதையலை எடுத்து தலைநகரை விரிவுபடுத்தி, அந்தணர்களை வரவழைத்து, ஆலயம், அன்னதான சத்திரம் முத-யவற்றை கட்டுவித்தார். பின்னர் விஜயநகரப் பேரரசு விரிந்து தென்னாடெங்கும் பரவியது.



வித்யாரண்யருக்கு பாரதி, கிருஷ்ண தீர்த்தர், சர்வக்ஞவிஷ்ணு, சங்கரானந்த ஸ்வாமிகள், ஸ்ரீ வித்யாதீர்த்தர் முத-யோர் ஆசிரியர்களாக இருந்தனர். பின்னர் சிருங்கேரி பீடாதிபதியாகி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஆனார். இவர் செய்த நூல்கள் சதுர்வேத பாஷ்யம், அநுபூதிப் பிரகாசம், பிரும்ம கீதை, பஞ்சதசி, ஜீவன் முக்தி விவேகம், ருக்குத் த்ருஸ்ய விவேகம், மாதவ விருத்தி, நிதான மாதவம் (வைத்ய நூல்) , கால மாதவம், சதப்ரஸ்ந கல்பலதிகா, பராசரஸ்ருதி வியாக்யானம், ஜைமிநீய நியாயமாலா விஸ்தாரம், ஆசார மாதவம், வ்யவகார மாதவம், வித்யாரண்ய கால ஞானம், சங்கரதிக் விஜயம், சூத சம்ஹிதை வியாக்யானம், சங்கர விலாசம், விவரணப் பிரமேய சங்கிரஹம், உபநிஷத் தீபிகை, பிரம்ம விதாசீ, கர்மவ விவாக மாதவீயம், பட்டசாரம், பட்டசார வியாக்யானம், வேதாந்த விஜயம், பஞ்சார வியாக்யானம், சங்கர பாஷ்ய - டீகா, கீதா-தாத்பர்யம், ஸ்மிருதி ஸங்கிரஹம், சர்வ தரிசன சங்கிரஹம் முத-ய பல நூல்களை எழுதி, அத்வைத சித்தாந்தத்தை பிரபலப்படுத்தி சிருங்கேரி மடத்தில் ஆச்சார்ய ஸ்வாமிகளாக இருந்தார். (கி.பி. 1331 முதல் கி.பி. 1386 வரை வித்யாரண்ய ஸ்வாமிகள் வாழ்ந்து கைலாஸ பதவி அடைந்தார்) .

## 67. வீர சிவாஜி

ஔரங்கசீப் என்னும் மொகலாய மன்னன் தில்-யி-ருந்து ஆண்டு வந்தான். இவன் மங்கோ-ய இஸ்லாமியர் பாரதத்திற்குள் நுழைந்து தில்-யை பிடித்து ஆண்ட பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான் (தாஜ்மகால் மசூதியைக் கட்டியவன்) வழி வந்தவன். ஔரங்கசீப் தன் தந்தை ஷாஜகானை சிறையிலடைத்து, சகோதரர்களைக் கொன்று ஆட்சி பீடமேறியவன், அக்பர் காலத்தில் அவருக்குத் துணையாயிருந்த ராஜபுத்ர ஹிந்து அரசர்களை ஏமாற்றி தனது ராஜ்யத்தில் இணைத்துக் கொண்டார். இவர் தீவிர முஸ்லீம். ஹிந்துக்கள் மீது வரி விதித்தார் (ஜஸியா) . இவர் பாரதம் முழுதும் ஆட்சி செய்ய கனவு கொண்டார். இவருக்கு எதிரியாக மகாராஷ்ட்டிர தேசத்தில் சிவாஜி என்னும் வீரன் தோன்றி மொகலாயப் படைகளை நடுங்கச் செய்தான்.

பீஜப்பூர் சுல்தானிடம் ஷஹாஜி போன்ஸ்லே என்பவர் பணிபுரிந்து வந்தார். ஷஹாஜி என்பவருக்கும் ஜீஜாபாய் என்பவளுக்கும் சிவாஜி பிறந்தார். ஜீஜாபாய் தன் மகன் சிவாஜிக்கு

ஹிந்து வீரர்களின் கதைகளைச் சொல்- அவன் பவானி மேல் பக்தி வளரச் செய்து புனாவில் வளர்த்து வந்தார். சிவாஜியின் குரு சமர்த்த ராமதாஸர். இவர் வரலாறு வருமாறு :

மராட்டிய தேசத்தில் குரு ஜாம்பம் என்னும் ஊரில் வசித்து வந்த சூரியாஜி பண்டிதர் என்னும் அந்தணருக்கும் ரேணு என்பவளுக்கும் சமர்த்த ராமதாஸர் பிறந்தவர். இவரது மூத்த சகோதரன் கங்காதரன். இவரது இயற்பெயர் நாராயணன். இவருக்கு பிறக்கும்போது சிறிது வால் இருந்தது. எனவே இவரை ஹனுமன் அம்சம் என்று மக்கள் கருதினர். இவர் சிறு வயது முதல் ராம நாமம் கூறிக் கொண்டு வீட்டில் இருக்காமல் பிரமசாரியாய் பிஷையெடுத்து உண்டு தவம் செய்து ராமதரிசனம் கண்டு "ராமதாஸர்" என்று அழைக்கப்பட்டார். அவருடைய பெருமை அறிந்து ஜீஜாபாய் தன் மகனுக்கு அருள் செய்ய வேண்டி சிவாஜியை அவரிடம் அனுப்பி வைத்தார். சமர்த்த ராமதாஸரை சிவாஜி தனது குருவாய் ஏற்றுக் கொண்டார்.

சமர்த்த ராமதாஸர் பதினொரு ஊரில் ஹனுமன் கோயில் கட்டி பதினொரு ஊரிலும் பதினொரு உருக்கொண்டு தானே பூஜை செய்தார். இவரைப் பிடிக்க டில்- பாதுஷா ஔரங்கசீப் ஒரு படையை அனுப்பினான். இஸ்லாமிய வீரர்கள் விட்ட அம்புகளை தன் கையால் பிடித்து ஒடித்து அநேக குரங்குகளை ஏவி, அவர்களை விரட்டியடித்தார். பின்னர் அம்பாஜி, வேணுபாய், பயிணா பாய் முத-யவர்களிடம் பல அற்புதங்கள் செய்து காட்டி அவர்களைக் காப்பாற்றினார். மக்கள் கூட்டம் இவரை ஹனுமனாகவே நினைத்து வழிபட்டது. இவரை குருவாகக் கொண்ட சிவாஜி பல வீரர்களைத் திரட்டி, மலை மீதிருந்த சிற்றரசர்கள் கோட்டைகளை (புரந்தர்கட் முதலான) கைப்பற்றி முகலாயர்களை எதிர்த்துப் போரிட்டான். பீஜப்பூர் சுல்தான் அனுப்பிய இஸ்லாமிய படைத் தலைவன் அப்ஜல்கானைக் கொன்று பீஜப்பூர் படைகளைத் துரத்தினான். ஔரங்கசீப்பின் படைத்தலைவன் ஷையிஸ்டகானை இருபது வீரர்களுடன் அவன் தங்கியிருந்த வீடு புகுந்து தாக்கி அவனைக் கொன்றான். பின்னர் ஔரங்கசீப் ஒரு தூது அனுப்பி சிவாஜிக்கு ராஜ் ̇யம் அமைத்துத் தருவதாகக் கூறி டில்-க்கு வரவழைத்து சிவாஜியை சிறையிலடைத்தான். அச்சிறையி-ருந்து சாமர்த்தியமாக தப்பி மராட்டியம் சென்று படைகளைத் திரட்டி தானே ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தான். முகமதிய படைகளுக்கு சிவாஜி சிம்மசொப்பனமாக



இருந்தான். சிவாஜியின் மகன் சாம்பாஜி. சிவாஜியின் காலத்தில் வாழ்ந்தவர் துக்காராம். இவர் பாண்டுரங்க பக்தர். இவரது பஜனைப் பாடல்கள் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று ரசித்தனர். சிவாஜிக்கும். துக்காராம் மீது பக்தி ஏற்பட்டு அவருடைய பஜனைக்கெல்லாம் செல்வார். பஜனை கேட்டுக் கொண்டிருந்த போது முகமதியர்கள் சிவாஜியை வளைத்தனர். பாண்டுரங்கனே சிவாஜி உருவத்தில் வெளியேறி, முஸ்லீம் படைகளை ஏமாற்றி மறைந்து விட்டார்.

துக்காராம், திண்டகாமுனு என்னும் கிராமத்தில் வணிகர் குலத்தில் பிறந்தவர். இவர் வளர்ந்து பெரியவனாகி பாண்டுரங்கன் மீது பக்திப் பாடல்களை இயற்றி தனது குருவிடம் காண்பிக்க இவைகள் இலக்கண குற்றமுடையது என்று அவரது குரு கூறினார். இவர் மனம் வருந்தி தான் எழுதிய கவிதைகளை மூட்டை கட்டி குளத்தில் எறிந்தார். அவைகளை பண்டரிநாதன் தன் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு நின்றதால் அவை "அபங்கம்", குற்றமில்லாதது என்னும் பொருளில் மக்களால் பாடப்பட்டு வந்தது. இவருடைய காலத்தில் மராட்டியத்தில் கணபதி பக்தர்கள் இவரைக் கே- செய்தனர். இவர் கணபதியை வரவழைத்து தன்னுடன் உணவருந்தச் செய்து அவர்களுக்கு தன் உண்மை பக்தியை நிரூபித்தார். இவருடைய காலத்தில் நாமதேவ், ஞானேஸ்வரர், நிவ்ருத்தி, ஜனாபாய், முக்தா பாய், கோராகும்பர், கேசவஸ்வாமி, ஜனார்த்தனஸ்வாமி போன்ற பக்தர்கள் தோன்றி மராட்டிய தேசத்தில் ஹரிபக்தியை (பாண்டுரங்க பக்தி) வளர்த்து ஹிந்து மதத்தை அழியாமல் காப்பாற்றினர்.

சிவாஜி இவர்களுக்கு பொருளுதவி செய்து மக்களை நல்வழிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். இம்மகான்களின் செய்கையை இஸ்லாமிய மதம் மராட்டியத்தில் பரவவொட்டாமல் தடுக்கப்பட்டது. சிவாஜி தனது 52-ஆவது வயதில் இறந்தார். பின்னர் ஔரங்கசீப்பின் படைகள் சாம்பாஜியைக் கொன்றன.

ராஜபுதனத்திலும், ராணா கும்பனது மனைவியான "மீராபாய்" கிருஷ்ண பக்தியை வளர்த்து, ஹிந்து மதத்தைக் காப்பாற்றி ஹரிபக்தியை வளரச் செய்தார்.

தென்னாட்டில் அருணகிரி நாதர் என்னும் சித்தர் தோன்றி பல அற்புதங்கள் செய்து, ஹிந்து மதத்தை காப்பாற்றி வளரச் செய்தார்.

# 68. குருநானக்

பஞ்சாப், சிந்து (பாகிஸ்தான்) பிரதேசங்களில் முகம்மதியர்கள் ஆட்சி நடைபெற்ற போது ஹிந்து கோயில்கள் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டன. ஹிந்துக்கள் பயமுறுத்தப்பட்டு இஸ்லாமி மதத்தில் சேர்க்கப்பட்டனர். பூணூல் அணிந்த பிராமணர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். இந்நாட்களில் ஹிந்து குடும்பத்தில் பிறந்த நானக்-தாஸ் பூணூல் அணிய மறுத்துவிட்டார். இவர் ஹரி பக்தி மிகுந்தவர். முகம்மதியர்களால் உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளாததால், கோயில் விக்ரஹங்களை பூமிக்கடியில் பதுக்கி விட்டு, ஹிந்து ஆலயங்களை மசூதி போல் ஆக்கி, அங்கே ஹரிபஜனை செய்து கொண்டு நண்பர்களுடன் சேர்ந்து ஒரு புதிய மதத்தை உருவாக்கினார். தலையில் முண்டாசு அணிதல், முகத்தில் தாடி வளர்த்தல், கையில் சீப்பு வைத்துக் கொள்ளுதல், மதத்தைக் காக்க எப்போதும் போரிட்டு உயிர் விட சித்தமாயிருத்தல், உருவ வழிபாட்டை தவிர்த்தல், பழைய சடங்குகள், ஜாதி சம்பிரதாயங்களைத் தவிர்த்து மதத்தைக் காக்க ஒன்றுபடுதல், ஸ்ரீஹரியே தெய்வம், குருவே வழிகாட்டி என்று உறுதியான கொள்கைகளுடன் வாழ்தல், ஏழைக்கு குருத்வாராக்களில் அன்னமிடுதல் போன்ற கோட்பாடுகளை உருவாக்கி இஸ்லாமிய மதம் பரவாமல் தடுத்து சீக்கிய மதத்தை நிறுவினர்.

குரு-நானக் பஞ்சாபி-ருந்து வடபாரதம் முழுதும் யாத்திரை செய்து, காசி முதல் ராமேஸ்வரம் வரை யாத்திரை செய்து தனது புதிய கொள்கைகளை பிரச்சாரம் செய்தார். மேலும் பஞ்சாபி-ருந்து புறப்பட்டு அரேபியா வரை சென்று ஹஜ் யாத்திரை மேற்கொண்டு, காஃபா வரை சென்று புனிதப் பயணங்கள் மேற்கொண்டார். அரேபிய தேசத்தில் இவர் உண்மையான முகமதியர் அல்லர் என்று கண்டுபிடிக்கப்பட்டு அங்குள்ள மதகுருமார்களிடம் அழைத்துச் செல்லப்பட்டார். அவர்களிடம் “அல்லா” உலகுக்கு பொதுவானவர். அவர் ஒரு மதத்திற்கு மட்டும் சொந்தக்காரர் அல்லர். அவருக்கு அநேகம் பெயர்கள் உண்டு. அவரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் எல்லா தேசங்களில் பிறந்துள்ளனர். வானத்திலும் பூமியிலும் அவர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா உயிர்களும் அவரால் படைக்கப்பட்டு வருகின்றன-என்பன போன்ற திருக்குர்ரானின் வசனங்களை அவர்களிடம் கூறினார். ஸ்ரீமன் நாராயணனும், அல்லா-ஹ்-வும்-ஒன்றே-ஒரே கடவுள்தான் என்று வாதிட்டார். அரேபிய மதகுருமார்கள் குருநானக்கிடம் ஸ்ரீமன்-நாராயணனை



வரவழைத்துக் காட்டுங்கள் என்று வாதிட்டனர். குரு-நானக் ஸ்ரீமன் நாராயணனை துதிக்க பூமியை பிளந்து கொண்டு ஸ்ரீமன் நாராயணனது விக்ரஹம் வெளிப்பட்டது. முகம்மதிய குருமார்கள் பயந்துபோய் குருநானக்கை வெளியே அனுப்பி விட்டனர். (இந்த விஷ்ணுவின் விக்ரஹம் மெக்காவில் ரகசியயமாக ஒரிடத்தில் இன்றும் உள்ளது என்று சிலர் கூறுகின்றனர்), குரு-நானக் மக்களுக்கும் பல அற்புதங்களை செய்து காட்டி தான் ஒரு சித்தர் என்பதையும், ஸ்ரீஹரி பக்தியே சிறந்தது என்பதையும் நிரூபித்துக் காட்டினார்.

குருநானக் மீண்டும் பஞ்சாபுக்கு வந்து சீக்கிய மதப் பிரசாரம் செய்து, சீக்கிய குருத்வாரா பலவற்றைக் கட்டி சீக்கியர்களை ஒன்றுபடுத்தினார். இவர் வழியில் வந்த குரு கோவிந்த சிங் முகமதிய அரசர்களால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார். குரு-கோவிந்த சிங்கின் பி`ள்ளைகள் இருவரைப் பிடித்து முகமதிய அரசர்கள் தூக்கி-ட்டுக் கொன்றனர். இருப்பினும் அஞ்சாநெஞ்சம் படைத்த சீக்கிய குருமார்கள் முகமதியர்களை எதிர்த்துப் போராடி சீக்கிய மதத்தை வளர்த்தனர். லாகூரில்(பாகிஸ்தான்) ரஞ்சித்-சிங் தலைமையில் சீக்கிய அரசு ஏற்படுத்தப்பட்டது. சீக்கிய குருமார்களின் சமாதி, குருத்வாரா முத-யன இன்னும் லாகூர், பஞ்சாப் பகுதிகளி`ல் உள்ளன.

(சீக்கியர்களுடைய குரு ராமதாஸ்(கி.பி.1581-இல்) அமிர்தசரஸ் என்னும் பெரிய குளத்தை வெட்டுவித்தார். அக்குளத்தின் நடுவே ஒரு பெரிய குருத்துவாரா-வைக் கட்டி அதுவே சீக்கியர்களின் தலைமைப் பீட குருமார்கள் வாழுமிடமாக அறிவித்தார். (சீக்கியர்களின் பொற்கோயில்-அமிர்தசரஸ் நடுவே உள்ளது). பின்னர் அநேக குருமார்கள் தோன்றி சீக்கிய மதத்தை வளர்த்தனர்).

குரு-நானக், கோரக்க நாதர் என்னும் சித்தரிடத்தில் உபதேசம் பெற்று சித்தர் ஆனார். கோரக்க நாதர் கூறியபடி ஹரித்துவாரம் சென்று அங்கே நான்கு லக்ஷம் பேர்களுக்கு அன்னதானம் செய்தார். குருநானக் இறந்தபோது அவரது சடலத்தை கைப்பற்ற முகமதியர்கள் அவர் ஒரு இஸ்லாமியர் எனவே இஸ்லாமிய மதச் சடங்குகளின்படி அவரை புதைக்க வேண்டும் என்று கூறினர். குருநானக்கின் சடலம் ஒரு துணியால் போர்த்தப்பட்டு இருந்தது. அதை திறந்து பார்த்தபோது வெறும் ரோஜா மலர்களே காணப்பட்டது. அதை இஸ்லாமிய மதத்தவரும், சீக்கியர்களும் பிரித்துக்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

(குருநானக் கி.பி.1469-கி.பி.1508) .

# 69. ராஜாராம் மோகன்ராய்

முகலாயர்கள் ஆட்சி பாரதமெங்கும் பரவி ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகள் இருந்து பின்னர் கொடுங்கோன்மையால் ந-வுற்றது. இந்த எழுநூறு வருடங்களில் பலப்பல ஹிந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டு, மக்கள் பலவந்தமாக இஸ்லாமுக்கு மாற்றப்பட்டனர். ஆங்கிலேய, பிரெஞ்சு, டச்சு வர்த்தகர்கள் நேரிடையாக கிழக்கு நாடுகளுடன் வர்த்தகம் செய்ய முடியவில்லை. டச்சுக்காரர்கள் கடல் மார்க்க வாணிபம் செய்ய முற்பட்டு இந்தியாவை நெருங்க முயற்சித்தனர். இதன் விளைவாக வட அமெரிக்கா, தென் அமெரிக்கா கண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஐரோப்பியர்கள் அங்கே குடியேறினர். அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள் குடியேறி ஆட்சி அமைத்தனர். வாஸ்கோ-ட-காமா என்னும் மாலுமி தென்னாப்பிரிக்காவின் கடற்கரை ஓரமாக கப்பல் பயணம் செய்து இந்து மஹா சமுத்திரம் வழியாக தென் இந்தியாவை அடைந்தார். இந்த கடல் வழி மார்க்கமாக டச்சு மக்கள் இந்தியாவில் குடியேறி (கோவா-டையூ-டாமன்) பல இடங்களைப் பிடித்து ஆட்சி தொடங்கினர். அம்மாதிரியே பிரெஞ்சு இன மக்களும் தென் இந்தியாவில் குடியேறி ஆட்சிகளை கைப்பற்றினர். ஆங்கிலேயர்களும் ் “ கிழக்கிந்திய கம் ்பெனி ” மூலமாக இந்தியாவின் பல பகுதிகளை பிடித்து ஆண்டனர். ராபர்ட் கிளைவ் (கி.பி.1744-இல்) தென்னிந்தியா வந்து பல இடங்களைப் பிடித்து, சந்தா-சாஹிப், ஆற்காடு நவாப், திப்புசுல்தான் முத-யவர்களை வென்று தென்னாட்டில்ஆங்கிலேயர் ஆட்சிக்கு அஸ்திவாரம் அமைத்தான். பிரெஞ்சுப் படைத்தளபதி ட்யூப்ளே(கி.பி.1746-இல்) தென் இந்தியாவில் பிரெஞ்சு ஆட்சியை நிறுவினான்.

ஆங்கிலேயர்கள் படிப்படியாக, வங்காளத்திலும், தில்-யிலும் நுழைந்து பாரதமெங்கும் ஆங்கிலேயர் ஆட்சியைக் கொண்டு வந்தனர். இந்து சிற்றரசர்கள், இஸ்லாமிய சிற்றரசர்கள் ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டினர். (கெட்டி-பொம்மு,பூ-த்தேவன் மருதுபாண்டியர்கள் முத-ய சிற்றரசர்களை ஆங்கிலேய ஆட்சி கொன்றது) . பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆதிக்கம் உலகெங்கும் பரவியது. இக்காலத்தில்தான் ராம்-மோகன் ராய் அவதரித்தார்.



வங்காளத்தைச் சார்ந்த மூர்ஷிதாபாத் மாவட்டத்தில் ராதா நகர் கிராமத்தில் 22.5.1772 அன்று வைதீக அந்தணர் ராமகண்டோ-ராய் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். ராம்மோகனுக்கு இளவயதில் பகவான் விஷ்ணு மீது பக்தி அதிகம். தனது 14-ஆம் வயதில் துறவியாக வேண்டும் என்று ஆவல் கொண்டார். இவர் பாட்னாவில் முஸ்லீம் அறிஞர்களிடம் அரபிய மொழி, பாரசீக மொழிகளை கற்றார். இஸ்லாமிய மதம் பற்றியும் தெரிந்துகொண்டார். பின்னர் உருவ வழிபாட்டின் கொள்கையை எதிர் ்த்து வாதாடினார். ஆனால் ஹிந்து சமயத்தின் மீது ஆழ்ந்த பற்று கொண்டிருந்தார். ராம்-மோகனின் தந்தை கி.பி.1803-இல் காலமானார். கிழக்கிந்திய வணிகக் குழுவின் வருவாய் துறையில் ஜான்-திக்பி என்பவரின் கீழ் பணியாற்றி வரும்போது ஆங்கிலம் கற்று பின்னர் ராஜ்பூர் என்னுமிடத்தில் கி.பி.1809 முதல் கி.பி.1814 வரை பணியாற்றினார். பின்னர் கி.பி.1814-இல் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, கல்கத்தாவில் குடியேறினார். பின்னர் ஆங்கிலம் போதிக்க ஒரு கல்லூரி துவங்கினார். பாரசீக, ஆங்கில இலக்கியங்களை வங்காளியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். ஹிந்துக்களின் வேதங்களை சமஸ்கிருத மொழியி-ருந்து வங்காளி மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். “கௌடிய வியாகரணம் ” என்னும் நூலை வங்காளி மொழியில் வெளியிட்டார். “பிரம்ம சமாஜம்” என்ற அமைப்பை(கி.பி.1828-இல்) துவங்கி வேதங்களின் சிறப்பையும் கூறி, ஹிந்துக்களின் மூடப்பழக்க வழக்கங்களையும் சாடினார். உடன்கட்டை ஏறுதலை தடுக்க சட்டமியற்ற வேண்டும் என்று போராடி, இங்கிலாந்துக்குச் சென்று ஆங்கிலப் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றும்படி செய்தார். மொகலாய அரசர் வழியில் வந்த இரண்டாம் அக்பர் இவருக்கு ராஜா என்ற பட்டத்தை அளித்தார். ஆங்கிலேய அரசிடம் வாதாடி, மொகலாய அரசர் இரண்டாம் அக்பருக்கு அதிக பென்ஷன் தொகை வாங்கித் தந்தார். பெண்ணுரிமை மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல மட்டங்களில் போராடி வந்தார். இவர் 27.9.1833 அன்று இங்கிலாந்தில் காலமானார்.

“ராஜா ராம் மோகன்ராய்” ஏற்படுத்திய சீர்திருத்தக் கருத்துக்கள் வங்காளத்தில் புதிய எழுச்சியைத் தோற்றுவித்தன. கேசவ் சந்திரசென், தேவேந்திரநாத் தாகூர் ், ரவீந்திரநாத் தாகூர், பங்கிம் சந்திர சாட்டர்ஜி, சரத் சந்திர சட்டர்ஜி, அரவிந்த்த கோஷ், ஸ்வாமி விவேகானந்தர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் போன்ற பெரும் தலைவர்கள் வங்காள தேசத்தில் உருவாக ராஜாராம் மோகன்ராயின் தொண்டு ஒரு முன்னோடியாக அமைந்தது.

## 70. பாரத மணிகள்

பாரத நாட்டின் திலகமான தமிழ்நாட்டில் கி.பி.15-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு முடிய அருந்தொண்டாற்றிய தமிழர்கள் சிலரது வாழ்க்கைக் குறிப்புகள் இந்த அத்தியாயத்தில் கூறப்படுகின்றன.

### 1. காளமேகப் புலவர் (கி.பி.1455)

இவர் தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற புலவர். கோபராஜன் குமாரன் சாளுவ திருமலை ராயன், விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாக(கி.பி.1455-1468) மதுரையி-ருந்து அரசாண்ட காலத்தில் வாழ்ந்தவர். கும்பகோணத்தில் வைணவ வேதியர் குடும்பத்தில் பிறந்தவர். பெரியவனான பிறகு ஸ்ரீரங்கம் ஆலயத்தில் பரிசாரகராக பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, அருகே உள்ள திருவானைக்கா கோயி-ன் கணிகையான மோகனாங்கிக்காக திருவானைக்கா கோவி-ல் காத்துக் கொண்டிருக்கும்போது, ஆலயத்தின் உள்ளேயே உறங்கிவிட்டார். ஆலய குருக்கள் இவர் இருப்பது அறியாது கோவிலை பூட்டிச் சென்றுவிட்டார். நடு இரவில் அகிலாண்டேஸ்வரி அம்மன் காளமேகப் புலவருக்கு காட்சியளித்து புலமை அருளினாள். அது முதல் இவர் சைவப் புலவராகி தமிழ்நாடெங்கிலும் சென்று புலவர்களை வாதில் வென்றார்.

இவர் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள் அதிமதுரக் கவிராயர்(மதுரை), குமார சரஸ்வதி (மதுரை), இரட்டைப் புலவர்கள், அருணகிரிநாதர், ஸ்ரீவில்-ப்புத்தூரார் முத-யோர்.

காளமேகப் புலவர் அரசன் மாவ-வாணன், நெற்குன்ற முத-யார் அவர்களால் ஆதரிக்கப்பட்டார்.

### 2. இரட்டைப் புலவர்கள்

இவர்கள் தஞ்சை மாவட்டத்தி்ல் வேளாளர் மரபில் உதித்தவர்கள். மூத்தவரின் பெயர் முதுசூரியர் (முடவர்). இளையவரின் பெயர் இளஞ்சூரியர் (பிறிவிக் குருடர்) . அந்தகரான இளஞ்சூரியர் தனது அண்ணன் முதுசூரியரை தோளில் சுமந்து சென்று பல ஊர்களில் உள்ள தமிழ் புலவர்களை சந்தித்தும், பல ஆலயங்களுக்குச் சென்றும் பல பாடல்கள் பாடியுள்ளனர். மூத்தவர் இரண்டடி பாட, இளைவர் இரண்டடி பாடி பாடல்களை முடிப்பர். இவர்களை ஆதரி்த்த அரசன் திருவக்கை வரபதி ஆட்கொண்டான் கொங்கராயன், கச்சி சம்புராய பல்லவன் (பு-க்கொடி) இவர் காலத்து புலவர்் காளமேகப் புலவர், அருணகிரிநாதர் முத-யோர். இவர்கள் பாடிய பாடல்கள் தில்லைக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், கச்சியுலா, ஆமாத்தூர் கலம்பகம் முத-யன.



### 3. பொய்யாமொழிப் புலவர்

இவர் சிவபெருமான் மீது பற்று கொண்ட சிவகவி. சேவலைப் பாடும் வாயால் முட்டையை (முருகனை) பாட மாட்டேன் என்று கர்வமாகப் பேசியவர். முருகன், முட்டை எனும் பெயர் கொண்ட வேடன் உருவத்தில் இவரை ஆட்கொண்டார். இவரை ஆதரித்த அரசர்கள் வணங்காமுடிப் பாண்டியன், சோழன் தஞ்சை வாணன், சூரராஜன், சீனக்க முத-யார் ஆகியோர் இவர் தொண்டை மண்டல வேளாளர்.

### 4. ஏகம்பவாண முத-யார் (கி.பி.1564)

வாணபூபதி என்னும் வேளாளர் குமாரர். இவர் விஜயநகரப் பேரரசின் தளபதி. சேர, சோழ, பாண்டியன்(சீமாறன் வல்லப தேவன்) மூவரையும் வென்றவர். இவர் சிறந்த தமிழ்ப் புலவர். அருட்கொடையாளர்.

### 5. குரு ராகவேந்திரர் (கி.பி.1595 - 1671)

இவர் மத்வ மதகுரு-போதகர். (மத்வாசாரிய பரம்பரை காண்க). இவர் காலத்தில் வாழ்ந்த மதுரை அரசன் திருமலை நாயக்கர். இவருடைய மந்திரியாக நீலகண்ட தீக்ஷிதர் என்னும் வடமொழிப் புலவர் இருந்தார். (அப்பைய தீக்ஷிதரின் பேரன் நீலகண்ட தீக்ஷிதர். அப்பைய தீக்ஷிதர் சிறந்த வடமொழிப்புலவர். காஞ்சிபுரம் தாத்தாச்சாரியாரை வாதில் வென்றார். சிறந்த அத்வைதப் பிரசங்கி).

### 6. வைத்யநாத தேசிகர்

இவர் தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்திற்கு உரை செய்தவர். பெரும் தமிழ் புலவர். பிறந்த ஊர் திருவாரூர். தந்தை பெயர் வன்மீகநாத தேசிகர். இவருடைய சீடர்கள் படிக்காசுப் புலவர் மகன் சதாசிவ தேசிகர், ஒப்பிலாமணி தேசிகர், திருவேங்கடநாதன் முத-யோர். இவர் காலத்து வாழ்ந்த புலவர்கள் அந்தகக்கவி வீரராகவ முத-யார், பொம்மபாளையம் சிவஞான சித்தர் மற்றும் பலர்.

இவர் செய்த தமிழ் நூல்கள் தமிழ் இலக்கணம் (குட்டி தொல்காப்பியம்), நல்லூர் புராணம், வாட்போக்கி புராணம், பாசவதைப் பரணி, திருவாரூர் பன்மணிமாலை, மயிலம் பிள்ளைத் தமிழ் முத-யன.

### 7. படிக்காசுப் புலவர்

இவர் ராமநாதபுரம் கிழவன் ரகுநாதசேதுபதி (கி.பி.1673-1708) காலத்தில் வாழ்ந்தவர். வைத்யநாத தேசிகரின் சீடர். வல்லை நகர் காளத்தி பூபதி, மாவண்டூர் கஸ்தூரி முத-யார், அவர் மகன்

2 Proof



கறுப்பு முத-யார், மதுரை அரசன் திருமலைராயன், வள்ளல் சீதக்காதி முத-யோரால் ஆதிரிக்கப்பட்டவர். இவர் காலத்தில் பல பட்டடை சொக்கநாதப் புலவர், சுப்ரதீபக் கவிராயர் முத-யோர் வாழ்ந்தனர். இவர் புள்ளிருக்கும் வேலூர் கலம்பகம், தொண்டை மண்டல சதகம் முத-ய பாடல்களைப் பாடியுள்ளார்.

அமிர்த கவிராயர் (தளவாய் ரகுநாத சேதுபதி வாழ்ந்த காலம்) இக்காலத்தில் வாழ ்ந்தவரேயாவார்.

**8. அந்தகக் கவி விரராகவ முத-யார்**

இவர் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன்விளைந்த களத்தூரில் சைவ வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தை பெயர் வடுகநாத முத-யர்ா. இவர் கம்பருக்குப் பிறகு ராமாயணத்தை மீண்டும் தமிழில் ராகத்துடன் பாடியவர். வீணை வாசிப்பதில் வல்லவர். ஈழநாட்டு அரசன் பரராஜ சேகரன், மயிலை அரசன் கிருஷ்ணப்பன், கோவை அரசன் சந்திரவாணன், அரியலூர் அரசன் கிருஷ்ணன், ஒப்பில்லா மழவராயன், திம்மய்ய அப்பையன், குலசேகரப் பாண்டியன், கயத்தாறு அரசன், சடையாண்டி, நந்திய மாணிக்கம், சிரையன் தினகரன் முத-யவர்களைப் பாடி பரிசில்கள் பெற்றுள்ளார்.

திருவாரூர் வைத்யநாத தேசிகரின் நண்பர். திருவாரூர் உலா, திருக்கழுக்குன்ற புராணம் திருக்கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர் கலம்பகம், சந்திரவாணன் கோவை, கயத்தாறு அரசன் உலா முத-ய பல தமிழ் பாடல்கள் இயற்றியுள்ளார். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த தமிழ்ப் பலவர் தாசி அம்மைச்சி இவரது நண்பர்.

**9. அனந்தபாரதி அய்யங்கார்**

தமிழ் வைணவ அந்தணப் புலவர். தேசிகப் பிரபந்தம், மருதூர் வெண்பா, யானை மேலழகர், நொண்டிச் சிந்து, முப்பால் திரட்டு முத-ய பல தமிழ் நூல்களையும், பாகவத தசமஸ்கந்த நாடகம் முத-ய பல நாடக நூல்களையும் இயற்றியவர். தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்தவர்.

**10. தேசிங்கு ராஜன்(செஞ்சி) (கி.பி.1717)**

செஞ்சி ்க் கோட்டையில் பிறந்து பிறகு தில்- சென்று முகலாய மன்னன் குதிரை அடக்கி, அதையே பரிசாகப் பெற்று செஞ்சியாண்ட வீரன் (தில்-யி-ருந்து பாரதத்தை ஆண்ட முகலாய மன்னர் (1) பாபர் (கி.பி.1526-30) , (2) ஹுமாயூன்(1530-1556) , (3) அக்பர் (கி.பி.1556-1605), (4) ஜஹாங்கீர் (கி.பி.1605-1627) ,(5) ஷாஜகான் (கி.பி.1627-1658), (6) அவுரங்கசீப் (கி.பி.1658-1707) (7) ஷா-ஆலம்(கி.பி.1707-1712) ,(8) ஜஹாந்தர் ஷா (கி.பி.1712-1713),



(9) பரூக்ஷியார்(கி.பி.1713-1719) ,(10) முகமது ஷா(கி.பி.1719-1748), (11) அகமது ஷா(கி.பி.1748-1754) ,(12)ஆலம்கீர் (கி.பி.1754-1759), (13) ஷா-ஆலம்(கி.பி.1759-1806) ,(14) முகமது அக்பர்(கி.பி.1806-1837) ,(15) பஹாதுர் ஷா (கி.பி.1837-1857) , பின்னர் ஆங்கிலேய ஆட்சி)

**11. அருணாஜலக் கவிராயர் (கி.பி.1711 - 1778)**

இவர் தஞ்சை மாவட்டம் சீர்காழியில் (தில்லையாடி)கார்காத்த வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தையின் பெயர் நல்லதம்பி தாயாரின் பெயர் வள்ளியம்மை. கல்வி கற்றது தருமையாதீனம். குரு அம்பலவாண கவிராயரிடம், ராம நாடக கீர்த்தனைகள் எழுதி ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றினர். சங்கீத மும்மூர்த்திகளான தியாகப் பிரம்மம், முத்துசாமி தீக்ஷிதர், ச்யாமா சாஸ்திரிகளுக்கு முன்பேயே தமிழில் கீர்த்தனைகள் செய்தவர் இவர். இவருடைய சீடர்கள் கோதண்டராம அய்யர், வேங்கடராம அய்யர் முத-யோர். அருணாசலக் கவிராயரின் திருமண வாழ்க்கை கட்டளைக் கருப்பூரில் அமைந்தது. தனது குருவின் பெயரை தனது மகனுக்கு வைத்தார். (அம்பலவாணன்). இவரது நண்பர் சிதம்பரநாத முனிவர். சீர்காழியில் கவிராயர் இறுதியில் வாழ்ந்தார். இவர் இயற்றியது அசோமுகி நாடகம். அனுமார் பிள்ளைத் தமிழ், காழி அந்தாதி, காழி கலம்பகம், காழிக்கோவை, தியாகேசர் வண்ணம், சம்மந்த ஸ்வாமிகள் பி ்ள்ளைத் தமிழ், சீர்காழிப் புராணம் முத-யன. கவிராயர் சிறந்த வடமொழிப் புலவராகவும் வாழ்ந்தார்.

**12. மாரிமுத்துப் பிள்ளை(கி.பி. 1712 - 1787)**

இவர் சிதம்பரம் அருகில் உள்ள தில்லை விடங்கர் என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர். தந்தை பெயர் தெய்வபெருமாள் பிள்ளை. இவர் தமிழில் பல கீர்த்தனைகள் செய்துள்ளார். பு-யூர் வெண்பா, சிதம்பரேசர் விற- விடு தூது, வருணாபுரி குறவஞ்சி, நொண்டிச் சிந்து, சுநீதி நாடகம் முத-யன எழுதிய சித்ர கவி.

**13. அபிராமி பட்டர்.**

இவர் அந்தண வகுப்பில் பிறந்த தமிழ் புலவர். திருக்கடையூர் அபிராமி பக்தர். அபிராமி அந்தாதி பாடியவர். தஞ்சை அரசன் சரபோஜி காலத்தில் வாழ்ந்தவர். இவர் அரசரிடம் அமாவாசையன்று வானில் பௌர்ணமி நிலவு தோன்றச் செய்தார். சிறந்த சக்தி உள்ளவர்.

**14. தாயுமானவர்**

இவர் கேடி-யப்பப் பிள்ளையின் இரண்டாவது குமாரர். முதல் குமாரர் சிவசிதம்பரம் பிள்ளை. குரு-திருமூலர் மரபில் வந்த மௌனதேசிகர். விஜய ரகுநாத சொக்க-ங்க நாயகர் மரபில்

வாழ்ந்தவர். (கி.பி.1706 - 1732). அரண்மனையில் கணக்கர் வேலையில் இருக்கும்போது அரசன் மகள் இவர் மீது காதல் கொண்டாள். இவர் திருச்சியை விட்டு இராமேஸ்வரம் சென்று வாழ்ந்தார். இவருடைய மகன் கனகசபாபதிப் பிள்ளை. சிறந்த தமிழ் புலவர் இவர்.

**15. ச்யாமா சாஸ்த்திரி (26.4.1762 முதல் 6.2.1867)**

இவர் திருவாரூரில் அந்தணர் மரபில் பிறந்தவர். தாய்மொழி தெலுங்கு. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர். இவரது குரு சங்கீத ஸ்வாமிகள். பச்சிமிரியம் ஆதிப்பையர் நண்பர் தியாகப்பிரம்மம். சீடர்கள் சுலசூர் கிருஷ்ணய்யா, சுப்ராய சாஸ்த்தரி, தரங்கம்பாடி பஞ்சநாதம் அய்யர், பெரம்பூர் கிருஷ்ணய்யர், தாஸரி ராவ் முத-யவர்கள் சிறந்த அம்பிகை பக்தர்.

**16. தியாகப் பிரம்மம்**

இவர் திருவாரூரில் பிறந்தவர். திருவையாறில் இவருடைய சமாதி காவிரிக் கரையில் உள்ளது. தாய் பாட்டன் கிரிராஜ கவி. தஞ்சை மாராட்டிய அரசன் அவையில் ஆஸ்த்தான வித்வான். தெலுங்கு அந்தண வகுப்பைச் சேர்ந்த ராம பிரம்மம் இவருடய தந்தை. தாயார் சீதாலக்ஷ்மி. சகோதரர் பஞ்சாபகேசன், இராமநாதன் இவர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர். சிறந்த ராமபக்தர். இவரால் இயற்றப்பட்டட தெலுங்கு கீர்த்தனைகள் உலகப் பிரசித்தம். இவருடைய குரு சொண்டி வெங்கடரமணய்யா. தஞ்சை மராட்டிய அரசரின் விருதுகளை ஏற்க மறுத்து ராம பக்தியில் ஈடுபட்டவர். முருகன், சிவபெருமான்(கோவூர் பஞ்சகம்), பிள்ளையார், அம்பாள் மீதும் அநேக பக்திப் பாடல்கள் பாடியுள்ளார். இவருடைய நண்பர் கோபால கிருஷ்ண பாரதி சிறந்த தமிழ் புலவர்.

**17. முத்துசாமி தீக்ஷிதர்(கி.பி. 24.3.1778 முதல் 24.10.1835)**

இவர் திருவாரூரில் வாழ்ந்தவர். தமிழ் அந்தண வகுப்பைச் சார்ந்த ராமசாமி தீக்ஷிதர் இவருடைய தந்தை. குரு வேங்கடமஹி சிதம்பர நாத யோகி. சகோதரர்கள் பாலுசாமி தீக்ஷிதர், சின்னசாமி தீக்ஷிதர், நண்பர்கள் சியாமாள சாஸ்த்திரி, தியாகப் பிரம்மம். இவர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர். திருத்தணி முருகன் அருளால் அநேக வடமொழி கீர்த்தனைகள்பாடியுள்ளா.மந்திரங்களைப் பாட்டுக்களாகப் பாடியவர். இவரது சகோதரர் பாலுசாமி தீக்ஷிதர். ஆங்கிலேயர்கள் வாசித்து வந்த வய-ன் என்னும் இசைக் கருவியை கற்று முதன் முத-ல் அக்கருவியில் கர்நாடக சங்கீதத்தை இசைத்துக் காட்டியவர். அது முதல் இசைக் கச்சேரிகளில் வய-ன் இசைப்பது பிரபலமாயிற்று.



**18. குமரகுருபரர்(கி.பி. 1787 முதல் 1849)**

திருச்செந்தூர் முருகன் அருளால் சண்முகக் கவிராயருக்கும், சிவகாமிசுந்தரிக்கும் பிறந்தவர். பிறவி ஊமை. குரு தருமையாதீனம் மாசிலாமணித் தம்பிரான். இவர் மதுரை மீனாக்ஷியம்மன் அருளால் பேசத் தொடங்கி கவிகள் பாடியவர். மீனாக்ஷியம்மன் பிள்ளைத் தமிழ், கையிலை கலம்பகம், கந்தர் க- வெண்பா, திருவாரூர் ் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பி ்ள்ளைத் தமிழ், சிவகாமியம்மை, இரட்டை மணி மாலை முத-ய பல தமிழ் பாடல்களைப் பாடியுள்ளனர். நண்பர் தஞ்சை அரசன் பிரதாப சிம்மன், காசியில் ஆண்ட முகமதிய பாதுஷாவிற்கு பல அற்புதங்கள் செய்து காட்டி(சிங்கத்தின் மீது ஏறி கோட்டைக்கு வந்து) அரசனிடம் பொருள் பெற்று காசியில் குமாரசாமி மடம் நிறுவியவர்.

**19. கச்சியப்ப முனிவர்**

இவர் திருத்தணியில் பிறந்து, திருவாவடுதுறை ஆதீனம் வேலப்பப தேசிகரிடம் சன்னியாசம் பெற்று துறவறம் மேற்கொண்டார். இவர் தமிழில் விநாயப புராணம், காஞ்சிப்புராணம், தணிகைபுராணம், திருவானைக்கா புராணம், பூவாளூர் புராணம், பேரூர் புராணம் முத-யவற்றை இயற்றியவர்.

**20. திரிகூடராசப்ப கவிராயர்**

இவர் முத்து விஜயரங்க சொக்க நாதர் என்னும் நாயக்க அரசர் காலத்தில் வாழ்ந்தவர். திருக்குற்றால புராணம், குற்றால குறவஞ்சி, குற்றால மாலை, சிலேடை வெண்பா, குற்றால மகவந்தாதி, குற்றால உலா, பரம்பொருள் மாலை, குற்றால கோவை, குழல்வாய், மொழிபாமாலை,கோமளமாலை, குற்றாலம்பிள்ளைத் தமிழ், குற்றால வெண்பா அந்தாதி, நன்னகர் வெண்பா முத-ய பல நூல்களை இயற்றியவர்.

**21. பச்சையப்ப முத-யார்**

காஞ்சிபுரத்தி ்ல் அகமுடைய வேளாளர் வகுப்பில் ஏழை குடும்பத்தில் விஸ்வநாத முத-யார் என்பவருக்கும் பூச்சியம்மாள் என்பவருக்கும் பிறந்தவர். இவர் பிறப்பதற்கு முன்பேயே தந்தையார் மரணமடைந்தார். பிறகு பெரியபாளையம் ரெட்டி ராயரிடத்தில் ஐந்து வயது வரை வாழ்ந்தார். பின்னர் பௌனி நாராயணப்பபிள்ளையிடம் வளர்ந்தார். பிறகு ஆங்கிலேயருக்கு துவிபாஷியாக (மொழி பெயர்ப்பாளர்) பணியாற்றினார். இவரது தமக்கை சுப்பம்மாள் என்பவரின்மகள் ஐயம்மாளை மணம் செய்து

கொண்டார். சிறந்த சிவபக்தர். வாலாஜா நவாபின் காரியஸ்தரான ஜோசப்-ச-வனிடம் துவிபாஷியாக இருந்து பொருள் சேர்த்தார். 31.3.1794-இல் நோய்களோடு இறந்தார். இவரது சொத்துக்கள் பற்றி 47 வருடம் வழக்கு நடந்தது. பிறகு சுப்ரீம் கோர்ட்டார் உத்திரவுப்படியும் நார்ட்டன் துரைஅவர்களது முயற்சியாலும் பச்சையப்ப முத-யார் ட்ரஸட் நிறுவப்பட்டு கல்வி முத-ய பல தர்மங்களை செய்து வருகிறது. தமிழ் நாட்டின் சிறந்த அருட்கொடையாளர்.

இது போன்று செங்கல்வராயப்பிள்ளை ட்ரஸ்ட் என்னும் அறக்கட்டளை நிறுவனம் அநேக தரும காரியங்களை சென்னையில் செய்து வருகிறது.

**22. கோபாலகிருஷ்ண பாரதி (கி.பி.1811 - 1881)**

இவர் தமிழ் அந்தணர் வகுப்பில் பிறந்தவர். பாட்டன் கோதண்டராமய்யர். தந்தை - முடிகொண்டான் ராமஸ்வாமி அய்யர். குரு-கோவிந்த யதி. ஆனைதாண்டவபுரம் மிராசுதார் அண்ணா அய்யரால் ஆதரிக்கப்பட்டவர். சிவபெருமான் மீது பக்தி கொண்டவர். அநேக தமிழ் கீர்தனங்கள் பாடியவர். நண்பர்கள் பட்டி கிருஷ்ண பாகவதர்,வடலூர் வள்ளலார், தியாகப் பிரமத்தினிடம் தனது தமிழ் கீர்த்தனைகளைப் பாடி பாராட்டு பெற்றவர். (தமிழில் நந்தனார் சரித்திரம், இயற்பகை நாயனார் சரித்திரம், காரைக்கால் அம்மையார் சரித்திரம், ஞானசிந்து, ஞான கும்மி முத-ய பல பாடல்களைப் பாடியவர். புதுக்கோட்டை மன்னரால் பாரதி பட்டம் கொடுக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**23. ராம-ங்க வள்ளலார் (கி.பி.1823 - 1873)**

இவர் கருணீகர் மரபில் ராமய்யாப் பிள்ளைக்கும் சின்னம்மைக்கும் கி.பி.1823-இல் பிறந்தவர். பிறந்த ஊர் மருதூர். இவர் தனது அண்ணன் சபாபதி பிள்ளை, அண்ணியுடன் சென்னை கந்தகோட்டத்தருகே வாழ்ந்தவர். சிறு வயது முதல் தமிழ் பிரசங்கம் செய்தவர். முருகன் மீது பக்தி கொண்டவர். அருட்கவி. தெய்வ மணிமாலை முத-ய பல தமிழ் நூல்கள் செய்தவர். சமரஸ சுத்த சன்மார்க்கம் என்னும் புதிய மதத்தை தோற்றுவித்தவர். தில்லை நடராஜப் பெருமான் மீது பக்தி கொண்டவர். தமிழ் மீது ஆராத காதல் கொண்டவர். இவரது சமாதி வடலூரில்(பார்வதிபுரம்) உள்ளது.

(யாழ˚பாணம் ஆறுமுக நாவலர் இவரை அருட்கவி அல்ல மருட்கவி என வாதிக்கப்பட்டு பிறகு வள்ளலாரிடம் நட்பாயினார்). சத்யதர்மசாலை, சத்யதானசபை, சமரஸவேத பாடசாலை, நிருத்த சித்தி விநாயகர் ஆலயம் முத-யவற்றை நிறுவியவர். 1873 சித்தி விளாகத்தில் சித்தியடைந்தார்.



**24. ஆறுமுகநாவலர்**

இவர் இலங்கையில் உள்ள யாழ˚ப்பாணம் அருகே உள்ள நல்லூர் என்னுமிடத்தில் பிள்ளைமார் மரபில் கந்தசாமி பிள்ளை என்பவருக்கு மகனாகப் பிறந்தார். சேனாதிராய முத-யார், சரவண முத்துப் புலவரிடம் தமிழ் பயின்று புலவராக விளங்கினார். இவர் வடலூர் வள்ளலாரிடம் அன்பு கொண்டவர். இவர் அரா- சித்தி விநாயக விருத்தம், நல்லை கைலாசப் பி˚ள்ளை மங்கள விருத்தம், வசன நூல்கள், பெரிய புராணச்சுருக்கம் முத-யன செய்தவர். (பைபிளை தமிழாக்கம் செய்த சைவப் புலவர்) .

**25. தாண்டவராய முத-யார்**

இவர் கி.பி.1811-இல் புதுவையை அடுத்த வில்-யனூரில் வேளாளர் மரபில் உதித்தவர். தந்தை கந்தசாமி முத-யார். இவர் ஆங்கிலம் தெலுங்கு கன்னடம் மராட்டி, இந்துஸ்தானி மொழிகளில் வல்லுநர்.தமிழ்புலவர். சென்னை பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். ஆங்கிலேயர்களின் பாராட்டுக்களைப் பெற்று கி.பி.1843-இல் நீதிபதியாகப் பணியாற்றியவர். திருத்தணிகை மாலை, திருப்போரூர் திருப்பதிகம், இலக்கண வினா-விடை, கதாமஞ்சரி முத-ய பல தமிழ் நூல்கள் இயற்றியவர்.

**26. மாம்பழக் கவிசிங்க நாவலர் (கி.பி.1836)**

இவர் பிறந்த ஊர் பழநி. பிறவிக் குருடர். பழனிப் பதிகம், குமரகுருப்பதிகம், செந்தில் பதிகம் முத-ய நூல்களை தமிழில் பாடியுள்ளார். ராமனாதபுரம் சமஸ்தானம் பொன்னுசாமி தேவரால் ஆதரிக்கப்பட்டவர். சிறந்த கர்நாடக சங்கீத இசை ஞானி.

**27. பாம்பன் ஸ்வாமிகள் (கி.பி.1853 - 1923)**

இராமேஸ்வரம் அருகில் உள்ள பாம்பன் என்னும் ஊரில் சாத்தப்ப பிள்ளை என்பவருக்கும் செங்கமலம் என்பவருக்கும் பிறந்த அப்பாவு சேதுராம அய்யர் மற்றும் திருவனந்தபுரம் சுப்பிரமணிய பிள்ளையிடம் தமிழ் பற்று, உபதேசம் பெற்று பாம்பன் ஸ்வாமிகள் என்னும் முருக பக்தராகி அநேக அதிசயங்கள் புரிந்தார். 1915-இல் சென்னை ராயப்பேட்டையில் பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை நிறுவியவர். சண்முக கவசம், குமாரஸத்வம் இவர்களது தமிழ் நூல்களில் பிரசித்தி பெற்றவை.

**28. மகாகவி சுப்பிரமணிய பாரதி (1882-1991)**

எட்டையபுரத்தில் சின்னசாமி அய்யருக்கு 11.12.1882-இல் மகனாக பிறந்தார். திருநெல்வே-, எட்டையபுரத்தில் பள்ளியில்

படித்தார். சிறுவயது முதல் கவிதை எழுத ஆர்வம் கொண்டிருந்தார். தனது 11 வயதில் தமிழ் புலமைக்கு பாரதி பட்டம் பெற்றார். (புதுக்கோட்டை சமஸ்தானம்) . தனது 15 வயதில் செல்லம்மாளை மணந்தார். 1898-இல் தந்தை இறந்த பிறகு காசி சென்று, அலகாபாத்தில் படித்தார். ஹிந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் படித்தார். பின்னர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றனார். கல்கத்தா சென்று விவேகானந்தரின் சிஷ்யை சிஸ்டர் நிவேதிதாவை அரசியல் குருவாகக் கொண்டார். 1906-இல் தேசிய காங்கிரஸி`ல் சேர்ந்தார். “இந்தியா” என்னும் பத்திரிகையை சென்னையில் துவங்கினார். ஆங்கிலேய ஆட்சிக்குப் பயந்து பாண்டிச்சேரியில் வாழ்ந்தார். பாரதிதாசன், வ.வே.சு. அய்யர், சுப்பிரமணிய சிவா, வ.ஊ.சி. அவர்களின் நட்பு ஏற்பட்டது. 1918-இல் கடலூர் வந்த போது, ஆங்கிலேய அரசு இவரை கைது செய்தது. டாக்டர் அன்னிபெஸன்ட். சர்.சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள் தலையிட்டு விடுதலை பெற்றார். திரும்பவும் 1920-இல் “சுதேசமித்திரன்” பத்திரிகையில் பணிபுரிந்தார். சென்னை திருவல்-க்கேணி பார்த்தசாரதி போயி-`ல் இருந்த மதம் பிடித்த யானை அவரை 11.9.1921-இல் கொன்றது. 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த தமிழ் கவிஞர்.(தனது 39 வயதில் மரணமடைந்தார்) . பாரதியார் பாண்டிச்சேரியில் வசித்தபோது குள்ளச்சாமி என்னும் ஞானாநந்தகிரி ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்றார்.

(பி.கு. தமிழ் நாட்டில் பல அறிஞர்கள், புலவர்கள், ஆன்மீகவாதிகள் பல்லாயிரம் பேர் உள்ர். இவர்களுடைய வரலாற்று விபரங்களை எமது அடுத்த பதிப்பில் வெளியிட உள்ளோம். இந்த கால கட்டத்தில் பாரதத்தின் இதர மாநிலங்களிலும் பல பெரியோர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களில் சிலரது வரலாற்றுக் குறிப்புகளை எமது அடுத்த பதிப்பில் வெளியிடுவோம்.)

**29. ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் (1820-1891)**

இவர் சிறந்த கல்வியாளர், எளிமையான வாழ்வு, பாரத சுதந்திரத்திற்கு வாழ்வை அர்ப்பணித்தவர். வங்காளத்தில் பிரசித்தி பெற்றவர்.

**30. தயானந்த சரஸ்வதி(கி.பி.1824 - 1883)**

இவர் குஜராத்தில் பிராமண குடும்பத்தில் பிறந்தவர். வேதங்களை கற்று மூடநம்பிக்கைகளை எதிர்க்க கி.பி.1825-இல் ஆரிய சமாஜம் தொடங்கினார். இவருடைய குரு விரஜானந்தா, லாலா லஜபதிராய், லாலா ஹஸன்ராஜ், பண்டிட் குருதத், ஸ்வாமி



சித்தானந்தா போன்றவர்களுடன் இணைந்து பிரசாரம் செய்தார். ஆங்கிலேயர்கள் ஆர்ய சமாஜத்தின் வளர்ச்சி கண்டு பயந்து, ஆரியர்கள் இந்தியாவில் கைபர் கணவாய் மூலம் நுழைந்து திராவிடர்களை விரட்டி விட இந்தியாவில் புகுந்தனர் என்றும் திராவிடநாகரீகமே சிறந்தது என பதிலுக்கு பல நூல்கள் வெளியிட்டு, திராவிடநாட்டுப் பிரிவினைக்கு சதி செய்தனர். ஆரியசமாஜம் தென்னிந்தியாவில் பரவாமல் தடுத்து வெற்றி கண்டனர். இதற்கு எதிராக கி.பி.1828-இல் துவக்கப்பட்ட பிரம்ம சமாஜத்தினர் பிரச்சாரம் செய்தனர். வேதங்களைப் போற்றி, மூடநம்பிக்கைகள், சாதி வேறுபாடுகள் உருவ வழிபாட்டு முறைகளை எதிர்த்துப் போராடினர். இந்துக்களில் ஆரியர். திராவிடர் என்னும் பிரிவினை ஏற்படுத்துவதை எதிர்த்துப் போராடினர்.

**31. டாக்டர். ஆத்மாராம் பாண்டுரங்**

இவர் கி.பி.1867-இல் “பிரார்த்தனா சமாஜ்” என்ற அமைப்பை துவங்கி இந்து சமயத்தின் பக்தி மார்க்கத்திற்கு பாடுபட்டார். மகாதேவ கோவிந்த ரானடே போன்றவர் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டனர்.

**32. ஸ்வாமி விவேகானந்தர் (கி.பி.1863 - 1902)**

இவரது இயற்பெயர் நரேந்திரர். வங்காளத்தில் 12.1.1863இல் பிறந்தார். பிரம்ம சமாஜ கருத்துக்களில் ஈடுபட்டு பின்னர் ராமகிருஷ்ண பரமஹம்ஸரை சந்தித்து அவரை குருவாக ஏற்றுக்கொண்டு துறவியாகி நாடு முழுவதும் விஜயம் செய்து இந்து சமயத்திற்கு புத்துயிர் அளித்தார். தமிழ் நாடு சேதுபதி அரசர்கள் உதவி பெற்று அமெரிக்கா சென்று சிகாகோவில் நடந்த உலக சமயங்கள் மகாநாட்டில் பங்கேற்று இந்து சமயம் சிறந்தது என வாதிட்டு வெற்றி பெற்றார். சிஸ்டர் நிவேதிதா இவரது சிஷ்யை. இவரது வாதங்கள் அமெரிக்க மக்களை மிகவும் கவர்ந்தது. உலகெங்கும் பயணம் செய்து இந்து சமயத்தை பற்றி பிரச்சாரம் செய்தார். கி.பி.1897-இல் ராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்து பணியாற்றினார். பாரதத்தின் தலைசிறந்த புதல்வர் (அவரிடம் மனோண்மனியம் சுந்தரம்பிள்ளை முத-யவர்கள் வாதிட்டு தோற்றனர்) தமிழர்கள் இவரை ஞானசம்பந்தரின் மறு அவதாரமாக நினைத்தனர். இவர் தனது 39 வயதில் (கி.பி.1902) சமாதி அடைந்தார்.

**33. பேரறிஞர் டாக்டர். சர்.சி.பி. ராமஸ்வாமி அய்யர்(1879-1966)**

திருவண்ணாமலையை அடுத்த வந்தவாசியில் நீதிபதி சி.ஆர். பட்டாபிராமன் என்பவருக்கும் சீதாலக்ஷ்மி அம்மாளுக்கும் 12.11.1879(தீபாவளி) அன்று ராமஸ்வாமி பிறந்தார். இவரது மனைவி

நீதிபதி சி.வி. குமாரஸ்வாமி சாஸ்த்திரியின் சகோதரி சீதம்மாள் என்பவரை மணம் செய்து கொண்டார். காவிரியின் மேட்டூர் அணை (பைக்காரா), பவானியில் அணை, தூத்துக்குடி துறைமுகம், கொச்சி, விசாகப்பட்டினம் துறைமுகம், துங்கபத்திரா அணை, பல நீர் மின்சாரத் திட்டங்கள், கங்கை-பிரம்மபுத்திரா, காவிரி இணைப்பு திட்ட வரைபடம் முத-யவற்றை நிறைவேற்றினார்.

1936-இல் திருவாங்கூர் சமஸ்தான திவானாக இருந்தார். தீண்டாமையை ஒழிக்க முத-ல் வழிகாட்டியவர். இந்தியாவின் சாலைப் போக்குவரத்துக்களை அரசுடைமையாக்கினார். 1934-இல் காஷ்மீருக்கு அரசியல் சட்டம் தயாரித்துக் கொடுத்தார். சென்னைப் பல்கலைக் கழகம், மைசூர் பல்கலைக் கழகம், திருவாங்கூர் பல்கலைக் கழகம் முத-ய பல்கலைக் கழகங்கள் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கின.வ.உ.சி. யின் நண்பர். பாரதிக்காக வாதாடியவர். டாக்டர் அன்னிபெசன்டின் நண்பர். இந்திய அரசியல் கோட்பாடுகள், வேதகாலத்திலும், வேதத்திற்குப் பிந்திய காலத்திலும் மகளிர், ஹிந்து சமய நம்பிக்கை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் நம்பிக்கையும் ஹிந்து சமயமும் சகிப்புத்தன்மையும், சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அபூர்வதன்மை, உலக சமயங்கள் முத-ய பல நூல்கள் இயற்றியுள்ளார். தமிழ் நாட்டின் தவப்புதல்வர் லண்டனில் 26.9.1966-இல் மரணம் அடைந்தார்.

## 34. டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் (கி.பி.1899-1974)

நோவாவிற்கு 950 வருடங்கள் கழித்து "சேம்"- இவனுக்கு 600 வருடங்கள் கழித்து "அர்பக்சாத்"- இவனுக்கு 438 வருடங்கள் கழித்து "ஏபேர்"- இவனுக்கு 464 வருடங்கள் கழித்து "பேலெகு"- இவனுக்கு 239 வருடங்கள் கழித்து "ரே-கூ"(மனைவி நாகோர்) இவனுக்கு 230 வருடங்கள் கழித்து "அபிராமன்" நாகோர் ஆரான் முத-யவர் இருந்தனர்.

"ஊர்" தேசத்தில் அபிராமன்(ஆபிரகாம், ஏப்ரஹாம், இப்ராஹிம்) வாழ்ந்தபோது "ஹம்மு ராபி" அரசன் தலைமையில் பெரும்போர் நிகழ்ந்தது (கி.மு.1728) . ஆப்ரஹாம், யூதர்களுடன் "ஊர்" என்னும் தேசத்தி-ருந்து புறப்பட்டு கானான் (சிரியா) தேசம் சென்று வாழ்ந்தான். ஆப்ரஹாமுக்குப் பிறகு யாக்கோபு, யோசேப், (கி.மு.1684). லேவி, சேர்கோன், சொத்-அம்ராம், இவர்களுக்குப் பிறகு நல்வாழ்வைத் தேடி யூதர்கள் அடிமைகளாக்கப்பட்டு எகிப்து தேசம் சென்றனர்.

எகிப்தில் "ராம்சேஸ்"- என்பவன் ஆட்சி வரை யூதர்கள் எகிப்தில் அடிமைகளாக வாழந்தனர். ராம்சேஸ் பிறப்பதறகு முன்பு அவனுடைய தாய், ஆற்றில் மிதந்து வந்த குழந்தையைக் காப்பாற்றி "மோஸஸ்" என்று பெயரிட்டு வளர்த்தாள். பின்னர் "மோஸஸ்"- யூத அடிமையின் குழந்தை என்று தெரிந்தவுடன் "மோஸஸ்"



யூதர்களுடன் செங்கடல் கடந்து (கி.மு. 1284) இஸ்ரேல் என்னும் நாட்டில் தங்கி ஆட்சியைத் தொடங்கினார். இஸ்ரேல் என்னும் நாட்டில் ஜோஷுவா(42 வருடங்கள்) ஒதனியேல்(40 வருடங்கள்), அபியேல், சவுல்(கி.மு.1020 -1004), தாவீத்(கி.மு.1010 -970), சாலமன் (கி.மு.1000) ஆட்சி செய்தனர். சாலமன், பேரரசனாக விளங்கி ஆப்பிரிக்கா இளவரசி "ஷீபா" -வை மணந்து கொண்டான். சாலமனுடைய ஆட்சி "பாரதம்" வரை பரவிற்று. சாலமனின் கப்பல்கள் தென் பாரதம் வரை வந்து வாணிபம் செய்தது. ஆபிரகாம் முதல் தாவீது வரை 14 தலைமுறை அரசர்களும், தாவீது முதல் ஏசுகிறிஸ்து வரை 28 தலைமுறை அரசர்களும் இருந்தனர். இஸ்ரேல் நாட்டை ரோமானியர்கள் பிடித்து ஆட்சி செய்தனர். "ஹிராட்" அரசன் காலத்தில் ஒரு வால் நட்சத்திரம் வானில் தோன்றியது. அந்த நாட்களில் ஜோஸப் என்பவனுக்கும் என்று "மேரி" என்பவளுக்கும் ஏசுநாதர் பிறந்தார். வால் நட்சத்திரம் தோன்றிய நேரத்தில் பிறந்த குழந்தையால் அசைனுக்கு ஆபத்து என்று சோதிடர்கள் கூறியதால் "ஹிராட்" மன்னன் வால்நட்சத்திரம் தோன்றியபோது பிறந்த குழந்தைகளைக் கொன்று விடும்படி கூறவே ஜோஸப்பும் மேரியும் குழந்தை ஏசுநாதருடன் தப்பித்து எகிப்து தேசம் சென்றனர். அங்கு தச்சுத் தொழில் செய்து ஏசுநாதர் வளர்ந்த பிறகு மீண்டும் ஜெருசலேம் (இஸ்ரேல்) நகர் வந்து, ஜான் என்னும் மதபோதகரிடம் ஞானஸ்நானம் பெற்று மதபோதகரானார். இவரது போதனைகளால் பிரசித்தமாகி மக்கள் கூட்டம் கூட்டமாக இவர் போகும் இடங்களிலெல்லாம் குழுமினர். யூதர்களில் சிலர் இவர் யூதர்களின் அரசன் என்று கூறுவதாகப் புகார் செய்து, ரோமானியப் பிரதிநிதியிடம் தண்டனை வாங்கித் தந்தார். ஏசுநாதர், சிலுவையில் அறையப்பட்டு உயிரிழந்தார். இந்த நிகழ்ச்சி மக்களை கொதிக்கச் செய்தது. பெரும் புரட்சி ஏற்பட்டு, ரோமானியப் பேரரசு சிதைந்தது. பலநாடுகள் சுதந்திரம் பெற்றன. கிறிஸ்துவ மதம் உலகெங்கும் பரவலாயிற்று. ஏசு கிறிஸ்துவின் சீடர் செயின்ட் தாமஸ் தமிழ்நாட்டிற்கு வந்து சென்னைக்கருகே கடைசி காலத்தில் வாழ்ந்தார்.

(ஆங்கிலேயர்கள் உலகம் முழுவதும் கிறிஸ்துவ மதத்தையும் புதிய கலாசாரத்தையும் பரப்பினர். பாரதத்தை பொறுத்தவரை ஆங்கிலேயர் ஆட்சியில் கிறிஸ்துவ மதம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாழ்க்கையை அளித்தது. கல்வி, மருத்துவம், போக்குவரத்து, வாணிபம் நல்லாட்சி கிறிஸ்துவர்களால் ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. ஆங்கில மொழியினால் பெருமளவில் விஞ்ஞானம், கல்வியறிவு ஏற்பட்டது. பாரதம் மட்டுமின்றி உலகில் பல நாடுகளில்

மக்களுக்கு விழிப்பணர்ச்சி ஏற்பட்டு, விஞ்ஞான அறிவு வளம் பெற்றது) .

கிறிஸ்துவ மதத்ததை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. யூதர்கள், யூத மதத்தின் மீது மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தனர். யூத மதத்தில் சிறந்த ஞானிகள் பிறந்தனர். உலகம் முழுவதும், சாலமன் காலத்தி-ருந்தே பல நாடுகளில் யூதர்கள் குடியேறினர். யூதர்கள் தங்கள் அதிபுத்தியினால் அந்தந்த நாடுகளில் செல்வந்தர்களாக விளங்கினர்.

**கிறிஸ்துவ மதம்**

ஏசு கிறிஸ்துவின் போதனைகளால் கவரப்பட்ட மக்கள் விழிப்புணர்வு அடைந்தனர். ரோமானியப் பேரரசு சிதைந்தவுடன், அரசியல்வாதிகளால் கிறிஸ்துவ மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, ஆட்சியைக் கைப்பற்றினர். பல கிறிஸ்துவ நாடுகள் உருவாகின. டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர், அமெரிக்க நாடுகளில் உள்ள மக்கள் கிறிஸ்துவர்களாக மாறி உலகெங்கும் கிறிஸ்துவ மதத்தைப் பரப்பி, அதன் மூலமாக பல நாடுகளின் அரசிய-ல் புகுந்து பல லட்சம் செவ்விந்தியர்களைக் கொன்று , கிறிஸ்துவ ஆட்சியை செய்தனர். ஏசுநாதருக்குப் பிறகு 2000 ஆண்டுகளில் உலகமே பெரும் மாறுதலுக்கு உள்ளாயிற்று. கிறிஸ்துவ மதத்தினால் உலக மக்கள் நன்மையடைந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆங்கிலேயர் உலகம் முழுவதும் ஆட்சியைப் பரப்பினார்கள். இவர்களது ஏதேச்சசாதிகார ஈட்சியினால், கிறிஸ்துவ நாடுகளுக்குள் போர் மூண்டது. ,து உலகப் போராக மாறியது. ஆங்கிலேயர் ஆட்சி சிதறுண்டது. பல நாடுகள் சுதந்திரமடைந்தன. இருப்பினும் கிறிஸ்த்துவ மதம் தனது பணிகளைச் செய்து கொண்டே வருகிறது.

**இஸ்லாமிய மதம்**

அரேபியாவில் குரைஷி மன்னர்கள் கொடுங்கோலாட்சி செய்தனர். யூத மதத்தில் பிறந்த தீர்க்கதரிசிகளான இஸ்மாயேல், மோஸஸ்(மூசா) டேவிட்(தாவூத்) , ஏசுநாதர் (ஈசாய்) போன்று அரேவியாவில் முகமது நபி அவர்கள் பிறந்து இஸ்லாமிய மதம் (அன்பு மதம்) பற்றி போதனைகள் செய்தார். முகமதுநபி அவர்களுக்கு தீர்க்கதரிசிகள் பிறக்க மாட்டார்கள் என்றும், அன்பு, சகோதரத்துவம், இறை வழிபாடு (உருவமற்ற அல்லா) , பெண்கள் பாதுகாப்பு பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டன. கிறிஸ்துவ நாடுகள் ஆதிக்கத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகள், இஸ்லாமியத்திற்கு ஒரு கருவியாக எடுத்துக் கொண்டு, கிறிஸ்துவ மேலை நாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டு, பல நாடுகளைக் கைப்பற்றி இஸ்லாமிய ஆட்சியை நிறுவினர்.



பாரதத்தில் இஸ்லாமிய ஆட்சி ஏற்பட்டு, பழைய கலாச்சாரம் ஜாதிக் கொடுமைகள் நீக்கப்பட்டு பல பிரிவு மக்களுக்கு நன்மை செய்தது.

**புத்த மதம்**

நேபாளத்தில், லும்பினி தோட்டத்தில் கௌதம புத்தர் பிறந்து தேவையற்ற மதச் சண்டைகள், மன்னர்களின் கொடுமைகள், உயிர்க் கொலைகள் இவற்றை தடுத்தும், அன்பு, சகோதரத்துவம், மனித நேயம் பற்றி போதனைகள் செய்தார். பாரதம், பர்மா, தாய்லாந்து, கொரியா, ஜப்பான், சீனா, மங்கோ-யா, இலங்கை, சிங்கப்பூர் முத-ய நாடுகளிலுள்ள மக்கள் புத்த மதத்தைத் தழுவி, நல்வாழ்க்கையடைந்தனர். “கயா”என்னுமிடத்தில் கௌதம புத்தர் ஞானம் பெற்றார். இந்து மதத்திலுள்ள மறுபிறப்பு, தேவர்கள் தலைவன் இந்திரன் முத-யவைகளை ஏற்றுக்கொண்டு ஒரே மொழி(சமஸ்கிருதம்) ஒரே கலாச்சாரம், மனித சமுதாயம் ஒரே இனம் என்பன போன்ற கொள்கைகள் போற்றப்பட்டன. நாலந்தா சர்வ கலாசாலை போன்ற பல கல்விக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கு கல்வி போதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலும் தர்மபாலர்(காஞ்சிபுரம்) போன்ற பௌத்த துறவிகள் தோன்றி, சீனம் வரை சென்று பௌத்த மதத்தை பரப்பினர். தமிழ்நாட்டில் ஞானசம்'பந்தர், அப்பர், பாரதம் முழுவதும் திக் விஜயம் செய்து அத்வைதம் பரப்பிய ஆதிசங்கரர் போன்ற மகான்களால் பௌத்த மதம் குலைக்கப்பட்டு மீண்டும் இந்து மதம் தழைக்கலாயிற்று

பௌத்த மதம் போன்றே ஜைன மதம் பாரதத்தில் பிறந்த மதமே. நல்லொழுக்கம், நற்பண்புகள், நல்வாழ்க்கை முத-யவைகளை போதித்து பல மொழிகள் முன்னேற்றத்திற்கு ஜைனர்கள் பெரும் பாடுபட்டனர். ஹிந்து மதத்தின் மறுபிறப்பு கொள்கையை ஏற்றுக் கொண்டாலும், ஹிந்து மதச் சடங்குகள், ஜாதிப் பிரிவினைகள் முத-ய பல கொள்கைகளை ஏற்கவில்லை. உயிர்க்கொலை செய்வதை அறவே தடுத்தனர். ஜைன முனிவர்கள் மனிதச் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு மிகச் சிறப்பானதாகும்.

பௌத்த, ஜைன மதங்கள் மனிதனின் இறையுணர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காததால் அவை வ-குன்றிப் போயின.

சீக்கிய மதமும் பாரதத்தில் தோன்றியதுதான். ஜாதிக் கொடுமைகள், உருவ வழிபாடு முத-யவற்றை எதிர்த்து போதனைகள் புரிந்தனர். எழுச்சிமிக்க பாரதத்தை உருவாக்க சீக்கியர்கள் ஆற்றிய தொண்டு போற்றுதற்குரியது.

**மனிதனும் மதமும்**

மனிதனுக்கு இறையுணர்வு ஒரு நம்பிக்கையையும், நல் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துகிறது. எல்லா மதமும், மனித சமுதாய ஒற்றுமைக்கு ஏற்பட்டதே. மதத்தைக் கொண்டு பிழைப்பு நடத்தும் மனிதர்களாலும். அரசியல்வாதிகளாலும் மனித நேயம் கொல்லப்படுகிறது. “எம்மதமும் சம்மதமே”என்றும் தமிழ்நாட்டு வடலூர் வள்ளலார் அவர்களது கொள்கையே சாலச் சிறந்தது.

## 76. தமிழ் அந்தணர்கள்

“தமிழ்”மொழி பல்லாயிரக்கணக்கான வருடங்களாக வழக்கி-ருக்கும் ஒரு மொழி. தமிழர் இம்மொழியை சங்கம் வைத்து வளர்த்தனர். உலகில் முதன் முத-ல் மொழிக்கு இலக்கணம் வகுக்கப்பட்டது. தமிழ் மொழிக்கேயாகும். தமிழ் நூல் ஆராய்ச்சியாளர் சிவபெருமானால் கி.மு.14,000-இல் தலைச்சங்கம் நிறுவப்பட்டது என்றும் முருகவேள், அகத்தியர் முத-யோர் இருந்தனர் என்றும், அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். அதன்பிறகு தொல்காப்பியர் தமிழுக்கு இலக்கணம் செய்தார் என்றும் கூறுகின்றனர். தொல்காப்பியரது காலம் கி.மு.7000த்திற்கு முன்பாகும் என்றும் கூறுகின்றனர். முருகவேள் மறைகளை (வேதங்கள்) முத-ல் தமிழ்மொழியில் போதித்தார் என்றும் கூறப்படுகிறது.

ஒவ்வொரு சமயத்திலும் அறம் வளர்ப்போர், சமூகத்ததை காக்கும் அரசர்கள்-வீரர்கள், வணிகம் ெ ்சய்வோர், உழவர்-உழைப்பாளிகள் என்று நான்கு பிரிவுகள் இருந்தன. பின்னர் தொழில்கள் பெருகப் பெருக தொழிலை வைத்து சாதிகள் உருவாகின.

அங்ஙனமே தமிழ் சமுதாயத்திலும் றேம் வளர்க்க அந் ்தணர் பிரிவு ஏற்பட்டிருக்க வேண்டும். ஓதல் ஓதுவித்தல் என்னும் பணியை இவர்கள் செய்தனர். அரசர்கள் இவர்களைக் காப்பாற்றி வந்தனர் . இவர்களை அய்யர், ஆசிரியர், ஆரியர் என்று பல பெயர்களில் அழைத்தனர்.

ஆங்கிலேய சரித்திர வல்லுநர்கள் கி.மு.1500க்கு முன்பாக ரஷ்யாவி-ருந்து(வோல்கா-நதி) பாரதத்தில் நுழைந்திருக்க முடியாது என்றும், அதற்குப் பின்னர் இமயமலை கைபர் கணவாயங மூலம் பாரதத்திற்கு ்ள் புகுந்தனர் என்று அறுதியிட்டு கூறுகின்றனர். அங்ஙனமிருக்க தமிழ்-அந்தணர்களை ஆரியர்கள் என்று கூறுவது



பிழையாகும். ஆரியர்கள் சிவந்த நிறமுடையவர்களாகவும் உருண்டையான தலை அமைப்பு, நீண்ட மூக்கு உடையவர்களாக இருந்தனர் என்றும் கூறுகின்றனர்.

பாரதத்தில் மறைகளை வகுத்த வியாஸர்(கிருஷ்ண-துவைபாயனர்) ஒரு கறுப்பர். ராமன் ஒரு கறுகப்பர். கிருஷ்ணர் ஒரு கறுப்பர். அப்படியிருக்க இவர்களை ஆரியர் என்று எவ்வாறு கூறுவது? இஸ்லாமியர் ஆட்சியின் போது எவ்வாறு மக்கள் பாரசீகம், உருது கற்றார்களோ, ஆங்கிலேரயர் ஆட்சியின்போது எவ்வாறு ஆங்கிலம் படித்தார்களோ, அவ்வாறே ஆரியர்கள் ஆட்சியின்போது சமஸ்கிருதம் படித்தார்கள். பாரதத்தில் வாழும் இஸ்லாமியர்கள் அரேபியாவி-ருந்து வந்தவர்கள் அல்ல. கிறிஸ்துவர்கள் இஸ்ரே--ருந்து வந்தவர்கள் அல்லர். அம்மாதிரியே தமிழகத்தில் வாழும் அந்தணர்கள் தமிழர்களேயன்றி ஆரிய நாட்டினர் அல்லர். இனி தலைச்சங்கம், இடைச்சங்கம்,கடைச்சங்கங்களில் இருந்த அந்தணர்கள் பற்றி விவரங்கள் தரப்படுகின்றன.

### தலைச்சங்கம் (கி.மு. 14,000 முதல் 9560 வரை)

இறையனார் (அய்யன்) , முருகவேள், அகத்தியர், புலஸ்தியர் (பிரமனின் புதல்வர்), கவேரன் (குபேரன் -நிதியின் கிழவன் முத-யவர் அந்தணர்கள்.

### பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (கி.மு. 7500 முதல் 6900 வரை) தமிழ்ச்சங்கம்)

பரத முனிவர், அகத்தியர், கொற்கை கிழான் நற்கொற்றன் முத-யவர் அந்தணர்கள்.

### இடைச்சங்கம் (கி.மு.6805 முதல் 3105 வரை)

அத்திரியன் புதல்வர் அதங்கோட்டு ஆசான், அகத்தியர் புலத்தியர் , கௌதம முனிவர், நாரத முனிவர், மார்க்கண்டேயர், வாமனர், வால்மீ முநிவர், சிகண்டி, சிறுபாண்டரங்கன், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர், காப்பியக்குடி தொல்காப்பியர், வையாபிகனார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் இக்காலத்தில் வாழ்ந்தவர்கள். நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் முத-யோர் அந்தண வகுப்பினர்.

## கடைச்சங்கம் (கி.மு.1715 முதல் கி.பி.235 வரை)

அகம்பன்மால் ஆதன், பிரமதத்தன், இறையனார், கபிலர், பரணர், பாலை கௌதமனார், ஆவூர் கௌதமன், சகாதேவன், பெரும் கௌசிகன், உரகடம் கௌணியன், சிறுகந்தனார், மருத்துவன் தாமோதரன், கடம்பனூர் சாண்டில்யன், கணக்காயன் தத்தனார், கள்ளில் ஆத்திரேயன், காஸ்யபன் கீரன், கோவர்த்தனன், செல்லூர் கௌசிகன், கண்ணன், தங்கால் ஆத்திரேயன், செங்கண்ணான், திருத்தாமன், நல்-அச்சுதன், நல்-இறையனார், நல்லூர் சிறுமேதாவி, பாண்டரங்கண்ணன், பூங்கண் உத்திரை (பெண் புலவர்) , இளங்கௌசிகன், வடம வண்ணக்கண்-தாமோதரன், வாடா பிரமந்தன், பொருந்தில் இளங்கீரன், மாதன் கீரன், கோடன்-கொற்றன்(தீக்ஷிதர்) உறையூர் முடமோசியார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், மதுரை கவுணியன் தத்தனார், கிடங்கில் குலபதி நல்-கண்ணனார், காப்பியாற்றுக் காப்பியனார், தங்கால் ஆத்திரேன் கண்ணன், நக்கீரன், சேந்தன் கொற்றன் பேராலவாயன், மாமூலன், மூலன்-கீரன், மோசி-கீரன், மோசி கொற்றன், வெண் கொற்றன் வேப்பத்தூர் கண்ணன் கூத்தன், வேப்பத்தூர் குமரன் முத-ய அந்தணப் புதல்வர்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர்.

## வஜ்ஜிர நந்தி தமிழ் சங்கம் (கி.பி.470-கி.பி.520)

நக்கீர தேவ நாயனார், கபில தேவ நாயனார், பரண தேவ நாயனார், கல்லாட தேவ நாயனார், பெருந்தேவனார் முத-ய அந்தணப் புலவர்கள் இருந்தனர்.

திருஞானசம்பந்தர் தோன்றிய பிறகு சுந்தரர், புருஷோத்தம நம்பி, நம்பியாண்டார் நம்பி, பூந்துருத்தி காடவ நம்பி, பெரும்பற்றூர் பு-யூர் நம்பி, செவ்வை சூடுவார், திருக்குறள் உரை எழுதிய பரிமேலழகர், நச்சினார்க்கு இனியனார், கயாதரர், ஸ்ரீவில்-புத்தூரார், வரந்தருவார், அருணகிரி நாதர், காளமேகப்புலவர், வீரை ஆசு கவி கவிராஜ பண்டிதர், வீரை அம்பிகாபதி, ராமானுஜ அய்யங்கார், மாதை வேங்கடநாதர், பிள்ளைப்பெருமாளைய்யங்கார், சிவாக்ர யோகி, வென்றிமாலை கவிராயன், தென்திருப்பேரை நாராயண தீக்ஷதர், அனந்தபாரதி அய்யங்கார், சுப்பிரமணியப் பாரதி (பெருந்தொகை - நிகண்டு எழுதியவர்) , கோபால கிருஷ்ண பாரதி, தத்துவராய் அடிகளார், திருவஹிந்திரபுரம் நாராயண அய்யங்கார், கவிராஜ பண்டிதர், வெங்கடேச சர்மா முத-ய அந்தணப் புலவர்கள் வாழ்ந்தனர்.



## பாண்டித்துரை தேவர் - நான்காவது தமிழ் சங்கம் (கி.பி. 1901 முதல்)

தமிழ் ஐம்பெருங்காப்பியங்களை தேடித்தந்த உ.வே. சாமிநாதய்யர், பா. ராகவ அய்யங்கார், நாராயண அய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், பி.எஸ். சுப்பிரமணிய அய்யர் முத-ய தமிழ் அந்தணப் புலவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர்.

## 20-ம் நூற்றாண்டு முதல் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தமிழ் அந்தணர்கள் - புலவர்கள்

பரிதிமாற் கலைஞர் (வி.கோ. சூரிய நாரயாண சாஸ்திரியார்), பெருமாள் அய்யர், கனம் கிருஷ்ணய்யர், அரியலூர் சடகோப அய்யங்கார், கார்குடி கஸ்தூரி அய்யங்கார், சண்பக மன்னார், வையை ராமசாமி சிவன், சுப்பிரமணிய பாரதி, பதம் சுப்புராம அய்யர், சந்திரயோகம் முத்துசாமி அய்யங்கார், பகழி கூத்தர், வேம்பத்தூர் பிச்சு அய்யர், கல்பாத்தி பிச்சு அய்யர், நவநீத கிருஷ்ண பாரதி, அனந்தகிருஷ்ண அய்யங்கார், நா. அப்பன அய்யங்கார், பிறவிக் குருடர் வசிஷ்ட பாரதி, கவிராஜ பண்டித கனகராஜ அய்யர், பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர், ம. கோபாலகிருஷ்ண அய்யர், இ.வை. அனந்தராம அய்யர், நா. சேதுராம அய்யர், கோவிந்த அய்யர், பேராசிரியர் டி.எம். சேஷகிரி சாஸ்திரி, காசிவாசி செந்தில்நாத அய்யர், அறிஞர் -ங்கப்பையர், மானாமதுரை நாராயண அய்யங்கார், தமிழாசிரியர் சடகோப அய்யங்கார், பண்டித நடேச சாஸ்திரி, சே. கிருஷ்ணமாச்சாரி, சி.வி. சாமிநாத சர்மா, மதுரகவி சீனுவாச அய்யங்கார், சடகோப ராமானுஜாச்சாரியார், மோ.வே. கோவிந்தராஜய்யர், சி. கணேசய்யர், சா. கல்யாணசுந்தரமய்யர், அபிநவ காளமேகம் அனந்தகிருஷ்ண அய்யங்கார், மகாகவி சுப்பிரமணிய பாரதி, வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரி, திராவிட கவிதாமணி வே. முத்துசாமி அய்யர், ரா.ஸ்ரீ. ஆச்சாரியா, வ. ராமசாமி அய்யர், டாக்டர் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி, டி.என். சேஷாசல அய்யர், பேரறிஞர் பெ.நா. அப்புசாமி, கவியோகி சுத்தானந்த பாரதி, பேராசிரியர் ஈ.எஸ் வரதராஜய்யர், எஸ்.என். ராமதேசிகன், டி.கே. ராமானுஜ அய்யங்கார்,

பேராசிரியர் கே. சாமிநாதன், கலாநிலையம் ராஜகோபால சாஸ்திரி, ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், பேராசிரியர் அ. சீனுவாஸ ராகவன், கி.வ. ஜகன்னாதன்(கலைமகள் ஆசிரியர்), தாரமங்கலம் புலவர் லக்ஷ்மிநாராயண சாஸ்திரி, தமிழறிஞர் கா.ம. வெங்கடராமய்யர், சி. ஜகன்னாதாசாரியார், பெரியன் வெ.நா. சீனுவாச அய்யங்கார், பேராசிரியர் கு.நா. சிவராமகிருஷ்ணய்யர், சக்தி சரவணன், பேராசிரியர் டாக்டர் செ. துரைசாமி, புலவர் கா. கண்ணப்பன், ஸாதுராம் ஸ்வாமிகள் முத-ய பல தமிழ ் அந்தணர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுள்ளனர்.

## தமிழ்மொழியில் சிறந்த சரித்திர கதைகள், நவீனங்கள் முத-யவற்றைப் படைத்த தமிழ் அந்தணர்கள் பெயர்கள் வருமாறு:

தமிழில் அழியாத சரித்திர நவீனங்களான “பொன்னியின் செல்வன்”, “பார்த்தீபன் கனவு”, “சிவகாமியின் சபதம்”, முத-ய பல நூல்களை எழுதிய ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) , சாண்டில்யன், வடுவூர் துரைசாமி அய்யங்கார், பி.எஸ். ராமய்யா, வ.ரா. சி.சு. செல்லப்பா, பி.ஆர். ராஜம் அய்யர், ச.கு. கணபதி அய்யர், தி. ஜானகிராமன், அ. மாதவைய்யா, கு.ப. ராஜகோபாலன், க.நா. சுப்பிரமணியன், த.நா. குமாரசாமி. ஹா.கி. வாலம் (பெண்) , கே. கிருஷ்ணமாச்சாரியார். வை.மு. சடகோபராமானுஜம், பி.டி. சீனுவாசய்யங்கார், அம்புஜம் கிருஷ்ணா(பெண்) , வெ. நாராயணன் (பரந்தாமன்) , நாகராஜன், டி.வி. ரங்கசாமி, எஸ். சோமாஸ்கந்தன், சுந்தர், ரா.ஸ்ரீ. தேசிகன், கே,ஆர். கல்யாணராமன்(மகரம்), சு.வை. குருஸ்வாமி சர்மா, எல்.ஆர்.விஸ்வநாத சர்மா, ந சிதம்பரசுப்பிரமணியன் வ.வே.சு. அய்யர், வி. கோதண்டராமன், கா.ஸ்ரீ.ஸ்ரீ.., த.நா. சேனாபதி, கிருஷ்ண சீனுவாஸன், குகப்பிரியை, மழவை சுப்பிரமணிய அய்யர், எம். வெங்கட்ராமன்(நாடோடி) , இராம. வைத்யநாத சர்மா, சக்திதாசன், கே.ஜி. சேஷாத்திரி), டாக்டர் கி. ரங்கசாமி அய்யங்கார், வி. நடராஜய்யர், எஸ். நடராஜன்(நஜன்) , கொத்தமங்கலம் சுப்பு, சோ. ராமசாமி, மணியன், முத-ய பல தமிழ் அந்தணர்கள் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டுள்ளனர்.



## தமிழில் தினசரி - நாளிதழ், வாராந்திர, மாதாந்திர இதழ்கள் பிரசுரித்து தமிழ் தொண்டாற்றிய தமிழ் அந்தணர்கள் வருமாறு :

சுதேசமித்திரன்-சீ.ஆர். சீனுவாஸன், ஏ. ரங்கசாமி அய்யங்கார், தினமணி-வெ. சந்தானம், ஏ.என். சிவராமன், தினமலர்-ராமசுப்பையர், தார்மீக ஹிந்து-து.க. ஜகன்னாதாச்சாரியார், மணிக்கொடி-சீனுவாஸன் வாராந்திர மலர் - ஆனந்த விகடன்-எஸ்.எஸ். வாசன், சாவி. மணியன், தேவன், லக்ஷ ்மி, கல்கி-சதாசிவம், கிருஷ்ணமூர்த்தி, கி. ராஜேந்திரன், தீபம்-பார்த்தசாரதி, கலைமகள்-நாராயணசாமி அய்யர், சாமிநாத சர்மா, துமிலன், மஞ்சரி-தி. ஜானகிராமன், ஏ.ஜி. வெங்கடாச்சாரி, ரா. வீழிநாதன், ரா.கணபதி, திரிலோக சீதாராம், அமுதசுரபி-விக்ரமன்(நாராண. துரைக்கண்ணன்) , புத்தக வெளியீட்டளார்-அல்லையன்ஸ் குப்புசாமி அய்யர், டி.எம்.பி. மகாதேவன் “அண்ணா”சுப்பிரமணிய அய்யர் முத-ய பல தமிழ் அந்தணர்கள்.

## தமிழில் நாடகங்கள், திரைப்படம் தயாரித்தல், மெல்-சை மன்னர்கள், திரைப்பட நடிகர்கள், சிரிப்பு நடிகர்கள் பட்டிய-ல் தமிழ் அந்தணர்கள் பலர் உண்டு. அவர்களில் சிலர் வருமாறு

எஃப்.ஜி. நடேசய்யர், எஸ்.ஜி. கிட்டப்பா, டி.ஆர். மகா-ங்கம், மனோகர், எஸ்.எஸ். வாசன், கே. பாலசந்திரன், கே.வி. மகாதேவன், ஏ.ஜி. சுப்புராமன், கே. சுப்பிரமணியம், ஜி. ராமனாதன், எம்.எஸ். விஸ்வநாதன், ராமமூர்த்தி, கொத்தமங்கலம் சுப்பு, ச.து.சு. யோகி, ஜாவர். சீதாராமன், ஆர்.பத்மநாப அய்யர், செருகளத்தூர் சாமா அய்யர், பாபநாசம் சிவன், டி.ஜி. ராகவாச்சாரி, ஜி.என். பாலசுப்பிரமணியன் வைஜெயந்திமாலா, பேபி கமலா, எஸ்.வி. சகஸ்ரநாமம், சாரங்கபாணி. எஸ்.வி. சேகர், டி.ஆர். ராமச்சந்திரன், ஜெமினி கணேசன், மேஜர் சுந்தரராஜன், ஜெய்சங்கர், ரஞ்சன், டெல்- கணேஷ், ஒய்.ஜி. பட்டு, சோ. ராமசாமி, ஒய்.ஜி. பார்த்தசாரதி, ஒய்.ஜி. மகேந்திரன், சாருஹாசன், கமலஹாசன், சுஹாசினி முத-ய பலர் தமிழ் நாடக திரைப்படத் துறையில் பிரபலமானவர்கள்.

## பாரத நாடு- சுதந்திரம் அடைய பாடுபட்ட நூற்றுக்கணக்கான தமிழ் அந்தணர்கள் அநேக தியாகங்கள் புரிந்துள்ளனர். அவர்களின் பெயர் வருமாறு :

ஆக்கூர் அனந்தாச்சாரி, சோளிங்கபுரம் தேவராஜ அய்யர், எரையூர் ஹரிநாராயண அய்யர், நாமக்கல் ஹனுமந்தராவ், வ.வே.சு. அய்யர், அனுமந்தம்பட்டி எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், வாலாஜாபேட்டை கல்யாணராமய்யர், வந்தே மாதரம் கிருஷ்ணசர்மா, வில்-யனூர் லக்ஷமிநாராயண அய்யர், நீலகண்ட பிரம்மச்சாரி பத்மாசினி அம்மாள், ஏ.வி. ராமகிருஷ்ண அய்யங்கார், டி.எஸ்.எஸ். ராஜன், ச.வே. ராமச்சந்திர அய்யர், டி.எஸ். ராமசாமி அய்யங்கார், மதுரை எஸ். ராமசுப்பு, ஜகதீச அய்யர், வைத்யநாத அய்யர், அரக்கோணம் ராஜகோபாலன், நா. ராமகிருஷ்ண அய்யர், ரைட் ஹானரபிள் வலங்கைமான் சீநுவாஸ சாஸ்திரி(சில்வர்-டங்) , எஸ். சீனுவாச அய்யங்கார், சுப்பிரமணிய சிவா, வீர வாஞ்சிநாதன், ஆரணி சுப்பிரமணிய சாஸ்திரி, எஸ். சத்தியமூர்த்தி அய்யர், கிருஷ்ணாபுரம் சங்கரகிருஷ்ணன், டாக்டர் சுப்பரமணிய ஸ்வாமி, கம்யூனிஸ்ட் பி. ராமமூர்த்தி, காஞ்சிபுரம் டாக்டர் பி.எஸ். சீனுவாசன், டி.கே. சீனுவாச அய்யங்கார், என். சோமசுந்தரம் அய்யர், வாலாஜாப்பேட்டை சுந்தரவரதன், கல்-டைக்குறிச்சி சுப்பிரமணிய அய்யர், சேலம் விஜயராகவாச்சாரியார், சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்(இந்திய கவர்னர் ஜெனரல், வைஸ்ராய், எழுத்தாளர்) , வட ஆற்காடு வீரராகவ அய்யர், எஸ்.எஸ். வரதாச்சாரியார், சங்கு-கணேசன், ஆர்.ஏ. கோபால சாமி அய்யங்கார், அரசியல் சட்டம் தயாரிக்க அம்பேத்கருடன் பணியாற்றிய அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, க. சந்தானம் அய்யங்கார், டாக்டர் ராதாகிருஷ்ணன், (இந்திய ஜனாதிபதி) ஆர். வெங்கட்ராமன் (இந்திய ஜனாதிபதி)

வி.வி. கிரி (இந்திய ஜனாதிபதி), ஏ. கிருஷ்ணய்யர், கோமதி சங்கர தீக்ஷிதர், யு. கிருஷ்ணாராவ் (சபாநாயகர்) , நேதாஜி சுபாஷ் சந்திர போஸுடன் பணியாற்றிய காப்டன் லக்ஷ்மி, ருக்மணி அருண்டேல் முத-ய பல நூற்றுக்கணக்கான தமிழ் அந்தணர்கள் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தவர்கள்.



## தமிழ்நாட்டில் ஹரிஜனங்கள் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட தமிழ் அந்தணர்கள் வருமாறு :

பி.எஸ் கிருஷ்ணய்யங்கார், மதுரை ஏ.எஸ். வைத்யநாத அய்யர், ராஜாஜி, டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், எல்.என். கோபால்சாமி அய்யங்கார், நீதிபதி வி. பாஷ்யம் அய்யங்கார், கல்-டைக்குறிச்சி லக்ஷமி சங்கரய்யர், ஜி. மகாதேவன், தேவகோட்டை முகுந்தராஜ அய்யங்கார், மானாமதுரை என். ராமசாமி அய்யர், எஸ். ராஜம் அய்யர், தேவகோட்டை ரங்கண்ணா, மதுரை ஸ்ரீனிவாச வரத அய்யங்கார், பத்மாசினி அம்மாள், டாக்டர் டி.வி. சாமிநாத சாஸ்த்திரி, திருச்சி. வி. சாரநாத அய்யங்கார், டாக்டர் காளமேகம் அய்யர், லால்குடி டி.எஸ். அனந்தநாராயண அய்யர், மாயனூர் கே.ஜி. சிவசாமி அய்யர், ஜே. நடராஜ அய்யர், பெரம்பலூர் நரசிம்ம அய்யங்கார் முத-ய பல தமிழ் அந்தணர்கள் ஹரிஜன முன்னேற்றத்திற்கு பாடுபட்டுள்ளனர். உண்மை இங்ஙனமிருக்க ஹரிஜனங்கள் தமிழ் அந்தணர்களை ஜாதி வெறியர்கள் என்று கூறுவது பொருந்தாத கூற்று.

## உலகம் போற்றிய தமிழ் அந்தணர்கள்:

நோபெல் பரிசு பெற்ற சர்.சி.வி. ராமன், டாக்டர் சந்திரசேகரன், கணிதமேதை ராமானுஜம் அவர்களும், ஆன்மீக பேரொளியாய் விளங்கிய ரமண மகரிஷி அவர்களும் காஞ்சி காமகோடி பீடாதிபதி சந்திரசேகர ஸரஸ்வதி அவர்களும், சேஷாத்திரி ஸ்வாமிகள், ஞானந்தகிரி, சுவாமி சிவானந்தா, தயானந்த சரஸ்வதி, சுவாமி சித்பவானந்தா அவர்களும் ஆவர்.

மருத்துவத்துறையில் டாக்டர் ரங்காச்சாரி, நரம்பியல் நிபுணர் டாக்டர் பி. ராமமூர்த்தி, விவசாயத்துறையில் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், நீதித்துறையில் ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யர், தொழில் துறையில் டி.வி. சுந்தரமய்யங்கார் ராமன் பிரதர்ஸ், சிவைசைலம், மற்றும் பலர், ஐ.நா. சபையில் பணியாற்றிய சி.வி. நரசிம்மன் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன், கிருஷ்ணமூர்த்தி, கோபால்சாமி இவ்வாறு பல துறைகளிலும் தமிழ்நாட்டு அந்தணர்கள் சிறந்து விளங்கி தமிழ்நாட்டிற்கு பெருமை தேடித் தந்துள்ள அந்தணர்கள்.

## தமிழ்நாட்டு இசைக்கலைஞர்கள்:

தமிழ்நாட்டு இசைக் கலைஞர்கள் உலகம் முழுதும் பிரசித்தி பெற்றவர்கள். கர்நாடக இசையை வளர்ப்பதில் தமிழக அந்தணர்கள் பெரும் பங்காற்றி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் பெயர் வருமாறு :

வானமாமலை அழகப்ப அய்யங்கார், அண்ணாச்சி அய்யர், எஸ். அண்ணாசாமி சாஸ்த்திரி, சியாமா சாஸ்திரி, சுப்புராய சாஸ்திரி, பஞ்சு சாஸ்திரி, வீணை குப்பைய்யர், ஆதிமூர்த்தி அய்யர், அப்பாசாமி அய்யர், ஆலத்தூர் சகோதரர்கள், அம்பி தீக்ஷிதர், நாகூர் அம்பி அய்யர், அனந்த கிருஷ்ண சர்மா, மெட்ராஸ் பாலகிருஷ்ண அய்யர், கரூர் சின்னசாமி அய்யர், மழவை சிதம்பரபாரதி (தமிழ் பெரிய புராண கீர்த்தனைகள்) , மழவராயநேந்தல் சிதம்பர பாகவதர், சின்னசாமி தீக்ஷிதர், முத்துசாமி தீக்ஷிதர், பாலுசாமி தீக்ஷிதர், தியாக பிரும்மம், போலோகம் சிதம்பர அய்யர் (கடம்), விநாயக்ராம் (கடம்) , செங்கல்வராய சாஸ்திரி, கரூர் தக்ஷிணாமூர்த்தி, மணத்தட்டை துரைசாமி அய்யர், நங்கவரம் நீலகண்ட அய்யர், பல்லவி சேஷ அய்யர், திருவொற்றியூர் தியாகய்யர், பேராசிரியர் சாம்பமூர்த்தி அய்யர், மாங்குடி ராமனாத பாகவதர், மாங்குடி துரைசாமி அய்யர், பல்லவி துரைசாமி அய்யர், சேலம் துரைசாமி அய்யங்கார், பைதல குருமூர்த்தி சாஸ்திரி, அகலங்கா கோவிந்தசார்யா, கோவிந்த சிவன், சபாபதி சிவன், கோவிந்த தீக்ஷிதர், மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர், பல்லவி கோபாலய்யர், ஆவுடையார் கோயில், ஹரிஹர பாகவதர், கனம் கிருஷ்ணய்யர், எம்.ஏ. கல்யாணகிருஷ்ண பாகவதர், பழனி கிருஷ்ணய்யர் (கடம்) , கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர், வானாடி கிருஷ்ணய்யர், திருநெல்வே- கிருஷ்ணசாமி அய்யர், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்திரி, ராமநாதபுரம் கிருஷ்ணய்யர், கோடிஸ்வர அய்யர், ஸ்வர்ணக்காடு வேங்கடசுப்பையர், திருத்துறைப்பூண்டி நரசிம்ம அய்யங்கார், நாமக்கல் சேஷஅய்யர், சாத்தூர் கிருஷ்ணய்யர், பஜனை துரைசாமி அய்யர்(தியாகப் பிரம்மத்தால் பாராட்டப் பெற்றவர்) , உமையாள்புரம் கல்யாணராமய்யர், தேவகோட்டை நாராயணஅய்யங்கார், பூலோக கந்தர்வ நாராயணசாமி அய்யர், தரங்கம்பாடி பஞ்சநாத அய்யர், துறையூர் ராஜகோபால சர்மா, எம்.டி. ராமனாதன், டி.கே. ரங்காச்சாரி, ஆர்.ரங்கராமானுஜ அய்யங்கார், லால்குடி பல்லவி ராம அய்யர், முவ்வாநல்லூர் சபாபதி அய்யர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர்,



தில்லைத்தானம் ராம அய்யங்கார், டாக்டர் டி.சீனுவாஸ ராகவாச்சாரியர், டி.எஸ். சபேச அய்யர், திரிபுவன சாமிநாதய்யர், மார்க்கதரிசி சேஷ அய்யங்கார், சிமிழி சுந்தரம் அய்யர், முடிகொண்டான் வெங்கட்ராமய்யர், புல்லாங்குழல் ராஜமய்யர், குதிரை வைத்யநாதய்யர் மோகனம் வரதராஜய்யர், பெரிய வைத்தி, சின்ன வைத்தி, மாயவரம் விஸ்வநாத சாஸ்திரி, வி.வி. சடகோபன், டி.என். சேஷ கோபாலன், கே.வி. கிருஷ்ணசாமி கே.வி.நாராயணசாமி, அய்யாவையர், மெலட்டூர் வெங்கடராம சாஸ்திரி, உமையாள்புரம் சிவராமன் (மிருதங்கம்) டி.கே. மூர்த்தி (மிருதங்கம்), திருச்சி சங்கரன்(மிருதங்கம்) , ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ் (மிருதங்கம்) , செம்மங்குடி சீனுவாஸய்யர், பி. ராஜமய்யர், எம்.எஸ். சுப்புலக்ஷ்மி மற்றும் ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் (கி.பி.1740) , நீடாமங்கலம் ராஜா பாகவதர், சுப்பராய சாஸ்த்திரி(கி.பி.1803-1882) அனந்தபாரதி(கி.பி.1786) , கவிகுஞ்சர பாரதி, குன்றக்குடி கிருஷ்ணய்யர் (கி.பி.1816-1889) , நீலகண்ட சிவன்(கி.பி.1839-ஆயிரக்கணக்கான தமிழ் கீர்த்தனைகள் பாடியவர்) மஹா வைத்யநாதய்யர் (கி.பி.1844-1893) , பட்டணம் சுப்பிரமணிய அய்யர்(கி.பி.1845) , சரபசாஸ்த்திரி, பூச்சி அய்யங்கார், டைகர் வரதாச்சாரியார், நீலகண்ட சாஸ்த்திரி பெரிய சிங்கராச்சாரி, சின்ன சிங்கராச்சாரி, பாநாசம் சிவன்(கி.பி.1890-1973) , சங்கராபரணம் நரஸய்யா, இரட்டைப் பல்- சிவராம அய்யர், தோடி சீதாரமய்யர், அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் (கி.பி.1890-1967) , மகாராஜபுரம் விஸ்வநாதய்யர்(கி.பி.1896-1970) , மகாராஜபுரம் சந்தானம், முசிறி சுப்பிரமணிய அய்யர் (கி.பி.1899-1975) , சி.வி. நரசிம்மன், டி.கே. கோவிந்தராவ், டி.ஆர். சுப்பிரமணியன், மணி கிருஷ்ணசாமி, பத்மா நாராயணசாமி, சுகுணா புருஷோத்தமன், சுகுணா வரதாச்சாரி, எம்.ஜி. சீதாராமன், டி. லோகநாத சர்மா, ஜி.என். பாலசுப்பிரமணியன்(கி.பி.1910-1965) , விஸ்வநாதய்யர்(மிருதங்கம்), தஞ்சாவூர் வைத்யநாதய்யர் (மிருதங்கம்) , மதுரை மணி அய்யர்(கி.பி. 1912-1968) , மதுரை ராஜம் அய்யர், ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர்,டி.என். கிருஷ்ணன் (வய-ன்) , லால்குடிஜயராமன்(வய-ன்) குன்றக்குடி வைத்யநாதன்(வய-ன்), எம்.எஸ். கோபால கிருஷ்ணன் (வய-ன்) , டி. ருக்மிணி (வய-ன்) டி.கே. பட்டம்மாள், டி.கே. ஜயராமன், எம்.எல். வசந்தகுமாரி, வேதவல்-, என்.சி. சௌந்திரவல்-, சரோஜா-ல-தா, சௌம்யா, சுதா ரகுநாதன், டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா, பாலசந்தர்

காயத்திரி (வீணை), ரவி கிரண்(வீணை) , டி.ஆர்.மகா-ங்கம் (புல்லாங்குழல்) , ரமணி (புல்லாங்குழல்) , கேசி (புல்லாங்குழல்) , குஞ்சுமணி-நீலா (புல்லாங்குழல்) , நெய்வே- சந்தானகோபாலன், சஞ்சய் சுப்பிரமணியன், அருணா சாய்ராம், அருணா ஸ்ரீராம், நித்யஸ்ரீ, வைரமங்கலம் லக்ஷ்மிநாராயணன், டி.எம். தியாகராஜன், சந்தியாவந்தனம் சீநுவாஸராவ், சங்கரநாராயணன் தேசிகன், ஓ.எஸ்.தியாகராஜன், ஓ.எஸ். அருண், அசோக் ரமணி, ராஜ்குமார் பாரதி, (சுப்பிரமணிய பாரதியின் பேரன்) , மாண்ட-ன் சீனுவாசன், கணேஷ் குமரேஷ் (வய-ன்) , எல். சுப்பிரமணியம் சகோதரர்கள் (வய-ன்) , சிவானந்த ராஜாமணி அய்யர் (வய-ன்) , வாணி ஜெயராம், பிரேமா ஹரிஹரன் முத-ய பபபபபள பல எண்ணற்ற தமிழ் அந்தணர்கள் கர்நாடக இசைக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்தவர்கள்.

தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த தமிழ் அந்தணர்களை, மறந்தாலும் துவேஷித்தாலும் அவர்'களை தமிழன்னை மன்னிக்க மாட்டாள்.

(பி.கு. : விவரங்கள் கிடைக்கப் பெறாததால் பல நூற்றுக்கணக்கான பெயர் விடுபட்டிருக்கலாம். விவரங்கள் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் சேர்க்க இயலும்) .

## 77. பக்தி மார்கம்

பாரத தேசத்திலுள்ள ஹிந்து கலாசாரம் பரிணமிப்பதற்கு காரணம் பக்தி மார்கமே. 'பக்தி மார்கம்' தழைப்பதற்கு காரணம் உருவ வழிபாடு. உருவ வழிபாடு செய்வதற்கு பாரதமெங்கும் ஆலயங்கள் கட்டப்பட்டன. பரமேஸ்வரன், திருமால், சக்தி, வினாயகர், முருகன், ராமர், கிருஷ்ணர், பண்டரிநாதன், மீனாக்ஷி, காமாட்சி, ஆஞ்சநேயர், தத்ராத்ரேயர், சாஸ்தா, மாரியம்மன், காளி(துர்கை) , லக்ஷ்மி (மும்பா தேவி) இப்படி அநேக தெய்வங்களுக்கு ஆலயங்கள் உள்ளன. இந்த ஆலயங்களில் லக்ஷக்கணக்கான பக்தர்கள் விசேக்ஷ காலங்களில் குழுமுகின்றனர். விரதங்கள் மேற்கொண்டு காணிக்கை செலுத்துகின்றனர். பிரம்மோத்ஸவம் முத-ய விசேக்ஷ காலங்களில் தேர்த்திருவிழா முத-யன நடைபெறுகின்றன. கும்பமேளா, புஷ்கரம், மாசி மகம் முத-ய நாட்களில் அந்தந்த பிரதேசங்களில் லட்சக்கணக்கான மக்கள் புனித நீராடுகின்றனர்.

ஹிந்து மதத்தினர், கடல் கடந்து வேற்று நாட்டில் குடியேறினாலும்



கோயில் கட்டி வழிபாடுகள், உத்ஸவங்கள் நடத்தி பாரத கலாசாரத்தை பேணி வருகின்றனர். கிறிஸ்தவர்கள் உருவ வழிபாட்டில் ஏசுநாதர், மேரி அவர்களை வழிபட்டாலும் அவர்கள் அபிஷேகம், பூஜை, உத்ஸவங்கள் நடத்துவதில்லை. பௌத்தர்கள் புத்தரைத்தவிரவேறு தெய்வங்களை வழிபடுவதில்லை. இஸ்லாமியர்கள் உருவ வழிபாடு செய்வதில்லை. கஃபா என்னும் (அரேபியா) சதுரக் கல்லையே வழிபடுகின்றனர். இந்தியாவிலுள்ள சூபி முஸ்லீம்கள், சீக்கியர்கள் கோயில்களில் சென்று வழிபாடு செய்கின்றனர்.

தமிழ்நாட்டில் ஸ்ரீரங்கம், திருச்சி மலைக்கோட்டை, திருவண்ணாமலை, ராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன் முத-ய கோயில்கள் பிரசித்தி பெற்றவை. தமிழ்நாடு முழுதும் சேர,சோழ, பாண்டிய மன்னர்கள், கிருஷ்ணதேவராயர், நாயக்க மன்னர்கள் முத-ய அரசர்கள் கட்டிய கோயில்கள் ஏராளம். கும்பகோணம், காஞ்சிபுரம் முத-ய ஊர்களில் தெருவுக்குத் தெரு பிரம்மாண்டமான கோயில்கள் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் கோயில்கள் உள்ளன. தமிழ்நாட்டின் கலாசாரம் கோவிலைச் சுற்றியே வளம் பெறுகிறது. இந்த ஆலயத்திலுள்ள தெய்வங்கள் பக்தர்களின் வியாதி, குறைகளை போக்குகின்றன. இந்த தெய்வங்கள் மனிதர்களுடன் பேசுகின்றன. நம்ப முடியாத அற்புதங்களை செய்கின்றன. பகுத்தறிவு வாதிகள், அறிவு ஜீவிகள் விஞ்ஞானத்தை மட்டுமே நம்புபவர்கள் கூட பிரமித்துவிடும்படி பல அற்புதங்களை இந்த தெய்வ உருவங்கள் செய்கின்றன.

தமிழ்நாட்டில் ஆலயங்களை உருவாக்கிய சிற்பிகள் போல உலகில் எந்தப் பகுதியிலும் இல்லை. உத்ஸவ விக்ரஹங்கள் செய்வதிலும், வாகனங்கள், ராஜகோபுரங்கள் கட்டுவதிலும் தமிழ்நாட்டு ஸ்தபதிகள் உலகப் பெருமை வாய்ந்தவர்கள். மகேந்திர பல்லவன் காலத்தில் மஹாப-புரத்தில் ஏழு கற்கோயில்களைக் கட்டிய ஆயன சிற்பி காலம் முதல் இன்று நம்மிடையே வாழும் முத்தையா ஸ்தபதி, கணபதி ஸ்தபதி வரை உலகமே அதிசயிக்கும் வகையில் கோயில் கட்டியவர்கள் தமிழ்நாட்டு ஸ்தபதிகளே ஆவர். உலோகத்தாலான உத்ஸவ விக்ரஹங்களை உருவாக்குவதில் அக்காலம் முதல் தமிழ்நாட்டு ஸ்தபதிகள் உலகப்புகழ் பெற்றவர்கள்.

கோயில்கள் கட்டுவதற்கு உகந்த இடங்கள் (பலன் தரும் மரங்கள், அபூர்வ மூ-கைகள், மலை வாசஸ்தலங்கள், புண்ணிய நதிக்கரைகள் குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட இடங்களில் விழும் கோள்களின் கிரணங்கள் முத-யவற்றை ஆராய்ந்து, மகான்கள் ஆங்காங்கே கோயிலை கட்டும்படி செய்கிறார்கள்.

1 Proof



கர்பக்கிரஹங்களில் பிரதிஷ்டை சிலைகள் செய்ய குறிப்பிட்ட இடங்களில் (ஆண்கல், பெண் கல், அ- கல்) கல்பரிசோதனை செய்யப்பட்டு சிலைகள் வடிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தெய்வத்திற்கும் உருவம் இப்படித்தான் இருக்கவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(கற்கள் மின்காந்த அலைகளை ஈர்க்கின்றன. ‘கிறிஸ்டஸ்’ ‘சி-கான்’ ‘சிப்ஸ்’ முத-யன “ டிரான்ஸிஸ்டர், டி.வி., செல்போன்” முத-வற்றில் பயன்படுத்தப்படும் கற்கள், சாதாரண ஒ-யை மின்காந்த அலைகளாக உலகம் முழுவதும், ஏன் சந்திர மண்டலம், செவ்வாய் மண்டலம் வரை செலுத்தும் சாதனங்களையும், ஒளியை-ஒ-யாக மாற்றி சாதனங்கள் மூலம் அவை ஈர்க்கப்பட்டு உருவங்களை பார்க்க முடிகிறது. ஒ-களையும் கேட்க முடிகிறது. மேலும் வைரம், வைடூரியம், கோமேதகம், மரகதம், ஸ்படிகம் போன்ற கற்கள் கதிரியக்க சக்தி உள்ளவை. நர்மதை, கண்டகி நதிகளில் கிடைக்கும் கூழாங்கற்கள் அதிகமான எலக்ட்ரான் சுழற்சி கொண்டவை. இக்கற்கள் மனித உடலுக்கு நன்மை செய்கின்றன.

உருவ வழிபாடு அநாகரீகம் என்றும், பக்திமார்க்கம் மூட நம்பிக்கையை வளர்க்கிறது என்றும், பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். திருப்பதி வெங்கடாஜலபதி, சபரிமலை ஐயப்பன் மற்றும் குலதெய்வங்களை வழிபட்டு நன்மையடைந்த லக்ஷக்கணக்கான மனிதர்களின் நம்பிக்கையை இவர்கள் ஏன் கெடுக்கிறார்கள் என்று புரியவில்லை. உலக ஜனத்தொகையில் 90 சதவீதம் மக்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். கடவுள் நம்பிக்கை பக்தி மார்க்கம் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இருந்து கொண்டு வருகிறது. உருவங்களின் மீது பக்தி (பாசம், அன்பு, காதல், நேசம், எஜமான விஸ்வாசம்) கொள்வது ஒன்பது விதமாக கூறப்படுகிறது. மனித மனத்தை வயப்படுத்துவது, மனோதத்துவ ரீதியில் குணப்படுத்துவது முத-ய விஞ்ஞான ரீதியான கொள்கைகளின் அடிப்படையிலேயே உருவ வழிபாடு, பக்தி மார்க்கம் விளங்குகிறது. மனத்தின் சக்தி எல்லையற்றது. மாஜிக் நிபுணர்கள், யோகிகள், சித்தர்கள், பிரம்ம ஞானிகள் எல்லையற்ற மனோசக்தியை உடையவர்கள். ஹிப்நாடிசம், ரிக்ரஷன், ரெய்கி, புராணிகல்(ஸ்பர்ஸ சக்தி) முத-யன விஞ்ஞானபூர்வமான மனோதத்வ கலைகள். இக்கலைகள் மனித மனத்திற்கும், உடலுக்கும் நன்மையே செய்கின்றன.

மனிதன் கட்டுப்பாடற்ற விலங்குகள் போலவும், ரத்த வெறிகொண்ட மிருகங்கள் போலவும் மாறிவிடாமல் தடுக்க ‘பக்திமார்கம்’ ஒரு இனிய வழி. இறைவனின் நாமங்கள்.



ஆணிவேராகக் கொண்டது. தமிழர் நாகரீகமே, தமிழ் மொழி வளர்ச்சி பக்தி மார்க்கத்தினால் தழைத்தது. தமிழர்கள் எங்கு சென்றாலும் கோவில் கட்டுவதும் வழிபாடு செய்வதும் நடைபெற்று வருகிறது.

தமிழில் பக்தி மார்கத்தை வளர்க்க பல திரைப்படங்கள் வெளியிடப்பட்டு மக்களை ஈர்த்தது. அவைகளில் சில வருமாறு :

கிருஷ்ணலீலா, கிருஷ்ண விஜயம், ஹரிதாஸ், பக்த மீரா, கிருஷ்ண துலாபாரம், வீர அபிமன்யு, சிவகவி, திருநீலகண்டர், ஸ்ரீவள்ளி, ஹரிசந்திரா, மகாகவி காளிதாஸ், சக்ரதாரி, சாந்த சக்குபாய், பவளக்கொடி, பக்த பிரஹலாதா, ராமராஜ்யம், லவ-குசா, பட்டினத்தார், சதி அனசூயா, காரைக்கால் அம்மையார், மஹிராவணன், இலங்கேஸ்வரன், பாரிஜாதம், சத்யவான் சாவித்திரி, சம்பூர்ண ராமாணயனம், கந்தன் கருணை, திருவிளையாடல், திருமால் பெருமை, தசாவதாரம், ஔவையார், ஆதிசங்கரர், நந்தனார், குருராகவேந்திரா, மதுரைவீரன், காத்தவராயன், சரஸ்வதி சபதம், அகஸ்தியர், ஆடிவெள்ளி, கர்ணன், திருவருட்செல்வர், நளன்-தமயந்தி, மாயாபஜார், சம்பூர்ண மஹாபாரதம், ஸ்ரீநிவாச கல்யாணம், ருக்மிணி கல்யாணம், வினாயக சதுர்த்தி, நாக பஞ்சமி, ஏகலைவன், தக்ஷயக்ஞம், ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி மற்றும் பல.

நாடகங்களில் நவாப் ராஜமாணிக்கம் நடத்திய பத்ராஜல ராமதாஸ், ஸ்ரீஐயப்பன் (இன்று சபரி மலை யாத்திரைக்கு பத்து லக்ஷம் பேர் செல்கிறார்கள் என்றால் அதுவே இந்நாடகத்தின் சிறப்பு. மற்றும் பல நாடகங்களும், ஆர்.எஸ். மனோகர் நடத்திய இலங்கேஸ்வரன், சுக்ராச்சாரியார், துரோணாச்சாரியார் முத-ய நாடகங்களும் சிறப்பானவை.

இன்றும் சின்னத்திரையில் (டி.வி.) ராமானந்தசாகர் அவர்களுடைய ஸ்ரீமத் ராமாயணம், பி.ஆர். சோப்ராவின் “மஹாபாரதம்” உலகப் பிரசித்தி பெற்றவையாக உள்ளன. ஓம் நமசிவாய, விஷ்ணுபுராணம், ஜெய் ஹனுமான் முத-ய படங்களும் பக்தியை வளர்க்க உதவி புரிகின்றன.

ஒவ்வொரு காலகட்டத்திலும் பாரதத்தில் மஹான்கள் அவதரித்து பக்தியை வளர்த்து வருகின்றனர். அவர்களில் ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், கௌராங்கர், கிருஷ்ண சைதன்யர், பிரம்மானந்தர், சூர்தாஸ், துளசிதாஸ், கபீர்தாஸ், துக்காராம், நாமதேவர், ஞானேஸ்வர், கோராகும்பர், ஜனாபாய், மீராபாய், சமர்த்தராம்தாஸ், ராமானந்தர் சோகாமேளா, சாகா சாஹிப், ஷீரடி சாய்பாபா, ராகவேந்திரர், ஜயதேவர், பத்ராஜல ராமதாஸர், அன்னமாச்சாரியார், தாளபாக்கம் சின்னய்யா, நாராயண தீர்த்தர், யதிராஜர், புரந்தரதாஸர், நாராயண பட்டதிரி, நாராயணகுரு,

அம்ருதானந்தமாயி, புட்டபர்த்தி சத்யசாயிபாபா, கணபதி சச்சிதானந்தர், போதேந்திர ஸரஸ்வதி, ஸ்ரீதர அய்யாவாள், மருதாநல்லூர் சத்குரு, சதாசிவ பிரம்மேந்திரர், கோபாலகிருஷ்ண பாரதி, தியாகப்பிரும்மம், முத்துசாமி தீக்ஷிதர், ச்யாமா சாஸ்த்திரி, அருணகிரிநாதர், தாயுமானவர், ஊத்துக்காடு வெங்கடகவி, விஜயகோபாலதாஸர், ரமண மகரிஷி, கச்சியப்ப சிவாச்சாரியார், சேக்கிழார், சேஷாத்திரி ஸ்வாமிகள், ஜட்ஜு ஸ்வாமிகள், வள்ளிமலை ஸ்வாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி ஸ்வாமிகள் மற்றும் பங்காரு அடிகளார் வரை அநேக மகான்கள் மக்களை பக்தி மார்கத்தில் அழைத்துச் செல்கிறார்கள்.

பக்தி மார்கத்தில் கதா காலட்சேபம், பிரவசனம் செய்து, பஜனைப் பாடல்கள் பாடுவது என்று பல வழிகளும் உண்டு. இவ்வழிகளில் கீழ்க்கண்டவர்கள் ஆற்றிய தொண்டு மறக்க முடியாதது.

அனந்தராம தீக்ஷிதர், ராமு தீக்ஷிதர், பாபு தீக்ஷிதர், டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள், சுகப்பிரம்மம், முக்கூர் சீனுவாஸ வரதாச்சாரியார், எம்பார் விஜயராகாவாச்சாரியார், தூப்புல் லக்ஷ்மி நரசிம்மன், சரஸ்வதிபாய், வெங்கடரமணராவ், ஸாதுராம் ஸ்வாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார், கீரன் போன்ற பல மகான்களும் இன்றைய தினமும் நூற்றுக்கணக்கானவர்களும் உள்ளனர்.

நாமசங்கீர்த்தனம் செய்து மக்களை நல்வழிப்படுத்திய மகான்களில் புதுக்கோட்டை கோபாலகிருஷ்ண பாகவதர், சஞ்சீவி பாகவதர்,உடுமலைப்பேட்டை நாராயண அய்யங்கார், சிந்தாமணி அய்யங்கார், நாட்டு அண்ணாஜி ராவ், ஹரிதாஸ் கிரி, டாக்டர் ராமமூர்த்தி, ஆடுதுறை சுப்புராம பாகவதர், திருவையாறு நாகராஜ பாகவதர், மாயவரம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர், ஸ்ரீவாஞ்சியம் ராமச்சந்திர பாகவதர், பாபநாசம் சிவன், நாராயண சாஸ்த்திரி, கிருஷ்ண பிரேமி, டில்- சுப்புராம பாகவதர், போன்ற பல நூற்றுக்கணக்கான பாகவதர்களும், டில்- ராகவன், பெங்களூர் ரமணி அம்மான், முருகதாஸ், நாகூர் அனிபா, எம்.ஏ. மஜீத் முதல் கவிஞர் கண்ணதாசன் வரை நூற்றுக்கணக்கானவர்கள் இத்தொண்டு செய்துள்ளவர்கள்.

பக்திப் பாடல்களை பாடியவர்களில் சிவானந்த விஜயலக்ஷ்மி, எல்.ஆர். ஈஸ்வரி, சூலமங்கலம் சகோதரிகள், டி.எம்.சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், திருச்சி லோகநாதன், பி.ஏ. பெரியநாயகி, பி.ஜி. கிருஷ்ணவேணி, பி. சுசீலா, வஸந்த கோகிலம், எம்.எம். தண்டபாணி தேசிகர், கே.பி. சுந்தராம்பாள் முதல் இசைஞானி இளையராஜா வரை நூற்றுக்கணக்கானவர்கள் அரும் தொண்டாற்றியவர்கள். பக்தியோகம், இசையுடன் கலந்த நாதயோகம், மக்களை நல்வழிப்படுத்தும் வழியே ஆகும்.



# 78. அறிவு ஜீவிகள்

ஒரு சிலர் தங்களை அறிவு-ஜீவிகள் என்று கூறிக் கொள்கின்றனர். தனது கண்களால் கண்டதையும், அறிவால் அறிந்து கொள்பவற்றை மட்டுமே நம்புகிறவர்கள் இவர்கள். மேற்கத்திய விஞ்ஞான அறிவே பூரணமான அறிவு என்று நம்புகிறவர்கள். இவர்கள் தங்களை பகுத்தறிவுவாதிகள் என்றும் கூறிக் கொள்கின்றனர். எல்லா ஜீவன்களுக்கும் அறிவுள்ளது. அறிவு அற்றுப் போனவை ஜீவிக்க முடியாது. தொல்காப்பியர் ஆறு அறிவு உள்ளதாக கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஓரறிவு | (மெய்-உடல்) | - ஒரு செல் முதல் மரம், செடி கொடி வரை |
| (2) | இரண்டு அறிவு(வாய்) | | - நந்து (கிளிஞ்சல்) முத-யன |
| (3) | மூன்று அறிவு (மூக்கு) | | - எறும்பு முத-யன |
| (4) | நான்கு அறிவு (கண்) | | - நண்டு, தும்பி முத-யன |
| (5) | ஐந்து அறிவு | (செவி) | - பிராணிகள், பறவைகள் |
| (6) | ஆறு அறிவு | (சிந்தனை) | - சிந்திக்கும் திறமை உள்ள மனிதன் |

(வேதங்களில் பிரபஞ்ச சிருஷ்டி, பூமியில் ஜீவ சிருஷ்டி பற்றி கருத்துக்கள் உள்ளன. அவையாவன: பிரளயத்திற்குப் பிறகு திருமால் உந்தியி-ருந்து பிரமன் தோன்றினான். பிரமனின் உட--ருந்து நாரதர் போன்ற மானசீக புத்திரர்கள் தோன்றினர். பிபஞ்சத்தின் மையத்தில் ஒரு பிண்டம் உருவாகி பிரம்மாண்டமாக வளர்ந்தது. (தயிரில் வெண்ணை தோன்றுவது போல) பிருகு முதலான பிரமனின் மானசீக புத்திரர்களான ரிஷிகள் அந்த பிண்டத்தை இறைவனுக்கு ப-யிட்டனர். அந்த பிண்டம் முத-ல் மூன்றாகவும், பிறகு ஆறாகவும் சிதறியது. அதி-ருந்து பல்லாயிரக்கணக்கான துண்டுகள் சிதறி நட்சத்திரக் கூட்டங்களாக (சூரியனும் ஒரு நட்சத்திரமே) சிதறி ஒளி சிந்தி சுழன்றன. (Big - Bang Theory) . சூரியனிடமிருந்து கோள்களும் பூமியும் தோன்றின. பிரம்மாவின் மானசீக புத்திரர்களான ரிஷிகள் மிகக்கஷ்டப்பட்டு பூமியை சூரியனிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்தில் நிலைநிறுத்தி சுழல விட்டனர். பூமியில் வருண பகவான் அருளினால் கடல் தோன்றியது. சாகம்பரி தேவியின் அருளால் தாவரங்களின் விதைகள் பூமியில் தூவப்பட்டன. திருமால் “ விஸ்வ-நரனாக” பூமியில் பிரவேசித்து பிராணிகளின் உயிரானார். பரமேஸ்வரன் அம்ருத கலசத்திலுள்ள விஸ்வநரனின் ஜீவசக்தியை உலகில் பரவச் செய்தார்.

ஜடப்பொருள்களில் ஜீவசக்தி புகுந்து பூமியில் உயிர்கள் தோன்றின.

ஆரம்பத்தில் விதைகளி-ருந்து முளைத்த புல், பூண்டு, மரம், செடி, கொடி போன்ற தாவரங்கள் கடலுக்கடியிலும், மண்ணிலும் பரவின. இவைகள் சூரியனிடமிருந்தும், பஞ்ச பூதங்களிடமிருந்தும் சக்தியை பெற்று வந்தன. பின்னர் கிழங்கு, தண்டு, கிளை, விழுது, இலை, பூக்கள், விதைகள் மூலம் இனப்பெருக்கம் செய்தன. மரங்களில் ஆண், பெண், என இரண்டு வகையாய் (உதாரணம் பனை, பப்பாளி) பிரிந்தன. (பூச்சி, பறவை - முதல் மனிதன் வரை பிடித்து உணவாகக் கொள்ளும் தாவரங்களும் உண்டு) .

நுண் உயிர்கள் தோன்றி வளர்ந்து இரண்டிரண்டாகப் பிரிந்து பரவின. பிறகு ஆணினம், பெண்ணினம் என்று பிரிந்தன. (கட-ல் வாழும் பெண் மீன்கள் தனது முட்டைகளை பருவ காலத்தில் வெளியிடும். அந்த முட்டைகளின் மீது ஆண்மீன்கள் விந்துவைப் பொழியும். இவ்விதம் உடலுறவின்றி மீனினம் இனப்பெருக்கம் செய்தன. சிலவகை கடல்வாழ் உயிரினங்கள் உடலுறவு கொண்டு குட்டிபோட்டு இனப்பெருக்கம் செய்தன. பிறகு மண்ணில் முட்டையிட்டு, குஞ்சு பொறிப்பவையும், குட்டி போட்டு பால் கொடுத்து வளர்க்கும் நான்கு கால்கள் உள்ள பிராணிகள், பறவைகள் (கட--ருந்து பறக்கும் மீன்கள் கடற்கன்னிகளும் உண்டு) முதல் ஆறறிவுள்ள மனிதன் வரை தோன்றின. பூமியில் காலே இல்லாத புழுக்கள், பாம்புகள் மற்றும் ஆறுகால், எட்டுகால் பலப்பல கால்கள் உள்ள பூச்சிகளும் தோன்றி இனப்பெருக்கம் செய்தன. தேனீ, எறும்பு முத-ய இனங்களில்ஆண், பெண் என்றும் உடலுறவு செய்ய முடியாத வேலைக்காரத் தேனீ, எறும்புகளும் தோன்றின.

ஆறறிவு பெற்ற மனிதனி-ருந்து அன்னமய சரீரம் இல்லாத தெய்வங்கள், ஆவிகள் தோன்றின. (இவைகளில் நல்லவை, தீயவை என்றும் ஆண், பெண் என்ற இரண்டு வகை தெய்வங்கள், ஆவிகள் தோன்றின) இத் தெய்வங்கள், ஆவிகள் மனிதனது வழிபாட்டால் உலவி வருகின்றன.

ஹிந்து மதம் எட்டு விதமான குணங்களை (அறிவாற்றல்) தெய்வீக அறிவுள்ளவைகளாக கூறுகின்றன. மனிதன் தவத்தினாலும் சிந்தனையாலும் இவ்வித அறிவாற்றல்களைப் பெற்று தெய்வீக நிலையை அடைய இயலும் என்றும் கூறுகின்றன. அவையாவன :

| | | | |
|---|---|---|---|
| (7) | அணிமா | - | அணுவிற்கு அணுவாய் 'ஆத்மா' உடன் உடலைவிட்டு வெளியேறுதல். வேறு உட-ல் புகுதல். "ஆத்மா"-வின் ஆற்றலோடு எல்லா இடத்திற்கும் வருதல் |
| (8) | லஹிமா | - | காற்றைப்போல் லேசாகி "ஆத்மா"-வின் |



அறிவாற்றலோடு எல்லாவற்றையும் ஊடுருவிச் செல்லுதல்.

| | | | |
|---|---|---|---|
| (9) | கரிமா | - | தன்னைப்போல் பல உருவங்கள் எடுத்து பல இடங்களில் ஒரே நேரத்தில் காட்சியளித்தல் |
| (10) | மஹிமா | - | வானளாவி காட்சியளித்தல், பல முகங்களோடும், கைகளோடும் காட்சி அளித்தல். |
| (11) | ஈஸித்வம் | - | ஈஸ்வரன் போல எல்லா ஜீவன்களையும் ஆளுதல். (படைத்தல், காத்தல், அழித்தல் என முப்பரிமாணமுள்ள உடல்களில் ஜீவன்களுக்கு அளித்து அவைகளை ஆட்சி செய்தல்) |
| (12) | வசித்துவம் | - | பௌதிகமானவற்றையும் அவையல்லாதவற்றையும் தன் வசமாக்கிக் கொள்ளுதல் |
| (13) | பரகாம்யம் | - | எல்லாவற்றிலும் ஊடுருவி நிறைந்திருத்தல், அங்கிங்கெனாதபடி எங்கும் காட்சியளி'த்தல் |
| (14) | ப்ராப்தி | - | நினைத்ததை உடனே உருவாக்குதல் |

மேற்குறிப்பிட்ட 7 முதல் 14 அறிவாற்றல்கள் பேரறிவினால் பௌதீக உடல் இன்றி, ஆத்ம பலத்தினால், தெய்வீக நிலையுள்ளவர்களால் செய்யப்படுவனவாகும். பரமாத்மா, ஆத்மா, என்பவை 14 வித அறிவு நிலைகளில் சஞ்சரிக்கின்றன. ஆத்மா, (ஜீவன், உயிர்) இவற்றிற்கு நான்கு வித சரீரங்கள் அதாவது காரண சரீரம், கஞ்சுக சரீரம், மனோமய சரீரம், சூக்ஷ்ம சரீரம் முத-யன உண்டு. 7 முதல் 14 நிலையில் உள்ள தெய்வீகமான நிலையில் உள்ள ஆத்மா பரமாத்மாவிற்கு ஸ்தூல சரீரம் கிடையாது. பிரபஞ்சத்தில் பேரறிவு (உயிர்) பொருள்கள், சக்தி (Consciousness and Energy) என்ற மூன்று மட்டுமே நிறைந்துள்ளது. பேரறிவு அல்லது அறிவு என்பதே பொருள்களையும், சக்தியையும் தோற்றுவிக்கிறது. இயக்குகிறது. இந்த மூன்றில் பொருள்கள், சக்தி இரண்டையும் ஜலம், நெருப்பு காற்று, மண், ஆகாயத்தில் தோன்றுபவை என ஐவகையாக பிரிக்கின்றனர். அறிவும், ஆற்றலும் ஒன்றேயாகும். அறிவாற்றலும் அதன் விளைவுகளும் ஒன்றேயாகும்.( Energy and Matter) இந்து மத வேதங்கள், உபநிஷத்துகள் யாவும் சி'வம், சக்தி ஜகம் (ஆனந்தம் , சத், சித்து) என இவற்றையே குறிப்பிடுகின்றன. (உதாரணமாக நீர், பனிக்கட்டியாக மாறுவதும், ஆவியாக மாறுவதையும் கூறலாகும் -மேலும் பலவித வாயுக்கள் பேரொளி தரும் சூரியனாகவும்

அதி-ருந்து வெளிப்படும் கதிர்கள் ஒளியுடன் வெப்பத்தை தருவதையும் கூறலாகும்) உண்மையில் மூன்றும் வெவ்வேறானவை என்றாலும் அது பேரறிவின் (பரமாத்மா) மூன்று வெவ்வேறான நிலைகளேயாகும். இந்த மூன்றும் எப்போதும் அழியாதவைகளாகும். பரமாத்மாவின் ஒரு சிறு பகுதியே ஆத்மா எனப்படும். (ஜீவ கூட்டங்களின் தலைவன் பரமாத்மா எனப்படும் 14 அறிவுள்ள ஜீவனேயாகும்) . பரமாத்மாவின் உத்தரவின்படி கோடிக்கணக்கான ஜீவன்கள் ஒரு தலைமையில் புறப்பட்டு அண்டவெளியில் திரிந்து உலகம் போன்ற ஒரு அண்டத்தில் இறங்கி அங்குள்ள பஞ்சபூதங்களின் உதவியால் ஒரு உடலைத் (ஸ்தூல சரீரத்தை) தோற்றுவித்து உயிரினங்களைத் தோற்றுவிக்கின்றன. இவையே தனது திறமையாலும், தகுதியாலும் பரிணாம வளர்ச்சி பெற்று ஒரு செல் உயிரினம் முதல் பல செல்கள் உள்ள ஆறறிவு பெற்ற ஜீவனாக மாற்றம் அடைகின்றன. (ஸ்தூல சரீரத்துடன் மனிதனாக)

ஒவ்வொரு மனிதனும், ஸ்தூல சரீரம், யாதனா சரீரம், மனோமய சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம், (ஜீவ சரீரம்) என்னும் ஐந்துவித அறிவு நிலைக்கு உட்பட்டவனாகிறான்.

இவ்வாறு அறிவு ஆற்றலை பகுத்து அறிவதே பகுத்தறிவு என கூறலாகும். இவற்றை அறிந்து கொள்பவர்களே அறிவு-ஜீவிகள் என்று கூறமுடியும்.

இப்பிரபஞ்சம் முத-ல் ஒன்றாக இருந்து பின்னர் வெடித்துச் சிதறி (Big Bang Theory) நட்சத்திரக் கூட்டங்களாக, சூரியனாக, பின்னர் சூரியனி-ருந்து கோள்களாக, பூமியாக, பின்னர் பூமியி-ருந்து வான் மழை, கடல்கள், பாறைகள், மண், அதி-ருந்து தாவரங்கள், உயிரினங்கள், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் தோன்றினர் என்று கூறப்படுகின்றன. நாம் காணும் சூரியனைப் போல் பலப்பல சூரியன்களும் அதி-ருந்து பலப்பல கோள்களும், பூமி போன்ற அண்டங்களும் அவற்றில் ஜீவ ராசிகளும் வாழக் கூடும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் அவர்களால் ஜடப் பொருளி-ருந்து உயிர்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதைக் கூற இயலவில்லை.

இந்து மதம், பரமாத்மா (பேரறிவு அல்லது சிவம்), பரமாத்மாவுடன் கூடிய சக்தி (Energy) சக்தியி-ருந்து தோன்றிய ஜடப்பொருள். இந்த மூன்றுமே நிலையானது. அழிக்க முடியாதது என்றும், ஸ்தூல சரீரத்துடன் கூடிய மனிதனது அறிவுக்கு சக்தியும் (Energy) ஜடப்பொருளும் (Matter) மாறி மாறி தோற்றம் அளிக்கிறது. இத்தோற்றம் நிலையானது அல்ல (மாயை) என்று கூறுகிறது.

ஒரே சமயத்தில் பிரபஞ்சம் விரிந்து கொண்டு இருப்பது போலவும், ஒளியிழந்த நட்சத்திரங்கள் சுருங்கி மையப்பகுதியில்



விழுந்து கொண்டிருப்பதும் இடையறாது நடந்து கொண்டிருக்கிறது. (உதாரணமாக சூரியன் உயிர்கள் தோன்றுவதற்கு காரணமாகவும் அவை வளர்ச்சியடைவதற்கு காரணமாகவும், உயிர்கள் அழிவதற்கு காரணமாகவும் ஒரே சமயத்தில் இம்மூன்று நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன) அழிக்கப்படும் ஜடப் பொருள்களே படைப்பக்கு ஆதாரமாக உள்ளன. படைக்கப்பட்ட யாவும் அழிக்கப்படும் நிலைக்கு வளர்ச்சி அடைகின்றன. வளர்ச்சியுள்ள ஜடப்பொருள் மேலும் வளர்ச்சி அடையமுடியாத நிலை அடையும் போது அழிக்கப்படுகின்றன. ஜடப்பொருள்கள் உருமாறுவதையே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று வகையாய் அறியப்படுகின்றன. பரமாத்மாவில் இவை லயிப்பதால் மறைத்தல், அருளுதல் என்ற இரண்டு செயல்களும் பரமாத்மாவினால் (பேரறிவினால்) செய்யப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

பயிற்சி பெறாத, தேர்வு எழுதாத, தேர்ச்சி பெறாத மாணவன் ஆசிரியரைப் போல நடிக்க முடியும். ஆனால் ஆசிரியனாக ஆக முடியாது. அறிவு ஜீவிகளாக நடிப்பதும், பகுத்தறிவுவாதிகாளகவும் நடிப்பதை விடுத்து, பூரண மெய்ஞானம் பெற்ற ஆசானிடம் பாடம் கேட்டு, அனுபவ பூர்வமாக மெய்யறிவினால், இறையுணர்வினால் எல்லாவற்றையும் அறிந்து கொள்வதே சாலச் சிறந்தது.

## 79. உயிர்-பயணம்

பாரதம் என இந்த தேசத்திற்கு பெயர் வரக்காரணம், பரதன் என்னும் (அத்தியாயம் 8 -ஐ காண்க) சக்ரவர்த்தி இத்தேசம் முழுமையும் ஆட்சி செய்ததால் ‘பாரத தேசம்’ என்னும் பெயர் பெற்றது. இந்த பரத சக்ரவர்த்தியின் காலத்தி-ருந்தே மறுபிறப்புக் கொள்கையும் இருந்து வருகிறது. ஹிந்து மதப் புராணங்களின்படி பரத சக்ரவர்த்தி தனது இறுதிக் காலத்தில் தனது தேசத்தை தனது புதல்வர்களுக்குப் பிரித்து, அளித்துவிட்டு காட்டிற்குச் சென்று தவம் மேற்கொண்டான். அந்த நாட்களில் கருவடைந்த ஒரு பெண்மானை பு- துரத்திச் செல்கையில் நடுவில் ஒரு நீரோடையில் அந்த மான் ஒரு குட்டியை ஈன்றது. பு- அந்தப் பெண்மானை ஆகாரத்திற்காக கொன்று தூக்கிச் சென்றுவிட்டது. மான்குட்டி தவிப்பதைக் கண்ட பரதன் அதை எடுத்து பாசத்துடன் வளர்த்து வந்தார். பரதன் தனது இறுதிக்காலம் வருவதை அறிந்து மான் குட்டியின் எதிர்காலம் பற்றிய கவலையில் இறந்ததால், அடுத்த பிறவியில் ஒரு மான் வயிற்றில் பிறந்தார். முன்செய்த தவத்தின் பயனாக பரத சக்ரவர்த்தியாக இருந்த தான் இவ்வாறு மானாக பிறந்ததை எண்ணி வருந்தினார். பின்பு முனிவர்கள் ஆஸ்ரமத்தில் வாழ்ந்து வேதாந்த கருத்துக்களைக் கேட்டு அடுத்த

பிறவியில் ஒரு அந்தணர் வீட்டில் பிறந்தான். பின்பு பிரம ஞானியாகி ரஹூகணன் என்னும் அரசனுக்கு உபதேசம் செய்தார். (இவ்விவரங்களை ஜடபரத-உபாக்கியானம் கூறுகிறது) .

உடலை விட்டு 'ஆத்மா' பிரியும் போது எந்த ஆழ்ந்த நினைப்பில் இருந்ததோ அந்த உடலைப் பெறுகிறது. இது ஆத்மா (உயிர்) எவ்வாறு பயணம் செய்கிறது என்பதை விளக்குகிறது. இந்த "மறுபிறப்பு" கொள்கை. ஹிந்து மதம் மேலும் பாரத தேசத்தில் தோன்றிய ஜைன மதம், புத்த மதங்களிலும் இது ஏற்கப்பட்டுள்ளது. ஏனைய மதங்கள் இக்கொள்கையை ஏற்கவில்லை. உடலை விட்டுப் பிரிந்த 'ஆத்மா' எந்த இடத்தில் மறுபிறப்பு எடுக்கும், அது பூமியில் என்ன செயல்களைச் செய்யும் என்பது பேரறிவான பரமாத்மாவிற்கும் அதை தியானிப்பவர்களுக்கும் தெரிந்து விடுகிறது. அவ்வாறு இல்லையெனில் எதிர்காலத்தில் ஒருவன் பிறப்பான், அவன் இன்ன செயல்களைச் செய்வான் என்று கூற இயலாது. உதாரணத்திற்காக கீழ்க்கண்ட விவரங்கள் அளிக்கப்படுகின்றன.

(1) தசரதனுக்கு ராமன் பிறப்பான் அவன் ராவணனைக் கொல்வான் என்பது விசுவாமித்திர முனிவருக்கும், வசிஷ்ட முனிவருக்கும் முன்பே தெரியும் என்று வால்மீகி ராமாயணம் கூறுகிறது.

(2) தேவகி-வாசுதேவர் திருமணத்தின்போதே தேவகிக்கு பிறக்கும் 8-ஆவது குழந்தை (கிருஷ்ணன்) கம்சனைக் கொல்வான் என்று தெரிவிக்கப்பட்டதாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

(3) ராஜராஜசோழன் காலத்தில் வாழ்ந்த "ஜலந்தரன்" என்னும் தீர்க்கதரிசி 1000 வருடங்களுக்கு நாட்டை எவரெவர் ஆட்சி செய்வார்கள் என்று கூறியுள்ளனர்.

(4) (நோஸ்டர்-டாமஸ் என்னும் பிரெஞ்சு தீர்க்கதரிசி (16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்) எதிர்காலத்தில் பல நாடுகளில் என்ன நடக்கப் போகிறது என்பவற்றையும் (இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்படுவது உட்பட) கூறியுள்ளார்.

(5) ராஜிவ் காந்தி, ஸ்ரீபெரும்புதூருக்குச் செல்லக் கூடாது அங்கே அவர் மரணமடைவார் என்பது முன்னமேயே அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

(6) "கிறிஸ்டியன் - பால் " என்னும் பெண்மணி அமெரிக்க ஜனாதிபதி "ஜான் கென்னடி" -க்கு அவர் கொல்லப்படப் போகிறார் என்பதை முன்னதாக அவருக்கே தெரிவித்துள்ளார்.

இப்படி ஆயிரம் ஆயிரம் உதாரணங்களைக் கூறமுடியும். தமிழ்நாட்டில் நாடி சோதிடம் கூறுபவர்கள் யார் யாருக்கு என்ன



குழந்தை பிறக்கும்? அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை முன்கூட்டியே கூறிவிடுகிறார்கள். இவையெல்லாம் உடலைப் பிரிந்த ஜீவன் (ஆத்மா) எங்கு பிறக்கும், அது என்ன செய்யப் போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் கலையே ஆகும்.

தமிழ்நாட்டில் பிறந்த சித்தர்களும், யோகிகளும், பிரம்மஞானிகளும் ஒருவரை பார்த்தவுடன் அவருடைய முற்பிறவி, எதிர்காலம் பற்றி தெரிந்து கொள்ளும் சக்தி படைத்தவர்கள். கூடுவிட்டு (உடலை விட்நடு வேறு உட-ல் புகுவது) கூடு பாயும் சக்தி படைத்தவர்கள். (உதாரணம் : திருமூலர் ஒரு இடையனின் உட-ல் புகுந்ததும், ஆதிசங்கர பகவத் பாதர் இறந்துபோன ஒரு அரசனின் உட-ல் புகுந்ததும் யாவரும்அறிந்ததே) .

ஆத்மா (ஜீவன்) குறிப்பிட்ட உட-ல் வசிக்கும்போது ஏற்படும் அனுபவத்தை, லட்சியத்தை எடுத்துக்கொண்டு தனக்கு வேண்டிய உடலைத் தேர்ந்தெடுத்து அதில் புகுந்து கொள்கிறது. இதுவே அதனுடைய விதியாக அமைகிறது. உடல்கள் பஞ்சபூதத்தினால் ஏற்படுகிறது. கிரக நிலைகள் ஜீவனுக்கு சாதகமான சூழ்நிலையில் தயாரிக்கப்படும் உடல்களில் புகுந்து கொள்ள அனுமதிக்கிறது. மேலும் தெய்வீக நிலையில் உள்ளவர்கள் (தேவர்கள், ரிஷிகள், பிதுரர்கள்) இட்ட கட்டளைப்படியும் (பாவம், புண்ணியம்) ஜீவன்கள் உடலைத் தேர்ந்தெடுக்கின்றன. தெய்வ நிலையிலுள்ளவர்கள் (யுகம், காலம், தராதரம், திறமை, அறிவாற்றல்) அவ்வப்போது தோன்றி மனிதர்களுக்கு அறத்தை (இயற்கை சக்திக்கு ஒட்டியதானவை) போதிக்கின்றனர். அதுவே அறம் (தர்மம்-புண்ணியம்) இதற்கு மாறானது அதர்மம் (பாவம்) இனி ஸ்தூல சரீரமற்ற ஆவிகள் பற்றி சில செய்திகளை கவனிப்போம் :

(1) வால்மீகி ராமாயணத்தில் இராவண வதம் முடிந்த பின்னர் ஸ்ரீராமனுக்கு இறந்து போன அவரது தந்தை தசரதன் நேரில் வந்து பேசி ஆசிகள் வழங்கினார் என்று கூறப்பட்டுள்ளது,

(2) மகாபாரதம் - 15 வது கண்டம் - ஆஸ்ரமவாச பர்வதத்தில் திருதராஷ்ட்ர மன்னனுக்கு, வேதவியாஸர் இறந்து போன துரியோதனன், கர்ணன், பீஷ்மர், துரோணர், கடோத்கஜன், அபிமன்யு, இளம் பஞ்ச பாண்டவர்கள், சகுனி, சிகண்டி முத-யவரை வரவழைத்துக் காட்ட அவர்களுடன் அவர் பேசினார் என்று கூறப்பட்டுள்ளது.

(4) இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் 19வது அத்தியாயம், 232வது அத்தியாயத்தில் கோவலன் வானுலகத்தி-ருந்து இறங்கி வந்து கோவலன் கண்ணகியை வானுலகம் அழைத்துச் சென்றான் என்றும் இதைப் பார்த்தவர்கள் மன்னன் சேரன் செங்குட்டுவனிடம்

இச்செய்தியைக் கூறினர் என்றும் கூறப்பட்டுள்ளது.

(4) திருவிளையாடற்புராணம் 10-வது படலத்தில் இறந்துபோன மலையத்துவஜ பாண்டியன், வானுலகத்தி-ருந்து இறங்கி வந்து காஞ்சனமாலை என்னும் தனது மனைவியுடன் சமுத்திர ஸ்நானம் செய்தான் என்று கூறுகிறது.

(5) ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு இறந்தபிறகு மூன்று நாள் கழித்து மீண்டும் உயிருடன் எழுந்து வந்து தனது சீடர்களுடன் உரையாடினார் என்றும், இறந்து போன சாமுவேல் என்னும் மன்னன் அவரது மகன் “சவுல்” என்பவனுடன் பேசினான் என்றும் ஏசுநாதர், இறந்து போன பல தீர்க்கதரிசிகளின் ஆவிகளுடன் நேரில் பேசினார் என்றும் பைபிள் கூறுகிறது.

(6) ஜிப்ராயில் (கேப்ரியல்) என்னும் தேவதூதன் ஜோசப்பின் எதிரில் தோன்றி மேரியின் வயிற்றில் இருக்கும் சிசு பரிசுத்த ஆவியால் எற்பட்டது என்றும் அவனைத் திருமணம் செய்து கொள்ளும்படியும் கூறியதாக பைபிள் கூறுகிறது.

(7) ஜிப்ராயில் என்னும் அதே தேவதூதன் கி.பி.580-இல் வாழ்ந்த முகமது நபியை தேவர் உலகத்திற்கு அழைத்துச் சென்றார் எனவும் அங்கு ‘அல்லாவின் ’ வசனங்களை அவர் கேட்டார் என்றும் இஸ்லாமிய புராணம் கூறுகிறது. (திருக்குர்ரானில் பின்னால்உள்ள 15 அத்தியாயங்கள் மரணத்தின் பின் உள்ள வாழ்க்கையையும் “பர்ஸ்க்” என்னும் ஆவி உலகத்தைப் பற்றியும் கூறுகிறது.

(8) 1852-ம் ஆண்டு இங்கிலாந்தில் வாழ்ந்த Mr. Robert Oven என்ற அறிஞரிடம் திருமதி. ஷேடன் என்ற அமெரிக்கப் பெண்மணி ஆவிகளுடன் பேச முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார்.

பின்னர் “The Yorkshire Spititual Telegraph” என்ற பத்திரிகை ஆவியுலகச் செய்திகளை வெளியிட்டது.“Society for Physical Re-search” என்னும் நிறுவனத்தை துவக்கி ஆவியுலக ஆராய்ச்சி உண்மைகளை வெளியிட்டுள்ளார்.

(9) 1964-ஆம் ஆண்டு “Sir Arthur Finlay” என்னும் ஆங்கிலேயர் வெளியிட்ட “On the edge of the ethinic of survival after Death - Scientifically Explained” என்னும் புத்தகத்தில் ஆவிகள் பற்றிய ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளனர்.

(10) “Dr. Konstantine Randive” என்னும் மேற்கு ஜெர்மனி அறிஞர் எவ்வாறு இறந்து போனவர்களின் ஆவிகளை வரவழைத்துப் பேச முடியும் என்பதைக் கூறியுள்ளார்.



மேலும் பல புத்தகங்களின் பெயர்கள் கீழே வருமாறு:

(1) Life Beyond the Grave - By E.N. Allen (London) 1876.
(2) Spiritual Teachings - By Spiritualist Alliance (London) 1912.
(3) Hafed. Prince of Persia - By Hay Nisleet & Co., Glango 1983.
(4) A Wanderer in the Spirit Lands - By W.J. Sinkins. London 1896
(5) Letters from Juliana Light from the Border Land - By Grand Richards, London 1898.
(6) Truths of the Spirit World - By A. Wooderson. London. 1907.
(7) Teaching - By H.M.R. Derby, London
(8) A Celestial Message - By Lee & Stephered, Boston - USA, 1902.
(9) Realities of Future World - By Hollywell Press. Oxford-1908.
(10) Christ in You - By J.M. Watkins, 1910.
(11) Not Silent - If Dead - By A.L. Fernie Konsington, London, 1916.
(12) Letters from a Living Dead Man - By Elsa Barker, London 1916.
(13) Private Drodging - By J.M. Watkins, London - 1917.
(14) Speaking Across the Border Line, By Chas Taylors, London, 1917.
(15) War letters from living Dead man - By Elsa Barker, London 1917.
(16) Thought letters - By Father Stephano, London 1917.
(17) Message from Mesalona - By Elliot Stock, London, 1918.
(18) Gone-West - By William Ridev & Son, London, 1917.
(19) Teaching of Love - By W.H. Brendon & Son, Plymouth, USA, 1917.
(20) Life beyond Death - By Swami Abhedhananda, Ramakrishna Mission, Calcutta.
(21) Spiritualism in India - Theory & Practice, By V.D. Rishi. Bombay.

(22) The Undiscovered Country - By Herald Baylay London, 1918.
(23) Spiritual World - By Dro Secton, England.
(24) இறந்தவர்கள் வாழும் நிலையும், பேசும் முறையும் - ஸ்ரீஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய ஸ்வாமிகள், மதுரை.
(25) Research on Para -Physchology - Professor Bannerji, Rajasthan University.

மேற்கூறப்பட்ட புத்தகங்களைத் தவிர ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மானியில் உள்ள அறிஞர்கள், மறுபிறப்புக் கொள்கை, ஆவியுலகம் பற்றி ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ளனர். கொஞ்சம் கொஞ்சமாக மறுபிறப்பு, பூர்வ ஜன்மங்கள் பற்றிய புத்தகங்கள் இன்றளவில் ஏராளமாக வெளிவந்துள்ளன. புரபொஸர் மையர்ஸ், (விஞ்ஞானி) ஆல்பிரட் ரஸல் வாலேஸ், ராபர்ட் டேல் ஓவன், புரபெஸர் அக்ஸா கோஃப், ரிச்சர்ட் ஹோட்ஜேசன், வில்-யம் ஜேம்ஸ், (ஹார்வர்ட் பல்கலைக்கழகம்) சர். ஆ-வர் லாட்ஜ் (பர்மிங்ஹாம் பல்கலைக்கழகம் பிரின்ஸிபால்) போன்ற பல விஞ்ஞானிகள் ஆரய்ச்சிகள் மூலம் பரிசோதனை செய்து மறுபிறப்புக் கொள்கை, ஆவி உலகம் என்னும் கொள்கைகளை ஒப்புக் கொண்டுள்ளனர்.

(நம்மவர்கள் மறுபிறப்புக் கொள்கை, ஆவி உலகம் (பித்ரு லோகம்), தெய்வ வழிபாடு முத-யவைகளை கிண்டல் செய்து ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். இவர்கள் அறிவு -ஜீவிகள், பகுத்தறிவுவாதிகள் என்று தங்களைக் கூறிக் கொள்வது நகைப்புக்கு இடமாகிறது) .

ஜீவன்கள் (ஆத்மா) குறிப்பிட்ட காரியங்கள் செய்யவே மனித உட-ல் வாழ்கிறார்கள். அந்த காரியங்கள் என்னவென்று கனவு மூலமாகவே அவர்களுக்கு தெரிகிறது. தெய்வாம்சங்கள் பொருந்தியவர்கள் ஒரு மனிதனை பார்த்த உடனேயே அவர்களுடைய முற்பிறப்பு, அவர்களுடைய எதிர்காலம் பற்றியும் அறிந்து கொள்கிறார்கள். புத்தகத்தை பார்த்து படிப்பது போல் எதிரில் உள்ளவர்களின் ஜீவனை தொடர்பு கொண்டு தனது உள்ளுணர்வினால் அறிந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மகான்கள் தமிழ்நாட்டில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்து மதக் கொள்கைகள் மூட நம்பிக்கை அல்ல என்பதை மேலை நாட்டு அறிஞர்களும், ஷுரிடிங்கர் போன்ற நோபெல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளும், சிக்மெண்ட்-பிராய்ஃட் போன்ற பிரபல ஆங்கில எழுத்தாளர்களும் உலகுக்கு தெரிவித்துள்ளார்கள். ஐரோப்பா இங்கிலாந்து, அமெரிக்காவி-ருந்து ஏராளமான வெளிநாட்டவர்கள் பாரதம் வந்து இங்குள்ள யோகிகளையும்



சாமியார்களையும் சூழ்ந்து வருகிறார்கள் என்பதே இப்போது நம் கண்முன்னால் காணும் உண்மை.

"பாரத நாடு பழம்பெரும்நாடு - நீரதன் புதல்வர்
இந்நினைவுகற்றாதீர்" - பாரதி

(பாரத வம்சாவளியைப் பற்றி கூறும்போது பாரத தேச கொள்கைகளையும் அறிந்து கொள்வது மிக அவசியம் என்பதால் இக்கருத்துகள் தரப்பட்டுள்ளன) .

## 80. தமிழ் எழுத்து

உலகின் மிகத்தொன்மையான மொழி "தமிழ்" ஏசுநாதர் பிறப்பதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே "சங்கம்" வைத்து வளர்க்கப்பட்ட மொழி தமிழ் (தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்) தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியர், தொல்காப்பியர் முத-யவர்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்தவர்கள். தொல்காப்பியரது இலக்கணம் இன்றும் நடைமுறையில் உள்ளது. பல சிறப்புகள் கொண்ட தமிழ், மிகவும் இனிமையானது. இயற்கையை ஒட்டியது. பிற மொழிகளின் உதவியின்றி தனித்து செயல்பட்டு வருவது. பாரத தேசம் முழுதும் ஒரு காலகட்டத்தில் தமிழ்மொழி பேசப்பட்டு வந்தது. தற்போது வட வேங்கடம் முதல் குமரி வரை தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தெலுங்கு, கன்னடம், மராட்டிய மொழி பேசும் மனிதர்கள் வாழத் தொடங்கியதாலும், இஸ்லாமிய ஆதிக்கம், ஆங்கிலேயர் ஆதிக்கம் இருந்தமையாலும், தமிழ்நாட்டை விட்டு தமிழர்கள் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா, தாய்லாந்து, ஆஸ்திரே-யா, பி-ப்பைன்ஸ், மரீஷியஸ், தென் ஆப்பிரிக்கா ஏனைய ஆப்பிரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா முதலரிய பல நாடுகளில் குடியேறி வாழ்ந்து வருவதாலும் இன்றைய தமிழர்கள் பேசும் தமிழில் ஏராளமான அந்நிய மொழிகள் கலந்து விட்டன. வடஇந்திய மக்கள், பௌத்தம், சமணம் முத-ய மதங்கள் தமிழ்நாட்டில் பரவியதால் வடமொழி (சமஸ்கிரும்) தமிழுடன் பின்னிப் பிணைந்து விட்டது. இனி தமிழை பின்னோக்கி இழுத்துச் செல்வது, தூய தமிழில் எல்லோரையும் பேசும்படிச் செய்வது விழலுக்கு இறைத்த நீர் போலாகும். மேலும் தமிழரது வளர்ச்சியும் தடைபடும்.

தமிழ் மக்களின் கலாச்சாரமும் பெரும் மாற்றமடைந்துள்ளது. (கிராப் வெட்டிக் கொள்வது, ஷர்ட், பேண்ட் அணிந்து கொள்வது, சுரிதார், சல்வார் கமீஸ், நைட்டி முத-ய அணிந்து கொள்வது, பெண்களும் "பாப்" செய்து கொள்வது போன்ற ஆடை கலாசாரம் முத-யன) இனி பண்டைய கலாச்சாரத்தை திரும்ப கொண்டு வருவது

இயலாத காரியம். தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கையில் மேம்பாடு அடைதல் முத-யவற்றிற்கு ஆங்கிலக் கல்வி மிக அவசியமாகிறது. (விஞ்ஞானம், கணிதம், மருத்துவ இயல், பொறியியல், வானவியல் போன்றவற்றை குறுகிய காலத்தில் தெரிந்து கொள்ள ஆங்கிலக் கல்வி அவசியம்) தாய் மொழியில் ஆங்கில வார்த்தைகளுக்கு இணையான தமிழ் வார்த்தைகளை கண்டுபிடித்து அவற்றை எல்லோரும் தெரிந்து கொள்ளச் செய்வது என்பது மிகவும் கடினமான காரியம். இதைச் செய்து முடிப்பதற்குள் பல ஆண்டுகள் ஓடிவிடும். இதனால் தமிழர்கள் முன்னேற்றத்தில் பின்னடைவு ஏற்படும். இவற்றை கருத்தில் கொண்டு பிறமொழி வார்த்தைகளை அப்படியே ஏற்றுக் பெகாள்ளுதல் சிறந்தது. மேலும் தமிழ் எழுத்துச் சீர் அமைப்பு என்பது மிக மிக அவசியமாகிறது.

தமிழ் எழுத்துச் சீரமைப்பு என்று கூறும்போது ஏதோ நமது மொழி. நமது கலாச்சாரம் அழிந்துவிடும் என வாதிடுவது மடமையாகும். தமிழ் எழுத்துக்கள் பல காலகட்டங்களில் மாறிக்கொண்டேதான் வந்திருக்கிறது. உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**மொகஞ்சதோரோ காலத்து தமிழ்**




திருநாதர்குன்று சாஸன – தமிழ்






ராஜராஜ சோழன் (கி.பி.985-1017) காலத்து கல்வெட்டுகளில் உள்ள தமிழ் எழுத்துகள் இ'ப்போது நம்மால் சரளமாக படிக்க முடியாது. இவ்'வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழ் எழுத்துகள் மாறிக் கொண்டேதான் வந்திருக்கின்றன. இவ்வாறு ஏற்பட்ட மாற்றங்களினால் தமிழ் மொழி அழிந்து விடவில்லை. தமிழர் பண்பாடு, கலாச்சாரம் மாறிவிடவில்லை. எனவே தமிழ் மொழியின் எழுத்துக்கள் சீரமைப்பதில் எந்தவித அச்சமும் தேவையில்லை.

தமிழில் உயிர் எழுத்துகள் 12, மெய்யெழுத்துகள் 18, ஆயுத எழுத்து 1 ஆக 217 எழுத்துகள் உள்ளன. (ஆங்கில மொழிக்கு 26 எழுத்துகள் மட்டுமே உள்ளன) ஆங்கில மொழி "ரோமானிய" எழுத்துகளை எடுத்துக்கொண்டு உலகம் முழுவதும் வளர்ந்துள்ளது. மிகக் குறைவான எழுத்துக்களைக் கொண்டு அம்மொழி வளர்ச்சி பெறவில்லையா? ஐரோப்பாவில் உள்ள பல நாடுகள் (பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், டச்சு, ஹங்கேரி, போலந்து, ரஷ்யா, இத்தா-, ஸ்விட்சர்லாந்து, டென்மார்க், நார்வே, மற்றும் எகிப்து, துருக்கி, இந்தோனேஷியா போன்ற பல நாடுகள் ரோமன் எழுத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளன. அந்த நாட்டு மொழிகள் அழிந்து விடவில்லை. பாரத நாட்டு மொழிகள் ரோமானிய எழுத்துக்களை ஏற்றுக் கொண்டால் வளர்ச்சி ஒற்றுமை ஏற்படும். அதற்கு முன்னோடியாக தமிழ் மக்கள் ரோமானிய முறையை ஏற்றுக் கொண்டால் தமிழர்கள் வளமடைவார்கள். தமிழர் பெருமை உலகெங்கும் பரவும். இதற்கான முயற்சியை 21-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்க வேண்டும். தாமதம் செய்தல் கூடாது.

தமிழ் மொழியை "ரோமானிய" எழுத்துகளில் எழுத 26 ரோமானிய எழுத்துகளே போதுமானது. உயிரெழுத்துகளுக்கு - நெடில் நீங்கலாக 7 எழுத்துகளும் இதர எழுத்துகளுக்கு 19 ரோமானிய எழுத்துகளும் போதுமானது. கீழே விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | AA | E | EE | U | UU | A | AA | I | O | O | OW |

ஆ,ஈ,ஊ,ஏ,ஓ,ஔ ஆகிய உயிரெழுத்துகளுக்குத் தனியான எழுத்துகள் அவசியமில்லை. குறில் - உயிரெழுத்துகளுக்கு பயன்படுத்தப்படும் எழுத்துக்களையே இரண்டாவது முறையாக பயன்படுத்தினால் போதுமானது. "ஔ" என்னும் எழுத்துக்கு "OW" என்று எழுதலாம்.

அப்பு APPU

ஆப்பு AAPPU என்றவாறு எழுதலாம்.

தமிழ் மெய் எழுத்துகளுக்கு, எழுத்துகள் மேல் இடப்படும் புள்ளி தேவையில்லை.

க் K

என்றவாறு எழுதலாம்.

க KA

தமிழ் உயிர்மெய் எழுத்துகளை கீழ்க்கண்டவாறு எழுதலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ச | ட | த | ப | ற | (வல்-னம்) |
| KA | CA | TA | DA | PA | RA | |
| ங | ஞ | ண | ந | ம | ன | (மெல்-னம்) |
| KA | JA | NA | NA | MA | NA | |
| ய | ர | ல | வ | ழ | ள | (இடையினம்) |
| YA | RA | LA | VA | LA | LA | |

ற என்னும் உயிர்மெய் எழுத்துக்கும் “ங” என்னும் உயிர்மெய் எழுத்துக்கும், “ஞ” என்னும் உயிர்மெய் எழுத்துக்கும், “ண” என்னும் உயிர்மெய் எழுத்துக்கும் “ழ” என்னும் உயிர்மெய் எழுத்துக்கும் “ள” என்னும் உயிர்மெய் எழுத்துக்கும் தனியாக வேறு எழுத்துக்கள் தேவை இல்லை. ஆக 7 எழுத்துக்களைக் குறைக்கலாம். சில குறியீடுகளே போதுமானது.

வேற்று மொழியி-ருந்து கையாளப்படும் வார்த்தைகளுக்கு, கீழ்க்கண்ட ரோமானிய எழுத்துக்களைப் பயன்படுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஸ் | ஷ் | ஜ் | ஹ் |
| S | S | J | H |

( ஸ-SA; ஷ-SHA; ஜ-JA; ஹ-HA;)

கீழ்க்காணும் சொற்களில் உள்ள ஒ- வேறுபாட்டை G.D, B, F, Q, Z, X, முத-ய ரோமானிய எழுத்துக்களில் எழுதலாம்.

(1) ‘கருடன் ’-என்னும் வார்த்தையில் உள்ள“க”வை GA என்றும்

(2) ‘டமாரம் ’-என்னும் வார்த்தையிலுள்ள “ட”வை DA என்றும்

(3) ‘பர்மா ’- என்னும் வார்த்தையில் உள்ள “ப”வை BA என்றும்

(4) ‘காபி’- என்னும் வார்த்தையில் உள்ள “பி”யை FE என்றும்

(5) ‘க்யூ-வரிசை ’- என்னும் வார்த்தையில் உள்ள “க்யூ”வை Q என்றும்

(6) ‘ஜீரோ’-என்னும் வார்த்தையில் உள்ள “ஜீ ”யை ZE என்றும்

(7) ‘எக்ஸ்-ரே ’ -என்னும் வார்த்ததையில் உள்ள “எக்ஸ் ”யை X என்றும்

(8) ‘ஔவை ’ - என்னும் வார்த்தையில் உள்ள “ஔ ”யை ow என்றும் எழுதலாகும்.



ஆக 26 ஆங்கில (ரோமானிய) எழுத்துக்களைக் கொண்டே தமிழ் எழுத்துகளை எழுதலாகும். தினசரி ஆங்கில நாளிதழ்களில் தமிழ் சினிமாவின் பெயர்களை இவ்வாறே ரோமானிய எழுத்துகளில் எழுதி வருகின்றன. தமிழ் பெயர்களையும் இவ்வாறே ஆங்கில (ரோமானிய) எழுத்துகளில் எழுதி வருகின்றனர். எனவே இக்கருத்து ஒன்றும் புதியதல்ல.

தமிழில் எழுதப்பட்டு வரும் “சுருக்கெ்கழுத்து” ஆங்கில மொழிக்கு எழுதப்படும் சுருக்கெழுத்து “பிட்மான்ஸ் - ஷார்ட் ஹாண்டை” அடிப்படையாக கொண்டே அமைந்துள்ளது. தமிழை ரோமானிய எழுத்துகளில் மாற்றம் செய்வதால், தட்டச்சு செய்வது, கம்ப்யூட்டரில் பயன்படுத்துவது எளிது. மேலும் விரைவில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்படுவதினால் சமூக மாற்றம் ஏற்பட்டு, மூடநம்பிக்கைகள் அழிந்து ஜாதிப் பிரச்சினைகள் அழிந்து நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லும்.

உலகப் பொருளாதார வளாச்சிக்கு “கணிதம்” இன்றியமையாதது. கணித எழுத்துகள் சில நூற்றாண்டுகளுக்கு முன் அந்தந்த நாடுகளின் மொழியிலேயே இருந்தன. பாரதத்தி்ல் 18 மொழிகள் அதிகமாகப் பேசப்படுவதால் 18 மொழிகளில் கணித எழுத்துகள் இருந்தன. அம்மாதிரி எல்லா நாடுகளிலும் இருந்தன. எல்லா நாடுகளிலும் அராபிய கணித எண்களை (1,2,3, முதல் 9 வரை) பயன்படுதத்தத் தொடங்கியது முதல் கணிதவிய-ல் முன்னேற்றம் ஏற்பட்டது. பொறியியல், விஞ்ஞானம், மருத்துவம் வணிபம், வங்கி, முத-ய எல்லாவற்றிற்கும் கணிதம் அடிப்படையானதால் எல்லாத் துறைகளும் முன்னேற்றம் அடைந்தன. நாட்காட்டி, நேரம் கணித்துச் சொல்வது கூட அராபிய எண்களிலேயே உள்ளன.

“எண்ணும் எழுத்தும் கண்ணெணத் தகும்” என்னும் கூற்றுக்கு இணங்க “எண்கள்” எவ்வாறு உலகம் முழுதும் ஒரே மாதிரியாக இருக்கிறதோ, அம்மாதிரியே எல்லா மொழிகளுக்கும் ஒரே எழுத்து முறை இருப்பதே சாலச் சிறந்தது.

இளைய தலைமுறையினர் எழுத்துச் சீரமைப்பில் அதிக கவனம் செலுத்தினால் அவர்களது வாழ்க்கை இனிது வளம் பெறும்.

**National Integration through common spirit**

**“T**o promote national unity, we shall have to develop our lingua-franca and script....I am inclined to think that the distinction between Hindi and urudu is artificial. The most natural Lingua-franca would be a mixture of the two, as spoken in daily life, in portions of the country. The ultimate solution and the best solution

would be, the adoption of script, that would being us in line with the rest of the world. Perhaps, some of our countrymen will gape with horror, when they hear of the Roman Script, but I would beg of them to consider this problem from a scientific and historical point of view...."

"there is **nothing sacrosanct in a script.** The 'nagari script' know it to-day has passed through several phases of evolution. Besides most of the major provinces of India have their own script... In view of such diversity, the choice of a **uniform script for the whole of India should be made in a scientific and impartial spirit, free from bias of every kind.** I confess that there was a time, when I felt that it would be anti-national to adopt a foreign script. But my visit to Turkey in1934 converted me. I then realised for the first time **what a great advantage it was to have the same (Roman) script as the rest of the world".**

The above statement was issued by the Prince among partriots (so called by the Father of the Nation) i.e, Shri. Nethaji Subash Chandra Bose in Haripur Congress Session-1938. Sri. Nehtaji Subhash Chandra Bose was impressed with the way of Turkey has scrapped the cumbersome Arabic and taken the more easily printable Roman Script. Not only Sri. Nethaji Subhash Chandra Bose, but Mahatma Gandhi, Pandit Jawharlal Nehru. Moulana Abul Kalam Azad, Dr. Humayar Kabir, Dr. Zakir Hussain (former President of India). Sardar Hukum Sing, Frank Antony, Dr. P. Subrayon. Professor Sunit Kumar Chatterji, Professor K. Swaminathan, Dr. C.D. Deshmuk, Justice M.C. Setalvad, Actor Balraj Sahni, R.K. Narayan, Dr. S. Radhakrishnan (former President of India) Rt. Hon'ble Sri. V. Srinivasa Sastri, Sathayamurthi (Congress leader), Dr. Mulk-Raj Anand, Smt. Sarojini Naidu, C. Subramanian (former Finance Minister, Govt. of India) , Kushvant Singh, (former Editor, Illustrated Weekly) and so many intellectuals have declared that there should be common script.

Dr. Monicher K. Contractor in his little pamphlet "A Common Script for India" - and Mr. Daniel Latiff (The Roman Script for National Unity) have amply demonstrated the facility with which Roman Script can become our National Script.



Inspite of all the delebrations and even after lapse of 57 years of Independence, we the countrymen have not heeded the advice of the great leaders and patriots. Even to-day we are talking about national integration but we will not achieve it, since India is ruled by pseudo patriots. The present political leaders are only interested about their party and fame. They are not interested about the future of India.

I beg the present generation of young people not to allow India to go into pieces. The divisive forces with foreign aid are working for a further partition of India. I request the educated youth to work for the unity of India. Because of the youth force is a powerful one, to teach to lesson to the political bandits.

Are not the young people study English (in Roman Script) from Higher Secondary School? Is Roman script is new to India? The indians in all states knew it for the past three centuries. Do we not study advanced Science, Maths etc. In English (Roman Script)? (Are not the whole world accepted arabic numerals!) Then why we hesitate to accept the "Roman Script" for all of our national languages. There is to need for the fear of destruction of the language (mother-tongue). We need not waste our time for learning other languages when there is a Common (Roman Script).

The present scripts of Indian languages are not ancient one. Even the vedas are not originally written in Deva-Nagari Script. They are in vogue for the past few centuries only. All the European languages (French, German, Spanish, Swiss, Italian, Protugal, Greek) have adopted Roman Script. That is why they have advanced in science and technology.

The only way to take us to 22nd century is national integration through a common script (Roman Script) for all. Let us work for 'New India'. I request all the newspaper editors, magazines editors, T.V. Media, educational institutions and other editors and publisheres to kindly promote and dissimilate the thoughts to the great public to think about common script. I beg my countrymen to save "INDIA" from the divisive forces and build a society of good indian, free from linguistic fanatism and regional chauvinism.

(**Author**)

## இணைப்பு -1

# தமிழ் இசை

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதி காலத்தில் ஒரு தமிழ் சங்கம், கொற்கை (மேற்கு கடற்கரைப் பகுதியி-ருக்கும் பாண்டியன் தலை நகரம்) என்னும் பட்டணத்தில் நிறுவப்பட்டது. (கிமு 7200 முதல் கிமு. 6900) இக்காலத்தில் நெடும்பல்-யத்தனார், நெடும்பல்-யத்தை மற்றும் பரத முனிவர் அகத்தியர் முத-யோர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். அகத்தியர் சிவபெருமானிடம் கூத்து பற்றிய (தாண்டவம்) விவரங்களைக் கேட்டு தெரிந்து ஒரு நூல் செய்தார்.

(சிவ பெருமான் ஆடிய தாண்டவங்கள், ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம், திரிபுர தாண்டவம், காளி தாண்டவம், சம்ஹார தாண்டவம், பஞ்சகிருத்ய தாண்டவம், ஆனந்த சௌந்தர்ய தாண்டவம் அற்புத தாண்டவம், அநவரத தாண்டவம், பிரளய தாண்டவம், முத-யன) .

அகத்தியரிடம் பாடம் கேட்ட பரத முனிவர் கூத்து நூல் என்னும் நூலை தமிழில் எழுதினார். இதுவே பரதம் எனப்படும் (பாவம், ராகம், தாளம் அதாவது அபிநயம், இசை தாளம் என்பவற்றின் முதலெழுத்துகள் ப,ர,த, என்னும் எழுத்துக்களே பரதம். பரதக் கலை சொல்லாக உருவெடுத்தது).

வெண்டேர் செழியன் என்னும் பாண்டியன் காலத்தில் தமிழ்-இடைச்சங்கம் (கிமு.6805 முதல் கிமு.3105) கபாட புரத்தில் நிறுவப்பட்டது. இக்காலத்தில் அகத்தியர் வழிவந்த சிகண்டி என்னும் முனிவர், அநாகுலன் என்னும் பாண்டியனுக்கும், திலோத்தமைக்கும் பிறந்த சாரகுமாரன் என்னும் பாண்டியன் பொருட்டு ‘இசை நுணுக்கம் ’-என்னும் தமிழ் நூலை இடைச் சங்கத்தில் அரங்கேற்றினார். மேலும் இடைச்சங்கத்தில் இறவா இசை வல்லுநரான சிறுபாண்டரங்கனும் உறுப்பினராக இருந்தார். எனவே இசை நுணுக்கம், பரதக் கலை முத-யன தமிழ் - இடைச் சங்க காலத்திலேயே (கிமு3105) புழக்கத்தி-ருந்தது எனக் கொள்ளலாகும். இனி தமிழ் - இசை பற்றி கீழே விவரம் தரப்படுகிறது.

**ராகம் :**

இசை எழு வகையான சுரத்தில் அறியப்பட்டது, (மயில், காளை, ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை முத-ய பிராணிகள்



பறவைகள் குரல் ஒ-யை வைத்து நிர்மாணிக்கப்பட்டது) இவற்றிற்கு குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, நாவாய்துத்தம் எனப் பெயரிடப்பட்டது.

1. ஆ - குரல் - ச - (மயில்)
2. ஈ - துத்தம் - ரி - (காளை)
3. ஊ - கைக்கிளை - க -(வெள்ளையானை)
4. ஏ - உழை - ம - (கொக்கு)
5. ஐ - இளி - ப - (குயில்)
6. ஓ - விளரி - த - (குதிரை)
7. ஔ - தாரம் - நி - (யானை)

(நாவாய் துத்தம்)

ஆ (ச) மற்றும் ஐ (ப) இவை இரண்டும் உருட்டல் இல்லாத ஸ்வரங்கள், மற்றைய ஸ்வரங்களை சற்று வித்யாசமாகவும், உருட்டலுடனும் (பிர்கா) இசைக்கக் கூடியது. ம(ஏ) என்பது சுத்த மத்திமம், பிரதி மத்யமம் என இரண்டு பிரிவானது. சுத்த மத்தியமம் 36, பிரதி மத்யமம் 36 ஆக 72 ராகங்களே மேளகர்த்தா ராகங்கள் எனப்படும். தமிழில் இந்த ராகங்களின் பெயர்கள் (ஆரோகணம், அவரோகணம் - மேலே உயர்த்துதல், கீழே இறக்குதல் என்னும் விததியாசங்களில்ʼ அமைந்தவை) கீழே கண்டவாறு இருந்தன.

| | தமிழ் பண்கள் | தற்போது வழங்கப்பட்ட பெயர்கள் |
|---|---|---|
| 1. | புறநீர்மை | பூபாளம் |
| 2. | பழம் பஞ்சரம் | சங்கராபரணம் |
| 3. | பஞ்சமம் | ஆஹிரி |
| 4. | வியாழக் குறிஞ்சி | சௌராஷ்ட்ரம் |
| 5. | சீகாமரம் | நாதநாமக்கிரியை |
| 6. | நட்டபாடை | கம்பீரநாட்டை |
| 7. | தக்கேசி | காம்போதி |
| 8. | சதாரி | பந்துவராளி |
| 9. | கௌசிகம் | பைரவி |
| 10. | செந்துருத்தி | செஞ்சுருட்டி |
| 11. | கொல்- | நவ்ரோஜ் |
| 12. | மேகராக் குறிஞ்சி | நீலாம்பரி |
| 13. | செவ்வழி | யதுகுலகாம்போதி |
| 14. | இந்தளம் | ஹிந்தோளம் |
| 15. | செம்பாலை | தீர சங்கராபரணம் |
| 16. | படுமலைப்பாலை | கரஹரப்பிரியா |
| 17. | அரும்பாலை | கல்யாணி |

இவை தவிர கொல்- கௌபாணம், தக்கராகம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம், பஞ்சரம் குறிஞ்சி முத-ய பண்களின் பெயர்கள் எந்த ராகத்தை தற்போது குறிக்கிறது. மீதமுள்ள தமிழ் பண்களின் பெயர்கள் யாவை என்பது பற்றி ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

மேலே குறிப்பிட்ட ஏழு ஸ்வரங்களை பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி முத-யவற்றின் சுவைக்கு உவமையாக கூறுவர். மேலும் மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவிரை, புன்னை முத-யவற்றின் சுவைக்கு உவமையாக கூறுவர். வெண்பாவிற்கு சங்கராபரணம், அகவலுக்கு தோடி, க-ப்பாவிற்கு பந்துவராளி, க-த்துறைக்கு பைரவி, தாழிசைக்கு தோடி, விருத்தத்திற்கு - காம்போதி, மத்யமாவதி, கல்யாணி, உலாவுக்கு சௌராஷ்ட்ரம், தேவாரத்திற்கு - பூபாளம் முத-யவற்றை அமைத்து பாடுவர். இரக்கம் ஏற்பட வராளி, மகிழ்ச்சி ஏற்பட காம்போதி, சாவேரி, தன்யாசி, யுத்தத்திற்கு நாட்டை, முத-ய ராகங்களில் பாட்டுகள் பாடுவர். காலை வேளையில் பூபாளம், ஹிந்தோளம், ராமக-, தேசாக்ஷரி நாட்டை முத-ய ராகங்களிலும் உச்சி வேளைகளில் சாரங்கா, தேசாக்ஷரி மாலைவேளையில் கல்யாணி, காபி, காம்போதி, கல்யாணி ராகங்களிலும் நடு யாமத்தில் ஆஹிரி ராகத்திலும் பாட்டுக்கள் பாடுவர்.

தமிழிசையில் முக்கியமாக புல்லாங்குழல், யாழ், (வீணை) நாதஸ்வரம் மகுடி முத-ய இசைக்கருவிகளை தமிழர்கள் பயன்படுத்தினர். இதில் யாழ் இசை, புல்லாங்குழல் இசை தெய்வீகமானதாக கருதப்பட்டது. புல்லாங்குழல் இசைப்பதில் அம்பாள், முருகன், கண்ணன் முத-ய தெய்வங்கள் சிறப்பானவர்கள். யாழ் இசைப்பதில் சிவபெருமான் (தக்ஷிணாமூர்த்தி) அம்பாள், கலைவாணி, நாரதர், தும்புரு, வெங்கடேசப் பெருமாள், வினாயகர், மீனாட்சி, ஆஞ்சநேயர் முத-ய தெய்வங்களும், அகத்தியர், ராவணன், போன்றவர்கள் சிறப்பானவர்கள்.

தமிழ் இசைக்கு பேரியாழ் (21 நரம்புகள்) மகரயாழ் (17 நரம்புகள்) சகோட யாழ் (11 நரம்புகள்) செங்கோட்டியாழ் (7 நரம்புகள்) ஆருளி பல்-யம், முத-ய பல விதமான வீணைகளும் அம்பாளுடைய வீணைக்கு வல்லபி, சரஸ்வதி வீணைக்கு மாணிக்கம், நாரதர் வீணைக்கு மகதி என்றும் பெயர்கள் உண்டு.

யாழின் உறுப்புகள், கோடு, ஆணி, பத்தர், மாடகம், தந்திரி முத-யன. யாழின் தொழில்கள் பண்ணல் (இளை, கிளை, பகை, நட்பு-நரம்புகளை மாத்திரை அளவு அறிந்து மீட்டுதல்) பரிவட்டணை (மீட்டிய நரம்புகளை விரல்களால் கரணம் செய்தல்) ஆராய்தல்



(ஆரோகணம், அவரோகணம் செய்து இசைத்தல்) தைவரல் (நரம்புகளை ஆணியால் முறுக்கி சுருதி ஏற்றுதல்) செலவு ஆளத்தி ஆலாபனம் செய்தல்) வினையூட்டு (பாட நினைத்தபடி விரல்களால் தூண்டி சத்தம் எழுப்புதல்) கையாழ் (இன்பமாக புதுக்கற்பனைகளை இசைத்தல்) குறும்போக்கு (வார்த்தல், வடித்தல், உந்தல், ஊழ்த்தல் முத-யன)

வார்த்தல் - சுண்டு விரலால் இசைத்தல், வடித்தல் -சுட்டு விரல் பெருவிரலால் கூட்டி இசைத்தல், உந்தல் - நரம்புகளை தெரிந்து இசை எழுப்புதல், ஊழ்த்தல் - ஒன்றிடை இரண்டிடையாக நரம்புகளை தெரித்தல், யாழினது இருக்கைகள் 9 வகை (பதும முகம், உற்கடிதம் ஒப்படி இருக்கை, சம்புடம், சுயமுகம், ஸ்வஸ்த்திகம், தனிப்புடம், மண்டியம், ஏகபாதம்) .

இவ்வாறு யாழிசைக்கு தமிழில் பல இலக்கண நூல்கள் இருந்தன. இனி இசைக் கேற்ப நாட்டிய மாடுதல் (கூத்து) பற்றி கூறுவோமாக.

**பாவம்:**

கூத்தன், அம்பலக் கூத்தன், நடராஜன் என்று சிவபெருமானை கூறுவர். தமிழ் நாட்டில் ஐந்து நடன சபைகள் இருப்பதே, தமிழர்கள் எவ்வாறு நடனக்கலையை போற்றி வந்தனர் என்பதற்கு சான்றாகும். (சிதம்பரம், மதுரை, திருநெல்வே-, குற்றாலம், திருவாலங்காடு, பொன்னம்பலம், வெள்ளியம்பலம், தாமிர அம்லம், சித்திர அம்பலம், இரத்தின அம்பலம் என ஐந்து நடராஜரின் தலங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. சிவபெருமான் தவிர மற்றைய ஹிந்து தெய்வங்களும் நடனம் ஆடியுள்ளதாக தமிழிலக்கியங்கள் கூறுகின்றன.

பாண்டரங்கம் சிவபெருமான் வேதங்களை விளக்கி ஆடிய நடனம் (6 உறுப்புகள்) கொட்டி சிவபெருமான் திரிபுரம் எறிந்த போது ஆடிய நடனம் (4 உறுப்புகள்) குடை-முருகவேள் சூரபதுமனை அழித்தபோது ஆடிய நடனம் (4 உறுப்புகள்) துடி-முருகவேள் நடனம் (5 உறுப்பகள்) மரக்கால்-துர்கையின் நடனம், அவுணர்களை அழித்து ஆடியது (4 உறுப்புகள்) பேடு-மன்மதன் ஆடிய நடனம் (4 உறுப்புகள்) அல்-யம்-கண்ணன்-கம்சனின் யானை குவலாலய பீடத்தை வென்றபோது ஆடிய நடனம் (6 உறுப்புகள்) குடம்-கண்ணன், பாணாசுரனை வென்ற போது ஆடிய நடனம் (5 உறுப்புகள்) கண்ணன் ஜராசந்தனைக் கொன்றபோது ஆடிய நடனம் (5 உறுப்புகள்) பாவை-திருமகள் அவுணர்களை அழித்தபோது ஆடிய நடனம் (2 உறுப்புகள்) வினாயகர் கூத்து கடையம்-இந்திராணி நடனம், துடி-சப்தமாதர் ஆடிய நடனம், குரவை-கூட்டமாக கை கோத்து ஆடல், துணங்கை-முடக்கிய கைகளுடன் ஒற்றியாடல், வெறி-வேலனுடல் வட்டணை ஒற்றறுத்தல், கொம்மை(கும்மி) கைகுவித்து கொட்டி ஆடல்,

குஞ்சிதம்-குந்தி நின்று ஆடுதல், குடந்தம்-கைகூப்பி மெய்கொட்டி நிற்றல் இவ்வாறு பரதக்கலையில் 108 விதமான ஆடல்கள் பற்றி தமிழ் நூல்கள் கூறுகின்றன. பாவம் 10 வகை தலையசைவுகள், கரவகை49 வகை அசைவுகள், பாதம் 10 வகை அசைவுகள், கண்கள் 7 வகை அசைவுகள், முகபாவம் 9 வகை (நவரசம்) வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சமநிலை அருவி 6 வகை சுழன்றாடுதல் இவ்வாறு பரதக்கலை இலக்கணம் கூறுகிறது. மேலும் நடனம் (கூத்து) அகக் கூத்து, புறக் கூத்து என இரு வகைப்படும். சாந்திக் கூத்து, சொக்க கூத்து, மெய் கூத்து, அவிநயக் கூத்து, நாடகம், விநோதக் கூத்து, குரவைக் கூத்து, கழாய்க் கூத்து (க-நடம்) , குடக் கூத்து, கரணம், வசைக் கூத்து (விதூகக் கூத்து - 7 வகை) வென்றிக் கூத்து கிராமிய நடனமாக பு-யாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், கரகாட்டம், புகழ் கூத்து, வாகை கூத்து, சாக்கை கூத்து, துணங்கைக் கூத்து முத-ய கூத்துகள் பற்றி கூத்து நூல்களில் விவரமாக கூறப்பட்டுள்ளன. நடன இலக்கணம், சயந்தம், முறுவல், பரதம், பஞ்ச பாரதீயம், பரத சேனாபதியம் என ஐவகைப்படும். நடனமாடுபவர்களை விற-, கூத்தி, பாடினி, பொருநர், கூத்தர், சோடியர் என அழைப்பர். நடனமாடுபவர்களுக்கு, தலைக்கோல்-அரிசை, தலைக்கோ- முத-ய பட்டங்கள் விருதுகள் வழங்கப்பட்டன.

நடனம்(கூத்து) ஆடுவதற்கு தாள வாத்தியங்கள் மிகவும் அவசியம். சிவபெருமானின் ஆடலுக்கு நந்தி மத்தளம் வாசித்தாக புராணங்கள் கூறுகின்றன. தமிழர்கள் அநேக தாள வாத்தியக் கருவிகளை பயன்படுத்தியதாக தமிழிலக்கியங்கள் கூறுகின்றன. அவை வருமாறு.

தடாரி, கிளை, பறை, மத்தளம், வீர முழவு, முரசு, பம்பை, கொட்டு, உடுக்கை, முருடி, திண்டி, தவில் (உறுமி, மேளம், நையாண்டி மேளம்) பேரிகை, படகம், குடுக்கை, இடக்கை சல்-கை, திமிலை, குட முழா, தக்கை, நெய்தற்பறை, பன்றிப்பறை, கணப்பறை, டமருகம், தண்ணுமை, அந்தரி, சந்திரவலையம், மொந்தை முரசு, தமுக்கு, கண் விடு தூம்பு, நிசானம், பானை (கடம்) துடுமை, சிறுபறை தல்-ப்பறை, மறக்கால் பறை, கடிப்பறை, அடக்கம், தகுணிச்சம், விரரேறு பாகம், உபாங்கம், நாழிகைப் பறை, நாட்பறை, துடி, பெரும்பறை, கரடிகை, டிண்டிலம், தந்துபி, தூரியம், சேகண்டி, கிண்ணாரம், திமிலம் முத-ய பல தாள வாத்தியங்கள் பற்றி தமிழிலக்கியங்கள் கூறுகின்றன.

சிலப்பதிகாரத்தில் கானல்வரி, வேட்டுவ வரி, கந்துக வரி, ஊசல் வரி, வள்ளப்பாட்டு, குன்றக் குறவை, ஆய்ச்சியர் குரவை, குறிஞ்சிப் பற்று, காவடி சிந்து முத-யன பற்றி கூறுகிறது. இந்திர



காளீயம், பஞ்ச மரபு முத-ய இசை நூல்கள் தமிழில் அக்காலத்தில் இருந்தன. இடைச்சங்கம், கடற்கோளால் அழிந்த பிறகு, பாண்டியர் வடபுலம் சென்று கங்கை கரையில், காந்தார (Afghanisthan) தேசத்திலும் குடியேறி ஆட்சி அமைத்து அங்கே இக்கலைகளைப் பரப்பினர். தமிழ் நாட்டில் பௌத்தர்கள், சமணர்கள் காலத்தில் இக்கலைகள் வழக்கொழிந்தன. பின்னர் திருஞானசம்பந்தர் (கிபி634-650) , அருணகிரிநாதர் (கிபி1422) முத-யோர் மீண்டும் தமிழ் இசை பரப்பினர். புரந்தர தாஸர் காலம் கிபி 1484-1564. மேற்கூறிய கருத்துக்களின் படி தமிழ் இசை தொன்மையானது என்பது அறியலாகும். இது தமிழர்கள் பெருமை படக்கூடியதாக அமைகிறது. பரதக் கலையை பின்பற்றி, கதகளி, குச்சிபுடி, ஒரியா முத-ய நடனங்கள் பின்னர் தோன்றியவையே.

**தாளம்**

பாவம், ராகம் பற்றிய விளக்கங்கள் மேலே தரப்பட்டன. தாளம் பற்றிய விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன. பாவம், ராகம் இரண்டிற்கும் காலப் பிரமாணம் செய்து, அதற்கேற்ப வாத்தியக் கருவிகளை ஒ-க்கச் செய்வது பக்க வாத்தியங்களின் கடமை. சிவபெருமான் நாட்டியம் ஆடும்போது அவரது முகக் குறிப்புகள், அங்க அசைவுகளை நோக்கி நந்தி மத்தளம் அடித்தார். சிவபெருமானின் ஐந்து முகங்கள் அவைகள் காட்டிய குறிப்புகள் அதற்கேற்ப நந்திபகவான் மத்தளத்தில் எழுப்பிய ஓசைகளின் பெயர்கள் வருமாறு.

| வ.எண் | முகம் | தாளம் பெயர் | உபதாளம் பெயர் |
|---|---|---|---|
| 1. | ஈசானம் | உற்கடிதம் | ஆதிதாளம் |
| 2. | தத்புருஷம் | சம்பத்து வேட்டம் | பார்வதிலோசனம் |
| 3. | அகோரம் | சட்பிதா புத்ரிகம் | குடுக்கம் |
| 4. | வாமம் | சசசற்புடம் | சிங்கணத்தம் |
| 5. | சத்யோஜாதம் | சாசந்புடம் | திரிமாத்திரை |

ஒரு சில நூல்களில் தாளங்கள் 6 வகையென்றும் (அங்க தாளம், உபாங்க தாளம், பங்க தாளம், விபாங்க தாளம், சுத்த தாளம், அனுதாளம்) சிலவற்றில் 7 வகை யென்றும் (துருவ தாளம், அடதாளம் ஏகதாளம், த்ருபுட தாளம், ரூபக தாளம், சம்பபை தாளம், மட்டிய தாளம்) மற்றும் சிலவற்றில் 9 தாள வகையென்றும் (அரும தாளம், சமதாளம், சித்தி தாளம், நிவர்த்த தாளம், துருவ தாளம், சயதாளம், படிய தாளம், விட தாளம், அரிதாளம்) கூறப்பட்டுள்ளன. அருணகிரி நாதர் 108 வகையான தாளங்களில் பாட்டிசைத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

காலப் பிரமாணம் என்பது 9 வகையாக கூறப்பட்டுள்ளது.

(அஷரப் பிரமாணம் என்றும் கூறுவர். அவை வருமாறு)

| | | | |
|---|---|---|---|
| 1. | கணம் | காலம் | (1/32 மாத்திரைகள்) |
| 2. | 8 கணம் | காஷ்ட்டை | (1/16 மாத்திரைகள்) |
| 3. | 8 காஷ்ட்டை | நிமிடம் | (1/8 மாத்திரைகள்) |
| 4. | 8 நிமிடம் | துடி | (1/4 மாத்திரைகள்) |
| 5. | 2 துடி | துரிதம் | (1/2 மாத்திரைகள்) |
| 6. | 2 துரிதம் | லகு | (1 மாத்திரைகள்) |
| 7. | 2 லகு | குரு | (2 மாத்திரைகள்) |
| 8. | 3 லகு | புலுதம் | (3 மாத்திரைகள்) |
| 9. | 2 குரு | காகபதம் | (4 மாத்தரைகள்) |

காலப் பிரமாணத்திற்கு அடுத்தபடி மார்கம் 6 வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | தக்கணம் | 8 மாத்திரைகள் கூடிய களை |
| 2. | வார்திகம் | 4 மாத்திரைகள் கூடிய களை |
| 3. | சித்திரம் | 1 மாத்திரைகள் கூடிய களை |
| 4. | கித்திரதரம் | 1/2 மாத்திரைகள் கூடிய களை |
| 5. | அர்த்த சித்திரம் | 1/4 மாத்திரைகள் கூடிய களை |
| 6. | அதி சித்திரம் | 1/8 மாத்திரைகள் கூடிய களை |

அடுத்து தாளப் பிரமாணத்தில் கூறப்படுவது கிரியை. இது இரண்டு வகை 1. தேசிகம் (துர்வகம், சர்ப்பிணி, கிருடயை, பதுமினி, விவர்ச்சிதை, பதாகை, விட்சிப்பத்தம், பதிதம் என 8 வகையாகவும்) 2. மார்க்கம் என்பது 8 வகை (நிசத்தம், ஆவாபம், நிட்கிராமம், விட்சேபம், பிரவேசம் என நான்காகவும் சசத்தம், தருவம், சம்மியம், கானம், சந்திபம் என நான்காகவும்) எனவும் கூறப்படுகிறது.

கிரியை-க்கு அடுத்து அங்கம் 6 வகைப்படும். அவையாவன பிற 1/4 மாத்திரை, மதி 1/2 மாத்திரை, களை 1 மாத்திரை, வில்-2 மாத்தரைகள், பாம்பு-3 மாத்திரைகள், புள்ளடி -4 மாத்திரைகள்.

அங்கம் என்பதை அடுத்து ஜாதி 5 வகைப்படும். அதாவது சதுஸ்ரம், த்ரிசிரம், மிசிரம், கண்டம், சங்கீரணம் முத-யன.

களை என்பது மூன்று வகை (1 களை, 2 களை, 3 களை)
இலயை என்பது மூன்று வகை (விளம்பனம், மத்திமம், துரிதம்)
யதி (சமம், விடமம், மிருதங்கம், வேத மத்திமம், கோபுச்சம், சுரோதோவகம்) என 6 வகைப்படும்.

(மேற்குறித்த விவரங்கள் குறித்து குருவிடம் கேட்டுத் தெரிந்து அப்பியாசம் செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் பாவம், ராகம், தாளம் குறித்து மிக நுணுக்கமான முறையில் பல நூறு வருடங்கள் முன்பேயே விரிவாக நூல்கள் செய்யப்பட்டுள்ளன. தேவகானம், மனுஷகானம் என தாள வகைகள் மேலும் மிக மிக நுணுக்கமான முறையில் பிரிக்கப் பட்டுள்ளன. உலகத்தில் எந்த தேசத்திலும் இவ்வளவு அரிய விஷயங்கள் கிடையாது.)



## இணைப்பு -2

# தமிழ் ஜோதிடம்

தமிழ் மக்கள் இப்பூமி, கிரகங்கள், சூரியன், நட்சத்திரங்கள் (அண்டம், பேரண்டம்) முத-யன பற்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்னரே தெரிந்து வைத்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன. வட பாரதத்தில் உசீநர தேசத்தை ஆண்ட சோழன் சிபிச்சக்கரவர்த்தி அவனது பேரன் கேகயன் (கேகய தேசத்தை ஸ்தாபித்தவன் ஆப்கானிஸ்தான் முதல் வட இந்தியாவின் பெரும்பகுதிகள்) அவனது வழி வந்த "தூங்கு எயிலெறிந்த தொடிதோட் செம்பியன்" காலத்தில் வட பாரதத்தில் பூகம்பத்தால் பேரழிவு ஏற்பட்டது. இது சூரிய வமிசத்து அரசன் ருதுபர்ணன் காலத்தில் (நளன்-நிஷத தேச அரசன்) நிகழ்ந்ததாக கருதப்படுகிறது. சிந்து ராஜ்யத்தின் பெரும்பகுதி கட-ல் மூழ்கின. அவ்வாறே பாண்டி நாட்டின் பல பகுதிகள் (வீரபாண்டியன் ஆட்சியில்) கட-ல் மூழ்கின. அப்போது அகத்திய முனிவர் (7 ரிஷிகளில் ஒருவர்) செம்பியனை தென்னாட்டிற்கு அழைத்து வந்து, பூம்புகார் பட்டிணம் நிறுவச் செய்து, இந்திரனுக்கு விழா எடுக்கச் செய்தார்.

அகத்திய முனிவர் சோழ அரசனுடன் தென்னாடு வந்த காலத்தை கணக்கிட்டு சப்த ரிஷிகள் ஆண்டு கணக்கிடப்பட்டது. (அதாவது கிமு21.11.8576 வெள்ளிக்கிழமை) மக நக்ஷத்திரத்தில் சப்தரிஷி மண்டலம் பிரவேசித்ததால் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு எனக் கருதப்படுகிறது.

வான மண்டலத்தில் காணப்படும் ஏழு நட்சத்திரங்கள் கொண்ட கூட்டம் 27 நட்சத்திரங்களில் ஒன்றான மக நக்ஷத்திரத்திற்கு நேரே தெரிந்த நாள். சூரிய மண்டலத்தில் புதன், செவ்வாய், பூமி (சந்திரன் உட்பட) குரு, சுக்கிரன், சனி முத-ய கிரகங்களுக்கு வெளியே காணப்படும் நக்ஷத்திரக் கூட்டங்கள் 27 ஆக பிரித்து பார்க்கப்பட்டன. பூமி சூரியனை சுற்றி வரும் நாட்கள் 360 எனவும் (60 நாட்கள் கொண்ட பருவம்) மாதம் 30 நாட்கள் ( சந்திரனைக் கொண்டு கணக்கிடப்பட்டது) வாரம்(7), திதி, பகல், இரவு நாழிகை 60 முத-யன கணக்கிடப்பட்டன.

சூரிய மண்டலத்திற்கு வெளியே காணப்பட்ட நக்ஷத்திரங்களின் தமிழ் பெயர்கள் வருமாறு :

| வ.எண் | தமிழ் பெயர் | | மொத்த நக்ஷத்திரங்கள் | |
|---|---|---|---|---|
| 1. | குதிரைத் தலை | (அஸ்வதி) | 5 | |
| 2. | அடுப்பு | (பரணி) | 3 | |
| 3. | தீபம் (ஜோதி) | (கார்த்திகை) | 6 | |
| 4. | ஊற்று | (ரோகிணி) | 12 | |
| 5. | தேங்காய் கண் | (மிருகசீரிஷம்) | 3 | |
| 6. | மணி | (திருவாதிரை) | 1 | |
| 7. | ஓடம் | (புணர்பூசம்) | 6 | |
| 8. | புடலம்- பூ | (பூசம்) | 1 | |
| 9. | அம்மி | (ஆயில்யம்) | 4 | |
| 10. | மூடநகம் | (மகம்) | 4 | |
| 11. | கட்டில் (கணை) | (பூரம்) | 2 | 4 கால்கள் |
| 12. | கஷ (உத்திரம்) | (உத்திரம்) | 2 | |
| 13. | விளக்கு (கை) | (ஹஸ்தம்) | 5 | |
| 14. | இரண்டு கண்கள் | (சித்திரை) | 2 | |
| 15. | மணி | (ஸ்வாதி) | 1 | |
| 16. | பாழ்துறவு (முறம்) | (விசாகம்) | 6 | |
| 17. | முடைப்பான் | (அனுஷம்) | 6 | |
| 18. | ஈட்டி (துளங்கொள்) | (கேட்டை) | 4 | |
| 19. | காளம் (குருகு) | (மூலம்) | 4 | |
| 20. | உடைகுளம் (கட்டில்) | (பூராடம்) | 2 | 4 கால்கள் |
| 21. | கடைகுளம் (கட்டில்) | (உத்திராடம்) | 2 | |
| 22. | முக்கோல் | (திருவோணம்) | 3 | |
| 23. | சக்கரம் | (அவிட்டம்) | 6 | |
| 24. | தவிட்டுக் கூட்டம் | (சதயம்) | 1 | |
| 25. | நாழி (கட்டில்) | (பூரட்டாதி) | 2 | 4 கால்கள் |
| 26. | முரசு (கட்டில்) | (உத்திரட்டாதி) | 2 | |
| 27. | படகு (தோணி) | (ரேவதி) | 12 | |
| | | | 108 | |

மேற்குறிப்பிட்ட 108 நக்ஷத்திரங்களே முக்கியமானவை என்று கருதப்பட்டதால் (108 என்னும் எண்ணுக்கு விசேக்ஷ முக்கியத்துவம் அளிக்கப்பட்டது) . இவற்றைத் தவிர சப்தரிஷி மண்டலம் துருவ நக்ஷத்திரம், நாக வீதி, விரோசனி, அகஸ்தியன், அரியமான், ஔரவன், திரிசங்கு, ஆகுலன், ஜோடிப்பறவை, கபி (குரங்கு) அபிஜித் என்னும் நக்ஷத்திரங்களும் அறியப்பட்டன.

சப்தரிஷி மண்டலம் ஒரு நக்ஷத்திரத்தை கடக்க 100 வருடங்கள் ஆகும் என்றும் 27 நக்ஷத்திரங்களை சுற்றிவர 2700 வருஷங்கள் ஆகும் என்றும் இரண்டு சுழற்சிக்குப் பின்



(2700+2700=5400) 75 வருடங்கள் கூட்டி கணக்கை சீர்படுத்த வேண்டும் (மொத்தம் 5475 வருஷங்கள்) என்றும் கூறப்பட்டது.

ஒரு வருடத்தை அதாவது 360 நாட்களை 30தால் வகுத்து 12 ராசிகள் கணக்கிடப்பட்டன. அவை வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தகர் | மேஷம் | 2. | குண்டை | ரிஷபம் |
| 3. | இரட்டை | மிதுனம் | 4. | அஸ்வன் | கடகம் |
| 5. | ஆளி (யாளி) | சிம்மம் | 6. | மடந்தை | கன்னி |
| 7. | தராக்கு | துலாம் | 8. | தேன் | விருச்சிகம் |
| 9. | வில் | தனுசு | 10. | சுறா | மகரம் |
| 11. | குடம் | கும்பம் | 12. | மீன் | மீனம் |

108 நக்ஷத்திரங்களை 27 கூட்டங்களாக பிரித்தால் 4 (பாதம்) ஆகிறது. 108 நக்ஷத்திரங்களை 12 ஆல் (ராசி) வகுத்தால் 9 பாதங்கள் ஆகிறது. ஆக ஒரு ராசிக்கு 9 பாதம் (21/4 நக்ஷத்திரம்) ஆகிறது. இவ்வாறு, நக்ஷத்திரங்கள், கிரகங்கள், பிறந்த ஊர், பிறந்த நேரம் இவைகளைக் கொண்டு பிறந்த மனிதர்களின் வாழ்க்கை எப்படி அமையும் எனக் கணக்கிடப்பட்டு ஜோதிட நூல்கள், நாடி ஜோதிடம் முத-யன எழுதப்பட்டன.

தமிழில் உள்ள சோதிட நூல்கள் வீரமகேஸ்வர உள்ளமுடையான், உள்ளமுடையான், குமாரசாமீயம், சாதக-அலங்காரலம், சாதக சிந்தாமணி, செகரராஜசேகரம், சந்தான தீபிகை, கார்த்திகேயம், அம்மணீயம், சிநேந்திர மாலை, விதான மாலை, பு-ப்பாணி, அனுபவ சுந்தர சேகரம் முத-யன. நாடி சோதிடத்தில் கௌமார நாடி, அகத்திய நாடி, கௌசிக நாடி, வசிட்ட நாடி, விசுவாமித்திர நாடி முத-யன.

(மேற்குறிப்பிட்ட நூல்களை ஒட்டி வடமொழியில் பார்கவம், கார்க்கீயம், பராசரம், பாரத் வாஜம், பிரஹஸ்பதீயம், ஆர்ஷயம், பௌர்சூயம், சித்தாந்த சிரோமணி, சூர்ய சித்தாந்தம், சுகோள சித்தாந்தம், ஆர்யபட்ட சித்தாந்தம், வராகமிகிரரின் சோதிட நூல்கள் எழுதப்பட்டன.)

ராமாயணத்தை எழுதிய வால்மீகி முனிவர் ஸ்ரீராமன் பிறந்தபோது (கிமு7000 ) வானில் எந்த ராசியில் எந்தெந்த கிரகங்கள் இருந்தன எந்த நக்ஷத்திரத்தில் (புனர்வசு) ஸ்ரீ ராமன் பிறந்தார் என்று கூறியுள்ளார்.

ஸ்ரீமத் பாகவதம், ஹரிவம்சம், மகாபாரதம் முத-ய நூல்களில் கண்ணன் பிறந்தபோது (ரோகிணி) வானில் எந்தெந்த கிரகங்கள் எந்தெந்த ராசியில் இருந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீகிருஷ்ணர் பிறப்பு (கிமு 24-7-3228கி.மு) மற்றும் க-யுகம் பிறந்த நாள் இவற்றை கணக்கிட்டு ஹிந்து புராணங்கள் கூறுகின்றன.

## முழு நிலாவும் - தமிழ் மாதங்களும்

ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி (முழு நிலவு) ஒரு குறிப்பிட்ட நக்ஷத்திர மண்டலத்திற்கு நேராக இருப்பது போல பூமியின் இப்பகுதியில் உள்ளவர்களுக்குத் தெரியும். அதை வைத்துக் கொண்டு தமிழ் மாதங்களின் பெயர்கள் தோன்றின.

| | | | |
|---|---|---|---|
| 1. சித்திரை | - | சித்திரை | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 2. வைகாசிமாதம் | - | விசாக(பைஷாகி) | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 3. ஆனிமாதம் | - | அனுஷம்(ஆனுஷி) | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 4. ஆடிமாதம் | - | பூராடம்(பூர்வாஷாடா) | |
| | | (பூரம் உத்திராஷாடா) | நக்ஷத்திரத்தில் பெணர்ணமி தோன்றும் |
| 5. ஆவணி மாதம் | - | திருவோணம்(சிரவணம்) | |
| | | திரு ஓணம் | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 6. புரட்டாசி மாதம் | - | பூரட்டாதி(பரோஷ்டதா) | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 7. ஐப்பசி மாதம் | - | அஸ்வினி(ஆஸ்வாபுஜம்) | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| | | அற்பசி | |
| 8. கார்த்திகை மாதம் | - | கிருத்திகை | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 9. மார்கழி மாதம் | - | மிருகசீர்ஷம் | நக்ஷத்திரத்தில் பெணர்ணமி தோன்றும் |
| 10. தை மாதம் | - | பூசம் (புஷ்யம், தைஷ்யம்) | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 11. மாசிமாதம் | - | மகம் (மகம்) | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |
| 12. பங்குனி மாதம் | - | உத்திரம் (உத்திர பல்குனி) | |
| | | (பூர்வ பல்குணி) | நக்ஷத்திரத்தில் பௌர்ணமி தோன்றும் |

ஒரு வட்டத்தை 360 டிகிரிகளாக பிரித்தனர். ஒரு மாதத்தை 30 டிகிரிகளாக (30 நாட்களாக) பிரித்தனர். பூமியின் ஒரு சுழற்சியை (ஒரு வட்டம்) அதாவது முதற்நாள் சூரியோதயம் முதல் மறுநாள் சூரியோதயம் வரை பகல் 30 நாழிகை இரவு 30 நாழிகையாகப் பிரித்தனர். ஒரு நாழிகையை 60 வினாடிகளாகப் பிரித்தனர்.

பூமி நீளவட்டப் பாதையில் சுழல்வதால் ஒரு வருடத்திற்கு 365 நாட்கள் என்று கணக்கிட்டனர். திதி, (நாள்), நக்ஷத்திரம், யோகம், கரணம், ஒரை என்று நாட்களை கணக்கிட்டு பஞ்சாங்கம்



(ஐந்து அங்கங்கள்) தயாரித்து சோதிட சாஸ்திரத்தை ஏற்படுத்தினர். சோதிட சாஸ்திரம் என்பது குறிப்பிட்ட நாள், நக்ஷத்திரம், லக்கினம் இவற்றில் பிறந்தவர்களின் வாழ்க்கையை தொடர்ந்து ஆராய்ந்து, கண்காணித்து எழுதப்பட்டவையாகும். அனுமானத்தால், யூகத்தால் எழுதப்பட்டது அல்ல. அனுபவத்தால், ஏற்பட்ட நூல் சோதிட சாஸ்திரம் ஆகும்.

தமிழ் நூல்களில் ராகு, கேது என இரண்டு கிரகங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. (ராகு, கேது என்று கிரஹங்களே இல்லை என்று தற்போது வாதிடுகின்றனர்) உண்மையில் செவ்வாய் கிரஹத்திற்கும், வியாழன் கிரஹத்திற்கும் நடுவே இரண்டு கிரகங்கள் இருந்திருக்க வேண்டும். வானில் பெரிய அளவிலான தூமகேது (வால்-நட்சத்திரம்) பறந்து வந்து சூரியனை சுற்றி வரும்போது அதி-ருந்து பிரிந்து வந்த பெரிய கல் ராகு-கேது கிரகஹங்களின் மீது மோதவே அவை நிலை தடுமாறி ஒன்றோடு ஒன்று மோதி வெடித்துச் சிதறி ஒரு பாதைகளில் துகள்களாக செவ்வாய் கிரஹத்திற்கும் வியாழனுக்கும் நடுவே சுற்றிக் கொண்டிருக்கிறது. (ராகுவிற்கு மனித முகம் பாம்பு உடம்பு, கேதுவிற்கு பாம்புத் தலை மனித உடம்பு, பாற்கடல் கடையும்போது மோகினி ரூபத்தில் வந்த விஷ்ணுவால் இவ்வாறு தண்டிக்கப்பட்டனர் என்று புராணங்கள் கூறுகின்றன. ராகு, கேது என்ற பாம்புகள், சூரியனையும், சந்திரனையும் விழுங்குவதால் கிரகணங்கள் ஏற்படுகின்றன என்னும் கதை சீன தேசத்தி-ருந்து பாரதம் வந்த கதைகள். ஹிந்து புராணங்களில் அவ்வாறு கூறப்படவில்லை. இதே காலகட்டத்தில், வியாழன் கிரஹத்திற்கு அருகில் இருந்த சந்திரன் நிலை பெயர்ந்து பூமிக்கருகில் வந்து பூமியின் ஈர்ப்பு சக்திக்குள் விழுந்தது. சந்திரனின் உபகிரகமான புதன் சூரியன் அருகில் இழுத்துச் செல்லப்பட்டது. பூமியின் உபகிரகமான செவ்வாய் பூமியின் ஈர்ப்புச் சக்திக்கு வெளியே சென்று தனிபாதையில் சூரியனை வட்டமிட ஆரம்பித்தது. இதனாலேயே செவ்வாய் கிரஹகத்தை பூமியின் புதல்வன் என்றும், சந்திரனை தனி கிரஹம் என்றும், புதனை சந்திரனின் புதல்வன் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

(சூரியனின் ஒவ்வொரு கிரகமும் இருக்கும் தூரம், சூரியனை வட்டப்பாதையில் சுற்றும் நாட்கள் (பூமியின் நாட்கணக்கில்)

| வ.எண் | கிரகத்தின் பெயர் | மைல்கள் (லக்ஷத்தில்) | நாட்கள் □ □ நாட்கள் |
|---|---|---|---|
| 1. | சூரியன் | - | - |
| 2. | புதன் | 3.60 | 0 - 2 - 26 |
| 3. | சுக்ரன் | 6.72 | 0 - 7 - 13 |
| 4. | பூமி | 9.30 | 0 - 00 - 00 |
| 5. | செவ்வாய் | 14.17 | 1 - 10 - 17 |
| 6-7. | ராகு-கேது | - | - |
| 8. | வியாழன் | 48.39 | 11 - 10 - 10 |
| 9. | சனி | 988.72 | 29 - 5 - 16 |

(சந்திரன் பூமியை சுற்றும் நாட்கள் 27 நாட்கள்)

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பேயே தமிழர்களுக்கு இந்த விஞ்ஞான அறிவு இருந்திருக்க நியாயமில்லை என்று எண்ணத் தோன்றும். 'பரிபாட-லும்' இதர தமிழ்சங்க நூல்களிலும் இதற்கான ஆதாரங்கள் உள்ளன. அணு, பரமாணு பற்றிய விஞ்ஞான அறிவும் கிமு 1-ஆம் நூற்றாண்டிலேயே தமிழர்களுக்கு தெரிந்து இருந்தன.

மேலும் பல விவரங்கள் 'வானவர்கள்'என்னும் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு -3

## தமிழ் - மருத்துவம்

அகஸ்த்தியர் முதலான 18 சித்தர்கள், திருவள்ளுவர் முதல் இராம-ங்க அடிகளார் வரை தமிழில் "நோய்கள்" அதற்கான மூ-கைகள் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளனர். இந்நூல்களில் குறிப்பிட்டுள்ள மூ-கைகள் தமிழ் நாட்டில் கிடைக்கக் கூடியனவாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து தமிழர்கள் இந்த மருந்துகளை உபயோகப்படுத்தி வருகிறார்கள். அது பற்றிய விவரங்கள் வருமாறு

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடையும்போது கற்பக வருஷம், பாரிஜாதம், மூ-கைகள், கௌஸ்துப மணி மற்றும் தன் வந்திரி தெய்வம் ஏந்திவந்த அம்ருத கலசம் (சாவா-மருந்து) முத-யன பற்றி புராணங்கள் கூறுகின்றன.

மிதிலாபுரியில் நிமி என்னும் அரசன் வழியில் வந்த 'வேனன்' என்னும் அரசன் வாரிசு இல்லாது இறந்தவுடன் அவனது உட--ருந்து (தொடை) சில பாகங்களை எடுத்து உயிரணுக்களை உண்டாக்கி



அதி-ருந்து பிருது மஹாராஜனும் ஒரு பெண்ணும் பிறந்தனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

'ரத்த பீஜன்' என்னும் அரசன் துர்கை சண்டையிடும்போது அவனது உட--ருந்து ஒரு சொட்டு ரத்தம் விழ அதி-ருந்து புதிய 'ரத்த பீஜன்' உருவானான் என்று புராணங்கள் கூறுகின்றன. மஹாபாரதக் கதையில் காந்தாரி என்னும் அரசியின் வயிற்றில் ஒரு மாமிச பிண்டம் பிறந்தது. அதை நூறு துண்டுகளாக்கி நூறு பானைகளில் மூ-கைகளோடு வைக்க துரியோதனன் முதலான 100 பிள்ளைகள் பிறந்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

இராமாயணத்தில் இறந்து போன தசரத சக்ரவர்த்தியின் உடல் ஒரு மூ-கை எண்ணை கப்பறையில் பரதன் வரும்வரை பக்குவப் படுத்தப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும், ராவணனது மகன் இந்திரஜித்தினால் அடிபட்டு மயக்க நிலையில் இருந்த போது ஆஞ்சநேயர், துரோணகிரிக்கு பறந்து சென்று சஞ்சீவி மூ-கைகள் கொண்டு வந்த அவர்கள் உயிரைக் காப்பாற்றினார் என்றும் கூறப்பட்டள்ளது.

சிவபெருமானை வைத்யநாதன், மருந்தீஸ்வரர் என்று புராணங்கள் கூறுகின்றன. (வைத்தீஸ்வரன் கோவிலுள் மண் உருண்டையும், தைலமும் பிரஸாதமாக வழங்கப்படுகின்றன. இது பலவித வயிற்றுக் கோளாறுகளை போக்குகிறது) .

சிவபெருமானிடமிருந்து அகத்தியர் வைத்யசாஸ்திரத்தை தந்து தமிழில் நூல் இயற்றி தமிழர்களுக்கு போதித்தார். அகத்தியர் முதலான சித்தர்கள் செய்த வைத்ய நூல்கள் "சித்த வைத்யம்" (தமிழ் மருத்துவம்) எனப்படும்.

கடைச்சங்கத்துப் புலவர்களில் "மருத்துவராகிய நாம நாற்கவிச் சிறந்த தாமோதரனார்" வாழ்ந்ததாக சங்கநூல்கள் கூறுகின்றன. (வடமவண்ணக்கண் தாமோதரனார்) இவர் சேரன் செங்குட்டுவன் காலத்தில் வாழ்ந்த வைணவ அந்தணர். ருக், யஜுர், சாமம், மற்றும் வைத்ய சாஸ்த்திரம் பற்றி கூறும் அதர்வண வேதத்தை நன்கு அறிந்தவராக இருந்தார். (இதி-ருந்து பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பேயே மருத்துவம் பற்றிய விஞ்ஞான அறிவு தமிழர்களுக்கு இருந்தது எனத் தெரிய வருகிறது.) இனி சித்த வைத்யம் பற்றி விளக்கப்படுகிறது.

ஒரு குழந்தை பிறப்பிற்கு அந்த ஜீவனின் முற்பிறப்பில் செய்த தீவினை, நல்வினைத் தொடர்பாக அடுத்த பிறவி ஏற்படும்போது அந்த வாழ்க்கை எப்படி அமைய வேண்டுமோ அதற்கேற்ப கிரக

நிலைகள் கூடும்போது குழந்தை பிறக்கிறது. தாயும் தந்தையும் கூடும்போது குழந்தை பிறக்கிறது என்று சாதாரணமாகத் தோன்றுகிறது. தந்தையின் சுக்லத்தில் (விந்து) ஆயிரம், ஆயிரம் உயிரணுக்கள் தோன்றினாலும், ஏதாவது ஒரு உயிரணு மட்டுமே, தாயின் சுரோணிதத்தில் (சினை முட்டை) உள்ளே நுழைய முடிகிறது. மனிதர்களுக்கு உணவாகவும், மருந்தாகவும் பயன்படக் கூடிய தாவரங்கள் 9,500 என சித்தர்கள் கணக்கிட்டுள்ளனர். இவற்றில் மூ-கைகள் 7,500 என்றும் விஷமுறிவு மூ-கை 427. உணவாக பயன்படுபவை 1,900 என்றும், பிசின் (கோந்து) வகைகள் 300 என்றும், பூச்சிக் கொல்- மருந்தாகப் பயன்படுபவை 700 என்றும், மாட்டுத் தீவனமாகப் பயன்படுபவை 400 என்றும் கணக்கிட்டுள்ளனர். இவைகளை விளக்கி 4000த்துக்கு மேல்பட்ட ஓலைச் சுவடிகள் உள்ளன. மேலும் அதர்வண வேதம் (289 மூ-கைகள்) சுசுருத சம்ஹிதை (650 மூ-கைகள்) முத-யவற்றிலும் மூ-கைகளின் விவரங்கள் உள்ளன.

மருந்துகளுக்கு பயன்படும் மரங்கள் 168 என்றும் செடிகள் 207 என்றும், கொடிகள் 105 என்றும், புல்வகைகள் 13 என்றும் தமிழ் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. மரங்களைப் பற்றிக் கூறும்போது, இலைகள், பழங்கள், மரப்பட்டைகள், வேர்கள் எவ்வாறு மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன என்று வைத்ய நூல்கள் வழிகாட்டியுள்ளன. சில மரங்களி-ருந்து கிடைக்கும் பூ, பிஞ்சு, காய், பழம் முத-யவற்றை உணவாகவே உட்கொண்டால் சில வியாதிகள் கண்டிக்கும் என்றும் நூல்கள் கூறுகின்றன. மரங்களின் பெயர்கள் சிலவற்றை கீழே கூறுவோம்.

மா, பலா, வாழை, தென்னை, கறிவேப்பிலை, மலை வேப்பிலை, சர்க்கரை வேப்பிலை, மாதுளை, முருங்கை, அகத்தி, கல்யாண முருங்கை, நாரத்தை, எலுமிச்சை, இலந்தை, கொய்யா, புளி, கறிப்பலா, கிச்சி-, சீதா, விளா, நெல்-, அருநெல்-, கருநெல்-, கற்பகம், ஜாதிக்காய் மரம், தாளிக்காய் மரம், மாசிக்காய் மரம், பப்பாளி, சப்பாட்டா, முந்திரி.

மருந்து குணமுள்ள மரத்தின் பெயர்கள் (இலைகள்) வில்வம், மருதாணி, நொச்சி, வேம்பு, மலைவேம்பு, மின்னிலை, கறிவேப்பிலை, நாரத்தை, எலுமிச்சை போன்றவை இதர மரங்களின் பெயர்கள் வருமாறு. சந்தனம், அகில், இலவங்கம், தேவதாரு, இருவாட்சி, கொன்றை, மரமஞ்சள், பனை, தாளிப்பனை, வேல மரம், அரச மரம், ஆல மரம், அக்கு மரம், மருத மரம், வேங்கை, வன்னி,



புரசை, இலுப்பை, அழிஞ்சல், கடலழுஞ்சி, காஞ்சி, இலவம், முள் இலவம், வெட்பாலை, உசிலை, கடுக்காய், திரிம்பாலை, மலைப்பாலை, குடகப்பாலை, நன்முறுக்கு, காட்டு முறுக்கு, சூளப்பாலை, புன்னை , சரக்கொன்றை, ஈச்சமரம், பாக்கு, கமுகு, கூந்தற்பனை, புங்க மரம், குருந்த மரம், வாதம் (பருப்பு) மரம்

**கிழங்கு மூ-கைகள்**

இஞ்சி, மஞ்சள், சித்தரத்தை, வசம்பு, கஸ்த்தூரி மஞ்சள், கிச்சி-க் கிழங்கு, கோரைக் கிழங்கு, வெந்தயம், பூண்டு, வெங்காயம், சேனை, சேப்பங்கிழங்கு, உருளைக் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, தாமரைக் கிழங்கு, அமுக்கரா கிழங்கு, சக்கரை வள்ளி, மரவள்ளி, மகாளி, குமட்டிக் கிழங்கு, முள்ளங்கி, கருணைக் கிழங்கு, மாங்காய், இஞ்சி, வேர்க்கடலை.

**செடிகள்**

துளசி, சிறியா நங்கை, பெரியா நங்கை, நித்ய கல்யாணி, பொன்னார வரை, தும்பை, மருக்கொழுந்து, மரு, புதினா, ஓமவல்-, கற்பூரவல்-, திருநீற்றுப் பச்சிலை, சாமந்திப் பச்சை, மாசிப் பச்சை, கொத்துமல்-, களாக்காய், சுண்டைக்காய், மணத்தக்காளி.

**பூச்செடிகள், கொடிகள்**

தாமரை, அல்-, குவளை, மல்-, முல்லை, குண்டுமல்-, செம்பருத்தி, நந்தியாவட்டை, சாமந்தி, ரோஜா, சம்பங்கி, மர சம்பங்கி, வாடாமல்-, தாழம்பூ, மகிழம்பூ.

**மருந்துப் பொருட்கள்**

சுக்கு, மிளகு, திப்பி-, அரிசித்திப்பி-, வால்மிளகு, கடுக்காய், அரோகிணி கடுக்காய், பிருதிவி கடுக்காய், அமிர்த கடுக்காய், சிவந்த கடுக்காய், திரவிர்த்தி கடுக்காய், கடுங்கடுக்காய், செங்கடுக்காய், வரிக்கடுக்காய், பால் கடுக்காய், நெல்- முள்ளி, தான்தோன்றிக்காய், கர்ஜூரக்காய், கண்டுபரங்கி, வசம்பு, வடத்திருப்பி, கோட்டம், அதிமதுரம், அதிவிடயம், அக்கரா, ரோகிணி, பீதரோகிணி, கிரந்தி கால, செவ்வள்ளிக் கொடி, செவ்வியம், சடாமஞ்சரி, விளாமிச்சை, நன்னாரி, கருடக்கொடி, தேசாவரம், (நறுக்கு மூலம்) , கண்டத்திப்பி-, பறங்கிப்பட்டை, மயிலைக்கொடி, வெள்ளி லோத்திரம், வெங்கப்பட்டை, சன்ன லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, லவங்கப்பூ, (கிராம்பு), ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, தாளிச பத்திரி, கற்கடக சிங்கி, நாகப்பூ, சிறுநாகப்பூ, கண்டில் வெண்ணை கூகை நீறு, நகணத்தி, மாசிக்காய், வலம்புரிக்காய், வாய் விளங்கம், தக்கோலம் விழலரிசி, கார்போக

அரிசி, வால் உளுவை அரிசி, வெட்பாலை அரிசி, காசினி விதை, துளசி விதை, புத்திர ஜீவி விதை, கசகசா விதை, பெரிய ஏலம், சிற்றேலம், மலை ஏலம், காட்டேலம், சீரகம், பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், காட்டு சீரகம், பினப்பு சீரகம், கொத்துமல்- விதை, (தனியா) செங்கடுகு, வெண்கடுகு, சிறுகடுகு, நாய்க்கடுகு, வெந்தய விதை, ஓமம், குராகணி ஓமம், சதகுப்பை, பெருங்காயம் (பிசின்) , வெள்ளைப்பூண்டு, அபினி, கரியபோளம், கஞ்சா விதை, கஞ்சா இலை, ரத்தபோளம், வாலேந்திர போளம், வெளிச்சப்பிசின், பச்சை நாவி, வெள்ளை நாவி, கருநாவி, சூத்திர நாவி, நிலா அவரை, கீழாநெல்- செடி, மஞ்சள் கரிசலாங்கண்ணி, கரிசிலாங்கண்ணி, கருப்பு எள்ளு, சிவப்பு எள்ளு, வெள்ளை எள்ளு, குசம்பா பேயெள்ளு, துளசி இலை, வில்வ இலை, அருகம்புல், தூதுவளை இலை, ஆடாதொடை இலை, நில வேம்புவேர், கண்டங்கத்திரி வழுதலை, கரந்தை, பாகல், முசுமுசுட்டை, கீழாநெல்-, ஏல அரிசி, மாசிகாய், தானிக்ʼகாய், மருதாணி இலை, ஆதொண்டை, உத்தாமணி(வே-ப்பருத்தி) பிரண்டை, ஓமம், தும்பைப் பூ, குப்பை மேனி இலை, செம்பருத்திப் பூ, பவழமல்-கைப் பூ, தாமரைப் பூ, வாழைப்பூ, பாகல், விளாங்கனி, சுண்டைக்காய், கற்றாழை, நன்னாரிவேர், விளாமிசை வேர், வாதநாராயண மரம், இலை, விஷ்ணு கிராந்தி அம்மான் பச்சரிசி, ஊமத்தைக்காய், நொச்சி, திருநீற்றுப் பச்சிலை, வேப்பம்பூ, இலுப்ப இலை, வேப்பங்கொழுந்து, மாங்கொட்டை, எலுமிச்சை விதை, வெற்றிலை, தேன், தேன்மெழுகு, பசும்பால், பசுநெய், கஸ்த்தூரி, கோரோசனை, மான் கொம்பு, பவழ பஸ்பம், தங்க பஸ்பம், செந்தூரங்கள், நாயுறுவி, ரசகற்பூரம், பேயாவரை, பொள்ளுவரை, பனை வெல்லம், பனங்கற்கண்டு, பதநீர், காட்டு கொத்தவரை, ஆலம் விழுது, பாவட்ட இலை, ஊமத்தை இலை, பால் துத்தி இலை, துத்தி இலை, ஆமணக்கு விதை, நேர்வாளம், சப்பாத்திக் கள்ளி, அன்னாசிப் பழம், நெல்பொரி, பேயம் பழம், கடுக்காய் தோல், ஒரிலைத்தாமரை, வெள்ளரி விதை, வெதுப்பட்கி இலை, சித்திர மூலவேரின் பட்டை, கடல் நுரை, விர-மஞ்சள், வேப்பம் பட்டை, ஆமை ஒடு, மயில் இறகு, மயல் ரத்தம், புறுச்சம், வெள்ளை காகரட்டை வேர், விதை, கருவேலங் கொழுந்து, நாட்டு காட்டாமணக்கு இலை, கடிச்சா செடி பட்டை, கோவை கொடி, இலை, கிளிஞ்சல் சுண்ணாம்பு, சங்கு, முதலைக் கண்டம்,



ஆலம் விதை, அரசம் விதை, சோவிக் கீரை, பருத்தி விதை, தாமரை வளையம், கருந்தாளி, காட்டுமல்-, நிலக்குமிழி வேர், இளநீர் நீர்ப்பூரா இலை, சீயக்காய், அகத்திக் கீரை, சிறுநெரிஞ்சி, சிறுகுறிஞ்சி, சலாமிசிரி, கழுச்சிக்காய், கொட்டை, வில்வப்பழம், கோமயம், பஞ்சகவ்யம், வெள்ளை சுரக்காய், கருஞ்சுரைக்காய், நாவல் பழம், நாவல் கொட்டை, மாங்கொட்டை, தென்னம் பூ, புகையிலை, ஆடுதின்னாப் பாளை, வல்லாரை, அப்ரக சிந்தூரம், அயசிந்தூரம், அயஸ்காந்த சிந்தூரம், கமட பஸ்பம், காந்த சிந்தூரம், காஸிஸ சிந்தூரம், சிருங்க பஸ்பம், சிலாஜது பஸ்பம், தந்த பஸ்பம், நவநீத பஸ்பம், சங்க பஸ்பம், நாக பஸ்பம், பவழ பஸ்பம், வராட பஸ்பம், ராஸநாக பஸ்பம், ஸர்ஜரஸ பஸ்பம், கருவங்க பஸ்பம் முத-யன. (மேலும் உலோக தாதுக்கள் 11, மிருகங்களி-ருந்து கிடைக்கும் பொருள்கள், பாஷாணம் 64, உபசரம் 120 முத-யன பற்றி சித்த வைத்யம் கூறுகிறது.)

இப்படிப்பட்ட அநேக விதமான மூ-கைகளைக் கொண்டு, கஷாயம், குளிகை, அரிஷ்டம், மாத்திரைகள், லேகியம், மருந்து நெய், குழம்பு, பஸ்மம், சூரணம் (பொடிகள்) , தைலம், சுண்ணம், மெழுகு, முத-யன தயாரிக்கும் விதத்தையும், தமிழ் நூல்கள் கூறுகின்றன. பல வகையான மூ-கைகளின் வேர், தண்டு, இலை, காய், பழம், பழத்தோல் சத்து, விதைகள் இவ்வாறு பிரித்து ஒவ்வொன்றுக்கும், உள்ள குணபேதத்தையும், அவைகளால், தீர்த்து வைக்கப்படும் நோய்கள் பற்றியும், தமிழ் மருத்துவம் கூறுகிறது. மேலும், மணி, மந்திரம், ஔஷதம் என்பதற்கேற்ப, மணிகள், பாதரசமணி, துளசிமணி, தாமரை மணி ருத்திராக்ஷம், ஸ்படிகமணி, முத்து, பவழம், வைரம், வைடூரியம், மாணிக்கம், கோமேதகம், மரகதம், நீலம், சிவப்பு மாணிக்கம் நோய்களை தீர்க்க கூடியவை என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் காலையில் எழுந்திருத்தல், பற்கள் சுத்தம் செய்தல், நாவை சுத்தம் செய்தல், குடலை சுத்தம் செய்தல், எண்ணை முழுக்காடல், உணவு உட்கொள்ளுதல், தேகப்பயிற்சி செய்தல், தூங்கும் முறைகள் தாம்பத்ய உறவு கொள்ளும் நாட்கள், வாந்தி எடுத்து குடல் சுத்தம் செய்தல், பேதி மருந்து உட்கொண்டு குடல் கழுவுதல், யோகப் பயிற்சி, மனப்பயிற்சி, சுவாஸப் பயிற்சி முத-ய காரியங்கள் எவ்வாறு செய்ய வேண்டும் எனவும் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

(உணவில் சேர்த்துக் கொள்ளக் கூடிய கீரைகள், முளைக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை, பருப்புக் கீரை, வெந்தயக் கீரை, அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, புளிச்சக் கீரை, பசலைக் கீரை, மணத்தக்காளிக் கீரை, புதினாக் கீரை, சக்கரவர்த்தி கீரை, பொன்னாங்கண்ணி கீரை, முடக்கத்தான் கீரை, வல்லாரைக் கீரை, தூதுவளைக் கீரை, பூண்டுகள், பருப்புகள், காய்ச்சல் பற்றியும் ஏராளமான விவரங்கள் தமிழ் மருத்துவத்தில் உள்ளன) .

இனி குழந்தை பிறப்பு, அதன் தத்துவங்கள், நாடிகள் முத-யன பற்றிய விவரங்கள் கீழே விளக்கப்படுகின்றன :-

ஒரு உயிரணுவின் (சுக்கிலம்) 23 தத்துவங்களும், ஒரு ஜீவனும், தாயின் சினை முட்டையில் (சுரோணிதத்தில்) 23 தத்துவங்களும் ஜோடி சேருகின்றன. இந்த 23 தத்துவத்தில் ஒன்றே ஆணா, பெண்ணா என்று ஜீவனால் நிர்ணயிக்கப்படுகிறது
இவ்வாறு ஜோடி சேர்ப்பது ஒரு ஆத்மா (ஜீவன்) .

(ஒருவனுக்குத் திருமணம் ஆகும் முன்பேயே அவனுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கும் என்பதை சோதிட நூல்கள், நாடி சோதிடம் முத-யன தெளிவாக கூறுகின்றன. மேலும் பிறக்கப் போகும் குழந்தை என்ன செய்யும் என்பதையும் சோதிட நூல்கள் கூறுகின்றன. உதாரணத்திற்கு திருமண நாளன்றே “தேவகிக்கும் வசுதேவருக்கும் பிறக்கும் 8வது குழந்தை கம்சா உன்னைக் கொல்லும்” என அசரீரீ மூலமாக அறிவிக்கப்பட்டது என மகாபாரதம் கூறுகிறது. தவிர கைரேகை, குறி சொல்லுதல், குடுகுடுப்பைகாரன் சோதிடம், சோழி போட்டு சோதிடம் கூறுதல் இவையாவும் தமிழகத்தில் இன்றும் பழக்கத்தில் உள்ளன.

23 தத்துவங்கள் பிரகிருதியில் (இயற்கையில்) தோன்றுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஞானேந்திரியம் | 5 |
| 2. | கர்மேந்திரியம் | 5 |
| 3. | தன்மாத்திரைகள் | 5 |
| 4. | பூதங்கள் | 5 |
| 5. | அந்˙தக்கரணம் | 3 |
| 6. | நான் (அஹங்காரம்-ஜீவன்) | 1 |
| | | 24 |

**1. ஞானேந்திரியங்கள்**

புத்தி, மனம், சித்தம் (அந்தக் கரணம்) உள்ளடக்கிய அகக் கருவிகள் மூளையில் உள்ளது.



1. கேட்கும் அறிவு, 2. பார்க்கும் அறிவு, 3. வாசனை பிரித்தறியும் அறிவு 4. சுவை அறிவு 5. இன்பம், துன்பம், அனுபவிக்கும் அறிவு.

**2. கர்மேந்திரியங்கள்**

காதுகள், கண்கள், மூக்கு, நாக்கு, மெய் முத-யன புறக் கருவிகள்.

**3. தன்மாத்திரைகள்**

இவைகள் சக்திகள் எனப்படும். கேட்கும் சக்தி, பார்க்கும் சக்தி, சுவையனுபவிக்கும் சக்தி, வாசனை அனுபவிக்கும் சக்தி, அனுபவிக்கும் சக்தி எனப்படும்.

(உதாரணமாக கனவில் ஒருவர் பேசுவதை கேட்கிறோம். அவர்களைப் பார்க்கிறோம். பண்டங்களை சுவைக்கிறோம். வாசனை அனுபவிக்கிறோம். இன்ப, துன்பங்களை அனுபவிக்கிறோம். ஆனால் காது, கண், மூக்கு, நாக்கு, மெய் இவைகள் செயல்படுவதில்லை) .

**4. பூதங்கள்**

மேற்கூறப்பட்ட 15 தத்துவங்களும் உட-ல் உள்ளே உள்ளன. இவற்றிற்கு காரணமான இயற்கையில் ஆகாயம், (நக்ஷத்திரங்கள், கிரகங்களின் அலைகள்) தீ, காற்று, நீர், மண் எனக் கூறப்படும் இவைகளையே பஞ்ச பூதங்கள் எனப்படும்.

**5. அந்தக் கரணங்கள்**

மனம், புத்தி, சித்தம், இவை மூன்றும் மனித மூளையிலுள்ள அகக்கருவிகள் (“மனம்” என்னும் அகக் கருவியின் மூன்று விதமான செயல்களாகும்) .

**6. அகங்காரம்**

நான் என்னும் உணர்வுடன் கூடிய ஜீவன். இதுவே தந்தையின் சுக்கிலத்தில் உள்ள 23 தத்துவங்களையும்(Chromsome) தாயின் சுரோணிதத்தில் உள்ள 23 தத்துவங்களையும் ஜோடி சேர்த்து உடல் பிறக்க காரணத்தை உருவாக்குகிறது. தாயின் கருவில் இருந்து கொண்டு, தொப்புள் கொடி மூலமாக தாயின் இரத்தத்தி-ருந்து தேவையானவற்றை எடுத்துக் கொண்டு ஒரு குழந்தையின் உடலை தயாரிக்கிறது. இவ்வாறு அந்த ஜீவன் ஒரு குழந்தை உடலைத் தயாரிக்கும் போது அந்த ஜீவன் முற்பிறப்பில் கிடைத்த அறிவாற்றலால் அனுபவத்தால், வினைகளால் கிடைத்த கற்பனைகளைக் கொண்டு உருவாக்குகிறது. (ஜீவனே உயிர்) .

தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஒன்றாவது அறிவு | - | மெய் | (ஸ்பரிசம்) |
| 2. | இரண்டாவது அறிவு | - | சுவை | (நாக்கு) |
| 3. | மூன்றாவது அறிவு | - | வாசனை | (மூக்கு) |

4. நான்காவது அறிவு - பார்வை (கண்கள்)
5. ஐந்தாவது அறிவு - கேள்வி (காதுகள்)
6. ஆறாவது அறிவு - மனம் (சித்தம்,(புத்தி)

என வகுத்து மனிதர்கள் ஆறறிவு படைத்தவர்கள் என்று கூறுகிறார். மேலும் அவர் கூறுகையில் உலகிலுள்ளவை கீழ்க்கண்ட அறிவுகளை பெற்றுள்ளன என்று கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| 1. புல், மரம் முத-யன | - | ஓரறிவு |
| 2. சிப்பிகள் முத-யன | - | ஈரறிவு |
| 3. சிதல், எறும்புகள் | - | மூன்றறிவு |
| 4. நண்டு, தும்பி முத-யன | - | நான்கறிவு |
| 5. மிருகம், பறவைகள் | - | ஐந்தறிவு |

மேலே கூறப்பட்ட 23 தத்துவங்களும், ஜீவனும் சேர்ந்து 24 தத்துவங்கள் மும்மடங்காக பெருக (24X3 = 72) 72 ஆகப் பிரித்து அறியப்படுகிறது. அவை பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. நாடிகள் | - | 10 | (முக்கியமானவை) |
| 2. அவஸ்த்தைகள் | - | 5 | |
| 3. மலங்கள் | - | 3 | |
| 4. குணங்கள் | - | 3 | |
| 5. மண்டலங்கள் | - | 3 | |
| 6. பிணிகள் | - | 3 | |
| 7. விகாரங்கள் | - | 8 | |
| 8. ஆதாரங்கள் | - | 6 | |
| 9. தாதுக்கள் | - | 7 | |
| 10. வாயுக்கள் | - | 10 | |
| 11. கோசங்கள் | - | 5 | |
| 12. வாயில்கள் | - | 9 | |
| | | 72 | |

(72 தத்துவப் பிரிவுகள் ஆயிரம், ஆயிரமாகப் பிரிந்து 72,000 நாடிகளாயிற்று. பீர்க்கைக் காயின் குடல் போல் இந்த நாடிகள் உடல் முழுதும் பரவியுள்ளது)



**வாயுக்கள்**

1. பிராண வாயு (ஈரல்) 2. அபானன் (வயிறு) 3. சமானன் (வாதம், பித்தம், கபம்) 4. உதானன் (உதடு, முகம்) 5. விதானன் (வாய்ப்பூட்டு, விக்கல்) 6. நாகன் (ஏப்பம்) 7. கூர்மன் (கண் இமை) 8. கிரிகரன் (ஜடராக்கினி) 9. தேவதத்தன் (கொட்டாவி) 10. தனஞ்ஜயன் (மெய்) .

**கோசங்கள்**

1. அன்னமய கோசம் 2. பிராணமய கோசம் 3. மனோமய கோசம் 4. விஞ்ஞானமய கோசம் 5. ஆனந்த மய கோசம் (இவை பூத சரீரம், காரண சரீரம், சூக்ஷ்ம சரீரம் முத-யவற்றில் வியாபித்துள்ளது. மேலும் 24 தத்துவங்கள் நான்கு மடங்காகப் பெருகி 24X4 = 96) 96 தத்துவங்களுடன் கூடிய சிசுவாக பூமியில் ஜனனமெடுக்கிறது. குழந்தை ஜனனமான உடனேயே தாய்க்கு பால் சுரக்கிறது. தாயின் பாலே குழந்தைக்கு முதல் உணவு. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக ஏனைய உணவுகளை உட்கொண்டு வளருகின்றன. ஒவ்வொரு சரீரத்திலும் உள்ள ஆறு ஆதாரங்கள் (நாளமில்லாச் சுரப்பிகள்) 8 வருடங்கள் கழித்தே முழுமையாக வளர்ந்து அதி-ருந்து திரவங்கள் உற்பத்தியாகி ஆணை ஆணாகவும், பெண்ணை பெண்ணாகவும் முழுமையான வளர்ச்சியடையச் செய்கிறது.

ஒவ்வொரு மனித சரீரத்திலும் இரத்தம், சீழ், நரம்புகள், எலும்புகள் (மண்டையோடு) மஜ்ஜை, மயிர், பற்கள், நகம் முத-யன உள்ளன. வாயால் உண்ணப்படும் உணவு இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் வழியாகச் சென்று சரீரத்தின் வளர்ச்சிக்கு தேவையான சக்திகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு தேவையற்ற திடப் பொருள் மலமாகவும், திரவப்பொருள் சிறுநீராகவும் வியர்வையாகவும் வெளிப்படுகின்றன. சரீரம் உற்பத்தி முதல் இறப்பு வரை இதயம், நாடிகள், சுவாசப் பைகள் முத-யன செயல்படுகின்றன. சரீரத்தின் செயல்கள் ஜீவனால் நடத்தப்படுகின்றன. ஜீவன் மூளைப்பகுதியின் மையத்தில் இருந்து கொண்டு, ஒரு திரவப் பொருள் மூலம் சரீரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கட்டளை பிறப்பித்துக் கொண்டே இருக்கிறது. ஜீவனது கட்டளைகளை உணர்வு நாடிகள் மூலம்கொண்டு செல்ல இயற்கை சக்தி உதவுகிறது. இந்த சக்தியே சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களையும் (கிரந்திகள்) இணைத்துச் செல்கிறது. சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களின் பெயர்கள், அவற்றை இணைத்துச் செல்லும் நாடிகளின் பெயர்கள் வருமாறு

| வ. எண் | கோணங்கள் | ஆதாரங்கள் | அதில் உள்ள சக்தி (திரவங்கள்)யின் பெயர்கள் | ஆதாரங்களை உணர்வு நாடிகளுடன் இணைக்கும் நாடிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 1. | (3 கோணம்) | மூலாதாரம் (பிருதிவி - தத்வம்<br>நிறம் - வெண்மை)<br>தெய்வம் - கணபதி | குண்டலி சக்தி<br>(சுழு முனை நாடியில் துவக்கம்)<br>(குறிக்கும் குதத்திற்கும் மையத்தில்) | 1. வரதா 2. ஸ்ரீ 3. ஷண்டா<br>4. சரஸ்வதி (4 நாடிகள்) |
| 2. | (6 கோணம்) | ஸ்வாதிஷ்டானம் ( நீர் தத்துவம்<br>நிறம் - மஞ்சள்<br>தெய்வம் - பிரம்மா) | காகினி சக்தி (தொப்புள் கீழ்<br>உள்ள பகுதி) | 1. பந்தினி 2. பத்ரகாளி<br>3. மஹாமாயா 4. யசஸ்வினி 5. ரக்தா<br>6. லம்போஷ்ட்டி (6 நாடிகள்) |
| 3. | (10 கோணம்) | மணி பூரகம் (தீ - தத்துவம்<br>நிறம் - சிவப்பு<br>தெய்வம் - திருமால்) | யாகினி சக்தி<br>(வயிற்றுப் பகுதி) | 1. டாமரீ 2. டங்காரிணி 3.ஞார்ணா<br>4.தாமஸி 5. ஸ்தாணவி 6. தாக்ஷாயணி<br>7. காகினி 8. நாரீ 9. பார்வதி<br>10. பட்காரிணி (10 நாடிகள்) |
| 4. | (12 கோணம்) | அநாகதம் (காற்று - தத்துவம்<br>நிறம் - ஸ்படிகம்<br>தெய்வம் - மகேசன்) | ராகினி சக்தி<br>(மார்பு - ஈரல் இதயம்<br>அடங்கிய பகுதி) | 1. காளராத்ரி 2. கண்டிகா 3. காயத்திரி<br>4. கண்டாகர்ஷிணி 5. ஞார்ணா<br>6. சண்டா 7. சர்யா 8. ஜயா<br>9. ஜங்காரிணி 10. ஞானரூபா<br>11. டங்கஹஸ்தா 12. டங்காரிணி |
| 5. | (16 கோணம்) | விசுத்தி (ஆகாய - தத்துவம்<br>நிறம் - பச்சை<br>தெய்வம் - சிவன்) | டாகினி சக்தி (கழுத்துப் பகுதி) | 1. அம்ருதா 2. ஆகர்ஷிணி 3. இந்திராணி<br>4. ஈசானி 5. உமா 6. ஊர்த்துவகேசி<br>7. ருத்திர 8. கோரா 9. லுகாரா 10. லூகாரா<br>11. ஏகபதா 12. ஐஸ்வர்யாத்மிகா<br>13. ஓங்காரா 14. ஔஷதி 15. அம்பிகா<br>16. அக்ஷரா (16 நாடிகள்) |



| வ. எண் | கோணங்கள் | ஆதாரங்கள் | அதில் உள்ள சக்தி (திரவங்கள்)யின் பெயர்கள் | ஆதாரங்களை உணர்வு நாடிகளுடன் இணைக்கும் நாடிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 6. | (2 கோணம்) | ஆக்ஞை (தெய்வம் - முருகன்) | ஹாகினி சக்தி (புருவங்களின் நடுப்பகுதி - இடகலை நாடி, பிங்கலை நாடி, சுழு முனை நாடிகள் இங்கு கபாலத்தில் உள்ள ஒட்டை வழியாக மூளைக்குள் செல்லும் இடம்) | 1. ஹம்ஸாவதி<br>2. க்ஷமாவதி (2 நாடிகள்) |
| 7. | (1000 கோணம்) | ஸஹஸ்ராரம் தெய்வம் - சதாசிவம் | யாகினி சக்தி (பெருமூளை - இரு பகுதிகள் சிறு, மூளை தண்டுவடம் முதலிய பகுதிகளில் பரவியிருக்கும் நாடிகள்) | 1. நாடி ஆயிரக்கணக்கான சிறு சிறு நாடிளால் பரவியிருக்கும் பகுதி. |

மேற்குறிப்பிட்ட மூலாதாரம் (குண்டலி சக்தி) என்னும் பகுதியிலிருந்து சுழுமுனை (உணர்வு நாடி), இடகலை நாடி (சந்திர நாடி - நல்ல இரத்தம்) பிங்கலை (சூரிய நாடி - கெட்ட ரத்தம்) நாடியும் மூளைப் பகுதி (ஸகஸ்ராரம்) வரை செல்கின்றன. சுழுமுனை நாடிக்குள், சித்திரா என்னும் நாடியும், சித்திரா என்னும் நாடிக்குள் வஜ்ஜிர நாடியும் செல்கின்றன. மூளைப் பகுதிக்கு அடியில் வட்ட வடிவில் 7 முடிச்சுகள் உள்ளன. இவை 7 கிரஹங்களிலிருந்து வரும் ஒலிகளை கிரகித்து துடிக்கின்றன. இந்த 7 முடிச்சுகளுக்கு மனம் செயல்படும் கருவிக்கும் இணைப்புகள் உள்ளன. இதனால் கிரகங்கள் நிலைக்கு தகுந்தவாறு, மனம் புத்தி செயல்படுகிறது.

1. இடது கண், இடது செவிக்கு இடகலை நாடி, சுழுமுனை நாடிகளை இணைத்துக் கொண்டு 2 நாடிகள் செல்கின்றன. (அத்திரி, குவை - 10 நாடிகள்)

   வலது கண், வலது செவிக்கு பிங் கலை நாடி, சுழுமுனை நாடிகளை இணைத்துக் கொண்டு 2 நாடிகள் செல்கின்றன.

கண்களில் சேரும் நாடி ''காந்தாரி'' ஹஸ்தி ஜிஹ்வை

செவிகளில் சேரும் நாடி அலம்புசை, பூஷை

2. நாக்கையும், சுழுமுனையையும் இணைக்கும் நாடி 'ஜிஹ்வை'
3. சிறுநீரகம், குறியையும் சுழுமுனையையும் இணைக்கும் நாடி " சங்கினி" (கழுத்தி-ருந்து கீழ்முகமாக உபஸ்த்தம் வரை- தும்மல், கபம் அன்ன சாரத்தை தலைக்கு எடுத்துச் செல்லல்)
4. பெருங்குடல், மலக்குடல், குதம் இவற்றையும் சுழுமுனையையும் இணைக்கும் நாடி " குஹு"
5. மூலாதாரம் (குண்ட- சக்தி பீடம்) பகுதியி-ருந்து, மூளைப்பகுதி வரை இடகலை நாடியுடன் (சந்திர நாடி) இணைந்து செல்லும் உணர்வு நாடியின் பெயர் "ஸரஸ்வதி" (தாகம்) .
6. மூலாதாரப் பகுதியி-ருந்து, மூளைப் பகுதிவரை முதுகு தண்டு எலும்புகளின் வழியாக செல்லும் சுழுமுனை நாடி, இடகலை நாடி, பிங்கலை நாடிகளுடன் சுவாஸப் பகுதிகளை இணைக்கும் நாடிகள் லக்ஷ்மி, மேதா என்னும் இரண்டு நாடிகள்.
7. விளம்பினி (வயிறு) 8, சூரை (புருவமத்தி) 9 விஸ்வோதரி (பசி) 10, வாருணி (மூத்திரம், சுக்கிலம், சுரோணிதம் புரீதத் (மனம்) ஸீவனி (அண்டகோசம் கீழே)

மேற்கூறப்பட்ட ஆறு ஆதாரங்களுடன், மூளைப் பகுதியான ஸஹஸ்ராரம் வரை 51 நாடிகளின் பெயர்கள் தமிழில் 51 எழுத்துக்களின் உச்சரிப்புகளாக கூறப்பட்டன. மூளைப் பகுதியில் (மனம் என்னும் கருவியி-ருந்து, இதயத்தின் வலது மேல் புறத்துடன் இணைக்கும் நாடி மனத்தின் செயலுக்கேற்ப இதயத்துடிப்பை அதிகரிக்கவோ, குறைக்கவோ செய்கிறது. இது லக்ஷ்மி, மேதா என்னும் நாடிகளின் கிளையே (ஹ்ருல்லேகா) ஆகும். மனம், இதயத்திற்குள் செயல்படவில்லை. மூளைப் பகுதியில் தான் மனம் செயல்படுகிறது. (இதயம், நெஞ்சம் என்று கூறப்படும் சொற்கள் மனத்தையே குறிக்கும்) .மேலே கூறப்பட்ட சுழுமுனை நாடி, இடகலை நாடி, பிங்கலை நாடி, ஸரஸ்வதி நாடி, லக்ஷ்மி நாடி, மேதா நாடி, காந்தாரி நாடி, அலம்புசை நாடி, சங்கினி நாடி, குஹு நாடி ஆகிய 10 நாடிகளும் பிரதானமான நாடிகள் சுழுமுனை நாடியி-ருந்து முதுகு தண்டி-ருந்து 12 இடங்களில் பிரியும் நாடிகள் 12ஆதித்தர்கள்,அதற்குமேலே முதுகுத் தண்டி-ருந்து சுழுமுனை நாடியி-ருந்து 11 இடங்களில் பிரியும் நாடிகள் 11ருத்திரர்கள்,அதற்குமேலேமுதுகுத்தண்டி-ருந்து



சுழுமுனை நாடியி-ருந்து 8 இடங்களில் பிரியும் நாடிகள் 8 வசுக்கள், கழுத்திற்கு மேலே சுழுமுனையி-ருந்து பிரியும் 2 நாடிகள் அஸ்வினிதேவன்கள்.

உணவு, இரைப்பையில் மாவாக்கி கரைக்கப்பட்டு, சிறுகுட-ன் வழியாகச் செல்லும்போது, பாம்பு இரை விழுங்குவது போல உடலுக்கு தேவையான சர்க்கரை, அமிலம், உப்புகள், உலோக தாதுக்கள் முத-யன சிறுசிறு முட்கள் போன்ற பகுதிகளால் இழுக்கப்பட்டு ரத்தத்தில் சேர்க்கப்படுகின்றன. இவை இதயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து நுரையீரலுக்கு (திராக்ஷைக் குலை போன்ற பைகள்) எடுத்துச் செல்லப்பட்டு, பிராண வாயுவால் சுத்திகரிக்கப்பட்டு சக்தி பெற்று மீண்டும் இதயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து உடல் முழுதும் சக்தியை சுமந்து கொண்டு நுண்ணிய சிவப்பு அணுக்கள், திரவத்தில் (ரத்தத்தில்) மிதந்து கொண்டு செல்கிறது. திரும்பவும் (சக்தி செலவானவுடன்) கெட்ட ரத்தமாக (நீல நிறம்) மாறி இதயத்தில் சேருகிறது. திரும்பவும் இதயத்தி-ருந்து ரத்தம் நுரையீரலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிராண வாயுவால் சுத்திகரிக்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட ஆறு ஆதாரங்களி-ருந்து வெளிப்படும் திரவங்கள் இரத்தத்துடன் கலந்து உட-ல் வளர்ச்சியையும் , மூளையின் திறனையும் அதிகரிக்கிறது. இரத்தத்தில் சிவப்பு அணுக்களுடன் வெள்ளை அணு உட-ன் பகுதிகளுக்கும் சென்று, நோய் எதிர்ப்பு (கிருமிகள் எதிர்ப்பு) படைகளாக அணிவகுத்துச் செல்கிறது. உட-ல் உள்ள சிவப்பு அணுக்கள், தோல் என்னும் கோட்டைக்குள் வாசம் செய்கிறது.

உடல் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு புரிந்து கொள்ளப்படுகிறது. தலைப் பகுதி (கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு,) உடல்பகுதி (இதயம், நுரையீரல், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல்) அரைப் பகுதி (கர்பப்பை, விந்துப்பை, சிறுநீற்றுப்பை விதைகள், குறிகள் முத-யன) கால்கள், கைகள் (விரல்கள், நகங்கள் முத-யன) என நான்கு பகுதிகளாக புரிந்து கொள்ளப்படுகிறது. (உலக சமுதாயத்தை பிரம்மன் என்னும் தெய்வ வடிவமாக கருதினால், தலைப் பகுதி பிராமணர்கள் போலவும், உடல் கை பகுதி க்ஷத்திரியர்கள் போலவும், அரைப்பகுதி வைசியர்கள் போலவும், தொடை, பாதங்கள் சூத்திரர்கள் போலவும் அறியலாகும் என புருஷ சூக்தம் கூறுகிறது) .

உட-ல் மூளை, நரம்புகள் (நாடிகள்), எலும்புகள், மஜ்ஜை, தலைப்பகுதி, ரத்தம், சீழ், சளி, மலம், மூத்திரம், விந்து (சுக்கிலம்) சுரோணிதம் (சினை முட்டை) எனப் பல பகுதிகளாக அறியப்படுகிறது.

ரத்தத்தில் துடிப்பு அலைகள் (இதயத்தி-ருந்து தோன்றுபவை) நாடிகளின் வழியாகச் செல்லும்போது வாத நாடி பித்த நாடி, சிலேத்தும நாடித்துடிப்புகளாக செல்கின்றன.

வாத நாடி - ஆகாயம், காற்று தத்துவம், பித்தநாடி - அக்நி தத்துவம், கபம் நாடி - பிருத்வி, நீர் தத்துவத்தை குறிக்கும். நாடி பார்த்தல் ஆணுக்கு வலது கை. பெண்ணுக்கு இடதுகை (மணிக்கட்டிற்கு மேல் ஓர் அங்குலம் உயரத்தில் ஆட்காட்டி விரல், நடுவிரல், பவித்திர விரலுக்கு நேராகச் செல்லும் நாடிகள் மேல் நாடி பார்ப்பவர் மூன்று விரல்களால் மெதுவாக அழுத்தி சோதனை செய்ய வேண்டும்.

| | | புருஷர்கள் | ஸ்தீரிகள் |
|---|---|---|---|
| 1. | வாத நாடி | மயில், அன்னம், கோழியின் நடை ஒத்திருக்கும். | பாம்பு |
| 2. | பித்த நாடி | ஆமை, அட்டை | தவளை |
| 3. | சிலேத்தும நாடி | பாம்பு தவளை | அன்னம் |

(பெண்கள் வயிற்றில் சிசு இருந்தால் அந்த நாடியின் நடையும் தனியாக தெரியும்) நாடித் துடிப்பி-ருந்து நோய்களை கண்டறியலாகும். மருத்துவர்கள் பரிசோதனை செய்யும் போது நாடி பார்த்தல் ஸ்பரிசித்தல், நாக்கு, கண்கள், வியர்வை நிறம் நாற்றம், பேச்சு, மலம், மூத்திரம், விந்து முத-யவைகளைப் பரிசோதித்து நோய்களை அறிவர். நோய்களை அறிதலும், அதன் காரணம், எவ்வளவு காலமாக உள்ளது என்பதையும் மருத்துவர்கள் ஆராய்வர். மூச்சு விடுதல் பற்றியும் ஆராய்வர். (15 மூச்சு - 1 நிமிஷம், 21,600 மூச்சுகள் - 1 நாள்)

நோயை அறிந்த பின்பு உட-ல் இருக்கும் விஷத் தன்மையான பொருள்களை வெளியேற்றி சோதனை செய்த பின்பு மருந்து அளிக்க வேண்டும். இச் சோதனை ஐந்து வகைப்படும். அதாவது வாந்தி, பேதி, முகர்தல், ஆசனவாய் வழியாக ஸ்நேகா வஸ்வதை (எண்ணை பிரயோகம்), காஷாய அவஸ்தை (மருந்து கலந்த நீர் பிரயோகம்) என ஐவகைப்படும். நெஞ்சில் உள்ள சளி, ஜீரணமாகாத பொருள்களை வெளியே கொணருதல், மலம் மூத்திரத்தை வெளியேற்றுதல், சுவாசப்பையில் நோய் கிருமிகளை அழித்தல் என ஐவகைப்படும்.

நோய்களுக்கு கொடுக்க வேண்டிய மூ-கை மருந்துகள், மாத்திரைகள், கட்டுகள், பஸ்மங்கள், செந்தூரங்கள், சுண்ணம் பதங்கள், எண்ணைகள், காஷாயங்கள், சூரணங்கள், லேகியம் பானங்கள், சரஸங்கள், நெய்கள், வடகங்கள், நீர்கள், லேபம், அஞ்சனம், மெழுகுகள், குழம்பு சூடிடல், ஆவிபிடித்தல், புகை பிடித்தல், பற்று,



விரோசனம், வமனம், திரி, அட்டை (பூச்சி) விடல், அறுவை, சுடுநீர் பிரயோகம், களிம்பு, சீலை, குடிநீர், திராவகம், மை, பூப்புடத்தை தைலம், ஆக்ராணம், எனப் பல வகையில் மூ-கை மருந்துகள், ரஸாயணம், திரவகம் தயாரிக்கப்படுகின்றன. மருந்து தயாரிக்க கலுவம், குழவி, மற்றும் மண் மடக்குகள் பானைகள், சுரக்கை காய் குடுக்கைகள் உபயோகப்படுத்தப்பட்டன.

விஷக்கடிக்கு மாற்றாக 427 விஷ முறிவு மூ-கைகள் “தூதலக்ஷணம்” என்னும் நூ-ல் கூறப்பட்டுள்ளது. மருந்து உட்கொள்ளும்போது பத்தியம், அபத்தியம் என உணவுக் கட்டுப்பாடுகள் உள்ளன. சில கடுமையான சுர அவஸ்தையின் போது கர்கடக கஞ்சி, நவதான்ய கஞ்சி, மருந்துக் கஞ்சி, ராகி கஞ்சி, பாசிப்பயறு கஞ்சி, புழுங்கல் அரிசி கஞ்சி முத-ய கஞ்சிகள் மட்டுமே ஆகாரமாக அளிக்கப்படுகின்றன. புத்த சன்னியாசிகள், கொஞ்சம் கொஞ்சமாக விஷத்தை அருந்தி உடலை விஷ ஜந்துக்களின் கடிகளுக்கு தப்பி உயிர் வாழ பயிற்சி பெற்றிருந்தார்கள்.

சிவயோகிகள் எனப்படும் சித்தர் யோக சித்திகளைப் பெற்று, காயகல்பம் செய்து கொண்டு நீண்ட வாழ்க்கை வாழ்ந்தனர். யோக சித்திகளால் ஆறு ஆதாரங்களி-ருந்து திரவங்களை சுரக்கச் செய்து ரத்த ஊட்டத்தில் கலந்து உயரிர் வாழ பயிற்சி பெற்றிருந்தனர். உள் நாக்கு (இந்திரநாடி) வழியாக மூளைப் பகுதிகளியி-ருந்து ரஸங்களைப் பெற்று (அம்ருதம்) பசி, தாகம் மல மூத்திர உபாதைகளி-ருந்தும், மூச்சு விடுவதைக் கட்டுப்படுத்தியும் உயிர் வாழ்ந்தனர். விந்துவை வீணாக்காமல் இருத்தல், இயற்கை உப்புகளை அருந்தி உயிர் வாழ்தல், கந்தகம், தங்கம், செம்பு, பவழ பஸ்மங்களை அருந்தி உயிர்வாழ்தல், மனப்பயிற்சியின் மூலம் ரத்த ஓட்டத்தை நிறுத்துதல் முத-ய பயிற்சிகளை சிவயோகிகள் செய்து வந்தனர்.

மேலும் சித்தர்கள் உட-ல் உள்ள முக்கியமான 108 உயிர் நாடிப் பிரதேசங்களை தெரிந்து வைத்திருந்தனர். இது வர்மக்கலை (ஒடி முறிவு-சரிநூல்) எனப்படும். மேலும் சித்தர்களின் நூல்களில் நவரை அரிசி சாதத்தை கிழியில் கட்டி உட-ல் தேய்த்தல், எண்ணையால் உட-ல் அழுத்தி தேய்த்து நீவி விடுதல், நெற்றியில் ‘சிரோ-தாரா’ (எண்ணையை தாராபாத்திரத்தி-ருந்து நெற்றியில் விழச் செய்து மூளை சம்பந்தப்பட்ட நோய்களை குணமாக்குதல்) முத-யன பற்றியும் தனியான நூல்கள் எழுதியுள்ளனர்.

பதினெட்டு சித்தர்களில் போகர் என்பவர் அநேக வைத்ய நூல்கள் செய்துள்ளார். இவர் சீன தேசத்தில் பிறந்து தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். இவர் காஷ்மீரம், பெர்ஷியா, ஈராக், துருக்கி, அரேபிய நாடுகளுக்கும் யாத்திரை செய்ததாக கூறப்படுகிறது. இவர் காலாங்கி

நாதருக்கு மாணாக்கர். இமய மலையில் சஞ்சீவி மூ-கைகளை கண்டுபிடித்தவர். பழநியில் நவபாஷாண முருகன் சிலைகளை செய்வித்தவர். இவர் சதுரகிரி, சிவகிரி முத-ய இடங்களில் வசித்தவர். ராஜராஜசோழன் இவர் காலத்து வாழ்ந்த கருவூர்த்தேவர், சுந்தரானந்தர், மச்சமுநி, நந்தீசர் முத-யோர் சீடர்கள் (போகர் 7000, நிகண்டு 17000 சூத்திரம்,700 யோகம் முத-யவற்றை தமிழில் இயற்றியுள்ளார்.

(வடமொழியில் மருத்துவ நூல்கள் எழுதியவர்கள், சரகர், சுசுருதர், புனர்வசு ஆத்ரேயர், அக்நிவேஸ்யர், பேலர், பராசரர், ஹரிதர் முத-யோர் எழுதியுள்ள நூல்களில் 14 விதமான வயிற்றுக் கட்டிகள், 12 விதமான கிருமி நோய்கள், 20 விதமான காது வ-கள், 65 விதமான வாய், ஈறு, பல் நோய்கள் 31 விதமான மூக்கு நோய்கள், மேலுமு' 500 விதமான உடல் நோய்கள் அதற்கான மருந்துகள் பற்றி கூறியிருக்கின்றனர்.

வடமொழியில் சாகர் இயற்றிய நூல்களில் 300 விதமான எலும்புகள், 500 தசைகள், 200 மூட்டுகள் 70 விதமான ரத்தக் குழாய்கள் முத-யவற்றை விளக்கி உட-ல் அறுவை சிகிச்சை செய்ய 28 விதமான ஆயுதங்கள், 28 விதமான யந்திரங்கள், கத்திரிக்கோல்கள், கொக்கிகள், தோல்களைத் தைக்கும் ஊசிகள், இரத்தம் உறிஞ்சும் அட்டைகள், கட்டெறும்புகளை வைத்து தோல்களை தைத்தல் முத-யன கூறப்பட்டுள்ளன.

எலும்பு முறிவை 1. கர்க்கடகம், 2. அஸ்வகர்ணம் 3. குர்நிதா 4. மஜ்ஜானுகடா 5. அதிபதிதா 6. வக்ரா 7. சின்னா 8. பதித்ர 9. ஸ்புதிதா 10. பிசிட்டா 11. அணுதி சா-ட்டா 12. கண்ட பாகனா என்று 12 விதமாகவும் அவர்ணா (சந்தி முக்தா, சண்டபாகனா) சவர்ணா என்றும் எலும்புகள் தனது நிலையி-ருந்து நழுவுதலை உத்பிஸ்த்தம், விசி-ஸ்த்தம், விவர்த்ருதம், அவுஷிப்தம், அதிஷிப்தம், தீரயஷிப்தம் எனவும் துணிகளால் எலும்பு முறிவுக்கு கட்டுப் போடுவதை பற்றி கோசா, தாமா, ஸவஸ்திகா, அனுவெ-தா, பராதோ-, மண்டலா, ஸ்தாதிகா, யாமகா, காடவா, சினா, விபாண்ட விதான, கோவணா, பஞ்சாங்கி, உத்சங்கா என பலவகையான கட்டுகளைப்ப பற்றி விவரமாக மேற்படி நூல்களில் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட விவரங்களி-ருந்து பாரதம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பேயே மருத்துவத் துறையில் முன்னேறியிருந்தது என அறியலாகும்.

**மூச்சுப்பயிற்சி (பிரணாயாமம்)**

மூச்சை வெளிவிடுதல் (வசி-16 மாத்திரை) மூச்சை இழுத்தல் (சிவ-32 மாத்திரை)



ஈர-ல் (வயிற்றில் அடக்குதல்-கும்பகம்-வசி-64 மாத்திரை) 1 மாத்திரை - 1 சொடக்கு நேரம் - 1 நாளுக்கு 21,600 சுவாஸத்தை குறைத்துக் கொண்டே போய் - ஆயுளை நீட்டித்தல்) மேலும் குண்ட-சக்தியை ஒவ்வொரு கிரந்தியாக (முடிச்சாக) தாண்டிக் கொண்டு மூளைப் பகுதிக்கு எடுத்துச் செல்லுதல் - இதனால் அணிமா (ஸூஷ்ம தேகம்), மஹிமா (விஸ்வ ரூபம்) , லஹிமா (ஜலத்தின் மேல் நடத்தல்) கரிமா (மலை போன்று தேகத்தை அசைக்க முடியாமல் வைத்தல்) ப்ராகாம்யம் (மன ஸங்கல்பத்தினால் அநேக பெண்களை உண்டாக்கி அவர்களோடு பல ரூபத்தில் இருத்தல்) . வசித்துவம் (இயற்கையை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வித்தைகள் செய்தல்) 8. ஈசத்துவம் (எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்து ஆளுதல்) மற்றும் 108 விதமான யோகாசனங்களைப் பற்றி சம்பந்தப்பட்ட நூல்களில் தெரிந்து கொள்க.

சித்தர்கள் மருந்து நூல்கள் மனித உட-ல் உள்ள 96 தத்துவங்கள் ஆத்மாவின் ஆட்சியில் உள்ள 24 தத்துவங்கள் 72,000 ரத்தக் குழாய்கள், 13,000 நாடி நரம்புகள், 214 வகையான எலும்புகள், 10 தமனிகள், 4448 வியாதிகள், 32 விதமான களிம்புகள் இவற்றை பற்றியும் கூறியுள்ளனர். எளிதில் கிடைக்கும் தாவரப் பொருள் எவ்வாறு வீட்டு வைத்தியத்திற்கு பயன்படுகின்றன என்பதை கீழே விளக்கப்படுகிறது.

## நோயும் இயற்கை வீட்டு வைத்தியமும்

**1. தலை**

1. தலைவ-: நெற்றியில் வேப்பங்கொட்டை பருப்பை நீர்விட்டு சந்தனக் கல்-ல் அரைத்துப் பற்று போட வேண்டும்.
2. தலையில் நீர் கோத்து மண்டைக் கனம்/சளி: பச்சைக் கொத்துக்கடலை வெந்நீர் விட்டு அரைத்து பூசலாம். சாம்பிராணி, கடுகு அரைத்து கொதிக்க வைத்து நெற்றியில் பற்று போட வேண்டும்
3. ஒற்றைத் தலைவ-: சீந்தில் கொடியை நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி வெந்நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும்.
4. பேன் நீங்க: துளசி இலைகளை தலையணையில் பரப்பி பின்பு உறங்கலாம்.
5. ஞாபக சக்தி : வல்லாரை கீரை சமைத்து சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம். வெண்தாமரை இதழை காய வைத்து பொடித்து, பனங்கற்கண்டு, தேன் கலந்து சாப்பிடலாம். மூளைச் சோர்வுக்கு பூஷணிக்காய் சாறு, தேன் கலந்து சாப்பிடலாம்.
6. பொடுகு நீங்க: வேப்பம் பட்டை, பூவரசம்பட்டை, வேப்ப எண்ணை, ஆடுதீண்டாப்பாளை, எட்டிப் பருப்பு, தேங்காய்

எண்ணை கலந்து பூசலாம். குப்பை மேனி சாறு நல்லது. வேப்ப எண்ணையில் கடுகு, பூண்டு, காட்டு சீரகம் போட்டு காய்ச்சி தலையில் பூசிக் குளிக்கலாம்.

7. மூளை: அகத்திக் கீரையை அரிசி களைந்து நீரில் உப்பு, சீரகம் சேர்த்து வேக வைத்து சாப்பிட்டால் மூளைக் கோளாறுகள் நீங்கும்.

8. முடி வளர: கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, அருகம்புல், செம்பருத்திப் பூ, செந்தாமரை இதழ், கோரைக் கிழங்கு, வெள்ளை மிளகு, கார் போக அரிசி, வெட்டிவேர், மாசிப்பச்சை முத-யவற்றை தேங்காய் எண்ணையில் கலந்து பூசலாம்.

**2. கண்கள்**

9. இமைகள் கனத்து இருங்கினால் கடுக்காயை (அல்லது நாமக்கட்டியை) நீர் விட்டு உறைத்து இமைகளில் தடவலாம்.

10. காடராக்ட் அல்லது திரை வந்து பார்வை மங்கினால்-ஒரு மிளகை தயிரில் ஓரிரவு ஊர வைத்து கண்களில் தடவலாம். கரிசலாங்கண்ணி கீரை சாறு எடுத்து வெள்ளைத் துணியில் நனைத்து உலரவைத்து கிழித்து திரியாக்கி, விளக்கெண்ணையில் விளக்கு ஏற´றி புகையை செப்புச் சொம்பில் ஏற்றி, சுரண்டி எடுத்து பசு வெண்ணை கலந்து மை உண்டாக்கி கண்களில் இட்டுக் கொள்ளலாம்.

11. கண்கள் பளிச்சிட, நந்தியா வட்டை பூக்களை கண்கள் மீது 1/2 மணி நேரம் வைத்து குளிர்ச்சியாக்கலாம்.

12. கண்வ-க்கு படிகாரம் கரைத்த நீரை விட்டு கழுவலாம். பன்னீரால் கழுவலாம். சோற்றுக் கற்றாழை சதையை எடுத்து இரவில் கண்களில் வைத்து கட்டி உறங்கலாம்.

13. கண்ணில் வெள்ளைப் புள்ளிகள் விழுந்தால் மிளகு, திப்பி-, அரைத்து ஒரு சொட்டு தேன் கலந்து கண்களில் மை போல் இட்டால் பூ மறையும்.

**3. காது**

14. காது வ- வந்தால் வெள்ளைப் பூண்டை சுட்டு பஞ்சில் சுற்றி காதில் அடைக்கலாம்.

15. காதில் சீழ் வடிந்தால் - நல்லெண்ணையில் - 4 மிளகாய் போட்டு காய்ச்சி தலைக்கு வெந்நீர் ஊற்றி குளிக்கலாம். பச்சை தண்ணீர் கூடாது.

**4. மூக்கு**

16. மூக்கடைப்பு ஏற்பட்டால் கறிஞ்சளை சுட்டு புகையை முகரலாம். ஊசியில் ஒரு மிளகைச் சொருகி விளக்கில்



சுட்டு புகையை முகரலாம்.

17. சளி, இருமல் வந்தால், கருந்துளசி, தூதுவளை, ஆடாதொடை, அதிமதுரம் சித்தரத்தை கஷாயம் செய்து தேன் கலந்து சாப்பிடலாம்.

18. மூக்கில் இரத்தம் வடிந்தால், வரட்டித் துண்டை நீரில் நனைத்து முகரலாம். அதிமதுர வேரை அரைத்து தண்ணீரில் கலந்து மூக்கில் விட்டு கழுவலாம்.

**5. தொண்டை**

19. தொண்டை கரகரப்புக்கு கிராம்பை வாயில் அடக்கிக் கொள்ளலாம்.

20. தொண்டைப் புண்ணுக்கு மஞ்சள் பொடியை பா-ல் இட்டு காய்ச்சி பனங்கற்கண்டு சேர்த்து குடிக்கலாம்

21. தொண்டையில் எச்சில் விழுங்க முடியாமல் வ- இருந்தால் விளக்கெண்ணையில் சுண்ணாம்பு கலந்து தொண்டைக் குழியில் பூசலாம்.

**6. வாய்**

22. வாந்தி வந்தால் எலுமிச்சம்பழம் பருப்பை தோலுரித்து சுட்டுக் கருக்கி தேன் கலந்து சாப்பிடலாம்.

23. வாய்ப்புண் வந்தால் மணத்தக்காளி கீரை சமைத்து சாப்பிடலாம். வாய்ப்புண்ணுக்கு விபூதிபச்சிலையை மென்று திண்ணலாம். வாய் வயிறு வேக்காளத்திற்கு கசகசா, பாதாம் பருப்பை இரவில் ஊற வைத்து காலையில் அறைத்து பசும்பா-ல் கலந்து சாப்பிடலாம். வாய்ப்புண்ணுக்கு தேங்காய் பால் நல்லது.

24. நா வறட்சிக்கு ஆல்பக்கோடா பழம் வாயில் அடக்கி கொள்ளலாம்.

25. நாருசிக்கு புதினா கீரை கொத்து மல்- இலை அரைத்த சட்டினியை சாப்பாட்டில் சேர்க்கலாம். நாரத்தை ஊறுகாய் சேர்க்கலாம்.

26. பல்வ- வராமல் தடுக்க வேப்பங்குச்சி, ஆலங்குச்சி, வேலங்குச்சி கொண்டு பல் துலக்கலாம். பல்வ- வந்தால் கிராம்பு தைலத்தை பஞ்சில் வைத்து அமுக்கலாம். பல்வ-க்கு காட்டாமணக்கு செடியின் பட்டையை நறுக்கி, நெருப்பில் வதக்கி துணியில் கட்டி ஒத்தடம் கொடுக்கலாம். நன்னாரி வேர் கஷாயத்தில் தென்னங்கள் காடி கலந்து கொப்பளிக்கலாம். வேளைக் கீரை வேர் அருகம்புல் சாறு எடுத்து காதில் 3 சொட்டு விடலாம். புதினா கீரையை உலர்த்தி காய வைத்து பொடி செய்து உப்புடன் கலந்து

தேய்த்தால் ஈறு உபாதைகள் அகலும். வெங்காயத்தை பச்சையாக கடித்து சாப்பிடலாம்.

27. பனியில் உதடுகள் வெடித்து ரத்தம் கசிந்தால், நெய் அல்லது ஆளி விதை எண்ணை, வெண்ணை பூசலாம்.

### 7. முகம்

28. பெண்களின் முகம் பொ-வு பெற மஞ்சள் அரைத்து பூசிக் குளிக்கலாம்.

29. கன்னங்கள் வீங்கினால் (பொன்னுக்கு வீங்கி) தங்கச் சங்கி-அணியலாம்.

30. முகப்பருக்கள் வராமல் இருக்க படிகாரத் தண்ணீர் விட்டு முகம் கழுவலாம்.

31. முகம் அழகு பெற வெள்ளை சாரட்டணை வேர், தோல் நீக்கிய மஞ்சள் இவற்றை அரைத்து எருமைப்பாலத் சேர்த்து முகத்தில் தடவலாம். ஆரஞ்சுப் பழ சாற்றை பிழித்து முகத்தில் பூசிக் கொண்டு முகம் கழுவலாம்.

### 8. உடல்

32. உடல் வ-க்கு நல்லெண்ணைத் தேய்த்து வெந்நீரில் குளிக்கலாம். (பக-ல் தூக்கம் கூடாது) கண்டந்திப்பி-யை நெய்யில் வறுத்து மிளகு சேர்த்து அரைத்து ரசம் செய்து சாப்பிடலாம். வெள்ளைப் பூண்டு ரசம் செய்து சாப்பிடலாம்.

33. பசி தூண்ட எலுமிச்சம் பழ ரசத்தில் சீரகம் இஞ்சி வைத்து அரைத்து கலக்கி சர்க்கரை சேர்ˈத்து சாப்பிடலாம். சீரகம், மிளகு பொடி செய்து நெய்யில் வறுத்து உப்பு சேர்த்து சாதத்துடன் சாப்பிடலாம். வெங்காயம் தயிர் சேர்த்து பச்சடியும் சேர்க்கலாம். பசி தூண்ட தக்காளிப்பழச் சாறில் மிளகு பொடி உப்பு கலந்து சூப் சாப்பிடலாம்.

34. வயிற்று உப்புசத்திற்கு சுக்கு வெந்நீர் சாப்பிடலாம். நெற் பொரியை தயிர் கலந்து சாப்பிடவும்.

35. வயிற்றுப் பொருமலுக்கு ஓமத்தை வறுத்து மோரில் காய்ச்சி சாப்பிடலாம். வேப்பழம்பூவை (காய்ந்தது) எரி எண்ணையிட்டு (நெய் விளக்கெண்ணை, நல்லெண்ணை) காய்ச்சி உப்பு கலந்து சாதத்துடன் சாப்பிடலாம்.

36. வயிற்றில் கீரைப் பூச்சிகள் வந்தால் வேப்பிலைக் கொழுந்து, மிளகு அரைத்து உப்புடன் கலந்து வெறும் வயிற்றில் விழுங்கலாம்.

37. மலம் கழியாம-ருந்தால் சாம்பார் வெங்காயத்தை உரித்து விளக்கெண்ணைணை விட்டு வதக்கி சாப்பிடலாம். சம்பக மொட்டு, சடா மஞ்சரி சதகுப்பை கஷாயத்தில் விளக்கு



எண்ணை கலந்து குடிக்கலாம். (தயிர், மோர் கூடாது) .

38. வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் காய்ந்த மாம்பழக் கொட்டை பருப்பை தீயில் சுட்டு கருக்கி தேன் கலந்து சாப்பிடலாம்.

39. சிறுநீர் பிரிய வயிற்றின்மேல் வெள்ளரி விதைகளை அரைத்து பூசலாம்.

40. பித்தப்பையில் கல் இருந்தால் வாழைத்தண்டு சாறு, வாழைத் தண்டு கறி செய்து சாப்பிடலாம்.

41. மஞ்சள் காமாலை வந்தால் கீழாநெல்-ச் செடியை வேறுடன் பிடுங்கி அரைத்து வடிகட்டி தயிறுடன் கலந்து சாப்பிடலாம். மஞ்சள் கரிசலாங்கண்ணி கீரை சமைத்து சாப்பிடலாம். முள்ளங்கியை பந்தையிட்டு, தக்காளிப் பழத்துண்டுடன் சோத்து அரைத்து கொத்தமல்- கீரை, மிளகு கொடி சேர்த்து சூப் செய்து சாப்பிடலாம்.

42. விஷ சுரத்திற்கு கருடக் கொடி, நிலவேம்பு கஷாயம் செய்து சாப்பிடலாம். மோர், தயிர் கூடாது.

43. குழந்தைகளுக்கு அஜீரணம் ஏற்பட்டால் ஓமத்தை வறுத்து வெந்நீரில் போட்டு வடிகட்டி கொடுக்கலாம். வசம்பை சுட்டு கருக்கி பொடி செய்து தேனில் குழைத்து நாக்கில் தடவலாம். ஓமவல்- இலைச் சாறு, வெற்றிலைச் சாறு கொடுக்கலாம்.

44. மார்சளிக்கு சித்திரத்தை கஷாயம் செய்து தேன் கலந்து சாப்பிடலாம். கபம் விலக தும்பை பூ சாறு, வேப்பங்குச்சி சீவல் செய்து பா-ல் காய்ச்சி தேன் கலந்து குடிக்கலாம்.

45. அஸ்தி காங்கை (கணைச்சூடு) - க்கு விஷ்ணு கிராந்தி இவைகளை அரைத்து பா-ல் காய்ச்சி தேன் கலந்து சாப்பிடலாம். வில்வப்பழச் சதையை பா-ல் போட்டு காய்ச்சி குடிக்க கணைச் சூடு அகலும். பேயன் வாழைப் பழத்தை துண்டாக்கி, விளக்கெண்ணையில் ஊற வைத்து பனங்கற்கண்டுடன் சேர்த்து வெறும் வயிற்றில் சாப்பிடலாம்.

46. இரத்த சுத்திக்கு நன்னாரி சர்பத் மாகாளி கிழங்கு ஊறுகாய் நல்லது.

47. ஓயாத விக்கலுக்கு வெள்ளாட்டுப் பா-ல் இஞ்சி துண்டு கலந்து சாப்பிடலாம்.

48. சூட்டினால் வயிற்றுவ- வந்தால் வெந்தயத்தைத் தயிரில் ஊறவைத்து வெறும் வயிற்றில் சாப்பிடலாம்.

49. சூட்டினால் நீர் சுருக்கு ஏற்பட்டால் வாழைக்கிழங்கை அரைத்து எலுமிச்சங்காய் அளவு துணியில் வைத்து சுட்டு கருக்கி விளக்கெண்ணை கலந்து சாப்பிடலாம்.

50. நீரிழிவு நோய் ஏற்பட்டால் எள்ளுப் புண்ணாக்கை இடித்து,

ச-த்து சர்க்கரை கலந்து சாப்பிடலாம். நெல்-க்காய் சாறு தேன் கலந்து சாப்பிடலாம்.

51. இரத்த சோகை - காரட் சாறு தேன் கலந்து சாப்பிடலாம்.

52. மூல வியாதிக்கு சீமை அத்திப்பழத்தை தேனில் ஊறவைத்து வெறும் வயிற்றில் சாப்பிடலாம். வெங்காயம், தயிர் சேர்க்க வேண்டும். இரத்த மூலத்திற்கு பிரண்டை கொழுந்தை நெய்விட்டு வதக்கி, உப்பிட்டு கொட்டைப்பாக்கு அளவு 9 நாட்கள் காலையில் உட்கொள்ள வேண்டும்.

53. வயிற்றில் கட்டி வந்தால் நாவல் பழம் உப்பு கலந்து சாப்பிடலாம். வாயுக்கோளாறு - முள்ளங்கி சாறு உப்பு கலந்துசாப்பிடலாம்.

54. வயிற்றுக்கோளாறுக்கு பப்பாளிப்பழம் காலையில் சாப்பிடலாம்.

55. நெஞ்சுவ-க்கு பேரீச்சம்பழம் பால் இரவில் சாப்பிடலாம். அரிசி திப்பி-யை நெய்யில் வறுத்து பாலுடன் சாப்பிடலாம்.

56. ஆஸ்துமாவுக்கு சுக்கு, மிளகு 20 கிராம், திப்பி-, அதிமதுரம், வாலுளுவை அரிசி, வெண் துளசி இலை, நில வேம்பு செம்பருத்திப் பூ, கஸ்தூரி மெழுகு (தலா 10 கிராம்) பனங்கற்கண்டு சேர்த்து பொடி செய்து காலை உணவுக்கு முன்பு சாப்பிட வேண்டும். வெள்ளை எருக்கம்பூவிலுள்ள மூடு இதழ்களை விலக்கி, உள்ளே தேர் போன்ற நரம்பை மட்டும் கிள்ளி எடுத்து ஒரு நரம்பும் ஒரு கிராம்பும் வெற்றிலையுடன் சேர்ந்து மென்று தின்னலாம். (3 நாள் போதும்)

**.பிறப்பு உறுப்புகள்**

57. ஆண்கள் விதர் வீக்கத்திற்கு கழுச்சிக் கொட்டைப் பருப்பை அரைத்து முட்டை வெள்ளைக் கருவுடன் கலந்து தடவலாம்.

58. பெண்கள் பூப்பு அடையாம-ருந்தால் வே-ப்பருத்தி (உத்தாமணி) இலைச்சாற்றை காலையில் அரை டம்ளர் பருகலாம். பத்தியம் கடுகு, நல்லெண்ணை, மீன், மாமிசம் கூடாது. பால் சோறு மட்டும் போதும். பெண்கள் மாதவிடாய் காலத்தில் இரத்தப்போக்கு அதிகம் ஏற்பட்டால் வில்வ இலைக் கொழுந்துகளை (10) அரைத்து வடிகட்டி பா-ல் காய்ச்சி குடிக்கலாம்.

59. பெண்களுக்கு வெட்ட நோய் ஏற்பட்டால் காட்டுக் கொத்தவரை இலைச்சாற்றை எடுத்து நல்லெண்ணை கலந்து சாப்பிடலாம். அம்மான் பச்சரிசி செடியை வேறுடன் பிடுங்கி அரைத்து நெல்-க்காய் அளவு பா-ல் காய்ச்சி குடிக்கலாம். ரஸ்தாளி வாழப்பூவை ஆய்ந்து வடிகட்டி தயிர் கலந்து சாப்பிடலாம்,

60. கர்ப்பம் தரிக்க பெண்களுக்கு மாதவிடாய் வந்து குறித்த



4ஆம் நாளில் பச்சைக் கருச்சூரப்பட்டை வேரை அரைத்து பசுவெண்ணையில் கலந்து சாப்பிட்டால் கர்பம் தங்கும். இஞ்சி, மிளகு, திப்பி-, நாக கேசரம் எடுத்துப் பொடித்து பசு நெய் கலந்து சாப்பிட்டால் கர்பம் தங்கும். ஆலமரத்தின் வடக்கே போகும் கிளையில் உள்ள இலைக் கொழுந்துகளை சாப்பிட்டால் ஆண் குழந்தை பிறக்கும்.

**கை, கால்கள்**

61. மூட்டு வ- தென்னை மரக்குடி எண்ணை தடவி வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம். நச்சுக் கொட்டான் கீரை சமைத்து சாப்பிடலாம். கடுகு சுக்கு அரைத்து கொதிக்க வைத்து பற்று போடலாம். முடக்கத்தான் கீரையை அரைத்து தோசைமாவுடன் கலந்து தோசை சுட்டு சாப்பிடலாம்.

62. பக்க வாதத்திற்கு வாத நாராயண மரத்தின் இலைகளை அரைத்து பற்று போடலாம். வாத நாரயண தைலம் தடவலாம். முருங்கப்பட்டை, ஆடா தொடை, வேர், கருவேலப்பட்டை, பூவரசம்பட்டை, பறங்கிப்பட்டை, புளியம்பட்டை, ஆமணக்கு இலை, கருநொச்சி இலை, காட்டாமணக்கு இலை, சுக்கு, மர மஞ்சள் இவைகளை சம எடை (200 கிராம்) எடுத்து பொடி செய்து வெந்நீரில் வேக வைத்து குழம்பாக்கி ஏழு நாட்கள் மூடிவைத்து புழுங்கலரிசி கொதி நீர் விட்டு தேவையான அளவு மருந்தை உட-ல் தடவினால் குணமாகும்.

63. பாத பித்த வெடிப்புக்கு உப்பு நீரில் பாதத்தை கழுவிய பிறகு மஞ்சள், வேப்பங்கொழுந்தை அரைத்து விளக்கெண்ணை சேர்த்துப் புசலாம். எட்டிக்கொட்டை, பருப்பு, மயில் துத்தம் இவற்றை பொடி செய்து விளக்கெண்ணை சேர்த்து பூசலாம்.

64. கீல் வாதத்திற்கு அன்னாசி பழச்சாறு சர்க்கரை கலந்து குடிக்கலாம்.

65. கால்கை வ-ப்பு (காக்காய் வ-ப்பு) வெள்ளைத் தாமரைப் பூவை கஷாயம் வைத்து சாப்பிடலாம்.

66. சேற்றுப்புண் அகல மயில் துத்தம், மிருதார்சிங்கி, ரச கற்பூரம், கந்தகம் (தலா 20 கிராம்) முத-யவற்றை அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றில் கலக்கி பூசவேண்டும்.

67. மேக நோய்க்கு அவரை இலையை அரைத்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு காலையும் மாலையும் சாப்பிடவேண்டும். (3 நாட்கள் உப்பு சேர்க்க கூடாது) .

68. தோ-ல் வெண்மைக்கு வில்வ இலை, கருந்துளசி,நிலவேம்பு, மருதாணி இலை, சங்கு இலை, வல்லாரை இலை இவற்றை நிழ-ல் உலர்த்தி பொடியாக்கி சம ளஎடையில் ஒரு ஸ்பூன்

1 Proof



தினசரி காலையில் ஜலம் கலந்து சாப்பி`டலாம். (தாம்பத்ய உறவு, கடுகு எண்ணை கூடாது) .

69. தேமலுக்கு வெள்ளைப் பூண்டையும் வெற்றிலையும் அரைத் பூசலாம். பப்`பாளி மரப்பால் தடவலாம். கருந்தேமலுக்கு தினசரி காலையில் ஜலம் கலந்து சாப்பி`டலாம். (தாம்பத்ய உறவு, கடுகு எண்ணை கூடாது) .

69. தேமலுக்கு வெள்ளைப் பூண்டையும் வெற்றிலையும் அரைத்து பூசலாம். பப்`பாளி மரப்பால் தடவலாம். கருந்தேமலுக்கு மருதாணி இலையை அரைத்து துணி சோப்பு கலந்து உட-ல்பூசலாம்.

70. பூச்சிக்கடிகளுக்கு குப்பைமேனி சாறு எடுத்து தடவலாம்.

71. பெண்களுக்குப் பிள்ளைப் பால் பெருக ஆலம் விழுது துளிறு, ஆ-ன் விதை அரைத்து பா-ல் கலந்து சாப்பிடலாம். பால் சுரக்க கீழாநெல்- வேரை பசும்பா-ல் கலந்து குடிக்கலாம். பால் கட்டிக் கொண்டு மார்பு வ-த்தால் மல்-கைப் புவை நிறைய மார்பில் கட்டிக் கொண்டு உறங்கவேண்டும். மார்பு குத்தலுக்கு நீர்ப்பூர இலை வெங்காயம் விளக்கெண்ணை சேர்த்து பற்று போட வேண்டும்.

72. நாய்க்கடி - கடிச்சா செடிப்பட்டை நசுக்கி கடிபட்ட இடத்தில் கட்டலாம்.

73. நல்ல பாம்புக்கடி வாழத்தண்டு சாறு 1/4 படி உடனே கொடுக்கவும். பெரியா நங்கை இலையை அரைத்து சுண்டைக்காய் அளவு கொடுக்கலாம்.

74. நட்டவாக்கா- கடி ஒரு மூடி கொப்பரைத் தேங்காய் மென்று தின்னலாம்.

75. எலும்பு முறிவு முருங்கைக் கீரை கூழ் செய்து முறிவுபட்ட இடத்தில் பூசி, மரச்சட்டங்கள் வைத்துக்கட்டி, துணியில் சுற்றி அவரை இலைச் சாற்றில் சுண்ணாம்பு (வெள்ளைக்களிமண்) கலந்து குழம்பாக்கி கட்டின்மேல் பூச வேண்டும்.

பொது : சித்த மருத்துவர்கள் இயற்கை தாவரங்கள் மூலம் அநேக வியாதிகளுக்கு மருந்துகள் கூறியுள்ளார்கள். வியாதி நிச்சயம் குணமாகும். செலவு இல்லை. வேறு உபாதைகள் ஏற்படாது. காலை ஆகாரத்தில் இஞ்சி துண்டுகள், மதிய உணவிற்குப் பின் சுக்கு நீர், இரவு படுக்கப்போகும் முன்பு கடுக்காய் லேகியம் உண்டால் உட-ல் பாதி வியாதிகள் அண்டாது. ஒவ்வொரு குடும்பமும் இயற்கை வைத்தியத்தை தெரிந்து கொண்டு ஆரோக்கியமான குடும்பமாக வாழ வேண்டும்.



## இணைப்பு -4

## கோத்ர ரிஷிகள்

பிருகு மஹரிஷி சிவகணங்களி-ருந்து பிரிந்து சூரிய மண்டலத்தில் ஸ்ரீ ஹரியை வழிபடும் கூட்டத்தில் சேர்ந்தனர். பின்னர் இக்கூட்டத்தினின்றும் பிரிந்து அசுரர்கள், அரக்கர்கள் கூட்டத்திற் பிருகு மஹரிஷியின் வழித் தோன்றல்கள் குல குருவாயினர். பிருகு மஹரிஷி வழியில் பிரிந்து சென்று தென்னாடு வந்தவர்கள் “பிருகத்சரணர்கள்” எனப்படுவர். பிருகு மகரிஷியின் வழித் தோன்றல் “ பார்கவ” கோத்திரத்தினர். இவர்களில் 20 பிரிவினர் பிரபலமானவர்கள். கப்பல் கட்டுதல், மரவீடு கட்டுதல், வில்வித்தை, கோடரி முத-யவைகளை கற்றுத் தருபவர்கள்.

(அ) பிருகு மகரிஷியின் வழித்தோன்றல்களின் கோத்திரம் - முக்கியமான மூன்று ரிஷிகளின் பெயர்கள் (ப்ரவரம்)

| | | |
|---|---|---|
| 1. | ஜமதக்னி | பார்கவ, ச்யாவன, ஆப்னவான |
| 2. | ஜாபா- | பார்கவ, வைதஹவ்ய, ரைவஸ |
| 3. | ஜாமதக்னய | பார்கவ, ஔரவ, ஜாமதக்னய |
| 4. | ஜைமினி | பார்கவ, ஔர்வ, ஜாமக்னய |
| 5. | பௌலஸத்ய | பார்கவ, ஔர்வ, ஜாமதக்னய |
| 6. | மாண்டுகேய | பார்கவ, ஔர்வ, ஜாமதக்னய |
| 7. | மௌனபார்கவ | பார்கவ, வைதஹவ்ய, ஸாவேதஸ |
| 8. | வாதூல | பார்கவ, வைஹவ்ய, ஸாவேதஸ |
| 9. | ஸ்ரீவத்ஸ | பார்கவ, ச்யவன, ஆப்னவன, ஔர்வ, ஜமதக்னய(5) |
| 10. | க்ருதஸ்மத | பார்கவ, கர்த்ஸமத (2) |
| 11. | சுனக | பார்கவ, கார்த்ஸமத(2) |
| 12. | யக்ஞபதி | கார்த்ஸமத (2) |
| 13. | அவட | பார்கவ, ஔர்வ, ஜாமதக்னய |
| 14. | ஆர்ஷ்டிஷேண | பார்கவ, ஆர்ஷ்டிஷேண, ஆனூப |
| 15. | ஆஸ்வலாயன | பார்கவ, வாத்யஸ்வ, தைவோதாஸ |
| 16. | கஸ்யபி | பார்கவ, வைதஸவ்ய, ஸாவேதஸ |
| 17. | காத்யாயன | பார்கவ, ஆர்ஷடிஷேண, ஆனூப |
| 18. | கார்க்ய | பார்கவ, வைதஹவ்ய, ரைவஸ |
| 19. | க்ருத்ஸமத | பார்கவ, சைளனஹோத்ர, கார்த்ஸமத |
| 20. | நைத்ருப | பார்கவ, ஆர்ஷ்டிஷேண, ஆனூப |

ஆ. பிருகு மகரிஷிக்குப் பிறகு, ஆங்கிரஸ மகரிஷி 26 கோத்திரத்திற்கு முன்னோடியாக திகழ்ந்தார். தமிழ் வேதங்களையும் கற்று தமிழையும், குதிரைகள் பண்ணை அமைத்தல், வில் வித்தை

முத-யவர்களையும் இவர்களின் வழித்தோன்றல்கள் கற்றுத் தந்தனர். ஆங்கீரஸ மகரிஷியின் வழித் தோன்றல்களில் பலர் வைணவ மதத்தை பரப்பினர்.

**கோத்திரம் முக்கியமானமூன்றுரிஷிகளின் பெயர்கள் (பிரவரம்)**

1. உதத்யர் ஆங்கிரஸ், ஔதத்ய, கௌதம
2. கௌதம ஆங்கிரஸ், ஆவாஸய, கௌதம
3. ஆயாஸ்ய ஆங்கிரஸ், ஆயாஸ்ய, கௌதம
4. கார்கேய ஆங்கிரஸ், பார்ஹஸ்பத்ய, பாரத் வாஜ
5. பாரத்வாஜ ஆங்கிரஸ், பார்ஹஸ்யபத்ய, பாரத்ʼவாஜ
6. ஆபஸ்தம்ப ஆங்கிரஸ், பார்ஹஸ்பத்ய, பாரத்வாஜ
7. கௌன்டின்ய ஆங்கிரஸ், பார்ஹஸ்பத்ய, பாரத்வாஜ
8. பௌருகுத்ஸ ஆங்கிரஸ, பௌருகுத்ஸ, ஆஸதஸ்ய
9. பாதாரயண ஆங்கிரஸ, பௌருகுத்ஸ, த்ராஸதஸ்ய
10. விஷ்ணுவிருத்த ஆங்கிரஸ,பௌருகுத்ஸ, த்ராஸதஸ்ய
11. ஷடமர்ஷண ஆங்கிரஸ, பௌருகுத்ஸ, த்ராஸதஸ்ய
12. மௌத்கல்ய ஆங்கிரஸ, அம்ʼபரீஷ, மௌத்கல்ய
13. மௌத்கல்ய ஆங்கிரஸ, பார்ம்யஸ்ய, மௌத்கல்ய
14. ஹரித ஆங்கிரஸ, அம்பரீஷ, யௌவனாஸ்வ
15. ஸங்கிருதி சாத்ய, ஸாவ்க்ருத்ய, கௌரீவித
16. ஸங்கிருதி ஆங்கிரஸ, ஸபங்க்ருத்ய, கௌரீவித
17. கப்யாங்கிரஸ ஆங்கிரஸ, ஆமஹாவ்ய, ஔருக்ஷய
18. கார்க்யேஆங்கிரஸ, பார்ஹஸ்பத்ய, பாரத்ʼவாஜ, சைன்ய கார்க்கீய
19. குத்ஸ ஆங்கிரஸ, மாந்தாத்ர, கௌத்ஸ
20. ராத்தா ஆங்கிரஸ, வைரூா, ராத்தா
21. கண்வ ஆங்கிரஸ, ஆஜமீட, காண்வ
22. கபில ஆங்கிரஸ, ஆமஹீயவ, ஔருக்ஷயஸ
23. கர்க ஆங்கிரஸ, அம்பரீஷ, கர்க
24. குத்ஸ ஆங்கிரஸ, அம்பரீஷ, யெவனாஸ்வ,
25. பௌருகுத்ஸ ஆங்கிரஸ, பௌருகுத்ஸ, ஆஸதஸ்ய
26. லோஹித ஆங்கிரஸ, வைஸவாமித்ர, லோஹித

இ. அத்ரி மகரிஷி தென்னாட்டில் பிறந்தவர். இவர் மனைவி அனசூயா. அத்தரியின் புதல்வர் தத்தாத்ரேயர். இவர் 13 கோத்திர ரிஷிகளின் முன்னோடி.

**கோத்திர ரிஷி முக்யமான மூன்று ரிஷிகளின் பெயர்கள்**

1. ஆத்ரேய ஆத்ரேய, ஆர்ச நானஸ, ச்யாவாச்வ
2. அத்ரி ஆத்ரேய, ஆர்சநானஸ, ச்யாவாச்வ
3. உத்தாலக ஆத்ரேய, ஆர்சநானஸ, ச்யாவாச்வ
4. தத்தாத்ரேய ஆத்ரேய, ஆர்சநானஸ, ச்யாவாச்வ



5. பதஞ்சல ஆத்ரேய, ஆர்சநானஸ, ச்யாவாச்வ
6. மாஹ¬ன- ஆத்ரேய, ஆர்சநானஸ, ச்யாவாச்வ
7. மௌத்கல்ய ஆத்ரேய, ஆர்சநானஸ, பௌர்வாகித
8. முத்கல ஆத்ʼரய, ஆர்சநானஸ, பௌர்வாகித
9. கௌரிவீத ஆத்ரேய, ஆர்சநானஸ, பௌர்வாகித
10. தக்ஷ ஆத்ரேய, காவிஷ்டிர, பௌர்வாகித
11. தனஞ்சய ஆத்ʼரய, ஆர்சநானஸ, காவிஷ்டிர
12. பீஜாவாப ஆத்ரேய, ஆர்சநானஸ, ஆதித
13. பாலேய ஆத்ரேய, வாமரத்ய, பௌத்ரிக

(ஈ) விஸ்வாமித்ர மகரிஷி (அரசனாக இருந்து தவம் செய்து பிரம்ம ரிஷி பட்டம் பெற்றவர். காயத்ரி மந்திரத்தை உலகுக்கு அளித்தவர். சிவபெருமானை ஆராதிப்பவர். வடபுலத்து தமிழர்களின் குலகுரு)-இவர் வழி வந்தவர்கள் 13 கோத்திர ரிஷிகள்.

**கோத்திர ரிஷி முக்கியமான மூன்று ரிஷிகளின் பெயர்கள் (பிரவரம்)**

1. கௌசிக வைஸ்வாமித்ர, ஆமர்ஷன், கௌசிக
2. அகமர்ஷண வைஸ்வாமித்ர, ஆகமர்ஷன், கௌசிக
3. லோஹித வைஸ்வாமித்ர, அஷ்டக, லோஹித
4. விஸ்வாமித்ர வைஸ்வாமித்ர, தேவராத, ஔதல
5. சாலாவத வைஸ்வாமித்ர, தேவராத, ஔதல
6. காலவ வைஸ்வாமித்ர, தேவராத, ஔதல
7. ஜாபா- வைஸ்வாமித்ர, தேவராத, ஔதல
8. தேவராத வைஸ்வாமித்ர, தேவராத, ஔதல
9. கதக வைஸ்ʼவாமித்ர, கதக, த்வயாஷேய
10. கத (காதி) வைஸ்வாமித்ர, மதுசந்தஸ, ஆஜ
11. காத்யாயன வைஸ்வாமித்ர, காத்ய, அத்கீல
12. காமகாயன வைஸ்வாமித்ர, தேவ சிரவஸ, தைவதரேதஸ
13. கௌசிக வைஸ்வாமித்ர, சாலங்காயன, ஔதல

உ. வசிஷ்ட மகரிஷி (அருந்ததியின் கணவர். வடபுலத்து சூரிய வம்ச அரசர்களின் குலகுரு. அகஸ்தியரின் சகோதரர் திருமால் பக்தர்) 13 கோத்திர ரிஷிகளின் முன்னோடி.

**கோத்திர ரிஷி முக்கியமான மூன்று ரிஷிகளின் பெயர் (பிரவரம்)**

1. கொண்டின்ய வாசிஷ்ட்ட, மைத்ராவருண, கௌண்டின்ய
2. வாசிஷ்ட்ட வாசிஷ்ட்ட, மைத்ராவருண, கௌண்டின்ய
3. மித்ராவருண வாசிஷ்ட்ட, மைத்ராவருண, கௌண்டின்ய
4. மௌத்கல வாசிஷ்ட்ட, மைத்ராவருண, கௌண்டின்ய
5. ஆச்வலாயன வாசிஷ்ட்ட, ஐந்த்ரப்ரமத, ஆபரத்வஸவ்ய
6. உபமன்யு வாசிஷ்ட்ட, ஐந்த்ரப்ரமத, ஆபரத்வஸவ்ய
7. காணிவ வாசிஷ்ட்ட, ஐந்த்ரப்ரமத, ஆபரத்வஸவ்ய
8. ஜாதுகர்ணய வாசிஷ்ட்ட, ஐந்த்ரப்ரமத, ஆபலத்வஸவ்ய

| | | |
|---|---|---|
| 9. | வாசிஷ்ட்ட | வாசிஷ்ட்ட, ஐந்த்ரப்ரமத, ஆபரத்வஸவ்ய |
| 10. | போதாயன | வாசிஷ்ட்ட, ஆத்ரேய, ஜாதுகர்ணய |
| 11. | வசிஷ்ட | வாசிஷ்ட (ஒரேரிஷி-ஏகார்ஷேய) |
| 12. | ஹரித | வாசிஷ்ட (ஒரேரிஷி-ஏகார்ஷேய) |
| 13. | பராசர | வாசிஷ்ட, சாக்த்ய, பராசர்ய |

ஊ. காஸ்யப மகரிஷி (அதிதி, திதி முத-யவர்களின் கணவர் தேவர்கள். அசுரர்களின் மூதாதை. பிரமனின் புதல்வர் 13 ரிஷிகளின் முன்னோடி.

| | கோத்திர ரிஷி | முக்கியமான மூன்று ரிஷிகளின் பெயர்கள் (பிரவரம்) |
|---|---|---|
| 1. | நைத்ருவ காஸ்யப | காஸ்யப, ஆவத்ஸார, நைத்ருவ |
| 2. | பிருகு | காஸ்யப, ஆவத்ஸார, நைத்ருவ |
| 3. | மாரீச | காஸ்யப, ஆவத்ஸார, நைத்ருவ |
| 4. | ரேப காஸ்யப | காஸ்யப, ஆவத்ஸார, ரேப |
| 5. | ரைப்ய | காஸ்யப, ஆவத்ஸார, ரைப்ய |
| 6. | வாத்ஸ்ய | காஸ்யப, ஆவத்ஸார, ரைப்ய |
| 7. | காஸ்யப | காஸ்யப, ஆஸித, ரைவல |
| 8. | பௌகாக்ஷி | காஸ்யப, ஆவத்ஸார, ஆஸித |
| 9. | சாரத்வத | காஸ்யப, ஆவத்ஸார, ஆஸித |
| 10. | சாண்டில்ய | காஸ்யப, தைவல, ஆஸித |
| 11. | சாண்டில்ய காஸ்யப | காஸ்யப, ஆவத்ஸார, சாண்டில்ய |
| 12. | சாண்டில்ய | காஸ்யப, ஆவதஸார, நைத்ருவ-(ரேப ரைப, சாண்டில, சாண்டில்ய - ஏழு) |
| 13. | காஸ்யப | காஸ்யப, ஆவத்ஸார, நைத்ருவ- (ரேப, ரைப, சாண்டில, சாண்டில்ய - ஏழு) |

எ. அகஸ்த்திய மகரிஷி (இவர் முருக பக்தர். சிவபெருமானின் அம்சம். தமிழ் சங்க தலைவர். பாண்டிய மன்னரின் குலகுரு) 7 கோத்திர ரிஷிகளின் முன்னோடி.

| | கோத்திர ரிஷி | முக்கிய ரிஷிகள் |
|---|---|---|
| 1. | ஆகஸ்த்ய | அகஸ்த்ய, மாஹேந்திர, மாயோபுவ |
| 2. | புலஹ | அகஸ்த்ய, மாஹேந்திர, மாயோபுவ |
| 3. | மாயோபுவ | அகஸ்த்ய, மாஹேந்திர, மாயோபுவ |
| 4. | இத்மவாஹ | அகஸ்த்ய, வாத்யஸ்வ, ஐத்மவாஹ |
| 5. | ஆகஸ்த்ய | அகஸ்த்ய, தார்ட்யவ்ருத, ஐத்மவாஹ |
| 6. | அகத்திய | அகஸ்த்ய (ஒரே ரிஷி) |
| 7. | இத்மவாஹ | அகஸ்திய (ஒரே ரிஷி) கோத்திர ரிஷிகளை ஏற்காத தமிழரசர்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அத்ரி | - | 13 | கோத்திரங்கள் |
| 2. | பிருகு | - | 20 | கோத்திரங்கள் |
| 3. | காஸ்யப | - | 13 | கோத்திரங்கள் |



| | | | | |
|---|---|---|---|---|
| 4. | ஆங்கிரஸ | - | 26 | கோத்திரங்கள் |
| 5. | வசிஷ்ட | - | 13 | கோத்திரங்கள் |
| 6. | விஸ்வாமித்ர | - | 13 | கோத்திரங்கள் |
| 7. | அகஸ்த்ய | - | 7 | கோத்திரங்கள் |
| | மொத்தம் | | 105 | |
| 8. | துர்வாச | - | 1 | |
| 9. | பூரு | - | 1 | |
| 10. | யது | - | 1 | |
| | மொத்தம் | | 108 | |

(இந்த 3 ரிஷிகளின் கோத்திரங்கள் பரவவில்லை)

ஒரு கோத்திரத்தில் பிறந்த பெண்ணை அதே கோத்திரத்தவர் திருமணம் செய்துக் கொள்ளக் கூடாது. வேறு கோத்திரத்து ஆண் மகனையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. (நல்ல வம்சாவளி வளர இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ரிஷிகள் சன்யாசிகள் அல்லர். அவர்களுடைய பத்தினியுடனேயே யாக, யக்ஞங்கள் செய்ய வேண்டும் பெயர் சூட்டுதல், கல்வி போதித்தல், வேதம் ஓதுதல், ஓதுவித்தல், இவர்களுடைய தொழில். இவர்கள் தவத்தில் சிறந்தவர்களாகவும் தேவதைகளை ஏவல் செய்பவர்களாகவும் வாழ்ந்தனர்.

ரிஷிகள் குலத்தொழிலை செய்யாதவர்கள். இவர் ஜாதி வித்யாசம் கிடையாது. பெரும்பாலான ரிஷிகள் பிராமணர்கள் அல்லர். இந்த ரிஷிகளை ஆரியர்கள் எனக் கூறுவது தவறு. பெரும்பாலான ரிஷிகள் கறுப்பு நிறத்தவர். பாரத நாட்டு காடுகளில் வசித்தவர்கள்.

# இணைப்பு -5

## காஞ்சி காமகோடி பீடம-ஜகத்குரு பரம்பரை

1. ஆதிசங்கர பகவத் பாதர் (509-477BC) 2. சுரேஸ்வரர் (477-407BC) 3. ஸர்வஞாத்மர் (406-364BC) 4. சத்ய போதர் (364-268BC) 5. ஞானனந்தர் (268-205BC) 6. சுத்தாநந்தர் (205-124BC) 7. அனந்தானந்தர் (124BC-55BC) 8. கைவல்யானந்தர் (BC55-28AD) 9. க்ருபாசங்கரர் (கி.பி.28-69) 10. சுரேஸ்வரர் (கி.பி.69-127) 11. சித்தகனர் (கி.பி.127-172) 12. சந்திரசேகரர் I (கிபி162-235) 13. சச்சித்கனர் (கிபி235-273) 14. வித்யாகனர் I (கிபி273-317) 15. கங்காதரர் (கிபி317-329) 16. உஜ்வல சங்கரர் (கிபி329-367) 17. பாலகுருசதாசிவர் (கிபி367-375) 18. யோகி-திலக சுரேந்திரர் (கிபி375-385) 19. மார்த்தாண்ட வித்யாகனர் (கி.பி385-398) 20. மூக சங்கரர் (கிபி398-437)

447) 22. பரிபூர்ண போதர் (கிபி447-481) 23. சத்சித்கனர் II (கிபி481-512) 24. சித்சுகர் (கிபி512-527) 25. சச்சிதானந்த கனர் (கிபி527-548) 26. பிரக்ஞான கனர் (கிபி548-564) 27. சித்வியாசர் (கிபி564-577) 28. மகாதேவர் I (கிபி577-601) 29. பூர்ணபோதர் I (கிபி601-618) 30. போதர் (கிபி618-655) 31. பிரம்மா நந்தகனர் I (கிபி655-668) 32. சிதானந்தகனர் (கிபி668-672) 33. சச்சிதானந்தகனர் (கிபி672-692) 34. சந்திரசேகரர் II (கிபி.692-710) 35. சித்சுகர் II (கிபி710-737) 36. சித்சுகானந்தர் (கிபி737-758) 37. வித்யாகனர் II (கிபி758-778) 38. அபிநவ சங்கரர் (கிபி788-840) 39. ஸத்சித்விலாஸர் (கிபி840-873) 40. சோபான மகாதேவர் (கிபி873-915) 41. கங்காதரர் II (கிபி915-950) 42. பிரம்மா நந்தகனர் II (கிபி950-978) 43. ஆனந்தகனர் (கிபி978-1014) 44. பூர்ணபோதர்II (கிபி1014-1040) 45. பரமசிவர் I (கிபி1040-1061) 46. ஸாத்ரானந்த போதர் (கிபி1061-1098) 47. சந்திரசேகரர் III (கிபி.1098-1166) 48. அத்வைதானந்த போதர் (கிபி1166-1200) 49. மகாதேவர் II (கிபி1200-1247) 50. சந்திரசூடர் I (கிபி1247-1297) 51. வித்யாதீர்த்தர் (கிபி1297-1385) 52. சங்கரானந்தர் (கிபி1385-1417) 53. பூர்ணானந்த சதாவிசர் (கிபி1417-1498) 54. வியாஸாசல மகாதேவர் (கிபி1498-1507) 55. சந்திரசூடர் II (கிபி1507-1523) 56. சர்வ சதாவிச போதர் (கிபி1524-1539) 57. பரமசிவர் II (கிபி1539-1586) 58. ஆத்மபோதர் (கிபி1586-1638) 59. பகவந்நாம போதேந்திரர் (கிபி1638-1692) 60. அத்வைதாத்ம பிரகாசர் (கிபி1692-1704) 61. மகாதேவர் III (கிபி1704-1746) 62. சந்திரசேகரர் IV (கிபி1746-1783) 63. மகாதேவர் IV (கிபி1783-1814) 64. சந்திரசேகரர் V (கிபி1814-1850) 65. சுதர்ஸன மகாதேவர் (கிபி1850-1891) 66. சந்திரசேகரர் VI (கிபி1891-1907) 67. மகாதேவர் (கிபி1907) 68. சந்திரசேகரர் VII (கிபி1907-1994) 69. ஜயேந்திரர் (கிபி1994) 70. சங்கர விஜயேந்திரர்.

(பௌத்த, சமண மதங்களை தமிழ் அரசர்கள் தழுவியதும் சங்கர மடம் வலுவிழந்தது. பின்னர் காஞ்சியில் அபிநவ சங்கரர் (கிபி788-840) பட்டமேற்று பின்னர் நாடு முழுதும் விஜயம் செய்து ஆதிசங்கரர் தொடங்கிய பணிகளை முடிக்கத் தொடங்கினார். கிபி 1325-இல் மொகலாயர்கள் கோயில்களை சூறையாடி விக்ரஹங்களை கொள்ளையடித்த போது வித்யாதீர்த்தர் தஞ்சையில் தங்க காமாட்சியை பிரதிஷ்டை செய்து கும்பகோணத்தில் தங்கினார். 59-வது பீடாதிபதி பகவந்நாம போதேந்திரர் ராம நாம சித்தாந்தத்தை பிரபலப்படுத்தினார். 68-வது பீடாதிபதி சந்திரசேகரர் VII மீண்டும் கும்பகோணத்தி-ருந்து



காஞ்சிபுரத்திற்கு மடத்தை கொண்டு வந்தார். இவர் காலத்தில் வாழ்ந்தவர் ரமண மகரிஷி சேஷாத்திரி ஸ்வாமிகள் ஞானானந்த கிரி முத-யோர் சந்திரசேகர ஸரஸ்வதி முத-யவர் புகழ் உலகம் முழுவதும் பரவியது.)

**சிருங்கேரி - சாரதாபீட - ஜகத்குரு பரம்பரை**

ஆதிசங்கர பகவத் பாதர் முத-ல் ஸ்தாபித்த மடம் சிருங்கேரி சாரதா பீடம். ஆதிசங்கரருடைய சீடர் சுரேஸ்வரர் முதல் பீடாதி. இது தவிர ஆதிசங்கரர் வடக்கே ஹரித்வாரம் கிழக்கே ஜகந்நாதம், மேற்கே துவாரகை (தெற்கே சிருங்கேரி) முத-ய பீடங்களையும் நிறுவினார். சிருங்கேரியின் கிளை மடம் விருபாக்ஷம். வித்யாரண்ய ஸ்வாமிகள் காலத்தில் புஷ்பகிரி மடம், பின்னர் சகடபுரம் முத-ய பல இடங்களில் (சிவகங்கை, காகர்ல) சங்கர மடம் தோன்றிற்று. ஆனந்தகிரி, ஹஸ்தாமலகர், பத்மபாதர், தோடகர் முத-ய சீடர்கள் சங்கரமடத்தின் குருமார்களாக இருந்தனர்.

(கிமு 477 -ருந்து கிபி 788 முடிய சிருங்கேரி பீடத்தில் இருந்த குருமார்கள் பெயர் கிடைக்கவில்லை.) சங்கரர் II (கிபி788-820) சுரேஸ்வரர் (கிபி813-834) நித்யபோதர் (கிபி818-848) ஞானகனர் (கிபி846-910) ஞானோத்தமர் (கிபி905-954) ஞானகிரி (கிபி950-1038) சிம்மகிரி (1036-1098) ஈஸ்வர தீர்த்தர் (கிபி1097-1146) நரசிம்ம தீர்த்தர் (கிபி1146-1228) வித்யாசங்கர தீர்த்தர் (கிபி1228-1333) பாரதி கிருஷ்ண தீர்த்தர் (கிபி1328-1380) வித்யாரண்யர் (கிபி1331-1386) சந்திரசேகர பாரதி (கிபி1386-1388) சந்திரசேகர பாரதி II (கிபி1388-1408) புருஷோத்தம பாரதி (கிபி1408-1448) சங்கர பாரதி (கிபி1429-1455) சந்திரசேர பாரதி III (கிபி1449-1464) நரசிம்ம பாரதி (கிபி1464-1479) புருஷோத்தம பாரதி II (கிபி1473-1517) ராமச்சந்திர பாரதி (கிபி1508-1560) நரசிம்ம பாரதி III (கிபி1557-1573) நரசிம்ம பாரதி IV (கிபி1563-1576) நரசிம்ம பாரதி V (கிபி1573-1600) அபிநவநரசிம்ம பாரதி (கிபி1599-1623) சச்சிதானந்த பாரதி (கிபி1622-1663) நரசிம்ம பாரதி (கிபி1663-1706) சச்சிதானந்த பாரதி II (கிபி1706-1741) அபிநவ சச்சிதானந்த பாரதி (கிபி1741-1747) நரசிம்ம பாரதி VI (கிபி1767-1770) சச்சிதானந்த பாரதி (கிபி1814-1817) நரசிம்ம பாரதி VII (கிபி1817-1879) அபிநவ சச்சிதானந்த பாரதி, அபிநவ நரசிம்ம பாரதி (கிபி1886-1912) சந்திரசேகர பாரதி (கிபி1912-1954) நரசிம்ம பாரதி (1954) அபிநவ வித்யாதீர்த்தர்.

**தமிழ்நாடு சைவமடங்கள்**

சுத்த சைவ ஆதீனங்கள் பதினெட்டாகும். 1. திருவாவடுதுறை 2. காஞ்சீபுரம் 3. தருமபுரம், 4. சூணாகோயில் (ஆடுதுறை) , 5.

ஆகம சிவப்ரகாசாதீனம், 6. செங்கோலாதீனம் (திருநெல்வே-) 7. மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் , 8. திருவண்ணாமலை ஆதீனம் (குன்றக்குடி) 9. ராமேஸ்வராதீனம், 10. நீலப்பாடி ஆதீனம் (தஞ்சை) 11. தாயுமானவ ஸ்வாமிகள் ஆதீனம், 12. சாரமா முனிவர் ஆதீனம், 13. சொர்கபுர ஆதீனம் 14. வேளாக்குறிச்சி ஆதீனம் (திருவாரூர்) 15. வள்ளலார் ஆதீனம் (சீர்காழி) 16. வருணை ஆதீனம் (வேதாரண்யம்) 17. நாச்சியார் கோவில் ஆதீனம். 18. நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் (மதுரை-துழாவூர்)

திருவாவடுதுறை ஆதீனம் :- சனத்குமாரர், சத்யஞானதரிசனம், பரஞ்சோதி முநிவர், மெய்கண்ட தேவர், அரு`ணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார், அருணமச்சிவாய தேசிகர், நமச்சிவாய மூர்த்தி, 1. சித்தர் சிவப்பிரகாசர், 2. நமச்சிவாய தேசிகர், 3. அம்பலவாண தேசிகர் 4. உருத்திர போடி தேசிகர் 5. வேலப்ப தேசிகர், 7. குமாரசுவாமி தேசிகர், 8. மாசிலாமாணி தேசிகர், 9. ராம-ங்கதேசிகர், 10. முன்வேலப்ப தேசிகர், 11. பின்வேலப்ப தேசிகர், 12. திரு சிற்றம்பல தேசிகர், 13. அம்பலவாண தேசிகர், 14. சுப்ரமண்ய தேசிகர் 15. அம்பலவாண தேசிகர் 16. சுப்பிரமணிய தேசிகர், 17. அம்பலவாண தேசிகர், 19. சுப்பிரமணிய தேசிகர் 20. வைத்ய-ங்க தேசிகர்.

தருமையாதீனம் :- திருவாவடுதுறை ஆதீனம் உமாபதி சிவாச்சாரியாரிடம் உபதேசம் பெற்ற 1. அருண நமச்சிவாயர், 2. மச்சு செட்டியார் 3. கங்கை மெய்கண்டார், 4. சீர்காழி சிற்றம்பல நாடிகள், 5. பழுதை கட்டி ஞானப் பிரகாசர், 6. சிவபுரம் தத்துவப் பிரகாசர், 7. திருவாரூர் செட்டித் தெரு ஞானப் பிரகாசர், 8. சிதம்பர நாதர், 9. திருவாரூர் கமலை ஞானப் பிரகாசர், 12. சச்சிதானந்த தேசிகர், 11. மாசிலாமணி தேசிகர், 12. குமரகுருபரர்.

மதுரை ஞானசம்பந்தர் மடம் :- 1. ஞானசம்பந்தர் (ஸ்ரீவில்-புத்தூர்) 2. ஆனந்த பரவச தேசிகர் 3. சச்சிதானந்த தேசிகர் 4. மாசிலாமணி தேசிகர், 5. ஞான சம்பந்த தேசிகர், 6. திருஞானசம்பந்தர், 7. திருவம்பல தேசிகர், 8. அழகிய சிற்றம்பல தேசிகர், 10. சிவஞானதேசிகர், 11. சச்சிதானந்த தேசிகர், 12. முத்துக் குமார தேசிகர், 13. ஞானசம்பந்த தேசிகர் 14. கந்தப்ப தேசிகர், 15. மாசிலாமணி தேசிகர் 16. சச்சிதானந்த தேசிகர், 17. மாணிக்க வாசக தேசிகர் 18. சிவஞான தேசிகர், 19. மாணிக்கவாசக தேசிகர், 20. சிவஞான தேிசகர், 21. சச்சிதானந்த தேசிகர், 22. மாணிக்கவாசக தேசிகர், 23. சுப்ரமண்ய தேசிகர், 24. ஸ்ரீ ஷண்முக ஞானசம்பந்த தேசிகர்.



**திருத்துறையூர் சிவப்பிரகாச ஸ்வாமிகள் மடம் :**

திருவாவடுதுறை நமச்சிவாய தேசிகர், 2. சிவப்பிரகாச தேசிகர், 3. ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகர், 4. மூல-ங்க சிவப்பிரகாச தேசிகர், 5. சிதம்பர சிவப்பிரகாச தேசிகர், 6. குமார தேவ சிவப்பிரகாச தேசிகர் 7. நமச்சிவாய சிவப்பிரகாச தேசிகர், 8. நன்னூல் சிவப்பிரகாச தேசிகர், 9. அருணை சிவப்பிரகாச தேசிகர், 10. கருணைசிவப்பிரகாச தேசிகர், 11. பரஞ்சோதி சி.பி.தே. 12. நல்லநாயக சி.பி.தே. 13. சிற்றம்பல சி.பி.தே. 14. பொன்னம்பல சி.பி.தெ. 15. சிதம்பர சி.பி.தே. 16. கருணை சி.பி.தே. 17. நஞ்சுண்ட சி.பி.தே. 18. குழந்தைவேலு சி.பி.தே. 19. வைத்ய-ங்க சி.பி.தே. 20. குமார சி.பி.தே. 21. சொக்க-ங்க சி.பி.தே.

(மேற்குறிப்பிட்ட மடங்கள் அன்றி பலசைவ மடங்களும் கௌமார மடங்களும் தமிழகத்தில் பரவியுள்ளன.)

**வைணவ ஆச்சார்ய புருஷர்கள்**

தமிழ் தலைச்சங்க காலந்தொட்டே வைணவ முநிவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்துள்ளனர். தமிழில் வைணவ முநிவர்கள் செய்த பாடல் ஏராளம். பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத் தாழ்வார், நம்மாழ்வார் (3101BC) சடகோபாழ்வார் மதுரகவியாழ்வார் பெரியாழ்வார் (3056BC) ஸ்ரீஆண்டாள் (3005 BC) தொண்டரடிப்பொடியாழ்வார் (2814BC) நாதமுனிகள் (908AD) திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார், குலசேகராழ்வார் முத-ய பல ஆழ்வார்கள் தமிழ் நாட்டிலே பிறந்து தமிழையும் வைணவத்தையும் வளர்த்தனர்,.

தமிழ் நாட்டில் வேங்கடம் முதல் குமரி வரை 108 வைணவத் திருப்பதிகள் உள்ளன. பாண்டியன் காய்சின வழுதி ஃதலைச்சங்க முதல் பாண்டியன்) கால முதல் பாண்டியர்களும், சோழர்களும், சேரமன்னர்களும் பிறகு வந்த பல்லவ மன்னர்கள், சாளுக்கியர்கள், ஹொய்சாளர்கள், அரசர்கள், மராட்டிய மன்னர்கள் பலர் தமிழ் நாட்டில் பல வைணவக் கோயில்களை கட்டியுள்ளார்கள். திருமால் ஆலயங்களில் தமிழில் பதிகங்களும் திவ்விய பிரபந்தங்களும் பாடப்பட்டு வந்தன.

தமிழரசர்கள் இலங்கை, சாவகம், இலாமுரிதேசம், மாயிருடிங்கம், மாபப்பாளம், காம்போஜம் (தாய்லாந்து) முத-ய பல கீழை நாடுகளில் ஆதிக்கம் செலுத்திய போது ஆங்காங்கே திருமால் ஆலயங்கள் கட்டப்பட்டன. திருப்பாவை, ராமாயணம் முத-யன படிக்கப்பட்டன.

(தற்போது இங்கிலாந்து, அமெரிக்கா முத-ய தேசங்களில் குடியேறிய வைணவர்கள் திருமால் ஆலயங்களை கட்டி தமிழில் பாசுரங்களைபாடி வருகிறார்கள்)

கிபி. 1017-இல் ஸ்ரீ பெரும்புதூரில் பிறந்த ராமானுஜர், விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை பிரபலப்படுத்தி பாரதமெங்கும் ஹரிபக்தியை பரப்பினார். அவர் வழியில் ஸ்தாபித்த மடங்களில் வாழ்ந்த ஆச்சார்ய புருஷர் வருமாறு :-

## ஸ்ரீஎம்பெருமானார் வழி வந்த சிம்மாஸனாதிபதிகள்

1. ஸ்ரீஆளவந்தார் குமாரர் சொட்டை நம்பி அவர் குமாரர் என்னாச்சான் அவர் குமாரர் பிள்ளை அப்பன், 2. பெரிய நம்பி குமாரர் புண்டரீகர், 3. திருமலை ஆண்டார் குமாரர் சுந்தரத் தோளுடையான், 4. பெரிய திருமலைநம்பி குமாரன் ராமானுஜன், 5. திருமலை நம்பி, 6. கூரத்தாழ்வான் குமாரன் பட்டர் அவர் குமாரர் சீராமப்பிள்ளை, 7. முத-யாண்டான் இவர் குமாரர் கந்தாடை ஆண்டான், 8. நடுவிலாழ்வான், 9. கோமடத்து ஆழ்வான், 10. திருக்கோவிலூர் ஆழ்வான், 11. திருமோகூர் ஆழ்வான், 12. பிள்ளை பிள்ளை ஆழ்வான், 13. நடாதூர் ஆழ்வான், 14. எங்கள் ஆழ்வான், 15. அருந்தாழ்வான், 16. மிளகாழ்வான், 17. நெய்யுண்டாழ்வான், 18. சேட்லூர் சிறியாழ்வான், 19. வேதாந்தி ஆழ்வான், 20. கோயிலாழ்வான், 21. உக்கலாழ்வான், 22. அரணபுரத்து ஆழ்வான், 23. எம்பார், 24. கிடாம்பி ஆச்சான், 25. கணியனூர் சிறியாழ்வான், 26. ஈச்சம்பட்டி ஆச்சான், 27. கொங்கிலாச்சான், 28. ஈச்சம்பாடி ஜீயர், 29. திருமலை நல்லான், 30. சட்டம்பள்ளி ஜீயர், 31. திருவெள்ளறை ஜீயர், 32. ஆட்கொண்ட வில்- ஜீயர், 33. திருநகரிப்பிள்ளை, 34. காராஞ்சி சோமாயாஜி ஜீயர், 35. அலங்கார வேங்கடவர், 36. நம்பிக்கு அருள் தேவர், 37. சிட்டபள்ளி தேவராஜபட்டர், 38. பிள்ள உறந்தை உடையார், 39. திருக்குருகைபிரான் பிள்ளை, 40. பெரிய கோயில் வள்ளலார், 41. திருக்கண்ணபுரத்து அரையர், 42. ஆசூரிப் பெருமாள், 43. முநிப் பெருமாள், 44. அம்மங்கிப் பெருமாள், 45. மாருதி பெரியாண்டான், 46. மாறொன்றில்லாத மாருதி சிறியாண்டான், 47. சோமாயாஜி ஆண்டான், 48. ஜீயராண்டான், 49. ஈஸ்வராண்டான் 50. ஈயுண்ணி பிள்ளையாண்டான், 54. அம்மங்கியாண்டான், 55. ஆளவந்தார் ஆண்டான், 56. அருளாளப்பெருமான் எம்பெருமானார், 57. தொண்டனூர் நம்பி, 58. மருதூர் நம்பி, 59. மழுவூர் நம்பி, 60. திருக்குறுங்குடி நம்பி, 61. குரவை நம்பி, 62. முடும்பை நம்பி, 63. வடுக நம்பி, 64. வங்கிபுரத்து நம்பி, 65. பராங்குச நம்பி, 66. அம்மங்கி அம்மான், 67. பருத்திக் கொல்லை அம்மான், 68. உக்கலம்மான், 69. சொட்டையம்மான், 70. முடும்பை அம்மான், 71. கொமாண்டூர் பிள்ளை, 72. குமாண்டூர் இளையவல்-, 73. கிடாம்பி பெருமாள், 74. ஆர்க்காட்டுப் பிள்ளான்



## மைசூர் பரகாலமட குருபரம்பரை

1. பிரம்ம ஸ்வதந்த்ர ஸ்வாமி (ஸ்தாபகர்) 2. பிரம்ம ஸ்வதந்த்ர ஸ்வாமி II 3. ஸ்ரீநிவாஸ ஸ்வாமி, 4. பரகால ஸ்வாமி, 5. வேதாந்த ராமானுஜ ஸ்வாமி, 6. ஸ்ரீ நிவாஸ பிரம்ம ஸ்வதந்த்ர ஸ்வாமி III 7. நாராயண ஸ்வாமி, 8. ரங்கராஜ ஸ்வாமி 9. பிரம்ம ஸ்வதந்திர ஸ்வாமி IV 10. யதிராஜா 11. ஸ்ரீவாத பிரம்ம ஸ்வதந்திர ஸ்வாமி V 12. பராங்குச ஸ்வாமி, 13. கவிதார்கிக சிம்ம ஸ்வாமி, 14. வேதாந்த யதி வர்ய ஸ்வாமி, 15. ஞானாப்தி பிரம்ம ஸ்வதந்திர ஸ்வாமிVI 16. வீர ராகவ ஸ்வாமி, 17. வாத வேதாந்த ஸ்வாமி, 18. வராஹஸ்வாமி, 19. வேதாந்த லக்ஷ்மண ஸ்வாமி, 20. வாத வேதாந்த யோகீந்திர ஸ்வாமி, 21. பெரிய பரகால ஸ்வாமி, 22. ஸ்ரீநிவாஸ பரகால ஸ்வாமி, 23. வேதாந்த பலகாவ ஸ்வாமி, 24. அபிநவ ஸ்ரீநிவாஸ பரகால ஸ்வாமி, 25. ராமானுஜ பரகால ஸ்வாமி, 26. பிரம்ம ஸ்வதந்திர கண்டாவதார பரகாலஸ்வாமி, 27. வேதாந்த பிரம்ம தந்திர பரகால ஸ்வாமி, 28. ஸ்ரீநிவாஸ பிரம்ம தந்திர பரகால ஸ்வாமி 29. ஸ்ரீநிவாஸ தேசிகேந்திர பிரம்ம தந்திர பரகால ஸ்வாமி, 30. ரங்கநாத ப்ரம்ம தந்திர பரகால ஸ்வாமி, 31. கிருஷ்ண பிரம்ம தந்திர பரகால ஸ்வாமி, 32. வாகீச பிரம்ம தந்திர பரகால ஸ்வாமி, 33. அபிநவ ரங்கநாத பிரம்ம தந்திர பரகால ஸ்வாமி 34. அபிநவ ஸ்ரீநிவாஸ பிரும்ம தந்திர பரகால ஸ்வாமி.

## வானமாமலை மட குருபரம்பரை

1. பட்டர் பிரான் ஜீயர், 2. கலமூர் வரதமுனி, 3. செந்நாடலங்கார ராமானுஜ ஜீயர், 4. ரெங்கப்ப ராமானுஜ ஜீயர் 5. திம்மி அய்யங்கார் 6. எம்பெருமானார், 7. பெரிய திருவேங்கிடஸ்வாமி 8. கோணப்ப ஸ்வாமி, 9. சின்ன ரெங்கப்ப ஸ்வாமி, 10. திருவேங்கட ஸ்வாமி, 11. பெரிய தெய்வ நாயக ஸ்வாமி, 12. சின்ன திருவேங்கடஸ்வாமி, 13. சின்ன தெய்வநாயக ஸ்வாமி, 14. கூரத்தாழ்வான் ஸ்வாமி 15. ஸ்ரீவத்ஸ சின்னஸ்வாமி, 16. திருநகர் திருவேங்கட ஸ்வாமி, 17. கோயில் திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி, 18. பெரிய சடகோபராமானுஜ ஸ்வாமி, 19. பெரிய பட்டர் பிரான், 20. க-யன் ராமானுஜன், 21. மதுரகவி ராமானுஜன், 22. யோகி ராமானுஜன், 23. சின்ன சடகோப ராமானுஜன் 24. சின்ன பட்டர் பிரான் 25. க-யன் சின்ன ராமானுஜன், 26. மதுரகவி ராமானுஜன் 27. சின்ன ராமானுஜன், 28. சடகோப ராமானுஜன், 29. பட்டர் பி ்ரான் 30. க-யன் ராமானுஜன்.

## அஹோபில மட குருபரம்பரை (ஸ்வாமி என்று சேர்த்து படிக்கவும்)

1. ஆதி வண்சடகோபன் 2. ஸ்ரீமத் நாராயணன் 3. ஸ்ரீபராங்குசன் I

1 Proof



4. ஸ்ரீநிவாஸன் I 5. சடகோபன் 6. ஷஷ்ட பராங்குசன் 7. சடகோபன்II 8. பராங்குசன்II 9. நாராயணன்II 10. வண்சடகோபன்II 11. ஸ்ரீநிவாஸன் II 12. நாராயணன் III 13. வீரராகவன் I 14. நாராயணன் IV 15. கல்யாண வீரராகவன் II 16. சடகோபன் III 17. வீரராகவ வேதாந்தம் 18. நாராயணன் V 19. ஸ்ரீநிவாஸன் III 20. வீரராகவன் III 21. பராங்குசன் III 22. நாராயணன் VI 23. வீரராகவன் IV 24. பராங்குச ராமானுஜன் 25. ஸ்ரீநிவாஸன் IV 26. ரங்கநாதன் I 27. வீரராகவன் V 28. ரங்கநாத சடகோபன் 29. பராங்குச லக்ஷ்மணன் 30. ஸ்ரீநிவாஸ வேதாந்தம் 31. நாராயண வேதாந்தம் 32. வீரராகவன் VI 33. சடகோபன் IV 34. சடகோப ராமானுஜன் 35. ரங்கநாதன் II 36. ஸ்ரீநிவாஸன் V 37. வீரராகவ சடகோபன் I 38. ஸ்ரீநிவாஸ சடகோபன் 39. பராங்குசன் IV 40. ரங்கநாத சடகோபன் II 41. லக்ஷ்மி ந்ருசிம்ம சடகோபன் 42. ரங்க சடகோபன் 43. வீரராகவ சடகோபன் II 44. வேதாந்த தேசிக யதீந்திரர் 45. வண்சடகோப ஸ்ரீநாராயணன்.

## வைஷ்ணவ தென்னாச்சார்ய சம்பிரதாய குருபரம்பரை

சேனை முத-யார், நம்மாழ்வார், ஸ்ரீமந்நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஸ்ரீ ஆளவந்தார், பெரிய நம்பி எம்பெருமானார், எம்பார்பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, நடக்கு திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், திருவாய்மொழிப் பிள்ளை, மணவாள மாமுனிகள்

## ரகஸ்யகிரந்த பரம்பரை

உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், கூறகுலோத்தம தாஸர், திருவாய்மொழிப் பிள்ளை.

## பெரிய ஜீயர் திவ்ய பிரபந்த வியாக்யான பரம்பரை

உடையவர், திருகுருகைப் பிரான் பிள்ளை, எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, ஈயுண்ணி மாதவர், ஈயுண்ணி பத்மநாபர், கோலவராக நாயினார், நாவலூர் தேவராஜர், திருவாய்மொழிப் பிள்ளை பெரிய ஜீயர்.

## ஸ்ரீ பாஷ்ய பரம்பரை

உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்கு திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர்.

## முநித்ரய சம்ப்ரதாய பரம்பரை

பிரம்ம தந்திர சுவாமிக்குப் பின் கடிகாசலத்தம்மான், ஸ்ரீமத் வரவிஷ்ணுவாசாரியார், மகாதயாதீசாரியார், ஸ்ரீநரசிம்மாச்சாரியார், வாத்சல வரதாச்சாரியார், ஸ்ரீமத் ஷஷ்டபராங்குச சுவாமி, ஸ்ரீ பஞ்சமத



பஞ்சானனம், தாததேசிகன், ஸ்ரீமத் அனந்தாசாரியன், ஸ்ரீ ராமானுஜ சுவாமி, ஸ்ரீவேங்கடாசாரியன், ஸ்ரீவீர ராகவாச்சாரியார், ஸ்ரீரங்கபதி தேசிகர், ஸ்ரீரங்கநாத சுவாமி, ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ ஸ்வாமி, ஸ்ரீ கோபால தேசிகன்.

## மத்வாசார்யர் பரம்பரை

(ஆதிசங்கர பகவத்பாதர், அத்வைத சித்தாந்தத்ததையும் (இருப்பது ஒன்றே பரமாத்மாவே - மற்றவை யாவும் மாயாஜாலம்), இராமானுஜர் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தையும் (இருப்பது ஒன்றே -அது ஸ்ரீ ஹரியே - மாயை என்று எதுவும் கிடையாது - அவ்வப்போது மாறிக்கொண்டேயிருப்பது உண்மையே - அதுவும் ஸ்ரீ ஹரியின் பிரபாவமே) மத்வாசாரியார் துவைத சித்தாந்தத்தை (பரமாத்மா என்னும் ஸ்ரீஹரியே அவரால் படைக்கப்பட்ட ஜீவாத்மா முத-யன வேறு - எனவே இரண்டு உள்ளது) ஸ்தாபித்தனர். இம்மூவரும் வேதத்தையே பிரமாணமாகக் கொண்டு வாதித்து தமது சித்தாந்தங்களைப் போதித்தனர். மத்வாச்சாரியார் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்)

ஆநந்த தீர்த்தருக்கு (மத்வாச்சாரியார்) முன்பாக வாழ்ந்தவர்கள் துர்வாஸர், கருடவாஹன தீர்த்தர், கைவல்யநாத தீர்த்தர், ஞானீச தீர்த்தர், பரதீர்த்தர், சத்ய பிரஞ்ஞதீர்த்தர், பிராஞ்ஞ தீர்த்தர், அச்சுத பிரேக்ஷ தீர்த்தர் முத-யோர் த்வைத சித்தாந்திகள்.

ஆநந்த தீர்த்தரின் (மத்வாச்சாரியார்) இயற்ˆபெயர் வாசுதேவன். இவர் உடுப்பி (மைசூர்) என்னும் ஊருக்கருகிலுள்ள சிவகுப்பம் என்னும் கிராமத்தில் வாழ்ந்த மத்யகேஹ பட்டர் என்பவருக்கும் வேதத்தி என்னும் அம்மையாருக்கும் பிலவங்க வருஷம் (கிபி13-ஆம் நூற்றாண்டு) பிறந்தார். இவர் தந்தையிடம் கல்வி கற்று, க்ருதவல்- கிராமத்தி-ருந்த சிவப்பட்டரை வாதத்தில் வென்றார். பின்னர் உபநயம் பெற்ற பின்னர் அச்சுத பிரேக்ஷ தீர்த்தரிடம் உபதேசம் பெற்றார். பின்னர் பூர்ண பிரஞ்ஞர் என்னு தீக்ஷாநாமம் பெற்று கங்காதீரம் சென்று ஆநந்த தீர்த்தர் என்னும் நாமம் பெற்று மடாதிபதியானார். பின்னர், கீதா பாஷ்யம், பிரம்ம சூத்ர பாஷ்யம் செய்து பல அத்வைதிகளை வாதத்தில் வென்று த்வைத சித்தாந்தத்தை பரப்பினார். இவரது சீடர்கள் விஷ்ணு தீர்த்தர், ரிஷிகேச தீர்த்தர், ஜனார்த்தன தீர்த்தர், நரசிம்ம தீர்த்தர், உபேந்திர தீர்த்தர், வாமன தீர்த்தர், வாமன தீர்த்தர், ஸ்ரீராம தீர்த்தர், அதோக்ஷ தீர்த்தர், திரிவிக்ரம பண்டிதர், பத்மனாப தீர்த்தர் முத-யோர்.

பத்மநாதீர்த்தருக்குப் பிறகு மத்வாச்சார்ய பீடத்தை நரஹரி தீர்த்தர் மாதவ தீர்த்தர், அக்ஷோப்பிய தீர்த்தர், ஜயதீர்த்தர், வித்யாதி ராஜ தீர்த்தர், கவீந்திர தீர்த்தர், வாகீச தீர்த்தர், ராமச்சந்திர தீர்த்தர், வியாநிதி தீர்த்தர், ரகுநாத தீர்த்தர், ரகுவர்ய தீர்த்தர், ரகூத்தம தீர்த்தர்,

1 Proof



வேதவியாஸ தீர்த்தர், வித்யாதிபதி தீர்த்தர், வித்யாதீச தீர்த்தர், வேத நிதி தீர்த்தர், சத்ய விரத தீர்த்தர், சத்ய நிதி தீர்த்தர், சத்யநாத தீர்த்தர், சத்யாபிநவ தீர்த்தர், சத்யபூரண தீர்த்தர், சத்ய விஜய தீர்த்தர், சத்ய பிரிய தீர்த்தர், சத்யபோத தீர்த்தர், சத்ய சந்த தீர்த்தர், சத்ய விரத தீர்த்தர், சத்ய தர்ம தீர்த்தர், சத்ய சங்கல்ப தீர்த்தர், சத்ய சந்துஷ்ட தீர்த்தர், சத்ய பாராயண தீர்த்தர், சத்ய காம தீர்ʼத்தர், சத்யேஷ்ட்ட தீர்த்தர், சத்ய பராக்கரம தீர்த்தர், சத்திய விரத தீர்த்தர், சத்ய தீர தீர்த்தர் முத-யோர்.

மத்வ மடங்கள் வியாஸராய மடம், சுமதீந்திர மடம், பத்மநாப தீர்த்த மடம், மாதவ தீர்த்த மடம், அக்ஷப்ய தீர்த்த மடம், சத்ய பூரணாச்சாரியார் மடம் முத-யன. கும்பகோணத்தில் விபுதேந்திர தீர்த்தர் ஒரு மத்வ மடம் ஏற்படுத்தினார். விபுதேந்திரருக்குப் பிறகு சுரேந்திர தீர்த்தர், விஜயேந்திர தீர்த்தர், சுதீந்திர தீர்த்தர், யாதவேந்திர தீர்த்தர், ராகவேந்திர தீர்த்தர் முத-யோர் வாழ்ந்தனர். குரு ராகவேந்திரரின் இயற்பெயர் வேங்கடநாதன்.

விஜயநகர பேரரசர் கிருஷ்ண தேவராயர் காலத்தில் அவர் அவையில் வீணை வித்வான் கிருஷ்ணபட்டர். அவரது மகன் கனகாசல பட்டர். அவரது மகன் திம்மண்ண பட்டர். இவரது மனைவிகோபிகாம்பாள். திம்மண்ணபட்டருக்கும் ʼகாபிகாம்பாளுக்கும் வெங்கடாம்பாள், குருராஜன், வேங்கடநாதன் முத-யோர் பிறந்தனர். கி.பிʼ.1545இல் (ருத்ரோத்காரி வருடம், பங்குனி மாதம், பகுள த்வீதீயை) இல் வேங்கடநாதன் பிறந்தார். வேங்கடநாதன் வளர்ந்து பெரியவனாகி மதுரை சென்று அத்வைதிகளை வாதத்தில் வென்றார். பின்னர் சரஸ்வதி என்பவளை மணந்து லக்ஷ்மி நாராணன் என்னும் மகனைப் பெற்றார். பின்னர் கும்பகோணம் சென்று சுசீந்திர தீர்த்தர் மடத்தில் சேர்ந்தார். பின்னர் தஞ்சை அரசன் ரகுநாத பூபாலன் அமைச்சர் கோவிந்த தீக்ஷிதர் என்னும் அத்வைதியையும் அவர் மகன் யக்ஞ நாராயண தீக்ஷிதரையும் வாதத்தில் வென்றார். மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரிடம் (கிபி1623-1659) அமைச்சராக இருந்த நீலகண்ட தீக்ஷதர்(அப்பையதீக்ஷதரின் பேரன்) என்பவரையும் வாதத்தில் வென்றார். சுதீந்திரதீர்த்தர் மறைவுக்குப் பின்னர் (கிபி1623) கும்பகோணம் மத்வமடம் பொறுப்பை ஏற்றார். பின்னர் வடதேச யாத்திரை செய்து விஜயநகர அரசன் செங்கடபதி ராஜு, ராமதேவ ராஜு, மைசூர் அரசன் தொட்டதேவ ராஜு பீஜப்பூர் சுல்தான் இப்ராஹிம் அதுல் ஷா முத-ய அரசர்களால் கௌரவிக்கப்பட்டு மந்தராலயம் என்னும் இடத்தில் ஜீவ சமாதியானார்.(கிபி1671-விரோதிகிருது சிரவண மாதம்-பகுளத்வீதீயை) பல அற்புதங்களை நிகழ்த்தியை குரு ராகவேந்திரர் மடத்தில் சுவ்வீரதீந்திர தீர்த்தர், சுதாமேந்திர தீர்த்தர்,



சுயமீந்திர தீர்த்தர் முத-யோர் அலங்கரித்தனர்.

குரு ராகவேந்திர ஸ்வாமிகள் 1. புருஷ சூக்தமாதி பஞ்ச சூக்த வியாக்கியானங்கள். 2. நிபாய முக்தாவளி, 3. தத்வமஞ்சரி 4. வேதத்ரய விவருத்தி, 5. மந்திரார்த்த மஞ்சரி, 6. தத்வ பிரகாச ஞான தீபிகா, 7. பரிமளமு, 8. தசோப நிஷத்கண்டாரமு, 9. தந்த்ர தீபிகா, 10. கீதார்த்த ஸங்கிரஹமு 11. ராம சரித்ர மஞ்சரி, 12. கிருஷ்ண சரித்ர மஞ்சரி, 13. தசப் பிரகரண சரித்ர மஞ்சரி, 14. பிரமேய தீபிகா வியாக்யானம், 15. கீதா தாத்பர்யமு டீகா விவரணமு, 16. நிர்ணய பாவ ஸங்கரஹமு, 17. சந்திரிகா பிரகாசமு, 18. வாதாவளி வியாக்யாய, 19. தர்க்க தாண்டவ வியாக்யாய, 20. அனுமத்ʼவ விஜய வியாக்யாய, 21. பிரமாண பத்ததி வியாக்கியாய, 22. பிராதஸ் ஸங்கல்ப கத்யமு, 23. பாட்ட ஸங்கிரஹமு முத-ய பல நூல்களை இயற்றியுள்ளார்.

## இணைப்பு -6 - பாரத அரசபரம்பரை

(இப்பகுதியில் பாண்டிய, சோழ, சேர, பல்லவ, சிங்களம், க-ʼங்கம், மகதம், காஷ்மீத், கன்னோஜி, மாளவ, மேலை சாளுக்கியர், கீழை சாளுக்கியர், வங்காள ராஜபுத்ர ஹேஹயர், கூர்ஜரம், ராஷ்ட்டர கூடம், ஆந்திர காகதீய மைசூர் கங்கர்கள், மைசூர் கதம்பர், பிரார் வாகடாகர் பிரதிஹாரர்கள், அஸ்ஸாம், துவார சமுத்திர ஹொய்சாளர், விஜயநகர அரையர்கள், நாயக்க மன்னர்கள், மராட்டிய அரசர்கள், சாதகர்ணி அரசர்கள், கொங்கு வேளிர்கள், சேதுபதி மன்னர்கள் - ஆகியோர்களின் பெயர்கள் அவர்கள் ஆட்சி செய்த காலம் முத-யன கொடுக்கப்பட்டுள்ளது.)

### 1. பாண்டிய அரசர்கள்

(கடைச்சங்கம் மற்றும் அதற்குப் பின் அரசாண்ட பாண்டியர்கள்)

1. (கிபி205-249) குலேச பாண்டியன், வரகுண பாண்டியன்
2. (கிபி255-330) அரிமர்த்தன பாண்டியன் (இவன் காலத்தில் வாழ்ந்தவர் மாணிக்கவாசகர் - வாதவூரார்)
3. (கிபி330-340) கர வீரபாண்டியன் (கடுந்தோள் கரவீரன்), வரகுண பாண்டியன் (வரதராஜன்)
4. (கிபி.340-350) பெரும்பூதன்
5. (கிபி350-400) மாறன் நெடும் செழியன், சடையன் பெருவழுதி
6. (கிபி400-450) பாண்டியன் மாறவர்மன், சடையன் வழுதி (மனைவி நக்கங்கொந்தியார்-பெண் புலவர்)
7. (கிபி450-500) சேந்தன் திருமாறன், சடையன் சுரபி மாறன்
8. (கிபி500-525) குங்கும மாறன், வெற்றி வேல் செழியன், இக்காலத்தில் களப்பிரரிடமிருந்து மூர்த்தி நாயனார் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி பல காலம் ஆண்டு பாண்டியர்களிடம்

மீண்டும் ஒப்படைத்தார்.
9. (கிபி525-550) மாறவர்மன் கற்பூரபாண்டியன், காருண்ய பாண்டியன், சடையன் ராஜாதி ராஜன்
10. (கிபி550-600) மாறவர்மன் புருஷோத்தம பாண்டியன் (கடுங்கோன்) சடையன் அதிராஜன்.
11. (கிபி600-625) மாறவர்மன் (அவனி சூளாமணி வர்மன்) சடையன் சத்ரு சேதன பாண்டியன்.
12. (கிபி625-640) மாறவர்மன் காருண்ய வழுதி சடையவர்மன் செழியன் சேந்தன் திருநாவுக்கரசர் (அப்பர்) இக்காலத்தில் வாழ்ந்தவர் (கிபி567-648)
13. (கிபி640-650) மாறவர்மன் சத்ரு சேதன பாண்டியன் (அரிகேசரி, கூன்பாண்டியன், நின்றசீர் நெடுமாறன்) இவன் மனைவி காஞ்சி மணிமுடிச் சோழன் மகள் மங்கையர்க்கரசி) சமண மதத்தை தழுவிய இம்மன்னனை ஞான சம்பந்தர் (கிபி634-650) மீண்டும் வைனாக்கினார். கூன்பாண்டியன் தம்பி சடையவர்மன் சுந்தர பாண்டியன், திருநெல்வே-யி-ருந்து ஆண்டவன் தேவபாண்டியன் சுந்தரரும் இக்காலத்தவரே (கிபி630-650) .
14. (கிபி650-660) பாண்டியன் மாறவர்மன் ரணதீரன் பாண்டியன் கோச்சடையன் வழுதி
15. (கிபி661-700) தேர்மாறன் அரிகேசரி பராங்குச வர்மன், சடையவர்மன் ராஜ சிம்மன்.
16. (கிபி701-741) நெடும்சடையன் பராந்தகன்
17. (கிபி742-760) மாறவர்மன் ராஜசிம்மன்
18. (கிபி761-780) வரகுணன் சடையவர்மன்
19. (கிபி781-825) மாறவர்மன் பரசக்கர கோலாகலன் (இவன் மனைவி சோழ இளவரசி) , நிருபதுங்கவர்மன்
20. (கிபி826-876) வரகுணன் சடையவர்மன் (வீரபாகு பாண்டியன்)
21. (கிபி876-917) மகுடவர்த்தனன் மாறவர்மன் பராந்தகன்
22. (கிபி900-919) சடையன் ராஜசிம்மன் (குமராசிம்மன்) வீரசேனன், வஜ்ஜிர சிம்மன், (இக்காலத்தில் வாழ்ந்தவர் நாதமுனிகள் என்னும் வைணவர்)
23. (கிபி919-948) பாண்டி நாட்டில் சோழர்கள் ஆட்சி மாறவர்மன் குலோத்துங்கன்/பிரதாபராஜ பாண்டியன்)
24. (கிபி948-968) வீரபாண்டியன் (வரகுணராஜன்) அதிவீர ராமன்.
25. (கிபி968-995) குலவர்த்தனன் (சடையன் அமர புஜங்கன்) குமார சந்திர பாண்டியன், ராஜ மார்த்தாண்டன்.
26. (கிபி995-1048) சோழர்கள் பாண்டிய நாட்டில் ஆட்சி. வரதுங்க



பாண்டியன் (வரைப் பெண்ணை சிறையெடுத்த திருநெல்வே-அரசன்) (இராமானுஜர் வாழ்ந்த காலம்)
27. (கிபி1048-1084) பாண்டிய நாட்டில் ஆண்ட பாண்டியர்கள் ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன், மாறவர்மன், சோமசேகரன், சடையன் பஞ்சசேனன், விக்ரம பாண்டியன் வீரபாண்டியன் எனும் ஐவர்.
28. (கிபி1084-1100) மாறவர்மன் சோமசுந்தரன் (திரிபுவன சக்ரவர்த்தி) பராக்கிரம பாண்டியன், கற்பூர சுந்தர பாண்டியன், ராஜ ராஜன்.
29. (கிபி1100-1105) சடையவர்மன் பராந்தகன் சந்திர சேகர பாண்டியன், ராஜ ராஜன், ராஜசேகரன் குமார சேகரன்.
30. (கிபி1105-1122) மாறவர்மன் ஸ்ரீவல்லபன் (ராஜவர்மன்) மானவிக்ரமன், சோமசேகர பாண்டியன், பந்தள நாடு ராஜசேகர பாண்டியன், மகன் ராஜராஜ பாண்டியன், (கேரளவர்மன்-மணிகண்டன்)
31. (கிபி1122-1142) விக்ரம மாறவர்மன் (மகன் பாண்டிமாதேவி குலோத்துங்க சோழன் மனைவி), சடையவர்மன் குலசேகரன் (தெற்கு பகுதி) மாறவர்மன் பராக்கிரமன், சடையன் பராக்கிரமன், குமாரசிம்மன் (வடக்குப் பகுதி) ஒடடக் கூத்தர், புகழேந்தி, கம்பர் முத-யோர் வாழ்ந்த காலம் . சேர அரசன் ஆரிய ராஜசேகரன் (ராஜராஜன்)
32. (கிபி1142-1190) மாறவர்மன் வீரபாண்டியன் (பிரதாபராஜன்) சார்வபௌம பாண்டியன் (வடக்குப் பகுதி) மாறவர்மன் விக்ரம் பாண்டியன் (வீரசேனன்) தெற்குப் பகுதி சடையவர்மன் (ஜடில வர்மன்) குலசேகரன்.
33. (கிபி1190-1216) வரகுணராஜன், (கிபி1200) பராக்கிரம பாண்டியன் (கிபி1209) அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன்.
34. (கிபி1216-1238) மாறவர்மன் சுந்தர பாண்டியன் (குமார சந்திர பாண்டியன்), சடையவர்மன் குலசேகரன்.
35. (கிபி1238-1251) வரதுங்கபாண்டியன், மாறவர்மன் சுந்தர பாண்டியன், சடையவர்மன் குலசேகரன் (கிபி1257-1268) சடையவர்மன் வீரபாண்டியன் (ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் கிபி1251-1261)
36. (கிபி1268-1292) காசிகண்ட பராக்கிரம பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீவல்லபன் (சந்திர சேகர பாண்டியன்)
37. (கிபி1268-1310) மாறவர்மன் குலசேகரன், சோமசேகரன் மாறவர்மன் வீரபாண்டியன் (கிபி1285-1291) இத்தா- நாட்டு மார்கோ-போலோ-யாத்ரீகர் வருகை)

38. (கிபி1310-1320) மாறவர்மன் விக்ரம பாண்டியன், சடையவர்மன் சுந்தரபாண்டியன்
39. (கிபி1296-1342) மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் (கனக பாண்டியன்) சடையவர்மன் வீரபாண்டியன்
40. (கிபி1330-1377) பாண்டிய நாட்டில் முகமதியர் ஆட்சி (ஜலாலுதீன்-ஷா)
41. (கிபி1314-1346) மாறவர்மன் குலசேகரன்
(கிபி1315-1347) சடையவர்மன் பராக்கிரமன்
42. கிபி1334-1380 மாறவர்மன் வீரபாண்டியன்
கிபி1335-1352 மாறவர்மன் பராக்கிரமன்
பாண்டியர்கள் தென்காசி, திருநெல்வே-, கரிவிலம் வந்த நல்லூர், பந்தளம் முத-ய தலைநகரங்களி-ருந்து ஆண்டனர்
43. கிபி1352-1390 சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் (விஜய நகரப் பேரரசு தளபதி குமார கம்பண்ணன் மதுரையைப் பிடித்து ஆண்டான்)
44. (கிபி1384-1415) பராக்கிரம பாண்டியன்
45. (கிபி1401-1434) பராக்கிரம பாண்டியன், குலசேகரதேவன் சடையவர்மன் காசிகண்ட பராக்கிரமன்
46. (கிபி1407-1503) அழகன் மாறன், பொன்னன் பெருமாள் பராக்கிரமன், வீரபாண்டியன்
47. (கிபி1422-1473) சடையவர்மன் குலசேகரதேவன் வீரபாண்டியன், அரிகேசரிதேவன் (ஜடிலவர்மன்-பராக்கிரம பாண்டியன், அழகன் பெருமாள் (கிபி1473-1503)
48. (கிபி1479-1499) ஜடிலவர்மன் பராக்கிரம குலசேகர தேவன் விந்த பாண்டியன்.
49. (கிபி1506-1534) ஆகவராம பாண்டியன் பராக்கிரம பாண்டியன் (கிபி1516), சந்திரசேகர பாண்டியன் இவன் வீரசேகர சோழனை வெற்றி கண்டான்.
50. (கிபி1534-1543) சடையவர்மன் ஸ்ரீவல்லபன் (கேரள அரசன் உதய மார்த்தாண்ட வர்மன் மீது போர் செய்து வெற்றி கொண்டான்) மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கிபி1531-1555) சடையவர்மன் பராக்கிரம குலசேகரன் பூதல வீர ராம வர்மன், வீரபாண்டியன் முத-ய ஐவர் ஆட்சி
51. (கிபி1552-1564) நெல்வே- மாறன் அதிவீரராம பாண்டியன் (கிபி1562) ஜடிலவர்மன் (1567)
52. (கிபி1564-1604) சடையவர்மன் ஸ்ரீவல்லபன் அதிவீரராம பாண்டியன்.
53. (கிபி1588-1613) வரதுங்கராமன் (மாவ- வாணாதிராஜன்-



தளபதி.)
54. (கிபி1613-1700) வரகுண சோமயாஜி வீரபாண்டியன், ராமாபிராம பாண்டியன், வல்லபதேவன் அதிவீரராமன், சுந்தர பாண்டியன் (வ.எண்220-கிபி1700-1748) வரகுண ராம குலசேகரன்

## 2. சோழ அரசர்கள்

(கடைச்சங்கம் மற்றும் அதற்குப் பின் அரசாண்ட அரசர்கள்)

### 1. (கிபி230) விக்ரம சோழன்

இம்மன்னன் காலத்தில் தென்னாட்டில் பூகம்பம் கடற்கோள் ஏற்பட்டதினால் மக்கள் கூட்டம் கூட்டமாக சோழ நாட்டில் குடியேறினர். மேலும் ஈரான், காபூல், அவந்தி, குஜராத் போன்ற நாடுகளி-ருந்து விரட்டியடிக்கப்பட்ட பஹ்லவியர் (பல்லவர்கள்) சாளுக்கியர்கள் மத்திய பிரதேசம் (விதற்ப தேசம்) நாட்டிலுள்ள கள்ள மரபினர்கள் (களேபரர்) முத-யோர் தொண்டமண்டலத்திலும், சோழ நாட்டிலும் பரவினர். ஆட்சி சீர்குலைந்தது. கொலை கொள்ளைகள் அதிகரித்தன. சோழ நாட்டில் குடியேறியவர்கள் பெரும்பாலும் சமணர்களாக இருந்தனர். எனவே சைவ வைணவக் கோயில்கள் சூறையாடப்பட்டன. (கிபி240-280) களப்பிரர்கள் தலைவன் மகாநந்தி என்பவன் சோழ அரசர்களை விரட்டியடித்து ஆட்சியைப் பிடித்தான். இவர்கள் திராவிட இனத்தை சேர்ந்தவர்கள்.

(வ.எண்174-கிபி280 முதல் கிபி520) இக்காலத்தில் வஜ்ஜிரநந்தி, நந்திகோத்திரன், அதிகார நந்தி, நந்திகளப்பிரன் ரிஷபன், வீரநந்தி, அச்சுத விக்கிராந்தவர்மன் முத-ய களப்பிர அரசர்கள். சோழ நாடு, சேரநாடு, பாண்டிய நாடுகளைப் பிடித்து ஆட்சி செய்தனர். இவர்கள் தமிழ் சங்க நூலகங்களை தீயிட்டு கொளுத்தினர். சமணப் புலவர்களைக் கொண்டு திருப்பரங்குன்றத்தில் ஒரு தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தி தமிழில் சமண காவியங்களை அரங்கேற்றி, தமிழ் நாட்டில் பலவந்தமாக சமண மதத்ததைப் பரப்பினர். பாண்டி நாட்டில் அரிமர்த்தன பாண்டியன், மாணிக்கவாசகர் முத-யோர் வாழ்ந்த காலமும் இதுவே. (மாணிக்க வாசர் - கிபி250-300)

(வ.எண்175-கிபி500-550) சுந்தரசோழன் மகன் ஞானவர்மன் பாண்டிய தேசத்தில் மூர்த்தி நாயனார் அரசனாகி களப்பிரர்களை விரட்டி சிலகாலம் ஆண்டு பாண்டியர்களிடம் ஆட்சியை ஒப்புவித்தார். பாண்டியர்களும், சோழர்களும், சேரரர்களும் ஒன்று கூடி களப்பிரர்களை ஆட்சியி-ருந்து அகற்றி மூவேந்தர்கள் ஆட்சியை மீண்டும் இக்காலத்தில் ஏற்படுத்தினர்)

கிபி 500 முதல் 630 வரை இக்காலத்தில் ஞானவர்மனுக்குப் பிறகு, தர்மவர்மன், கிருபவர்மன் முத-யோர் ஆண்டனர். சோழ

1 Proof



நாட்டின் ஒரு பகுதியை முத்தரையர்கள் ஆட்சி செய்தனர். பெரும்பிடுகு முத்தரையன் (கிபி600-630) இளங்கோ முத்தரையன் (கிபி630-660) முத-யோர் ஆண்டனர்.

(கிபி 630-660) கிருபவர்மன் மகன் பத்திரவர்மன் இவன் முத்தரையர்களை பல இடங்களில் வென்று மீண்டும் சோழ அரசை நிலை நிறுத்தினான். காஞ்சியில் மணி முடிச் சோழனுக்கு பட்டம் சூட்டினான். (இக்காலத்தில் திருநாவுக்கரசர் (கிபி567-648) . ஞான சம்பந்தர் (கிபி634-650) , சுந்தரர் (கிபி630-660) முத-ய மகான்கள் தோன்றி அற்புதங்கள் பல செய்து காட்டி, பௌத்த சமணர்களை வென்று மீண்டும் தமிழ் நாட்டில் சைவ மதத்தை பரவச் செய்தனர்.

(கிபி660 முதல் 846) பத்திரவர்மனுக்குப் பிறகு சோழ நாட்டை ஆதித்த சோழன் (கிபி660-690) சுபசோழன் பராங்குசவர்மன் (கிபி690-720) சோழன் குமராங்குசன் (கிபி710-765) , தாயுமானவ சோழன்(கிபி765-780) சுராதிராஜன் (கிபி780-800) தர்மவர்மன் குமராங்குசன் (கிபி800-846) ஆண்டனர். ஆதித்த சோழன் கொங்கு நாட்டை பிடித்து பிரதிவீபதி என்பவனை அரசனாக்கினான். பல்லவ நாட்டில் கோ-விஜய நிருபதுங்கனை அரசானக்கினான். முத்தரையர்கள் வழி வந்த கவரன்மாறன் (கிபி600-690) விடேல் விடுகு முத்தரையன் சாத்தன் மாறன் (கிபி690-720) சாத்தன் பழியி-மாற்பிடுகு முத-ய அரசர்கள் சோழ நாட்டின் சிற்றரசர்களாக ஆண்டனர்.

(கிபி846-871) சுராதிராஜன் மகன் விஜயாலயச் சோழன். இவன் காலத்தில் சோழ நாடு புத்துயிர் பெற்றது. விஜயாலயச் சோழனும் அவன் மகன் ராஜகேசரி ஆதித்தனும் (கோதண்ட ராமன், சங்கிராம ராகவன்) மிகுந்த பராக்கிரமசா-கள் ஏறத்தாழ தமிழ்நாடு முழுவதும் இவர்கள் ஆட்சி பரவியது. பாண்டிய அரசன் வரகுண பாண்டியன் சோழர்களிடம் தோற்று கப்பம் கட்டினான்.

(கிபி907-1017) ராஜகேசரி ஆதித்தனின் மகன் பராங்குசன்அரிகேசரி (கிபி907-953) பராந்தகன் வீரநாராயண சோழன் (கிபி907-947) ராஜாதித்தன், கந்தராதித்தன் (949-957) சுந்தரசோழன் (கிபி957-970) அரிஞ்சயன், இவன்மகன் பராந்தக சோழன், மதுராந்தகன் உத்தம சோழன் (கிபி970-980) , சுந்தர சோழன் மகன் ஆதித்த கரிகாலன் சுந்தரசோழனின் இரண்டாவது மகன் ராஜராஜ சோழன் (பொன்னியின் செல்வன்-கிபி985-1017) இவன் காலத்தில் சோழ நாடு சிறப்புற்று விளங்கியது. சேர நாடு பாண்டிய நாடு, இலங்கை கீழ் தேச நாடுகளை ராஜராஜ சோழன் வென்றான். (தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தை கட்டினான்) கருவூர் தேவர் திரு நறையூர் நம்பி இம்மன்னன் காலத்து வாழ்ந்தவர். இம்மன்னனின் சகோதரி



குந்தவ்வை. சிறந்த அரசியல் மேதை.

(கிபி 1014-1118) ராஜராஜ சோழனின் மகன் கங்கை கொண்ட ராஜேந்திர சோழன் (கிபி1013-1042) இம்மன்னன் கீழைச் சாளுக்கியரசனை வென்று வேங்கி நாட்டில் சோழர் ஆட்சியை ஏற்படுத்தினான். கங்கை வரை சென்று வந்தான். ராஜேந்திர குலோத்துங்கன் (கிபி1054-1064) வீரசோழன்(கிபி1060-1069) வீரராஜேந்திரன் (கிபி1063-1069) ராஜ மகேந்திரன் (கரிகாலன் கிபி1064-1077) வீரராஜேந்திரன் (கிபி1064-1077) அதிராஜேந்திரன் குலோத்துங்கன் (அநபாயன் - கிபி1070-1118) இவன் மிகுந்த பராக்கிரமம் உள்ளவன். இவன் தளபதி கருணாகரத் தொண்டைமான் க-ங்கத்தின் மீது படையெடுத்து வென்றான். இப்போரைப் பற்றி பரணி பாடியவர் ஜெயங்கொண்டார். வைணவப் பெரியார் ராமானுஜர் இக்காலத்தில் வாழ்ந்தவர். ராஜாதி ராஜன், வீரசோழன் இவனது பிள்ளைகள்.

(கிபி1118 முதல் 1145) குலோத்துங்க சோழனுக்குப் பிறகு அரசு கட்டிலேறினான். மதுராந்தகன் விக்ரம சோழன். இவனது தம்பி பரகேசரிவர்மன் விக்ரம சோழனுக்குப் பிறகு குலோத்துங்க சோழன் (கிபி1133-1145) ஒட்டக் கூத்தர். புகழேந்தி, கம்பர் முத-யவர்கள் இம்மன்னன் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கம்பருடைய மகன் அம்பிகாபதி. குலோத்துங்கன் மகள் அமராவதியை காத-த்ததால் அரசாணையால் அம்பிகாபதி கொல்லப்பட்டான். இக்காலத்தில் காஞ்சியை ஆண்ட மன்னன் குணசேகர சோழன் (இவன் தெலுங்கு சோழர்களான விஜய கண்ட சோழன், வினை நீக்கிய சோழன், உத்தண்ட சோழன், சுகுண சோழன், பிரபாகர சோழன் வழிவந்தவன்.

(கிபி1145 முதல் 1279) குலோத்துங்க சோழன் கொடுங்கோலனாக இருந்ததால் சோழ ராஜ்யம் வ- குன்றியது. ராஜராஜன்(கிபி1145-1163) ராஜாதிராஜன் (கிபி1165-1179) குலோத்துங்கன் (கிபி1179முதல்1218) ராஜராஜன் (கிபி1216 முதல் 1246) ராஜேந்திர சோழன் (ருத்திரசோழன் - கிபி1246-1279) சோழ நாட்டை ஆண்ட மன்னர்கள். பின்னர் சாளுக்கியர் தெலுங்கு நாயக்கர், ஹொய்சாலர்கள் பாண்டிய மன்னர்கள் சோழ நாட்டின் மீது படையெடுத்து சோழர்களை சிற்றரசர்கள் ஆக்கினர். காஞ்சியி-ருந்து தெலுங்கு சோழர்கள் பிரபாகர சோழனுக்குப் பிறகு சுதிமணி சோழன், ஏகாம்பர சோழன், மனோகர சோழன், கற்பூர ராஜ சேகர சோழன், விஜய கண்ட கோபாலன், பங்கப்பன் முத-யோர் கிபி1279 வரை ஆண்டனர். (கிபி1279 முதல் கிபி1520 வரை ஆண்ட சோழர்கள் பெயர் கிடைக்கவில்லை) கிபி.1520-இல் வீரசேகர சோழன் தஞ்சை

யி-ருந்து ஆண்டான். இவன் சந்திர சேகர பாண்டியனுடன் போரிட்டு தோற்றான். இவனுக்குப் பின் சோழ ராஜ்ஜியம் சிதறியது.

## 3. சேரமன்னர்கள்

## கடைச்சங்கம் மற்றும் அரசாண்ட சேர மன்னர்கள்

கிபி230 முதல் கிபி1188 முடிய ஆண்ட சேரமன்னர்ʼகளின் பெயர்கள் சரிவரக் கிடைக்கவில்லை. சேர மன்னர்கள் வ-குன்றி மோரியர், சாணக்கியர், தெலுங்கு நாயக்கர்கள், கோசல தேசத்து கொங்கணியர்கள் துளுவர்கள் முகமதியர்களால் சேர அரசர்கள் நிலைத்து நீடிக்க முடியவில்லை.

சேரன் சிவோத்பாலன் (ஜீவோற்பவன் - கிபி200-230) என்பவனுக்குப் பிறகு, தெய்வகுஞ்சாரன் (சேரமான் இளங்குட்டுவன்) சிந்துவாரணீய சேரன் (சேரமான் கப்பலோட்டிய வேல்கெழு குட்டுவன், ஜீவ சம்ரக்ஷக சேரன் (சிக்கற்பள்ளித்துஞ்சிய சேரமான் கடுங்கோ வாழியாதான் (கிபி330 முதல் 350) . இவன் சோழன் செங்கணான், சமுத்திர சோழன் முத-யவர்களை வென்றான். இவன் மகன் மாந்தரஞ்சேரல், சமுத்திரகுப்த மௌரியனால் தோற்கடிக்கப்பட்டான். இவனுக்குப் பிறகு தீர கேதாரசேரன், அதுலப்பிரதாபசேரன், அகணித கீர்திப் பிரதாப சேரன், வீர ராஜேந்திர சேரன், பீமேஸ்வரசேரன் நிர்மல பாதசேகர சேரன், பஞ்சாக்ஷர சேரன், காந்தாபரண சேரன், சிவ பாத சேகர சேரன், திருமஞ்சன சேரன் கைலாசம் சென்ற சேரன், சேரமான் பெருமாள் நாயனார் (கிபி630-660-சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த காலம்) மெய்பொருள் கண்ட சேரன், கொடுங்கோளூர் சேரமான் பெருமாள் நாயனார், குலசேகர வர்மன், பிருதீவிபதி சேரன், ராஜ சேகர வர்மன் (கிபி820-830) பிருதீவிபதிசேரன் (ஆதித்த கரிகால சோழனால் தோற்கடிக்கப்பட்டவன்) சேரமான் தாணு ரவி, குல சேகர சங்கர ராமதீரன், ஜெயசிம்மன் சேரமான் பாஸ்கர ரவி வர்மன் (கிபி978-1036) ஜெயசிம்மன் இவன் தனது 33 வயதில் வீரபாண்டியனை வென்று பாண்டிய சிங்காசனம் ஏறினான் (கிபி1188) பின்னர் கேரளவர்மன் (மணிகண்டன்) காலத்தில் சேரநாடு சிறப்புற்றது. அதன்பிறகு ராஜராஜ சேகரன் ஆரிய சேகரன் முத-ய சேர மன்னர் ஆட்சி செலுத்தினர். பின்னர் சேர நாட்டில் தமிழ் மன்னர்களின் ஆட்சி குலைந்தது.

## 4. பல்லவ மன்னர்கள்

பஹ்லவியர் (பல்லவர்கள்) ஈரான் ஆப்கானிஸ்தான் சிந்துராஜ்ஜியம், பஞ்சாப் முத-யவற்றை ஆண்டு அங்கிருந்து விரட்டப்பட்டு தொண்டை நாட்டில் குடியேறியவர்கள். இவர்கள் பௌத்த மதத்தை தழுவியவர்கள். தமிழர்களோடு கலந்து தமிழ் மன்னர்களாகி சிறந்த சிற்பக்கலைகளை உருவாக்கி பின்னர் சாவகம்,



காம்போஜம் (தாய்லாந்து) முத-ய நாடுகளைப் பிடித்து ஆட்சி செலுததி கீழை நாடுகளில் ஹிந்து மதத்தைப் பரப்பியவர்கள்)

திரையன் சோழன் விமலன் மனைவி (பல்லவி) கொங்கணிகள் காளபர்த்திரி, சூதபல்லவன், சந்திரவர்மன், காரணனன், விஷ்ணுகோபன், (கிபி330-380) (இவன் மௌரிய சமுத்திர குப்தனோடு போரிட்டவன்) இவனுக்குப் பிறகு ஸ்கந்த மூலன், சூதபல்லவன், விஷ்ணுகோபன், பானுகோபன், வீர கூர்ஜ்ஜரன், சிவஸ்கந்த வர்மன், குமார விஷ்ணு, புதுவர்மன் (கிபி450-500) குமார விஷ்ணு, ஸ்கந்த வர்மன், சிம்ம வர்மன், விஷ்ணுகோபன், வீர வர்மன், ஸ்கந்த வர்மன், நந்திவர்மன், சிம்ம்வர்மன்(கிபி575-615) உக்கிர தண்டன், ஸ்கந்த வர்மன், நந்தி வர்மன், சிம்ம வர்மன், விஷ்ணு கோபன், சிம்ம வர்மன், சிம்ம விஷ்ணு (ராஜசிம்மன் - கிபி599-615) மகேந்திர வர்ம பல்லவன் (குணபரன் - கி.பி. 615 - 630) , நரசிம்ம வர்ம பல்லவன் (கிபி.630-668) பரமேஸ்வர வர்மன், மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மன், (கிபி660-710) ராஜசிங்கன் (மனைவி ரங்கபதாகை குரு தண்டி) (கிபி 685-720) , நந்திவர்மன் (கிபி765-790) நந்திவர்மன் (யசோவர்மன்-கிபி 790-825) நந்தி வர்மன் (கிபி825-850) நிருபதுங்கவர்மன், அபராஜித பல்லவன் (கிபி825-893) சூர்ய வர்மன், பரகேசரி வர்மன், ஜயவர்மன் (வயிர மோகன் கிபி.830) பின்னர் சோழர்கள் ஆட்சியால் அரசு குலைந்தது.

## 5. சிங்கள அரசர்கள்

1. விஜயன் (கிமு543) 2. உபத்தீசன் (கிமு.505) 3. பாண்டுவசு (கிமு.504) 4. அபயன் (கிமு.474) 5. பாண்டுகாபயன் (கிமு.457) 6. கணத்தீசன் முக்த சிவன் 7. தேவானாம்பரிய தீசன் (கிமு.307) 8. மகாநாதன், யத்தாலக தீசன், கோதகாபயன், கர்வந்தீசன், ஊளத்தியன் (கிமு.266) 9. மஹாசிவன்(கிமு.256) 10, சூரத்தீசன் 11. சேனன், குட்டன், 12. அசேலன், 13. ஏழாரன் (கிமு.204) 14. துட்டகமுனு, 15. சைதாதீசன், 16. துல்லநாகன், 17. இலமனிதீசன், 18. தளநத்தநாகன் 19. வலகம்வாகு (கிமு.104) 20. சோழர்கள் 21. மகாசூலன், 22. சோரநாகன், 23. குடத்தீசன், 24. அநுலா, 25. மகாலனி தீசன் (கிமு.19) 26. பாதிசாயன், 27. மகாதாயி-ய மகாநாகன், 28. அட்டகைமுனு. 29. கானுசானுதீசன், 30. கடாபன், 31. சிங்கவல்-, 32. ஈழநாகன் 33. சந்தமுகசிவன், 34. யத்தாலக தீசன், 35. சுப்பன் 36. வாசபன், 37. வங்கநாசிக தீசன் (கிபி110) 38. கயவாகு (கிபி.113) 39. மகாலகா நாகன், 40. பாத்திய தீசன் 41. கணத்தீசன், 42. குட்டநாகன் 43. குடநாகன், 44. ஸ்ரீநாகன், 45. வைரதீசன், 46. அபயசேனன், 47. ஸ்ரீநாகன், 48. விஜயன், 49. சங்கதீசன், 50. ஸ்ரீசங்கபோதி, 51. கோத்தகாபயன், 52. மகாலதெட்ட தீசன் 53. மகாசேனன், 54. கீர்த்தி

ஸ்ரீ மேகவர்ணன், 55. தெட்ட தீசன், 56. புத்த தாசன், 57. உபத்தீசன், 58. மகாநாமா, 59. ஜோதிசேனன், 60. இலமினிதீசன், 61. மித்திரசேனன், 62. தமிழரசர்கள் ஐவர், 63. தாதுசேனன், 64. காஸ்யபன், 65. முகவன், 66. குமாரதாதுசேனன், 67. கீர்த்திசேனன், 68. சீவகன், 69. இலமினி தீசன், 70. சீலகாலன், 71. தப்புனு, 72. மூலகன், 73. ஸ்ரீமாயன், 74. மகாநாகன், 75. அக்ரபோதி, 76. அக்ரபோதி II 77. சங்தீசன், 78. போனாய மூலகன், 79. அகசிக்கயக்ஷன், 80. ஸ்ரீசங்கபோதி, 81. கமுனதெட்டு தீசன், 82. தழுப்பியாதீசன், 83. காஸ்யபன், 84. தப்புளு, 85. தழுப்பியாதீசன், 86. ஸ்ரீசங்கபோதி, 87. வளப்பிட்டிவரசித்தன், 88. அத்திநாதன், 89. மகாலபானு, 90. காஸ்யபன், 91. அக்ரபோதி, 92. அக்ரபோதி, 93. மிகுந்து, 94. தப்புளு, 95. மிகுந்து, 96. அக்ரபோதி, 97. தப்புளு, 98. அக்ரபோதி, 99. மிதவல்லசேனன் (பாண்டியனால் தோற்கடிப்பட்டவன்) 100. காஸ்யபன், 101. உதியன் (சேரன்) இ 102. உதியன் II 103. காஸ்யபன், 104. காஸ்யபன், 105. தப்புளு, 106. தப்புளு, 107. உதியன், 108. சேனன், 109. உதியன் (இவன் சோழர்களை ஜெயித்தான்) . 110. சேனன், 111. மிகுந்து (இவன் மனைவி க-ங்க இளவரசி) , 112. சேனன், 113. மிகுந்து (கிபி 1023- சோழனால் சிறை பிடிக்கப்பட்டான்) 114. விஜயபாகு (கிபி1071) , 115. கயவாகு, 116. விகரமபாகு, 117, பராக்கிரமபாகு (கிபி1153-இல் காம்போஜத்தை- தாய்லாந்து வென்றான்) சோழ பாண்டியர்களை ஜெயித்து ராமேஸ்வரம் கோயிலையும் புனர்நிர்மாணம் செய்தான்.) 118. விஜயாகு, 119. மிகுந்து, 120. கீர்த்தி நிசாங்கன், 121. வீரபாகு, 122. விக்ரம பாகு, 123. சொந்தகங்கன், 124. லீலாவதி, 125. சாகஸ மழவன், 126. கல்யாண வதி, 127. தர்மபாகு, 128. நாயங்கன், 129. லோகேஸ்வரன், 130. பராக்கிரம பாகு, 131. மாகன், 132. விஜயபாகு, 133. பராக்கிரமபாகு, 134. சத்துவ விஜயபாகு, 135. புவனைக்க பாகு, 136-139 பெயர்கள் தெரியவில்லை. 140. விஜயபாகு, 141. புவனைக்க பாகு, 142. பராக்கிரம பாகு, 143. விக்ரமபாகு, 144. புவனைக்க பாகு, 145. விஜயபாகு (இவன் சீனர்களை விரட்டியடித்தான்) , (கிபி.1369-இல் மிங்வமிச சீன அரசன்-டாய்-ட்சூ இலங்கைக்கு தூதர்களை அனுப்பினான். கிபி.1396-1402 யுன்-வென் தளபதி செங்-ஹோ முகமதிய அ--கப்பல்படை தளபதி சோழ அரசன் அழகோக்ணாராவை சிறைப்பிடித்து சிறைக்கு அழைத்துச் சென்றான்) 146. பராக்கிரம பாகு, 147. ஸ்ரீ விஜயபாகு, 148. புவனைக்க பாகு, 149. பராக்கிரம பாகு, 150. ஸ்ரீ பராக்கிரம பாகு, 151. தரும பராக்கிரம பாகு, 152. விஜய பாகு, 153. புவனைக்க பாகு, 154. தாம்பாலவ தொன்சுவரன், 155. ராஜவிம்மன், 156. ஜெயசூர்யன், 157. விமல தருமன்



158. செனரெத்து, 159. ராஜசிம்மன் 160. விமலதரும சூரியன், 161. நரேந்திர சிம்மன், (இவன் மனைவி பாண்டிய இளவரசி), 162. ஸ்ரீவிஜயன், 163. கீர்த்திஸ்ரீ, ராஜசிம்மன், 164. ராஜாதிராஜசிம்மன், 165. ஸ்ரீவிக்கிரம ராஜசிம்மன் (இவன் காலத்தில் ஆங்கிலேயர் வருகை).

**6. க-ங்க அரசர்கள்.**

இராமாயண காலத்தில் க-ங்கத்தை ஆண்ட அரசன் ரோமபாதன். இவன் தசரத சக்ரவர்த்தியின் பெண்ணான சாந்தையை தத்து எடுத்து வளர்த்து ருஸ்ய சிருங்கருக்கு மணமுடித்து வைத்தான். இந்த ருஸ்ய சிருங்கர் (கலைக்கோட்டு முனிவர்) தசரத சக்ரவர்த்திக்கு புத்திர காமேஷ்டி யாகம் செய்து வைத்தார். புத்ரகாமேஷ்டி யாகத்தின் பலனாக ஸ்ரீராமன் இக்ஷுவாகு குலத்தில் அவதரித்தான். ரோமபாதனின் முன்னோர் அசுர அரசன் ப- (மனைவி சுதேக்ஷிணை) ப- அரசனுக்கு பிள்ளையில்லாததால் அவன் மனைவி சுதேக்ஷிணை (விதற்ப நாடு) தீர்க்கதமசு முனிவருடன் கூடி அங்கன், வங்கன், சிங்கன், க-ங்கன், ஆந்திரன் முத-ய பிள்ளைகளைப் பெற்றாள். ததிவாகனன், விந்தன், சித்ராதன், சத்யாதனன், சத்யரதன், (இவன் மகன் ரோமபாதன்) ரோமபாதனுக்குப் பிறகு சதுரங்கன், பிரதுவிக்ஷன், சம்பன், அணையங்கன், யாதவக்கிரீவன், ஜனமேஜயன், கர்ணன், வருஷசேனன், உசீநரசு, சிபி முத-யோர் ஆண்டனர்.

மஹாபாரத காலத்தில் க-ங்க தேசத்தில் சிபி வழியில் க-ங்கன், சுருதாயு, சக்கரதேவன், சத்தியன், சேதுராமன், முத-ய அரசர்கள் வாழ்ந்தனர் என்றும் மஹாபாரதப் போரில் பீமனால் கொல்லப்பட்டனர் என்றும் புராணங்கள் கூறுகின்றன. பின்னர் மௌரிய வம்சத்து அரசன் அசோக சக்ரவர்த்தி க-ங்க தேசத்தின் மீது படையெடுத்து க-ங்க நாட்டை மகத ராஜ்யத்துடன் இணைத்துக் கொண்டான். பின்னர் காரவேலன் என்னும் க-ங்க மன்னன் ஆட்சியில் கரிகாற்சோழன் படையெடுத்தான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பின்னர் ஆந்திர அரசர்கள் க-ங்கத்தை ஆண்டனர்.

சரித்திர காலத்தில் கிபி.300-க்குப் பிறகு காங்கீயன், சித்ராங்கதன், கோலாகலன், வீரசிம்மன், காமார்ணவன்இ (கிபி.756 முதல் கிபி791) தானார்ணவன் (கிபி792 முதல் கிபி831) காமார்ணவன் (கிபி832 முதல் கிபி881) , ரணார்ணவன் (கிபி 882 முதல் கிபி 886) வஜ்ஜிர ஹஸ்த்தன், (கிபி887 முதல் கிபி.9012) காமார்ணவன்(கிபி.902 முதல் கிபி.920) , க-ங்க லாங்குலன் (கிபி921 முதல் கிபி.932) , குண்டமன் (கிபி,933 முதல் கிபி 939) , காமார்ணவன் (கிபி940 முதல் கிபி965) விநயாதித்தன் (கிபி.965 முதல் கிபி 967) , வஜ்ஜிரஹஸ்தன்(கிபி 968 முதல் கிபி1003) காமார்ணவன், குண்டமன்

(கிபி1003 முதல் கிபி 1005) , மதுகாமார்ணவன் (கிபி1006 முதல் கிபி 1024) திரி-ங்கநாத வஜ்ஜிரஹஸ்த்தன் (கிபி 1025 முதல் கிபி 1057) ராஜராஜன் (கிபி.1058 முதல் கிபி.1075) அனந்தவர்மன் (கிபி.1076) இவனை குலோத்துங்க சோழன் படைத்தளபதி கருணாகரத் தொண்டைமான் தோற்கடித்து க-ங்க நாட்டை சோழ ராஜ்யத்தில் இணைத்துக் கொண்டான்.

அனர்த வர்மன், பூரி ஜகந்நாதர், ஆலயம் கட்டியவன். இவனுக்குப் பின் டகாமார்ணவன் (10□) ராகவன் (14□) ராஜராஜன் (24□) அணியங்க-ங்கன்(4□), ராஜராஜன்(13□) அணிங்க-மன்(34□) நரசிம்ம தேவன்(10□) பானுதேவன்(15□) நரசிம்ம தேவன்(17□) பாநுதேவன்(25□) நரசிம்ம தேவன்(46□) பாலு தேவன்(10□) முத-யோர் க-ங்கத்தை ஆண்டனர்.

## 7. மகத அரசர்கள்

குருவமிசத்து சுதனு வழியில் வந்தவன் பிருகத்ரதன். இவன் பிள்ளை ஜராசந்தன் (மஹாபாரத காலத்தில் வாழ்ந்தவன் - பீமனால் கொல்லப்பட்டான்) இவன் வழியில் சகதேவன் முதல் ரிபுஞ்ஜயன் வரை அநேக அரசர்கள் ஆண்டனர். ரிபுஞ்ஜயனை அவன் மந்திரி கனகன் (சுக்கிரீவன்) கொன்றான். பின்னர் பிரத்யோதவன், பாலகன், விசாகக்ஷபன், ஜனகன், நந்திவர்த்தனன் முத-யவர்கள் கிமு928 முதல் கிமு748 வரை ஆண்டனர். கிமு 747-இல் சிசுநாகன் வமிசம் மகதத்தை ஆட்சி செய்தது. இவன் வழியில் காகவர்ணன், க்ஷேம தர்மன், நந்தன், மகாவீரன் பிம்பிசாரன், அஜாதசத்ரு, தர்பகன், உத்யணன், நந்திவர்த்தனன் முத-யோர் (கிமு747 முதல் கிமு414 வரை ஆண்டனர். நவநந்தர்கள் (கிமு418 முதல் கிமு321) பின்னர் மஹாபதும நந்தனுக்கும் முரா என்பவளுக்கும் பிறந்த சந்திர குப்த மௌரியன், விஷ்ணுகுப்தன் (சாணக்யன்-கௌடில்யர்) என்னும் பிராமணன் உதவியால் ஆட்சியைக் கைப்பற்றினான். இவன் வழியில் பிந்துசாரன், சுசீமன், சம்ராட் அசோகன் (கிமு.237) சுயன், சம்யுதன், சா-சூகன், சோமசர்மா, சத்தநுவா, பிருகத்ரதன் முத-யவர்கள் (கிமு.321 முதல் கிமு.185 வரை) ஆண்டனர். பின்னர் சுங்கவம்ச அரசன் புஷ்யமித்ரன், அக்னிமித்ரன், சச்சிமேஷ்ட்டன், வசுமித்திரன், உதங்கன், பு-ந்தகன், கோஷவசு, வஜ்ஜிரமித்ரன், தேவபூதி முத-யவர்கள் (கிமு185 முதல் கிமு 72 வரை) ஆண்டனர். பின்னர் கண்ணுவ வமிசத்தை சேர்ந்த அரசர்கள் (கிமு 72 முதல் ஸ்ரீரங்கசாமி, சுந்தர சாதகர்ணி, சகோர சாதகர்ணி, சிவஸ்வாதி, வசிஷ ்டபுத்ர சாதகர்ணி, கௌதமிபுத்ர சாதகர்ணி, புலுமாயி, சிவஸ்கந்த சாதகர்ணி, யக்ஞ ஸ்ரீ சாதகர்ணி, விஜய ஸ்ரீ சாதகர் ்ணி, புலுமாயி மற்றும் அநேக அரசர்கள் (கிமு72 முதல் கிபி320 வரை) ஆண்டனர்.



பின்னர் சந்திர குப்தன், கச்சன், சமுத்திர குப்தன், சந்திர குப்தன் (விக்கிரமாதித்தன்) குமார குப்தன், ஸ்கந்த குப்தன், குமாரகுப்தன் முத-யோர் (கிபி319 முதல் கிபி584 வரை ஆண்டனர்) பின்னர் மாளவ அரசன் விக்ரமாதித்தன் சீலாதித்யன் (ராஜயவர்த்தனன்) ஸ்ரீஹர்ஷன், அசோகவர்மன் (கிபி730) முத-யோர் மகதத்தை ஆண்டனர்.

## 8. காஷ்மீர் தேச அரசர்கள்

இராமாயண காலத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த நாகர்களும் கந்தர்வர்களும் (தமிழர்கள்) பாஞ்சால தேசம், காந்தார(ஆப்கானிஸ்தான்) தேசத்தையும் ஆண்டனர். ஸ்ரீராமனின் சகோதரன் பரதனின் பிள்ளைகள் தக்ஷன் பாஞ்சால தேசத்தையும் புஷ்கலன் என்பவன் காந்தார தேசத்தையும் ஆண்டனர். தக்ஷன் நாக இளவரசி கா-கை என்பவளையும், காந்தார இளவரசி சபலை என்பவளையும் மணந்தான். இவன் நிறுவிய பட்டணம் தக்ஷசீலம் (பாகிஸ்தானில் உள்ளது) . தக்ஷனின் சகோதரன் புஷ்கலன் கலாவதி என்னும் நாக இளவரசியையும், சஞ்சலை என்னும் கந்தருவ இளவரசியையும் மணந்தான். இவன் நிறுவிய பட்டணம் புருஷபுரம் (புஷ்கரபுரம்) (Peshawar -பாகிஸ்தானில் உள்ளது) . இக்ஷ ுவாகு வமிச அரசர்கள் பலகாலம் காஷ்மீரத்தையும் பாஞ்சால தேசத்தையும் ஆண்டனர்.

பின்னர் சந்திரவம்ச அரசன் துஷ்யந்தனுக்குப் பிறந்த பரதன், அனரன், ஆக்ஷ ு, குருப்பிரதி, நந்திதேவன், நீலன், சாந்தி, பருசானு, பிரது, பத்தராஸ்வன், சுசாந்தி, புரஞ்ஜயன், இந்திரசேவனன், ஹர்ஹஸ்வன், திவோதாஸ் மித்தராயு, சியவனன், சுதாஸ், சௌாதாஸன், சோமகன், பிருஷதன் முத-யோர் ஆண்டனர். பிருஷதனுடைய பிள்ளை துருபதன் (மஹாபாரத காலத்தில் வாழ்ந்தவன்) இவன் வழியில் த்ருஷ்டத்யும்னன், சிகண்டி முத-யவர்கள் ஆண்டனர். கந்தர்வ அரசனான சித்திராங்கதன் காஷ்மீர் வரை ஆண்டான். சித்திராதன் மகள் சித்திராங்கதைக்கும் அர்ஜ ுனனுக்கும் பிறந்த பப்புருவாகனன் (குலு-மன-) முத-ய நாக அரசர்கள் காஷ்மீரத்தி-ருந்து ஆண்டனர். கி.மு. முதலாம் நூற்றாண்டில் கனிஷ்கன் காஷ்மீரத்தி-ருந்து ஆட்சி செய்தான். இவனுக்குப் பிறகு மித்ரகன் (சிங்களம் வரை சென்று ஆட்சி செய்தான்) . பிரசவசேனன், மேகவாகனன், (பௌத்தர்கள் அபிமானி) மாத்ருகுப்தன் பின்னர் தென்னிந்திய நாகர்கள், கார்க்கோடகன், துர்லப வர்த்தனன் (கி.பி.626 முதல் கி.பி.662, துர்லப பகன் (கி.பி.612-முதல் கி.பி.662) சந்திரபீடன் (கி.பி.712 முதல் 720) தாராபீடன்(கி.பி.720 முதல் கி.பி.662) சந்திரபீடன் பீடன், ல-தாதித்யன் (கி.பி.724 முதல்

கி.பி.760), தாராபீடன் II (கி.பி.760 முதல் கி.பி.775) விநயாதித்யன் (கி.பி.775 முதல் கி.பி.806) , ல-தவர்மன் (கி.பி.806 முதல் கி.பி.855) அவந்திவர்மன் (கி.பி.855 முதல் கி.பி.883) சங்கர வர்மன் (கி.பி.863 முதல் கி.பி.902) , கோபால வர்மன் (கி.பி.902 முதல் கி.பி.904) பிரபாகர தேவன் (கி.பி.904 முதல் கி.பி. 935) வந்தி (கி.பி. 937 முதல் கி.பி.939) யசங்கர தேவன் (கி.பி.939 முதல் 948) சங்கர மஹாதேவன் (கி.பி.948 முதல் கி.பி.949) , பர்வதகுப்தன் (கி.பி.945 முதல் கி.பி.950) , க்ஷேமகுப்தன் (கி.பி.950 முதல் கி.பி.958) , லோகநாதன் (கி.பி.958 முதல் கி.பி.1003) சங்கர மஹாராஜன் (கி.பி.1003 முதல் கி.பி.1028) அனந்தன் (கி.பி.1028 முதல் கி.பி. 1063) கலசன் (கி.பி.1063 முதல் கி.பி.1069) ஹர்ஷன் (கி.பி.1069 முதல் கி.பி.1101) ஜயசிம்மன் (கி.பி.1128 முதல் கி.பி.1158) முத-யோர் காஷ்மீரத்தை ஆண்டனர்.

## 9. கன்யாகுப்ஜம் (கன்னோஜ் அரசர்கள்)

அரிவர்மன் (மௌத்காரியர்). ஆதித்யவர்மன், ஈஸ்வர வர்மன் (கி.பி.554) அவந்திவர்மன், பிரபாகரவர்த்˙தனன் (கி.பி.583 முதல் கி.பி.605) , க்ருஹவர்த்தனன் (மனைவி ராஜ்யஸ்ரீ) கி.பி.602, ஆதித்யவர்த்தனன், பிரபாகரவர்த்தனின் மகன் ராஜ்யவர்த்த்னன், ஹர்ஷவர்த்தனன் (கி.பி. 612 முதல் கி.பி.647) பின்னர் மாளவ அரசர்கள், பின்பு யசோவர்மன் (கி.பி.724 முதல் கி.பி.775) வஜ்ராயுதன் (கி.பி.775) இந்திராயுதன் (கி.பி,.775 முதல் கி.பி.815) மகேந்திரபாலன், தேவபாலன், விநாயகபாலன் முத-ய ஹிந்து அரசர்கள் ஆண்டனர். பின்னர் காசி அரசர்கள் ஆட்சியில் கன்னோஜ் வீழ்ந்தது.

## 10. மாளவதேச அரசர்கள்

விக்ரமாதித்யன் என்பவன் உஜ்ஜயினி பட்டிணத்தை கட்டி மாளவ அரசை ஸ்தாபித்தான். பிறகு குப்தர்கள் (மகத தேசம்) மாளவத்தை பிடித்து ஆண்டனர். பின்னர் ஹுணர்கள் படையெடுப்பு நிகழ்ந்தது. பின்னர் யசோவர்மன் (விஷ்ணுவர்த்தனன்-விக்ரமாதித்தன்) கி.பி.505 முதல் கி.பி.533 வரை ஆண்டு ஹுணர்களையும் மிலேச்சர்களையும் பௌத்தர்களையும் வென்று ஆட்சி செய்தான். (கல்கி அவதாரம் என்று மக்கள் போற்றினர்) பின்னர் விக்ரமாதித்யன் (கி.பி.525-இல்) ஆட்சி செய்தான். இவனுடைய அரசவையில் தன்வந்திரி க்ஷபணன், அமரஸிங்கன், சங்கன், வேதாளபட், கடகர்ப்பன், காளிதாசன்(மஹாகவி) வராகமிஹிரர் (சோதிடர்-வான நூல் ஆய்வாளர்) , வரருசி முத-யோர் இருந்தனர். விக்ரமாதித்யன் கி.பி.583-இல் இறந்த பிறகு சிலாதித்யன் முத-யோர் ஆண்டனர். இக்காலத்தில் சீன யாத்திரிகன் ஹ்யூன்-சாங் இந்தியா வந்தான். பிறகு அசோகவர்மன் (கி.பி.730). உபேந்திரன் வைரிசிம்மன்



சீவகன் கி. வாக்பதிராஜன், வைரிசிம்மன் II , ஹர்ஷ சிங்கன்II (கி.பி.948 முதல் கி.பி.974) , வாக்பதிராஜ முஞ்ஜன் (கி.பி.974 முதல் கி.பி.995) சிந்துராஜன் (கி.பி.995 முதல் கி.பி.1010) போஜன் I (கி.பி.1010 முதல் கி.பி.1055) ஜயசிம்மன் I (கி.பி.1055முதல் கி.பி.1066) உதயாதித்தன் (கி.பி.1066 முதல் கி.பி.1087) லக்ஷ்மணதேவன் (கி.பி.1087 முதல் கி.பி.1097) நரவர்மன், யசோவர்மன் II , குமாரபாலன், விந்தியவர்மன், சுபதவர்மன், அச்சுதவர்மன் (கி.பி.1211 யமதல் கி.பி.1215) முத-யோர் மாளவ தேசத்தை ஆண்ட ஹிந்து மன்னர்கள்.

## 11. மேலை சாளுக்கியர்கள்

கி.பி.2 ஆம் நூற்றாண்டில் ஆப்கானிஸ்தான், ஈராக், ஈரான், துருக்கி முத-ய இடங்களில் பெரும் பூகங்கள் ஏற்பட்டு லக்ஷக்கணக்கில் மக்கள் அழிந்தனர். பெரும்புயல், கடற்கோள், பெருமழை ஏற்பட்டு மக்கள் பீதியடைந்து பாரதத்திற்குள் ஓடி வந்தனர். (இவ்வாறு ஓடி வந்தவர்களே திராவிடர் -“ த்ரவதி” என்னும் வடமொழிச் சொல். ஓடுவது என்பதைக் குறிக்கும்) . இவ்வாறு ஓடிவந்தவர்கள் சாளுக்கியர்கள், பஹ்லவ்யர் (பல்லவர்) , களேபரர் முதலான இனத்தவர்களே . சாளுக்கியர்கள் கோசல தேசத்திலும், மகத தேசத்திலும், மாளவ தேசத்திலும் தஞ்சமடைந்தனர். ஏறத்தாழ கி.பி.350இல் “ வாதாபி” (Badami) என்னுமிடத்தில் தலைநகர் அமைத்து ஜயசிம்மன் I சாளுக்கியர்களுக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினான். ஜயசிம்மனுக்குப் பிறகு புத்தவர்மன், விஜயவர்மன், ரணராஜன், வல்லபன், பு-கேசி, (கி.பி.550 முதல் கி.பி.567) , கீர்த்தி வர்மன் I , பிருதிவி வல்லபன் (கி.பி.567 முதல் கி.பி.598) , மங்கலீச ராஜன் (கி.பி.598 முதல் கி.பி.608) சந்தியாஸ்ரய இந்திர வர்மன் பு-கேசி (கி.பி.608 முதல் 642) இவன் ஸ்ரீஹர்ஷனை வென்று பாரசீகம் முதல் மைசூர் (கருநாடகம்) வரை ராஜ்யத்தை விஸ்தரித்தான். பல்லவர்களை துரத்தி வேங்கியி-ருந்து தன் புதல்வர்களை ஆளும்படி செய்தான். நரசிம்மவர்மன் பல்லவன் தளபதி பரஞ்சோதியார் இவனை தோற்கடித்து வாதாபி நகரை சூறையாடினான். பல்லவ அரசன் சாலங்காயனன் மீண்டும் அரசனானான். இந்திரவர்மனுக்குப் பிறகு வல்லபேந்திரன் பு-கேசி(கி.பி. 615) குப்ஜ விஷ்ணுவர்த்தனன், ஜயசிம்மன்II (கி.பி.663), இந்திரபட்டகன், நாகவர்த்தனன், ஆதித்யவர்மன், விஜயபத்திரன், விக்ரமாதித்தன் I (கி.பி.655-680) , விஜயாதித்தன், விக்ரமாதித்தன்II (கி.பி.733 முதல் கி.பி.746) விக்ரமாதித்தனுக்குப் பிறகு கீர்த்திவர்மன்II , விக்ரமாதித்தன்III , கீர்த்திவர்மன் III (கி.பி.747 முதல் 888) , சாளுக்கிய பீமன் (கி.பி.888) ஜயசனன் விஜயாதித்தன், விக்ரமாதித்தன் V , விக்கிரமார்க்கன்

தைலபன் (கி.பி.973 முதல் கி.பி.997) சந்தியாஸ்ரயன் (கி.பி.997 முதல் 1068) தாசவர்மன், விபு விக்ரமன், ஐயணன், அக்கதேவி (கி.பி.1009 முதல் 1014) ஜயசிம்மன் II (கி.பி.1015 முதல் 1042) ஆகவமல்லன் (கி.பி.1042 முதல் கி.பி.1068) அமோகவர்ஷன் சோமேஸ்வரன் II (கி.பி.1068 முதல் கி.பி.1076) விக்கிரமார்க்கன் ஜயசிம்மன், ஜயகாரணன் (கி.பி.1077 முதல் கி.பி.1127) சோமேஸ்வரன்III (கி.பி 1127 முதல் கி.பி.1136) , மைலாலதேவி, ஜகதேகமல்லன் (கி.பி.1136 முதல் கி.பி.1151) , திரிலோக மன்னன் (தைலபன் கி.பி.1151 முதல் கி.பி.1163) வீரசோமேஸ்வரன் VI (கி.பி.1184 முதல் கி.பி.1200) முத-யோர் கல்யாணியி-ருந்து ஆண்ட மேலை சாளுக்கிய அரசர்கள்.

## 12. கீழை சாளுக்கிய அரசர்கள்

பு-கேசியின் வழியில் குப்ஜ விஷ்ணு வர்த்தனன் (கிபி663) வேங்கியி-ருந்து (தெலுங்கு சோழர்கள்) ஆட்சியைத் தொடங்கினர். ஜயசிங்கன், இந்திர பட்டாரகன், விஷ்ணுவர்த்தனன்III , மங்கியுவராஜன், ஜயசிங்கன், கொக்கி- ராஜன் (கி.பி.664 முதல் கிபி.763) விஷ்ணு வர்த்தனன்III (கி.பி.764-796) , விஜயாதித்தன் (கிபி.797 முதல் கிபி843) , விஜயாதித்தன் III (கி.பி844-888) , வீமன் (கிபி.888 முதல் கிபி.918), விஜயாதித்தன் IV , அம்மராஜு விஷ்ணு வர்த்தனன் (இராஜமகேந்திரபுரி பட்டணம் உருவாக்கியவர்) இவன் கன்னிகா-பரமேஸ்வரி என்னும் செட்டிப் பெண்ணை விரும்ப இதனால் மனமுடைந்த செட்டியார் குடும்பத்தினர் 102 பேர் தீயில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள, விஷ்ணு வர்த்தனன் கன்னிகா பரமேஸ்வரியின் சாபத்தால் யானை மீது இருந்து விழுந்து இறந்தான்.) பிறகு பீமன் (கிபி945வரை) அம்மராஜு II (கி.பி945 முதல் 955), பாதபன் (கிபி 956 முதல் கிபி999) யுத்தமல்லன் (கிபி999) சக்திவர்மன் (கிபி999-கிபி1011) விமலாதித்தன் (கிபி1011-கிபி1018) இவன் ராஜராஜ சோழன் மகள் குந்தவ்வையை மணந்தான். இவர்களுடைய மகன் ராஜராஜ நரேந்திரன் (கிபி1019 முதல் 1063) இவன் கோரி முகமது மீது படையெடுத்தான். தெலுங்கு மஹாகவி நன்னய பட்டர் இவர் காலத்தவர். ராஜராஜன் தம்பி விஜயாதித்தன் (கிபி1070) பின்னர் வீரசோழன் ஆட்சி செய்தான். ராஜராஜனுக்கும் அம்மங்கைக்கும் பிறந்த குலோத்துங்க சோழன் I தஞ்சையி-ருந்து வேங்கி வரை ஆட்சி செலுத்தினான். க-ங்கத்தின் மீது படையெடுத்து வென்றான்.

## 13. வங்காள (கௌட) அரசர்கள்

வங்காள தேசத்தை மகத ராஜ்யத்தி-ருந்து மீட்டு தனி அரசை மீண்டும் நிறுவியவன் கோபாலவர்மன் (கி.பி. 765-கி.பி. 769) இவன் கருநாடக தேசத்தி-ருந்து சாளுக்கியர்களால் விரட்டப்பட்டு



வங்காளத்தில் குடியேறியவன். இவனுக்குப் பிறகு தர்மபாலன் (கிபி769-கிபி815) தேவபாலன் (கிபி815-கிபி854) , விக்ரஹபாலன் (கிபி854-கிபி857) , நாராயணபாலன் (கிபி857-கிபி911) ராஜ்யபாலன் (கிபி911-கிபி935) கோபலன்II , விக்ரஹபாலன் II (கிபி935-கிபி992) மகிபாலன் (கிபி992-கிபி1040) இவன் ஆட்சி ராஜபுதனம் வரை பரவியிருந்தது. நயபாலன் (கிபி1040-கிபி1055) விக்கிரஹபாலன்III (கிபி1055-1081) மகிபாலன் II (கிபி1082) சூரபாலன்(கிபி1083) ராமபாலன் (கிபி1084-1126) குமாரபாலன் (கிபி1126-1136) கோபலன் III (கிபி1136-1150) கோவிந்தபாலன் (கிபி1150-1162) இந்திரதுய்மன் முத-ய இந்து அரசர்கள் வங்காளத்தை ஆண்டனர். கிழக்கு வங்காளத்தை ஆண்ட கருநாடக பிராம்மணன் சாமந்தசேனன் இன மகன் ஹேமந்த சேனன் (கிபி1075-1097) விஜயசேனன் (கிபி1097-1154) வல்லாள சேனன் (கிபி1059-கிபி1185) லக்ஷ்மணசேனன் (கிபி 1185-கிபி1206) காசியி-ருந்து கன்னோஜ் வரை ஆண்ட கர்நாடகன் காகடதேவன் (கிபி1080-1100) மதன் சந்திரன் (கிபி1100-கிபி114) கோவிந்த சந்திரன் (கிபி1114-கிபி1155) விஜயசந்திரன் (கிபி1155-கிபி1170) ஜயச்சந்திரன் (கிபி1170-1193) இவன் இந்திரப்பிரஸ்த (டில்-) அரசன் அனங்கபாலன் (பாண்டவர் வழி) என்பவனின் பேரன், கன்னோஜ் நகரி-ருந்து ஆட்சி செய்தான். அனங்கபாலனுக்கு புத்திரன் இல்லாமையால் இந்திரப் பிரஸ்த ஆட்சி தனக்கு கிடைக்கும் என்று ஜயசந்திரன் ஆசைப்பட்டான்.

இக்காலத்தில் பிருதிவிராஜன், அஜ்மீரி-ருந்து ஆண்ட ராஜபுத்திர அரசன் இவனும் அனங்க பாலனின் பேரன் உறவுமுறையாகும். இக்காலத்தில் ஆப்கானிய கோரிமுகம்மது பெரும்படையுடன் காஷ்மீர் பாஞ்சாலம் தாண்டி டில்- மீது படையெடுத்து வந்தான். ஜயச்சந்திரனும் பிருதிவிராஜனும் சேர்ந்து கோரி முகம்மதை விரட்டினர். ஜயசந்திரனின் மகள் சம்யுக்தை. இவள் பிருதிவிராஜன் மீது காதலுற்றாள். சம்யுக்தையின் சுயம்வரம் நடைபெற்றபோது விரோதம் காரணமாக ஜயச்சந்திரன் பிருதிராஜனை அழைக்கவில்லை. அவனது உருவப் பொம்மையை சுயம்வர மண்டபத்தில் வைத்திருந்தான். சம்யுக்தை சுயம்வரத்தின்போது பிருதிவிராஜனின் உருவப் பொம்மைக்கு மாலையிட்டாள். அங்கே மறைந்திருந்த பிருதிவிராஜன் ராணி சம்யுக்தையை குதிரை மீது கடத்திக் கொண்டு சென்று விட்டான். அனங்காபாலன் பிருதிவிராஜனிடம் இந்திரப்பிரஸ்த ஆட்சியை ஒப்புவித்தான். இது கண்டு பொறாமை யடைந்த ஜயச்சந்திரன், கோரிமுகம்மதுக்கு தூது அனுப்பி, பிருதிவிராஜன் மீது படையெடுக்க தூண்டினான். சித்தூர் அரசன் அமரசிங் பிருதிவிராஜனுக்கு உதவினான். பிருதிவிராஜனும்

அமரசிங்கும் போரில் மாண்டனர். சம்யுக்தையும், அமரசிங்கின் மனைவி பிருதையும் தற்கொலை செய்து கொண்டனர். பிறகு கோரி முகம்மது ஜயச்சந்திரன் மீது படையெடுத்து கன்னோஜியை பிடித்தான். ஜயச்சந்திரன் கங்கையில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான். ஜயச்சந்திரனின் பொறாமை பாரத தேசத்தில் இஸ்லாமியர் ஆட்சிக்கு அடிகோ-யது.

## 14. ராஜபுத்ர அரசர்கள்

வங்காளத்தி-ருந்து வந்த கருநாடகரில் “ சாகமானர்” என்னும் பிரிவினர் ராஜபுதனத்தை ஆண்டனர். விக்கிரம ராஜன் (கிபி973), பிருதிவிராஜன் கி (கிபி1105) இவன்அகாலத்தில் கஜினி முகம்மது என்னும் ஆப்கானிய அரசன் பாரதம் மீது 27 முறை படையெடுத்து, குஜராத் கடற்கரை வரை வந்து சோமநாதர் ஆலயத்தை இடித்து கொள்ளையடித்தான். பிருதிவிராஜனுக்குப் பிறகு அஜபரராஜன் அருணராஜன் (கிபி1139-கிபி1153) இக்காலத்தில் அஜ்மீரை ஆண்ட ராஜபுத்ர அரசன் பிரிதிவிராஜ் (சம்யுக்தையின் கணவன்) என்பவனை கன்னோஜி அரசன் ஜயச்சந்திரன் கோரிமுகம்மதுவிடம் காட்டிக் கொடுத்தான். அருணராஜனுக்குப் பிறகு விக்ரஹராஜன் IV (கிபி1153-கிபி1164) பிருதிவிராஜன் II (கிபி1164-கிபி1170) சோமேஸ்வரன் (கிபி1170-1177) பிருதிவராஜன் III (கிபி1177-1192) இவன் தம்பி அரிராஜன், பிறகு கோவிந்தராஜன் முத-யோர் ஆண்டனர். ராஜபுத்திரர்கள் உதய்பூர், மேவார், சித்தூர், ஆஜ்மீர் முத-ய பல இடங்களி-ருந்து தனித்தனி அரசுகளாக ஆட்சி நடத்தினர். இதில் சித்தூர் ராஜபுத்ர வம்சம் பிரபலமானது. கோரி முகமது படையெடுப்பிற்குப்பின் டில்-யில் அடிமைகள் வமிசம் ஆண்டது. குத்புதீன் ஐபெக் காலத்தில் குதுப்மினார் கட்டப்பட்டது. (கிபி 1206-கிபி1290) பால்பன் (கிபி1246-1265) பின்னர் ஜலாலுதின் கில்ஜி (கிபி1290-1296) அல்லாவுதீன் கில்ஜி (கிபி1293) ஆட்சி செய்தனர்.

அல்லாவுதீன் கில்ஜி காலத்தில் சித்தூரை ஆண்ட ராஜபுத்ர மன்னன் லக்ஷ்மண்சிங். இவனது மாமன் பீம்சிங். இவன் மனைவி பத்மினி. இவள் பேரழகுடையவள். இவளது அழகைக் கேள்விப்பட்டு அல்லாவுதீன் கில்ஜி சித்தூர் மீது முற்றுகை இட்டான். ஒரு முறை கண்ணாடியில் பத்மினியின் அழகைப் பார்த்துவிட்டு சென்று விடுவதாக ராஜபுத்திரர்களிடம் வாக்களித்தான். பத்மனியின் மாமன் கோரா. அவன் மகன் படாலும் பத்மினியின் அழகைப் பார்த்துவிட்டு பதுமனியின் கணவன் பிமசிங்கை கடத்திச் சென்றுவிட்டான். பின்னர் கோராவின் உதவியால் பீம்சிங் தப்பினான். ராணி பத்மினியும் அவள் தோழிகளும் தீக்குளித்து இறந்தனர். கி`ல்ஜி தோல்வியுற்று



திரும்பினான். லக்ஷ்மண் சிங்கின் மகன் ஆர்சிங். இவன் மகன் ராணாஹமீர். இவன் அல்லாவுாதீன் கில்ஜியுடன் போரிட்டு தோற்றான். ராணாஹமீரின் மகன் ராணா லக்கா. இவன் மகன் ராணா மொகல். இவன் மகன் ராணா கும்பா (மீராபாயின் கணவன்- கிபி1419-கிபி1469) பிறகு ராணாசங்கன், ராணாரத்தன் இவன் தம்பி விக்ரமராஜன், ராணா பிரதாப் சிங் (அக்பரோடு போரிட்டவன்) அமர்சிங், ராணாராஜசிங் (ஔரங்கசீப்ே`பாடு போரிட்டவன்) சிந்தியா ஹோல்கர் முத-யவர் பிரசித்தி பெற்ற ராஜபுத்ர மன்னர்கள்.

(அலாவுதீன் கில்ஜிக்குப் பிறகு டில்-யி-ருந்து அரசாண்ட முகமதிய அரசர்கள் கியாஸுதீன் துக்ளக் (கிபி1321-1325) முகமது பின் துக்ளக் (கிபி1351-1398) மொகலாயர்கள் தைமூர், கீர்கான் (கிபி1414-1450) லோடி (கிபி1451-1489) சிக்கந்தர் லோடி (1489-1517) இப்ராஹீம் லோடி (1517-1526) பாபர் ஹுமாயுன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான் (இவன் மனைவி மும்தாஜ் இவள் நினைவாக காட்டிய சமாதி தாஜ்மஹால் உலக அதிசயங்களில் ஒன்று) பின்னர் ஔரங்கசீப் (இவன் காலத்தில் மராட்டிய மன்னன் சிவாஜி பலமுள்ளவனாக இருந்தான்) .

## 15. களசூரிமரபினர்-ஹேஹயர்-ஜபல்பூர் அரசர்கள்

கோக்கல்லன் (கிபி875-925) , சங்கர கணன், பாலஹர்ஷன் யுவராஜன், லக்ஷ்மண குமாரன், சங்கரகணன்II, கோத்கல்லன், காங்கேயதேவி ஸ்வாமித்திரன்(கிபி 1030-கிபி1041) லக்ஷ்மிகர்ணன் (கிபி1041-1073) (க-ங்கம் வரை ஆண்டவன்) யச கர்ணன் (கிபி1073-1125) கஜகர்ணன்(கிபி1125-1155) நரசிம்மன்(கிபி1155-1170) விஜயசிம்மன் (கிபி1180-1195) அஜய்சிம்மன் முத-யோர் ஆட்சி செய்தனர்.

## 16. கூர்ஜர தேச அரசர்கள் (அக்னிகுலம்)

நாகபட்டன் (கிபி775-740) வத்ஸராஜன்(கிபி740-800) நாகபட்டன்II, (கிபி800-834) கன்யாகுப்ஜம் வரை ஆட்சி செலுத்தியவன்) ராமபத்திரன் (கிபி834-840) மிசிர போஜன்(கிபி840-890) மகிபாலன் (கிபி910-943) ராஜ்யபாலன் (கிபி960-1018) முத-ய அரசர்கள் பிரபலமானவர்கள்.

## 17. ராஷ்ட்ரகூட (மஹா-ராஷ்ட்ரர்) கன்னட அரசர்கள்

தலைநகர் மான்ய கடகத்தி-ருந்து இந்திரன்I ,தந்தி துர்கன் (கிபி745-756) கிருஷ்ணன் I, (கிபி756-776) கோவிந்தன் II, (கிபி775-780) துருவன் (கிபி780-794) கோவிந்தன் III, (கிபி794-814) அமமோகவர்ஷன் (கிபி814-880), கிருஷ்ணன் II, (கிபி880-912) இந்திரன் III, (கிபி912-917) அமோகவர்ஷன் II (கிபி917-918)

கோவிந்தன்(கிபி918-935) , அமோகவர்ஷன்III (கிபி935-938) கிருஷ்ணன்III (கிபி939-968) , கோட்டிகன் (கிபி968-972) கற்கன் (கிபி972-973).

## 18. காகதீய அரசர்கள்

கீழைச் சாளுக்கியர்கள் ந-வுற்ற பிறகு வாரங்கல் (ஆந்திரா) என்னுமிடத்தை தலைநகராக கொண்டு காகதீய அரசர்கள் ஆட்சி செய்தனர். கணபதி, சோமதேவராஜன் (புரோலன்), மாதவ வர்மன் (பேதன்), புரோலன்II , ருத்ரன், கடகவல்லபன், மகாதேவன் (பெண்டி குண்டராஜன்) , எருகதேவராஜன், புவனைகமல்லன், பிரதாபருத்திரன் (கிபி1158-1187) காகத்திரியப் போலராஜன், பிரதாபருத்திரன்II (கிபி1187) , இவன் தம்பி மஹாதேவ ராஜன் (கிபி1195-1198) கணபதி மஹாராஜன் (கிபி1198-1261) , இவன் மனைவி ருத்திரமாதேவி - யாதவ இளவரசி) பிரதாபருத்திரன்II (கிபி1290-1326) இவன்ஆட்சியின் போது மா-க்காபூர் என்னும் முகமதியன் இன்னாட்டின் மீது படையெடுத்து, கோயில்களை இடித்து கொள்ளையிட்டான். பிறகு தென்னாட்டில் பாமினி சுல்தான்களும், மதுரையில் ஜலாலுதீன்-ஷா என்னும் முகமதியர்கள் ஆட்சி பரவியது.

## 19. மைசூர் தலைக்காடு அரசர்கள் (கங்க வமிசம்)

இட்சுவாகு குல ஹரிச்சந்திரன் வழியில் வந்த பத்மநாபன் ததிகன், மாதவன் II (கொங்கணவர்மன்) மாதவன் II (கிரிய மாதவன்) ஹரிவர்மன் (கிபி247-266) விஷ்ணுகோபன், பிருதிவீகங்கன், மாதவன் III (கிபி357-370) , அவனீதன் (கிபி430-482) துர்விநீதன் (கிபி482-517) முஷ்கரன், ஸ்ரீவிக்ரமன், பூசவிக்ரமன், ஸ்ரீவல்லபன் (கிபி670) சிவமாறன் (கிபி670-713) நவகாமன், சிஷ்டப்பிரியன், பிருதிவிமுகாங்கனி, எரியங்கன் ஸ்ரீபுருஷன் (கிபி726-776) முத்துராஜா, பிருதிவி கொங்கணிII, பெருமானடி, சைகோத்தசிவமாறன், மாறசிம்மன், லோகாத்ரி, நேத்ரன், பிருதிவி மாறசிம்மன், அத்திமல்லன், பிருதிவீபதி, விஜயாதித்ய-அரண விக்ரமன், ராஜமல்ல சத்ய வாக்யன் மஹேந்திராந்தகன், ராசமல்ல சத்திய வாக்கியன்III கச்சேயகங்கன் பூதுகன் (கிபி938-953) (மனைவி மருளதேவி சோமதேவி) மாறசிம்மன் (கிபி961-974) ராஜமல்ல சத்திய வாக்யன்IV, ரக்கஸ-கங்கன், அருள்மொழி தேவன் நீதிமார்க்கன் III.

## 20. குந்தளம் (கதம்ப குலம்) மைசூர் அரசர்கள்

கங்கவர்மன் (கிபி370-395) , பகீரதன் (கிபி395-420) ரகு (கிபி420-430) கருத்தவர்மன் (கிபி430-450-குப்தர்களின் நண்பன்) சாந்திவர்மன் (கிபி450-475) மிருகேசவர்மன் (கிபி475-490) ரவிவர்மன் (கிபி495-537) அரிவர்மன் (கிபி537-547-பு-கேசியால்



தோற்கடிக்கப்பட்டவன்) கிருஷ்ணவர்மன் (கிபி547-565) அஸ்வவர்மன் (கிபி565-606) போகிவர்மன் (கிபி606-640)

## 21. வாகாடகர் (பிரார்) அரசர்கள்

விந்திய சக்தி, சம்ராட்ப்ரவர சேனன் (கிபி300-330) ருத்ரசேனன் (கிபி330-340) பிருதிவிசேனன் (கிபி340-390) ருத்ர சேனன் (கிபி390-395-இவன் மனைவி பிரபாவதி சந்திரகுப்தன் IIஇன் மகள்) பிரவரசேனன்II (கிபி395-420) பிருதிவீ சேனன்II (கிபி420-445) தேவசேனன் (கிபி445-466) அரிசேனன் (கிபி466-500)

## 22. பிரதிஹாரர்கள் (சந்தலர்) அரசர்கள்

நன்னுகன், வாக்வதி, ஜயசக்தி, (புந்தேல்கண்ட்) ராகுலன், ஹக்ஷன், யசோவர்மன், தங்கன் (கிபி945-1002) கண்டன் (கிபி1002-1019) வித்யாதரன் (கிபி1019-1051-கஜினி முகமதுவுடன் போரிட்டவன்)) விஜயபால், தேவவர்மன், கீர்த்திவர்மன், சல்லக்ஷணவர்மன், ஜயவர்மன், பிருதிவர்மன், மதனவர்மன் (கிபி1129-1163) பரமார்த்தி (கிபி1167-1202) திரைலோக்கிய வர்மன் (கிபி1205-1241)

## 23. அஸ்ஸாமிய அரசர்கள்

புஷ்யவர்மன் குலம் (கிபி350-650) சாரஸ்தம்பன் குலம் (கிபி650-800) பிரலம்பன் குலம் (கிபி800-900) ரத்தினபாலன் குலம் (கிபி900-1150) பாஸ்கரன் குலம் (கிபி1150-1206) வல்லபதேவன் முத-ய இந்து அரசர்கள் ஆட்சி செய்தனர்.

## 24. ஹொய்சள அரசர்கள் (துவார சமுத்திரம்)

சலன் வழியில் விநயாதித்தன் (கிபி1006-1022) நிருபகாமன் (கிபி1022-1047) விநயாதித்தன் (கிபி1047-1100) வல்லாளன் I (பேலூர்) (கிபி1100 முதல்) பி`ட்டி தேவன் தம்பி விஷ்ணுவர்தனன் (கிபி1141 இவனிடத்தில் ராமானுஜர் தஞ்சமடைந்தார்) நரசிம்மன் I (கிபி1141-1173) வல்லாளன் II (கிபி1173-1220) (ஹளே-பிடுகோயில் சிற்பங்கள் ஹொய்சீ அரசர்கள் செய்த சிறப்பு)

## 25. விஜயநகர அரசர்கள்

விஜய நகர அரசர்களுக்கு முன்பாக இருந்தவன் விஜயராஜன் (கிபி1118) . துங்கபத்திரை நதிக்கரையில் ஆனகுந்தி என்னுமிடத்தில் தலைநகர் அமைத்தான். கிபி1325இல் மா-க்காபூர் என்னும் முகமதியன் படையெடுத்து இப்பட்டணத்தை அழித்தான். அப்போது மந்திரிகளாய் இருந்த ஹரிஹரன்,. புக்கன் உதவியுடன் வித்யாரண்யர் என்னும் சங்கராச்சாரியார் உதவியுடன் வித்யாரண்ய நகரம் என்பதைக் கட்டி கிபி1336-இல் ஹரிஹரன் அரசனானான். குமார கம்பணன் என்னும் நாயக்கர் மதுரை மீது படையெடுப்பு செய்து மதுரையை (கிபி1364) பிடித்துக் கொண்டான். ஹரிஹரன்II (கிபி1416 முடிய )

1 Proof



தேவராயலு I (கிபி1416-1418) விஜயபதிராயன், பிரபுடதேவராயன் (கிபி1419-1444) , இம்முடி தேவராயன் (கிபி1444-1449) விருபாக்ஷன் (கிபி1450-1490) நரபதி நாராயணன் (1490-1497) வீரநரசிம்மராயன் (கிபி1497-1508) கிருஷ்ண தேவராயன் (கிபி1509-1530) கிருஷ்ண தேவராயரின் மந்திரி மதியூகி அப்பாஜி. இம்மன்னன் பேரவையில் அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனா-ராமுடு முத-ய அறிஞர்கள் (அஷ்டதிக்கஜங்கள்) இருந்தனர். தெனா- ராமன் காளியின் வரப்பிரசாதம் பெற்ற விகடகவி கிருஷ்ணதேவராயன் சைவ-வைணவ பேதமின்றி அநேக ஆலய திருப்பணிகள் செய்தார். இம்மன்ன காலத்தில் சைவ, வைணவ மதம் தழைத்தது. இம்மன்னன் கிபி1531 இயற்கை எய்தினான். இவனுக்குப்பின் அச்சுத தேவராயுலு (கிபி1580-1542), வேங்கடாத்திரி ராயுலு, (கிபி1542-1543) சதாசிவ ராயுலு, இராமராயர் (கிபி1543-1565) வேங்கடராயன் திருமலைராயன் (கிபி1570-71) , சீரங்கன் (கிபி1572-1585) வேங்கடன் II (கிபி1586-1614) , சீரங்கன் II (கிபி1614-1618) (இம்மன்னன் காலத்தில் தஞ்சையில் இராம தேவன் (கிபி1618) ரகுநாதன் மற்றும் மதுரையில் முத்துவீரப்பன் (கிபி1609-1623) முத-யோர் ஆண்டனர்) சீரங்கன் II க்குப் பிறகு ராமதேவன் (கிபி1618-1630) பெத்த வேங்கடவன் III (கிபி1630-1642) சீரங்கன் III (கிபி1642-1649) முத-யோர் விஜயநகர அரசர்கள்.

## 26. நாயக்க அரசர்கள்

தமிழ்நாட்டில் பாண்டிய, சோழ அரசர்களுக்குள் ஒற்றுமையின்றி அடிக்கடி போர் நிகழ்ந்து வந்தது. மேலும் இஸ்லாமியர் ஒரு புறம் படையெடுத்துக் கொண்டிருந்தனர். கிபி1520-இல் சந்திர சேகர பாண்டியனும் வீரசோழனுடன் போரிட்டனர். வீரசோழனுக்கு உதவியாக கோநாம நாயக்கன் படைகளோடு வந்து சந்திர சேகர பாண்டியனைக் கொன்று, சோழனையும் கொன்று, பாண்டிய, சோழ ராஜ்யங்களில் நாயக்கர்களின் ஆட்சியைத் தோற்றுவித்தான். தெலுங்கு நாயக்கர் தமிழ் நாடெங்கும் பரவினர். மதுரையில் நாயக்கரின் ஆட்சி கிபி1529 முதல் கிபி1736 வரை நடைபெற்றது. மதுரையி-ருந்து ஆண்ட நாயக்க மன்னர்கள் விஸ்வநாத நாயக்கன் (கிபி1529-1564), கிருஷ்ணப்ப நாயக்கன் (கிபி1564-1572) வீரப்ப நாயக்கன் (1572-1595) குமார கிருஷ்ணப்ப நாயக்கன் (கிபி1595-1601) முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கன் (கிபி1601-1609) (இக்காலத்தில் ராபர் - டி நொபி- மதுரை வந்து கிறிஸ்த்துவ மதப் பிரசாரம் செய்தார்) முத்துவீரப்ப நாயக்கர் (கிபி1609-1623) திருமலை நாயக்கர் (கிபி1623-1659) இவனுடைய அமைச்சர் மதியூகி இராமப்ப அய்யர் முத்து வீரப்ப



நாயக்கன் II (கிபி1659) சொக்கநாத நாயக்கர் (கிபி1659-1682) முத்து வீரப்ப நாயக்கன்III (கிபி1682-1689) ராணி மங்கம்மாள் (கிபி1689-1706) , விஜயரங்க சொக்க நாதர் (கிபி1706-1732) மீனாக்ஷி (கிபி1732-1736).

## 27. மராட்டிய அரசர்கள்

டில்-யில் ஔரங்கசீப் முகலாய மன்னன் ஆட்சிக் காலத்தில் மராட்டிய தேசத்தில் சிவாஜி பலம்பொருந்தியவனாக இருந்து இஸ்லாமியப் படைகளை வெற்றி கொண்டான். தென்னாட்டிலும் மராட்டிய மன்னர்கள் படையெடுத்து தஞ்சையைக் கைப்பற்றி சோழ நாட்டை ஆண்டனர். தஞ்சையி-ருந்து ஆண்ட மராட்டியர்கள் வருமாறு ராஜா சரபோஜி I (கிபி1712-1728) துக்கோஜி (கிபி1728-1736) ஏக்கோஜி (கிபி 1736-1739) பிரதாப்சிங் (கிபி1739-1763) துல்ஜாஜி (கிபி1763-1787) அமர்சிங் (கிபி1787-1798) சரபோஜி II (கிபி1798-1833) பின்னர் ஆங்கிலேயர் வருகையால் ஹிந்து மன்னர்கள் ஆட்சி முடிவுற்றது.

## 28. ஆந்திர சாதகர்ணி அரசர்கள்

ஸ்ரீமுக சாதகர்ணி முதல்-லம்போதரன் (கிமு100-கிமு82) என்னும் அரசன் முதல் புலுமாயி (கிபி213-220) முடிய 32 சாதகர்ணி அரசர்கள் ஆந்திரம், க-ங்கம், மகதம், வங்காளம், மாளவம், ராஜபுதனம் வரை 456 வருடங்கள் தென்னாட்டில் ஆட்சி செய்தனர். (சாதகர்ணி அரசர்கள் பெயர்கள் முந்தைய அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன) . பிறகு குப்தர்கள், சாளுக்கியர்கள், ராயர்கள், தெலுங்கு நாயக்கர்கள், தென்னாட்டில் ஆட்சி செய்தனர்.)

## 29. கொங்கு வேளிக்கள்

கரூரி-ருந்து சேர நாட்டை சேரமன்னர்கள் வ-குன்றி சாளுக்கியர்களிடம் நாட்டை இருந்தனர். இட்சுவாகு வம்சத்தினர் கோசல நாட்டி-ருந்து ஒடிவந்து சேரநாட்டில் புகுந்து ஆங்காங்கே சிற்றரசர்களாய் ஆட்சி செய்தனர். (கிமு2-ஆம் நூற்றாண்டி-ருந்தே நான்மொழிக் கோசலர்கள் கொங்கு தேசத்திலும், கருநாடகத்திலும் பரவினர்) அரபு முஸ்லீம்கள் மலபார் முத-ய கடற்கரை பிரதேசங்களில் குடியேறினர். தமிழ் கடைச் சங்க காலத்திலேயே கொங்கு வேளிர்கள் (கொங்கு வேளிர் கதை-உதயணன் கதை) பிரசித்தி பெற்று வாழ்ந்தனர். கொங்கு குலத்தின் முதல்வர் வீரராஜ சக்ரவர்த்தி, பின்னர் கோவிந்த அரையர், ஆதித்ய வர்ம அரையர், வீரசோழ அரையர், தேசாதித்ய அரையர், முத-யோர் கரூரி-ருந்து ஆட்சி செய்தனர். வீரராயர், கோவிந்த அரையர் வழியில், கிருஷ்ணராயன், காலவல்லபராயன் கோவிந்தராயன், சதுர்புஜ

1 Proof



காளதேவன், திருவிக்கிரம தேவன் கொங்கணி வர்மன், மாதவராயன், ஹரிவர்மராயன் பரிகுலாதி ராயன், நரசிம்மராயன், விஷ்ணுகோப வர்மன், பரிகுலாதாதித்த வர்மன், மாதவராயன் II , கிருஷ்ணவர்மன், கொங்கணிமதிராயன், ஹரிச்சந்திரராயன், கிருஷ்ணவர்மன்II ,கொங்கணி-மதிராயன் ஹரிச்சந்திரராயன், கிருஷ்ண்வர்மன் II , கொங்கணி-மதிராயன்II துருவிந்தராயன், முஷ்கரராயன், பிரம்மாதிராயன், திருவிக்கிரம ராயன், பூ-விக்ரம ராயன், வல்லபராயன், நவகார ராயன், ராஜகோவிந்தன், நந்திவர்மன், சிவராமன், பிருதிவி கொங்கணி, விஜயாதித்யன் மல்லதேவன், காந்ததேவன், சத்தியவாக்யன், குணன்-உத்தமன், வல்லதேவன், க-ங்க அரையன் முத-யோர் கொங்கு நாட்டை ஆண்ட ஹிந்து அரசர்கள். சேரர்கள் கன்யாகுமரி, திருவனந்தபுரம் முத-ய இடங்களி-ருந்து ஆண்டனர்.

## 30. சேதுபதி அரசர்கள்

ஸ்ரீராமன் சேது என்னுமி ்டத்தில் அணைகட்டி இலங்கை சென்று ராவணனை அழித்தான் என்று புராணம் கூறுகிறது. அதற்குப் பிறகு பாண்டிய இளவரசர்களும், சோழர்களும் சேதுபதி அரசர்களாக இருந்தனர். அவர்களின் பெயர்கள் வரலாறு தெரியவில்லை. இந்த சேதுபதி அரசர்களின் அனுமார் கொடி, கருடக்கொடி ஏந்தியவர்கள் சில சேதுபதி அரசர்களின் பெயர்கள் வருமாறு 1. ஆதிரகுநாத சேதுபதி, 2. ஜயதுங்க ரகுநாம சேதுபதி, 3. அதிவீர ரகுநாத சேதுபதி, 4. வரகுணரகுநாத சேதுபதி, 5. குலோத்துங்க சேதுபதி, 6. சகர கோலாகல சேதுபதி, 7. மார்த்தாண்ட பைரவ சேதுபதி, 8. சுந்தர பாண்டிய சேதுபதி, 9. காங்கேய ரகுநாத சேதுபதி, 10. விஜய முத்துராம-ங்க சேதுபதி. (இந்த அரசர்கள் ஆண்ட காலம் கிடைக்கவில்லை) .

சடைக்கத்தேவராம உடையான் சேதுபதி (கிபி1604-1621) , கூத்தன் சேதுபதி (கிபி1621-1635) , தளவாய் சேதுபதி (கிபி1635-1645) திருமலை சேதுபதி (கிபி1645-1670) ராஜசூரிய சேதுபதி (கிபி1670-73) கிழவன் சேதுபதி (கிபி1673-1708) திரு உடையதேவர் சேதுபதி (கிபி1708-1723) தண்டதேவர் (கிபி1724) . பவானி சங்கர தேவர் (கிபி1724-1728) குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி (கிபி1728-1784) முத்துக்குமார சேதுபதி (1734-1747) இராக்கத் தேவர் (கிபி1747-1748) செல்வத்தேவர் (கிபி1748-60) முத்துராம-ங்க சேதுபதி (கிபி1760-1794) ராணி மங்களேஸ்வரி நாச்சியார் (கிபி1803-1812) அண்ணாசாமி சேதுபதி (கிபி1812-1815) ராணி முத்து வீரராகவ நாச்சியார் (கிபி1815-1829) ராமசாமி சேதுபதி (கிபி1829) ராணி மங்களேஸ்வரி நாச்சியார் (கிபி1829-38) ராணி துரைராஜ நாச்சியார் (கிபி1838-45) ராணி பர்வதவர்த்தினி நாச்சியார் (கிபி1845-68) முத்துராம-ங்க சேதுபதி (கிபி1868-73) பாஸ்கர சேதுபதி (கிபி1873-



1903) முத்துராம-ங்க சேதுபதி (கிபி1903-1931) நாகநாத சேதுபதி (கிபி1931)

இந்த வமிசத்தில் முத்துராம-ங்க சேதுபதி வள்ளி மணமாலை, முருகானுபூதி, மும்மொழிமாலை, பிரம்ம கைவல்யம், பாலபோதம், பிரகாபரமாலை, காயகப்பிரியா, ரஸிகாஞ்சனம் எனப் பல தமிழ் நூல்கள் இயற்றியுள்ளார். இவரது சகோதரர் பொன்னுசாமித் தேவர் பல அரிய தமிழ் நூல்களை வெளிக் கொணர்ந்தார். திருச்சிற்றம்பலக்கோவையாருரை, திருவள்ளுவர் பரிமேலழகர் உரை, நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்தி தமிழ் பிரயோக விவேவ உரை, தர்க்க சங்கிரஹ உரை, தனிப்பாடற் திரட்டு, மருத்துவ நூல்.

மேற்கூறப்பட்ட பொன்னுசாமித் தேவரின் குமாரராகிய பாலவநத்தம் ஜமீன்தார் திரு. பாண்டித்துரைத் தேவர், மதுரையில் ஒரு தமிழ் சங்கம் நிறுவினார். இவர் வ.ஊ.சிதம்பரம் பிள்ளைக்கு பேருதவி செய்து கப்பல் ஓட்டும்படி செய்தார். இவர் பச்சையப்பன் கல்லூரி தமிழாசிரியர் திரு.ஆ. சிங்காரவேலு முத-யார் எழுதிய அபிதான சிந்தாமணி என்னும் நூல் வெளிவர உதவி செய்தார். (இப்புத்தகத்தில் உள்ள வரலாற்றுக் குறிப்புகள் அனைத்தும் அபிதான சிந்தாமணி என்னும் நூ-ல் காணப்படுவனவாகும்.)

# இணைப்பு -7

## சக்தி பீடங்கள்

(பாரதத்தில் சக்தியை வழிபடும் மதம் சாக்தம் எனப்படும். சக்தியின் பெருமையை ஹயக்ரீவர் (விஷ்ணு) அகத்தியருக்கு உபதேசித்தார். பிறகு தத்தாத்ரேயர் (விஷ்ணு) பரசுராமருக்கு உபதேசித்தார். க-யுகத்தில் பாஸ்கர ராயர் என்பவர் “ ஸ்ரீவித்யா” என்னும் நூல் செய்து இதனைப் பரப்பினர். தக்ஷயாகத்தின் போது தாக்ஷாயணியின் (சதி) உடலை சுமந்து சிவபெருமான் வெறி கொண்டு ஆடுகையில் விஷ்ணுவின் சுதர்சன சக்கரத்தில் அவ்வுடல் நூற்றியெட்டு துண்டுகளாக்கப்பட்டு 108 இடங்களில் விழுந்தன. அந்த 108 இடங்களும் 108 சக்தி பீடங்கள் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | விசாலாக்ஷி | - | நைமி சாரண்யம் |
| 2. | -ங்கதாரிணி | - | பிரயாகை |
| 3. | ல-தா | - | கந்தமாதனம் |
| 4. | காமுகி | - | மானதசிரஸ் |
| 5. | குமுதா | - | மானதசிரஸ் |
| 6. | விஸ்வகாமாபகவதி | - | மானதசிரஸ் |
| 7. | விஸ்வகாம பரிபூரணி | - | மானத சிரஸ் |
| 8. | கோமதி | - | கோமந்தக் |

| | | | |
|---|---|---|---|
| 9. | காமாசாரிணி | - | மந்த்ரமலை |
| 10. | மதோத்˚கடை | - | சைத்ரமலை |
| 11. | ஜயந்தி | - | அத்தினாபுரம் |
| 12. | கௌரி | - | கன்யாகுப்ஜம் |
| 13. | ரம்பா | - | மலையாசலம் |
| 14. | கீர்த்திமதி | - | ஏகாம்பரம் |
| 15. | விஸ்வேஸ்வரி | - | விச்வம் |
| 16. | புருஹாதை | - | புஷ்கர் |
| 17. | சன்மார்˚கதாயினி | - | கேதாரம் |
| 18. | மந்தை | - | இமயம் |
| 19. | பத்ரகர்ணிகா | - | கோகர்ணம் |
| 20. | ஸ்தானேஸ்வரி | - | பவானி |
| 21. | பில்வகை | - | பல்வபத்ரிகை |
| 22. | மாதவி | - | ஸ்ரீசைலம் |
| 23. | பத்திமேஸ்வரி | - | பத்திரை |
| 24. | ஜயா | - | வராககிரி |
| 25. | கமலை | - | கமலாலயம் |
| 26. | ருத்˚ராணி | - | ருத்ரகோடி |
| 27. | காளி | - | காலாஞ்சரம் |
| 28. | மஹாதேவி | - | சா-க்கிராமம் |
| 29. | ஜலப்பிரியை | - | சிவ-ங்கம் |
| 30. | கபிலை | - | மஹா-ங்கம் |
| 31. | மகுடேஸ்வரி | - | மாகோட்டை |
| 32. | குமாரி | - | மாயாபுரி |
| 33. | ல-தாம்பிகை | - | சந்தானம் |
| 34. | மங்களாம்பிகை | - | கயா |
| 35. | விமலா | - | புருஷோத்தமம் |
| 36. | உத்பலாஹக்ஷி | - | சஹஸ்ராக்ஷம் |
| 37. | மகோத்பலா | - | இரண்யாக்ஷம் |
| 38. | பாடலீ | - | புண்ட்ரவர்த்தம் |
| 39. | அம்பிகா | - | புண்ட்ரவர்த்தம் |
| 40. | நாராயணி | - | சுபார்ஸ்வம் |
| 41. | ருத்திர சுந்தரி | - | திரிகூடம் |
| 42. | விபுலாதேவி | - | விபுலம் |
| 43. | கல்யாணி | - | மலையாசலம் |
| 44. | ஏகவீரா | - | சஹ்யபர்வதம் |
| 45. | சந்திரிகா | - | அரிச்சந்திரம் |
| 46. | ரமணா | - | ராமதீர்த்தம் |



| | | | |
|---|---|---|---|
| 47. | மிருகாவதி | - | யமுனாதீர்த்தம் |
| 48. | கோடலீ | - | கோடிதீர்த்தம் |
| 49. | சுகந்தரா | - | மாதவ வனம் |
| 50. | திரிசந்தி | - | கோதவரி |
| 51. | ரதிப்ரியா | - | கங்காதுவாரம் |
| 52. | சுபாநந்தை | - | சிவகுண்டம் |
| 53. | நந்தினி | - | தேவிகாதடம் |
| 54. | ருக்மிணி | - | துவாரகை |
| 55. | ராதா | - | பிருந்தாவனம் |
| 56. | தேவகீ | - | வடமதுரை |
| 57. | பரமேஸ்வரி | - | பாதாளம் |
| 58. | சீதா | - | சித்ரகூடம் |
| 59. | விந்தியாவாசினி | - | விந்தியம் |
| 60. | மகாலக்ஷ்மி | - | கரவீரபுரம் |
| 61. | உமா | - | விஜயகக்ஷேத்ரம் |
| 62. | ஆரோக்யா | - | வைத்யநாதம் |
| 63. | மஹேஸ்வரி | - | மஹாகாளம் |
| 64. | அபயாம்பிகை | - | உஷ்ணதீர்த்தம் |
| 65. | நிதம்பை | - | விந்தியாசலம் |
| 66. | மாண்டவி | - | மாண்டவியம் |
| 67. | சுவாஹா | - | மயேஸ்வரம் |
| 68. | பிரசண்டை | - | சகலண்டம் |
| 69. | சண்டிகை | - | அமரகண்டம் |
| 70. | வராரோகை | - | சோமேஸ்வரம் |
| 71. | தேவமாதா | - | ஸரஸ்வதி நதிதீரம் |
| 72. | புஷ்கரா | - | பிரபாஸம் |
| 73. | மகாபாகை | - | மகாலயம் |
| 74. | பிங்களேஸ்வரி | - | பயோஷ்ணியம் |
| 75. | சிம்ஹிகை | - | கிருதசௌக்யம் |
| 76. | அதிசாங்கரி | - | கிருத்திகை |
| 77. | லோலாதேவி | - | உத்பலாவர்த்தம் |
| 78. | சுபத்திரா | - | சோண சங்கமம் |
| 79. | லக்ஷ்மி | - | சித்தபனம் |
| 80. | அனங்கை | - | பரதாஸ்ரமம் |
| 81. | விஸ்வமுகி | - | ஜாலந்தரம் |
| 82. | தாரா | - | கிஷ்கிந்தை |
| 83. | புஷ்டிர்மேதா | - | தேவதாருவனம் |
| 84. | பீமாதேவி | - | காஷ்மீரம் |

| | | | |
|---|---|---|---|
| 85. | துஷ்டி விஸ்வேஸ்வரி | - | ஹிமாசலம் |
| 86. | சுத்தி | - | கபாலமோசனம் |
| 87. | மாதேவி | - | காபாரோகணம் |
| 88. | தரா | - | சங்கோத்திரம் |
| 89. | த்ருதி | - | பிண்டாரகம் |
| 90. | காளிதேவி | - | சந்திரபாகா நதி தீரம் |
| 91. | சிவதாரிணி | - | அச்சோதயம் |
| 92. | அமிர்தை | - | வேணா நதி |
| 93. | உரசீ | - | பத்ரி |
| 94. | ஔஷதை | - | உத்தரகிரி |
| 95. | குசோதை | - | குசத்வீபம் |
| 96. | மன்மதை | - | ஏமகூடம் |
| 97. | சந்தியாவாதினி | - | குமுத மலை |
| 98. | வந்தினி | - | அஸ்வம் |
| 99. | நிதி | - | குபேராலயம் |
| 100. | காயத்திரி | - | வேதமுனி |
| 101. | பார்வதி | - | சிவசந்ˆநிதி |
| 102. | இந்திராணி | - | தேவலோகம் |
| 103. | சரஸ்வதி | - | பிரமன் முகம் |
| 104. | பிரபை | - | சூர்யமண்டலம் |
| 105. | வைஷ்ணவி | - | சப்தமாதர் (ஸ்ரீநகர்) |
| 106. | அருந்ததி | - | பதிவிரதைகள் |
| 107. | திலோத்தமை | - | அழகிகள் |
| 108. | சக்தி | - | சர்வ சரீரங்கள் |

## மணித்வீபம்

### அண்நாயகிகள்

பிங்களாக்ஷி, விசாலாக்ஷி, சமர்த்தி, சிரந்தா, சுவாஹா, சுவஹா, அபிக்யா, மாயா, சம்ஞா, வசுந்தரா, திரிலோக சுந்தரி, சுவித்திரி, காயத்திரி, திரிதசேச்வரி, அருவா, பகுரூபா, ஸ்கந்தமாதா, அச்சுதப்பிரியா, விமலா, அருணி, ஆருணி, ப்ரகிருதி, விக்ருதியருஷ்டி, ஸ்திதி, சம்ஹ்ருதி, சந்தியா, மாதா, சதி, ஹக்தி, மர்த்திதா, வச்ரிகா, வரா, தேவமாதா, பகவதி, தேவதீ, கமலாசனா, ˆதிரிமுகி சப்தமுகி, சுராசுர விமர்த்தினி, லம்போஷ்ட்டி, ஊர்த்துவகேசி, பகுசீ குஷா விருகோதரி, ரதாரேகா, சசிரேகா, ககனவேகா, பவனவேகா, மதனுதுரா, அனங்க மதனு, அனங்க மேகலா, அனங்க குசுமா, விச்வகுபா, சுராதிகா. க்ஷயங்கரி, அக்ஷோப்யா, சத்யவாதினி, பகுருபா, சுசிவ்ருதா, உதரவாசி, வித்யாரி, புஷ்டி, பிரஞ்ஞா, சிநிவா-, குரு, ரத்ரா, வீர்யா, பிரபா, ஆனந்தா, போஷனி, புத்திதா, சுபா, காளராத்திரி, மஹாராத்தரி,



பத்திரகாளி, கபர்த்தினி, விகீர்த்தி, தண்டி, முண்டினீ, இந்துகண்டா சிகண்டினீ, நிசும்பசூதனி, மஹிஷாசுரமர்த்ˆதினி, ருத்ராணி, சங்கரார்த்த சரீரிணி, நாரி, நாராயணி, த்ரிசூ-ணி, பா-னி, அம்பிகா, ஹ்லாதினி, பிராம்ஹி, மஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி, (சப்தமாதர்கள்) , கரானீ, விகராணீ, உமா, துர்கா, உஷா, லக்ஷ்மி, சுருதி, ஸ்மிருதி, த்ருதி, சிரத்தா, மேதா, மதி, காந்தி, ஆர்பா, என்னும் சக்திகளும் அனங்க குசுமாதுரா, புவனபாலா, ககனவேகா, பாசாங்குச வரா, பீதிதாரா அருண விக்கிரஹா என்னும் மந்திரிகளும் புடைசூழ, நம்மை யொத்த ஹ்ருல்லேகா, ககனா, ரக்தா, கராளிகா, மஹோச்சூஷ்மா, முத-ய பஞ்ச சக்திகளும் சேவிக்க புவனேஸ்வரி சிங்காதனத்தில் சிந்தாமணி இருஹத்தில் இருக்கிறாள் என்று கூறப்படுகிறது.

இவர்களைத் தவிர காளியின் ஏவலாட்கள் 64 லக்ஷம் கோடி யோகினிகள் (மயக்கும் சக்திகள்) உள்ளனர். இவர்களில் சில பெயர்கள் மட்டுமே சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன திவ்யயோகி, மகாயோகி, சித்தயோகி, கணேஸ்வரி, பிரேதா, சிபிகிணி, காளராத்திரி, நிசாசரி, ஜங்காரி, ஊர்த்துவ வேதாளி, பிசாசி, பூத டாமரி, ஊர்த்துவகேசி, விருபாக்ஷி, சுஷ்காஞ்சி, நரபோஜனி, ராக்ஷசி, கோர ராக்தாக்ஷி, விஸ்வரூபி, பயங்கரி, வீரகௌமாரி, கீசண்டி, வராகி, முண்டதாரிணி, பிராமரி, ருத்ரவேதாளி, பீஷ்கரி திரிபுராந்தகி, பைரவி, த்வம்சனி, குரோதி, தூர்முகி, பிரேதவாகினி, கட்வாங்கி, தீர்க்க லம்போஷ்ட்டி, மா-னி, மந்திரயோகினி, காலாக்னி, கிராமணி, சக்ரி, கங்காளி, புவனேஸ்வரி, கட்காரி, வீரபத்ரேசி, தூம்ராக்ஷி, கலகப்பிரியை, கண்டகி, நாடகி, மாரி, யமதூதி, கராளினி, கௌசிகி, மர்த்தனி, யக்ஷி, ரோமாஜங்கி, பிரஹரிணி, சகஸ்ராக்ஷி, காமலோலா, காகதம்ஷ்ட்ரி, அதோமுகி, தூர்சடி, விகடி, கோரி, கபா-னி, விஷலங்கிகிணி, முத-யோர் இப்படிப்பட்ட யோகினிகளை வசப்படுத்த தனியான மந்திரங்கள் பூஜைகள் உள்ளன. மனிதர்கள் இந்த யோகினிகளை வசப்படுத்தி அநேக மாயாஜாலங்கள் செய்கிறார்கள்.

## சக்தி பீடங்கள் உள்ள இடங்கள்

1. அஸ்ஸாம் - கௌஹாட்டி - காமம்யா - காமகிரி
2. ஆந்திரா-கோமதீர்ˆத்தம்-விஸ்வேஸி-கோதாவரி ரயில் நிலையம்
3. ஆந்திரா-கோமதீர்த்தம்-விஸ்வேஸி-கோதாவரி ரயில் நிலையம்
4. ஆந்திரா-திருச்சானூர்-பத்மாவதி-திருப்பதி அலுமேலு மங்காபுரம்
5. ஆந்திரா-வாரங்கல்-பத்ரகாளி-காச்பேட் அருகில்

6. உத்திரபிரதேசம்-காசி-விசாலாக்ஷி-காசி
7. உத்திரபிரதேசம்-சித்ரகூடம்-ஸிவானி-சாரகாமந்திர்-சித்ரகூட் ரயில் நிலையம்
8. உத்திரபிரதேசம்-நைமிசாரண்யம்--ங்கதாரிணி-சீதாபூர் ரயில் நிலையம்
9. உத்திரபிரதேசம்-பிரயாகை-ல-தாதேவி-அக்ஷயவடம் அருகில்
10. உத்திரபிரதேசம்-பிருந்தாவனம்-காத்யாயனி-பிருந்தாவன் ரயில் நிலையம்
11. உத்திரபிரதேசம்-மத்ரா-சாமுண்டா-ம்தரா ரயில் நிலையம்
12. ஒரிஸ்ஸா-ஜகந்நாதபுரி-விமலாதேவி-ஜகந்நாதர் ஆலயம் அருகில்
13. கர்நாடகம்-மைசூர்-சாமுண்டா-சாமுண்டிமலை
14. கர்நாடகம்-வனகுண்டி-சந்திரமாம்பாகிருபாவதி-வாட் ரயில் நிலையம்
15. தமிழ்நாடு-காஞ்சி-காமாக்ஷி-காஞ்சி
16. தமிழ்நாடு-கன்யாகுமரி-சர்வாணி-கன்யாகுமரி கோயில் உள்ளே (தனியாக)
17. தமிழ்நாடு -மதுரை-மீனாக்ஷி-மதுரை
18. மஹாராஷ்ட்ரம்-கோலாப்பூர்-கரவீரபீடம்-கோலாப்பூர்
19. மஹாராஷ்ட்ரம்-நாஸிக்-பிராமரி-பஞ்சவடியி-ருந்து 1 மைல் -மஹுர் கிராமம்
20. மஹாராஷ்ட்ரம்-துளஜாப்பூர்-துளஜாபவானி-துளுஜாப்பூர்
21. மஹாராஷ்ட்ரம்-மாஹுர்தட்-ரேணுகா-நாந்தேட்
22. குஜராத்-அம்பானி-அம்பானி-மவுண்ட் அபு
23. குஜராத்-பாவாகட்-மஹாகாளி-பரோடாவி-ருந்து 30 மைல்
24. குஜராத்-பரோடா-ஹர்சித்தி-அம்பா மாதா கோயில்
25. ஹரியானா-குருக்ஷேத்திரம்-ஸாவித்ரி-த்வைபாயன குளம்
26. ஜம்மு-காஷ்மீர்-கந்தர்வ ஸ்தானம்-க்ஷீரபவானி-ஸ்ரீநகருக்கு வடக்கு 11/2 மைல்
27. ஜம்மு-காஷ்மீர்-குல்காம்வ்-குல வாகீஸ்வரி-ஸ்ரீநகரி-ருந்து 60 கிலோமீட்டர்
28. ஜம்மு-காஷ்மீர்-வைஷ்ணவிதேவி-வைஷ்ணவிதேவி-ஜம்முவி-ருந்து 46 மைல்
29. பீஹார்-ஜனக்பூர்-ஸீதா-தர்பங்காவி-ருந்து 24 மைல்
30. பீஹார்-பரவி-ஜயதுர்கா-வைத்யநாத் கோவில்
31. பீஹார்-சசாரம்-ஸேனாக்ஷி-சசாரம் ரயில் நிலையம்-தாராசுண அடி கோயில்



32. பீஹார்-பாட்னா-சர்வானந்தகரி-பட்னேஸ்வரி கோயில் உள்ளே
33. மேற்கு வங்காளம்-காளிகாட்-காளி-கோல்கத்தா-தக்ஷினேஸ்வர்
34. மேற்கு வங்காளம்-நவஹத்தி-காளிகா-நவஹத்தி ரயில் சந்திப்பு 3 கி.மீ
35. மேற்கு வங்காளம்-பிரம்மகாவ்-பஹுணா-கத்வா ரயில் சந்திப்பு
36. மேகாலயா-ஷில்லாங்-ஜயந்தி-வாஹூர் பாக்மலை-ஷில்லாங்கி-ருந்து 54 கி.மீ
37. ராஜஸ்தான்-புஷ்கர்-காயத்ரி-அஜ்மீர் அருகில்
38. ராஜஸ்தான்-பைராட்-அம்பிகா-ஜெய்ப்பூர் வடக்கு 64 கி.மீ
39. ஹிமாசல் பிரதேஷ்-ஜ்வாலமுகி-ஸித்திதா-ஜ்வாலமுகி கோயில் உள்ளே
40. ஹிமாசல் பிரதேஷ்-ஹிமாசலமத்-நைனாதேவி-பக்ராநங்கல் அணையி-ருந்து 20 மைல்
41. திரிபுரா-ராதாகிருஷ்ணாபூர்-திரிபுரசுந்தரி-ராதாகிருஷ்ணபூர் தென்கிழக்கு 21/2 கி.மீ.
42. மத்யபிரதேசம்-உஜ்ஜயினி-ஹரசித்திதேவி-உஜ்ஜயினி
43. மத்தியபிரதேசம்-விந்தியமலை-விந்தியாவாஸினி-விந்திய மலை சிகரம்
44. பாகிஸ்தான்-ஹிங்லாஜ்-பைரவ்-கராச்சிக்கு வடமேற்கு 144 கி.மீ
45. பங்களாதேஷ்-ஷிகார்பூர்காவ்-ஸுநந்தா(அ) உக்ரதாரா-பாரிசால் ர.நி. 21 கி.மீ
46. பங்களாதேஷ்-பவானிபூர்-அபர்ணா-டோக்டா ர.நி. தென்மேற்கு 32 கி.மீ
47. பங்களாதேஷ்-சீதாகுண்ட்-பவானி-சந்திரசேகர் கிரி-சட்காவ் 36 கி.மீ
48. பங்களாதேஷ்-ஜெஸோர்டவுன்-யசோரேஸ்வரி-குல்னா மாவட்டம்
49. நேபாளம்-காட்மண்டு-குஹ்யேஸ்வரி-பசுபதிநாதர் கோயில் அருகில்
50. திபெத்-கைலாஸ்-தாக்ஷாயணி-மானஸலோவர் ஏரி அருகில்
51. இலங்கை- கொழும்பு- இந்திராக்ஷி-ரக்ஷஸேஸ்வரர் கோயில் உள்ளே.

# இணைப்பு -8

## சிவ விஷ்ணு சேக்ஷத்திரங்கள்

தமிழர்கள் தலைச்சங்க காலந்தொட்டே திருமால், இந்திரன் வருணன், கொற்றவை (கள்ளி) , குமரக்கடவுள் முத-ய தெய்வங்களை வணங்கி வந்தனர். ஐந்து வகை நிலங்களில் முல்லை (காடு சார்ந்த இடம்) நிலத்தில் திருமாலையும், மருதம் (ஊர் சார்ந்த இடம்) நிலத்தில் இந்திரனையும், நெய்தல் (கடல் சார்ந்த இடம்) நிலத்தில் வருணனையும் பாலை (வெப்பம் உள்ள இடம்) நிலத்தில் கள்ளி அல்லது கொற்றவையையும், குறிஞ்சி (மலை சார்ந்த இடம்) நிலத்தில் முருகக் கடவுளையும், பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் முன்பிருந்தே வணங்கி வந்தனர். பாரததேசத்தில் ஆரியர்கள் புகுந்து இந்த தெய்வ வழிபாட்டை தமிழ் நிலத்தில் பரப்பினர் என்பது குறைமதி உடையவர்கள் கூற்றாகும். கருப்பு நிறமுடைய ராமன், கிருஷ்ணன், முத-ய அவதாரங்களையும் பின்னர் தமிழ் மக்கள் வணங்க ஆரம்பித்தனர். சிவ-ங்க வழிபாடு, சாஸ்தா வழிபாடு ஐவகை நிலங்களிலும் உள்ள பொது தெய்வங்களாக இருந்தன. தமிழர்கள் பாரத தேசம் முழுதும் பரவியிருந்ததால் இந்த தெய்வங்களின் வழிபாடு பாரதமெங்கும் பரவியிருந்தது. இது ஹிந்து சமயமாக வளர்ந்தது. பின்னர் கருங்கல்லால் ஆலயம் அமைத்து தெய்வ வழிபாடு தொடர்ந்தது. அப்படிப்பட்ட தெய்வங்கள் சிவாலயங்கள் (கணபதி, முருகன், சிவன், சக்தி) , விஷ்ணு ஆலயங்கள் (விஷ்ணு, சூரியன்) என இரு பிரிவாக அமைந்தன. தேவாரம் பாடபட்ட (சம்மந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்) ஸ்தலங்கள், தேவார வைப்புத்தலங்கள் என்றும், வைணவ ஆழ்வார்களால் மங்களாஸாஸனம் செய்யப்பட்டவை என்றும் போற்றப்படுகின்றன. இப்படிப்பட்ட சிவ-விஷ்ணு ஸ்தலங்கள் தமிழ்நாட்டில் எங்குள்ளன என்பதை கீழே பட்டிய-ட்டு தரப்படுகிறது.

(ஆதாரம் : சிவ-விஷ்ணு க்ஷேத்திர விளக்கம் ஆசிரியர் : விஷ்ணம்பேட்டை ரா. ஸ்ரீநிவாஸய்யர்-1927)

பின் குறிப்பு : தமிழ்நாட்டிலும், பாரத தேசத்திலும் உள்ள ஆலயங்கள் வரலாற்றுப் கொக்கிஷங்கள். பல மன்னர்களின் கல்வெட்டுகள் புராண நிகழ்சிகளை ஆலயங்களி-ருந்து அறிந்து கொள்ளலாகும். எனவே இந்த இணைப்பு -8 மிக அவசியமாகிறது.



# இணைப்பு -10

## மகாபுருஷர்களின் பிறந்த தேதி

முன்பக்கமுள்ள காலவரையற்ற கிழமை காட்டியின்படி பிறந்த மகாபுருஷர்களின் ''கிழமை'' கூறப்பட்டதால் பிறந்தநாள் கீழ் கண்டவாறு கணித்துள்ளனர்.

| வ.எண் | பெயர் | பிறந்த தேதி | கிழமை |
|---|---|---|---|
| 1 | சப்தரிஷி சகாப்தம் | 25-11-8579 B.C. | வெள்ளி |
| 2 | ஸ்ரீராமன் | 2-4-7013 B.C. | புதன் |
| 3 | ஸ்ரீகிருஷ்ணன் | 27-7-3112 B.C. | புதன் |
| 4 | க-யுகம் | 18-2-3102 B.C. | செவ்வாய் |
| 5 | நம்மாழ்வார் | 30-2-3202 B.C. | வியாழன் |
| 6 | பெரியாழ்வார் | 12-4-3056 B.C. | வியாழன் |
| 7 | ஆண்டாள் | 14-1-3003 B.C. | புதன் |
| 8 | ஆதிசங்கரபகவத்பாதர் | 8-4-509 B.C. | வியாழன் |
| 9 | மணிகண்டன் | 14-1-1095 B.C. | புதன் |
| 10 | இராமானுஜர் | 4-4-1107 A.D. | வியாழன் |
| 11 | வித்யாரண்யர் | 11-4-1296 A.D. | வியாழன் |

(பி.கு. மேற்குறிப்பிட்ட தேதிகள் பற்றி, ஜோதிட ஆராய்ச்சியாளர்கள்தான் மேலும் ஆராய்ந்து சரியான முடிவுகளை கூறவேண்டும்.)

## சோழ மண்டலம்-தென்பாகம்-காவேரியின் தென்கரை

1. (அ) ஸ்தலத்தின் பெயர் : மலைக்கோட்டை உச்சி பிள்ளையார் (திருச்சி) (ஆ) சிவ/விஷ்ணு : சிவன் (இ) ஸ்வாமியின் பெயர் : மாத்ரு-பூதேஸ்வரர் (தாயுமானவர்) சுகந்தி குந்தளாம்பிகை (ஈ) ஸ்தல விசேஷம் : அகஸ்த்தியர், வசிஷ்டர், ராமன், அனுமார், விபீஷணன், திரசரஸ், சாரமா முநிவர் பூசித்தது.
2. (அ) ஸ்தலத்தின் பெயர் : திரிசிரபுரம் (திருச்சி) (ஆ) சிவ/ விஷ்ணு : சிவன் (இ) ஸ்வாமியின் பெயர் : நாகநாதர் ஆனந்தவள்ளி (ஈ) ஸ்தல விசேஷம் : நாகர்கள் பூசித்தது.
3. (அ) ஸ்தலத்தின் பெயர் : திரிசிரபுரம் (திருச்சி) (ஆ) சிவ/ விஷ்ணு : சிவன் (இ) ஸ்வாமியின் பெயர் : பூலோகநாதர், உமை (ஈ) ஸ்தல விசேஷம் : புராண ஸ்தலம்

(குறிப்பு : பின்வரும் வரிசை எண்களுக்கு எல்லாம் ஸ்தலத்தின் பெயர், சிவ/விஷ்ணு, ஸ்வாமியின் பெயர், ஸ்தல விசேஷம் அதாவது (அ) (ஆ) (இ) (ஈ) ஆகியவை தராமல் தொடர்ந்து அச்சடிக்கப் பட்டுள்ளது.)

4. திரிசிரபுரம் (திருச்சி) , சிவன், கைலாசநாதர், கமலாம்பாள்- புராண ஸ்தலம்.
5. திரிசிரபுரம் (திருச்சி) , விஷ்ணு, ஸ்ரீநிவாசநாதர், அலமேலு மங்கை, பூதேவி - புராண ஸ்தலம்.
6. முக்தீஸ்வரம் (உறையூர்) , சிவன், பஞ்சவர்ணேஸ்வரர், காந்திமதி - புகழ்சோழன், கோச்செங்கணான் பூசித்தது தேவார வைப்புத் தலம்-1
7. நிசுளாபுரம், விஷ்ணு, அழகிய மணவாளப் பெருமாள், உறையூர் வல்-, (கல்யாண தீர்த்தம்) , தருமவர்ம சோழன் பூசித்தது. திருப்பாணாழ்வார் அவதார ஸ்தலம்.
8. திருக்கற்குடி (உய்யக்கொண்டான்மலை) , சிவன், உச்சிநாதர், அஞ்சனாக்ஷி, கரன் பூஜித்தது, திருஞானசம்பந்தர்-2, அப்பர்-3, சுந்தரர்-4, பாடிய ஸ்தலம்.
9. குமாரவயலூர், சிவன், அக்நீசர், பூர்வஸித்தி நாயகி, (முருகன் பிரசித்தம்) அருணகிரிநாதர், உபதேசம் பெற்ற ஸ்தலம்.



10. அல்லூர், சிவன், பஞ்சநதேஸ்வரர், தர்மாம்பாள் - புராண ஸ்தலம்.
11. திருச்செந்துறை (ஜீயபுரம்) , சிவன், சந்திரசேகரர், பிருகதராம்பாள்.
12. அந்தநல்லூர், சிவன், வடதீர்த்தர், பாலாம்பாள் - புராண ஸ்தலம், தேவார வைப்புத் தலம்-5
13. சின்னக்கருப்பூர் (குழுமணி) , சிவன், நாகநாதர், லோகநாயகி புராண ஸ்தலம்.
14. கொடியாலம், விஷ்ணு , அரங்கநாதர், அரங்கநாயகி
15. திருப்பராய்த்துறை , சிவன், தாருகவனேஸ்வரர், ஹேமவர்ணாம்பாள், ஸப்தரிஷிகள் பூசித்தது, ஞானசம்பந்தர், அப்பர் பாடிய தேவார வைப்புத்தலம்.
16. நங்கபுரம், சிவன், சுந்தரேஸ்வரர், கோமளவல்-, புராண ஸ்தலம்.
17. குழித்தலை, சிவன், உமை
18. திருக்கடம்பந்துறை, சிவன், கடம்பவனேஸ்வரர், முற்றில்லா முலைநாயகி, கண்ணுவரிஷி பூசித்தது, அப்பர் பாடிய தேவார ஸ்தலம்.
19. திருவாட்போக்கி (ரத்னகிரி) , ரத்தினகிரீசர், சுரும்பார்குழ-, ஜயந்தன் பூசித்தது, அப்பர் பாடிய தேவார ஸ்தலம்.
20. கருப்பத்தூர், சிவன், உமை - புராண ஸ்தலம்.
21. மகாதானபுரம், சிவன், விஸ்வநாதர், விசாலாக்ஷி,
22. திருவெறும்பியூர் (திருச்சி-கிழக்கு-5 மைல்) , சிவன், எறும்பீசர், நறுங்குழல் நாயகி, தூஷணன் பூஜித்தது, அப்பர் பாடிய தேவாரத்தலம்.
23. திருநெடுங்களம், சிவன், நித்திய சுந்தரர், மங்களாம்பாள், வங்கிய சோழன் பூசித்தது, ஞானசம்பந்தர் தேவார வைப்புத்தலம்.
24. தோகூர், சிவன், சிவன், உமை (அனுமார் கோயில் பிரசித்தம்)
25. வெண்டயம்பட்டி (கடயக்குடி) , சிவன், சிவன், உமை - புராண ஸ்தலம்.
26. பூதலூர், சிவன், ஆபத்சகாயர், ஆனந்தவல்-,-புராண ஸ்தலம்.
27. கள்ளப்பெரம்பூர், சிவன், கைலாசநாதர், பெரும்திரு - புராண ஸ்தலம்.
28. ஞானசம்பந்தர், அப்பர் பாடிய தேவாரத்தலம். மேல்திருக்காட்டுப்பள்ளி, சிவன், அக்நீசர், சௌந்திராம்பாள், கூத்தூர் சாஸ்தா கோயில்உறையூர் மண்மாரி பொழிந்து தப்பி கரிகாலன் பிறந்த ஊர்.

29. நேமம், சிவன், ஐராவதேஸ்வரர், அலங்காரி, இந்திரன், ஊர்வசி, பூசித்த தலம் - புராண ஸ்தலம்-அப்பர் பாடிய தேவாரத்தலம்.
30. இளங்காடு, சிவன், விஜயேசர், பாலசுந்தரி
31. அகரப்பேட்டை, விஷ்ணு, கோபாலன், ருக்மிணி, சத்யபாமை
32. சந்தனை, சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி - புராண ஸ்தலம்.
33. சந்தனை, விஷ்ணு, மன்னர்மூர்த்தி, பூதேவி, ஸ்ரீதேவி - புராண ஸ்தலம்.
34. வரகூர், விஷ்ணு, வெங்கடேசர், அலமேலுமங்கை, பூதேவி, நாராயணதீர்த்தர் பூஜித்த ஸ்தலம்.
35. வெள்ளப்பெரம்பூர், சிவன், ஏகாம்பரேஸ்வரர், காமாக்ஷி
36. நடுக்காவேரி, சிவன், உமை, சந்தியாஷாடரிஷி பூஜித்தது (புராணம்) .
37. திருவாலம்பொழில், சிவன், ஆத்மநாதர், ஞானாம்பாள், அனந்தன், வாசுகி, அஷ்டவசுக்கள் பூசித்தது. அப்பர் பாடிய தேவாரத்தலம்.

38,39,40,41 (திருவையாறு சப்த ஸ்நான ஸ்தலம்)

38. திருப்பூந்துருத்தி, சிவன், புஷ்பவனேஸ்வரர், சௌந்திராம்பாள், ஆங்கிரஸ ரிஷி பூசித்தது. அப்பர் பாடிய தேவாரத்தலம்.
39. திருக்கண்டியூர், சிவன், பிரம்மசிரக் கண்டேசர், மங்களாம்பாள், விஷ்ணு, பிரம்மா, கௌதமர், அகஸ்தியர் பூசித்தது. அஷ்ட்ட வீரட்ட ஸ்தலம்.
40. திருக்கண்டியூர், லோகநாதர், லோகநாயகி, ஞானசம்பந்தர், அப்பர் பாடிய தேவாரத்தலம்.
41. விஷ்ணு திருக்கண்டியூர், விஷ்ணு, அரன்பாபந்தீர்த்த மூர்த்தி, கமலவல்-, திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்
42. திருச்சோற்றுத்துறை, சிவன், ஓதவனேஸ்வரர், அன்னபூரணி, கௌதமர், புலஸ்தியர் பூஜித்தது. திருஞானசம்பந்தர், சுந்தரர் பாடிய தேவாரஸ்தலம்.
43. திருவேதிகுடி, சிவன், வேதபுரீஸ்வரர், மகராக்ஞீ, வியாசர், வசிஷ்டர், அருந்ததி, சைதன்ய ரிஷி, வேதங்கள் பூஜித்தது, திருஞானசம்பந்தர், அப்பர் பாடிய தேவாரஸ்தலம்.
44. தஞ்சாவூர், விஷ்ணு, நீலமேகர், செங்கமலவல்-, பராசரர் பூஜித்தது, பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்



45. தஞ்சாவூர், விஷ்ணு, மணிக்குன்னமூர்த்தி, தஞ்சைபுரவள்ளி
46. தஞ்சையாளி நகர், விஷ்ணு, நரசிம்மமூர்த்தி, தஞ்சைநாயகி, மார்க்கண்டேயர் பூஜித்தது.
47. வெண்ணாற்றங்கரையாளி நகர், சிவன், தஞ்சைபுரேஸ்வரர், ஆனந்தவல்-.
48. கருதட்டான்குடி (கருதிட்டை குடி) , சிவன், கருணாநந்தேசர், பிருகதாம்பாள், வசிஷ்டர் பூஜித்தது, அப்பர் பாடிய தேவாரத்தலம்.
49. வடவாற்றங்கரை, சிவன், சதானந்தேசர், ஜகதாம்பாள்,
50. பூமாலைராவ் தெரு, சிவன், புஷ்பமா-சேகர், உமை
51. தஞ்சை பெரிய கோயில், சிவன், பிரகதீஸ்வரர், பிரகதாம்பாள், (ராஜராஜசோழன் கட்டியது) கருர்தேவர் பூஜித்தது, செருத்துணை நாயனார் உதித்தது.
52. தஞ்சாவூர் மேலவீதி, சிவன், சங்கரநாராயணர், பாலாம்பிகை
53. தஞ்சாவூர் மேலவீதி, சிவன், கொங்கணேசர், ஞானாம்பிகை, அப்பர் பாடிய தேவார ஸ்தலம்.
54. தஞ்சாவூர் மேலவீதி, சிவன், கொங்கணேசர், ஞானாம்பிகை, அப்பர் பாடிய தேவாரஸ்தலம்
55. தஞ்சாவூர் மேலவீதி, சிவன், விஸ்வநாதர், விசாலாக்ஷி
56. தஞ்சாவூர் மேலவீதி, சிவன், கச்சபேஸ்வரர், காமாக்ஷி
57. தஞ்சாவூர் மேலவீதி, சிவன், சிவன், உமை
58. தஞ்சாவூர் மேலவீதி, விஷ்ணு, கிருஷ்ணன், ருக்மிணி, சத்யபாமை
59. தஞ்சாவூர் மேலவீதி, விஷ்ணு, ராமர், சீதை
60. தஞ்சாவூர் மேலவீதி, விஷ்ணு, வெங்கடேசர், அலமேலுமங்கை
61. தஞ்சாவூர் ராஜவீதி, விஷ்ணு, ராஜகோபாலன், ருக்மிணி, சத்யபாமை
62. மாரியம்மன் கோயில், சிவன், சிவன், உமை மாரியம்மன்
63. திருபருத்தி-நியமம், சிவன், பருத்தியப்பீசர், மங்களநாயகி, திருஞானசம்பந்தர் பாடிய தேவார ஸ்தலம்.
64. திருத்தென்குடி (திட்டை) , சிவன், பசுபதிநாதர், லோகாம்பாள், கௌதமர், ஆதிசேஷன், காமதேனு பூசித்தது.
65. திருப்புள்ளமங்கை, சிவன், பசுபதிநாதர், பால்வளைநாயகி சப்த ஸ்தானம்.
66. சூலமங்கலம், சிவன், கிருத்திவாசேஸ்வரர், அலங்காரி, அப்பர் பாடிய தேவார ஸ்தலம்.
67. நந்திமங்கை, சிவன், ஜம்புநாதர், அகிலாண்டேஸ்வரி, அப்பர் பாடிய தேவார ஸ்தலம்.

68. பசுமங்கை (தண்டங்குறை) , சிவன், கைலாஸபதீசர், லோகநாயகி, சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரஸ்தலம்.
69. அரையமங்கை, சிவன், சிவன், உமை, தேவார ஸ்தலம்
70. தாழமங்கை (ஐயம்பேட்டை) , சிவன், உமை, புராண ஸ்தலம்.
71. திருச்சக்கரபள்ளி, சிவன், சக்கரவாகேசர், அல்-யங்கோதை மகாவிஷ்ணு சக்கரம், பெற்ற தலம், தேவாரத்தலம்.
72. பண்டாரவாடை, சிவன், மத்ஸயபுரீசர், ஜகதாம்பாள்
73. வீரமாங்குடி, சிவன், கைலாசநாதர், ஆனந்தவல்-
74. மெரட்டூர், சிவன், உன்னதபுரீசர், சிவப்பிரியா
75. பாபநாசம், சிவன், ராம-ங்கேசர், பர்வதராஜபுத்ரி, ராமர் பூஜித்தது, தேவார ஸ்தலம்.
76. பாபநாசம், விஷ்ணு, பாபநாசமூர்த்தி, பங்கஜவல்-
77. திருப்பாலைத்துறை, சிவன், பாலைவனநாதர், தவளாம்பாள், தேவாரத்தலம் (புராண ஸ்தலம்)
78. திருக்களாவூர், சிவன், முல்லைவனேசர், சுகம்பரவல்-, சந்திரன் பூசித்தது, தேவார ஸ்தலம்.
79. திருநல்லூர், சிவன், கல்யாணசுந்தரேசர், கிரிசுந்தரி, பிருங்கி ரிஷி பூஜித்தது, அமர்நீதி நாயனார் முக்தி ஸ்தலம், தேவார ஸ்தலம்.
80. திருவெண்ணி, சிவன், வெண்ணிநாயகேசர், சுந்தராம்பாள், தத்ராத்ரேயர் பூசித்தது, தேவார ஸ்தலம்
81. விஷ்ணு-திருவெண்ணி, விஷ்ணு, ஜகந்நாதர், லக்ஷமி, புராண ஸ்தலம்.
82. வடுகூர், விஷ்ணு, ராமர், சீதை, லக்ஷமணன்
83. கந்தர்வகோட்டை, சிவன், ஆபத்சகாயர், அமராவதி, கந்தர்வன் பூசித்தது.
84. வைத்திகோயில் (ஆரணிப்பட்டி) , சிவன், வயத்தீசர், பிரகதாம்பாள், பிரும்மா பூசித்தது.
85. பெருங்களூர், சிவன், வம்சோத்தாரகர், மங்களாம்பாள்
86. கொளவாய்ப்பட்டி, சிவன், அகஸ்த்யேசர், பிருகதாம்பாள், அகஸ்தியர் பூசித்தது.
87. திருவாங்குளம், சிவன், ஹரதீர்த்தேசர், பிருகந்நாயகி புராண ஸ்தலம்.
88. புதுக்கோட்டை, சிவன், சாந்தநாதர், பிருகதாம்பாள்,
89. திருக்கோகர்ணம், சிவன், கோகர்ணேசர், மங்களாம்பாள்
90. பேறையூர், சிவன், தாளவனேசர், பிருகதாம்பாள், இந்திரன் பூசித்தது.
91. விராச்சிலை, சிவன், விஸ்வநாதர், விசாலாக்ஷி



92. திருமெய்யம், சிவன், சத்யகிரீசர், ராஜராஜேஸ்வரி,
93. திருமெய்யம், விஷ்ணு, சத்யமூர்த்தி, உய்யவந்தாள், அர்ஜுனனுக்கு பிரத்யக்ஷம், ஆழ்வார் மங்களாசாஸனம்.
94. கடியாப்பட்டி, சிவன், சிவன், உமை
95. அரிமளம், சிவன், சிவன், உமை
96. குடுமியான் மலை, சிவன், சிகா கிரீசர், அகிலாண்டவல்-, சோழராஜன் பூசித்தது , புராண ஸ்தலம்.
97. தேனீமலை, சிவன், சிவன், உமை , முருகனுக்கு தினம் தேன் அபிஷேகம்.
98. விரா-மலை, சிவன், சிவன், உமை, அருணகிரிநாதருக்கு முருகன் தரிசனம்.
99. கோவில்பட்டி, சிவன், சோழேஸ்வரர், குந்தளாம்பாள், சோழராஜன் பூசித்தது.
100. மழநாடு, சிவன், சிவன், உமை,
101. மருங்காபுரம், சிவன், சிவன், உமை
102. மாத்தூர், சிவன், சிவன், உமை

## பாண்டி நாடு

1. தென் மதுரை, சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி , (தமிழ்சங்கம் நடந்த இடம்) சிவபெருமான்64 திருவிளையாடல் புரிந்த ஸ்தலம், புராண தேவார ஸ்தலம்.
2. தென் மதுரை, சிவன், சுந்தரேசர், சிவகாமி, நடராஜர் கால்மாறி ஆடியது (24வது லீலை)
3. வடவாலவாய், சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி, குபேரன் பூசித்தது 56வது லீலை.
4. இம்மையில் நன்மை தருவார் கோயில் (மதுரை) , சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி
5. இம்மையில் நன்மை தருவார் கோயில் (மதுரை) (மாசி வீதி), சிவன், ஏகாம்பரரேஸ்வரர், காமாக்ஷி
6. மதுரை (மாசி வீதி) , விஷ்ணு, கூடலழகர், மதுரவல்- தாயார், புராணஸ்தலம் ஆழ்வார் மங்களாசாஸனம்
7. மதுரை (மேலமாசி) , விஷ்ணு, மதனகோபாலன், ருக்மிணி, பாமை,
8. மதுரை (தெற்கு மாசி) , விஷ்ணு, ஸ்ரீகிருஷ்ணன், ருக்மிணி, பாமை,
9. மதுரை (வடக்கு மாசி) , விஷ்ணு, ஸ்ரீகிருஷ்ணன், ருக்மிணி,, பாமை
10. மதுரை வடக்கு, சிவன், ஆப்பேசர், அம்பிகை, அகஸ்தியர்,

வசிஷ்டர், சோழாந்தகன் பூசித்தது.

11. தல்லாகுளம் (மதுரை) , விஷ்ணு, திருவேங்கடமூர்த்தி, லக்ஷ்மி
12. தெப்பகுளம் (மதுரை) , சிவன், சிவன், உமை, மாரி
13. திருப்பரங்குன்றம், சிவன், பரங்கிநாதர், ஆவுடைநாயகி, (நக்கீரர் பாடியது) , பராசரபுத்திரர், வியாஸருக்கு முக்தி-முக்தி-புராணத்தலம், தேவாரத்தலம், அருணகிரிநாதர் பாடியது.
14. திருவேடகம். சிவன், ஏடகநாதர், ஏலவார்குழ-, மஹாவிஷ்ணு, கருடன், நாகர், அர்ஜுனன் பூசித்த ஸ்தலம். கூன்பாண்டியன் பூசித்த தேவார ஸ்தலம்.
15. திருமோகூர், விஷ்ணு, காளமேகர், மேகவல்-, ஆழ்வார் மங்களாசாஸன ஸ்தலம்.
16. திருமா-ருஞ்சோலை (அழகர் கோயில்) , கள்ளழகர், சுந்'தரவல்-, (பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி) , மலையத்வஜ பாண்டியன், அர்ஜுனன் யமன் பிரத்யக்ஷம், ஆழ்வார் மங்களாசாஸனம்.
17. பழமுதிர்சோலை, சிவன், 6வது முருகன் படைவீடு, நக்கீரர், அருணகிரிநாதர் பாடியது.
18. திருவாதவூர், சிவன், திருமறைநாதர், ஆரணவல்-, காத்யாயனர் பூசித்தது, மாணிக்கவாசகர் பிறந்த ஸ்தலம், வாதராஜன் பூசித்த தேவார ஸ்தலம்.
19. திருச்சுழியல், சிவன், திருமேனிநாதர், துணைமாலை, சதானந்தர், சௌனகர் பூசித்தது, பார்வதி தபசு செய்த தேவார ஸ்தலம்
20. மணலூர்பட்டிணம், சிவன், சிவன், உமை , மலையத்துவஜன் ஆண்ட இடம். மலையத்துவஜன் பாரதம் முழுதும் ஆண்டான். இவனது வழியினர் மணா- (குல்லூ மணா-) (புராணத்தலம்) என்னும் பட்டணத்தை காஷ்மீரில் உருவாக்கி ஆண்டனர். சித்ராங்கதன், சித்ராங்கதை, பப்ருவாகன், அர்ஜுனன் கதை பாரதத்தில் காண்க.
21. திரிபுவனம், சிவன், புஷ்பவனேசர், மின்னாம்பாள், புராண ஸ்தலம் (36வது லீலை) , தேவார வைப்பு ஸ்தலம்.
22. திண்டுக்கல், சிவன், கீரீசர், உமை
23. பெரியகுளம், சிவன், சிவமரகதேசர், உமை
24. திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) , சிவன், கொடுங்குன்றீசர், அம்ருதநாயகி, வசிஷ்டர், மகோதர ரிஷி, நாகராஜன் பூசித்த புராண ஸ்தலம், தேவார வைப்பு ஸ்தலம்,
25. திருப்பத்தூர், சிவன், ஸ்ரீதனீசர், சிவகாமி, புராண ஸ்தலம்



தேவார வைப்பு ஸ்தலம்.

26. சதுர்வேத மங்கலம், சிவன், வேதநாதர், உமை, வேதங்கள் பூசித்த புராண ஸ்தலம்.
27. திருக்களக்குடி, சிவன், மலைக்கோயில்-குவனேசர், சண்பகவல்-, தேவார வைப்பு ஸ்தலம்.
28. கண்ணைப்பதி, சிவன், பசியா மருந்தீசர், உமை, பாண்டியன் பிணிதீர்த்த ஸ்தலம். தேவாரத்தலம்.
29. காஞ்சாத்துமலை, சிவன், உமை,
30. வலையப்பட்டி (குமராண்டிமலை) , சிவன், மலைக்கோவில் சிவன், உமை
31. கோவி-ளையாத்தங்குடி, சிவன், கைலாசநாதர், நித்யகல்யாணி
32. பைரவம்பட்டி, சிவன், வளர்ஒளீசர், சௌந்திரநாயகி (பைரவர் முக்கியம்)
33. பிள்ளையார்பட்டி, சிவன், மருதீசர், வாடாமுலையம்மன் மலைக்குகைக் கோயில் பிள்ளையார் முக்கியம்.
34. நேமம், சிவன், சிவன், உமை (தேன் ஆறு)
35. இரணியனூர், சிவன், சிவன், உமை
36. நயினார்பட்டி, சிவன், இக்ஷுவனேசர், மங்களாம்பாள், புராணத்தலம்
37. குன்றக்குடி, சிவன், அகஸ்த்தேசர், உமை (நக்கீரர் பாடியது) புராணத்தலம் (முருகன் பிரசித்தம்)
38. திருக்கோவிலூர், சிவன், ராஜகட்க பரமேஸ்வரர், சா-வாடீஸ்வரி, அகஸ்தியர், ஜைமினி, மதுப்பிரியரிஷி, கண்வ ரிஷி, சுவேதராசன், வீரசேகர பாண்டியன் பூஜித்தது, தேவார வைப்பு ஸதலம்.
39. காரைக்குடி, சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி (குப்புடையம்மன் காளி கிருஷ்ணன் கோயில்)
40. நாகநாதபுரம், சிவன், நாகநாதர், பிரகதாம்பாள் (கிருஷ்ணன் கோயில்)
41. அரியக்குடி, விஷ்ணு, வெங்கடேசர், அலமேலு மங்கை, பூதேவி
42. சூரக்குடி, சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி,
43. கானாடு காத்தான், சிவன், யோகநாதர், ஒப்பிலாம்பாள்,
44. பள்ளத்தூர், சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி
45. பூவாண்டிப்பட்டி, சிவன், தேசிகர், ஆவுடைநாயகி,
46. வேலன்குடி, சிவன், கண்டீசர், காமாக்ஷி
47. இலுப்பைக்குடி, சிவன், சிவன், உமை

48. மாத்தூர், சிவன், சிவன், உமை, பைரவர்,
49. கண்டனூர், சிவன், சிவன், உமை,
50. சாயக்கோட்டை, சிவன், வீரசேகரர், உமை (புதுவயல்-பெருமாள்) வீரசேகர பாண்டியன் பூசித்தது.
51. பரமாந்தூர், சிவன், பரமபதநாதர், லக்ஷ்மி,
52. திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) , சிவன், ஆத்மநாதர், யோகாம்பாள், பராசரர், அகத்தியர், வசிஷ்டர், பூசித்த புராணத்தலம். அரிமர்த்தன பாண்டியன் அமைச்சரான (மாணிக்கவாசகர் குதிரை வாங்க வந்து சிவன் உபதேசம் பெற்று கோயில் கட்டினார். சிறந்த சிற்பங்கள் உள்ள தலம்- தேவார வைப்புத்தலம்.
53. கண்டதேவி, சிவன், கைலாசநாதர், ஸ்வர்ணாம்பாள், ஜடாயு, சம்பாதி பூசித்த புராணத்தலம்.
54. தேவகோட்டை, சிவன், ராமனாதர், பார்வதி
55. திருப்புனைவாசல், சிவன், பழம்பதிநாதர், கருணாநாயகி
56. திருவாடானை, சிவன், ரத்தினநாதர், அம்பாயிரவல்-, பிருகு முனிவர் ஆட்டுத்தலை நீங்கி பூசித்த புராணத்தலம், தேவார வைப்பு ஸ்தலம்
57. வெற்றியூர் (ஜயபுரி) , சிவன், சிவன் உமை, தேவார வைப்பு ஸ்தலம்.
58. திருஏகம்பத்து, சிவன், ஏகாம்பரநாதர், காமாக்ஷி, புராண ஸ்தலம்.
59. கல்லல், சிவன், சோமசுந்தரேசர், சௌந்திரநாயகி, புராண ஸ்தலம்
60. திருக்கோஷ்டியூர், விஷ்ணு, சௌம்யநாராயணன், மாமகள் நாயகி, மலைமேல் கோயில், இரணியனைக் கொன்ற நரசிம்மர், கதம்பரிஷி, இந்திரன் பூசித்தது. திருக்கோட்டியூர் நம்பி (ராமானுஜர் குரு) அவதாரத்தலம், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்
61. திருக்கோஷ்டியூர், சிவன், சரப-ங்கம், உமை, நரசிம்மரை அடக்கியவர்.
62. பைரவனூர், சிவன், மெய்ஞானர், பாகம்பிரியாள் (பைரவர் முக்கியம்) , புராண ஸ்தலம்.
63. காளையார் கோயில் சிவன், கானேஸ்வரர், சுவர்ணவல்-உக்கிரப்பெருவழுதி பூசித்த தேவார வைப்பு ஸ்தலம்
64. காளையார் கோயில், சிவன், சுந்தரேசர், மீனாக்ஷி,
65. காளையார் கோயில் (கானப் பேரெயில்) , சிவன், சோமேசர், சௌந்திரநாயகி, ல-தாதேவி பிரசித்தம், காளி, பண்டாசுரன், சண்டாசுரன் கொன்றபின் பூசித்த ஸ்தலம் இந்திரன் ஐராவதம், அகஸ்தியர், வசிட்டர், கண்வர், கௌதமர், ருத்திரர்கள், அஷ்டவசுக்கள், வீரசேன பாண்டியன் வரகுணபாண்டியன், விக்ரம சோழன் பூசித்த புராண ஸ்தலம், மருது பாண்டியர் கட்டியது. தேவார வைப்பு ஸ்தலம்.



66. இளையான்குடி, சிவன், சிவன், உமை, இளையான்குடி மாறனார் பூசித்தது.
67. நயினார் கோயில், சிவன், சிவன், உமை
68. ஒக்கூர், சிவன், சிவன், உமை புராண ஸ்தலம்.
69. நாட்டரசன் கோட்டை, சிவன், திருநேத்தியர், கண்ணுடைநாயகி
70. சோழபுரம், சிவன், வாகீசர், சுந்தராம்பாள்,
71. சிவகங்கை, சிவன், ராமனாதர், பர்வதபுத்ரி
72. வாநர வீர மதுரை (மானா மதுரை) , சிவன், சோமநாதர், உமை.
73. ராமனாதபுரம், சிவன், சொக்கநாதர், மீனாக்ஷி, (கோதண்டராமர்)
74. பெருவயல், சிவன், சிவன், உமை
75. தேவீபட்டினம், சிவன், சிவன், மஹிஷாசுரமர்த்தினி,
76. நவபாஷாணம், சிவன், திலகேசர், மத்யபுரீஸ்வரி, (ஜகன்னாத பெருமாள்) , ஸ்ரீராமர் நவக்கிரகங்களை பூசித்தது. கட-ல் கல் தூண்கள் உள்ளது) சேது பாலம் தொடங்குமிடம்.
77. உப்பூர், சிவன், சிவன், உமை, கணபதி, ஸ்ரீராமர் கணபதியை பூசித்த ஸ்தலம்.
78. உத்திரகோசமங்கை, (ஆதி சிதம்பரம்) , சிவன், மங்களேசர், மங்களநாயகி, மரகத நடராஜர், மலைப்பெண்ணான மீனாக்ஷியை சிவன் மணந்த ஸ்தலம். பிருகு, சாண்டில்யர், மாணிக்கவாசகர் பூஜித்த புராண ஸ்தலம்
79. திருப்புல்லாணி (தர்ப சயனம்) , விஷ்ணு, கல்யாண ஜகன்னாதர், கல்யாணவல்-, முத்கலர் பூசித்தது ஸ்ரீராமர் தர்பசயனம் செய்தது. ஆழ்வார் மங்களாசாஸனம்
80. இராமேஸ்வரம் (துவாதச -ங்க க்ஷேத்ரம்) , சிவன், ராமனாதர், பர்வத சம்வர்த்தினி, ஸ்ரீராமர் பூசித்தது, சீதை பிடித்த மண்-ங்கம் . (56 தீர்த்தங்கள்-காலவ ரிஷி, உத்தம பாண்டியன், கந்தர்வன், பூசித்தது. மனோஜவ பாண்டியன், அவனது மனைவி சுபத்திரை, மகன் சந்திரகாந்த பாண்டியன் பூசித்தது. துரோணாசாரியாரைக் கொன்ற பாரம் நீங்கப்பெற

தர்மராஜன், அஸ்வத்தாமா, தர்மகுப்த பாண்டியன், துர்வாசர், தத்தாத்ரேயர், சுக்கீரீவன், அங்கதன், ஜாம்பவதி, அர்ஜுனன், சகாதேவன், திரௌபதி, அகஸ்த்தியர், அனுமன், நளன், நீலன், கவயன், கவாக்ஷன், சடாயு பூசித்த ஸ்தலம் . சேதுமாதவராக விஷ்ணு பாண்டியன் பெண்ணை மணந்த ஸ்தலம். புராண ஸ்தலம், தேவார வைப்பு ஸ்தலம். இந்துக்களுக்கு காசியைப் போன்ற புண்ய ஸ்தலம். பித்ருக்களுக்கு செய்ய வேண்டிய கடன்களை இதில் செய்யலாம். நேபாள மன்னர்கள் பூசிக்கும் ஸ்தலம். பிரும்மாண்ட கோயில், பிரகாரம் மிகவும் சிறப்பானது.

81. திருக்கோண மலை (இலங்கை) , சிவன், கோணேசர், மாதுமை தேவார ஸ்தலம்.
82. திருக்கேதீஸ்வரம் (இலங்கை) , சிவன், கேதீசர், கௌரி, பிருகு, இராவணனின் மாமன் மா-யவான் பூசித்த புராண ஸ்தலம், தேவார வைப்பு ஸ்தலம் .
83. கதிர்காமம் (இலங்கை) , சிவன், சிவன், உமை, முருகன் பிரசித்தம், நக்கீரன், அருணகிரி நாதர் பாடிய ஸ்தலம் .
84. மாதோட்டம் (மஹா துவஷ்டா நகரம்) , சிவன், சிவன், உமை துவஷ்டா என்னும் அசுர குரு பூசித்த ஸ்தலம், தேவார வைப்பு ஸ்தலம்.
85. சாத்தூர், சிவன், சுந்தரர், மீனாக்ஷி
86. சிவகாசி, சிவன், சிவன், உமை
87. திருத்தண்கால், விஷ்ணு, தண்கால் அப்பர், அன்னநாயகி, சல்-ய பாண்டியன், வல்லபன் பூசித்தது. ஆழ்வார் மங்களா சாஸனம் .
88. ஸ்ரீவில்-புத்தூர், விஷ்ணு, வடபத்திரசாயி, ஆண்டாள், (விஷ்ணு சித்தர், (பெரியாழ்வார்) மகள் ஆண்டாள்அவதார ஸ்தலம் ஆழ்வார் மங்களாசாஸனம் பாடியது) .
89. திருமங்கைபுரம் (கோவில்பட்டி), சிவன், பூவன -ங்கேசர், ஷண்பகவல்- அகஸ்த்தியர் பூஜித்தது.
90. கழுமலை, சிவன், சிவன், உமை
91. சிவகிரி, சிவன், சிவன், உமை, நக்கீரர் அருணகிரிநாதர் பாடியது.
92. வாசுதேவநல்லூர், சிவன், சிவன், உமை புராண ஸ்தலம்
93. சங்கரன்கோவில், சிவன், சங்கரநாராயணர், கோமதி , அகஸ்த்தியர் பூசித்தது.
94. திருக்கருவை நல்லூர் (கரிவலம் வந்த நல்லூர்) , சிவன், பால்வண்ணநாதர், ஒப்பிலாம்பாள், குலசேகர பாண்டியன்



பூசித்தது. மாணிக்கவாசகர் பாடிய தேவார ஸ்தலம்.

95. திருக்கங்கை கொண்டான், சிவன், கங்கைகொண்டான், உமா மகேஸ்வரி, புராண ஸ்தலம்
96. திருநெல்வே-, சிவன், வேணுவனேசர், சா-வடிஸ்வரி (நெல்லையப்பர்) சாண்டில்யர் பூசித்தது, புராண ஸ்தலம்
97. குருக்குக்கரை (பூந்துறை) , சிவன், சிவன், உமை, தேவார ஸ்தலம்
98. கைலாசபுரம் (சிந்துபூந்துறை) சிவன், கைலாசநாதர், சிவகாமி, அகஸ்த்தியர் பூசித்தது.
99. இராமேசநல்லூர், சிவன், ராமநாதர், சர்குணாம்பாள், சரயூ பூசித்தது.
100. திருபுராந்தகம் (பாளையங்கோட்டை) , சிவன், திரிபுராந்தகர், விசாலாக்ஷி, தேவார ஸ்தலம்.
101. திருச்செப்பறை, தியாகேசர், சிவகாமி, புராண ஸ்தலம்.
102. திருமருதூர், சிவன், கூடலழகர், பார்வதி
103. ஸ்ரீதங்கிநல்லூர், சிவன், சிவன், உமை, புராணமுள்ளது.
104. திருமணவை மாநகரம் (மணக்கரை) , சிவன், மங்களேசர், மங்களாம்பாள், பாண்டியர் பூசித்த புராண ஸ்தலம்.
105. திருமந்திரேஸ்வரம் (ஓமனூர்) , சிவன், அர்த்தநாரீஸ்வரர், அர்த்தநாரீஸ்வரி, புராண ஸ்தலம்
106. திருரோமேசர், சிவன், ரோமேசர், இமயப்பாவை, ரோமரிஷி பூசித்த புராண ஸ்தலம்.
107. ஸ்ரீகைலாசபுரம், சிவன், கைலாசநாதர், சிவகாமி, பிரது சக்ரவர்த்தி பூஜித்த புராண ஸ்தலம்.
108. ஸ்ரீவைகுண்டம், விஷ்ணு, கண்ணபிரான், வைகுண்டநாதர், வைகுண்டவல்-, (நவதிருப்பதி-1) பிரது சக்ரவர்த்தி பூஜித்த புராண ஸ்தலம், நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
109. வரகுணமங்கை, விஷ்ணு, விஜயாஸனமூர்த்தி, வரகுணவல்- (நவதிருப்பதி -2) நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
110. திருக்குளந்தை , பெருங்குளம் , விஷ்ணு, மாயக்கூத்தர், குழந்தைவல்-, (நவதிருப்பதி -3) நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
111. நத்தம் (தென் திருப்பதி) , விஷ்ணு, ஆதிமூலப்பெருமாள், லக்ஷ்மி, (நவதிருப்பதி-4), நம்மாழ்வார் மங்களாஸாஸனம்.
112. திருப்புளிங்குடி, விஷ்ணு, விஷ்ணு, புளிங்குடிவல்- (நவதிருப்பதி-5) , தலைச்சங்க முதல்வேந்தன் காய்சின வழுதி பூசித்தது. நம்மாழ்வார் மங்களாஸாஸனம்

113. தொலைவி-மங்கலம், விஷ்ணு, அரவிந்தலோசநர், கருத்தடங்கண்ணி, (நவதிருப்பதி-6) நம்மாழ்வார் மங்களாஸாஸனம் நம்மாழ்வார் அவதார ஸ்தலம்.
114. திருப்பேரை (இரட்டை திருப்பதி) விஷ்ணு, நிகரில்லா முகில் வண்ணர், குழைக்காத வல்- (நவதிருப்பதி-7) , சுக்கிரன், பிரம்மா, ஈசான ருத்திரர்கள் பூசித்த புராண ஸ்தலம், நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
115. திருக்கோளூர், விஷ்ணு, நிக்ஷேபவித்தமூர்த்தி, கோளூர்வல்-, (நவதிருப்பதி-8) , மதுரகவியாழ்வார் அவதரித்த ஸ்தலம், நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
116. ஆழ்வார் திருநகரி , விஷ்ணு, ஆதிநாதர், ஆதிநாதவல்-, (நவதிருப்பதி-9) நம்மாழ்வார் மங்களாஸாஸனம், (மணவாளமாமுனி அவதாரத் தலம்)
117. திருக்காந்தீஸ்வரம், சிவன், காந்தீஸ்வரர், தர்மசம்வர்த்தினி, அகஸ்த்தியர், கரூர்தேவர் பூசித்த ஸ்தலம்,
118. திருமுதப்பநாடு, சிவன், கைலாசநாதர், சிவகாமி, ஆங்கிரஸ ரிஷி பூசித்தது.
119. திருச்சோமேஸ்வரம், சிவன், சோமநாதர், சோமசுந்தரி, புராண ஸ்தலம். (பிருஹஸ்பதி தனது தம்பி மனைவி மம்தா (கர்ப்பவதி)-யை புணர்ந்த பாவம், பிரஹஸ்பதி மனைவி தாரையை அவரது சீடன் சந்திரன் அபகரித்த பாவம் நீங்கிய ஸ்தலம்)
120. திருப்பிரமேஸ்வரம், சிவன், பிரம்மேசர், பிரம்மவித்யை, பிரமன் பூசித்த புராண ஸ்தலம்
121. திருச்சேர்ந்த மங்கலம், சிவன், கைலாசநாதர், சிவகாமி, புராண ஸ்தலம்.
122. திருச்செந்தூர், சிவன், சிவன், உமை, முருகன் 2வது படைவீடு, வீரபாகுவை வீரமகேந்திரபுரம் தூது அனுப்பிய ஸ்தலம், அகஸ்த்தியர், சுகர் பிரம்மாவுக்கு விஸ்வரூபம் காட்டிய முருகனின் புராண ஸ்தலம், நக்கீரர், அருணகிரிநாதர் பாடியது.
123. குலசேகரன்பட்டிணம், சிவன், விஜயாக்ஷி கொண்டேசர், அறம் வளர்த்த நாயகி, மார்க்கண்டேயர், குலசேகர பாண்டியன் பூசித்த புராண ஸ்தலம்.
124. திருவிஜயமாநகரம், சிவன், மனோன்மணீசர், சிவகாமி, ஜய, விஜயர் பூசித்த புராண ஸ்தலம்.
125. நவ-ங்கேசபுரம், சிவன், நவ-ங்கேசர், சிவகாமி,
126. சித்தமல்-, சிவன், கந்தர்வேசர், லோகநாயகி,



127. துர்வாசநல்லூர், சிவன், காளத்தீசர், பூங்கோதை, துர்வாசர் பூசித்தது.
128. ஸ்ரீவரமங்கை (வானமாமலை) , விஷ்ணு, தெய்வநாதப் பெருமாள், வானமாமலைப் பெருமாள், ஸ்ரீவரமங்கை, ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி, சூரியன், சந்திரன், இந்திரன், பிரம்மா ரோமசர்மரிஷி, பிருகு, மார்க்கண்டேயர் பூசித்த புராண ஸ்தலம். நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
129. நாங்குநேரி, விஷ்ணு, தத்தாத்ரேயர், அனகாலஷ்மி, புராண ஸ்தலம்
130. திருக்குறுங்குடி, சிவன், சட்டைநாதர், பிரியாநாயகி, பஸ்மாசுரன் புராணம்.
131. திருக்குறுங்குடி, விஷ்ணு, திருப்பாற்கடல் நம்பி, குறுங்குடிவல்-, மோகினியாய் விஷ்ணு பஸ்மாசுரனை அழித்த ஸ்தலம், நம்மாழ்வார் அவதரித்த ஸ்தலம்-மங்களாஸாஸனம்
132. களக்காடு, சிவன், சகலபுவனேசர், உமா, நளாயினி, ஆனிமாண்டவ்யர் பூசித்த புராண ஸ்தலம்.
133. வள்ளியூர், சிவன், முருகேசர், உமை, குகைக்கோயில், முருகன் பிரசித்தம், நக்கீரர் பாடியது.
134. திருவெண்குடி, சிவன், சொக்கேசர், சிவகாமி, சிபிச்சக்ரவர்த்தி பூசித்த புராண ஸ்தலம், தேவார வைப்பு ஸ்தலம்
135. ராதாபுரம், சிவன், வரகுணபாண்டியேசர், நித்யகல்யாணி, வரகுண்பாண்டியன் பூசித்தது.
136. சேரமாதேவி, சிவன், வைத்யநாதர், ஒப்பிலாம்பாள், புராண ஸ்தலம்
137. திருப்புடார்ச்சுனம் (திருப்புடைமருதூர்) , சிவன், புடார்ச்சுனபுரீசர், மங்கை, புராண ஸ்தலம்.
138. திருக்கோஷ்டீஸ்வரம், சிவன், கோஷ்டீஸ்வரர், கொடியிடைநாயகி, அகஸ்த்தியர் பூஜித்த புராண ஸ்தலம். தேவார வைப்பு ஸ்தலம்.
139. திருக்காச்யபேஸ்வரம், சிவன், காஸ்யபேஸ்வரர், மதுராம்பாள் காஸ்யபர், அகஸ்தியர் பூசித்த புராண ஸ்தலம்.
140. திருமூலநகரம் (அம்பாசமுத்திரம்) , சிவன், திருமூலநாதர், லோகாம்பாள்,
141. கல்-டைக்குறிச்சி, சிவன், சிவன், உமை
விஷ்ணு, லக்ஷமீபதி (ஆதிவராகம்), லக்ஷ்மி (ராமர்-கருடர்) குபேரன் பூசித்த ஸ்தலம்.

142. அயனீஸ்வரம் (பிரம்மதேசம்) , சிவன், கைலாசநாதர், பெரியநாயகி, பிரம்மா பூசித்த புராண ஸ்தலம். தேவார வைப்பு ஸ்தலம்.
143. பாபநாசம், சிவன், பாபநாச சாமி, லோகாம்பாள், தேவார வைப்பு ஸ்தலம், (பாண தீர்த்தம், சித்ரசபை)
144. அக்நீஸ்வரம், சிவன், வன்னி-ங்கேசர், சிவகாம சுந்தரி, தேவார வைப்பு ஸ்தலம்.
145. அத்தரீஸ்வரம், சிவன், அத்தரீஸ்வரர் (சைலநாதர்) பரம கல்யாணி தேவார வைப்பு ஸ்தலம்.
146. தென்காசி, சிவன், சுந்தரேஸ்வரர், லோகநாயகி, அகஸ்தியர் பூசித்த புராண ஸ்தலம். பாண்டியர் தலைநகர்.
147. திருக்குற்றாலம், சிவன், குறும்பாலீசர், குழல்வாய்மொழி, (குற்றாலம் நீர்வீழ்ச்சி) அகஸ்த்தியர் பூசித்தது. சித்ரசபை, தேவார வைப்பு ஸ்தலம்.
148. திருமலை, சிவன், உமை, முருகன், நக்கீரர் பாடியது, தேவார வைப்பு ஸ்தலம்.
149. தேவீஸ்வரம் (வடிவீஸ்வரம்) , சிவன், தேவீஸ்வரர், அழகியநாயகி, நக்கீரர் பாடியது, தேவார வைப்பு ஸ்தலம்.
150. அகஸ்தீஸ்வரம், சிவன், அகஸ்த்தீஸ்வரர், அம்ருதவல்-, அகஸ்த்தியர், லோபாமுத்திரை பூசித்தது, தேவார வைப்பு ஸ்தலம்.
151. கன்யாகுமரி, சிவன், கன்யாகுமரி , பரசுராமர், ஜமதக்கினி பூசித்த ஸ்தலம், புராண ஸ்தலம், தேவார வைப்பு ஸ்தலம்.
152. சுசீந்திரம், சிவன், தாணு, மால், அயன்,உமா, ஆஞ்சநேயர் அத்திரி முனிவர் பூசித்த சாஸ்த்திர பிரசித்தம். இந்திரன் சாப மோசனம்
153. நாகர்கோவில், சிவன், நாகநாதர், நாகாம்பாள், நாகராஜ கோவில்
திருவட்டாறு, விஷ்ணு
154. சேற்றூர், (சி) சிவன், உமை, தேவார வைப்பு ஸ்தலம்

## சோழநாடு, கீழ்பாகம் - காவேரி தென்கரை

1. திருவாரூர் (மூலாதார க்ஷேத்திரம்), சிவன், தியாகராஜர், கமலாம்பாள், வல்மீகநாதர், நீலோத்பலாம்பாள், ஆடகேசர், சித்தேசர், ஆனந்தேசர், அசலேசர் முத-ய 300 -ங்கங்கள் கமலாலயம்-குளம், தேர்-விசேஷம் (தியாகப்பிரம்மம், முத்துசாமி தீக்ஷிதர், ச்யாமா சாஸ்த்திரி வசித்த இடம்)



ஆதிவிடங்கர்-முசுகுந்த சோழன் பூசித்தது, நமிநந்தி அடிகள் நாயனார், மநுநீதிச் சோழன், வீதிவிடங்கன் பன்னிருதிருமறை சந்நிதியில் ஏற்றுவித்த குலசேகரச் சோழன் சேக்கிழார், அநபாயச்சோழன் பூசித்த தேவார வைப்பு ஸ்தலம்.
2. திருவாரூர், (மூலாதார க்ஷேத்திரம்) சிவன், அறநெறியப்பர், வண்டார்குழ-.
3. திருவாரூர் (துலாநயினார் கோயில்) , சிவன், பரவையுண் மண்டலேசர் பஞ்சின் மெல்லடியாள் தேவார வைப்பு ஸ்தலம். (சுந்தரர்)
4. தப்பளாம்புளியூர், சிவன், ஏகாம்பரநாதர், பார்வதி, புராண ஸ்தலம்.
5. பு-வலம், சிவன், தக்ஷிணகோகர்ணேசர், அனந்தவல்- தேவார வைப்பு ஸ்தலம்
6. மணற்கால், சிவன், சிவன், உமை (துர்கை) தேவார வைப்பு ஸ்தலம்
7. இராப்பட்டீஸ்வரம், சிவன், சிவன், உமை துர்கை தேவார வைப்பு ஸ்தலம்
8. திருவிளமர், சிவன், பதஞ்ச-, மனோஹரர், யாழின் மொழி (அக்னி விடங்கர்) , தேவார வைப்பு ஸ்தலம்.
9. திருக்கரையபுரம், சிவன், கரவீரேசர், பிரத்தியக்ஷ மின்னாம்பாள் கௌதமர் பூசித்தது தேவார வைப்பு ஸ்தலம்
10. திருவண்டாம்பாலை, சிவன், கோகர்ணேசர், உமை,, காமதேனு பூசித்தது.
11. திருக்கண்ணங்குடி, விஷ்ணு, சியாமளமேநி மூர்த்தி, அரவிந்தவல்-, பிருகு, சைத்யர், கௌதமர் பூசித்தது. திருமங்கையாழ்வார் அவதார ஸ்தலம், ஆழ்வார் மங்களாஸாஸனம்
12. திருக்கண்ணமங்கை, விஷ்ணு, பக்தவத்ஸலர், அபிஷேகவல்-, ரோமசர்மரிஷி பூசித்தது, ஆழ்வார் மங்களாஸாஸனம்
13. திருப்பெருவேளூர் (காட்டூர் அய்யம்பேட்டை) சிவன், பிரியா ஈஸ்வரர், மின்னனையாள், கௌதமர், பர்வதி, முருகன் பூசித்த தேவார வைப்பு ஸ்தலம்.
14. திருத்தலையாலங்காடு, சிவன், ஆடல்வல்லேசர், திருமடந்தையம்மாள், தாருகவனத்து ரிஷிகள் ஏவிய முயலகன் மீது நடனமாடிய தலம், கபிலர் பூசித்த தேவார ஸ்தலம்.
15. திருப்பள்ளியின் முக்கூடல் (அரியான்பள்ளி) , சிவன்,

முக்கோணேசர், கைமேவுகண்ணி, கற்க ரிஷி பூசித்த தேவார ஸ்தலம்.

16. சேக்கரை (கயாக்கரை) சிவன், ராம-ங்கம், உமை, ராமர் பூசித்தது.
17. திருநாமநந்தீஸ்வரம், சிவன், ராம-ங்கேசர், கருவளர்குழ-யம்மை, மார்க்கண்டேயர் பூசித்தது, தேவார ஸ்தலம்.
18. திருக்கண்ணபுரம், விஷ்ணு, சௌரிராஜன், கண்ணபுரநாயகி, கண்வரிஷி பூசித்தது, நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
19. திருப்பனையூர், சிவன், சௌந்தர்யநாதர், பிருகந்நாயகி, (பெரிய விடங்கர்) பராசரர், கரிகால் சோழன் பூசித்த தேவார வைப்பு ஸ்தலம்.
20. திருவிற்குடி, சிவன், வீரட்டானேசர், மைவார்குழ-, ஜலந்தராசுர வதம் புராணம், தேவார வைப்பு ஸ்தலம்.
21. விடைவாய்க்குடி (வாக்குடி) , சிவன், கைலாசநாதர், உமா, ஜலந்தரனொடு போர் புரிந்த ஸ்தலம்.
22. திருப்பயத்தூர் (பயத்தங்குடி) , சிவன், திருப்பயந்தீசர், காவியங்கண்ணி, தேவார வைப்பு ஸ்தலம்.
23. திருப்புகலூர், சிவன், அக்நீசர், கருந்தார்குழ-, மார்க்கண்டேயர் பூசித்தது, தேவார வைப்பு ஸ்தலம்.
24. திருப்புகலூர் II சிவன், வர்த்தமாநேசர், வர்த்தமாநேஸ்வரி, ராமர், மார்க்கண்டேயர் பூசித்த புராணஸ்தலம், தேவார வைப்பு ஸ்தலம்
25. நன்னிலம், சிவன், மதுவனநாதர், பிரகாச நாயகி, சூரியன் பூசித்தது, தேவார வைப்பு ஸ்தலம்.
26. தூத்துக்குடி, சிவன், ஸ்ரீகண்டேசர், உமை, புராண ஸ்தலம்
27. கந்தன்குடி, சிவன், சிவன், உமை, (முருகன் பிரசித்தம்)
28. திருக்கொண்டீஸ்வரம், சிவன், பசுபதீஸ்வரர், சாந்தநாயகி, தேவார ஸ்தலம்
29. முடிகொண்டான், சிவன், சிவன், உமை
30. திருச்செங்காட்டான்குடி, சிவன், கணதீசர், திருக்குழன்மாது சிறுத்தொண்டர் புராணம்.
31. திருமருகல், சிவன், மாணிக்கவண்ணேசர், வண்டுவார்குழ-தேவார ஸ்தலம்
32. திருச்சாத்தமங்கை, சிவன், மருந்தீசர், அயவந்தீசர்,, தையலாம்பாள், மலர்கண்ணி, அஷ்டாவக்கிரர் பூசித்த தேவார ஸ்தலம்
33. திருவாஞ்சியம், சிவன், வாஞ்சிநாதர், மங்களாம்பாள், தேவார ஸ்தலம்



34. திருவீழிமலை, சிவன், வீழி அழகீசர், சுந்தர குசாம்பாள், அகஸ்தியர், வசிஷ்டர், திருமால் 1008 தாமரை பூசித்து சக்கரம் பெற்ற புராணம் (தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவதார ஸ்தலம்) தேவார ஸ்தலம்
35. திருவன்னியூர், சிவன், அக்னீசர், பார்வதி, தேவார ஸ்தலம்
36. திருக்கருவி-, சிவன், சற்குணேசர், ஸர்வாங்க நாயகி, சற்குணச்சோழனுக்கு முக்தி, தேவார ஸ்தலம்
37. திருவிடைமருதூர், சிவன், மகா-ங்கம், பிருகத் குசாம்பாள் மனுநீதிச்சோழன் கட்டியது, வரகுணபாண்டியன் பிரம்ம ஹத்தி நீங்கியது, தேவார ஸ்தலம்
38. கோவிந் ்தபுரம், சிவன், பாணபுரீசர், அபிராமி, போதேந்திர ஸரஸ்வதி, சித்தி
39. திருபுவனம், சிவன், கம்பஹரேசர், புவனேஸ்வரி, வரகுணபாண்டியன் பூசித்தது. சரபேஸ்வரர் பிரசித்தம். தேவார ஸ்தலம்
40. திருநாகேஸ்வரம், சிவன், சண்பகாரண்யேசர், குறுமுலைநாயகி, சேக்கிழார் பூசித்தது, தேவார ஸ்தலம், ராகு ஸ்தலம்
41. திருவிண்ணகர் ஒப்பி-யப்பன் கோயில், விஷ்ணு, ஒப்பி-யப்பன், பூமிதேவி, ராமர், மார்க்கண்டேயர் பூசித்தது, நம்மாழ்வார் மங்களாஸாஸனம்
42. குடமூக்கு (கும்பகோணம்) , சிவன், கும்பேசர், மங்களநாயகி, ஹேமரிஷி பூசித்தது, தேவார வைப்பு ஸ்தலம்.
43. குடந்தை காரோணம், சிவன், காசி விஸ்வேசர், தேனார் மொழியம்மை, மகாமகம் (12 வருடத்திற்கொரு முறை) குளம் பிரசித்தம், தேவார ஸ்தலம்
44. குடந்தை, சிவன், நாகேசர், பிருகந்நாயகி, தேவார ஸ்தலம்
45. குடந்தை, சிவன், சோமேசர், சோமநாயகி, சந்திரன், தாரை பூசித்தது, தேவார ஸ்தலம்
46. குடந்தை, சிவன், அபிமுகதேசர், ஞானாம்பாள், புராண ஸ்தலம்
47. குடந்தை, சிவன், கௌதமேசர், கௌரி, கௌதமர் பூசித்தது
48. குடந்தை, சிவன், பாணபுரீசர், உமை
49. குடந்தை, சிவன், காளஹத்தீசர், உமை காமகோடி பீடம் மடம்
50. குடந்தை, விஷ்ணு, சாரங்கபாணி, கோமளவல்-, நம்மாழ்வார் மற்றும் ஆழ்வார்கள் மங்களாஸாஸனம்
51. குடந்தை, விஷ்ணு, சக்ரபாணி, ஸ்ரீதேவி
52. குடந்தை , விஷ்ணு , ராமசாமி , சீதை, பரதர், சத்ருக்னர், அனுமார்

53. குடந்தை, விஷ்ணு, கிருஷ்ணன், ருக்மிணி, சத்யபாமை
54. திருபட்டீஸ்வரம், சிவன், பட்டீசர், பால்வளைநாயகி, ராமர் பூசித்தது, தேவார ஸ்தலம்
55. திருஆரைமேந்தளி, சிவன், கைலாசநாதர், சபாநாயகி, காமதேனு புத்திரி, சபளை பூசித்தது.
56. முழையூர், சிவன், பரசுநாதேஸ்வரர், ஞானாம்பிகை, காமதேனு புத்திரி நந்தினி பூசித்தது தேவார ஸ்தலம்
57. வடதளி, சிவன், தருமபுரீசர், விமலாம்பாள், காமதேனுபுத்திரி விமலை பூசித்தது
58. பழையாறை, சிவன், சோமேசர், சோமகலாநாயகி, சந்திரன் பூஜித்தது, தேவார ஸ்தலம்
59. திருச்சத்திமுத்தம், சிவன், சிவக்கொழுந்தீசர், பிருகந்நாயகி, சக்தி முத்தம் கொடுத்து, தேவார ஸ்தலம்.
60. திருஆவூர், சிவன், பசுபதீசர், மங்களநாயகி, தேவார ஸ்தலம்
61. தாரேஸ்வரம், சிவன், சிவன், உமை, புராண ஸ்தலம்
62. திருவலஞ்சுழி, சிவன், கற்பகேசர், நித்யானந்த நாயகி, (கணபதி பிரசித்தம்) தேவார ஸ்தலம்
63. சுந்தரப்பெருமாள் கோயில், விஷ்ணு, சுந்தரர், லக்ஷ்மி
64. வலங்கைமான், சிவன், உமை (பெருமாள்)
65. திருக்கருங்குடி (மருதாந்தநல்லூர்) , சிவன், சற்குண-ங்கம், சர்வாலங்காரி, ராமர், கௌசிகன், சற்குணசோழன் பூசித்தது, தேவார ஸ்தலம்
66. திருச்சிவபுரம், சிவன், பிரம்மபுரீசர், பிருகந்நாயகி, ஆதிவராகன், பிரம்மா பூசித்தது, தேவார ஸ்தலம்
67. திருக்கலையநல்லூர் (சாக்கோட்டை) , சிவன், அமிர்தகலேசர், அமிர்தவல்-, தேவார ஸ்தலம்
68. அரிசிற்கரைபுத்தூர் (அழகர்புத்தூர்) சிவன், படிக்காசளித்த ஈசர், சுந்தராம்பாள், பாணாசுரன், உண்மையானந்த முநி, புகழ் துணை நாயனர் பூசித்த தேவார ஸ்தலம்,
